சிலம்பொலி செல்லப்பன்

பெருங்கதை ஆராய்ச்சி



27 AUG 1976
MADRAS

பெருங்கதை ஆராய்ச்சி

சிலம்பொலி செல்லப்பன்

அருணோதயம்
இராயப்பேட்டை :: சென்னை-14.

முதற் பதிப்பு : ஆகஸ்ட், 1976
உரிமை : ஆசிரியருக்கு

விலை ரூ. 15 - 00

அச்சிட்டோர் :
சௌந்தரா பிரிண்டர்ஸ்,
சென்னை 600 005.

பதிப்புரை

தமிழ் இலக்கியங்களைக் காலத்தை ஒட்டியும் காலத்தால் அழிக்க முடியாதவைகளாகவும் சிறந்த ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடனும் எளிதில் புரியும்படியும் எழுதச் செய்து வெளியிட வேண்டும் என்று எண்ணினேன். அதன் வழி வந்த நூல்தான், சிறந்த எழுத்தாற்றலும், சொல் வன்மையும், ஆராய்ச்சித் திறனுமிக்க, அறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் 'பெருங் கதை ஆராய்ச்சி!'

ஈடிணையற்ற முறையிலும், வருங்கால சந்ததி யினர்க்குத் தமிழிலக்கியச் செல்வத்தை வாரி வழங்கும் நிலையிலும், அறிஞர்களுக் கெல்லாம் ஆராய்ச்சி அறிவுக்குப் பயன்படும் வகையிலும் இந்த நூலினை ஆக்கித் தந்துள்ளார்கள் இதன் ஆசிரியர் திரு சிலம்பொலி செல்லப்பன் அவர்கள்.

கண்ணகி கோவலன் கதையை நாம் அறி வோம். அதன் மூலமாம் சிலப்பதிகார இலக்கியச் செல்வத்தையும் ஓரளவு அறிவோம்.

உதயணன் வாசவதத்தை கதையை நாம் அறிவோம். ஆனால் அதன் மூலமாம் பெருங்கதை இலக்கியத்தை அவ்வளவாக அறிந்திலோம். விளக்கமாக அறியச் செய்யும் பெருமை இந்த நூலுக்கு உண்டு.

இதனை இத்துணை சிறப்பான நூலாக உரு வாக்க ஆசிரியர் எடுத்துக் கொண்ட ஆர்வமும் உழைப்பும் மறக்க முடியாதது; அருமையான நூலை ஆக்கித் தந்த ஆசிரியருக்கு எங்கள் நன்றி!

'இத்துணை அழகுடைய நூலை நாம் ஒன்று வாங்க வேண்டும்' என்ற ஆர்வத்தைத் தூண்டும் படி அழகியதோர் முகப்புப் படத்தை எழிலுற வரைந்து தந்த ஓவியர் ஆனந்தன் 'ஈஸ்வரி' அவர்களுக்கு எங்கள் நன்றி.

இதனைத் தமிழறிந்த மக்களெல்லாம் வரவேற் பதன்மூலந்தான் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தர முடியும்; தருவார்கள் என்ற நம்பிக்கையி லேயே இதனை வெளியிடுகிறோம்.

அருணன்

முன்னுரை

கொங்கு நாட்டில் தோன்றியுள்ள இலக்கியங்கள் பல. கொங்குவேளிர் இயற்றியுள்ள பெருங்கதை அவற்றுள் தலைமையிடம் பெறத்தக்க சிறப்புடையது. சங்கப் பாடல்களின் கவிதை நடையும், பிற்கால இலக்கியங்களின் கற்பனை வளமும் ஒருங்கே அமைந்துள்ள பெருநூலாக இது விளங்குகிறது. திருப்பங்கள் நிறைந்துள்ள கதைப் போக்கும், அரிய உவமைகளும், உளவியலை உட்கொண்டுள்ள காட்சி அமைப்புகளும், காலமெலாம் போற்றிக் காத்தற்குரிய நயவுரைகளும் பெருங்கதையை அணி செய்கின்றன. கதையின் முற்பகுதியும் பிற்பகுதியும் சிதைந்த நிலையில், கிடைத்த ஓலைச் சுவடிகளைக் கொண்டு, டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பெருங்கதையை முதன் முதலில் அச்சேற்றினார்கள். ஆனால் இந் நூலுக்குப் பிற இலக்கியங்களுக்கு எழுந்ததுபோல விளக்க நூல்களும் ஆராய்ச்சி நூல்களும் ஏனோ பெருமளவில் தோன்றாது போயின. பெருங்கதையை ஒருமுறை உளந்தோய்ந்து படிப்போர் அதில் ஆழ்ந்து என்றென்றும் அதன் சுவையில் திளைக்க விரும்புவர் என்பது உறுதி

எனவே, இம் மாக்கதை மக்களிடையே தவழ்கின்ற நிலையினைப் பெறவேண்டும் என்ற அவாவின் உந்துதலினால் இந் நூலை எழுதியுள்ளேன். இந் நூலைப் படிப்போர் பெருங்கதையை முழுமையாக உணர்ந்த நிறைவு பெற வேண்டும் என்பதே என் நோக்கம்.

சிறந்த இலக்கிய நூல்களைப் பொலிவுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் வெளிக் கொணர்வதில் அயரா உழைப்பும் ஆர்வமும் உடைய 'அருணோதயம்' உரிமையாளர் திரு. அருணன் அவர்கள் இந் நூல் வெளிவரப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார்கள். அவர்கட்கு என் உள்ளத்தின் ஆழத்தே ஊற்றெடுக்கும் அன்பு வெள்ளப் பெருக்கோடு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கையெழுத்துப் படியை அவ்வப்போது படித்துத் திருத்தங்கள் தந்ததோடு தொடர்ந்து எழுத ஊக்கம் நல்கிய நண்பர்களை நூல் முற்றுப் பெற்றுள்ள இவ் வேளையில் நன்றியுடன் நினைக்கின்றேன்.

அட்டைப் படத்தைச் சிறந்த முறையில் வரைந்துள்ள அருமை நண்பர் ஓவியர் ஆனந்தன் அவர்கட்கும், நூலைச் செம்மையாக அச்சிட்டுள்ள சௌந்தரா அச்சகத்தார்க்கும் என் உளமார்ந்த நன்றி.

என் அருமை நண்பரும் கல்வெட்டு ஆராய்ச்சியாளருமான ஈரோடு திரு. இராசு அவர்கள் கொங்குவேளின் பிறப்பிடமாகிய விசயமங்கலத்திலுள்ள சைனக் கோயிலுக்கு அழைத்துச் சென்று அதன் வரலாற்றினை விளக்கிய ஆர்வம் நெஞ்சில் என்றும் பசுமையாக நிற்கும். அவர்க்கும் நன்றி.

அறிஞர்கள் இந் நூலை வரவேற்பதோடு பல்வேறு கோணங்களில் எண்ணற்ற நூல்களை எழுதி, பெருங்கதையை மக்களிடையே பரப்ப வேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

அன்புடன்

செல்லப்பன்

பொருளடக்கம்

			பக்கம்
1.	கதைச் சுருக்கம்	...	9— 49
2.	நூலும் நூலாசிரியரும்	...	50— 60
3.	செறிவுரைகள்	...	61—100
4.	நயவுரைகள்	...	101—122
5.	வருணனைகள்	...	123—150
6.	உவமைகள்	...	151—199
7.	காட்சி அமைப்பு	...	200—229
8.	பெண்டிர்		
	(அ) அழகு	...	230—246
	(ஆ) அணிகலன்கள்	...	247—263
	(இ) ஆடைகள்	...	264—273
	(ஈ) ஒப்பனை	...	274—280
	(உ) பருவங்கள்	...	281—292
	(ஊ) விளையாட்டுகள்	...	293—304
	(எ) திருமணம்	...	305—329
	(ஏ) கற்பு	...	330—338
	(ஐ) ஊடல்	...	339—350
	(ஒ) பரத்தையர்	...	351—362

9.	உறையுள்	...	363—383
10.	ஊர்திகள்	...	384—397
11.	கலைநலப் பொருள்கள்	...	398—410
12.	அரசியல்		
	(அ) அரசன்	...	411—429
	(ஆ) அமைச்சர்	...	430—434
	(இ) ஒற்றர்	...	435—437
	(ஈ) தூதுவர்	...	438—443
13.	மக்களும் தொழிலும்	...	444—468
14.	செய்திக் கதிர்	...	469—480

பெருங்கதை ஆராய்ச்சி

1. கதைச் சுருக்கம்

சதானிகன்

வளமெலாம் நிறைந்தது வத்தவ நாடு. அதன் தலைநகர் கௌசாம்பி. அந் நாட்டையாண்டவர் குரு குலத்தினர். அம் மரபில் சதானிகன் என்பான் நல்லாட்சி செய்து வந்தான்.

மிருகாபதி

வைசாலியைத் தலைநகராகக் கொண்ட சேதி நாட்டை ஏயர் குலத்தினர் ஆண்டனர். அக் குலத்தில் சேடகன் என்ற மன்னனுக்குப் புதல்வர் பதின்மரும் புதல்வி ஒருத்தியும் இருந்தனர். புதல்வியின் பெயர் மிருகாபதி.

கௌசாம்பி அரசன் சதானிகன், வைசாலி அரசமகள் மிருகாபதியை மணந்தான்.

சேடகன் துறவு

உலக நிலையாமையை உணர்ந்த சேடகன் அரசாட்சியைத் துறந்து துறவு மேற்கொள்ளத் துணிந்தான். ஆட்சியை ஏற்க முதல் ஒன்பது மைந்தரும் முன்வராமையால், பத்தாவது மகன் விக்கிரனுக்கு முடிசூட்டி, விபுல மலைச்சாரலை அடைந்து தவநெறி நின்றான். சேடகன்

துறவை மிருகாபதிக்கும் சதானிகனுக்கும் விக்ரன் அறிவித்தான். சிறிது காலம் கழிந்தது. மிருகாபதி கருவுற்றாள்.

சரபப் பறவை

ஒரு நாள் மாளிகை நிலாமுற்றத்தில் மிருகாபதி செந்நிற ஆடையுடன் துயின்றாள். அவ் வழியே பறந்த சரபம் என்ற பறவை, செந்நிறப் போர்வையுடன் துயின்ற அவளை ஒரு தசைத் துண்டு என்று கருதி, உணவுக்காகத் தூக்கிக் கொண்டு விபுலமலைச் சாரலை அடைந்தது. மிருகாபதியைக் கீழே கிடத்தி உண்ணத் தொடங்கும்போது அவள் விழித்தெழவே பறவை பறந்து அகன்றது.

உதயணன் பிறப்பு

காட்டில் இருளில் தனியே விடப்பட்ட மிருகாபதி செய்வதறியாது திகைத்தாள். விடியற் காலையில் ஆண் குழந்தை ஒன்றை ஈன்றெடுத்தாள். மாளிகையில் பிறந்து மங்கல நீராட வேண்டிய மகன் மண்ணில் கிடந்து கண்ணீரால் நனைவது கண்டு புலம்பினாள். நீராடும் பொருட்டு அவ் வழியே சென்ற சேடக முனிவர் அழுகுரல் கேட்டு அந்த இடத்தை அடைந்து, தன் மகளைக் குழந்தையோடு கண்டார்; நடந்ததை அறிந்தார். மிருகாபதியைக் குழந்தையுடன் தன் தவச்சாலைக்கு அழைத்துச் சென்றார். கதிரவன் தோன்றும் வேளையில் பிறந்த அக் குழந்தைக்கு உதயணன் என்று பெயரிட்டார்.

யூகியின் நட்பு

சேடக முனிவரின் தவப்பள்ளியை அடுத்திருந்த மற்றொரு தவப்பள்ளியில் பிரம சுந்தர முனிவர் என்பார் தவநெறி ஒழுகி வந்தார். அவர் துணைவி பரமசுந்தரி. இவர்கட்கு யூகி என்ற மகன் தோன்றினான். உதயணனும் யூகியும் விளையாட்டுத் தோழர்களாயினர்; ஒன்று சேர்ந்து வளர்ந்தனர்; பிரிக்க முடியாத நண்பர்கள் ஆயினர்.

கோடபதி யாழ்

உதயணனுக்கும் யூகிக்கும் பிரம சுந்தர முனிவர் கல்விப் பயிற்சி அளித்தார். உதயணனின் மதிநுட்பத்தைக் கண்ட

அவர் அவனுக்கு யானையை அடக்கியாளும் மந்திரம் ஒன்றைக் கற்றுத் தந்தார். மேலும் அவருக்கு இந்திரனால் கொடுக்கப்பட்ட கோடபதி என்ற தெய்வ யாழையும் தந்தார். அந்த யாழ் யானைகளைத் தன்வயப்படுத்தும் ஆற்றலுடையது.

இவற்றோடு உதயணனுக்கு அவர் இசைப் பயிற்சியும் அளித்தார்; தன் மகன் யூகியையும் உதயணனிடம் அடைக்கலமாக்கினார்.

தெய்வ யானை

ஒருநாள் உதயணன் கோடபதி யாழோடு காட்டில் அலைந்து திரிகையில் யானைக் கூட்டம் ஒன்றைக் கண்டான். பல பெண் யானைகளின் நடுவில் ஆண் யானை ஒன்று பெருமிதத்துடன் நின்றது. அது ஒரு தெய்வ யானை. உதயணன், முனிவர் கூறிய மந்திரத்தை உச்சரித்துக் கோடபதியை இசைத்தான். தெய்வ யானை அவன் வயப்பட்டு அவனுடனேயே தங்கியது; அவன் ஏவிய தொழில்களைச் செய்தது.

தெய்வ யானை ஒருநாள் உதயணன் கனவில் தோன்றி, "நீ என் மேல் பாகரை ஏற்றினாலும், தோல் கயிற்றால் என்னைக் கட்டினாலும், என்னைவிட்டு முன்னமே நீ உண்டாலும் உன்னைவிட்டு நீங்கிவிடுவேன்" என்றது. உதயணனும் இவற்றில் பிழையேதும் நேராமல் காத்து வந்தான்.

உதயணன் வைசாலி மன்னனாதல்

வைசாலியை ஆண்டுவந்த விக்ரன் அரசாட்சியில் வெறுப்புற்றுத் துறவறம் பூணுதற்கு விரும்பினான். ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க அவனுக்கு மக்கள் இல்லாமையால், தன் தந்தையைக் கண்டு அறிவுரை பெற விபுலமலைச் சாரலை அடைந்தான். அங்குத் தன் தந்தையோடு தங்கையையும் அவள் மகன் உதயணனையும் கண்டான். விக்ரன் தந்தையிடமும், தங்கையிடமும் வைசாலியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க உதயணனைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு வேண்டினான். அவர்கள் இணங்கவே உதயணனை அழைத்துச் சென்று, வைசாலி மன்னனாக முடி சூட்டினான். உதயணன் தாயையும், தெய்வ

யானையையும், யூகியையும் தன்னுடன் வைசாலிக்கு அழைத்துச் சென்றான்.

முடிபுனைந்த உதயணன், யூகியை முதலமைச்சனாகவும், உருமண்ணுவா, வயந்தகன், இடவகன் ஆகியோரை அமைச்சர்களாகவும் கொண்டு வைசாலியை ஆண்டான். தெய்வ யானையும் அவனுக்குத் துணை நின்றது.

உதயணன் தம்பியர்

மிருகாபதியைக் காணாது கலங்கிய அவள் கணவன் சதானிகன் அவளைப் பல இடங்களில் தேடியும் பயனின்றி வருந்தியிருந்தான். பின்னர் முனிவர் ஒருவர் மூலம் மிருகாபதியைப் பறவை எடுத்துச் சென்றது முதல் உதயணன் வைசாலி அரசனாயிருப்பது வரை அனைத்தையும் அறிந்தான். வைசாலி சென்று மகனையும் மனைவியையும் கண்டு மகிழ்ந்தான். மனைவியை அழைத்துக்கொண்டு கௌசாம்பி திரும்பினான். மிருகாபதிக்குப் பிங்கலன், கடகன் என மேலும் இரு புதல்வர் தோன்றினர்.

உதயணன் கௌசாம்பி மன்னனாதல்

முதுமையடைந்த சதானிகன் துறவு மேற்கொள்ள விரும்பி, உதயணனை வருவித்து அவனை வத்தவ நாட்டுக்கு மன்னனாக்கினான். உதயணன் கௌசாம்பியில் இருந்து கொண்டு வத்தவ நாடு, சேதி நாடு ஆகிய இரு நாட்டு ஆட்சிகளையும் நன்கு நடத்தி வந்தான். சில ஆண்டுகள் சென்றபின் சேதி நாட்டு ஆட்சிப் பொறுப்பை யூகிக்கு அளித்தான். தான் கௌசாம்பியை மற்ற அமைச்சர்களோடு தெய்வயானையின் துணையையும் கொண்டு ஆண்டு வந்தான்.

இயக்கன் நட்பு

ஒருநாள் உதயணனும் உருமண்ணுவாவும் வீரர்களுடன் காட்டில் வேட்டையாடிக் களைப்புற்றனர். எங்கே தேடியும் நீர் கிடைக்காமையால் ஒரு புரச மர நிழலில் சோர்ந்து கிடந்தனர். அவ்வமயம் பேரழகனான இளைஞன் ஒருவன் அங்குத் தோன்றி, அவர்கட்கு நேர்ந்த துன்பத்தைக் கேட்டு, நீர் கொணர்ந்து களைப்பைப் போக்கினான். பயன் எதையும்

கருதாது திரும்ப முனைந்த அந்த இளைஞனை அவர்கள் யாரெனக் கேட்டனர். அவன், "நான் குபேரனுக்குத் தொண்டு செய்யும் ஓர் இயக்கன். என் பெயர் நஞ்சுகன். என்னை உங்கள் நண்பனாகக் கருதுங்கள். என்னை எப்பொழுது நினைத்தாலும் அப்போது வந்து உங்கள் குறை தீர்ப்பேன்" என்றான். அவனை நினைத்தற்குரிய மந்திரத்தை அருளிச் செய்து மறைந்தான்.

தெய்வ யானை நீங்குதல்

ஒருநாள் நாடக அரங்கில் ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் களித்த உதயணன் பசி மிகுதியால் யானைக்கு உணவளிக்க மறந்து தான் முந்தியுண்டான். உதயணன் வாக்கை மீறியதால் தெய்வ யானை அவனை விட்டுப் பிரிந்தது. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. யாழேந்தி யானையைத் தேடி உதயணன் காடுகளில் அலைந்தான்.

பிரச்சோதனன்

அவந்தி நாட்டின் தலைநகர் உச்சயினி. அந் நாட்டைப் பிரச்சோதனன் என்ற மாமன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு மனைவியர் பலர். அவருள் பதுமகாரி என்பாளுக்கு வாசவதத்தை என்ற பெண் பிறந்தாள். வேறுள்ள மனைவியரிடம் பிரச்சோதனனுக்குத் தோன்றிய பெண்களும் ஆண்களும் மிகப் பலர். ஆண் மக்களில் சிறந்தவர் பாலகன், பாலகுமரன், கோபாலகன் என்பார். அவன் பட்டத்து யானையின் பெயர் நளகிரி. சிற்றரசர் பலரும் அவனுக்குத் திறை செலுத்தி வந்தனர். சேதி மன்னன் யூகியும், வத்தவ மன்னன் உதயணனும் திறை செலுத்தாதது கேட்டு அவர்கள் இருவரையும் சிறைப்படுத்தக் கட்டளையிட்டான்.

சாலங்காயன்

பிரச்சோதனனின் முதலமைச்சன் சாலங்காயன். அவன் பிரச்சோதனனிடம் உதயணனின் வீரத்தையும், யூகியின் அறிவுத் திறனையும் எடுத்துக் கூறி அவர்களைப் போரில் வெல்வது எளிதல்லவாதலின் தந்திரத்தாலேயே சிறைப்படுத்த வேண்டுமென்றான்.

மாய யானை

உதயணனைச் சிறைப்பிடிக்க எந்திர யானை ஒன்று அரக்கு, மரம் முதலியவற்றால் உருவாக்கப்பட்டது. வயிற்றில் 96 வீரர்களும் துதிக்கையிலும் கால்களிலும் பல வகை ஆயுதங்களும் இருக்குமாறு அவ்வியானை செய்யப் பட்டது. மாய யானையைப் பிரச்சோதனன் சாலங்காய னுடனும் வீரர்களுடனும் கௌசாம்பிக்கு அனுப்பினான்.

உதயணன் சிறைப்படல்

கௌசாம்பிக் காட்டினுள் மாய யானை பிளறிக் கொண்டு உலாவலாயிற்று. மாய யானையை உயிருள்ள யானையாகக் கருதிக் காட்டிலிருந்த பெண் யானைகள் அதனைச் சூழ்ந்து வந்தன. வேடர்கள் அதனைத் தெய்வ யானையெனக் கருதி உதயணனிடம் சென்று கூறினர். உதயணன் உடனே யானையைக் காணப் புறப்பட்டான். மாய யானையைத் தெய்வ யானை என்றெண்ணி அதனருகில் சென்று யாழை மீட்டினான். யானையும் இசைக்கு மயங்கி அருகில் வருவது போல் வந்தது. அருகில் நெருங்கியதும் அதன் வயிற்றினுள் இருந்த வீரர்கள் வெளிப்பட்டு உதயணனை வளைத்தனர். மறைந்திருந்த சாலங்காயன் படைகளோடு வெளிப்பட்டு உதயணனைப் பிடித்துத் தேரில் கட்டிச் சென்றான். பிரச்சோதனன் உதயணனைச் சிறையிலடைத்தான்.

யூகியின் சூளுரை

வயந்தகன் மூலம் நடந்தது அறிந்த யூகி, வஞ்சகத்தை வஞ்சகத்தாலேயே வெல்ல வேண்டும் என்று முடிவு செய் தான். "மாய யானையால் மயக்கி எம் அரசனைச் சிறை செய்த பிரச்சோதனன் நகரத்தை ஒரு யானையாலேயே அழிப்பித்து உதயணனை மீட்பேன். உச்சயினியைத் தீக்கிரை யாக்குவேன். பிரச்சோதனன் மகள் வாசவதத்தையை உதயணன் கவர்ந்து வரச் செய்து அவளை அவனுக்கு மணம் முடிப்பேன்" என்று சூளுரைத்தான்.

யூகியின் ஏற்பாடுகள்

யூகி வைசாலி நகரத்தைக் காக்கத் தன் உறவினர்களை நியமித்தான். கௌசாம்பியைக் காக்குமாறு பிங்கல

கடகர்க்குச் செய்தி அனுப்பினான். அவந்தியின் எல்லையி லிருந்த புட்பக நகரத்தில் இடவகனையும், சயந்தி நகரத்தில் உருமண்ணுவாவையும் இருக்கச் செய்தான். உதயணன் பிரிவுக்கு ஆற்றாமல் யூகி இறந்து விட்டான் என்ற பொய்ச் செய்தியை நாடெங்கும் உலவவிட்டான். அனைவரும் நம்பு வதற்காக ஒரு பிணத்துக்குத் தன் ஆடையை அணிவித்துச் சுடச் செய்தான். வயந்தகனையும், வீரர்கள் பலரையும் மாற்றுருவம் கொள்ளச் செய்து அவர்களோடு தானும் வேற்றுருவம் பூண்டு உச்சயினியை அடைந்தான். அங்குத் தன்னோடு வந்தவர்களை அரண்மனையிலும் வெளியிலுமாக வேலைக்கமர்த்தினான். தான் நகரின் புறத்தே மாகள வனத்தி லிருந்த காளிகோயிலில் யாருமறியாமல் தங்கினான். யூகியின் ஏற்பாட்டின்படி வயந்தகன் அரண்மனையில் நுழைந்து பிரச்சோதனனின் மகன் பாலகுமரனுக்கு ஏவல் செய்து வந்தான். யூகியின் வீரர்கள் ஊமையராகவும் செவிடராக வும் வேடம் பூண்டு அரண்மனையிலும் பிற இடங்களிலும் உலவி, ஒற்றறிந்து, அவ்வப்போது யூகியிடம் கூறிவந்தனர்.

ஆருணி அரசன்

பாஞ்சால மன்னன் ஆருணி, உதயணனின் பரம்பரைப் பகைவன். உதயணன் சிறைப்பட்ட செய்தி அறிந்ததும் அவன் படையோடு சென்று கௌசாம்பியைக் கைப்பற்றி னான். உதயணன் தம்பியராகிய பிங்கல கடகர் தலைமறை வாகித் தப்பியோடினர்.

யூகி உதயணனைக் காணல்

யூகி ஒருநாள் தெய்வ ஆவேசம் பெற்றவன்போல ஆடிப் பாடி உச்சயினி நகர வீதிகளைக் கடந்து உதயணனிருந்த சிறைச்சாலையின் அருகே வந்து சேர்ந்தான்; தனக்கும் உதயணனுக்கும் மட்டுமே தெரிந்த ஒரு பாட்டைப் பாடினான். பாட்டைக் கேட்டு யூகி வந்திருப்பதை உணர்ந்த உதயணன் தான் உள்ளிருப்பதை வேய்ங்குழலூதித் தெரிவித் தான். வேடிக்கை பார்ப்பவன் போல உதயணன் வெளியில் வந்து யூகியையும் தோழர்களையும் கண்டு களித்தான். இச் செயல் தொடர்ந்து நடந்தது. இதனைக் கேள்வியுற்ற

அரசனும் அமைச்சனும் வேடமணிந்து வருபவன் யூகியாகவே இருக்க வேண்டுமென்று ஐயுற்றனர். அதைத் தன் ஒற்றர் மூலம் அறிந்த யூகி எச்சரிக்கையாகத் தன்னைக் காத்துக் கொண்டான்.

நளகிரிக்கு வெறியூட்டல்

உதயணனை மீட்க விரும்பிய யூகி, ஒருநாள் நள்ளிரவில் பேய் வடிவம் பூண்டு நகரத்துள் சென்று பிரச்சோதனனின் பட்டத்து யானை நளகிரிக்கு அகிற் புகையூட்டி, ஒரு மருந்தைக் கொடுத்து, வெறியூட்டினான். நளகிரி கட்டுத்தறியை முறித்து ஓடியது; நகரைக் கலக்கியது. பாகர்களால் அதனை அடக்க முடியவில்லை. அரசன் செய்வதறியாது திகைத்தான். அமைச்சன் சாலங்காயன் உதயணன் ஒருவனே அதனை அடக்க முடியும் என்றான். வேறு வழியின்றி அரசனும் உதயணனை அழைத்துவர இசைந்தான். சிவேதன் என்ற அமைச்சன் உதயணனிடம் சென்று மன்னனின் வேண்டுகோளை அறிவித்தான். இத் துன்பத்திலிருந்து காப்பாற்றினால் பிரச்சோதனன் அவனைச் சிறைவிடுத்துக் கௌசாம்பிக்கு அனுப்பிவைக்க முடிவு செய்திருப்பதாகவும் கூறினான்.

நளகிரியை அடக்குதல்

உதயணனும் மன்னன் வேண்டுகோளை ஏற்று யானை இருந்த இடத்தை அடைந்தான். பிரமசுந்தர முனிவர் கற்பித்த மந்திரத்தை ஓதியதும் யானை அசைவற்று நின்றது; கோடபதியை இசைத்ததும் சினம் தணிந்து அவனிட்ட ஏவலைக் கேட்டது; வணங்கி நின்ற நளகிரியின் மீது ஏறியமர்ந்து வீதிகளில் உலாவினான். மக்கள் உதயணனைப் பாராட்டினர். செய்தியை அறிந்த மன்னன் அவனைக் காண விரும்பினான். உதயணன் யானைமீது அமர்ந்து சென்று மன்னன்முன் நின்றான்.

பிரச்சோதனன் உதயணனைப் பலவாறு பாராட்டி விலையுயர்ந்த மாலை ஒன்றை அளித்தான். * அவனைத் தன் அரு

---

* இதுவரை உள்ள கதைப் பகுதியை விளக்கும் கொங்குவேளின் பாடற்பகுதி கிடைக்கவில்லை.

கில் அழைத்து அவன் கற்ற கலைகளைக் கேட்டுப் பாராட்டி ஞன். உதயணன் கௌசாம்பிக்குத் திரும்பும் வரை தன் மக்களை அவனுக்குக் குற்றேவல் செய்யும்படியாகவும் பணித்தான்.

வாசவதத்தையைக் காண்டல்

பின்னும் அவன் உதயணனை நோக்கி, "இந்த யானை தன் நிலை திரியக் காரணம் என்ன?" என்று கேட்டான். அதற்கு விடையளிக்கத் தலை உயர்த்திய உதயணன், பிரச்சோதனனின் பின்னே, தன் தாயரிடையே நின்ற வாசவதத்தையைக் கண்டான். கண்கள் ஒன்றையொன்று கவ்விட இருவரும் இதயம் மாறிப் புக்கனர். இருந்த இடம் அரசவையாதலாலும், இருவரும் பெருங்குடிப் பிறப் பினராதலாலும், 'அமைப்பரும் காதலை இமைப்பினுள் அடக்கி' நின்றனர். உதயணன் யானை திரிந்ததற்கான காரணத்தை விளக்கிஞன். மகிழ்ந்த பிரச்சோதனன், "உதயண குமரனே! உச்சயினி உன்னுடையது; யாங்கள் உனக்குரியவர்; எம்முடையவை உன்னுடையனவே" என்று கூறி யானைச் சேரியில் அவனுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட மாளிகையில் தங்கியிருக்க அனுப்பிஞன்.

மாலைப் புலம்பல்

மாலை வந்துற்றது. மாளிகை சென்ற உதயணன் வாசவதத்தை நினைவாகவே இருந்தான். சோலையில் ஆணும் பெண்ணுமாக இணைந்திருந்த உயிரினங்கள் அவன் வேட்கையை மிகுதிப்படுத்தின. இரவும் வந்தது. கன்னிமாடம் சேர்ந்த வாசவதத்தை உதயணன் நினைவால் உள்ளம் நைந்தாள். 'யானையைப் பிணித்ததன்றி என் உள்ளத்தையும் பிணித்த கள்வனை மீட்டும் காணப் பெறுவேனே' என்று புலம்பிஞள். இரவு நீண்டதாய்த் தோன்றி இருவர்க்கும் இன்னலைத் தந்தது.

பிரச்சோதனன் வேண்டுகோள்

மறுநாள் காலையில் பிரச்சோதனன் உதயணனை அழைத்து வரச்செய்து, "இந்த அரண்மனையை உன்னுடைய இல்லமாக நினைந்து நீ எண்ணியவாறு நடக்கலாம்" என

உற்சாகப்படுத்தினன். உதயணனைச் சிலகாலம் உச்சயினியில் இருக்கச் செய்ய எண்ணிய பிரச்சோதனன், சிவேதன் என்ற அமைச்சனை அனுப்பி, அரச குமாரர்களுக்குப் படைக்கலப் பயிற்சியும், அரசகுமரி ஒருத்திக்கு யாழ்ப் பயிற்சியும் அளிக்க உதயணனை வேண்டினன். யாருக்கு யாழ் கற்பிக்கப் போகிறோம் என்பது தெரியவில்லையாயினும், யாழ் கற்பிக்க அரண்மனைக்குச் செல்லுங்கால் தன் உள்ளங் கவர்ந்தவளைக் காண வாய்ப்பு ஏற்படும் என்றெண்ணியவனாய் உதயணனும் அரசன் வேண்டுகோளை ஏற்றான்.

யாழ் கைவைத்தல்

பிரச்சோதனன் அந்தப்புரம் சென்று அரச மகளிர் அனைவரையும் அழைத்தான். அவர்களுள்ளே, "ஒண்மையும் நிறையும், ஓங்கிய ஒளியும், பெண்மையும், பெருமையும்" உடையவளாய வாசவதத்தையை உதயணனிடம் யாழ்ப் பயிற்சி பெறத் தேர்வு செய்தான். பயிற்சி தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டது. உதயணன் மேடையில் ஓர் இருக்கையில் அமர்ந்தான். அலங்கரிக்கப்பட்டு அழகுருவாய் விளங்கிய வாசவதத்தை திரையின் மறுபுறம் இருக்கையிலிருந்தாள். தன் உள்ளங் கவர்ந்தவளுக்கே தான் யாழ் கற்பிக்கப்போவதை உதயணனும், தன்னை நிலை கலக்கிய இளைஞனே தனக்கு ஆசிரியனாகப்போவதை வாசவதத்தையும் அறிந்தாரில்லை. தோழியர் வாசவதத்தையிடம் ஆசிரியனுக்கு வழிபாடு செய்யக் கையைக் குவிக்கச்செய்து திரையை அகற்றினர். ஒருவரை ஒருவர் கண்ட உதயணன், வாசவதத்தை உள்ள மகிழ்ச்சிக்கு எல்லையுமுண்டோ? யாழ்ப் பயிற்சி வளர வளர அவர்கள் அன்பும் வளர்ந்து வந்தது. ஆயினும் ஒருவர்க்கொருவர் தம் உள்ளத்தை வெளிப்படுத்திக் காட்டினாரில்லை.

வயந்தகனைக் காணுதல்

உதயணனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யப் பிரச்சோதனன் மகன் பாலகுமரன் நியமிக்கப்பட்டிருந்தான். ஒருநாள் பாலகுமரன் தன் பணியாளாயிருந்த வயந்தகன் மூலம் உதயணனுக்கு வேண்டிய பொருள்களை அனுப்பினன்.

உதயணன் நண்பனை அடையாளங் கண்டான். அவன் மூலம் யூகி பற்றியும் பிற செய்திகளையும் அறிந்தான்.

நருமதை

வாசவதத்தையை எண்ணி உருகிய உதயணன் உடல் வேறுபட்டான். இம் மாற்றத்தை வாசவதத்தையோடு இணைத்துப் பிறர் பேச இடந் தராதிருப்பதற்காகத் தான் வேறொருத்திமேல் காமுற்றது போலக் காட்ட விரும்பினன். வயந்தகனிடம் ஒருவன்பால் உளம் வைத்தொழுகும் பரத்தை ஒருத்தியைக் கொண்டுவரக் கூறினன். வயந்தகன் பரத்தையர் தெருவிற் சென்று நருமதை என்பாள் வீட்டை அடைந்தான். தாய்க் கிழவி அவனை மரியாதையோடு வரவேற்ருள்; உதயணன் மனத்தில் தன் மகள் உள்ளாள் என்பதறிந்து எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தாள். நருமதையோ வறியவனும், அழகற்றவனும், சூதாடியுமான சேணிக இளைஞன் ஒருவனை விரும்பி அவனை அடையப் புறப்பட்டு நின்ருள். உதயணனுக்குப் பெண்டாக முடியாதெனத் திட்டமாக மறுத்தாள். யார் கூற்றுக்கும் இசையாத அவளை, வலிய இழுத்துச் செல்லுமாறு தாய்க் கிழவி கூற அவ்வாறே வயந்தகன் அவளை வலியத் தேரிலேற்றி உதயணனிடம் சேர்ப்பித்தான். உதயணனும் நகரத்தார் அறியும் வண்ணம் அவளைத் தன்னுடன் ஓரிரவு இருக்கச் செய்து அனுப்பினன். உதயணன் நருமதை ஒருவரை ஒருவர் விரும்பினரில்லை. வாசவதத்தையால் தன்னிடம் ஏற்பட்ட வேறுபாட்டை, அது நருமதையின்பால் கொண்ட வேட்கையால் உண்டாயது என்று ஊரார் நினைக்க வேண்டுமென உதயணன் கருதினன். அதில் வெற்றியும் பெற்ருன். நருமதையின்பால் உதயணன் பித்தேறியுள்ளான் என்றே மக்கள் நினைத்தனர்.

வாசவதத்தையின் காதல் உள்ளம்

இந் நிலையில் வாசவதத்தையைப் பெண் கேட்டு வேற்று நாட்டரசர் பலரும் தூது அனுப்பினர். அவர்கட்குப் பிரச்சோதனன் பட்டும் படாமலும் மறுமொழி கூறி அனுப்பினன். பிற அரசர்கள் மணம் பேச வந்ததைத் தன் செவிலி சாங்கியத்தாய் மூலம் அறிந்த வாசவதத்தை நடுங்கி,

"உதயணனையன்றிப் பிறரை மணப்பதாயின் என் உயிர் இராது" என்று புலம்பினாள். வாசவதத்தையின் உள்ளம் உதயணன்பால் இருப்பதை அறிந்த சாங்கியத்தாய் உளம் மகிழ்ந்தாள். வாசவதத்தைக்கும் தேறுதல் கூறினாள். உதயணனை வாசவதத்தை விரும்பினாள் என்பதறிந்த சாங்கியத்தாய் உள்ளம் மகிழ்வானேன்?

சாங்கியத்தாய்

இவள் கௌசாம்பி நகரில் பிறந்த ஒரு பார்ப்பனி. கணவன் பிரிந்திருந்தபோது கற்பு வரம்பு கடந்து ஒழுகினாள். அறங்கூறவையத்தார் அக் குற்றத்திற்காக அவளை மணற் குடத்தோடு கட்டி யமுனை ஆற்றில் வீழ்த்துமாறு விதித்தனர். புலையன் ஒருவன் பம்பைப் பறையை அறைந்து ஊராருக்குத் தெரிவித்து அவளை ஒரு தோணியிலேற்றி யமுனை ஆற்றிடையே சென்றான். அப்போது யமுனையில் நீர் விளையாடிக் கொண்டிருந்த உதயணன் செய்தியைக் கேள்வியுற்று, ஏவலரை அனுப்பி, அவளை அழைத்து வருமாறு கூறினான். நிகழ்ந்ததை அறிந்து அவளுக்கு விதித்துள்ள தண்டனை அதிகம் என்றான். அருகிலிருந்தவர் கூறியவற்றுக் கேற்ப அவளைக் கொல்லாது தவஒழுக்கம் மேற்கொள்ள விடுவித்தான். அவள் வணிகர் கூட்டத்துடன் வடநாடு சென்றாள். அங்குச் சாங்கிய முனிவர் ஒருவரைக் கண்டு அவரிடம் அம் மதக் கொள்கைகளை அறிந்தாள். இரண்டாண்டுகள் அவருடன் தங்கியிருந்தாள். பின்னர் கன்னியா குமரியில் நீராட மாணாக்கருடன் புறப்பட்ட முனிவருடன் அவளும் வந்தாள். அம் முனிவர் வழியில் பிரச்சோதனன் அவைக்களத்தில், பிற மதத்தினருடன் வாதாடிச் சாங்கிய சமயமே சிறந்ததெனர நிறுவினார். அரசன் வேண்டுகோளுக் கிணங்க முனிவரும் மாணாக்கரும் சின்னாட்கள் அங்கே தங்கியிருந்து புறப்பட்டனர். ஆனால் அரசி, சாங்கியத்தாயிடம் அறங்கேட்டலை விரும்பி, அவளைத் தனக்குப் பாங்கியாக்கிக் கொண்டு தன்னுடனேயே இருத்திக் கொண்டாள். அக் காலத்தில் இளங் குழந்தையாக இருந்த வாசவதத்தை அவளிடம் விரும்பி உறைந்ததால் அவளுக்குச் செவிலியாகவும் மாறினாள்.

வாசவதத்தையின் உள்ளத்தை அறிந்ததும் சாங்கியத்தாய் உதயணனைத் தேடிச் சென்று தன்னுடைய வரலாற்றைக் கூறித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். யமுனையில் அவளைத் திரும்பக் கொணருமாறு உதயணன் கூறியபோது படகோட்டி படகை வேகமாகத் திருப்ப, அப்போது துடுப்பு பட்டு நெற்றியில் ஏற்பட்ட காயத்தினால் உண்டான தழும்பையும் காட்டினாள். உதயணனுக்கும் பழைய செய்திகள் நினைவுக்கு வந்தன.

பின்னர் சாங்கியத்தாய் உதயணனிடம் அவன் ஒரு பரத்தையின்பால் உள்ளத்தைப் பறிகொடுத்தது முறையல்ல என்று கூற, உதயணன் தான் நருமதையை வருவித்ததற்கான காரணத்தை அவளிடம் விளக்கினான். சாங்கியத்தாய் மகிழ்ந்து அவனிடம் வாசவதத்தை கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தினாள். வாசவதத்தைக்கு அவனுடைய நிலையைக் கூறுவதாகவும் சொன்னாள்.

அரங்கேற்றம்

இந் நிலையில் அரச குமாரர்கள் படைக்கலப் பயிற்சியிலும், வாசவதத்தை யாழ்ப் பயிற்சியிலும் தேர்ச்சி பெற்றமையால் அரங்கேற்றத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பிறநாட்டு அரசர்களும் கலைஞர்களும் கூடியிருந்த பேரவையில் அரங்கேற்றம் நடைபெற்றது. கலைப் பயிற்சியின் சிறப்பைக் கண்ட அனைவரும் உதயணனை உளமாரப் பாராட்டினர். ஆருணி அரசனைக் கௌசாம்பியிலிருந்து அகற்றி உதயணனைக் கௌசாம்பிக்கு அரசனாக்குவதே தான் செலுத்தக் கூடிய பொருத்தமான காணிக்கை எனப் பிரச்சோதனன் எண்ணினான். ஆருணி அரசனுக்குப் போர் குறித்து ஓலை அனுப்பிவிட்டு, "நாளையே நமது படைகள் புறப்படட்டும்; பாலகனும் உதயணனுடன் செல்லட்டும்" என்று கட்டளையிட்டான்.

பாகீரதி குறி சொல்லல்

உதயணன் கௌசாம்பி சென்றால், தன் குலுரை பொய்த்துவிடுமென்பதால் அத் திட்டத்தைத் தடைசெய்ய

யூகி எண்ணினான். பாகிரதி என்ற குறி சொல்பவனை அழைத்து, "சென்ற ஆண்டில் நீர் விழாக் கொண்டாடாமை யால் நலகிரியை வெறியூட்டி நகரை அழிப்பித்த தெய்வம் நான். இவ்வாண்டும் கொண்டாடாவிட்டால் மீண்டும் நகரை அழிப்பேன்" என்று ஆடிக் குறி சொல்லுமாறு செய்தான்.

நீராட்டணி

பிரச்சோதனன் உடனே நீர் விழாவுக்கு ஏற்பாடு செய்யக் கட்டளையிட்டான். 'நாளை நீராட்டணி' என்று ஊரெங்கும் முரசறைவித்தான். நகர இளைஞர், மகளிர் அனைவரும் ஆற்றங் கரையை நோக்கிக் கூட்டங் கூட்டமாகப் புறப்பட்டனர். பிரச்சோதனன் தன் தேவியர் புடைசூழ ஆற்றங்கரை சென்று தங்கினான். வாசவதத்தை தோழிய ருடன் சிவிகையில் சென்றாள். உதயணன் ஏறிச் செல்ல பத்திராபதி என்ற யானையைப் பிரச்சோதனன் அனுப்பி வைத்தான்.

யூகியின் செய்தி

நீர் விளையாட்டு நடைபெறும் வேளையில், "நகரைத் தீயிட்டு அழிக்க ஏற்பாடு செய்துள்ளேன். அப்பொழுது ஏற்படும் கலக்க நிலையைப் பயன்படுத்திக் கொண்டு வாசவதத்தையைக் கைப்பற்றி உதயணன் செல்லவேண்டும். பிரச்சோதனன் வீரர்கள் தடுத்தாலும் அவர்களோடு போரிட்டு வெல்ல நம் ஆட்கள் உள்ளனர். உச்சயினி எல்லையைக் கடந்ததும் ஏறிச் செல்லும் யானை இறந்தாலும் கவலை வேண்டாம். அங்கு உதயணனைக் காப்பாற்ற வேடர் களுக்குக் கூறியுள்ளேன். இங்குள்ள வேலைகளை முடித்துக் கொண்டு விரைவில் நானும் திரும்புவேன்" என்று யூகி உதயணனுக்கு வயந்தகன் மூலம் செய்தி அனுப்பினான்.

நகரில் தீ

மக்கள் ஆற்றங்கரையில் கூடியிருந்த வேளையில் நகரின் பல பகுதிகளிலும் யூகி தீ வைக்கச் செய்தான். அவ் வேளை பெருங் காற்றும் சேரவே தீ வானளாவியது. எங்கும் ஒரே ஓலம். குழப்பத்தைக் கண்ட மன்னன் தன் தேவியரைக்

காத்து நின்றான்; வாசவதத்தையைக் காக்குமாறு உதயணனுக்குச் சொல்லியனுப்பினான்.

வாசவதத்தையை வெளியேற்றல்

உதயணன் வாசவத்தை இருந்த இடம் சென்றதும் அங்கிருந்த காவலர்கள் அவளை யானையின்மீது ஏற்றிச் சென்று காப்பாற்றுமாறு வேண்டினர். உதயணன் விருப்புடன் வாசவதத்தையை யானை மீது ஏற்றினான். வாசவதத்தையின் தோழி காஞ்சனமாலையும் அவளுடன் ஏறினாள். உதயணன் வயந்தகனையும் ஏறிக் கொள்ளுமாறு செய்தான். உதயணன் யானையைத் திசை திருப்பிக் கௌசாம்பி நகர் நோக்கிச் செலுத்தினான். தடுத்தவர்களை உதயணனின் வீரர்கள் கொன்றனர். மாறுவேடத்திலிருந்த யூகி, யானையருகே வந்து, 'உதயணனுக்குத் தீங்கு நேராமல் கொண்டு சேர்த்தல் உன் கடமை' என்று அடைக்கல மந்திரம் ஒன்றை அதன் காதில் ஓதினான். யூகியை அறிந்துகொண்ட உதயணன் அவனிடம் சாங்கியத்தாயின் அடையாளம் கூறி, அவன் திரும்பும்போது அவளையும் அழைத்து வருமாறு கூறினான். பெற்றோரைப் பிரிந்த வாசவதத்தை வருந்தினாள். உதயணன் ஆறுதல் கூறி அழைத்துச் சென்றான். யூகி சாங்கியத்தாயைத் தேடி அறிந்தான். இருவரும் தாம் மேற்கொள்ள வேண்டிய செயல்களை முடிவு செய்து நிறைவேற்றத் தொடங்கினர்.

பெற்றோர் உற்றோர் வருத்தம்

வாசவதத்தையை உதயணன் கவர்ந்து சென்றதை அறிந்த பிரச்சோதனன் கவன்றான். உதயணனைப் பிடித்து வருமாறு ஆட்களை ஏவினான்; பயனில்லை. அருகிருந்த சாலங்காயன் இஃது ஊழ்வினையால் நேர்ந்தது என்று கூறி அமைதிப்படுத்தினான். தேறிய மன்னன் வாசவதத்தையின் பிரிவால் வருந்திய அவள் தாய்க்கும், உரிமைச் சுற்றத்துக்கும் ஆறுதல் கூறினான்.

தோழியின் தேறுதல்மொழி

பத்திராபதி உச்சயினிக்கு அப்பால் இரண்டு காதம் செல்வதற்குள் பகலவன் மறைந்தான். மதி தோன்றியது. பிடி

விரைந்து சென்றது. தத்தை அஞ்சி நடுங்கினாள். தோழி காஞ்சனமாலை, "நங்காய்! அஞ்சாதே! உன் தந்தை முறைப்படி மணம் செய்து தரவில்லையே என்பது தவிர வேறு குறை யில்லை. உன் மனம் விரும்பியவன்தானே கைப்பற்றிச் செல்கிறான். கவலை ஒழிக!" என்று தேற்றினாள்.

கோடபதியை இழத்தல்

பத்திராபதி அன்று இரவிலேயே மருதம், முல்லை, குறிஞ்சி நிலப்பகுதிகளையும் நருமதையாற்றையும் கடந்து பாலைவனத்தை அடைந்தது. இரவிலேயே பாலையைக் கடக்க யானையை உதயணன் விரைவாகச் செலுத்தினான். அப்பொழுது அவனுடைய யாழ் தவறி வீழ்ந்து மூங்கிற் காட்டிற் சிக்கிக் கொண்டது. அதுகண்ட வயந்தகன் யானையை நிறுத்துமாறு கூறுவதற்குள், யானை எண்ணூறு வீற்கிடை தூரம் கடந்துவிட்டது. "இனி நாம் செய்யத் தக்கது ஒன்றுமில்லை. தந்த தெய்வம் தானே தரும்" என்று வயந்தகனிடம் கூறியவனாய் உதயணன் யானையை விரைந்து ஓட்டினான்.

பத்திராபதி இறத்தல்

யானை அவந்தியை அடுத்திருந்த காட்டினுள் செல்லும் போது அதனைக் காலவேகம் என்னும் நோய் பற்றியது. யானை மெலிந்து தளர்ந்தது. உதயணன் வயந்தகனிடம், "இனி யானை வீழ்ந்துவிடும்; நீ காஞ்சனையுடன் பின்புறம் இறங்கு" எனக் கூறித் தான் வாசவதத்தையைத் தழுவிய வனாய் முன்புறம் இறங்கினான். அவன் இறங்கும்வரை சாயாமற் காலைப் பரப்பி நின்ற யானை, அவன் இறங்கியதும் தன் தலை உதயணன் காலிற்படும்படி வீழ்ந்தது. உதயணன் யானையின் உடலைக் குளிருமாறு தடவி, நற்கதி அடையுமாறு அதன் காதில் பஞ்ச மந்திரத்தை ஓதினான். யானை இறந்தது. "இப்பிறப்பில் என் துயர் தீர்த்த பிடியே! வரும் பிறப்பில் என்னோடு உடன் வாழ்வாயாக" என்று கூறி உதயணன் கண்ணீர் வடித்தான். தானே சென்று, நீர் கொணர்ந்து அதற்குச் செய்ய வேண்டிய நீர்க் கடன்களைச் செய்து முடித்தான்.

வழி நடத்தல்

அது வேடர் வாழும் கொடிய நிலமாதலால் விடியுமுன் சயந்தி செல்லும் பாதையை அடைய வேண்டுமென நால் வரும் நடந்தனர். இருகாத தூரம் சென்றதும் வாசவதத்தை நடக்க முடியாதது கண்டு அங்கே வழியிடையில் குளக்கரை ஒன்றின் அருகிருந்த முள்ளிலவச் சோலையில் வாசவதத்தை யையும் காஞ்சனமாலையையும் இருக்கச் செய்து, உதயண னும் வயந்தகனும் புறத்தே நின்று காவல் செய்தனர்.

வயந்தகன் பிரிதல்

பகல் மறைந்து இரவு வந்தது. வயந்தகன் உதயண னிடம், "அரசே! உருமண்ணுவா வாழும் சயந்தி நகரத்துக்கு நாம் இந்த இரவிலே நடப்பது நல்லதல்ல. நம் தோழன் இடவகன் இருக்கும் புட்பக நகரம் சென்று அவனுடைய படைகளோடு நான் வருவேன். அதுவரை நீங்கள் இவ்விடத்தி லேயே இருங்கள்" என்று சொல்லிப் பிரிந்தான்.

வேடர் வருதல்

மறுநாள் பொழுது புலர்ந்தது. வேடர்கள் யானையின் கால் சுவடுகளைக் கண்டனர். சுவட்டினைப் பின்பற்றிச் சென்று பத்திராபதி இறந்து கிடந்ததைக் கண்டனர். மேலும் தேடுகையில் கையில் வில்லொடு நின்ற உதயணனைக் கண்டு அவனைச் சூழ்ந்து அம்பு தொடுத்தனர்.

விற்போர் புரிதல்

உதயணன் தனியொருவனாக அவர்கள்மேல் அம்புகளை மழையாகப் பொழிந்து பலரைக் கொன்றான். அச்சமுற்ற வேடர்கள் உதயணனை அழிக்கச் சோலையைச் சுற்றிலும் தீ வைத்தனர். வாசவதத்தையும் காஞ்சனமாலையும் அஞ்சி நடுங்கி வெளிவந்தனர். அவர்களை அழைத்துக் கொண்டு உதயணன் சோலையிலிருந்து புறப்பட்டபோது மீண்டும் வேடர்கள் அவனைச் சூழ்ந்து, பொருது, அவனுடைய வில் லின் நாணை அறுத்தனர். நாணற்ற வில்லினால் வேடர்களின்

அம்புகளைத் தடுத்து நின்ற உதயணனிடம் வாசவதத்தை, "அவர்கட்கு வேண்டியது பொருள்தானே! இதோ இதைக் கொடுங்கள்" என்று தன் அணிகலன்களைக் கழற்றித் தந்தாள்.

வேடரை ஏமாற்றுதல்

அதைக் கண்ட வேடர்கள், "நீங்கள் யார்?" என உதயணனைக் கேட்டனர். உதயணன், "நாங்கள் உதயண மன்னன் வணிகர்கள். பிரச்சோதனனுடைய நாட்டில் வணிகம் செய்து பொருளீட்டி வரும் வழியில் இங்கே யானை இறந்து விட்டது. அப் பொருளை ஓரிடத்தில் புதைத்து வைத்துள்ளோம்" என்றனன். பொருளுக்கு ஆசைப்பட்ட வேடர்கள் புதைத்த இடத்தைக் காட்டுமாறு கேட்டனர். உதயணனும் இடத்தைத் தேடுவதுபோல் அங்குமிங்கும் தேடினன். நெருப்பும் புகையும் சூழ்ந்திருந்ததால் அவை தணிந்தவுடன் காட்டுவதாகக் கூறினன்.

வயந்தகன் வருகை

இதற்கிடையில் புட்பக நகரம் சென்ற வயந்தகன், இடவகனிடம் விவரம் கூறியதும், அவன் படையோடு புறப் பட்டான். வாசவதத்தை தங்கியிருந்த இடம் தீப்பற்றி எரிந்து கிடந்ததைக் கண்டு துணுக்குற்றனர். சுற்றுமுற்றும் தேடியதில் உதயணன் வேடர்களால் வளைப்புண்டிருப்பதை யறிந்து அவர்களை அடித்து விரட்டினர்.

சயந்தி நகர் அடைதல்

தக்க வேளையில் உதவிய இடவகனை உதயணன் உளமாரப் போற்றினன். மலைச்சாரலில் பாடி வீடு அமைக்கப் பட்டது. அதில் தங்கி அயர்வு நீங்கிய பின்னர் உதயணன் வாசவதத்தையோடு சயந்தி நகரடைந்தான்.

வாசவதத்தை திருமணம்

சயந்தி நகரில் உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மணச் செய்தி முரச றைந்து நகரெங்கும் அறிவிக்கப்பட்டது. நல்ல நாளில்,

மங்கல நீராடி, இன்னிசை முழங்க, சான்றோர் வாழ்த்த உதயணன் வாசவதத்தையை உவப்போடு மணந்தான். உலகையே மறந்தவனாய் அவளை நீங்காது இன்புற்று வாழ்ந்தான்.

யூகியின் வருகை

உதயணனை அனுப்பியதும், யூகி உச்சயினியில் இருந்த தன் வீரர்களையெல்லாம் திரட்டித் தம் நாட்டிற்குத் திரும்ப அனுப்பினான். யவனப்பாடித் தலைவன் கொடுத்த எந்திர வண்டியில் சாங்கியத்தாயையும் ஏற்றிக் கொண்டு புட்பக நகரடைந்து அதன் புறத்தே தங்கினான். ஒருவருமறியாமல் இடவகனைக் கண்டு உதயணனின் நலங் கேட்டறிந்தான். உதயணன் உச்சயினியிலிருந்து புறப்பட்டது முதல் அதுவரை நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் விளக்கிய இடவகன், "உதயணன் வாசவதத்தையின் இன்பம் ஒன்றையே நாடி நிற்கிறான். இழந்த நாட்டைப் பெறவேண்டுமென்ற எண்ணமுமில்லை. இன்பம் ஒன்றையே எண்ணி ஏனையவற்றை மறந்து வாழ்கிறான்" என்றான்.

யூகியின் திட்டம்

இன்பத்தில் திளைத்திருக்கும் உதயணனைக் கடமையின் பாற் திருப்ப யூகி திட்டமிட்டான். சாங்கியத்தாயிடம், "தாயே! உதயணனைத் திருத்த நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். அவனை இலாவண நகர்ப்புறத்தேயுள்ள ஒரு மலைச்சாரலுக்கு அழைத்துச் சென்று உண்டாடும்படிச் செய்யுங்கள். ஒருநாள் வாசவதத்தையை அவனிடமிருந்து பிரித்துச் சுருங்கை வழியாக என்னிடம் அனுப்பிவிட்டு அவள் இறந்துவிட்டதாக உதயணன் நம்புமாறு செய்யுங்கள். மேலும் அவலையுண்டு நான் விக்கி இறந்ததாகவும் உதயணனிடம் கூறி அவனை அரசாட்சிக்குத் திருப்புங்கள்" என்று கூறி, மீண்டும் தன்னைச் சந்திக்க வேண்டிய இடத்தையும் உரைத்தான். பின், அவலை உண்டு இறந்தவன்போலப் புலப்படுத்தினான். உடனிருந்தோரெல்லாம் அழுது புலம்புவதுபோலக்

காட்டி, 'அறிவுடைய இவனைச் சுடுவது முறையன்று. கங்கையில் இடவேண்டும்' என்று கூறி யாரும் அறியாது அவனை மறைத்து வைத்தனர். சாங்கியத்தாய் யூகி உரைத்தவாறு செய்து முடிக்கச் சயந்தி நகரடைந்தாள்.

தாயும் சேயும

சயந்தி நகரடைந்த சாங்கியத்தாய் உதயணனைக் கண்டாள். அவளை ஆவலோடு வரவேற்ற உதயணன், 'யூகி வரவில்லையா?' என்று கேட்டான். யூகி இறந்தான் என்ற செய்தியை உடனே கூருமல், "அவன் தான் செய்ய வேண்டிய சில வேலைகளை முடித்துக்கொண்டு உம்மை வந்து காண்பதாகக் கூறினன்" என்ருள். பிறகு சாங்கியத்தாய் வாசவதத்தையைக் கண்டாள். தாயும் சேயும் ஒருவரையொருவர் தழுவி மகிழ்ந்து இன்பக் கண்ணீர் பெருக்கினர். சின்னாள் கழித்து உதயணன் அரசாட்சியில் கவலையின்றி இருப்பதைச் சுட்டிக் காட்டி, அவனை நெறிப்படுத்த வாசவதத்தை சிறிது காலம் அவனைப் பிரிந்திருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்தினள். வாசவதத்தை மயங்கினளாயினும் விளைவை எண்ணி ஒத்துக் கொண்டாள்.

ஓவியத்தில் குறிப்பு

சாங்கியத்தாய் வாசவதத்தையின் ஒப்புதலை யூகியிடம் தெரிவித்தாள். யூகி உதயணனுடைய உருவம் ஒன்றெழுதி, அவ் வுருவத்தில் நான்கு கண்களை அமைத்து, அவற்றின் மேலேயிருந்த கண்ணை மங்கியிருக்கும்படித் தீட்டி அதனை உதயணனிடம் காட்டுமாறு சாங்கியத்தாயிடம் கொடுத்தான். படத்தைக் கண்ணுற்ற உதயணன், "மனிதனுக்குக் கண் போன்றவர் நண்பர்கள்.மேலான கண் மங்கியிருப்பதைப் பார்த்தால் யூகிக்கு ஏதோ நேர்ந்திருக்க வேண்டும்" என்று கலங்கினன். அப்போது சாங்கியத்தாய் யூகி உச்சயினியிலிருந்து திரும்புகையில் அவற் பொறியை உண்டு விக்கி இறந்ததாக அறிவித்தாள். உதயணன் இடியேறுண்ட நாகம்போல் துயருற்று மூர்ச்சித்தான். மூர்ச்சை தெளிந்து

னும் அங்கிருந்தோர் அவனைத் தேற்றினர். ஆயினும் யூகியின் நினைவால் அரச காரியங்கள் எதையும் கவனிக்காதவனாய் இருந்தான்.

உண்டாட்டயர்தல்

உதயணனின் துயரைப் போக்குவதற்கான வழிகளைத் தோழர்கள் சிந்தித்தனர். மலைச்சாரல் சோலையொன்றுக்கு அழைத்துச் சென்று உண்டாட்டயர்ந்து அவன் துயர்போக்க எண்ணினர். உதயணனிடம் அச் சாரலில் முக்காலமும் உணர்ந்து உரைக்கும் முனிவர் இருப்பதால் அவரிடம் எதிர் காலத்தைக் கேட்டு ஆறுதல் பெறலாம் என்று கூறி அவனைப் புறப்படச் செய்தனர்.

அரசன் உண்டாட்டயர மலைச்சாரலுக்குச் செல்ல இருக்கும் செய்தி முரசறைந்து அறிவிக்கப்பட்டது. நகரமே மலைக்குத் திரண்டு சென்றது; பாடி வீடமைத்து அனைவரும் தங்கினர். உதயணன் வாசவதத்தையோடு தனக்கென அமைக்கப்பட்ட இடத்தில் தங்கினான். ஒருநாள் தவப் பள்ளியிலிருந்த ஒரு முனிவரைக் கண்டான். அவர், "நின் நண்பன் உயிரோடிருக்கிறான். உன்னை வந்து சேர்வான். நீ அனுபவித்து வரும் இன்பத்திற்கு இடையில் இடையூறு நேரும். மீட்டும் நீ அவ் வின்பத்தை அடைவதோடு இழந்த அரசாட்சியையும் பெறுவாய்" என்றார். உதயணன் ஒரு வாறு கவலை தீர்ந்து வாசவதத்தையோடு இன்புற்றிருந்தான்.

விரிசிகை

ஒருநாள் உதயணன், முனிவர் ஒருவர் தவம் செய்யும் தவப்பள்ளியை அடைந்து அங்கிருந்த அசோக மர நிழலில் அமர்ந்திருந்தான். வாசவதத்தை காஞ்சனமாலையோடு மலை வளம் காணச் சென்றிருந்தாள். அத் தவப்பள்ளியில் அரசைத் துறந்து மனைவியுடன் தவம் செய்துவந்த அரச முனிவர் ஒருவர் இருந்தார். அவருடைய மகள் விரிசிகை என்பாள் முனிவர்களையன்றி வேறு ஆண்களை அறியாதவள். உதயணனைப் பார்த்த அவள், அவனைக் காமன் என்றெண்ணி

ளுள். பல்வேறு பூக்களைப் பறித்து வந்து கண்ணியாகத் தொடுத்துத் தருமாறு அவனை வேண்டினாள். உதயணன் அழகுறத் தொடுத்துத் தந்தான். தலைமீது சரிவர அணியத் தெரியாது வருந்திய அவளைத் தன் மடிமீதிருத்திக் கண்ணியை அழகுறப் புனைந்து செல்ல விடுத்தான். அப்போதுதான் திரும்பிய வாசவதத்தை அதனைக் கண்டு ஊடல் கொண்டு இனைந்தாள். அந் நிலையில் பலா மரத்திலிருந்த ஓர் ஆண் குரங்கு குதிக்க, அதைக் கண்டு பயந்த வாசவதத்தை உதயணனைத் தழுவிக் கொண்டாள்; ஊடல் நீங்கியது.

சுருங்கை வழி அமைத்தல்

யூகி தான் இருந்த இடத்திற்கும் அரண்மனைக்கும் சுருங்கை வழி ஒன்றை இயற்றுவித்து நண்பர்களிடம் அறிவித்தான். அவர்கள் சாங்கியத்தாயிடம் கூறினர். அவள் உதயணனை அடைந்து மலைச்சாரலில் நீண்ட நாட்கள் இருப்பது நல்லதல்ல என்று கூறினாள். உதயணனும் அரண்மனைக்குத் திரும்பினான்.

அரண்மனையில் நெருப்பு

இவ்வாறிருக்கையில் ஒருநாள் வாசவதத்தை உதயணனிடம், "அரசே! தாங்கள் வேட்டம் சென்று அரும்பு, மலர் முதலியன கொண்டுவந்து மாலை கட்டி எனக்குத் தந்தருள்க" என்று வேண்டினாள். அவள் வேண்டுகோளை நிறைவேற்ற உதயணன் மறுநாள் காலையில் குதிரையேறிக் காட்டிற்குச் சென்றான். அவ் வேளையைப் பயன்படுத்தி உருமண்ணுவாவும் அமைச்சர்களும் அரண்மனைக்குத் தீயிட்டனர். அரசன் ஆட்சியில் ஊக்கமில்லாததால் வேடர்கள் ஊரைச் சூழ்ந்ததாகப் பொய்ச் செய்தியைப் பரப்பினர். வாசவதத்தையையும் சாங்கியத்தாயையும் சுருங்கை வழியே யூகியிடம் அனுப்பி வைத்தனர். வாசவதத்தையை வரவேற்ற யூகி, சிறிது காலம் அவள் உதயணனைப் பிரிந்திருக்க வேண்டிய இன்றியமையாமையை விளக்கினான். தலைவன் நலம் கருதி வாசவதத்தையும் இணங்கினாள்.

உதயணன் புலம்பல்

வாசவதத்தை விரும்பிய மலர்களையும் தளிர்களையும் பறித்து வந்த உதயணன் அரண்மனையில் தீ பரவி இருக்கக் கண்டு விரைந்தோடினான். காஞ்சனமாலை வாசவதத்தையை இழந்து புலம்பிக் கொண்டிருந்தாள். வாசவதத்தை தீவாய்ப் பட்டதை அறிந்த அவன் மூர்ச்சித்தான். மூர்ச்சை தெளிந்த உதயணன் தன் காதலி மாண்ட தீயில் தானும் வீழ்ந்து மாள்வதாக ஓடினான். உடனிருந்தோர் அரச கடமையை அவனுக்கு அறிவுறுத்தி ஆறுதல் கூறினர். நெருப்பை அணைத்துத் தன் துணைவியின் உடம்பைக் காட்டுமாறு கதறினான். அரசன் கரிப் பிணங்களைக் காணக் கூடாதென்று தடுத்துப் பார்த்தனர். கேளாமையால் அங்கே கிடந்த வேறு இரண்டு கரிந்த உடலங்களைக் காட்டினர். முன்னேற்பாடாக அங்கு வாசவதத்தையின் அணிகலன்களைச் சிதறச் செய்திருந்தனர். உதயணன் ஒவ்வோரணிகலனுக எடுத்துப் பார்த்து அழுது புலம்பினான்.

யூகி வேற்றிடம் சேர்தல்

அரசனுக்குத் தீங்கு இல்லை என்பது தெரிந்ததும் யூகி வேற்றிடம் செல்லத் தீர்மானித்தான். மருந்தொன்றால் சாங்கியத்தாய், வாசவதத்தை, யூகி ஆகிய மூவரும் வேறு நிறம் பெற்று ஒரு மலைச்சாரலை அடைந்தனர். அங்கே உருமண்ணுவாவின் தந்தை தவம் செய்த இடத்தில், தாங்கள் யாரென்பதை அறிவிக்காமல் தங்கினர். காஞ்சனமாலைக்கு உருமண்ணுவா நடந்தவற்றை மந்தணமாக உரைத்து அவளை அழைத்துச் சென்று வாசவதத்தையிடம் சேர்த்தான். சிலகாலம் அங்கிருந்து, யூகியும் மற்றவரும் சண்பை நகரம் சென்று, அங்கு மித்திரகாமன் என்ற பெருஞ் செல்வன் வீட்டில் தங்கியிருந்தனர்.

இராசகிரியத்திற்குப் புறப்படல்

உருமண்ணுவா முதலியோர் உதயணன் மகத மன்னனிடம் நட்புக்கொண்டு, ஆருணி அரசனை வென்று ஆட்சி

யைக் கைப்பற்ற வேண்டுமென்றனர். "வாசவதத்தை யையும் யூகியையும் இழந்தபிறகு எனக்கு நாடு என்ன வேண்டிக் கிடக்கிறது?" என்று வாளா இருந்தான். இசைச்சன் என்னும் அந்தண நண்பன் மகத நாட்டின் தலைநகர் இராசகிரியத்தில் அருளாளர் ஒருவர் இருப்ப தாகவும், அவர் மந்திர சக்தியால் வாசவதத்தை மறுபிறப்பு எடுத்திருந்தாலும் பழைய வடிவோடு பெற்றுத் தரவல்லவர் என்றும் கூறினன். அதுகேட்ட உதயணன் இராசகிரியம் செல்ல உடன்பட்டான். நூறு வீரர்களுடன் அனைவரும் அந்தணர் வடிவு பூண்டவராய் இராசகிரியம் அடைந்தனர். புறநகரில் காமன் கோயிற் பொய்கைக் கரையிலிருந்த சோலையில் தங்கினர்.

காதுகண்ட முனிவர்

உருமண்ணுவா முதலியோர் அங்கு வாழ்ந்த காது கண்டர் என்ற முனிவரைக் கண்டு உதயணன் நிலையைக் கூறி அவனிடம் வாசவதத்தையை மீட்டுத் தருவதாகக் கூறும்படி வேண்டினர். முனிவர் இசையவே, தாங்கள் சொன்ன பெரியவரைக் காணப்போவதாகக் கூறி, உதயணனைக் காது கண்டரிடம் அழைத்துச் சென்றனர். முனிவரும் உதயண னிடம் இரண்டு திங்கள் நோன்பு மேற்கொண்டிருந்தால் இழந்த வாசவதத்தையைப் பெறலாம் என்றார்; மேற் கொள்ள வேண்டிய நோன்பு முறைகளையும் விவரித்தார். உதயணன் நம்பிக்கையோடு சோலையில் தங்கினன். அவனை மகத மன்னனுக்கு எவ்வாறேனும் நண்பனாக்கிவிட வேண்டு மென நண்பர்கள் சிந்தனை செய்தனர்.

தருசகன்

தருசகன் மகத நாட்டு மன்னன். அவன் பட்டத்தரசியின் தங்கை மகள் பதுமாவதி. அவள் இராசகிரியத்தில் தருசக மன்னன் அரண்மனையிலேயே வளர்ந்து வந்தாள். மகத நாட்டின் தலைநகராகிய இராசகிரியத்தின் புறநகர்ப் பகுதி யிற்றான் காமன் கோயில் குளத்தருகே உதயணன் தோழர் களுடன் வாழ்ந்து வந்தான்.

பதுமாவதி உதயணன் சந்திப்பு

இராசகிரியத்தில் காமன் விழா நடைபெற்றது. பதுமாவதி தன் தோழி யாப்பியாயினியுடன் காமனை வழிபட வண்டியேறிப் புறநகர்ப் பகுதியில் சோலையினிடையே இருந்த காமன் கோயிலுக்குச் சென்றாள். வண்டி காமன் கோயில் வாயிலில் நின்றது. காற்றால் அதனை மூடியிருந்த திரை அகன்றது. உள்ளிருந்த பதுமாவதியை எதிரில் ஒரு புன்னை மரத்தடியில் நின்ற உதயணன் கண்டான். அவளும் அவனைப் பார்த்தாள். வாசவதத்தையே உருப்பெற்று வந்ததாக அவனும், தான் வணங்க வந்த காமனே தன் முன்னர்த் தோன்றியதாக அவளும் நினைத்தனர். பதுமாவதி நோன்பு தொடங்கி வழிபாடியற்றி மாலையில் அரண்மனை திரும்பினள். விழா முடிவில் பதுமாவதி செய்ய இருக்கும் தானத்தைப் பெற வருபவர்களை யாரும் தடுக்கக் கூடா தெனச் சிலதியர் சொல்லிச் சென்றனர். ஆதலின் பதுமாவதியை மீண்டும் காண முடியுமென உதயணன் ஆறுதல் கொண்டனன். அவ்வமயம் அங்கு வந்த பதுமாவதியின் தோழி ஐராவதியிடம் பதுமாவதியைப் பற்றி உதயணன் கேட்டான். "இவள் இந் நகர அரசன் தருசகனின் தேவி சிவமதியின் தங்கையும் காசிராசன் மனைவியுமான உதையை யோடை என்பவளின் மகள். மணமாகாதவள். இப்போது நடைபெறும் காமன் விழாவின் முடிவில் வேதியர்களுக்குத் தானம் வழங்குவாள். பொருள் பெற விருப்பமிருப்பின் நீர் இங்கே இரும்" என்றாள். ஐராவதி அவன் யாரெனக் கேட்ட போது, "நான் காந்தார நாட்டில் இரத்தினபுரம் என்னும் ஊரைச் சார்ந்தவன்; என் தந்தை சாண்டியன் என்னும் அந்தணன். என் பெயர் மாணகன்" என்றான். பதுமாவதியும் தோழியரும் கன்னிமாடம் சேர்ந்தனர். உதயணன் தோழர் களை அடைந்தான்.

காதல் முதிர்ச்சி

மறுநாளும் புன்னை மரத்தின்கீழ் உதயணன் அவள் நினைவாக நின்றான். பதுமாவதியும் அவனை நினைந்து வண்டி

யில் வந்தாள். முன் நாள் போலவே ஒருவரை ஒருவர் நோக்கித் தம் விழைவைப் புலப்படுத்திக் கொண்டனர்.

ஒருநாள் பதுமாவதி தன் காதலை வெளிப்படுத்தக் காமன் கோயில் மண்டபத்தில் இராவதியின் கழுத்தில் தன் கையைச் சேர்த்துத் தழுவி நின்றாள்; உதயணனும் வயந்தகன் தோளை ஒரு கையால் பற்றி மற்றொரு கையில் பூப்பந்தொன்றை உருட்டி நின்றான். பதுமாவதி இராவதியை, "அந்த அந்தணன் யார்?" என்று கேட்க, அவளும் முன்பு தான் அறிந்த விவரங்களை அவளிடம் கூறினாள். பதுமாவதியும் உதயணனும் கண்ணாலும் கைகளாலும் தங்கள் காதற் குறிப்புகளை வெளிப்படுத்திக் கொண்டனர். உதயணன் தன் எண்ணத்தை நண்பர்களிடம் புலப்படுத்தினான். நண்பர்கள் அது முறையன்று என்றனர். உதயணனோ அவளின்றி உயிர்வாழேன் என்றும், அவளுக்கும் தன் மேல் முழு அன்பு இருப்பதாகவும் கூறினான். அவன் கூற்றை மெய்ப்பிப்பது போலப் பதுமாவதி அவனிடத்தில் கொண்டிருந்த அன்பைச் சில நேர்வுகளால் அறிந்தனர்.

கந்தருவ மணம்

பதுமாவதிபால் எல்லையற்ற காதலை வளர்த்துக்கொண்ட உதயணன் ஒருநாள் காமன் கோயில் மாடத்தில் நுழைந்திருந்து அவளைக் காண வேண்டுமென்றான். தோழர்கள் தடுத்தும் கேளாமல் முதுமை வேடத்தில் தானம் வாங்குபவன்போல் சென்று கோட்டத்தின் உள்ளே இருந்த கருவறையில் ஒருவரும் அறியாது ஒளிந்திருந்தான். அங்கு வந்த பதுமாவதி அவனைக் கண்டாள். இருவரும் தத்தம் விருப்பத்தைத் தெரிவித்துக் கந்தருவ மணம் செய்து கொண்டனர்.

அரண்மனை அடைதல்

ஒருநாள் உதயணன் வேற்றுருவங் கொண்டு மகத மன்னன் அரண்மனையை அடைந்தான். மகத மன்னன் தருசகனின் தந்தை, பூமிக்கடியில் பெரும் பொருளைப் புதைத்து வைத்து மறைந்தான். அஃது இருந்த இடம் தெரியாமல் அவன்

வருந்தினான். அதைக் காட்டுவோர்க்கு உயிரையும் அளிப்பான் என்ற விவரத்தைக் காவலர்கள் மூலம் அறிந்த உதயணன் தனக்குப் புதையலெடுக்கவும், பூமிக்கடியில் இருக்கும் நீர்நிலைகளை அறிந்து சொல்லவும் தெரியும் என்றான். காவலர்கள் மன்னனுக்குக் கூற, மன்னன் அவனை அழைத்துவரச் செய்தான். உதயணன் தருசகனின் தந்தை பொருளை மறைத்து வைத்திருந்த இடத்தைக் காட்டினான். மேலும் அரண்மனையில் நல்ல நீர் இருந்த இடத்தையும் தெரிந்து கூறினான். மகிழ்ந்த அரசன், அவனை அரண்மனையிலேயே தங்குமாறு கூறினான். உதயணனின் தோழர்களும் வேறுவேறு வடிவங் கொண்டு அரண்மனையில் வேலை பெற்று உள்ளே தங்கினர்.

கன்னிமாடம் சேர்தல்

உதயணன் அரண்மனையில் இருப்பதுபோலவே காட்டிக் கொண்டு காமன் கோயில் சென்று பதுமாவதியைச் சந்தித்து வந்தான். காமன் விழா இறுதி நாளில் பதுமை ஒருவருமறியாமல் உதயணனைத் தன் தோழி யாப்பியாயினியின் உதவியோடு சிவிகையில் தன்னுடன் கன்னிமாடத்திற்கு அழைத்து வந்தாள். அங்கு இருவரும் பாடியும் ஆடியும் பலவாறு இன்புற்றிருந்தனர்.

பதுமாவதியை மணம்பேச வருதல்

இந் நிலையில் கேகய நாட்டரசன் அச்சுவப் பெருமகன் என்பான் பெரும் பொருளைப் பரிசமாகத் தந்து பதுமாவதியை மணம் பேச வந்தான். தருசகனும் பரிசினை ஏற்று அவனை வரவேற்று அரண்மனையில் இருக்கச் செய்தான்.

பகைவர் படையெடுப்பு

தருசகனின் மேம்பாடு கண்டு பொறுத விரிசிகன், அரிமான், எலிச் செவி, அடவி, அயோத்தியரசன், மிலேச்சன், சங்கரன், மல்லன், வேசாலி என்னும் அரசர்கள் ஒன்றுகூடி

இராசகிரியத்தைச் சூழ்ந்து போர் முழக்கம் செய்தனர். தருசகன் செய்வதறியாது திகைத்தான். பகைவர் சூழ்ந்த செய்தியைப் பதுமாவதி, தோழி ஐராவதி மூலம் தன் காதலன் மாணகனுக்குச் சொல்லியனுப்பித் துணைபுரிய வேண்டினள். காமன் கோட்டத்திலிருந்த உதயணனிடம் ஐராவதி கூறியதும், "அஞ்சற்க! நான் சென்று பகைவர்களை வெற்றி கொள்வேன்; இன்னும் இரண்டு திங்களில் பதுமாவதியைக் காண்பதாகச் சொல்!" என்று கூறி ஐராவதியை அனுப்பினன். தோழர்களோடு கூடிப் பகைவரை முறியடிக்க வழிவகைகளைக் கருதினன்.

வேற்றுருவங்கொண்டு வெற்றி காணல்

உதயணன் நண்பர்களை ஒன்று திரட்டினன். வணிகராக அனைவரும் வேடம் பூண்டு தருசகனின் எதிரிகளிடம் சென்றனர். தாங்கள் மகத மன்னனோடு மனம் வேறுபட்டிருப்பதாகக் கூறி அவர்களை நம்பச் செய்து அவர்களுடன் தங்கினர். ஒருநாள் இரவில் அங்கிருந்த அரசர்களின் வீரர்கள் ஒருவர்க்கொருவர் எதிர்த்துப் போர் செய்யும் தந்திரத்தைக் கையாண்டு, இறுதியில் பகைவர்களை வெளியேறி ஓடச் செய்து வெற்றி கண்டனர். உருமண்ணுவா தருசகனுக்குச் செய்தி அனுப்பினன். வாசவதத்தையை இழந்த வருத்தத்தைப் போக்கிக் கொள்ள உதயணன் அந் நாட்டிற்கு வந்ததாகவும், வரும் வழியில் பகைவர் சூழ்ந்திருந்ததை அறிந்து அவர்களோடு போரிட்டு வெற்றி கண்டதாகவும் அவ் வெற்றியைக் காணிக்கையாகத் தருசகனைக் காண வருவதாகவும் அச் செய்தியில் குறித்திருந்தான். வெற்றிச் செய்தி கேட்ட மன்னன் விரைந்தோடி வந்து உதயணனை வரவேற்று அரண்மனையிலிருத்தி வேண்டுவன செய்தான். வேற்று வடிவத்தில் தன்னோடிருந்தவனே உதயணன் என்பதை மன்னன் அறிந்தானில்லை.

மீண்டும் போர்

தோற்றோடிய பகையரசர்கள் தம்முள் கூடி ஆராய்ந்து தம்மில் யாரிடமும் பிழை இல்லை என்பதையும், வணிகர்

ளாக வந்தோரிடம் ஏமாந்ததையும் அறிந்து மீண்டும் உறுதியோடு போரிட வந்தனர். தருசகன் போருக்குப் புறப்பட நிச்சயித்தான். உதயணன் தானே போர்முகம் செல்வதாகக் கூறிப் படையை நடத்திச் சென்றான். பதுமாவதியை மணக்க வந்த கேகய அரசன் தானும் படை நடத்திச் செல்வதாகக் கூறினான். தருசகன் அவனை உதயணனுக்குத் துணையாக அனுப்பினான். போர் உக்கிர மாக நடந்தது. கேகய அரசன் பகைவர்களால் கொல்லப் பட்டான். உருமண்ணுவாவைப் பகைவர்கள் சிறைப் பிடித்தனர். ஆயினும் உதயணனே வெற்றி பெற்றான்.

மணம் பேசுதல்

கேகய அரசன் இறப்புக்குத் தருசகன் வருந்தினனு யினும் வெற்றியைத் தேடித் தந்த உதயணனை வாயாரப் புகழ்ந்தான். கைம்மாறாகப் பதுமாவதியை அவனுக்கு மணம் முடித்துத்தர விரும்பினான். அமைச்சன் இச் செய்தி யைப் பதுமாவதிக்கு உரைக்க, மாணகனையன்றித் தான் வேறு யாரையும் மணக்கப் போவதில்லை என்று மனத்துட் கொண்டாள். உதயணனிடம் கூறியபோது உள்ளத்தே உவத்தானுயினும், வாசவதத்தையும் யூகியும் இறந்த பிறகு எனக்கு எதுவும் வேண்டுவதில்லை என்று மறுத்தான். அமைச்சன் வற்புறுத்தவே இறுதியில் இசைவதாக அறிவித் தான்.

இசைச்சன் மணம்

உதயணன், கன்னிமாடத்திலிருந்த பதுமாவதிக்கு மாணகனே உதயணன் என்பதைத் தெரிவிக்க வழி யாது எனச் சிந்தித்திருந்தான். வயந்தகன் மூலம் தன் அந்தணத் தோழன் இசைச்சனுக்கு மணம் நடந்த பின்னரே தன் மணம் நடைபெற வேண்டுமெனத் தருசனுக்குச் சொல்லியனுப் பினான். தருசகன் பதுமாவதியின் தோழி யாப்பியாயினி என்ற அந்தணியை இசைச்சனுக்கு மணம் செய்வித்தான். மணவேளையில் உதயணன், மாணகனே உதயணன் என்பதை

யாப்பியாயினி அறியச் செய்தான். அவள் அச் செய்தியைப் பதுமாவதியிடம் கூறிடத் துடித்தாள்.

பதுமாவதி திருமணம்

மண நிகழ்வுகள் முடிந்து பதுமாவதியிடம் சென்ற யாப்பியாயினி மாணகனே உதயணன் என்பதை அறிவித்தாள். உதயணன் எழுதித் தந்த அவன் படம் ஒன்றையும் அவளிடம் காட்டினாள். அப் படம் மாணகன்போலத் தோற்றினாலும் அவன்தான் என உறுதியாவதன் முன் அதனைத் தொடவும் மறுத்தாள். உதயணன் பதுமாவதியை நம்பச்செய்ய, அவன் கன்னிமாடத்திலிருந்தபோது ஒருநாள் இரவில் நடந்த ஒரு நிகழ்ச்சியை யாப்பியாயினியிடம் கூறியிருந்தான். அதைக் கேட்டதும் மாணகனே உதயணன் என்பது உறுதியானதால் பதுமாவதி அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை! திருமணத்திற்கு இசைந்தாள். பதுமாவதி உதயணன் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

கௌசாம்பியைக் கைப்பற்றல்

வலிய வந்து உதவி, நண்பனாக மாறி, உறவினனாகவும் ஆகிவிட்ட உதயணனுக்கு அவன் நாட்டை மீட்டுத்தரத் தருசகன் முடிவு செய்தான். தன் அமைச்சர்களுள் சிறந்த வருடகாரன், தாரகாரி, தருமதத்தன், சத்தியகாயன் முதலியோரையும் பெரும் படையையும் ஆருணி அரசனை வெற்றி கொள்ள உதயணனுடன் அனுப்பினான். படை கௌசாம்பி நோக்கிப் புறப்பட்டது. இடைவழியில், அதுவரை மறைந்து வாழ்ந்த, பிங்கல கடகரும் உதயணனுடன் வந்து சேர்ந்தனர். கௌசாம்பியில் பெரும் போர் நடந்தது. ஆருணியரசன் பாஞ்சாலராயனை உதயணன் வெட்டி வீழ்த்தித் தன் அரசுரிமையைப் பெற்றான்.

ஆட்சிச் சிறப்பு

உதயணன் பட்டமெய்திப் பதுமாவதியுடன் மகிழ்ந்திருந்தான். ஆருணி அரசன் செய்த கொடுமைகளை அகற்றி நாட்டில் நல்லாட்சி நிலவச் செய்தான். அழிந்த இடங்

களைப் புதுப்பித்தான். பசியும் பிணியும் பகையும் நீக்கி வசியும் வளனும் சுரக்க ஆட்சி நடத்தினன்.

நினைவுச் சின்னம நிறுவுதல்

உச்சயினியைத் தான் கடப்பதற்குத் துணையாயிருந்து, இடைவழியில் மாண்ட பத்திராபதிக்குத் தக்க நினைவுச் சின்னங்களை அமைத்தான். அது வீழ்ந்து இறந்த இடத்தில் ஒரு மாடமும் அதன் உருவமும் அமைத்து வழிபாடுகள் நடந்துவர ஏற்பாடு செய்தான். அதன் எலும்பு, தோல் முதலியவைகளைக் கொண்டுவரச் செய்து, நகரத்தில் ஓரிடத்தில் வைத்து, அங்கே பத்திராபதியின் பெயரால் ஒரு வாயில் அமைத்து, அதன் உருவச் சிலையையும் நிறுவினன். அவ்விடத்தே அடிசிற்சாலை, தண்ணீர்ப் பந்தல் முதலியன நடந்துவர அறக் கட்டளைகளை நிறுவினன்.

கோடபதியைப் பெறுதல்

ஒருநாள் பதுமாவதியுடன் உதயணன் மேல் மாடத்தில் மகிழ்ந்திருந்தபோது இனிய யாழொலி அவன் காதில் விழுந்தது. அது கோடபதியின் இசையைப் போலிருந்ததால் அதனை இசைப்பவனை உடனே அழைத்துவரச் செய்தான். அவனுக்கு அந்த யாழ் எவ்வாறு கிடைத்தது என்று கேட்டபொழுது அவன், "என் பெயர் அருஞ்சுகன். நான் உஞ்சை நகரிலுள்ள அந்தணப் பிரம்மசாரி. கௌசாம்பியிலுள்ள உறவினர்களைக் காண வந்தேன். வழியில் நருமதையை அடுத்திருந்த காட்டில் இந்த யாழ் கிடந்தது" என்றான். அது கோடபதியே என்பதையறிந்த உதயணன் அதைப் பெற்றுக் கொண்டு அவனுக்குப் பெரும் பொருள் கொடுத்தான். யாழைக் கண்டதும் வாசவதத்தையின் நினைவு அவனை முற்றிலுமாக ஆட்கொண்டது.

உருமண்ணுவா விடுதலை

இங்ஙனம் இருக்கையில் இராசகிரியத்தில் தருசகன் தான் வென்ற சங்க மன்னருடைய உரிமைப் பொருள்களை

அவரிடம் அனுப்பி, அவர்கள் சிறைப்பிடித்திருந்த உருமண்ணுவாவையும் பிறரையும் விடுவித்தனுப்புமாறு கேட்டான். அவர்களும் உருமண்ணுவாவைச் சிறையினின்றும் நீக்கி அவன்பால் அனுப்பினர்.

வாசவதத்தை கௌசாம்பி வருதல்

அதுகாலை, யூகியிடமிருந்து உருமண்ணுவாவிற்கு ஓர் ஓலை வந்தது. தாம் எண்ணியது நிறைவேறிவிட்டதால் வாசவதத்தையை இனி உதயணனிடம் சேர்பிக்க வேண்டும் என அதில் கண்டிருந்தது. உருமண்ணுவா, ஓலை கொண்டு வந்தவனுடன் புறப்பட்டு, யூகியும் வாசவதத்தையும் இருந்த இடம் அடைந்தான். அவர்கள் அனைவரும் கௌசாம்பியைச் சார்ந்து அதன் புறத்தேயிருந்த மதுகாம்பீரம் என்னும் வனத்திலிருந்த விருந்தினர் மாளிகையில் தங்கினர். உருமண்ணுவா யூகியையும் வாசவதத்தையையும் அங்கேயே இருக்கச் செய்து தான் மட்டும் உதயணனைக் காணச் சென்றான்.

வாயரற்றலும் வாசவதத்தையே

வாசவதத்தை நினைவினால் ஏங்கியிருந்த உதயணனிடம் உருமண்ணுவாவின் வரவைக் கூறினர். விரைந்து சென்று வரவேற்றான். நண்பர்களிருவரும் ஒருவர்க்கொருவர் அது வரை நிகழ்ந்தவற்றை அறிவித்திருந்தனர். அருகிருந்த வயந்தகன் முன்பு இராசகிரியத்தில் கண்ட முனிவர் அங்கு வந்துள்ளார் என்றும், அவர் வாசவதத்தையை மீட்டுத் தருவதாகக் கூறியுள்ளாரென்றும், அதனால் உதயணன் சின்னாட்கள் பதுமாவதியைப் பிரிந்து தனியே உறங்க வேண்டும் என்றும் கூறினான். உதயணனும் பதுமாவதியை வேறு அறைக்கு அனுப்பிவிட்டுத் தான்மட்டும் தனியே வீணையைக் கையால் அணைத்த வண்ணம் தூங்கினான்.

அங்ஙனம் துயில்கையில் வாசவதத்தையை நினைத்து அரற்றினான். அவ்வேளை அமைச்சர்கள் வாசவதத்தையை அங்கே அழைத்து வந்து, அதைக் காட்டி, உதயணனுக்கு

வேறு மகளிரிடத்து விருப்பமில்லையென்றும், பகைவனை வெல்லத் தருசகனுடைய நட்பைப் பெறுவதற்காகவே பதுமாவதியை மணந்தனன் என்றும் எடுத்தோதினர். தலைவன் நிலைகண்ட வாசவதத்தை இரங்கிப் பதுமாவதியை மணந்ததைத் தவறாகக் கொள்ளவில்லை. மறுநாள் அவன் உதயணனைக் காணலாம் என்று அழைத்துச் சென்றனர்.

பிரிந்தவர் கூடினர்

மறுநாள் முனிவரைக் காண உதயணன் சென்றான். அங்கே யூகி முனிவர் வடிவில் அமர்ந்திருந்தான். அடுத்த அறையில் சாங்கியத்தாயுடன் வாசவதத்தை இருந்தாள். அங்கு வீற்றிருந்தவர் தான் முன்பு கண்ட முனிவர் அல்லர் என்று உதயணன் ஆராய்கையில் முனிவரின் மார்பில் யானைக் கொம்பால் உண்டான தழும்பைக் கண்டான். உடனே அவன் யூகி என்பதை அறிந்து தழுவிக் கொண்டான். பின்னர் வாசவதத்தையைக் கண்டு இன்பக் கண்ணீரால் நீராட்டினான். அனைவரும் அரண்மனை அடைந்தனர். உதயணன் பதுமாவதியை அழைத்து வரச் செய்தான். அவளும் வாசவதத்தையைக் கண்டு வணங்கி நின்றாள். இருவருடனும் உதயணன் மகிழ்ந்து ஆட்சியைக் கவனித்து வந்தான்.

தனக்குத் துணை நின்ற அனைவர்க்கும் உதயணன் பொன்னும் பொருளும் நிலமும் தந்து பெருமைப்படுத்தினான்; சாங்கியத்தாயை வணங்கி, 'நீ விரும்பிய அறங்களைச் செய்வாயாக' என்று பெரு வருவாயுடைய ஒரு நாட்டைத் தந்தான்; வாசவதத்தைக்கும் பதுமாவதிக்கும் பட்டத்தரசியர்க்குரிய சிறப்புகளைச் செய்தான்.

பிரச்சோதனன் ஓலை

உதயணன் நாட்டை மீட்டுச் சிறப்புடன் ஆண்டு வந்ததறிந்த பிரச்சோதனன் மகிழ்ந்தான். உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் பெரும் பொருள்களை அனுப்பி வைத்தான். பிரச்சோதனனின் தூதுவ மகளாய் வந்த பதுமை, உதயணனிடம் பிரச்சோதனன் கொடுத்த ஓலையைத் தந்தாள். அதில் அவன் தன்னுடைய முந்தைய செயல்களுக்கு வருத்தம் தெரி

வித்து உதயணனையும் வாசவதத்தையையும் ஒருமுறை தன் நாடு வந்து மீளுமாறு எழுதியிருந்தான். யூகியைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பமிருப்பதால் அவனை அனுப்புமாறும் கேட்டிருந்தான். பிரச்சோதனனுக்கும் அவன் மக்களுக்கும் பல உயர்ந்த பொருள்களை உதயணன் பரிசாக அனுப்பி னான். வையாக்கிரம் என்னும் தேரில் யூகியையும் உச்சயினிக்குச் செல்லுமாறு கூறினான்.

பந்து விளையாட்டு

தேவியர் இருவரும் அரசன் புறத்தே உலாவிவரும் வேளையில் ஒருநாள் முற்ற வெளியில் பந்தாடுதற்கு நிச்சயித்திருந்தனர். அதையறிந்த உதயணன் வெளிச் செல்வது போல் போக்குக் காட்டி மறைந்திருந்து பந்தாட்டத்தைக் கண்டனன். அரசியரின் தோழியர் போட்டியிட்டுப் பந்தடித்தனர். பதுமாவதியின் தோழி இராசனை ஏழு பந்தெடுத்து ஆயிரங்கை அடித்தாள். வாசவதத்தையின் தோழி காஞ்சனமாலை ஆயிரத்தைந்நூறு கை அடித்தாள். அடுத்துப் பதுமாவதியின் மற்றொரு தோழி ஐராவதி ஈராயிரம் கை அடித்தாள். வாசவதத்தையின் தோழி விச்சவலேகை ஈராயிரத்து ஐந்நூறு கை அடித்தாள். பதுமாவதியின் உயிர்த்தோழி ஆரியை மூவாயிரம் கை அடித்தாள். அவளை விஞ்சுவதற்குத் தன்னிடம் வேறு எவருமில்லையோ என வாசவதத்தை வருந்திய வேளையில் அவளுடைய தோழி மானனீகை என்பாள் இருபத்தொரு பந்துகளை அடித்துச் சுழன்று சுழன்று ஆடினாள். கண்டோர் வியக்க எண்ணாயிரங் கை அடித்தாள். மானனீகையைக் கண்ட மன்னன் மயங்கினான். அவளைக் காணும் வேட்கையை அடக்க முடியாதவனாய் அங்கே தோன்றினான்.

மானனீகை

அரசனைக் கண்ட தேவியர் தம்மிடஞ் சென்றனர். அரசன் காம மிகுதியால் பள்ளியம்பலம் அடைந்து அரசியரை அங்கு வருமாறு சொல்லி விடுத்தனன். ஐயுற்ற அரசியர் மானனீகையை மட்டும் ஓரிடத்தில் மறைத்துவிட்டு மற்ற தோழியருடன் சென்று கண்டனர். உதயணன்

வாசவதத்தையிடம், 'உன் தோழியருள் ஒருத்தியைக் காணவில்லையே' என்றான். வாசவதத்தை வெகுண்டாள். உதயணன், "அவள் பாஞ்சாலராசனிடத்தில் பணிபுரிந்தவள் என்று அமைச்சர்கள் கூறினர். அவளிடம் வினவி அரசியற் செய்திகளை அறிந்து கொள்ளும் பொருட்டு அழைத்தேனேயன்றி வேறில்லை" என்றான். மானனீகையை வாசவதத்தை வருவித்தாள்.

உதயணன் பாஞ்சாலராசன் பற்றி அவளிடம் வினவினான். அவளோ, 'அரசே! நான் கோசல தேச அரச தேவியின் சேடியாயிருந்தேன். பாஞ்சாலராசன் படையெடுத்தபோது பிறரோடு என்னையும் பற்றிச் சென்று தன் தேவிக்கு வண்ண மகளாக்கினன். இது தவிர வேறொன்றுமறியேன்' எனச் சொல்லி அழுது நின்றாள். உதயணன் அவளை, 'நீ இன்று முதல் வாசவதத்தைக்கு வண்ண மகளாயிரு' என்று கட்டளையிட்டுச் சென்றான். மானனீகையும் வாசவதத்தையைக் கண்டோர் வியக்கும் வண்ணம் அடி முதல் முடியளவாகப் புனைந்தனள்.

நுதல் விடு தூது

வாசவதத்தை உதயணனிடம் வந்து புனைவைக் காட்டினாள். அவன் அந்தப் புனைவு சரியில்லை என்று சொல்லி, தான் திருத்தம் செய்வதாக வாசவதத்தையின் நெற்றியில் மானனீகைக்குத் தெரிந்த யவன எழுத்துகளில் தான் அவளைக் காதலிப்பதாக வண்ணக் குழம்பில் எழுதி அனுப்பினான். மறுநாள் மானனீகை, "அரசன் அடித்திமாட்டுக் காதல் கொள்வது முறையல்ல" என்பதைக் கோலமாக நெற்றியில் எழுதி அனுப்பினாள். அவளை அடையாவிடில் தன் உயிர் நில்லாது என்று அரசன் குறிப்பிட, மானனீகை வேறு வழியின்றி, 'இன்றிரவு கூத்தப் பள்ளியினிடத்தே வந்தருள்க' என்று குறியிடத்தைப் புலப்படுத்தி வாசவதத்தையின் நெற்றியிலேயே எழுதி அனுப்பினாள். அரசன் மகிழ்ந்தான்.

திருட்டு வெளிப்படுதல்

அரசனது செயல்களால் ஐயுற்ற வாசவதத்தை அவள் பின்னே காஞ்சனமாலையை அனுப்பினாள். உதயணன் மானனீகையைச் சந்தித்ததையும் அன்பின் அடையாளமாக அவள் கையில் மோதிரம் அணிவித்து நாள்தோறும் அங்குச் சந்திக்கும்படிச் சொன்னதையும் அவள் அறிந்து வந்து கூறினாள். மறுநாள் மானனீகையைக் காவலில் வைத்து விட்டு வாசவதத்தை தான் போய் அவளிடத்தில் நின்றாள். அன்போடு வந்து கையைப் பற்றிய உதயணன் அவள் வாசவதத்தையாக இருக்கக் கண்டு அரண்டு ஓடினான்.

மானனீகை திருமணம்

மறுநாள் வாசவதத்தை மானனீகையை வெகுண்டு ஒரு தூணில் கட்டினாள். செய்த குற்றத்திற்கு அவள் கூந்தலைக் கொய்யக் கத்தரிகை கொண்டுவரச் சொன்னாள். அஃதறிந்த உதயணன் அவள் கூந்தலைக் கத்தரிகை தீண்டுமாயின் தன் உயிர் நீங்கும் என்றான். வயந்தகன் அரசியிடம் சென்று பலவாறு எடுத்துரைத்து அவள் வெகுளியை மாற்ற முயன்றான். யார் கூறியும் கேளாது தன் எண்ணத்தை நிறைவேற்ற வாசவதத்தை முற்படுகையில் கோசல மன்னன் அவளுக்கு எழுதிய ஓலை ஒன்றைத் தூதுவர் கொண்டு வந்து தந்தனர். அந்த ஓலையால், மானனீகை கோசல மன்னன் மகள் என்பதையும், பாஞ்சால அரசன் படையெடுப்பின் போது அவள் கைக்கொள்ளப்பட்டுச் சென்றாள் என்பதையும், பாஞ்சால அரசனை உதயணன் வென்றதால் தன்னிடம் வந்து சேர்ந்தாள் என்பதையும் வாசவதத்தை அறிந்தாள். உண்மையறியாது அவளைக் கொடுமைப் படுத்தியதற்கு வருந்தினாள். தானே முன்னின்று அவளை உதயணனுக்கு மணம் முடித்தாள்.

விரிசிகை திருமணம்

உதயணன் முன்பு சயந்தி மலைச்சாரலில் ஒருநாள் முனிவர் மகள் விரிசிகை என்பாளைத் தன் மடியிலிருத்தி மலர் சூட்டினனல்லவா? அதுமுதல் அவள் அவனையே விரும்பிக்

காலம் கழித்து வந்தான். அவனுடைய தந்தை கௌசாம்பியை அடைந்து இதனைச் சொல்லி அவனை ஏற்கு மாறு உதயணனை வேண்டினன். முன்னரே அறிந்தவனாத லின் வாசவதத்தையும் இசைவு தந்தாள். விரிசிகையையும் உதயணன் மணந்தான்; தேவியர் நால்வரும் வழிபட நல்லாட்சி செய்து வந்தான்.

வாசவதத்தை கருவுறுதல்

அரசவையில் மகப்பேறு பற்றிய ஒரு வழக்கு நடந்தது. தனக்கும் குழந்தை இல்லையே என்ற ஏக்கம் உதயணனைப் பற்றியது. ஒருநாள் உதயணன் தான் வாசவதத்தையுடன் குபேரனை அடைந்ததாகவும் அவன் மணிமுடி ஒன்று தந்த தாயும் கனவு கண்டான். அதன் பலனை அறிய ஒரு முனிவரை அடைந்து தான் கண்ட கனவைக் கூறினன். அவர், "வெள்ளி மலையை ஆளும் பேரரசனாகிய புதல்வன் உனக்குத் தோன்று வான்" என்றார். காலப்போக்கில் வாசவதத்தை கருவுற்றாள். அதே வேளை யூகி முதலிய அமைச்சர் நால்வருடைய மனைவி யரும் கருவுற்றனர்.

வயா விருப்பம்

வாசவதத்தையின் உடல் மெலிவுற்றது. கருவுற்றிருக் கும் மனைவியை மகிழ்ச்சியாய்க் காக்க வேண்டுமென்பதால் அவள் விருப்பம் எதுவாயினும் கூறவேண்டுமென்றும் அதை நிறைவேற்றித் தருவதாகவும் உதயணன் கூறினன். அவள் விண்ணில் பறந்து சென்று பல இடங்களையும் காண மனம் விரும்புவதாகச் சொன்னாள். பறக்க வழி தெரியாது அரச னும் அமைச்சரும் மயங்கினர். முன்னொரு காலத்தில் காட்டில் நீர் வேட்கையைப் போக்கிய இயக்கனை நினைத்தனர். அவன் அங்குத் தோன்றி, குபேரனின் உரிமை மகள் பத்திராபதி ஒரு சாபத்தால் யானைப் பிறப்படைந்ததையும், அந்தப் பத்திரா பதியே உதயணன் ஊர்ந்த யானை என்பதையும், உதயணனால் மீண்டும் நற்கதி அடைந்ததால் அவனுக்கு எவ்வகையிலே னும் உதவ வேண்டுமெனப் பத்திராபதி நினைந்திருப்பதாயும். அறிவித்து அவளை நினைந்தால் அவள் உதவுவாள் என்று கூறிச் சென்றான்.

விண்ணூர்தல்

அரசன் நாட்டிலுள்ள தச்சர்களையெல்லாம் அழைத்து, 'விண்ணில் பறந்து செல்ல எந்திரம் செய்திடுக' என்றபோது அவர்கள், 'அஃது எம்மால் செய்தற்கரியது' என்றனர். அவ்வேளை அழகிய தச்சன் ஒருவன் உதயணன் முன் தோன்றி, விண்ணில் பறக்கும் எந்திரம் செய்வதாகக் கூறி, செய்தும் தந்தான். உதயணன், வாசவதத்தை, உதயணன் அமைச்சர் நால்வர், அவர் மனைவியர் யாவரும் அதிலேற, பொன்மலை முதல் பொதிய மலை வரை விண்ணில் பறந்து, காண வேண்டிய இடங்களைக் கண்டு, விமானம் மீண்டும் கௌசாம்பியை அடைந்தது. விமானம் செய்த தச்சுவினை இளைஞனை அழைத்து அவன் வேண்டுவது எதுவாயினும் தருவதாக உதயணன் கூறினன். இளைஞனே தானே பத்திராபதி என்னும், அவனுக்கு உதவவே அவ் வடிவில் வந்ததாகவும் கூறி, அவனை வாழ்த்தி, தன் தெய்வ உருவம் கொண்டாள். விண் வழியே செல்வதற்குரிய ஒரு மந்திரத்தை உதயணனுக்கருளி அவள் தன்னிடம் சென்றாள்.

நரவாணதத்தன் பிறப்பு

வாசவதத்தை ஓர் அழகிய ஆண்மகவை ஈன்றெடுத்தாள். நாடு விழாக் கோலம் பூண்டது. பன்னிரண்டாம் நாள் குழந்தைக்கு நரவாணதத்தன் என்று பெயர் சூட்டப்பட்டது. பிரச்சோதனனுக்கு உதயணன் அனுப்பிய தூதர் செய்தியை அறிவித்தனர். அவன் பெயரன் பிறந்த மகிழ்ச்சியைப் பெரு விழாவாகக் கொண்டாடினன். அதே சமயம் யூகி முதலிய நால்வரின் மனைவியரும் ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். யூகியின் மகனுக்கு மருபூதி என்றும், உருமண்ணுவாவின் மகனுக்கு அரிசிகன் என்றும், வயந்தகன் மகனுக்குத் தவந்தகன் என்றும், இடவகன் புதல்வனுக்குக் கோமுகன் என்றும் பெயரிட்டனர். குழந்தைகள் வண்ண மதியின் வளர்கலையொப்ப நாளும் நாளும் ஒளிபெற்று வளர்ந்தனர்.

மதனமஞ்சிகை

நரவாணன் மருபூதி முதலிய தோழர்களுடன் கலைகள் பலவும் கற்றுக் காளைபருவம் எய்தினன். அந் நகரில் கணிகை

யருள் சிறந்தவள் கலிங்கசேனை என்பவள். அவள் மகள் மதனமஞ்சிகை ஒருநாள் நிலா முற்றத்தில் தோழியருடன் பந்தாடினாள். பந்துகளில் ஒன்று சாளரத்தின் வழியே வெளியேறி, வீதியில் தோழர்கள் சூழ யானைமேல் சென்று கொண்டிருந்த நரவாணதத்தன் மீது விழுந்தது. யானையின் மீதிருந்தவாறே பந்தெறிந்தவளைப் பார்த்தான். அவளுடைய அழகிய வடிவம் அவனைக் கவர்ந்தது. அவள் யார் என அறிய விரும்பித் தோழன் கோமுகனைக் கேட்டான். அவன் பந்திலிருந்த விரல் அடையாளத்தைக் கொண்டு தான் கற்ற கலையினால் பந்தெறிந்தவளின் முழு வடிவத்தையும் வரைந்து அவள் மதனமஞ்சிகையே என்றான். நரவாணன் அவளையே மணக்க உறுதி பூண்டான். செய்தியறிந்த உதயணன் வாசவதத்தையுடன் சென்று பெண் கேட்டு அவளையே உதயணனுக்கு மணம் முடித்தான். மதனமஞ்சிகையும் நரவாணதத்தனும் இன்பமாய்ப் பொழுது போக்கினர்.

மதனமஞ்சிகை பிரிவு

கௌசாம்பியில் சிறப்பான விழா ஒன்று நடந்தது. விழாக் காண வந்த மானசவேகன் என்னும் வித்தியாதர அரசன் மலர் வனத்தில் மதனமஞ்சிகையைக் கண்டு மையல் கொண்டான். கணவனுடன் அவள் துயிலும் வேளையில் தன் மந்திர வலிமையால் அவளை மயக்கி, விண்வழியே தன் நகருக்கு எடுத்தேகினான்.*

வேகவதிகை

வித்தியாரர் உலகில் கண் விழித்த மதனமஞ்சிகை நடந்ததறியாது மயங்கினாள். மானசவேகன் அவளிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். அவள் உடன்படவில்லை.

அவளை உடன்படுத்த மானசவேகன் தன் தங்கை வேகவதியை அனுப்பினான். வேகவதி மதனமஞ்சிகையிடம் உரையாடுகையில் நரவாணதத்தன் அழகைக் கேள்வியுற்று அவனை அடைய வேண்டுமென முடிவெடுத்தாள். மதனமஞ்சிகை

---

*இதன் பின்னர் உள்ள கதைப்பகுதிக்கான கொங்குவேள் பாடல் கிடைக்கவில்லை.

போல் வடிவெடுத்துக் கௌசாம்பியை அடைந்தான். மறைந்த மனைவியைத் தேடியலைந்த நரவாணன் அவளைக் கண்டு மகிழ்வுடன் நெருங்கினன். பேசினல் ஐயுற்று, அவளை யார் எனக் கேட்க, அவள் உண்மையைக் கூறித் தன் உருவத்தைக் காட்டினாள். அவளுடைய எழிலுருவைக் கண்ட நரவாணன் மதனமஞ்சிகையை மறந்து வேகவதியுடன் வாழ்வானாயினன்.

பாட்டனும் பெயரனும்

தங்கையைப் பல இடங்களிலும் தேடியலைந்த மானசவேகன் அவள் நரவாணனுடன் இருப்பதறிந்து இருவரையும் பற்றிக் கொண்டு விண் வழியே சென்றான். இடை வழியில் நரவாணனைக் கீழே தள்ளினான். வேகவதி தன் விச்சை வலியால் அவன் ஊறின்றிக் கீழே விழச் செய்தாள். அவன் சதானிக முனிவர் தவப்பள்ளியில் விழுந்தான். முனிவர் ஞான உணர்வால் நடந்ததையறிந்து, "உதயணனுடைய புதல்வனே! வாழ்க!" என வாழ்த்தினர். தந்தையின் பெயரைக் கேட்ட நரவாணன் முனிவரை வணங்கி, அவர் தன் பாட்டன் என்பதை அறிந்தான்.

நரவாணன் விஞ்சையருலக மன்னனாதல்

பாட்டன் சொற்படி, நரவாணன் தன் தந்தையை அடைந்து, விண்ணில் செல்லும் விச்சையைக் கற்று விஞ்சையருலகு சென்றான். கந்தர்வபுர அரசன் தன் மகள் அநங்கவிலாசனியை அவனுக்கு மணம் செய்து தந்தான். நரவாணன் தன் வலிமையால் விஞ்சையர் உலகு தன்னை வணங்குமாறு செய்தான். அதனைக் கேள்வியுற்றுப் பயந்த மானசவேகன் மதனமஞ்சிகையை அவனிடம் சேர்ப்பித்ததோடு தன் தங்கை வேகவதியையும் அவனுக்கு மணம் செய்வித்தான். இங்ஙனம் நரவாணதத்தன் விஞ்சையர் உலகின் பெரு மன்னன் ஆனான்.

நரவாணனுக்குத் தன் தாய் தந்தையரைக் காண வேண்டுமென்ற ஆவல் எழவே, மனைவியரோடு மண்ணுலகடைந்து தாய் தந்தையரை வணங்கினான். அவன் பெருமை கேட்டு அவர்கள் மகிழ்ந்தார்கள். பதுமாவதியின் புதல்

வனுக்கு இளவரசப் பட்டம் சூட்டி, மீண்டும் நரவாணதத்தன் விஞ்சையருலுகடைந்தான்.

உதயணன் துறவு

உதயணன் ஆட்சியைத் துறந்து தவநெறி நிற்க விரும்பினான். துணைவியர் அவன் துறவு உள்ளத்தை மாற்றினர். ஆயினும் ஒருநாள் பாகர்க்கு அடங்காது மதங் கொண்டு திரிந்த அவன் பட்டத்து யானை, சாரணர் தலைவர் தரும வீரரின் அறிவுரை கேட்டு அடங்கி நின்றதை அறிந்தான். புலன் வழியே மதர்த்து ஒழுகும் மனித வாழ்க்கையாகிய யானையைக் கட்டுப்படுத்தத் தவநெறியாகிய அங்குசம் இன்றியமையாதது என்றுணர்ந்தான். நரவாணனை அழைத்து ஆட்சிப் பொறுப்பேற்கக் கூறினான். அவனும் துறவை நாட இருப்பதாகக் கூறவே பதுமாவதியின் மகனுக்கு முடி சூட்டினான். தேவியரும் துறவு நெறி நிற்க விரும்பவே அவர்களோடு தவவனம் சென்றான். அங்குத் தருமச்சுருதி என்ற முனிவரைச் சரண் அடைந்தான். அவர் கூறிய வழியில் தவநெறி நின்று உதயணனும் தேவியரும் ஓங்கு புகழ் பெற்றனர்.

2. நூலும் நூலாசிரியரும்

கொங்குவேளிர்

பெருங்கதை அல்லது உதயணன் கதை கொங்கு நாட்டில் தோன்றிய ஓர் ஒப்பற்ற இலக்கியம். இதன் ஆசிரியர் கொங்குவேளிர். கொங்கு நாட்டில் வாழ்ந்த வேளாளர் கொங்கு வேளாளர் எனப்பட்டனர். அக் குலத் தலைவர்கள் சிற்றரசர்களாயும் விளங்கினர். அவர்கள் வேளிர் என்று அழைக்கப்பட்டனர். கொங்குவேளிர் ஒரு சிற்றரசர். கொங்கு மண்டலத்தை ஆண்ட வேளிர் என்பதால் கொங்கு வேளிர் என்பது காரணப் பெயராக இருக்கலாம். அவருடைய இயற் பெயர் யாதெனத் தெரியவில்லை.

பிறப்பிடம்

கொங்குவேளிர் பிறந்த ஊர் விசயமங்கலம். இஃது ஈரோடு கோவைப் பெருவழியில் ஈரோட்டிலிருந்து மேற்கே 32 கி. மீ. தொலைவில் உள்ளது. கொங்கு நாட்டில் சமணம் தழைத்திருந்த காலத்தில் விசயமங்கலம் ஒரு முக்கிய நகராய்த் திகழ்ந்தது. அந் நாளில் அது விசயமங்கை என வழங்கி வந்தது. இன்றும் சமணக் கோயில் ஒன்று இங்கு இருக்கக் காண்கிறோம். இதுவே கொங்கு நாட்டில் உள்ள சமணக் கோயில்களில் பெரியது.

சமயம்

கொங்குவேள் (கொங்குவேளிர்) சமணர். கதையில் அருகன் கோயில் அமைப்பை விரிவாகக் கூறியுள்ளார், மதம் கொண்ட யானை, சாரணர் தலைவரின் அறிவுரை கேட்டு

அடங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கதைப் போக்கில் சில இடங்களில் தம் சமயப் பற்றை வெளிப்படுத்தியுள்ளார் என்பது தவிர, சமணக் கருத்துகளை வலியுறுத்தியுள்ளார் என்று சொல்வதற்கில்லை.

புலமை நலம்

கொங்குவேள் புலமை மிக்கவர். அவர் பெருங்கதையை இயற்றி அரங்கேற்றிய பொழுது, அங்கிருந்த சங்கத்தார் கேட்ட கேள்விகட்குத் தன்னிடமிருந்த அடிமைப் பெண்ணைக் கொண்டு விடை பகரச் செய்தார் என்று கொங்கு மண்டல சதகப் பாடல் குறிப்பிடுகிறது.

நீதப் புகழுக யேந்திரன் காதை நிகழ்த்துதற்கு
கோதற்ற மங்கையில் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
மேதக்க சொற்சங்கத் தார்வெக வேகொங்குவேள் அடிமை
மாதைக்கொண் டுத்தரஞ் சொன்னது வுங்கொங்கு மண்டலமே[1]

என்பது அப்பாடல். கம்பனின் கல்விப் புலமையைக் குறிக்கக் 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பர். அதுபோலக் கொங்குவேளின் புலமை நலத்தை வெளிப்படுத்த இக் கதை தோன்றியதெனக் கருதலாம்.

பெருங்கதையின் நூல் நயம், உயர்ந்த நடை, கவிதையழகு இவற்றை நோக்குங்கால் ஆசிரியரின் கல்வித் திறன் நன்கு புலப்படும். அவர் தமிழ் மொழி மட்டுமின்றி வடமொழியையும் கற்றிருந்தார். நாடு நகரங்களின் அமைப்புகளையும் அவற்றின் சிறப்புகளையும் தெளிவாக எடுத்துரைப்பதிலிருந்து அவர் நிலநூல் அறிவு நிரம்பப் பெற்றவர் என்பது தெரிகிறது.

வழிநூல்

பெருங்கதையைக் குணாட்டியர் என்பவர் முதன்முதலில் 'பிருகத்கதா' என்ற தலைப்பில் பைசாச மொழியில் இயற்றினார். இம் மொழி பிராகிருதத்தின் ஒரு சிதைந்த வகை என்றும், அது விந்தியப் பகுதியில் பேசப்பட்டு வந்ததென்றும் அறிஞர் கூறுவர். அந் நூல் இப்போது கிடைக்க-

1. கொங்கு மண்டல சதகம்: 44

வில்லை. அதனைக் கங்க மன்னன் துர்விநீதன் வடமொழியில் ஒரு காவியமாக இயற்றினன். அவன் கொங்கு நாட்டை ஆண்டவன். அவனுடைய ஆட்சிப் பகுதியிலிருந்த கொங்கு வேளிர் அக் கதையைத் தமிழில் ஆக்கினர் என்பது செவி வழிச் செய்தி.

முப்பெரு மூலங்கள்

"வடமொழிக் காவியங்களுக்கு இராமாயணம், மகா பாரதம், பெருங்கதை என்ற முப்பெரும் இலங்கியங்களே மூலமாகும். கோவர்த்தனர் தனது சப்தசதியில் இராமா யணம், மகாபாரதம், பிருகத் கதை ஆகிய மூன்றையும் கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய நதிகளுடன் ஒப்பிட்டுள்ள திலிருந்து இதை அறியலாம். இன்று சரசுவதி நதியும் மறைந்துவிட்டது. பிருகத்கதையும் மறைந்துவிட்டது. ஆனால் நாம் சரசுவதி நதியை மறக்கவில்லை; குணாட்டியரின் பிருகத் கதையையும் மறக்கவில்லை."[2] முன்னவை இரண்டும் இதிகாசங்கள்; சமய நூல்களாக எழுதப்பட்டவை. மூன்றாவதான பிருகத் கதையோ கதை இன்பத்திற்காகவே, இலக்கியச் சுவைக்காகவே எழுதப்பட்டது.

பெயர்க் காரணம்

வாழ்க்கைக்குத் தேவையான பல உண்மைகளும் அறிவுரைகளும் நிறைந்த பல்வேறு கிளைக் கதைகளைக் கொண்ட நீண்ட கதைத் தொகுதி என்பதால் இது பெருங்கதை எனப் பெயர் பெற்றது. தமிழ்ப் பெருங் கதையில் உதயணனுடைய கதை பெரும்பகுதியும், அவன் மகன் நரவாணதத்தன் கதை சிறுபான்மையும் இடம் பெற்றுள்ளன.

கதை வழக்காறு

உதயணன் கதை பன்னெடுங்காலமாகவே மக்களிடையே வழக்கில் இருந்து வந்திருக்கிறது.

---

2. வடமொழி இலக்கியச் சோலை-பொ. திருஞானசம்பந்தம்: பக். 26.

மேக சந்தேசம் (முகில் விடு தூது) காளிதாசர் இயற்றிய ஒரு காவியம். குபேரனுடைய ஆணையால் நாடு கடத்தப் பட்ட யட்சன் ஒருவன் தன் மனைவியைப் பிரிந்து விந்திய மலையில் வாழ்ந்து வந்தான். அவன் தன் மனைவிக்கு மேகத்தைத் தூதாக அனுப்புவதைக் கூறுவதே மேகசந் தேசம். யட்சன், மேகம் செல்ல வேண்டிய வழியில் உள்ள ஊர்கள், இயற்கைக் காட்சிகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் செல்கையில், "மேகமே! நீ அவந்தி நாட்டை அடைவாய்! அங்கு உச்சயினியின்மேல் தவழ்ந்து செல்லும்போது அந் நகர் தேவர் உலகத்தின் ஒரு பகுதி எனத் தோன்றும்படி அழகும் செல்வமும் வாய்ந்திருக்கக் காண்பாய். அங்குள்ள மக்கள் உதயணன் சரிதையைச் சுவையுடன் கூறி மகிழ் வதையும் கேட்பாய்."[3] மேலும், அந் நகரத்திற்கு வந்துள்ள விருந்தினர்களுக்கு அங்குள்ளார், "இங்குத்தான் வாசவதத் தையை உதயணன் கைப்பற்றிக் கொண்டு சென்றான். இங்குத்தான் தறியை முறித்துக் கொண்டு நளகிரி என்ற மத யானை திரிந்து கொண்டிருந்தது" என்று எடுத்துக் கூறிக் கொண்டிருப்பதையும் காண்பாய் என்றான்.[4] உச்சயினி என்றதுமே புலவர்க்கு உதயணன் கதை நினைவுக்கு வந்து விடுகிறது!

மணிமேகலைக் காப்பியமும் உதயணன் கதையைக் குறிப் பிடுகிறது. மணிமேகலை அட்சய பாத்திரத்தோடு வீதியில் தோன்றினாள். அழகிய வடிவுடைய அவள் பிக்குணிக் கோலத்துடன் வீதியில் சென்றதைக் கண்டு பெருங்கூட்டம் சூழ்ந்தது. அதைக் கூறவந்த சீத்தலைச் சாத்தனார், கௌசாம்பி அரசன் உதயணனை உச்சயினி மன்னன் பிரச் சோதனன் வஞ்சித்துச் சிறைப்படுத்திய பொழுது அவனைச் சிறை மீட்டற்கு, அவன் அமைச்சனாகிய யூகி வேற்றுருவம் கொண்டு வீதியை அடைந்த காலத்தில் அவனைச் சூழ்ந்தது

3. மேக சந்தேசம் : சுலோ. 31
4. " " 34

போல மணிமேகலையையும் பெருங் கூட்டம் சூழ்ந்தது" என்று கூறி உதயணன் கதையைக் குறிப்பிடுவதைக் காணலாம்.[5]

திருமங்கை மன்னன் இயற்றியுள்ள இயற்பா சிறுமடலில், கண்ணனின் அழகில் ஈடுபட்ட நங்கை ஒருத்தி அவனை அடையத் துடிக்கிறாள். அருகிருந்த மங்கையர் ஆற்றியிருக்குமாறு கூறியபோது அவள், "கடல் போன்ற காமத்தை உடையவர்கள் அடங்கியிருக்க முடியுமோ? வாசவதத்தை என்று எல்லோராலும் புகழ்ந்து சொல்லப் படும் ஒருத்தி, தன் தோழிமார்களையெல்லாம் விட்டொழித்து வத்தவ அரசன் பின்னே சென்றாளே! அவளை இகழ்ந்தார் யாரேனும் உண்டா?"[6] என்று வாசவதத்தையின் காதலை எடுத்துரைக்கிறாள்.

உதயணன் கதை கொங்குவேளுக்கு முன்னும் பின்னும் நாட்டில் பெரு வழக்கிலிருந்து வந்தது என்பதை இவ் விலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம்.

முதல் மொழி பெயர்ப்பு நூல்

இவ்வாறு பெருமளவில் மக்களிடையே வழங்கி வந்த வடமொழிக் கதையைத் தழுவித் தமிழில் தோன்றிய முதல் நூல் பெருங்கதை. 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்பதை முதன் முதலாக நடைமுறைப் படுத்தியவர் கொங்குவேளே! வடமொழியிலிருந்து காப்பியங்களைத் தமிழில் பெயர்க்கும் மரபை முதலில் தோற்றுவித்தது பெருங்கதையே இராமாயணம், மகாபாரதம் முதலியன பின்னர்த் தோன்றி யவையே.

5. கொடிக்கோ சம்பிக் கோமக னாகிய
வடித்தேர்த் தானை வத்தவன் றன்னை
வஞ்சஞ் செய்துழி வான்றளை விடீஇய
உஞ்சையிற் றோன்றிய யூகி அந்தணன்
உருவுக் கொவ்வா உறுநோய் கண்டு
பரிவுறு மாக்களிற் .. .. மணி. 15: 61—66

6. வாரார் வனமுலை வாசவ தத்தையென்று
ஆரானும் சொல்லப் படுவாள் அவளுந்தன்
பேராய மெல்லாம் ஒழியப் பெருந்தெருவே
தாரார் தடந்தோள் தளைக்காலன் பின்போனாள்
ஊரா ரிகழ்ந்திடப் பட்டாளே?
—நாலாயிர திவ்விய. திருமங்கை மன்னன்; சிறிய திருமடல் : 66-68

நூற் பகுப்பு

பெருங்கதை உஞ்சைக் காண்டம், இலாவண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் என ஆறு காண்டங்கள் கொண்டது. முதல் ஐந்து காண்டங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. அவற்றுள்ளும் உஞ்சைக் காண்டத்தின் முற்பகுதியும் நரவாண காண்டத்தின் பிற்பகுதியும் கிடைக்கவில்லை.

உஞ்சைக் காண்டத்தில்	58	சிற்றுறுப்புகளும்
இலாவண காண்டத்தில்	20	,,
மகத காண்டத்தில்	27	,,
வத்தவ காண்டத்தில்	17	,,
நரவாண காண்டத்தில்	7	,,

உள்ளன. உஞ்சைக் காண்டத்தில் முதல் 31 சிற்றுறுப்பு களும் நரவாண காண்டத்தில் 7 சிற்றுறுப்புகளுக்கு மேல் உள்ள பகுதியும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு சிற்றுறுப்பை யும் ஒரு பாட்டு எனலாம்.

"பெருங் கதையின் சிற்றுறுப்புகள் காதை என்று வழங்கப்பட்டன வென்று தெரிகிறது; இது, 'முகவெழுத்துக் காதை', 'மணம்படு காதை' என இந்நூலிலுள்ள இரண்டு சிற்றுறுப்புகளின் பெயரினாலும்,[T] இலாவண காண்டம் முதலியவற்றின் இறுதியில், 'ஆகக் காண்டம் இத்தனைக்குக் கூடிய காதை இத்தனை'யெனக் காணப்படுவதனாலும்* துணியப்படும். சிலப்பதிகாரம், மணிமேகலை என்பவற்றி லுள்ள சிற்றுறுப்புகளைக் காதை என்று வழங்குதலும் இங்கே கருதத் தக்கது."[7]

---

7. பெருங்கதை : டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு: முகவுரை : பக். xxxi

T வத்தவ காண்டம் 13ஆம் சிற்றுறுப்பு முகவெழுத்துக் காதை என்றும், 14ஆம் சிற்றுறுப்பு மணம்படு காதை என்றும் உள்ளன.

* இலாவண காண்டத்தின் இறுதியில், "இலாவண காண்டம் முற்றுப் பெற்றது. ஆகக் காண்டம் இரண்டிற்குக் கூடிய காதை 78" என்றுள்ளது. மகத காண்ட முடிவில், "மூன்றாவது மகத காண்டம் முற்றுப் பெற்றது. ஆகக் காண்டம் மூன்றினுற் காதை 105" என்றும், நான்காவது காண்டத்தின் இறுதியில், "நான்காவது வத்தவ காண்டம் முற்றிற்று. ஆகக் காண்டம் நான்கிற்குக் கூடிய காதை 122" என்றும் உள்ளன. இதனால் பெருங்கதையின் சிற்றுறுப்புகள் காதை என்று வழங்கப்பட்டன என்பது தெரிகிறது.

நூலின் பெருமை

பேராசிரியர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், மயிலை நாதர், நேமிநாத உரையாசிரியர், யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர், வீரசோழிய உரையாசிரியர் தக்கயாகப் பரணி உரையாசிரியர், இலக்கண விளக்க உரையாசிரியர் முதலிய சிறந்த உரையாசிரியர்கள் இந் நூற் கருத்துகளை மேற்கோள்களாக எடுத்தாண்டிருப்பதிலிருந்து இதன் பெருமை புலனாகும்.

இந் நூலிலிருந்து அரசரின் செம்மாந்த வாழ்க்கை, அரண்பனை யமைப்பு, ஆட்சிச் சிறப்பு, அமைச்சர் பெருமை, ஒற்றர் திறமை, அரசரின் உரிமைச் சுற்றம், அரசப் பணியாளர்கள், படையமைப்பு, போர் முறைகள், பொதுமக்களின் இன்ப வாழ்க்கை, பல்வகைக் கலைகள், தொழில்கள், மகளிர் விளையாட்டுகள், ஊடற் சிறப்பு, காமத்தின் இயல்பு, ஒப்பனை அழகு, வேலைப்பாடு நிறைந்த ஊர்திகள், எழில்மிகு இருக்கைகள், நாடு நகர வளங்கள், கல்வி வகைகள், நட்புச் சிறப்பு, இல்வாழ்வின் இயல்பு, புதல்வர் கடமை, ஆசிரியர் மாணாக்கர் தொடர்பு, இயற்கை வருணனை, இசைக் கருவிகள், சமண சமயக் கருத்துகள், திருமணச் சடங்குகள், திருவிழாக்கள், பிறநாட்டுத் தொழிலாளர்கள், எந்திர வேலைபபாடுகள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றையும் இன்ன பிறவற்றையும் அறிய முடிகிறது.

காலம்

பொதுவாகப் பண்டைய ஆசிரியர், அவர் தம் இலக்கியங்கள் பற்றிக் கால வேறுபாடு கூறப்படுவதுபோலவே பெருங்கதைக் காலமும் முன்பின்னாகக் கூறப்படுகிறது.

"வச்சிர நந்தியால் ஐந்தாவது நூற்றாண்டில் நிலைநாட்டப்பட்ட தமிழ்ச் சங்கத்தினை மருவிய பெருங்காப்பியங்களுள் தலை சிறந்தது கொங்குவேள் மாக்கதையாகும்......சிலப்பதிகாரத்திற்குப் பிறகு எழுந்த பெருங்காப்பியம் இஃதென்று கொள்ள வேண்டும். கி. பி. 6வது நூற்றாண்டில் கங்க நாட்டை ஆண்ட துர்விநீதன் என்பவன் வடமொழியில்

மொழி பெயர்த்துச் செய்த நூலின் வழித்தாக இந் நூல் இயற்றப்பட்டதென்று கொள்ளின், ஆறுவது நூற்றாண்டின் இறுதியில் அல்லது ஏழாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் இந் நூல் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.''[8]

''இந் நூலின் காலம் ஏழாம் நூற்றாண்டென்பர்''[9]

''பைசாச மொழியில் குணாட்டியர் என்பார் செய்த பிருகத் கதையைக் கங்க அரசனான துர்விநீதன் வடமொழியில் மொழி பெயர்த்தியற்றினன் என்பர். துர்விநீதனது மொழி பெயர்ப்பே தமிழ்ப் பெருங்கதையின் மூலமென்று கருதப்படுகின்றது.

இவ் வரசனது ஆட்சியின் தொடக்கம் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியாகும். இவன் மொழி பெயர்த்தியற்றியது சுமார் கி. பி. 600 என்று கொள்ளலாம். இம் மொழி பெயர்ப்பு பிரசார மெய்திய பின்னரே தமிழ் மொழி பெயர்ப்பு இயற்றப்பட்டிருத்தல் கூடும். தமிழ்ப் பெருங் கதையில்,

'வல்லுந னல்லேன் நல்லோய் நானென'[10]

என்று வருகின்றது. இங்கே 'நான்' என்றது பிற்கால வழக்கு. இதுபோன்றே,

''இப்படி நிகழ்ந்த காலை'[11]

என்ற அடியில் 'இப்படி' என்றதும் பிற்கால வழக்கு.

.........இவற்றையெல்லாம் நோக்குமிடத்து சுமார் கி. பி. 750இல் பெருங்கதை தோன்றியிருக்கலாம் என்று கொள்ளலாம்.''[12]

---

8. இலக்கிய வரலாறு : கா. சுப்பிரமணிய பிள்ளை : பக். 271
9. தமிழ் இலக்கிய வரலாறு : டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் : பக். 124
10. பெருங். 3 : 14 : 251
11. பெருங். 3 : 27 : 116
12. காவிய காலம் : எஸ். வையாபுரிப் பிள்ளை: பக். 89—91

தமிழ் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சி அறிஞர் திரு. மு. அருணசலம், அடியார்க்கு நல்லார் பற்றிய தம் ஆராய்ச்சி நூலில், பெருங்கதையின் காலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டு என்று குறிப்பிட்டுள்ளார்.[13]

மேற்கூறியவை, பெருங்கதைக் காலம் 7 அல்லது 8ஆம் நூற்றுண்டு என்பதைப் புலப்படுத்துகின்றன. 6ஆம் நூற்றுண்டு என்று கூறும் கொள்கையும் உள்ளது. ''கொங்குவேளிர் உதயணன் கதையை நாட்டில் கர்ண பரம்பரையாக வழங்கி வந்ததைக் கோவைப் படுத்திப் பெருங்காப்பியமாக்கி இருக்கக்கூடும். உதயணன் கதை நடந்ததாகக் கூறப்படும் அஜாதசத்துரு காலத்திற்கும் (5 நூற். கி. மு.), தமிழில் எழுதப்பட்ட காலமாகிய மறுமலர்ச்சிக் காலத்திற்கும் 10 நூற்றுண்டுகளுக்கு மேலேயே இடைக்காலம் இருக்கலாம். அவைகளை எல்லாம் தாம் எடுத்துக் கொண்டு ஒரு சிறந்த காவியப் போக்காகக் கொங்கு வேளிர் தம் கல்வித் திறத்தால் நன்கு அமைத்திருப்பார் அல்லவா?''[14] என்பது திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்களுடைய வினு. இவ் வினுவிலேயே அவர் பெருங்கதையின் காலம் ஏறத்தாழ கி.பி. 6 ஆம் நூற்றுண்டு என்று கொள்கிருர் எனத் தெரிகிறது.

''கி. பி. நான்காம் நூற்றுண்டு தொடங்கி கி.பி. ஏழாம் நூற்றுண்டின் தொடக்கம் வரையில் தமிழ் நாட்டுக்கும் இயற்றமிழுக்கும் இருண்ட காலம் என்று கூறவேண்டும். தமிழரல்லாத களப்பிரர் என்ற இனத்தார் தமிழ் நாட்டைப் பிடித்து ஆட்சி செய்தமையின் தமிழ் மொழி போற்றுவாரற்றுக் கிடந்தது. எனவே, இக் கால எல்லையில் ஒரு

---

13. அடியார்க்கு நல்லார்: மு. அருணசலம்: பக். 52
14. கொங்குவேளிர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்: பக். 26

பெருநூல் (பெருங்கதை) தவிர வேறு ஒன்றும் தோன்ற வில்லை.''[15] என்பது திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர் களுடைய கூற்று. இதிலிருந்து அவர் பெருங்கதைக் காலத்தை ஆறும் நூற்றாண்டாகக் கொள்கிறார் என்பது தெரிகிறது.

''வடமொழியில் பிருகத் கதை கி. பி. 550—600இல் ஆண்ட கங்கன் துர்விநீதன் காலத்து இயன்றது. அந்தக் காலத்திலேயே தமிழ் வடிவமும் ஆகியிருக்கலாம் என்பர் அறிஞர். அகவலால் இயன்றிருத்தலால் இக் காலத்ததாக லாம். (6ஆம் நூற்றாண்டு)''[16].

சங்க காலத்திற்குப் பின்னர் கொங்கு நாட்டையாண்ட அரச பரம்பரை பற்றிக் 'கொங்கு தேச ராசாக்கள்' என்னும் நூல் குறிப்பிடுகிறது. இந் நூல் ரெட்டிகுல மன்னர் மரபிலிருந்து தொடங்குகிறது. அம் மரபினரை அடுத்துக் கங்கர்கள் ஆண்டனர். அப் பரம்பரையின் முதல் மன்னன் கொங்கணி வர்மன். அவன் பட்டம் பெற்ற ஆண்டு சகம் 101 (அதாவது கி. பி. 179). அம் மரபில் தோன்றிய எட்டாவது மன்னன் துர்விநீதன். அவனே பிருகத் கதையை வடமொழியில் இயற்றியவன். துர்விநீதனின் தந்தை கொங்கணி வர்மன் பட்டமேற்ற ஆண்டு, 'சகை 288. பிரபவ வருடம்' (கி. பி. 366)[17] என்று இந் நூல் குறிப்பிடுகின்றது. இதைக் கொண்டு கணக்கிட்டால் துர்விநீதன் 4ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 5ஆம் நூற்றாண்டினன் என்பதாகிறது. துர்விநீதன் எழுதிய நூலைக் கொங்குவேள் தழுவி எழுதினார் என்று கொண்டாலும் அவர் 6ஆம் நூற்றாண்டினர் என்று கொள்வதே பொருத்த முடையதாகத் தோன்றுகிறது.

---

15. இயற்றமிழ் (கட்டுரை): அ. ச. ஞானசம்பந்தன்

16. தமிழ் இலக்கிய வரலாறு: டாக்டர் மு. கோவிந்தசாமி பக். 167

17. கொங்கு தேச ராசாக்கள்: சென்னை கீழ்த்திசை ஓலைச் சுவடி நிலைய வெளியீடு: பக். 5

பெருங்கதையின் காலத்தைக் கணிப்பதில் வேறு பாடுகள் தோன்றினும், பொதுவாக அது சிலப்பதிகாரத்தின் பின்னரும் பக்தி இலக்கியங்கள், சீவக சிந்தாமணி இவற்றிற்கு முன்னரும் தோன்றியது என்பதை அனைவரும் ஒப்புகின்றனர். சங்க இலக்கியத்தை அடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலைக்குப் பின்னரும் மற்ற இலக்கியங்கட்கு முன்னரும் பெருங்கதை எழுந்ததாகக் கொள்வது பொருத்தமுடையதாக இருக்கும்.

3. செறிவுரைகள்

இலக்கியம் வாழ்க்கை வழிகாட்டி; அறிவுச் சுரங்கம்; கருத்துப் பெட்டகம்; மனநோய் மருந்து; மாந்தரினக் கப்பலுக்குக் கலங்கரை விளக்கம். மக்கள் பின்பற்ற வேண்டிய, சிந்தித்துத் தெளிய வேண்டிய உயர்ந்த கருத்துகள் இலக்கியங்களில், நீலவானில் தோன்றும் நித்தில மீன்கள்போல் பொதிந்து கிடக்கும். அத்தகைய கருத்துச் செறிந்த, காலமெலாம் போற்றத்தக்க மணிமொழிகள் இங்கே 'செறிவுரைகள்' எனக் கொள்ளப்பட்டுள்ளன. சிறு சிறு சொற்றொடர்களில் கதையின் இடையிடையே செறிவுரைகளை இயம்பிச் செல்வது கொங்குவேள் இயல்பு. பெருங்கதை முழுவதும் செறிவுரைகள் ஆங்காங்கே சிந்தனைக் கீற்றுகளாக ஒளிவிடுகின்றன. அவற்றுள் சிறப்பானவை இங்கே எடுத்துக் காட்டப்படுகின்றன.

மழையும் திருவும் மகளிர் மனமும்

மழை தேவையான இடத்தில்தான் பெய்யும் என்பதில்லை. தேவையில்லா இடத்தில் கொட்டும்; தேவையுள்ள இடத்தில் பெய்யாது கரக்கும். "புடையுடன் வாடிக் கிடக்கும் நெல்வயலில் பெய்யாமல் மின்னொடு முழங்கி வீணே கடலில் கொட்டும்."[1] செல்வம் சிறந்தவர்களிடம் மட்டுமே சேரும் என்பதில்லை. இவனிடமா இவ்வளவு செல்வம் என்று கண்டோர் வியக்கும் வண்ணம் பொருத்தமில்லாத

1. நாலடி. 269

ஒருவனிடம் போய்ச் சேருவதுமுண்டு. ''பொன்போலும் நன் மக்களைப் பொருந்தியிராமல், கீழோராகிய புன்மக்களிடம் சென்று நிலைத்துவிடுகிறது.''[2] அதுபோன்றே மகளிர் மனமும், தகுதியான இடந்தானு என்ற ஆராய்ச்சியின்றி, தான் சென்று பொருந்திய இடத்திலேயே நிலைத்துவிடுகிறது. அழகன் ஒருவன் ஒருத்தியை எல்லா வகையிலும் போற்றக் காத்திருப்பான். ஆனால் அவள் உள்ளமோ, கண்டோர் வெறுக்கும் ஒருவனிடம் படிந்து கிடக்கும்! இவ்வாறு மழையும், செல்வமும், மகளிர் மனமும் பொருத்தம் பாராது தாம் பட்ட இடத்திலேயே படிந்துவிடும் இயல்பின.

பரத்தையர் குலத்திற்றோன்றிய நருமதையை விரும்பிய உதயணன், தன் நண்பன் மூலம் அவளுக்குப் பெரும் பொருளை அனுப்பி அழைத்துவரப் பணித்தான். நண்பனும் நருமதை வீடு சென்று அவள் தாயிடம் செய்தியைக் கூறினன். உதயணன் தன் மகளை விரும்பினன் என்று கேட்ட நருமதையின் தாய் மிகவும் மகிழ்ந்து, அவளை அழைத்துவர உள்ளே சென்றாள். அவ் வேளை நருமதை தான் விரும்பிய ஒருவனைத் தேடிப் புறப்பட்டு நின்றாள். அவன் யார்? பேரரசனு? பெரும் வணிகனு? கலைஞனு? அழகனு? இல்லையில்லை! நெசவுத் தொழில் செய்யும் ஏழைக் குடும்பத்தில் பிறந்து அத் தொழிலையும் சரிவரச் செய்யத் தெரியாமல் தெருக்களில் அலைந்து திரிபவன்! சிறுமதியுடையவன்; அழகற்றவன்; பொருளாசையால் எப்போதும் பொய்யே பேசுபவன்; அழுக்கேறிய கரிய உடையினன்; இளமையான மகளிர் ஏறெடுத்துப் பார்க்கவும் விரும்பாத இழிதகவுடையவன்; சூதாடும் இயல்பினன். அவன்பால் உள்ளத்தைப் போக்கி விட்டிருந்தாள் அழகின் மணிமுடியாகிய நருமதை! அவளிடமிருந்து பெற்றுச் சென்ற அணிகலன்களைச் சூதாட்டத்தில் தோற்றுவிட்ட அவன் வீதியில் வந்து நிற்பதாக நருமதை கேள்விப்பட்

---

2. நாலடி 266

டாள். உடனே அவனைத் தேடிக்கொண்டு புறப்பட்டு விட்டாள். தாய் அவளைத் தடுத்து நிறுத்தி உதயணன் பெரும் பொருள் அனுப்பியிருப்பதைக் கூறினாள். காதலனைத் தேடிச் செல்வதற்குத் தாய் தடையாக நிற்பது கண்டு அதற்குக் காரணமான உதயணனை வாயில் வந்தபடி ஏசினாள். அவனுக்குப் பெண்டாக முடியாதென மறுத்துப் பேசினாள்.

அவளோ பரத்தை; பணம் உள்ளோரிடம் பசையெனப் பொருந்த வேண்டியவள். பரிசம் அனுப்பியிருப்பவனோ அரசிளங் குமரன்; எழிலின் உருவம்; இளமையின் தேக்கம்; கலைகளின் இருப்பிடம்; அவனைக் கணவனாக அடைய மாட்டோமோ என்று கன்னியர் ஏங்கித் தவமிருக்கும் தகுதியாளன். ஆயினும் அவனை வெறுத்தாள். தன்னுடைய அணிகலன்களையே பெற்றுச் சென்று சூதில் தோற்றுத் திரிந்த அழகற்ற சேணிகச் சிறுவனைத் தேடிச் செல்லத் துடித்தாள். மகளிரின் இந்த மன இயல்பை மழையோடும் திருவோடும் சேர்த்துக் கொங்குவேள்,

> மாரியும் திருவும் மகளிர் மனமும்
> தக்குழி நில்லாது பட்டுழிப் படும்[3]

என்று குறிப்பிடுகின்றார்.

மகளிர் மனம் பட்டுழிப் படும் என்பதை யசோதர காவியமும் விளக்குகிறது. அமிர்தமதி என்பாள் ஓர் அரசி. ஒரு நாள் கணவனோடு பள்ளியறையில் துயின்றபோது, யானைச் சாலையிலிருந்து வந்த ஒரு பாடல் அவள் காதில் விழுந்தது. பாடலால் ஈர்க்கப்பட்ட அவள், நிறையழிந்து உருகினாள். தோழியை அழைத்து அவ் விசையைப் பாடியவனை அடைய வேண்டுமென்ற எண்ணத்தைக் குறிப்பால் புலப்படுத்தினாள். தோழி மறுத்தாள். அரசியோ, "அப் பண்ணைப் பாடியவனைக் கூடி மகிழ்ந்து பாடலைக் கேளா

---

3. பெருங். 1 : 35 : 156 – 158

விட்டால் ஆவியை விடுவேன்'' என்றாள். வேறு வழியில்லாமல் தோழி பாடியவன் யாரென அறிந்துவரச் சென்றாள். யானைச் சாலையில் அவனைக் கண்டு திரும்பிய அவள், ''அரசியே! அவன் நரம்பு முடிச்சுகள் புடைத்துத் தோன்றும் உடம்பினன்; கழுதை போன்று கால் தட்டிய நடையினன்; குறுகிய விரலினன்; அழுகிய கையினன்; அழகற்ற சிறிய முகத்தினன்; உட்குழிந்து அழிந்த கண்ணினன்; நேராக வரிசையாக இல்லாமல் நிமிர்ந்திருக்கும் பல்லினன்; தொழுநோயால் அவனுடம்பில் உண்டாகியுள்ள புண்களோ அளவற்றன. அவனைப் பார்க்கவும் கூசிக் கண்களைப் பொத்திக் கொண்டு திரும்பி விட்டேன்'' என்றாள். அது கேட்ட அரசி, ''இவற்றால் என்ன குற்றம்? ஒருவனிடம் உள்ள செல்வம், வலிமை, புகழ், அழகு, உயர்குலம் என்பதெல்லாம் மகளிரின் மனத்தைக் கவர்வதற்குத் தானே? அவன்தான் என் மனத்தை முன்னரே கவர்ந்து விட்டானே! இனி இவை எதற்கு?'' என்றவளாய் அவனைச் சென்று அடைந்தாள். நாள்தோறும் அவனோடு இன்பம் நுகர்ந்தாள். அது மட்டுமா? ஒருநாள் காலம் கடந்து சென்றதற்காக, அத் தொழுநோய்ப் பாகன், அரசியின் கூந்தலைப் பற்றி இழுத்துப் புடைத்து மிதித்தான். அரசி மூர்ச்சையுற்றாள். தெளிந்ததும் காலம் தாழ்த்து வந்ததற்கான காரணத்தைக் கூறி அவனை அமைதிப்படுத்தினாள். ''அன்பே! கற்பகத் தருவைக் கைக்கொண்டார் அதை விடச் சம்மதிப்பாரா! எனக்கு வேண்டியதைத் தரும் கற்பகத் தரு நீ! உன்னை விடுவேனோ?'' என்று அவனிடம் கொஞ்சி மகிழ்ந்தாள். இந் நிகழ்ச்சி, 'மகளிர் மனம் தக்குழி நில்லாது பட்டுழிப் படும்' என்பதற்குத் தக்க சான்றாக அமைகிறது!

நித்திலத்தன்னார்

மகளிர் பிறந்த இடத்திலேயே—பெற்றோரிடமே இருந்து விட முடியாது. பருவம் உற்றதும் ஏற்ற கணவனைச் சார்ந்து வாழவேண்டியவர்கள்! பெண்களால் பிறந்த

இடத்துக்குப் பயன் இல்லை. இக் கருத்தைக் கலித் தொகைப் பாடல் ஒன்று தெளிவாக விளக்குகிறது.[4] ''சந்தனம் மலையிலே விளைகிறது. அதனால் மலைக்குப் பயனில்லை. அரைத்துப் பூசிக் கொள்வோர்க்கே மணத்தையும் குளிர்ச்சியையும் தருகிறது. முத்து கடலில் பிறக்கிறது. அதனால் கடலுக்கு நன்மையுண்டா? இல்லை! எடுத்து மாலையாகக் கோத்து அணிபவர்க்கே எழிலைச் சேர்க்கிறது. யாழின் நரம்பால் யாழுக்குப் பயனில்லை. மீட்டுவோர்க்கு இனிய ஒலியைத் தந்து இன்ப மூட்டுகிறது. பெண்களும் சந்தனம், முத்து, யாழ் நரம்பு போன்று பிறந்த இடத்தில் பயன்படுதலில்லை; கொண்டானுக்கே பயன் தந்து பெருமை சேர்ப்பவர் ஆகின்றனர்.'' கலித்தொகைப் பாடலின் இக் கருத்தைக் கொங்குவேளும் கூறிடக் காண்கிறோம். வாசவதத்தையின் பிரிவினால் வாடிய அவள் தாயை, பிரச்சோதன மன்னன், ''நங்காய்! உலகில் மகளிர் தமக்குரியாரிடம் சேர்வது அல்லாது பெற்றோரிடமே பிரியாது உறைவதுண்டா? நான் சொல்வதைக் கேள் :

மகளிர்
தத்துநீர்ப் பெருங்கடல் சங்குபொறை யுயிர்த்த
நித்திலத் தன்னர்.[5]

பெண்கள் கடலில் தோன்றும் முத்துப் போன்றவர்கள்'' என்று கூறி அமைதிப்படுத்தினான்.

பெருங்கதையை அடுத்துத் தோன்றிய இலக்கியங்களும் இக் கருத்தைத் தொடர்ந்து எடுத்தாளுகின்றன. ''வலம்புரிச் சங்கில் பிறந்த முத்துகள், மக்களுக்குப் பயன்படுகின்றனவே அன்றி, அம் முத்துகளால் வலம்புரிச் சங்குகள் பயன் அடைவதில்லை. பெண்களும் அவர்கள் பெற்றோர்களுக்கு அதுபோலத்தான்'' என்று சீவக

---

4. கலி. 9
5. பெருங். 1 : 47 ; 253—55

சிந்தாமணியும்[6], கடலில் உள்ள வெண் சங்குகள் தாம் ஈன்ற ஒளி மயமான முத்துகளைத் தாம் என்றும் அணிந்தறிவதில்லை; அதுபோன்றே உலகில் பெண்ணாகப் பிறந்தவர்கள் பெற்றோர்கட்குப் பயன்படுவோராய் இருப்பதில்லை'' என்று பாண்டிக்கோவையும்[7] குறிப்பிடுகின்றன.

பொறுமையே பெருமை

பெண்களுக்கு இருக்கவேண்டிய பொறுமை பற்றிக் கொங்குவேள் சுட்டுவது சிறப்பாக உள்ளது. பெண்களாகப் பிறந்தவர்கள் தம் அன்புடைய கணவர் துன்புறுவன செய்தாலும் பொறுத்துக் கொள்ளுதலே பெருமையாகும் என்கிறார்.

அன்புடைக் கணவர் அழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை[8]

இதனோடு, ''சால்புடைமை மிக்கவராகிய கற்புடை மகளிர், தம்மைக் கணவர் இகழ்ந்த இடத்தும், தாம் அவரை ஏத்தி வணங்குவர்'' என்ற பரிபாடல் கருத்தும்[9], ''தோழி! நம் நலத்தைச் சிதைக்குமாறு நம் தலைவன் பரத்தைமையை மேற்கொண்டனனாயினும் அதைப் பொறுப்

---

6. வலம்புரி ஈன்ற முத்தம் மண்மிசை யவர்கட் கல்லால்
வலம்புரி பயத்தை யெய்தா தனையரே மகளிர்
—சீவக. 563 : 1-2

7. நெருங்கடல் வேல்நெடு மாறன் நெடுங்களத் தன்றுவென்றான்
பெருங்கடல் ஞாலத்துட் பெண்பிறந் தார்தம்பெற்றோர்க்குதவார்
இருங்கடல் போற்றுயர் எய்தன்மின் ஈன்றன வென்றுமுந்நீர்க்
கருங்கடல் வெண்சங் கணிந்தறி யாதண் கதிர்முத்தமே.
—பாண்டிக் கோவை : 224

8. பெருங். 4 : 14 : 98-99

9. தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்
இகழினுங் கேள்வரை ஏத்தி இறைஞ்சுவார்
—பரி. 20 : 88-89

பது நம் கடன் என்பதால் பொறுத்தேன்''[10] என்று தலைவி ஒருத்தி தன் தோழியிடம் கூறும் கலித்தொகைக் கருத்தும் ஒப்பு நோக்கற்பாலன. அன்புடைக் கணவனுய கோவலன் அழிதக செய்தபோதும் கண்ணகி பொறுமை காட்டியதால் பெருமை பெற்ருள்; தெய்வமானுள்.

அன்பு மலர்விக்கும் மனம்

மகளிர் மனம் அவரை விரும்புவார் காட்டும் அன்பினுல் மலர்வது. உலகத்தைத் தன் ஒளியால் விளக்குகின்ற ஞாயிற்றின் வரவு கண்டு அழகிய தாமரை, இதழ்விரித்து மலரும். அதுபோல, காதலர் காட்டும் அன்பினுல் மகளிர் நெஞ்சம் மலரும்.

> ஞாலம் விளக்கும் ஞாயிறு நோக்கிக்
> கோலத் தாமரை கூம்பவிழ்ந் தாங்குத்
> தன்பாற் பட்ட அன்பின் அவிழ்ந்த
> நன்னுதல் மகளிர்.[11]

பெண்களின் மனத் தாமரை காதலராகிய சூரியனைக் கண்டு தான் மலரும்.

சுடர்நோக்கும் நெருஞ்சி

நெருஞ்சிப் பூ காலையில் கிழக்கு நோக்கி, நண்பகலில் கதிரவனேடு தானும் நேர்நின்று, மாலையில் அவனேடு மேற்கே சாயும். சூரியனையே நோக்கியிருக்கும் நெருஞ்சிப் பூப்போல மகளிரும் கணவனையே நோக்கியிருக்கும் இயல் புடையவர். ''தோழி! என் உள்ளங் கவர்ந்த காதலன் ஞாயிறு போன்றவன். என் தோளோ நெருஞ்சி போன்றது. நெருஞ்சி சூரியனையே நோக்கியிருப்பதுபோல என்

---

10. மாய மகிழ்நன் பரத்தைமை
நோவேன் தோழி கடன்நமக் கெனவே.
—கலி. 75 : 32-33

11. பெருங். 4 : 15 : 65-68

தோறும் தலைவனையே நாடி நிற்கும்'' எனக் குறுந்தொகைத் தலைவி ஒருத்தி குறிப்பிடுகின்றாள்.

மகளிர் கணவனையே மதிக்கும் மாண்பினைக் கொங்குவேள் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். அவர்களுடைய தலை துறவிகளை வணங்குவதற்குக் கூடத் தாழாது; கணவர்க்கு மட்டுமே தாழும். மனமோ சூரியனையே விரும்பும் நெருஞ்சி போலக் கணவனையே விரும்பும் தன்மையுடையது.

அருந்தவர்க் காயினும் திருந்துமுகம் இறைஞ்சாது
செங்கதிர் விரும்பும் பைங்கொடி நெருஞ்சிப்
பொன்புனை மலரின் புகற்சி போல
வெறுத்த வேட்கைத் தாமுளஞ் சிறப்பக்
காதலர்க் கவாஅம்,[12]

காதல் நோக்குடன் பிரச்சோதனன் மனைவியர் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

அறம் நீங்கும்

மகளிர் தங்கள் நிறையைத் தாங்களே காத்துக் கொள்ள வேண்டும். அதனால்தான் திருவள்ளுவரும் ''மகளிரைக் கணவன் காக்கும் சிறைக்காவல் என்ன பலனைச் செய்யும்? அவர்கள் தமது நிறையாற் தம்மைக் காத்துக் கொள்ளும் காவலே தலைமையான காவல்'' என்றார்.[13] தம்மைத் தாம் காத்துக்கொள்ளாதவர்களைப் பிற காவல் எதுவும் தடையாகத் தடுத்து நிறுத்திவிடாது என்பதே இதன் பொருள். இக் கருத்தைக் கொங்குவேள் இன்னும் அழுத்தமாகவே குறிப்பிடுகிறார்.

நம்மை ஒருவரும் காணவில்லை. யாம் மறைந்து செய்யும் செயல்களைப் பிறர் அறியப்போவதில்லை என்ற எண்ணத்தால் காவல் அமைந்த இடத்தில் இருந்து கொண்டு,

---

12. பெருங். 2 : 4 : 13-17
13. குறள். 57

சான்ரோரால் விரும்பப்படாத செயல்களைச் செய்தல் பெண்களுக்குத் தகுதியன்று. அங்ஙனம் செய்வதால் பிறர் பழிகூறும் நிலை நேரும் என்பதோடு நல்லறமும் நீங்கிவிடும்.

ஒருவரும்
காணார் என்று காவலுள் இருந்து
பேணா செய்தல் பெண்பிறந் தோருக்கு
இயல்பு மன்றே; அயலோர் உரைக்கும்
புறஞ்சொலு மன்றி அறந்தலை நீங்கும். [14]

தம்மைத்தாம் காவாது செய்யும் செயலால் பழியும் பாவமும் விளையும் என்பதை இவ் வடிகள் நிலைப்படுத்துகின்றன.

திருத்தகைத்து அன்று

மகளிர் ஒருவனைத் தம் மனத்தால் வரித்தபின் அவனையே அனைத்துமாகக் கருதி வந்தனர். அவனையன்றிப் பிறரை ஏறெடுத்தும் நோக்கார். பெண்கள் கணவனையன்றிக் கடவுளரைத் தொழுவதும் 'பீடன்று' என்று எண்ணுகின்ற இயல்பினர். மாணகன் எனப் பெயர் பூண்டு அந்தணன் வடிவிற் சென்ற உதயணனைப் பதுமாபதி காதலித்தாள். உதயணனோ அவள் அண்ணனின் நட்பைப் பெற்று அவளை மணக்க முற்பட்டான். இந் நிலையில் மாணகனாகிய தானே உதயணன் என்பதைப் பதுமாபதிக்கு விளக்குவதற்காகத் தன் படத்தை எழுதி அவளுடைய தோழியின் வாயிலாகக் கொடுத்து அனுப்பினான். படத்தைப் பார்த்த பதுமாபதி அவ் வோவியம் மாணகன் என்ற தன் காதலனோடு வேற்றுமை சிறிதுமின்றிப் பொருந்தியிருப்பதைக் கண்டாள். ஆயினும் தன் காதலன் நேரில் வரும்போது அவனொடு அவ் வோவியத்தை வைத்து ஆராய்ந்து கண்ட பின் அல்லது அதற்கு முன் அதனைத்தொடுவது அழகன்று;

14. பெருங். 4 : 13 : 117 — 21

தெளிவது முறையுமாகாது என்று எண்ணியவளாய் ஓவி யத்தைக் கையில் ஏற்றுக் கொள்ளவுமில்லை.

இன்னுயிர்க் கிழவன் எழுதிய பாவை
என்னும் வேற்றுமை இல்லை யாயினும்
ஓராங் கிதனை ஆராய்ந் தல்லது
தீண்டலும் தேறலும் திருத்தகைத்து அன்று.[15]

படத்திலிருப்பவன் தன்னுடைய காதலனேயாயினும் அஃது அவனுடைய படம்தான் என்று தெளிவதற்கு முன் அதைத் தொடவும் கூசியது அன்றைய மகளிர் மனம்! ஆனால் இன்றோ, நிழற்படக் கூடங்களில் திரைப்படங்களில் நடிக்கும் நடிகர்களின் உருவச் செதுக்கல்களின் (cut-out) அருகே நின்று ஆசையோடு படமெடுத்துக் கொள்ளும் நங்கையரைக் காணவும் செய்கிறோம். இந்த மாற்றம் தேவையா என்பதைப் பெண்கள் சமுதாயம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்!

கற்புடை மகளிர் கடமை

உலகில் போர் கருதியோ, பொருளீட்டல் கருதியோ தம் காதலியைப் பிரிந்து போதல் ஆடவரின் கடமையாகிறது. மனைமாட்சியோடு பொருந்திய, குற்றமற்ற அழகிய நுதலையுடைய, கற்புடைய மகளிர்க்கோ அப் பிரிவுத் துயரைப் பொறுத்து ஒழுகவேண்டுவது கடமையாகிறது.

ஆண்கடன் அகறல், அதுநோன் றொழுகுதல்
மாண்பொடு புணர்ந்த மாசறு திருநுதல்
கற்புடை மகளிர் கடன்.[16]

ஒற்றிடம் பார்த்தல்

யானையின்மீது ஒருவன் கல்லெறிந்தானானால் அந்தக் கல்லைத் தன் கன்னக் கதுப்புகளில் மறைத்து வைத்திருந்து,

15. பெருங். 3 : 22 : 162 – 65
16. பெருங். 3 : 7 : 7 – 9

சமயம் நேர்ந்தபோது அதே கல்லை அவன்மீது எறிந்து கொல்லும் என்பர். அஃதாவது யானை தனக்குத் தீங்கிழைத்தவனுக்குத் தானும் தீங்கிழைக்கச் சமயத்தை நோக்கிக் காத்திருக்கும். அதுபோலவே அரசனும் தம் பகைவரை அடக்குதற்கு ஏற்ற வேளையை எதிர்நோக்கிக் காத்திருத்தல் வேண்டும்.

உறுவலி நாகத்து ஒற்றிடம் பார்த்தல்
அறைகடல் ஞாலத்து இறைகடன். [17]

செங்கோற் சிறப்பு

அரசனுடைய ஆட்சி மிகச் சிறப்புடன் நடைபெற்றது என்பதைக் குறிக்க முற்படும் கொங்குவேள், செங்கோல் சிறப்புடன் சுழன்றதால், அதை மீறிக் கூற்றுவனும் அந்த நாட்டுக்குள் நுழைய முடியாது போயிற்று என்பார்.

கூற்றுயிர் கோடலும் ஆற்ரு தாக
உட்குறு செங்கோல் ஊறின்று நடப்ப [18]

சிலர் சிலம்பம் சுழற்றும்போது சுற்றி நிற்பவர் கற்களை அவர்மீது எறிவர். சிலம்பம் சுழலும் வேகத்தில் கற்கள் சிலம்பாடியைத் தாக்காமல் கம்பில் பட்டு, எறிந்தவரையே சென்று தாக்கும். அரசனின் செங்கோல், ஆட்சிப் பரப்பைச் சுற்றிலும் காவலாய் நின்று, ஓயாது சுழன்றமையால் எமனும் அதிற்பட்டு வெளித் தள்ளப்பட்டானேயன்றி உள்ளே நுழைய முடியாததாயிற்று.

செங்கோல் ஆட்சியில் தண்ணிய அறம் நுழைய முடியுமே தவிர வெவ்விய மறம் புகமுடியாது.

தண்கோல் அல்லது வெங்கோல் புகாஅச்
செங்கோல். [19]

---

17. பெருங். 1 : 43 : 10 – 11
18. பெருங். 4 : 2 : 55 – 56
19. பெருங். 2 : 20 : 56 – 57

ஆட்சியின் பயன்

அரசாட்சியால் அடைய வேண்டிய பயன் கற்றுவல்ல சான்றோர்களைக் காணுதலே ஆகும்.

> **கற்றோர்க் காண்ட லாகும் காவலிற்**
> **பெற்ற பயன்.** [20]

அரசாட்சியின் பயன் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனையும் நிலைக்கச் செய்வதேயாம். இந்த உறுதிப் பொருள்கள் மூன்றனையும் ஒருங்கே இழந்துவிட்டு அரசுரிமையை மட்டும் சுமந்துகொண்டு உயிர் வாழ்ந்திருத்தலைக் காட்டிலும் இறந்துபடுதல் நல்லது.

> **தருமமும் அருத்தமும் காமமும் இழந்தே**
> **இருநில மருங்கின் இறைமை தாங்கி**
> **வாழ்தலின் இனிதே ஆழ்தல்.** [21]

பொருள்நூல் கூற்று

அரசன் தன்னோடு அன்பினால் பொருந்தியவர்கன்றிப் பிறர்க்குத் தன் உண்மை நிலையைப் புலப்படுத்துதல் கூடாது. தன் வலிமை, துணை வலிமை. இன்ன பிற செய்திகளையெல்லாம் உயிருக்குயிராகப் பழகுகின்றவர்களே அறியுமாறு செய்ய வேண்டும். பிறருக்குத் தெரியக் கூடாது. இது பொருள் நூல் கூற்றும்.

> **மேயோர்க் கல்லது மெய்ப்பொருள் உணர்த்தல்**
> **ஏதில் பெரும்பொருள் நீதியுள் இன்மையின்.** [22]

கோல் தளர்ந்தால் குடி தளரும்

உயிர்கட்கு வரும் துன்பத்தைப் போக்கிப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது காவலனாகிய அரசனின் கடமை.

---

20. பெருங். 3 : 12 : 28 – 29
21. பெருங். 3 : 1 : 48 – 50
22. பெருங். 2 : 9 : 216 – 17

குடிகள் அரசனின் கோலை நோக்கியே வாழ்வர். பிறர்க்கு நேரும் அச்சத்தைப் போக்கி ஆதரவளிக்க வேண்டிய அரசர்களே, கவலை கொண்டு தம் காவல் தளர்ந்தால் மன்னுயிரெல்லாம் நிலை தளர்ந்து அழியும்.

> அலகைப் பல்லுயிர்க் கச்சம் நீக்குநர்
> கவலை கொண்டுதங் காவலில் தளரின்
> உலக மெல்லாம் நிலைதளர்ந் தழியும். [23]

செப்பல் தீது

அரசனை வெஞ்சொல் கூறிய ஒருவன் எப்போதும் அஞ்சியே இருக்க வேண்டியவன் ஆகின்றான். செவ்வி நோக்கி அரசன் அவனுக்குத் தீங்கியற்ற முற்படுதல் இயல்பு. ஆதலின், 'அரசனைப் பழித்தோர் அஞ்சியே வாழ வேண்டும்' என்ற முதுமொழியும் தோன்றலாயிற்று. இதனைக் கொங்குவேள்,

> வெஞ்சொல் மாற்றம் வேந்தனை உரைத்தோர்
> அஞ்சுக என்னும் தொன்மொழி [24]

என்று குறிப்பிடுகின்றார்.

வேந்தனோடு தொடர்புடைய பழிச் சொற்களை மக்கள் பேச அஞ்சுவர். இவ்வாறு இன்னார் பேசினார் என்று தெரிந்தால் அஃது அவர்கள் உயிருக்கே ஊறாகவும் நேரலாம். ஆதலின் வேந்தனைக் குறித்த வெஞ்சொல்லை மிகவும் நெருங்கியவரிடத்தில் சொல்வதுகூடத் தீமையே பயக்கும். அப் பழிச்சொல் மன்னன் செவியை எட்டுமாயின் சொன்னவர் நாக்குத் துண்டிக்கப்படுதல் உறுதி. எனவே அத்தகைய மொழிகளை நினைப்பதே தவறு என்று அஞ்சி அவற்றை மனத்திற்குள்ளேயே அடக்கிக் கொள்வர்.

---

23. பெருங். 3 : 21 : 57—59
24. பெருங். 3 : 25 : 75 — 76

வேந்திடை யிட்ட வெஞ்சொல் ஆதலின்
சேர்ந்தோர் மாட்டும் செப்பல் தீதென
உரைப்போர் நாவிற்(கு) உறுதி இன்மையின்
நினைத்தது மிகையென நெஞ்சுவலி யுறீஇ
மனத்ததை யாக மாந்தர் அடக்கலின்[25]

திருவுவழி நிற்கும் திட்பம்

ஒருவனுக்கு உண்டாகும் மனத் திண்மை அவன் உருவத்தைப் பொருத்தது அன்று. செல்வத்தைக் கொண்டே திட்பம் தோன்றுகிறது. பகையை அறுக்கும் வேல் செல்வத்தைவிடக் கூரியது வேறு இல்லையாதலின் திருவின் வழி திட்பம் நிற்கிறது. திருவும் திட்பமும் நேர் விகிதத்தில் அமைந்தவை. அதாவது திரு (செல்வம்) கூடக்கூடத் திட்பமும் கூடும். திரு குறையக் குறையத் திட்பமும் குறையும்.

உருவுவழி நில்லா தாயினும் ஒருவர்க்குத்
திருவுவழி நிற்கும் திட்பம்.[26]

ஆழ்ந்த காலை அன்பு இல்லை

ஒருவன் செல்வத்தோடு வாழும்போது அவனிடத்தில் அன்பு பாராட்டுவோர் பலர். அவன் அச் செல்வத்தை இழந்து வறுமையுற்று வாடுகையில் அவனிடம் அன்பு பாராட்டுவார் யாரும் இருக்கமாட்டார்.

வாழ்ந்த காலை அல்ல(து) யாவர்க்கும்
ஆழ்ந்த காலை அன்பும் இல்.[27]

இக் கருத்தை அற நூல்கள் பெரிதும் வலியுறுத்தும். செல்வமுள்ள காலத்தில் ஒருவர் உணவை உண்பவர் பலராவர். அவரே வறுமையடைந்த காலத்தில் அவரை

---

25. பெருங். 1 : 35 : 15 – 19
26. பெருங். 1 : 36 : 11 – 12
27. பெருங். 3 : 21 : 94 – 95

நெருங்குவார் எவருமிரார். 'கெட்டார்க்கு நட்டாரோ இல்' என்கிறது பழமொழி.[28]

ஒருவர் செல்வம் உடையராய் வாழுங் காலத்தில் சுற்றத்தார் என்று சொல்லிச் சூழ்பவர் விண்மீன் தொகையினும் பலராவர். பொறுக்க முடியாத வறுமைத் துன்பத்தை அவர் அடையும்போது, உறவுடையேம் என்று உரிமை பாராட்டுபவர் ஒரு சிலரே இருப்பர் என்று நாலடி நவிலும்.[29]

ஒற்கிடத்துதவும்

கற்றலும் கேட்டலுமாகிய அறிவு ஒருவர்க்கு இடையூறு நேர்ந்தபோது கண்ணாக உதவுகின்ற வலிமையுடையது.

> **கற்றதும் கேட்டதும் கண்ணா மாந்தர்க்கு**
> **ஒற்கிடத் துதவும்.**[30]

இங்குக் கொங்குவேள் திருவள்ளுவருடைய கருத்தை மட்டுமன்றி அவருடைய மொழியையும் பொன்னேபோல் போற்றி எடுத்தாண்டுள்ள திறத்தை அறியலாம்.

> **கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு**
> **ஒற்கத்தின் ஊற்றாம் துணை**[31]

என்ற குறளின் சொல்லும் பொருளும் இங்கு இணைந்து நிற்கின்றன.

கற்ற கல்வியினால் செய்து முடிக்க முடியாத சிறந்த செயல் யாதுமில்லை என்று சான்றோர் கூறுவர். கல்லாத புல்லரே இதனைப் பொய்ச்சொல் என்று புறக்கணிப்பர்.

> **விச்சையின் முடியா விழுவினை இல்லெனல்**
> **பொய்ச்சொல் என்பர் புன்மை யோரே.**[32]

---

28. பழமொழி 59
29. நாலடி. 113 (284ஆம் பாடலும் இதே கருத்துடையது)
30. பெருங். 3 : 1 : 62 – 63
31. குறள் 414
32. பெருங். 3 : 1 : 59 – 60

முடியாதாயினும் பழியார்

ஒரு செயலைச் செய்து முடித்தற்கு அதற்குரிய துணைச் செயல்களை யெல்லாம் நன்கு செய்ய வேண்டும். அவ்வாறு செய்தும அச் செயல் முடிவு பெறவில்லையாயின் அதனாற் பழியில்லை. செய்வன திருந்தச் செய்யும்போது செயல் நிறைவேறாது சாவே நேர்ந்ததாயினும் சான்றோர் அதனைப் பழி கூறமாட்டார்.

முடியாக் கருமம் ஆயினும் முடியும்
வாயில் முற்றித்து வயங்கா தாயினும்
சாவினும் பழியார் சால்புடை யோர்.[33]

மலர்மகள் அகல்வாள்

தாம் செய்யத் தகுந்த செயல்களைச் செய்யாமல் சோம்பலுற்றிருப்போரைத் திருமகள் வெறுத்து நீங்குவாள் என்பது சான்றோர் மொழி.

செய்வினை மடிந்தோர்ச் சேர்ந்துறை விலளே
மையறு தாமரை மலர்மகள் தானெனல்
வையகத் துயர்ந்தோர் வாய்மொழி.[34]

இங்கு உயர்ந்தோர் வாய்மொழி என்பது,

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்[35]

என்ற அருமைத் திருக்குறளை நினைந்து போற்றியதாகும்.

உய்வகை இல்லை

வெகுளியுற்றிருப்பவனிடம் சொல்லுவது பொய்யே ஆனாலும் மெய்யே ஆனாலும் அவன் சிந்தித்துப் பார்க்கப்

---

33. பெருங். 3 : 1 : 68 – 70
34. பெருங். 2 : 17 ; 39 – 41
35. குறள் 617

போவதில்லை. சொன்னவன் தொல்லைக்குள்ளாக நேரிடுமே தவிர சொன்ன செய்தி அவனுள்ளத்தில் சென்று சேரப் போவதில்லை. வெகுளியுடையோரிடத்தில் கூறுவது எதுவும் வீணே!

> பொய்ப்பொருள் ஆயினும் மெய்ப்பொருட் கண்ணும்
> உய்வகை இல்லை வெய்யோன் மாட்டு.[36]

பிறரை நோவது ஏன்?

ஒருவர் தாமே தேடிக்கொண்ட பெருந் துன்பத்திற்குத் தம்மையே நொந்து கொள்ளவேண்டுமே தவிரப் பிறரை நோவதால் யாது பயன்? அது மேலும் துன்பத்தையே தரும்.

> தம்மால் வந்த தாங்கரும் வெந்நோய்
> தம்மை நோவ தல்லது பிறரை
> என்னது நோவல்? ஏதம் உடைத்து![37]

நிலைதளராது நிற்க

துன்பம் தொடர்ந்து வந்தபோதும் ஒருவன் தளராது இருக்க வேண்டும். மலை குலைந்தாலும் நிலை குலையாத் தன்மை வேண்டும். தூணை நட்டு, மேலே கை மரங்களைச் சாத்தி, ஆக்கையால் பிணித்துக் கூடம் அமைப்பதைப் பார்க்கிறோம். கூரையிலுள்ள கை மரங்கள் ஆக்கையற்றுக் கீழே வீழ்ந்தபோதும் அவற்றைத் தாங்குவதற்காக நிறுத்தப்பட்ட கற்றூண் தன்னிலையில் தளராது உறுதியாக நிற்கும். கூரை உறுதியோடிருந்த போதும், தளர்ந்து சரிந்த போதும் தூணின் நிலையில் மாற்றமில்லை. அதுபோல, துன்பம் வந்தபொழுது நடுங்காமலும், இன்பம் வந்த காலத்தில்

---

36. பெருங். 1 : 46 : 343 – 44
37. பெருங். 3 : 14 : 116 – 18

மகிழ்ந்து ஆடாமலும், தம் நிலைமையிலேயே உறுதியாக நிற்க வேண்டுவது மக்களின் கடமையாகும்.

> கொடுங்காழ் சோரினும் கூடம் ஊன்றிய
> நெடுங்காழ் போல நிலைமையின் வழாஅது
> துன்பத்தில் துளங்கா(து) இன்பத்தின் மகிழா(து)
> ஆற்றுளி நிற்றல் ஆடவர் கடன்.[38]

உதடு கரும்பு, உள்ளம் வேம்பு

உள்ளத்தே வஞ்சகத்தை அடக்கிக்கொண்டு வெளித் தோற்றத்தில் இனிமையாகப் பேசுவோர் உலகில் உண்டு. அத்தகையவர்களைப் பெருங்கதை, "வாயில் கரும்பும் நெஞ்சில் வேம்பும்" கொண்டவர் என்று கூறும். மொழி களோ இனிப்பின் ஆக்கம்; உள்ளமோ கசப்பின் தேக்கம்!

> தேம்பட மொழிந்து வேம்புமனத் தடக்கி[39]

எச்சம் பெறுதல் இன்பம்

இந் நிலவுலகில் வாழும் மக்களுக்கு மகப்பேறு பேரின்பம் நல்குவதாகும்.

> நிலமிசை உறைநர்க்கு
> எச்சம் பெறுதல் இன்பம்.[40]

சங்க காலத்தில் பாவலனும் காவலனுமாக விளங்கியவன் பாண்டியன் அறிவுடை நம்பி. அப் பாராளும் மன்னன் பிள்ளையின்மையால் மிடிபட்டு, மனம் இடிந்து, பின் பிள்ளை பெற்றுக் களிப்புற்றுப் பாடினனே எனச் சொல்லத் தக்க வகையில் பாடலொன்றைப் பாடியுள்ளான். ஒரு நாள், பத்துத் திங்கள் கடந்து, சிப்பி உடல் உடைத்த முத்துக் குழந்தை, 'தளர்பு தளர்பு' நடந்து வருகின்றது. சின்னஞ்

---

38. பெருங். 2 : 10 : 162 - 165
39. பெருங். 1 : 40 : 203
40. பெருங். 5 : 3 : 144 - 45

சிறு கைகளை அசைத்து அசைத்து, ஆடிவரும் தேனுகப் பாய்கிறது! குறுகக் குறுகத் தாமரைத் தண்டுக் காலை எடுத் தெடுத்து வைத்து நடந்து வருகின்றது. கோடி மலர்களும் குளிர் தருச் சோலைகளும் ஊட்ட முடியாத இன்பத்தை அந் நடையோவியக் குழந்தை விழிகளுக்கு ஊட்டியபடி அசைந்து வருகின்றது.

குழந்தைக்குத் தருவதற்காகத் தங்கக் கிண்ணத்திலே நெய்யிட்டுப் பிசைந்த சோறு இருக்கிறது. அச் சோற்றைக் குழந்தை தன் கரும்புக் கைகளால் கலக்குகின்றது; பருக்கைகள் தன் உடலெல்லாம் பட்டு ஒட்டிக் கொள்ளு மாறு கையை உதறுகிறது. வாய் புகுவதிலும் மெய்ம் மிசைப் படியும் சோற்றுப் பருக்கைகளே மிகுதியாகின்றன. பார்க்கும் கண்கள் அவ் வின்பச் சிறு செயல்களால் மயங்கிப் போகின்றன. இவ் வின்ப மயக்கத்தை, உற்ற அரசாட் சியோ, பெற்ற பெருஞ் செல்வமோ, படைத்த படைப்பு களோ, பலரோடுண்ணும் விருந்துச் சிறப்போ தரமுடியுமா என்று எண்ணிப் பார்க்கின்றது அக் காவலன் உள்ளம். இவையெல்லாம் படைத்திருந்த போதிலும் மயக்குறு மக் களை இல்லாவிட்டால் 'பயக்குறைதான்' என்று முடிவு காண்கிறது நெஞ்சம். எண்ணம் ஓர் அழகிய பாடலாகவும் வடிவெடுக்கிறது.[41] இனிய அடிசிலில் கையை அளைந்து எடுத்த உணவைப் பூநாறும் தன் செய்ய வாயிலே இடு கின்ற மக்களைப் பெறாதவர்களிடம் பொன்னும், புகழும் மற்றும் என்ன இருந்தாலும் பயனில்லை என்பார் புகழேந்தி.[42] இதைத்தான் பெருங்கதை, 'எச்சம் பெறுதல் இன்பம்' எனச் செறித்துக் கூறுகிறது.

---

41. புறம். 188

42. நளவெண்பா 234

ஆலின் விழுதாய் அமைக

ஒரு குடிக்கு ஆலின் விழுதாய் அமைந்து, காத்து, தொடர்ந்து அதனை வளர்த்துச் செல்பவர் அக்குடியில் தோன்றும் புதல்வரேயாவர்.

> மதலை மாண்குடி தொலைவழி ஊன்றும்
> புதல்வர்.[43]

உயர்ந்த பேச்சு

பேச்சு அமைய வேண்டிய முறையைக் கொங்குவேள் கூறும் முறை நெஞ்சை அள்ளுவதாய் உள்ளது. அன்பு கலந்து, அறிவொடு பொருந்தி, அருளோடு பின்னப் பட்டுப் பொருள் நிறைந்ததாக இருப்பதே உயர்ந்த பேச்சாகும்.

> அன்புகலந் தொழுகும் அறிவிற் பின்னி
> அருளுரை அளைஇப் பொருளுரை போற்றி.[44]

நீதி அன்று

மாதர்களிடத்தே உண்டாகும் மகிழ்ச்சியோடு காரியங்களைத் தெளிவது நீதியாகாது.

> மாதர் மாட்டு மகிழ்ச்சியொடு தெளிதல்
> நீதி யன்று.[45]

மாதரின் ஊடல் நீக்கி மகிழ்ச்சி காண விழைந்த நேரத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன் தெளியாதுரைத்தது நீதியாகாது போனது மட்டுமன்று; அநீதியாக விளைந்து பெரிய அல்லலையே உண்டாக்கியதைச் சிலம்பால் அறிகிறோம்.

---

43. பெருங். 5 : 6 : 129 – 30
44. பெருங். 5 : 5 : 19 – 20
45. பெருங். 3 : 14 : 34 – 35

தத்துவ விளக்கம்

ஒருவனுக்கு நன்மையாக வந்த ஒன்று மேலும் மேலும் நன்மையாகவே பெருகினுலும் பெருகும்; வரும்பொழுது நன்மையாக வந்த ஒன்று தீமையாக மாறி அவனுடைய முன்னைய நன்மையையும் சேர்த்து அழித்தாலும் அழிக்கும்; தீமையாக வந்த ஒன்று மேலும் மேலும் தீமையாகவே அவனைத் துன்புறுத்தினுலும் துன்புறுத்தும்; அல்லது தீமையாக வந்த ஒன்றே பின்னர் அவனுக்கு நன்மை தரும் பெரிய ஆக்கமாக மாறினுலும் மாறும். இந்த உண்மைகளை உலகில் நாம் வாழ்க்கை நடைமுறைகளாகக் கண்டு வருகிறோம்.

நன்ருய் வந்த ஒருபொருள் ஒருவற்கு
நன்றே யாகி நந்தினும் நந்தும்;
நன்ருய் வந்த ஒருபொருள் ஒருவற்கு
அன்ருய் மற்றஃ தழுங்கினும் அழுங்கும்;
தீதாய் வந்த ஒருபொருள் ஒருவற்குத்
தீதே யாகித் தீயினுந் தீயும்;
தீதாய் வந்த ஒருபொருள் ஒருவற்கு
ஆசில் பெரும்பொருள் ஆகினும் ஆம்.[46]

இவ் வடிகள் தத்துவ நீரைத் தேக்கி நிற்கும் பேரணை யாய் விளங்கிடக் காண்கிறோம்.

சகடக்கால் போல வரும்

மகத நாட்டுச் சோலையொன்றில் உதயணன் அந்த ணன் உருவில் நின்று கொண்டிருந்தான். அவ் வழியே அந் நாட்டு இளவரசி பதுமாபதி சிவிகையில் வந்தாள். வழியில் நின்ற மக்களை விலகிப் போகுமாறு காவலர் அதட்டி னர். அவ் வேளையில் உதயணன் தனக்குள் பேசிய பேச்சில் அரிய நீதியொன்று வெளிப்படுகிறது. ''நேற்று

46. பெருங். 2 : 1 : 58 - 65

எனக்குப் பிறர் வழி விலக்கிவிட யான் சென்றேன். அந் நிலைமை மாறி இன்றோ வழியில் நில்லாதே; அகன்று போ என்று நான் பிறரால் விலக்கப்பட்டேன். ஆதலின் ஆக்கமோ, கேடோ ஒருவர்பால் நிலைத்து நிற்பன அல்ல. அவை வண்டிக்கால்போல கீழும் மேலுமாய் மாறி வருவது தவறாததாம்'' என்று மனத்துள் எண்ணினான்.

நீங்கச் சென்றனென் நெருநல்; இன்றிவண்
நீக்கப் பட்டனென் ஆதலின் நிலையா
ஆக்கமும் கேடும் யாக்கை சார்வா
ஆழிக் காலில் கீழ்மேல் வருதல்
வாய்மை யாம்.[47]

ஆழிக் கால் கீழ்மேல் வருதலை நாலடியார், செல்வமானது யாரிடத்தும் நிலையாக நில்லாமல் மாறி மாறிச் சகடக்கால் போல வரும் என்று குறிப்பிடும்.[48] இக் கருத்தையே பேரா சிரியர் சுந்தரம் பிள்ளை தம் மனோன்மணீய நாடகத்தில்,

காலம் என்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழாக் கீழது மேலா
மாற்றிடும் தோற்றம்[49]

என்று குறிப்பிடுகின்றார்.

குப்பை கிளறும் கோழி

காலைப் பொழுதிலேயே நொய்யரிசியைப் போதிய அளவு வாயில் வலியப் போட்டாலும் கோழி குப்பை கிளறுதலை ஒழியாது. அதுபோல, பெருமை பொருந்திய நூற் பொருளை விரிவாகச் சொன்னாலும் கீழ் மகன் தன் மனம் விரும்பிய வழியிலேயே நடப்பான் என்று நாலடி கீழ்

47. பெருங். 3 : 6 : 32 - 36
48. நாலடி. 2
49. மனோன். அங். 1 : களம் 1 : 94 - 96

மக்களின் இயல்பைக் கூறுகிறது.[50] மக்கள் தம் இயற்கைக் குணத்திலிருந்து மாறுபடார் என்பதைக் குப்பையைக் கிளறும் கோழி கொண்டு கொங்குவேளும் விளக்குகின்றார். கோழியை வளர்ப்போர் அதன் தலையிலுள்ள சூட்டினை அழகுறத் திருத்தி, நல்ல நீரில் அதன் மயிரையும் இறகையும் அழுக்கில்லாமல் தூய்மையாகக் கழுவி, நறிய நெய்யைத் தடவி, தூய இடத்தில் வைத்து, நாள்தோறும் பாலும் சோறும் தூயவையாய் ஊட்டி வளர்த்தாலும், அக் கோழி தனக்கியல்பான குப்பை கிளறும் தொழிலை விடாது. அத்தகைய கோழியை ஒப்பாரும் மக்களில் இருக்கவே செய்கின்றனர்.

> சூட்டுமுகந் திருத்தி வேட்டுநறு நீரின்
> மயிரும் இறகும் செயிரறக் கழீஇக்
> கோனெய் பூசித் தூய்மையுள் நிறீஇப்
> பாலும் சோறும் வாலிதின் ஊட்டினும்
> குப்பை கிளைப்பறுஅக் கோழி போல்வர்
> மக்கள்.[51]

பண்பில் திரியார் பெரியோர்

அட்டாலும் பால் சுவையிற் குன்றாது; சுட்டாலும் சங்கு வெண்மை கெடாது; அதுபோலத் துன்பமுற்ற காலத்திலும் பெரியோர் தம் பண்பிலிருந்து மாறுபட மாட்டார். திருவள்ளுவரும், "ஈகைக் குணம் உள்ள குடியில் பிறந்தவர் செல்வம் சுருங்கிய காலத்தும் தம் ஈகைக் குணத்தினின்றும் மாறுபடார்"[52] என்று குறிப்பிடுகிறார். கொங்குவேளும் பெரியோர், சங்கும் பாலும்போல இன்னல் எய்தும் காலத்தும் மாறுபடுதல் இல்லாத நற்பண்புகளை உடையவர் என்று பாராட்டிப் பேசுகின்றார்.

---

50. நாலடி. 341
51. பெருங். 3 : 14 : 108 - 13
52. குறள் 955

சங்கினும் பாலினும் சலமில் வாய்மை
விழுத்திணைப் பிறந்த ஒழுக்குடை மரபினர்.[53]

பெரியோர் தாம் தொல்லைக்கு ஆளானாலும் பிறருக்கு நன்மையே புரிவர். குளிர்ந்த கதிர்களையுடைய நிலவு பாம்பின் வாயில் அகப்பட்டபோதும், பாம்பின் நஞ்சினால் தன் தண்மைத் தன்மையிலிருந்து மாறுபடுவதில்லை. சிறியோர் செய்த பிழைகள் பாம்பின் நஞ்சுபோல் நெஞ்சைச் சுட்டாலும் சான்றோர் மதியைப்போலத் தம் குளிர்ந்த தன்மையிலிருந்து மாறமாட்டார்.

அரவுவாய்க் கிடப்பினும் அலர்கதிர்த் தண்மதிக்
குருவுக்கதிர் வெப்ப மொன்று மில்லை;
சிறியோர் செய்த சிறுமையுண் டெனினும்
தரியாது விடாஅர் தாநனி பெரியோர்.[54]

சான்றோர் பிறர் பிழையைப் பொறுப்பரேயன்றி இகழ்ந்து வெகுளமாட்டார்.

சிறியோரிடம் குற்றங் காணின் பெரியோர் அதனைப் பெரிதாகப் பொருட்படுத்த மாட்டார். அறிவில்லாதவர்களே அதனைப் பெரிதுபடுத்தி ஆரவாரிப்பர்.

அறியார் போலச் சிறியோர் தேஎத்துக்
குறைகண் டருளுதல் கூடாது.[55]

பெரியோர் வாய்ச்சொல் பிழையா

பண்டை நாள் தொடங்கி இற்றை நாள் வரையில் அறிவுடையோர் கூறும் அறவுரைகள் உண்மையாதலேயன்றி ஒருநாளும் மாறுபடுவது இல்லை.

---

53. பெருங். 2 : 5 : 65 - 66
54. பெருங். 3 : 14 : 139 - 42 (நாலடி 148 ஒப்பு நோக்குக)
55. பெருங். 4 : 14 : 100 - 01

அன்றும் இன்றும் அறிவோர் உரைப்பதை
என்றும் திரியாது.[56]

இதனைப் "பெரியோர் வாய்ச்சொல் என்றும் பிறழா" என்று புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலொன்றின் அடிக் குறிப்புக் கூறும்.[57]

மூன்றிடம் பிழையா முனிவர்

உலகியல் நெறியிலிருந்து விலகி, மெய்ந் நெறிச் செல வினையுடைய துறவோர், இருவினை அழுக்கறுக்கும் ஒரே விருப்பத்தினையுடையவராக இருப்பர். பிறவற்றில் அவர்கள் ஏதும் கூறுதல் இல்லாத ஊமைகளை ஒப்பர். வினையறுக்கும் செய்திகளையன்றி வேறெதனையும் அவர் பேசார்.

நெறியில் தீர்ந்தவர்
வினைத்துகள் அறுக்கும் வேட்கை அல்லது
வேண்டுவ உரையா மூங்கைகள் ஆம்.[58]

நுண்ணிய தவ நெறியினையுடைய பண்ணவராகிய துறவோர், மனம் மொழி மெய் ஆகிய மூன்றினும் பிழை செய்தலிலாதவர் ஆவர்.

மூன்றிடம் பிழையா ஆன்ற நுண்ணெறிப்
பண்ணவர் முனிவர்.[59]

அன்புடையோர் நட்பு

ஒருவருடைய உறவினை விரும்புவர் அவர்க்கு உண்டான சோர்வினைத் தீர்த்துவிடுவாராயின், அச் செயலால் பயன் பெரிதும் பெருகும்.

---

56. பெருங். 4 : 5 : 123 - 24
57. பு. வெ. 166 அடிக்.
58. பெருங். 2 : 8 : 137 - 39.
59. பெருங். 2 : 8 : 134 - 35

முற்கிளை வேண்டுநர் மற்றவர்க் கியைந்த
அற்றம் தீர்க்கின்அது பிற்பயம் பெருகும்.[60]

அன்புள்ளம் கொண்டவர் நட்பு என்றும் அழியாதது.

ஆரா உள்ளம் உடையோர் கேண்மை
தீரா தம்ம தெளியுங் கால்.[61]

நட்பினைத் தேர்ந்துணரும் அறிவுடையோர்க்கு, அன்புள்ளம் படைத்த மேலோர் நட்பு என்றும் அழிவதில்லை.

ஆர்வ உள்ளம் உடையோர் கேண்மை
தீர்வதன் றம்ம தேர்ந்துணர் வோர்க்கே.[62]

இப் பேருலகில் அன்புடையோர் உற்ற இடையூற்றினை நீக்குதல் மிகவும் புகழுடையதொரு செயலாகும்.

அங்கண் ஞாலத்து அன்புடை யோரைப்
புன்கண் நீக்குதல் புகழுடைத்து.[63]

அன்பினால் ஒன்றுபட்டு ஒருமனம் உடையார்போலக் கலந்து உறவாடுபவர்க்குத் தெளிதற்கியலாத அருஞ்செயல் இல்லை என்பது ஆன்றோர் உரைத்த பெருமொழி.

ஒருமனத் தன்ன உற்றார்த் தேற்றா
அருவினை இல்லென அறிந்தோர் கூறிய
பெருமொழி மெய்.[64]

தாம் கேடுற்றபோதும் தம நண்பர்க்கு உதவி செய்யும் நலம் கெழுமிய உள்ளம் இருத்தல் வேண்டும். உதயணன் அத்தகைய உள்ளத்தை உடையவன் எனக் கொங்குவேள் பாராட்டுகின்றார்.

---

60. பெருங். 3 : 19 : 118 - 19
61. பெருங். 5 : 5 : 33 - 34
62. பெருங். 5 : 3 : 203 - 04
63. பெருங். 1 : 45 : 38 - 39
64. பெருங். 3 : 14 : 252 - 54

கெட்ட காலையுங் கேட்டோர் உவப்ப
நட்டோர்க் காற்றும் நன்ன ராளன்."

நண்பர் கடமை

ஒருவனுக்கு நண்பர் ஆயினோர் அவனுக்குச் சோர்வு வராமல் காத்தலில் அவனுடைய வீரம் போலவும், குற்றம் வராமல் காத்தலில் அவனுடைய தாய் தந்தையர் போலவும், ஒன்றுபட்டு நடத்தலில் அவனுடைய உயிரே போலவும், தவறு செய்யுங்கால் அவனைக் கண்டித்தலில் அவனுடைய பகைவர் போலவும் விளங்க வேண்டும். நண்பராய்ப் பழகுவோர் அந் நண்பரின் சோர்வை அகற்றி, குற்றம் நேராமல் காத்து, மனம் ஒன்றுபட்டு நடந்து, தவறு நேருங்கால் கண்டித்து நடக்கவேண்டும் என்பது இங்கே அருமையாகப் பேசப்படுகிறது.

அற்றங் காத்தலின் ஆண்மை போலவும்
குற்றங் காத்தலிற் குரவர் போலவும்
ஒன்றி ஒழுகலின் உயிரே போலவும்
நன்றி அன்றிக் கன்றியது கடிதற்குத்
தகவில செய்தலிற் பகைவர் போலவும்
இனையன பிறவும் இனியோர்க் கியன்ற
படுகடன்.[66]

பரத்தையர் உள்ளம்

ஆடல் பாடல் முதலிய கலைகளை யறிந்த பரத்தை மகளிர் உள்ளம் ஓரிடத்தில் நிலையுறுதல் இன்றிச் சுழலும். பரத்தை மகளிரின் சுழலும் மனம் ஆற்று வெள்ளத்தில் தோன்றும் நீர்ச் சுழியோடு ஒப்பிடப்படுகிறது. வெள்ளத்தில் ஓரிடத்தில் தோன்றும் நீர்ச் சுழி அங்கேயே நிலைத்து இருப்பதில்லை. இடம் மாறி மாறிச்

---

65. பெருங். 3 : 18 : 65 - 66
66. பெருங். 2 : 9 : 219 - 225

செல்லும். பரத்தை மகளிரின் மனமும் அத்தகையதே. ஒருவரிடம் நிலைத்து நிற்கும் தன்மையுடையது அன்று. நீர்ச் சுழி பார்வைக்கு மிக அழகாய் இருக்கும். ஆனால் அதனுள் பட்டாலோ மீள்வதற்கு இடமின்றி உள்ளே ஆழ்த்திச் சாகடிக்கும். பரத்தையரின் உள்ளத்தை உணராது மேலே தோன்றும் அவர் அழகையும் தேனினுமினிய பேச்சையும் கண்டு ஏமாந்து அவரைச் சேர்வோரின் முடிவு நீர்ச் சுழியில் பட்டவன் முடிவேயாம். நீர்ச் சுழிக்குப் பரத்தையரின் உள்ளம் மிகப் பொருத்தமான உவமை.

> கலையுணர் மகளிர் உள்ளம் போல
> நிலையின் றுழிதரு நெடுஞ்சுழி நீத்தம்.[67]

மலர் தாவும் வண்டு

அழகிய மனைவியிருக்க அயலே பரத்தையை நாடும் ஆடவர்களின் இயல்பு பெருங்கதையில் அழகுறப் பேசப்படுகிறது. வண்டு, நீர்நிலையில் விடியற்காலத்தில் மலர்ந்து நிற்கும் செழித்துள்ள தாமரையின் பசிய தாதினை நாள் தோறும் நுகரும். ஆயினும் வேட்கை அடங்காமல் புல்லிய நெய்தற் பூ மீதும் பாய்ந்து அதன் தேனையும் உண்ணும். தாமரையில் போதிய அளவு உண்டும், அயலிலுள்ள நெய்தற் பூவுக்குத் தாவும் வண்டினைப் போன்றவரே ஆடவர் என்று வாசவதத்தை உதயணனிடம் ஊடல் கொள்கிறாள்.

> முழுநீர்ப் பொய்கையுள் பொழுதொடு விரிந்த
> செழுமலர்த் தாமரைச் செவ்விப் பைந்தாது
> வைகல் ஊதா வந்தக் கடைத்தும்
> எவ்வம் தீராது நெய்தற் கவாவும்
> வண்டே யனையர் மைந்தர் என்பது
> பண்டே உரைத்த பழமொழி.[68]

---

67. பெருங். 1 : 40 : 184 - 85
68. பெருங். 2 : 16 : 32 - 36

வண்டு தேனுண்ட பூவைத் துறக்கும் செய்தியை இணைத்துப் பாடும் சங்க இலக்கியப் பாடல்கள் பல உண்டு. தலைவியைத் தலைவன் பிரிந்துறைகின்றான். அப்போது அவன் மலையைப் பார்க்கும் தலைவிக்கு அம் மலைச் சாரலில் தாதுண்ணும் வண்டு நினைவுக்கு வருகிறது. தன் மலையிலுள்ள வண்டனையவனே அவனும் என்ற பொருள்பட, "பெண்டிர் நலம் வௌவித் தண்சாரற் றாதுண்ணும் வண்டிற் றுறப்பான் மலை"[69] என்று பேசுகின்றாள். வண்டு தேனுண்ணும் வேட்கையில் பூவின் தரத்தைப் பார்ப்பதில்லை. அதுபோன்றே இன்பம் நுகர்தலையே கருத்தாய்க் கொண்டு தலைவியிருக்கப் பரத்தையை நாடுகின்ற தலைவனின் தன்மையை, "தாதுண் வேட்கையிற் போது தெரிந் தூதா வண்டோ ரன்னவன்"[70] என்று நற்றிணை குறிப்பிடும். தாமரையின் தாதினை ஊதி நெய்தலிற் தாவும் வண்டுபற்றிக் கொங்குவேள் கூறியதை அவ்வாறே எடுத்துப் புகழேந்தி,

> கன்னி நறுந்தேறல் மாந்திக் கமலத்தின்
> மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
> நெய்தற் கவாவும் நெடுநாட![71]

என்று நாட்டு வளம் பாடப் பயன்படுத்துகின்றார்.

வாழ்த்து

வாழ்த்துச் செய்திகளைக் கூறுவதில் கொங்குவேள் தனிச் சிறப்புக் காட்டுவார். அரசன் பெறுதற்குரிய பேறுகள் அனைத்திலும் சிறந்தது பெரியோர் நட்பு. அப்பேற்றினை அவன் குறைவறப் பெறுவானாயின் ஏனைப் பேறு அவனைத் தானே வந்தடையும். இதனைக் கருத்திற்

---

69. கலி. 40 : 23 - 25
70. நற். 25 : 9 - 10
71. நளவெண்பா 363

கொண்டு சான்ருேர் உதயணனை வாழ்த்துவதாக அவர் கூறியுள்ள செய்தி நல்லாட்சி செய்ய விழையும் ஒவ்வொரு வரும் அறிய வேண்டிய ஒன்று. ''அரசே! நின்னை யொத்த, என்றும் நீத்தல் இல்லாத அன்புடைய புலவர் பெருமக்களுடன் கூடி, தலைமைத் தன்மையுடையனுய், வெற்றி கொண்டு, செங்கோல் செலுத்துவாயாக'' என்பது சான்ருேர் வாழ்த்து.

நின்ஞேர் அன்ன நீப்பருங் காதல்
பொன்னணி புலவரொடு செம்மலை யாகிக்
கொற்றங் கொண்டு கோல்இனி தோச்சென
வெற்ற வெள்வேல் வீரியற் புகழ்ந்து[72].

என வாழ்த்துவதாகப் பாடல் அமைந்துள்ளது. நின்ஞே ரன்ன புலவர் என்று குறிப்பிடுவதன் மூலம் அரசனும் ஒரு புலவனுக இருந்தனன் என்பது தெளிவு.

மணப் பெண்டிரை வாழ்த்தும் முறையும் சிறப்பாக உள்ளது. சான்ருேர் வாசவதத்தையை வாழ்த்துகின்ற னர். ''பொற்ருெடீ! கொண்டான் குறிப்பறிந்து அவன் உன்னை எஞ்ஞான்றும் விரும்பும்படியாக நடந்து கொள்வா யாக. அறிவாலே நிறைந்து பிற மகளிரை அன்பாலே தழுவிக் கொள்க! மனைவிக்குரிய உரிமையில் உயர்ந்து திகழ்ந்து, கற்புடைமையாலே மேம்பட்டுச் சிறப்பாயாக!''

கொண்டோன் வேட்கும் குறிப்பினை யாகித்
தண்டாப் புலமொடு மகளிரைத் தழீஇத்
திருமனைக் கிழமையின் ஒருமீக் கூறிக்
கற்புமேம் படீஇயர் பொற்ருெடி பொலிந்து.[73]

கொண்டோன் வேட்கும் குறிப்புடையவளாகப் பெண்டிர் விளங்க வேண்டும் என்பதை இவ் வாழ்த்து நன்கு புலப் படுத்துகிறது.

---

72. பெருங். 2 : 5 : 71 – 74
73. பெருங். 2 : 5 : 91 – 94

படைத்தோன் குற்றம்

ஒருவர் ஒரு தொழிலில் சிறப்புற்றிருந்தும் அவருடைய பெயர் வெளியே தெரிவதில்லை. ஆனால் அவரினும் குறைந்த ஆற்றலுடையோர் கொடி கட்டிப் பறப்பதுண்டு. பெருங்கதையில் இக் கருத்து மிகச் சிறந்த எடுத்துக்காட்டின் மூலம் விளக்கப்படுகிறது. கொன்றைக் காய் பயனற்றது. பயற்றின் நெற்றோ பயன் மிக்கது. ஆயினும் பயனற்ற கொன்றைக் காயோ பயன் மிக்க பயற்று நெற்றினும் பெரியதாக உள்ளது. இனிமை நிரம்பிய கரும்பு அளவில் சிறியதாய் உள்ளது. ஆனால் உள்ளே குழல் கொண்ட வறிய மூங்கிலோ வானத்தை எட்டுமளவுக்கு உயர்ந்து வளர்கிறது.

> கொன்றையம் பசுங்காய் பெருக்கியும் பயற்றின்
> நன்றுவிளை நெற்றினைச் சிறுக்கியும் குன்று
> இன்றீங் கரும்பினைச் சுருக்கியும் விண்டலைத்
> துன்னரும் விசும்புற நீட்டிய நெறியும்
> இன்னவை பிறவும் இசைவில எல்லாம்
> படைத்தோன் படைத்த குற்றம்.[74]

பயனுக்கும் பெருமைக்கும் பொருத்தமற்ற படைப்புகள் பலவற்றை உலகில் காண்கிறோம். இப் பொருள்களும் இவைபோன்ற பிறவும் படைப்புக் கடவுள் செய்த குற்றம் என்று நமக்குக் குறிப்பாய் உணர்த்துகின்றன போலும்!

உறுப்பில் உறவு விளக்கம்

குடும்ப உறுப்பினர்களை உடல் உறுப்புகளோடு ஒப்ப வைத்துப் பேசும் திறம் பாராட்டத் தக்கதாயுள்ளது. சுற்றத்தார் ஒருவனுக்குக் கால்; மனைவி தோள்; மக்கள் பல்; நண்பர் கண்; பெற்றோர் தலைமுடி; பணியாளர் காலடி.

---

74. பெருங். 3 : 15 : 5 - 10

> **இன்னியல் மாந்தர் திண்ணியல் உறுப்பினுள்**
> **தாளே பெருங்கிளை; தோளே துணைவி;**
> **பல்லே மக்கள்; கண்ணே தோழர்;**
> **முடியே குரவர்; அடியே ஆளாம்.**[75]

இவ் வொப்புமைகள் அனுபவத்தின் பிழிவு. கால் இன்றேல் நடமாட்டம் இல்லை. ஓரிடத்திலேயே முடங்கிக்கிடக்க நேரிடும். சுற்றத்தார் இல்லாதவன் நிலையும் அவ்வாறே; பல்வேறு இடங்கட்கும் சென்றுவரக் காரணமாய் அமைவது சுற்றமே. எனவே சுற்றம் இல்லாதவன் காலில்லாதவன் போலாகின்றான். ஒருவனுக்குச் சிறந்த தோற்றத்தைத் தருவது தோளே. அதுபோன்றே வாழ்க்கையில் ஒருவன் தலை நிமிர்ந்து நடப்பது சிறந்த மனைவி அமைவதாலேயே. ஆதலின் மனைவியைத் தோளாக்கியது மிகவும் பொருத்தம். மக்களைப் பல்லாகக் கூறியிருப்பது எண்ணி எண்ணி வியத்தற்குரியது. பல் உறுதியாக இருக்கும் வரை தொல்லை எதுவுமில்லை. மக்கள் சரிவர அமைந்திருப்பவனுக்கும் துயரேதும் இல்லை. பல் அசையத் தொடங்கிவிட்டாலோ, சொல்ல முடியாத தொல்லை; அசையும் போதெல்லாம் வலி. அதுபோல மனம் வேறுபட்ட மைந்தர்கள் நேர்ப்படும் போதெல்லாம் தொல்லைகள். பல் உறுதியாயிருக்கும் வரை நாக்கு அதன் பக்கம் செல்வதில்லை. கொஞ்சம் அசைவு தெரிந்ததும், நாக்கு தானே வலியச் சென்று அதனை மோதி மோதி மேலும் அசைக்கும். அஃது அசையும் பல்லுக்கு இதம் செய்வது போலத் தோன்றும்; ஆனால் அப்போது பல்லையுடையவனுக்கு உண்டாகும் வேதனையோ சொல்லி முடியாது. மகன் தந்தை உறவு சரியாக இருந்த போது அமைதியாக இருந்த பகைவர்கள், மகன் வேறுபட்டதும், பல் அசைந்ததும் அதனை மேலும் அசைவிக்கும் நாக்கு போல, அவனை மேலும் மேலும் வேறுபடுத்தி விடுவர். அப்போதெல்லாம் தந்தைக்கு ஏற்படும் வேதனை

75. பெருங். 2 : 10 : 99 - 102

தாங்க முடியாததாக அமையும். அசைந்த பல்லைப் பிடுங்கி எறிந்து விடலாம்! ஒருபல் குறைந்தாலும் உணவை நன்ருக வெட்டி, கிழித்து, அரைத்து உண்ண முடியாது போய்விடுகிறது. அதுபோலவே வேறுபட்ட மகனை அப் புறப் படுத்திவிட்டால் தொல்லை இல்லை என்ருலும், முன் பிருந்த வலிமை குறைந்து விடுகிறது. ஒரு பல்லில் சொத்தை விழுந்தால் அது பரவிப் பிற பற்களையும் கெடுக் கும். அதுபோல் ஒரு புதல்வன் கெடுவாஞயின் அவன் பிற புதல்வர்களையும் கெடுத்துவிடுவான். மக்களைப் பல்லாகக் கூறிய பாங்கினை மேலும் மேலும் ஆய்ந்தால் இன்னும் நய மான கருத்துகள் தோன்றக் கூடும். இவ்வாறே தோழர், பெற்ருேர், பணியாட்களுக்குக் கூறியுள்ள பொருத்தங்களை யும் விரிவு செய்துகொள்ளலாம்.

ஆசிரியர்-மாணுக்கர்

மாணுக்கர் எவ்வளவு முரடராயினும் ஆசிரியரைக் கண்டதும் அஞ்சி ஒடுங்குவர். ஊருக்கு அடங்காதவரும் ஆசிரியர்க்கு அடங்குவர். இக் கருத்தை ஓர் அருமையான இடத்தில் பெருங்கதை ஆசிரியர் எடுத்தாள்கிருர். நளகிரி யானைக்கு யூகி வெறியூட்டிஞன். அது கட்டுத் தறியை முறித்து, சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடி ஊரை அழிக் கத் தொடங்கியது. நகரத்தார் யாவரும் நடுங்கினர். அரசன் பிரச்சோதனன், ‘‘நாவாய் கவிழ்த்த நாய்கன் போலக்’’ கலங்கி நின்ருன். உதயணனே யானையை அடக்க முடியும் என்று அமைச்சன் கூறியதும் அவனை அழைத்து வரச்செய்தான். அளவற்ற வெகுளியோடு உலா வித் திரிந்த நளகிரி முன் உதயணன் தன் யாழை எடுத்து மீட்டிஞன். யாழிசை கேட்ட யானை உடனே சினம் தணிந் தது. ஆசிரியனுக்குத் தொண்டு செய்யும் நன் மாணுக்கன் அடி பணிந்து ஏவல் கேட்பதுபோல யானையும் உதயண னின் அடி பணிந்து அவனிட்ட ஏவலைக் கேட்டதாம்!

ஆணை ஆசாற்கு அடியுறை செய்யும்
மாணி போல மதக்களிறு படிய[76]

என்று சொல்வதன் மூலம் ஆசிரியர் மாணக்கர் தொடர்பு இத்தகையதாயிருக்க வேண்டுமென்பதைக் கொங்குவேள் மிக நுணுக்கமாகப் புலப்படுத்துகிருர்.

பகையும் இனிது

இழிந்த மக்களோடு சேர்ந்து பெறும் இன்பம், உயர்ந்த மக்களோடு நேர்ந்த பகை ஆகிய இரண்டனுள் எது சிறந்தது, வேண்டற்பாலது? என்று கேட்டால் கொங்குவேள்,

இழிந்த மாக்களொ டின்பம் ஆர்தலின்
உயர்ந்த மாக்களொ டுறுபகை இனிது[77]

என்பார். உயர்ந்த மக்களோடுள்ள பகையினுல் விளையும் கேட்டைவிட இழிந்த மக்களோடு கொண்டுள்ள நட்பினுல் விளையும் கேடு மிகுதியாகும் என்பது கருத்து.

காமத்தின் இயல்பு

தீயில்பட்டு வாசவதத்தை மாண்டதாக எண்ணிய உதயணன் பலவாறு புலம்பினுன். அப்போது அமைச்சர்கள் காமத்தால் உளதாகும் கேட்டினை அவனுக்கு எடுத்துரைத்துத் தேற்றினர். ''அலையெறியும் கடலில் சூறைக் காற்று மோதிக் கப்பல் ஒன்று கவிழ்ந்தது. உயிர் தப்பியோர் உடை மரம் பற்றி, வழிதப்பிச் சென்று, உயிரினங்கள் வாழ்தல் இல்லாத ஒரு தீவினுட் புக்கனர். கடுமையான பசி அவர்களைக் காட்டுத் தீப்போல வருத்தியது. எதிரே காண்போர் கண்களைக் கவரத்தக்க அழகிய கனிகள் மரக் கிளைகள் தோறும் தொங்கின. அவர்கள் கனிகளின்

76. பெருங். 2 : 9 : 58 - 59
77. பெருங். 4 : 4 : 21 - 22

அழகிய தோற்றத்தைக் கண்டனரேயன்றி அவை நச்சுக் கனிகள் என்பதை அறியார். பசியால் வாடும் தம் துயரைத் தீர்க்கத் தேவர்கள் படைத்த அமிழ்தென்றே கருதினர். காட்சி இன்பமும் நறுமணமும் பொருந்திய அவற்றைப் பறித்து உண்டனர். உடனே அக் கனிகள் உண்டவர்களின் தசைகளைப் பிளந்து கொன்றொழித்தன. அதுபோலக் காமமும் முதலில் இன்பமாகக் காணப் படினும், அதன் இயல்பறியாது நுகர்ந்தவர் உடம்பினை அழித்துவிடும் இயல்புடையது. ஆதலாற்றான் பெரியோர் இக் காம நுகர்ச்சிப் பொருளை பெறக்கடவதாகிய பயன் என்று கருதுவது இலர்'' என்று நண்பர்கள் உதயணனிடம் கூறினர்.

காமத் தியற்கையுங் காணுங் காலை
இறுதியில் இன்பமொடு இனியது போல
உறுபயன் ஈனு உடம்புமுதல் தபுத்தலின்
பெறுபயன் இதுவெனப் பேணார் பெரியோர்.[78]

வாளை மீனின் நடுக்கம்

மருத நில வயல்களில் நீர்ப் பூங்கொடிகள் ஒன்றோ டொன்று பின்னிக் கிடந்தன. அவற்றினிடையே விளை யாடிய நண்டின் கூரிய நகம் அங்கிருந்த ஒரு கன்னி வாளை மீன் மீது பட்டுவிட்டது. பிறன் கை தன்மேல் பட்டுவிட் டதே என்று அந்தக் கன்னி மீன் உண்ணாது ஒடுங்கிக் கிடந்ததாம்.

அரில்அறல் அகவயின் ஆடுதல் ஆனு
வரியகட் டலவன் வள்ளுகிர் உற்றெனக்
கன்னி வாளை உண்ணு தொடுங்கும்
தண்பணை தழீஇய வண்பணை வளநாடு.[79]

---

78. பெருங். 2 : 20 : 20 - 23
79. பெருங். 1 : 58 : 99 - 102

ஆசிரியர் மருதவளம் பாடும்போதே கன்னியரின் நாணத்தையும் புலப்படுத்தி விடுகிருர்.

இராமாயணத்திலும் இப்படியொரு காட்சியைக் காணலாம். சூர்ப்பனகை முதன் முதலாக இராமனைக் கண்டாள். அவன் அழகிற்கு அடிமையாளுள். இராமன் புற்களினிடையே நின்ருன். சூர்ப்பனகைக்கு அவை புல்லாகப் படவில்லை. மண்மகள் கூச்சமுற்றதால் சிலிர்த்தெழுந்த மயிராகத் தென்பட்டது. நீரை ஆடையாக உடுத்த நிலம் ஒரு பெண். இராமனே அழகே உருவான ஆடவன். அவன் கால் தன்மீது பட்டதால் மண் மகளுக்கு நாணமேற்பட்டு உடலெங்கும் சிலிர்த்ததாம்; மண் மகளின் மயிர்ச் சிலிர்ப்பே அங்குத் தோன்றிய புல்லாம்!

உடுத்தநீர் ஆடையள் உருவச் செவ்வியள்
பிடித்தரு நடையினள் பெண்மைநன்று இவன்
அடித்தலம் தீண்டலின் அவனிக்(கு) அம்மயிர்
பொடித்தன போலும்இப் புல்என்று உன்னுவாள்.[80]

மெல்லிய ஈர்க்கினல் தொடும்போது உடல் சிலிர்த்து மயிர் எழுந்து நிற்பதைக் காணலாம். நில மங்கையைக் கொழுமுனை தொடுகிறது. அவள் நாணமுள்ள பெண்ணல்லவா? பிறர் கை பட்டதும் உடல் குழைகிருள்;மயிர் எழுந்து நிற்கிறது. அந்த மயிர்த் தொகுதியே பயிர் என்கிருர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

தூவியால் தம்முடல் நீவிடில் சிரிக்கும்
சிறுமியர் என்னஅச் செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனம் கூசி
உடல்குழைந் தெங்கும் உலப்பறு செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம் நகுவள்.[81]

கொழு முனையாகிய தூவியால் நிலத்தாயின் உடலை நீவிக் கொண்டே இருப்போம்; அதனல் அவளும் சிலிர்த்துக்

80. கம்ப இரா. சூர்ப்ப. 19
81. மனேன். அங். 2 : களம் 1 : 140 - 44

கொண்டே இருப்பாள்; நாமும் வளங் கொழிக்கும் பயிர்களைப் பெற்றுக்கொண்டே இருப்போம்.

கன்னி வாளையோ அலவனின் நகம்பட்டதும் கூசி உண்ணாது ஒடுங்கியது; மண்மகளின் கூச்சமோ உயிர்க்குலத்துக்கு உணவாகும் பயிரைத் தருகிறது.

நாட்டின் சிறப்பு

நாடு எவ்வாறு இருக்க வேண்டும் எனக் கொங்குவேள் விரும்புகிறார் என்பதை மகத நாட்டைப் பற்றியும் கோசலம் பற்றியும் அவர் கூறுவதிலிருந்து அறியலாம். "மகத நாடு பிறப்பறுதற்குக் காரணமான பெரியோர் பிறந்த பூமி; குறைதலில்லாப் பெருமையுடையது; மறப் பண்புடையது; பகைவரை இல்லாதது; வெற்றிப் புகழுடையது; வீரம் நிறைந்தது; நிலமகளுக்கிட்ட திலகம் போன்றது; பிற மன்னர்க்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கும் பெரு மன்னனின் ஆணைக்கடங்கியது; கொல்குறும்பில்லது; கரம்பு நிலமற்றது; செல்வப் பெருக்குடைய மக்களால் சிறப்புற்ற அழகுடையது; எங்கு தேடினும் ஏழை ஒருவனைக் காண முடியாதது; புலவர் பன்னிப் பன்னிப் புகழ்ந்தும் புகழ்ச்சி முற்றுப் பெறாதது; மகிழ்ச்சியில் மிக்கது."

பிறப்பற முயலும் பெரியோர் பிறந்தது;
சிறப்பிடை அறாதது; தேசிகம் உடையது;
மறப்பெருந் தகையது; மாற்றோர் இல்லது;
விறற்புகழ் உடையது; வீரியம் அமைந்தது;
உலகிற் கெல்லாம் திலகம் போல்வது;
அலகை வேந்தன் ஆணை கேட்பது;
அரம்பும் அல்லலும் கரம்பும் இல்லது;
செல்வப் பெருங்குடி சிறந்தணி பெற்றது;
நல்குர வாளரை நாடினும் இல்லது;
நன்பெரும் புலவர் பண்புளி பன்னிய
புகழ்ச்சி முற்றா மகிழ்ச்சியின் மலிந்தது;

இன்னவை பிறவும் எண்ணுவரம்பு இகந்த
மன்பெருஞ் சிறப்பின் மகதநன் ஞடு.[82]

கோசல நாட்டின் பெருமையைக் குறிப்பிடும்போதும் நாடு எவ்வாறு இருக்க வேண்டுமென்ற அவருடைய கருத்தைப் புலப்படுத்துகிருர். அந் நாடு, ''கடையாய மாந்தர் போன்று அவாவினுலே உழலாதது; சுற்றத்தார்க்குத் தம்பால் உள்ள செல்வத்தைப் பகிர்ந்தளிக்கும் இடையாய மாந்தர் போன்று தன்னிடம் தோன்றும் செல்வத்தைத் தன்பால் வரும் மக்கட்குப் பகிர்ந்தளிப்பது. தன்னை நாடி வருபவர் யாவரேயாயினும் இல்லையெனுது வழங்கும் தலையாய மாந்தர்போலத் தம்மை நாடிவரும் பிறர்க்கு உதவி செய்யும் இயல்புடையது.''

கடையோர் போலக் காமத்திற் கழுமாது
இடையோர் இயல்பின தாகி இல்லது
உடையோர்க்கு உரிய உதவி நாடி
ஆருச் சிறப்பின் யாவர்க் காயினும்
தானப் பெரும்பயந் தப்புத லின்றி
ஓசை யோடிய உலவாச் செல்வத்துக்
கோசல வளநாடு.[83]

பேராசையின்றி, உள்ளதைப் பகிர்ந்து, வருவோர்க்கு உதவி வாழும் அறத் தன்மை கொண்டதே நாடு என்பது இவ் வடிகளின் திரண்ட கருத்தாகும்.

ஆல வித்து

இறந்து விட்டாள் என்றெண்ணிய வாசவதத்தையை உதயணன் உயிரோடு கண்டான். அவளருகே சாங்கியத் தாயும் இருந்தாள். அந்த மூதாட்டி தனக்குச் செய்த நன்மைகளை எல்லாம் எண்ணி உள்ளம் உருகினுன். முன்

82. பெருங். 3 : 2 : 42 - 54
83. பெருங். 4 : 12 : 137 - 43

ஞெரு காலத்தில் யமுனை ஆற்றில் மணல் மூட்டையுடன் எறியப்பட இருந்த அவனைக் காப்பாற்றினான். அந்த உதவியை மனத்திற்கொண்டு சாங்கியத்தாய் தன் பொருட்டுச் செய்த நன்மைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து நன்றிப் பெருக்கோடு கூறினான்: ''பெரியீர்! நீங்களோ முதுமையடைந்தவர். தவ ஒழுக்கத்தை மேற்கொண்டவர். ஆயினும் பண்டொரு நாள் நான் செய்த சிறிய உதவியை எண்ணி இத் துன்பக் காலத்தில் எனக்குப் பெருந் துணையாய் அமைந்தீர்கள்! இன்பம் என்னைச் சேர்தற்கு இடையருது பாடுபட்டீர்கள்! நான் தங்கட்குச் செய்த மிகச் சிறிய உதவி, ஆல மரத்தின் விதையிலிருந்து பெரிய மரம் தோன்றிப் பெருகினாற்போல இன்று எனக்குப் பேருதவியாக வளர்ந்துள்ளது. எனக்குப் பேரின்பத்தை நல்கியுள்ளது. நீவிர் நீடூழி வாழ்க'' என்று பாராட்டி வாழ்த்தினான்.

துன்பக் காலத்துத் துணைஎமக் காகி
இன்பம் ஈதற்கு இயைந்துகை விடாது
பெருமுது தலைமையின் ஒருமீக் கூரிய
உயர்தவக் கிழமைநும் உடம்பின் ஆகிய
சிற்றுப காரம் வற்றல் செல்லாது
ஆல வித்திற் பெருகி ஞாலத்து
நன்றி ஈன்றது[84]

என்பது உதயணனின் நன்றிப் பெருக்குரை. தக்கவர்க்குச் செய்யும் உதவி சிறிதாயினும் பெரும் பயனைத் தரும் என்பதே இந் நன்றியுரையின் பொருள்.

'ஆலவித்திற் பெருகி' என்ற கொங்குவேளின் கருத்து வித்து, அதிவீரராம பாண்டியனின் நெஞ்சப் பரப்பில் பட்டு,

---

84. பெருங். 4 : 7 : 219 - 225

தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே[85]

என்று பெரு மரமாகப் பரவி வளர்ந்திருப்பதைப் பார்க்கிறோம்!

இத்தகைய செறிவுரைகள் பெருங்கதையில் இன்னும் பல உள்ளன. இங்கே எடுத்துக் கூறப்பட்டுள்ளவைகட்கு ஆலவித்து போன்ற சிறிய அளவு விளக்கமே தரப்பட்டுள்ளது. கற்பார் உள்ளத்தே இஃது ஆல மரமென வளர்ந்து, படர்ந்து, கருத்து நிழலை நிழற்றுவதாகுக!

85. வெற்றிவேற்கை : 17

4. நயவுரைகள்

கவிஞர்கள் செய்திகளை நயமாகச் சொல்லுவதில் வல்லவர்கள். அதனாலேயே, ''நயவுரைகள் தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவில்'' கலைமகள் குடியிருப்பதாகக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை குறிப்பிடுவார்.[1] பெருங்கதைப் பாடலாகிய திரையில் நயவுரைகளாகிய வண்ணக் கலவையால் கொங்குவேள் எண்ணப் பூக்களை எழிலுற வரைந்து காட்டியுள்ளார். முன் கட்டுரையில் சிந்தனைக்கு முதலிடம் தருகின்ற செறிவுரைகள் காட்டப்பட்டன. இங்கு மனமகிழ்வுக்கு முதலிடம் தரும் நயவுரைகள் காட்டப்பட உள்ளன.

வல்வாய் வயவன்

பெருங்கதையிலுள்ள மரங்கொத்திப் பறவையின் எழுத்தோவியம் எண்ணியெண்ணி இன்புறத் தக்கதாய் உள்ளது.

> **குடுமி நெற்றிக் கூருளி யன்ன**
> **வல்வாய் வயவன்.[2]**

நெற்றியில் கொண்டை; நீண்ட உளிபோன்ற வலிமையுடைய மூக்கு. 'கூருளியன்ன வல்வாய்'—இச் சொற்கள் அலகின் தோற்றத்தையும், கூர்மையையும், பயன்படு

---

1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை; மலரும் மாலையும் : 1
2. பெருங். 1 : 55 : 20 - 21

தன்மையையும் ஒருசேர விளக்கி நிற்கின்றன. 'பவளக் கூர்வாய் செங்கால் நாராய்' என்ற சத்திமுற்றப் புலவரின் பாடல் இங்கே நினைவுக்கு வருகிறது.

கொலையமை கூர்வாள்

இஃதேபோலக் கொல்லன் இயற்றிய கூர்வாளும் பேசப்படுகிறது. கற்களை வெட்டினாலும் கதுவாய் போகாதாம்; அதாவது முனை மழுங்காதாம்-வடுப்படாதாம். உறுதிக்கும் கூர்மைக்கும் இதைவிட வேறென்ன கூற முடியும்? கல்லை வெட்டும்போதும் மழுங்காத் தன்மை உடையதாதலால் போரில் எதிர்த்தவனின் எலும்பை இயல்பாக, எளிதாக வெட்டிவிட முடிகிறது.

> கற்படை போழினும் கதுவாய் போகா(து)
> எற்புடம்பு அறுக்கும் இயற்கைத்து ஆகிக்
> கொற்புனைந்து இயற்றிய கொலையமை கூர்வாள்![3]

கொல்லன் புனைந்தது; கொலையைக் குறித்தது; கூர்மையானது; எலும்பை அறுப்பதை இயல்பாகக் கொண்டது; கல்லைப் பிளந்தாலும் கதுவாய் போகாதது; இவ்வளவு சிறப்புடையதாக இருந்ததாம் யூகியின் வாள்.

உயர்வு நவிற்சி

வேங்கை மரம் உயரமாக வளர்ந்திருக்கிறது என்பதை அது விண்ணுலகு செல்வோர்க்கு ஏணியாக உள்ளது என்று நயமாகக் கூறப்படுகிறது.

> இமையோ ருலகிற்கு ஏணி யாகிய
> கான வேங்கை.[4]

காதலன் ஏங்கிவிடும் பெருமூச்சு வெப்பம் நிறைந்ததாய் இருக்கும் என்பதை, அம் மூச்சினால் அவன் அணிந்திருந்த மாலை கருகியது என்பார்.

---

3. பெருங். 1 : 46 : 87 - 89
4. பெருங். 4 : 3 : 68 - 69

தாமம் வாட்டுங் காம உயிர்ப்பினன்.[5]

இந்தப் பெருமூச்சு, வேல் தைத்து உள்ளே முறியப்பெற்ற யானை விடும் நீண்ட மூச்சனையதாயும் இருக்கும்.

எஃகொழி களிற்றின் வெய்துயிர்த்து உயங்கி.[6]

காதல் நெஞ்சத்தின் வேதனையையும், உள்ளக் குமைவையும், வெய்துயிர்ப்பையும் இந்த அடிகளில் காண்கிறோம்.

அரிய செயலாயினும் அரசன் கட்டளையிட்டால் அதனை உடனே செய்து முடிக்கும் ஆற்றலுடைய படை வீரர்களை,

முன்னீ ராயினும் முகந்துடன் புகுவோர்[7]

என்பார். கடல் நீர் முழுவதும் வேண்டுமென்றாலும் உடனே ஒருங்கே முகந்துவரும் ஆற்றலுடையவர்களாம் அந்த வீரர்கள்.

வென்றோரையும் வெல்லும் விழா

கௌசாம்பியில் சிறப்பான விழா ஒன்று நடந்தது. அந்த விழாவைக் காண அனைவரும் விரும்புவர் என்பதைக் கொங்குவேள் ஈரடிகளில் எழிலுறக் கூறுகிறார். ஐம் பொறிகளையும் தத்தம் புலன்களின்பால் செல்லாது ஒடுக்கி அவற்றை வென்ற துறவியரும், அந்த விழாவைக் காண விழைவார்களாம்!

பொன்றா வேட்கைப் புலங்களை நெருக்கி
வென்றோ ராயினும் விழையும் விழவணி.[8]

வென்றோரையும் வென்று விடுகிறது விழா!

---

5. பெருங். 4 : 7 : 27
6. பெருங். 1 : 33 : 109
7. பெருங். 3 : 24 : 76
8. பெருங். 5 : 9 : 8-9

நிலவளம்

மழைவளம் குன்றிய காலத்திலும் அவந்தி நாட்டுக் கழனிகளும் தோட்டங்களும் நிலவளம் குன்றாதவை என்பதை,

> புயல்சேண் நீங்கினும் பூவளம் குன்றா
> வயலும் தோட்டமும்[9]

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. பூவளம் என்பதை (பூ+வளம்), நிலவளம் என்றும் பூக்களின் வளம் என்றும் இருவகையாகப் பொருள் கொள்ள இடந்தந்துள்ளார்.

சிறுவர் ஆணை

நீராட்டு விழாவிற்காக அரசனும், சுற்றத்தாரும், படைகளும் புறப்பட்டனர். வீதியில் சிறுவர்கள் விளையாடியிருந்தனர். மருங்கிலே நின்றிருந்தோர் சிறுவர்களிடம், ''அரசனுடைய பெரும்படை வருகின்றது. அவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கி நில்லுங்கள்'' என்றனர். சிறுவர்களோ, ''யாராயிருந்தால் எமக்கென்ன? அரசனுடைய கட்டளை எங்களை என்ன செய்துவிட முடியும்? விழா முடியும் வரை நாங்கள் இட்டதுதான் சட்டம்'' என்று அசதியாடி ஆரவாரித்தனர்.

> இறைவன் ஆணை ஈங்கெவன் செய்யும்
> புதல்வர் ஆணை புதுநீ ராட்டெனச்
> சிறாஅர் மொய்த்த அறாஅ விருப்பிற்
> கம்பலைத் தெரு.[10]

இந்த அடிகள் சிறுவர்களின் எக்களிப்பை, பயமறியாத் தன்மையை, பிள்ளைமை விளையாட்டை நன்கு புலப்படுத்துகின்றன.

---

9. பெருங். 1 : 39 : 62 - 63
10. பெருங். 1 : 38 : 22 - 25

யானையின் பெருமிதம்

பிரச்சோதன மன்னன் ஏறிச் சென்ற யானை பெருமிதம் வாய்ந்தது. மதநீர் ஒழுகுகின்ற கவுளை உடையதாய் மிக்க வெறி கொண்டிருந்தாலும், பகைவரை நடுங்கச் செய்வதன்றி ஏனை உயிர்களை வருத்தாதாம்.

> **இருநிலம் நனைப்ப இழிதரு கடாத்துக்**
> **கைம்மிகக் களித்த கவுள தாயினும்**
> **செயிர்கொள் மன்னர் செருவிடத் தல்லது**
> **உயிர்நடுக் குருஅ வேழம்.**[11]

வெறி கொண்ட நேரத்திலும் நெறிபிறழாத பெருமிதம் இங்கே சுட்டப்படுகிறது. வெறி கொண்ட நேரத்தில் நெறி பிறழ்வது இயற்கை. அந்த நேரத்திலும் பிறழாதுள்ள தன்மையை யானையின் மேலேற்றிப் பாடியுள்ளது இலக்கியச் சுவை கூட்டுவதாய் உள்ளது.

நரை மூதாட்டியர்

செய்திகளை இடத்திற்கேற்ற பாங்கோடு கூறுவதில் கொங்குவேள் வல்லவர். வயது முதிர்ந்த நரை மூதாட்டியரின் தோற்றத்தை நம்முன் படம் பிடித்துக்காட்டுகின்றார். இளமையில் குன்றுபோல் குவி முலையினராய் இருந்தவர், குழந்தை பிறந்ததும் முகம் சாய்ந்த முலையினராக மாறுகின்றனர். வயது முதிர்ந்து, நரைத்து, கிழமாக மாறும் போதோ கொங்கைகள் பைபோலத் தொங்கிவிடுகின்றன. காலடிகளைப் பெயர்த்து வைக்கமுடியாத அளவுக்குத் தளர்ச்சி தோன்றுகிறது. உடலெங்கும் நடுக்கம் ஏற்படுகிறது. பார்வை மங்கிப் போகிறது. காணும் பொருள் என்ன என்பதை அருகிலுள்ளவர் சொன்னாலொழிய அவர்களாகவே அறிய முடியாது. ஆதலால் அவர்கட்குக் கண்

---

11. பெருங். 1 : 38 : 118 - 21

பிறரே. கோலின்றி அடியெடுத்து வைக்க முடியாது. இத்தத் தோற்றத்தை,

> பைசொரிந் தன்ன பாலில் தோல்முலை
> நரைமூ தாட்டியர் நடுக்கம் எய்திக்
> காலிடு தளர்ச்சியர் கண்பிற ராகக்
> கோலொடு தளர்ந்து,[12]

என்று ஓவியமாக்கிக் காட்டுகிறார்.

செல்லா வாழ்க்கையர்

காட்டில் வாழும் வேடர்கள் வழிச் செல்வோரைக் கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டவர். எதிர்ப் படுபவர்களைக் கொன்று அவர்களிடம் இருக்கும் பொன்னை யும் பொருளையும் கொள்ளை கொள்பவர். ஆயினும் அப் பொருள்களின் பெருமையை அறியமாட்டார். பெரும் மதிப் புடைய பொருள்களை அருமை அறியாது சிறிய விலைக்கு விற்பர். அதனால் அவர்கள் வறுமையாளர்களாகவே இருப்பர். பெரும்பயன் நல்க வேண்டிய பொருள்களைச் சிறுவிலைக்கு விற்கும் அவர்களுடைய பேதைமைப் பண்பை,

> பல்விலைப் பண்டம் கவர்ந்துபயன் அறியார்
> சில்விலைக் கிடூஉம் செல்லா வாழ்க்கையர்[13]

என்ற அடிகள் விளக்குகின்றன.

வேண்டேன் விண்ணுலகு

கள் குடியன் ஒருவன் கரிய சட்டையை அணிந்திருக் கிறான். அதுவும் நழுவி நழுவிக் கீழே சரிகிறது. கண்கள் செருகுகின்றன. கள் மயக்கத்தில் உளறுகின்றான்.

---

12. பெருங். 1 : 43 : 156 - 59
13. பெருங். 1 : 55 : 48 -'49

"வாழ்க! வாழ்க! எம் உஞ்சை நகரம் வாழ்க! கள் குடிப்போரெல்லாம் சுற்றம் பெருக வாழ்க! கள் விற்கும் மகளிர் கள்ளைத் துழாவுதலாலுண்டாகும் ஓசை, கள் வடிப்பதற்காக மரப்பட்டை முதலியவற்றை இடிக்கும்போது பாடுகின்ற உலக்கைப் பாட்டு, கள்ளுண்டு மகிழ்ந்தோர் பேசும் குழலினும் யாழினும் இனிய மழலைச் சொல்லொலி, இவைகள் இடையறாது முழங்குதற்கிடமான இந்தப் பட்டினத்தைவிட்டு மேலுலகமே கிடைப்பதாயினும் எனக்கு வேண்டாம்" என்று பாடிக்கொண்டே தள்ளாடி நடக்கிறான்.

சுழலுங் கண்ணினன் சோர்தரு மாலையன்
அழல்நறுந் தேறல் ஆர மாந்திக்
காழகம் மீக்கொண் டாழுந் தானையன்
வாழ்க வாழ்கஎம் மதில்உஞ் சேனை
மட்டுண் மகளிர் சுற்றமொடு பொலிகஎனத்
துட்டக் கிளவி பெட்டவை பயிற்றிக்
கட்பகர் மகடூஉக் கட்குடை ஓசையும்
கன்னமர் பள்ளிக் கம்மியர் இடிக்கும்
பன்மலர்க் காவின் அம்மனை வள்ளையும்
குழலும் யாழும் மழலை முழவமும்
முட்டின் றியம்பும் பட்டினம் ஓரீஇத்
துறக்கம் கூடினும் துறந்திவண் நீங்கும்
பிறப்போ வேண்டேன் யான்.[14]

குடியனின் கொள்கை முழக்கம் இது. புலவன் ஒருவன்,

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்[15]

என்றான். தமிழ்ச் சுவை கிடைக்காது; ஆதலின் விண்ணுலகம் வேண்டாம் என்றான் புலவன். களிமகனோ கள்

---

14. பெருங். 1 : 40 : 77 - 89
15. தமிழ் விடுதூது. 155

சுவை கிடைக்காது; ஆகவே விண்ணுலகில் எனக்கு ஏது இன்பம்? எனக் கேட்கிருன். நியாயந்தானே!

மனமெனும் மதயானை

பிரச்சோதனன் முன்னிலையில் முதன் முதலாக உதயணனும் வாசவதத்தையும் ஒருவரையொருவர் கண்ட போது, அவர்கள் பார்வை கலந்த நிலை மிகவும் நுணுக்க மாகக் கூறப்பட்டுள்ளது. அதுவரை மதம் படாது, அப் பொழுதுதான் மதம் பட்டனவும், ஒன்றுக்கொன்று வலிமை, பிறப்பு, வயது முதலியவற்ருல் ஒத்தனவுமாகிய பிடியும் களிறும் ஒன்றையொன்று நோக்கி நின்றதுபோல் உதயணனும் வாசவதத்தையும் ஒருவரையொருவர் நோக்கி நின்றனர். மதங் கொண்ட யானைகளைச் செல்லற் கரிய சிறிய தெருவில் விட்டபோதும் செருக்குற்று, பாகர் கட்டுப்பாட்டிலும் அடங்காது, தம் மனம் போனவாறு மண்டிச் சென்ருங்கு அவர்கள் பார்வையும் ஒன்ருே டொன்று ஊடுருவிக் கலந்தன.

வண்டுபடு கடாஅத்த வலிமுறை ஒப்பன
பண்டுகடம் படாஅ பறையினும் கனல்வன
விடற்கருந் தெருவினுள் விட்ட செவ்வியுள்
துடக்குவரை நில்லாது தோட்டி நிமிர்ந்து
மதக்களி றிரண்டுடன் மண்டி யாஅங்கு,[16]

காதற் பெருக்கினுல் இருவர் கண்களும் கலந்தன. பாகர் துடக்குறுத்தும் தோட்டியாற் குத்தியும் களிறுகள் அவர் வரை நில்லாமே மண்டினுற் போன்று இருவரும் அரசன் முன்னிலையில் இருப்பது கருதித் தத்தம் மனத்தை நிறுத்த முயன்றும் அவை நில்லாமே சென்றன.

சீதை இராமனைக் கண்டதும் தன் நிறையால் மனத் தைக் காக்க முயன்றும் முடியாதாயிற்று. மனமாகிய மத

16. பெருங். 1 : 32 : 34 - 38

யானையை அடக்குகின்ற நிறை என்னும் அங்குசம் அங்குப் பயனற்றதாயிற்று என்பார் கம்பர்.[17]

தலைவன் ஒருவன் தலைவியைக் கண்ட தன் மனம் மதம் பெற்ற யானையாயிற்று என்று சொல்வதைக் கலித்தொகையிலும் காண்கிறோம். அத் தலைவன், ''அழகிய மருப்பினையுடைய வேழம், மிகுந்த மதத்தால், தான் செய்யும் தொழில்களைத் தவிர்த்து, பாகனுடைய அங்குசத்திற்கும் கட்டுப்படாது செல்வதுபோல, என் அறிவும் அவள் மேற் சென்ற வேட்கையினால் எனக்குக் கட்டுப்படாது சென்றது'' என்று குறிப்பிடுகின்றான்.[18] ''இளமைப் பருவம் என்ற களிற்றியானையானது, கல்வி என்ற பாகனுக்கு அடங்காமல், நல்ல நெற்றியையுடைய மகளிரது மடப்பம் பொருந்திய காம நோக்கம் காரணமாக, மதமாகிய வழி நன்கு திறக்கப்பட்டு, எல்லை கடந்த காமம் பொருந்திய நெஞ்சத்தோடே, நெறியல்லாத நெறியில் இயங்குதல் இயல்பு.

மடங்கெழு நோக்கின் மதமுகந் திறப்புண்டு
இடங்கழி நெஞ்சத்து இளமை யானை
கல்விப் பாகன் கையகப் படாஅது
ஒல்கா உள்ளத் தோடும்[19]

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடும்.

நேர்ந்தும் நேராள்

மன இயல்புகளை வெளிப்படுத்தும் இடங்களிலும் கொங்குவேள் பெரு நயம் காட்டுவார். நீராட்டு விழாவின் போது நகரில் நெருப்புத் தோன்றியது. மக்கள் பாதுகாப்

17. மனமெனும் மத்த யானையின்
நிறையெனும் அங்குசம் நிமிர்ந்து போயதே
—கம்ப. மிதிலைக். 40 : 3-4

18. கலித். 138 : 1 : 4

19. சிலப். 23 : 36-39

புக்காக அலறியடித்துக் கொண்டு ஓடினர். வாசவதத்தை இருந்த இடம் சென்று அவளைக் காக்குமாறு உதயண னுக்குப் பிரச்சோதனன் செய்தி அனுப்பினான். உதயணன் வாசவதத்தை இடம் சேர்ந்தான். காவலர் வாசவதத்தை யைக் காக்குமாறு உதயணனை வேண்டினர்; வாசவதத் தையையும் யானை மீது ஏறுமாறு கூறினர். யானைமீது ஏறி, உதயணனோடு ஒன்றாக அமர்ந்து செல்வதில் எல்லை யற்ற ஆர்வம் கொண்டது அவள் மனம். ஆயினும் அதனை வெளியே பிறர் அறியாதபடி உள்ளத்தே மறைத்தாள்; மலர் மாலையணிந்த, கொத்தான கருங்குழல் சுருளிட்டுக் கிடக்கின்ற தன் கழுத்தைச் சாய்த்து, கால் விரலாலே நிலத்தைக் கீறியவளாய் நின்றாள். உதயணனை நினைத்து உருகும் நெஞ்சினளாய் அவனுடைய பேரெழிலாகிய அமிழ் தத்தை வாரிப் பருக நெஞ்சிலே பெருவிருப்பம்; ஆனால் வாயோ உடன்பாட்டைக் கூறாது மௌனமாயிற்று.

நெஞ்சு நேர்ந்தும் வாய்நேர்ந் துரையா
அஞ்சில் ஓதி[20]

என்ற அடிகள் காதல் உள்ளம்கொண்ட நங்கையின் மனத் தில் எல்லை மீறிய விருப்பமிருந்தாலும் அதை வெளிப்பட எடுத்துச் சொல்ல முடியாத நிலையை நன்கு விளக்கு கின்றன.

நுண்மைப் போர்வை

கட்டிலில் உதயணன் அருகே வாசவதத்தை வீற்றிருந்தாள். அவள் மெல்லிய மேலாடை அணிந் திருந்தாள். மெய்யொளியை அவள் மேலாடை மிகுத் துக் காட்டியது. ஆடை அவள் அழகை மறைக்காது வெளிப்படுத்திக் காட்டியதற்கு அழகான காரணம் கற்பிக் கப்படுகிறது. ''உதயணன் பெரு மன்னன். அவன் செய்ய முனையும் காரியத்தைத் தடுப்போர் எவராயினும் உய்தல்

20. பெருங். 1 : 44 : 147 - 48

அரிது. அவனே வாசவதத்தையின் அழகை நுகரக் காத்திருக்கிறான். அழகை மறைக்கும் உடையாக-தடையாக நாம் இருந்தால் அவனது சீற்றத்துக்கு ஆளாகித் தொல்லையுற நேரிடும். ஆதலால் நாம் தடையாக இல்லாமல் தத்தையின் பெண்மை அழகினை வெளிப்படுத்திக் காட்டிவிடுவோம்'' என்றெண்ணியதாம் அந்த மேலாடை. அணிந்திருந்த போர்வை மென்மையானது என்பதை இவ்வளவு நயமாகக் குறிப்பிடுகிறார்.

> உண்மை உணரா நுண்மைப் போர்வையிவள்
> பெண்மை காணினே பிழைப்பிலென் யானெனத்
> தன்னொளி சமழ்த்திவள் பெண்ணொளி புகற்ற.[21]

'உண்மை உணரா நுண்மைப் போர்வை' என்பது உள்ளதா இல்லையா என்று உணரப்பட முடியாத நுண்மையினையுடைய மேலாடை என்பதைக் குறிக்கிறது. ஆடை தன் ஒளியைச் சுருக்கிக்கொண்டு வாசவதத்தையின் பெண்மை ஒளியை வெளிப்படுத்திக் காட்டியதாம்.

வலியழிதல்

காதலால் உள்ளம் அழிதலைப் புலவர்கள் திறமுறப் பேசுவர். பதுமாபதியை உதயணன் காதலித்தான். அவனுடைய தோழர்கள் பதுமாபதியின்பால் அவன் கொண்ட காமத்தைக் கைவிடுதலே நல்லதென்று கூறினர். ஆராய்ச்சித் திறம் மிக்க அவ்வமைச்சர்களிடம் உதயணன், ''அன்புடையீர்! அவள் என் ஆருயிர் ஒத்தவள். அன்பு என்ற வாரைச் சுற்றி, தன் அழகு என்ற மத்தினால், என் பேராற்றலாகிய தயிரை இடையறாது கடைகின்றாள். நான் உடைபடாது எவ்வாறு இருக்க முடியும்?'' என்று கேட்டான்.

---

21. பெருங். 2 : 3 : 153 - 55

ஆருயி ரன்னவென் அற்புவார் கொளீஇக்
காரிகை மத்தினென் கடுவலி கடையும்
வார்வளைத் தோளி.[22]

ஆணின் வலிமை தயிர்; பெண்ணின் அழகு மத்து; அவளுடைய அன்பு அம் மத்தில் சுற்றப்பட்டுள்ள கயிறு. கெட்டியான தயிராக இருந்தாலும் மத்தால் கலக்குறும் போது உடைபடாதிருக்க முடியுமா?

நனி நாகரிகம்

"கயல் போன்று துள்ளுகின்ற தன் பெரிய கண்களால் என்னைப் பெரிதும் விரும்பிப் பார்த்து, யான் அவளை நோக்குங்கால் தான் நோக்காமல், நாணத்தோடு முகங் கவிழ்ந்து நிற்கும் அந்த நனி நாகரிகக் காட்சியை என் கண்ணுற் காணுதுபோயின் என் உயிர் பெரிதும் கலங்கும். ஆதலால் அவளைத் தவருது காணவேண்டும்" எனப் பதுமாபதியைத் தான் கண்டாக வேண்டும் என நண்பர்களிடம் உதயணன் கூறினுன்.

ஓடுகய லன்ன
பெருங்கண் கோட்டி விரும்புவனள் நோக்கி
நாணெடு நிற்கும் நனிநா கரிகம்.[23]

பெண் காதலனைக் கண்டு நாணி நிலம் நோக்கி நிற்பது நனி நாகரிகக் காட்சியாகிறது.

விண்நோக்கிய வீரன்

நிகழ்ச்சிகளை அழகுபடுத்திச் சுவைபடச் சொல்வதிலும் கொங்குவேள் இணையற்று விளங்குகிருர். போர்க்களத்தில் எதிரியின் வாள் பிடியோடு நெஞ்சில் பாய்ந்ததால் வீரர்கள் அண்ணுந்து விழுந்து வானத்தைப்

22. பெருங். 3 : 10 : 21 - 23
23. பெருங். 3 : 10 : 24 - 26

பார்த்தவராய் மாண்டு கிடக்கின்றனர். அக் காட்சியை, அவர்கள் நெஞ்சிலே புண்ணிருப்பதால் நிலமகளைப் புண்ணோடு பொருத்த உடன்படவில்லை; ஆதலின் அண்ணாந்து கிடந்தனர் என்பதாக விவரிக்கிருர்.

நிலத்தொடு நேரா நெஞ்சினர் போலப்
புலக்கமழ் புண்ணர் விண்ணிடை நோக்கி[24]

மடிந்து கிடந்தனர்.

இசை அரங்கு

வாசவதத்தையின் யாழ்ப் பயிற்சி முடிவுற்றதும் அரங்கேற்றம் நடைபெற்றது. யாழை மீட்டி இசையெழுப்பி அனைவரையும் வியக்கச் செய்த அவள், மிடற்றுப்பாடலின் சிறப்பை வெளிப்படுத்தத் தொடங்கினாள். செந்தாமரை போன்ற முகம். பற்கள் வெளியே தோன்ருதவாறு மிடற்றிலிருந்து ஒலி எழுந்தது. முகம் மட்டும் தெரிய, ஒலிமட்டும் வெளிவந்த காட்சி, அழகிய தாமரைக்குள்ளிருந்து வண்டு முரன்ருற் போன்றிருந்ததாம்.

எரிமலர்ச் செவ்வாய் எயிறுவெளிப் படாஅமைத்
திருமலர்த் தாமரைத் தேன்முரன் றதுபோல்
பிறந்துழி அறியாப் பெற்றித் தாகிச்
சிறந்தியம் பின்குரல் தெளிந்தவண் எழுவ.[25]

தாமரையில் வண்டு இருப்பது தோன்றவில்லை. ஆனல் ஒலி மட்டும் வெளிப்படுகிறது. அதுபோன்றே அச்சடித்த பதுமை போல அழகிய செந்தாமரை முகம் மட்டும் காட்சியளிக்க, உள்ளே மிடற்றிலிருந்து வெளிப்படும் ஒலி மட்டும் கேட்கிறது.

---

24. பெருங். 1 : 46 : 32 - 33
25. பெருங். 1 : 37 : 119 - 22

காந்தருவதத்தை யாழிசைத்துப் பாடுதலைச் சீவக சிந்தாமணியும் இவ்வாறே புலப்படுத்துவதைக் காணலாம். கரிய நீண்ட புருவங்கள் நெற்றியில் சுளிக்காது, மீன் போன்ற பெரிய கண்கள் துள்ளி அசையாது, பேரெழில் கொண்ட தொண்டையும் விம்மாது, முத்தொத்த பற்கள் வெளியே தோன்றாது, பவளம் போன்ற தன் வாய் திறந்து இவள் பாடினாளா அல்லது யாழ்தான் நரம்புகளோடு இனிய நாவொன்றைப் பெற்றுப் பாடியதோ என்று அங்கிருந்தோர் மயங்கும்படியாக அவள் பாடினாள்.

கருங்கொடிப் புருவம் ஏறா; கயல்நெடுங் கண்ணும் ஆடா;
அருங்கடி மிடறும் விம்மாது; அணிமணி எயிறும் தோன்றா;
இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடி னாளோ,
நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ என்று நைந்தார்.[26]

இதுவே மேடைகளில் பாடவேண்டிய முறை. இன்றைய 'கச்சேரிகளோடு' இதை ஒப்பிட்டுப் பார்த்தால் வேறுபாடு நன்கு விளங்கும்.

நகுமொழி

பதுமாபதியின் பார்ப்பனத் தோழி யாப்பியாயினிக்குத் திருமணம் முடிந்தது. மணக் கோலத்தோடு அவள் பதுமா பதியின் எதிரே வந்து நாணத்தோடு நின்றாள். பதுமாபதி ஆர்வத்துடன் அவளெதிரே சென்று, "ஏடி! அணிகலன் அணிந்த நின்னுடைய இளைய அழகிய முலைகள் நின் கணவனால் தழுவப்பட்டிருக்குமாதலால் யான் அவற்றைத் தழுவமாட்டேன்" என்று நகைமொழி சொன்னாள்.

நாணிநின் றோளைநின் பூணிள வனமுலை
புல்லினது உண்மையிற் புல்லேன் யானென

26. சீவக. 658

மெல்லியன் மாதர் நகுமொழி பயிற்ற
நினக்கும் ஒக்கும்;அஃ தெனக்கே அன்று.[27]

நகைமொழி கேட்ட தோழி, ''கோமகளே! அப் பழி மொழி எனக்கு மட்டும் உரியதன்று; உனக்கும் ஒக்குமே'' என்று மறுமொழி கூறினாள். இங்கே யாப்பியாயினி, பதுமாபதி மாணகனிடம் காதல் கொண்டு அவனோடு மறைவிடத்தே மகிழ்ந்து உறைந்து வருவதை வெகு நய மாகச் சுட்டிக் காட்டி விடுகிறாள். பருவமுற்ற நங்கையர் ஒருவர்க்கொருவர் நனி நாகரிகத்துடன் நகை மொழி பேசிக்கொள்வதை இக் காட்சி வெளிப்படுத்துகிறது.

வேட்கை மரம்

உதயணன் தன் தேவியர் நால்வருடன் இன்பம் நுகர்ந்து நல்லாட்சி செய்து வந்தமை ஒரு மரமாக உருவகம் செய்யப்படுகிறது. ஒருவர்க்கொருவர் உண்டாய காதல் வேட்கை ஒரு மரம் என்றால் ஒருவரையொருவர் காதல் கனியக் காணுகின்ற காட்சி அடி மரமாகும். சிறந்த பண்புகள் அம் மரத்தில் படர்ந்துள்ள கிளைகள்; அம் மரம் புணர்ச்சி என்ற எண்ணற்ற பூங் கொத்துகளை வெளிப் படுத்துகிறது; இன்பம் என்ற காய்கள் தோன்றுகின்றன; அவை அன்பு என்ற பழங்களாகக் கனிகின்றன. இவ்வாறு காட்சி என்னும் அடிப் பகுதியையும், மாட்சி என்ற கிளைகளையும் கொண்ட வேட்கை என்ற பெருமரத்தில், புணர்ச்சிப் பூப் பூத்து, இன்பக் காய் காய்த்து உண்டான அன்புப் பழத்தை உதயணனும் தேவியரும் இடையறவின்றிச் சுவைத்தனர்.

காட்சி பெருமுத லாகக் கவினிய
மாட்சி நீரின் மாண்சினை பல்கிய
வேட்கை என்னும் விழுத்தகு பெருமரம்

---

27. பெருங். 3 : 22 : 117 - 20

புணர்ச்சிப் பல்பூ இணர்த்தொகை ஈன்று
நோயில் இன்பக் காய்பல தூங்கி
யாழ அற்புக்கனி ஊழறிந் தேந்த
ஓவாது நுகர்ந்து[28]

உதயணன் நல்லாட்சி நடத்தி வந்தான்.

இதுபோன்றே, நரவாணதத்தனும் மதனமஞ்சிகையும் இன்பம் துய்த்ததுவும் ஓர் அழகிய உருவமாகத் தரப்பட்டுள்ளது. காமம் என்பது அழகு என்ற நன்னிலத்தில் இளமை என்ற முளையாகத் தோன்றுகிறது. கல்வி என்ற நீர் பாய்தலால் அது கணுக்கள் விட்டு அழகெய்திச் செல்வம் என்னும் கதிர்களை ஈனுகிறது. அதில் இன்பம் என்னும் பயன் விளைகிறது. இவ்வாறு விளைந்த காமப் பைங்கூழாம் அன்பு என்னும் சோற்றை மதனமஞ்சிகையும் நரவாணதத்தனும் நாவினுலே விருப்பத்தோடு உண்டனர்.

வளமை நன்னிலத் திளமுளை போந்து
கல்வி நீரிற் கண்விட்டுக் கவினிச்
செல்வப் பல்கதிர் செறிந்துவனப் பேறி
இன்பம் விளைந்த நன்பெரு நெல்லின்
ஆண மடையிற் காண்வரப் பற்றித்
துப்புர வடிவி......தோயினும்
வேட்கை நாவின் விருப்பொடு சுவைக்கும்.[29]

இன்பப் பெரும்புணை

பிறவிப் பெருங்கடலை நீந்துவதற்கு இறைவனடியைத் தெப்பமாக உருவகித்தார் திருவள்ளுவர்.[30] கொங்குவேள் நண்பர்களைத் துன்பப் பெருங்கடலை நீந்த உதவும் தெப்பமாக உருவகிக்கிறார். வேடுவர்களிடமிருந்து தன்னை மீட்ட

28. பெருங். 4 : 9 : 72 - 78
29. பெருங். 5 : 9 : 75 - 81
30. குறள் 10

இடபகனையும் வயந்தகனையும் உதயணன், ''அன்புடை-யீர்! நீந்துதற்கரிய துன்பப் பெருங்கடலை நான் இனிதே-கடத்தற்குத் துறையிடத்தே கிடைத்த பெரிய தெப்பம் ஆயினீர்'' என்று பாராட்டுகிறான்.

நீத்துமிக உடைய
துன்பப் பெருங்கடல் துறைக்கட் பொருந்திய
இன்பப் பெரும்புணை யாயினிர்.[31]

அழகுத் தூண்டில்

பரத்தையர் மீன் பிடிப்பவராக உருவகம் செய்யப்பட்டுள்ளனர். தூண்டிலும் அதில் கட்டப்படும் இரையும் மீன் பிடித்தலில் முக்கியமானவை. பரத்தையரின் நிகரில்லாப் பேரழகு கூரிய நுனியையுடைய தூண்டில். அச்சமும், நாணமும், ஒப்பரவு ஒழுக்கமும் உடையார்போல் காட்டி, கண்ணுக்கினியராய் அவர்கள் புனையும் கோலமே தூண்டிலில் மாட்டிய இரை. இளையோர் திரட்டிய பொன்னும் பொருளுமே மீன்! இந்த மீனைப் பிடிக்கும் தொழிலில் அம்மகளிர் தோல்வியே கண்டறியாதவர்.

நேரியல் சாயல் நிகர்தமக் கில்லாக்
காரிகை கடுநுனைத் தூண்டி லாக
உட்கும் நாணும் ஊராண் ஒழுக்கும்
கட்கின் கோலமும் கட்டிரை யாக
இருங்கண் ஞாலத் திளையோர் ஈட்டிய
அருங்கல வெறுக்கை அவைமீ னாக
வாங்குபு கொள்ளும் வழக்கியல் வழாஅப்
பூங்குழை மகளிர்.[32]

பரத்தையர்க்கு ஆடவரின் அழகோ இளமையோ முக்கியமன்று. அவர்கள் ஈட்டியுள்ள செல்வத்தைக் கொள்வதே-

---

31. பெருங். 1 : 57 : 10.12
32. பெருங். 2 : 7 : 72-79

குறிக்கோள். கொங்குவேள் இளைஞரை மீளுக்காமல், அவர்கள் தேடிய செல்வத்தை மீளுக உருவகித்துள்ளதன் நயம் வியத்தற்குரியது.

போர் மேகம்

மேகம் கடலிற்றோன்றி, மலையிற் படிந்து, காற்று அசைக்க, மின்னி, மழை பொழிகிறது. இந் நிகழ்ச்சியைக் கொங்குவேள் போர்க்களத்தோடு பொருத்திப் பாடுகிறார். போர் மேகம் காலாட் படையாகிய கடலிற்றோன்றி, யானைப் படையாகிய குன்றில் படிந்து, பாய்ந்தோடும் குதிரைப் படையாகிய காற்று அசைக்க, வேலும் வாளு மாகிய மின்னல் தோன்ற, அம்பாகிய மழைத் துளிகளைப் பொழிந்தன.

பெரும்படைச் செற்றத்து இருங்கடல் மாந்திக்
குஞ்சரக் கொண்மூக் குன்றடைந்து குழீஇக்
கால்இயல் இவுளிக் கடுவளி யாட்ட
வேலிடை மிடைந்து வாளிடை மின்னக்
கணைத்துளி பொழிந்த கார்வரைச் சாரல்.[33]

காலாட்படை கடல்போல் பரந்து கிடந்தது; யானைகள் குன்றுபோல் அசைந்தன; குதிரைகள் காற்றெனச் சுழன்றன; வாளும் வேலும் பளபளத்தன; அம்புகள் இடையருது பொழிந்தன என்பதை மேகம் மழை பொழியும் நிலையோடு ஒப்பிட்டுக் காட்டி அம் மழை தரும் குளிர்ச்சியைப் போல் நம் உள்ளத்தைக் குளிர வைக்கிறார்.

புறநானூற்றில் சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவனைப் பரணர் பாடியுள்ள பாடலிலும் இந்த உருவகம் இருப்பதைக் காண்கிறோம். யானை முகில்; வாள் மின்னல்; முரசொலி இடி முழக்கம்; போர் முரசு கேட்டு அஞ்சும் பகை மன்னர் இடியொலி கேட்டுப் பதுங்கும் பாம்பு;

---

33. பெருங். 3 : 27 : 117 - 21

புரவிகள் காற்று; அம்பு மழைத் துளி; குருதி ஈரம்பட்ட போர்க்களம் மழை ஈரம் பட்ட வயல்; தேர் ஏர்; தேர்க் காலின் சுவடு உழுபடைச் சால்; பலரும் திரிந்து மிதிப் புண்பது திருத்தப்படும் மறு சால்; சிதறி விழும் வேலும் கணையமும் விதை; தலைசாய்ந்து தள்ளாடும் வீரர் வளைந்து சாயும் பயிர்; குவிந்து கிடக்கும் அறுபட்ட தலைகள் அடுக் கப்பட்ட பெரிய நெற்போர். இவ்வாறு அமைகிறது பரணரின் ஏர்க்கள உருவகம்.[34]

வண்டுப் பரிசிலன்

மாலை நேரத்தில் நீர்ப் பூக்கள் குவிகின்றன. மல்லிகை மலர்கின்றது. வண்டுகள் நீர்ப் பூக்களை நீத்து மல்லிகையிற் சென்று மகிழ்கின்றன. இக் காட்சியை மிகுந்த கற்பனை நயத்தோடு கொங்குவேள் விவரிக்கிறார். தன் சுற்றம் அடைகின்ற துன்பத்தைத் துடைக்கப் புரவலர்பால் செல்ல முற்பட்ட பரிசிலர், இரப்போர்க்கு ஈயாத பெருஞ் செல்வர் வீடு அருகிலிருந்தாலும் அங்கே செல்லார். மாறாக ஏற்றோர்க்கு இன்முகத்தோடு ஈயும் நன்னராளர் நெடுந் தொலைவில் இருந்தாலும், அவர் வாழும் ஊர் பாலையிலே இருந்தாலும், அவரை நாடிச் சேர்வர். அந்த வள்ளன்மை யாளனால் துயர் நீக்கப்பெற்று அவனோடு மகிழ்ந்து உறை வர். அதுபோன்றே வண்டுகளும் தேனை மறைத்து இதழைக் குவித்துக் கொண்ட நீர்ப் பூக்களை நாடாது, முல்லைப் பரப்பிலே சென்று, இன்முகம் காட்டி வரவேற்கும் மல்லிகை மலர்களை எய்தி, அவை கசிந்து தந்த தேனை வயிறாரப் பருகி, அம் மலர்களிலேயே மகிழ்ந்து உறங்கின.

வெறுக்கைச் செல்வம் வீசுதல் ஆற்றாது
மறுத்துக் கண்கவிழ்நத மன்னர் போல
வாசம் அடக்கிய வாவிப் பன்மலர்
மாசில் ஒள்ளொளி மணிக்கண் புதைப்ப

34. புறம். 369

பெருமை பீடற நாடித் தெருமந்து
ஒக்கல் உறுதுயர் ஓபபுதல் உள்ளிப்
பக்கந் தீர்ந்த பரிசிலர் உந்தவாச்
செறுமுகச் செல்வரிற் சேராது போகி
உறுபொருள் உள்ளது உவப்ப வீசி
வெறுவது விடாஅ விழுத்தகு நெஞ்சத்து
உரத்தகை யாளர் சுரத்துமுதற் சீறூர்
எல்லுறு பொழுதிற் செல்லல் ஓம்பி
மகிழ்பதம் அயின்றிசி ஞங்கு மல்லிகை
அவிழ்தா தூதி அளிதுயில் அமர.[35]

பரிசிலன் பழுமரம் நாடிச் செல்லும் பறவை போன்றவன். பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும் கேடுகெட்ட மானிடரை அவன் தேடிச் செல்லான். இல்லையென்று சொல்லாத பண்பாளரையே நாடி நிற்பான். வண்டுப் பரிசிலர் தம்மைக் கண்டு முகஞ் சுருங்கிய தாமரைச் செல்வரை வெறுத்து ஒதுக்கினர். அதே வேளையில் சிரித்த முகத்தோடு நறு மணமாகிய இனிய மொழிகளைக் கூறும் மல்லிகை வள்ளலை நாடிச் சென்றனர். அவ் வள்ளலும் வண்டினை வரவேற்று இனிய தேனாகிய உணவினை ஊட்டி, வழி நடந்த வருத்தும் தீரத் தன் இதழ்ப் படுக்கையில் துயில் கொள்ள இடம் தருகின்றான்!

மங்கையர் மயக்கம்

உதயணனும் நகர மக்களும் உண்டாட்டயர இலாவண நகரை அடுத்திருந்த மலைச்சாரலை அடைந்தனர். மகளிரும் மைந்தரும் மலைச்சாரற் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்திருந்தனர். சுனைகளில் நீல மலர்கள் பூத்திருந்தன. அவற்றைப் பறித்த மகளிர் அவை தம் கண்களின் அழகினை விஞ்சின என்று கருதி அவற்றை வீசி யெறிந்து வெறுப்போடு பார்த்தனர். அவர்களுடைய நெஞ்சழிவைப் போக்கக் கருதிய

35. பெருங். 3 : 7 : 15 - 28

கணவன்மார், நீல மலர்கள் குவிந்துள்ள இடங்களைச் சுட்டிக் காட்டி, ''நங்கையீர்! இவற்றைப் பாருங்கள்! உங்கள் கண்ணொளியைப் பார்த்து, 'உருவத்தில் மட்டும் அவர்களுடைய கண்ணைப்போல இருக்கிறோம்; ஆனால் அக் கண்களில் உள்ள ஒளி நம்மிடம் இல்லையே! ஒளியில்லாத நாம் ஒளி படைத்த அவர் கண்களில் எவ்வாறு விழிப்பது என்று கலங்கி உங்கள் ஒளியை எங்களுக்கு உதவுங்கள் என்று கை குவித்து வணங்கி நிற்பதைப் பாருங்கள்'' என்று அக் கூம்பிய மலரைக் கொய்து அவர்களிடம் காட்டினர். மகளிரும் மயக்க வெகுளி நீங்கினர்.[36]

வேறு சிலர், காந்தள் அரும்புகளைக் கொய்து நோக்கினர். தம் கைவிரல் அப் பூக்களிடம் அழகில் தோற்றதாகக் கருதி அவற்றைப் பகைத்தனர். விரல்களிலிருந்த மோதிரங்களை நோக்கி, ''நீங்கள் எமக்கு அழகு செய்வதுபோல ஏன் வாளா கிடக்கின்றீர்கள்! உங்களுக்கும் அழகூட்டக் கூடியவர்களைத்தான் இப்போது பார்த்து விட்டீர்களே! அவர்களிடமே போய்ச் சேருங்கள்'' என்று கழற்றி எறிந்தனர். தம் காதலியரின் பேதைமை கண்ட கணவன்மார் தம்முளே நகைத்து அவர்தம் கவலையை மாற்றக் கருதி, மலர்ந்த காந்தள் மலர்களைக் காட்டி, ''இவற்றைப் பாருங்கள்! நும் விரல் வீசிய ஒளியாலே அரும்பு நிலையிலேயே நிற்கமாட்டாதவையாய் அஞ்சி விரிந்துள்ளன. அஞ்சுகின்ற இந்த எளிய காந்தட் பூக்களுக்கு இரங்குங்கள்'' என்று தெளிவித்தனர்.[37]

மைந்தர் சிலர் தம் காதல் மகளிரின் கரிய கூந்தலுக்குப் பொருந்துவன என்று கருதி வேங்கையின் பூங் கொத்துகளைக் கொய்து வந்து கொடுத்தனர். அம் மகளிர் அவை வேங்கை மலர் என்பதுணராராய், தம் மார்பகத்தில் சிதறிக் கிடந்த சுணங்குகளே, தம் மகப் பேற்றால் வெறுத்து

36. பெருங். 2 : 12 : 53 - 66
37. பெருங். 2 : 12 : 67 - 81

நீங்கி மரத்தைப் பொருந்தின என்று கருதித் தங்கள் கண்களில் தீயெழக் கனன்று அவற்றை நிலத்திலே வீசினர். அது கண்ட மைந்தர் பேதைமைக்குரிய இளம் பருவம் கழியினும் மகளிர்க்குப் பேதைமை மட்டும் கழிவதில்லை என்று கருதி அவர்களின் பேதைமைப் பண்பினை எண்ணி மனத்திலே மகிழ்ந்தனர். வேங்கை மலர்கள் சுணங்கல்லன என்பதைக் காரணங்களோடு நிறுவிச் சினம் தணிவித்தனர்.[38]

பிறிதோர்பால் அரும்புகளும் மலர்களும் நிறைந்துள்ள கோங்க மரங்களை மகளிர் நோக்கினர். ''இடையும் மார்பும் வருந்த நமக்கு அழகாக அரும்பியுள்ள கொங்கைகளைக் கோங்க அரும்புகள் வென்றுவிட்டன. மலர்ந்துள்ள பொன் தட்டம் போன்ற கோங்க மலரோ நம் அல்குலின் அழகை வென்று நிற்கிறது. இம் மரங்கள் நமக்குப் பகையே அன்றி உறவாகா'' என்று அக் கோங்க மரச் சோலைக்குள் நுழையாமல் ஒதுங்கி மாந்தோப்பினுள் நுழைந்தனர்.[39]

மலர்ந்த குவளை மகளிர் கண்களையும், கூம்பிய குவளை குவிந்த கைகளையும், காந்தள் அரும்பு விரல்களையும், வேங்கை மலர்கள் சுணங்கினையும், கோங்க அரும்பு முகைகளையும், மலர்ந்த கோங்கு அல்குலினையும் ஒக்கும் என்ற செய்தி அழகிய கற்பனையாக உருப்பெற்றுள்ளது.

38. பெருங். 2 : 12 : 82 – 99

39. பெருங். 2 : 12 : 100 – 107

5. வருணனைகள்

காப்பியங்களில் வருணனைகள் சிறப்பிடம் பெறுவன. நாட்டு வளம், நகர எழில், நானிலச் சிறப்பு, ஆறு, மலை, பொழுது, விளையாட்டு, விழா போன்றவற்றைக் காப்பியங்கள் விரிவாகக் கூறும். புலவரின் கற்பனைத் திறனை வெளிப்படுத்த இடந் தருவது வருணனைப் பகுதியே.

காப்பியமாகிய உடலில் எலும்புக் கூடாய் விளங்குவது கதைக் கரு. கதை நிகழ்ச்சிகள் எலும்புக் கூட்டைச் சூழ்ந்துள்ள தசை போல்வன. வருணனை என்பதோ, தசைகள் உயிர்ப்புடன் விளங்கக் குருதியோட்டத்தைக் கொண்டு செலுத்தும் நரம்புத் தொகுதி. போதிய அளவு குருதியோட்டம் இல்லாதவன் வலிமையோடு இருக்க முடியாது. அதுபோன்றே வருணனை இல்லாத காப்பியமும் சிறப்படைய முடியாது.

கொங்குவேள் மாக்கதையில் உள்ள வருணனை அனைத்தும் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. கதை முழுவதும் அரிய வருணனைகள் இடம் பெற்றுள்ளன. கொங்குவேளின் வருணனைகள் தனித்தன்மை வாய்ந்தவை. பாடல் அடிகள், வருணிக்கப் புகும் காட்சியை மனக்கண் முன்னர் ஓவியப்படுத்திக் காட்டுவன; உயிர்ப்புள்ளன; எவரும் எண்ணாத புதிய கற்பனைகளாய்ப் பளிச்சிடுவன. அவை அனைத்தும் உலகியலுக்குப் பொருந்தியன. இயற்கை இறந்த நிகழ்ச்சிகளாக எதுவுமே இல்லை.

மாலைக் காலம்

மாலைக் காலம் பற்றிய கொங்குவேளிரின் வருணனை நெஞ்சை அள்ளுகிறது. நிகழ்ச்சிகளை ஒன்றன் பின் ஒன்றாகப் படம் பிடித்து நிறுத்துகிறது.

ஞாயிறு தன் கதிர் சுருங்கி மேற்கு மலையில் மறைந்தது. விலங்குகளும் பறவைகளும் தம் துணையை நாடிப் படர்ந்தன. தலைவன் பிரிவால் பசலை படர்ந்த தலைவிபோல வானம் நீலம் பூத்தது. முடி வேந்தன் இறந்ததும் அவனுக்கு அஞ்சி அதுவரை அடங்கியிருந்த குறுநில மன்னர்கள் ஆங்காங்கே தோன்றி ஆதிக்கம் செலுத்தியதுபோலக் கதிரவன் மறைந்ததும் மீன்கள் முகிழ்த்தன. இளமையிலேயே அரசுப் பொறுப்புப் பூண்ட இளவரசன்போலப் பிறை எழுந்தது. நிலவுப் பயன் கொள்ளும் மேனிலை மாடத்தில் தென்றல் ஊடுருவித் தவழ்ந்தது. வெள்ளிய யானை மருப்பாலாகிய கட்டிலில் படுக்கையின்மேல் அமர்ந்திருந்த மாதர் தாம் பூசியிருந்த செஞ்சாந்து புலர்வதற்காக ஊட்டிய அகிற் புகை நாற்புறமும் பரவி மணந்தது. கழனிகளில் குவளை மலரை மேய்ந்து திரும்பிய பசுக்கள் கன்றுகளைக் கண்டு பாலைச் சுரந்தன.[1] மகளிர் பொன் வள்ளத்தில் பாலைத் தேக்கி, ததும்பிய நுரையைத் தெளிவித்து, மலரிதழ்போன்ற தம் விரல்களில் வள்ளத்தை ஏந்தி, கதைகள் சொல்லிய வண்ணம் புதல்வரை ஊட்டினர்.[2]

மல்லிகையும் முல்லையும் மயங்கி மணம் கமழ்ந்தன. பூந்தட்டில் இட்டுவைத்த மணமாலைகள் வண்டு கிண்டுதலான் மலர்ந்தன. அறவோர் பள்ளியில் அந்திச் சங்கு ஒலித்தது.

---

1. பெருங். 1 : 33 : 40 - 68

2. சுரைபொழி தீம்பால் நுரைதெளித் தாற்றிச்
சுடர்பொன் வள்ளத்து மடல்விரல் தாங்கி
மதலை மாடத்து மாண்குழை மகளிர்

—பெருங். 1 : 33 : 69 - 71

படைக் கொட்டிலில் யானைகள் பிளிறின. புதிதாகப் பிடிக்கப்பட்ட யானைகளைப் பழக்கிய பாகர் ஆர்ப்பரித்தனர். கள்ளுண்டு மயங்கியோர் ஆரவாரித்தனர். இவ் வொலிகளெல்லாம் விரவி, மழை பெய்யுங்கால் கடலில் எழுந்த ஆரவாரம் போலாயிற்று. அணிகலக் கடைகள் அடைக்கப்பட்டன. பூக் கடைகள் திறக்கப்பட்டன. யாழைப் பண்ணுறுத்தி மகளிர் செவ்வழிப் பண்ணை இசைத்தனர்;[3] அகில் மணம் கமழும் அழகிய கை சிவக்கும்படி, பஞ்சினைத் திரித்துத் திரியாக்கி, விளக்கிலிட்டுச் சுடரேற்றினர்.[4]

குளங்களில் கருங்குவளை, செங்கழுநீர், நெய்தல், தாமரை முதலியன குவிந்து மகளிரின் கூப்பிய விரல்களாய்க் காட்சியளித்தன. அவை குவிந்தபோது உள்ளிருந்த வண்டுகள் சிறைப்பட்டன. பொய்கைகளில் இரை தேடியிருந்த பறவைகள் கூடுகளை அடைந்தன. தம் இனத்தை அழைக்க அவை எழுப்பிய ஒலி துணையைப் பிரிந்துறைந்தோரின் தனிமைத் துன்பத்தை மிகுதிப்படுத்திற்று. ஞாயிற்றின் வெப்பம் நீங்கித் தட்பம் தவழ்ந்தது.[5]

அந்தணர் மாலைக் கடன் ஆற்றினர். பால்போலும் வெண்மையான அன்னச் சேவல் பெடை அன்னத்துடன் ஊடல் கொண்டு, தன் மலர்ப் படுக்கைக்குச் செல்லாமல், அருகிருந்த மாடப் புரைகளில் தங்கியிருந்த புறுக்களோடு தூங்கியது.[6]

---

3. பெருங். 1 : 33 : 73 - 90
4. அகில்நாறு அங்கை சிவப்ப நல்லோர்
துகிலின் வெண்கிழித் துய்க்கடை நிமிடி
உள்ளிழுது உறீஇய ஒள்ளடர்ப் பாண்டில்
திரிதலைக் கொளீ எரிதரு மாலை. —பெருங். 1 : 33 : 91 - 94
5. பெருங். 1 : 48 : 44 - 59
6. பால்வெண் குருகின் பன்மயிர்ச் சேவல்
பூம்பொறிப் பெடையைப் புலவி உணர்த்திப்
பொறிப்பூம் பள்ளி புகாஅது அயல
மதிதோய் மாடத்து மழலையம் புறவொடு
வெள்ளிவெண் மாடத்துப் பள்ளி கொள்ளும்.
—பெருங். 1 : 54 : 14 - 18

பாலை நிலத்தில் புலிக்கு அஞ்சிய பெண் மான்கள் தம் குட்டிகளுடனும் கலை மான்களுடனும் புதர் முதலியன இல்லாத வறிய நிலப் பரப்பில் கூடி நின்றன. பிடி யானை களைத் தழுவியிருந்த களிற்றியானைகள் நீருள்ள இடத்தை உய்த்தறியும் பொருட்டு, உயர்த்திய கையை உடையன வாய் முகிற் கூட்டம்போல் பரவிச் சென்றன.[7]

முல்லை நிலத்து மனைப் படப்பை வேலியில் பசிய கொடி களில் வெள்ளிய அரும்புகள் மலர்ந்தன. காதலர் வருதற் குரிய நேரம் அதுவே என்று பிரிந்துறை மகளிர்க்கு, அவை நினைவூட்டுவனபோல மலர்ந்தன. வண்டுகள் தம்மை இன்முகம் காட்டி வரவேற்பதுபோன்று மலர்ந்திருந்த மல்லிகையை நாடி, அவை கசிந்து வழங்கிய தேனை வயிறார உண்டு மகிழ்ந்தன.[8]

நாரைகள் கழனிகளில் பற்றிய ஆரல் மீனைத் தம் கவுளிலே அடக்கிக் கொண்டு கூடுகளுக்கு விரைந்தன. குஞ்சுகளின் வாயில் அவ்வாரல் மீனை ஊட்டி மகிழ்ச்சியால் ஆரவாரித்தன.[9]

கணவரைப் பிரிந்துறைந்த மகளிரின் கண்கள் முத்து முத்தாய்ச் சுடு நீர் உகுத்தன. மேனியெங்கும் பசலை ஊர்ந்தது. வாடைக் காற்று வீசியது. ஊதை செறிந்த அந்தக் காற்று அவர்களை உலைத் தீயெனச் சுட்டது. மாலையோ செவ் வானமாகிய சிவந்த கம்பளத்தைப்

---

7. பெருங். 1 : 54 : 37 - 43

8. பெருங். 3 : 7 : 10 - 28

9. கழனி ஆரல் கவுளகத் தடக்கிப்
பழன மருதிற் பார்ப்புவாய் சொரிந்து
கருங்கால் நாரை நரன்றுஉவந் திறுப்ப
—பெருங். 3 : 7 : 29 - 31

போர்த்து வந்து வெம்மையுடையதாய் அவர் நெஞ்சை வேல்போல் பிளந்தது.[10]

நுரை தெளித்தாற்றிப் புதல்வர்க்குப் பாலூட்டும் தாயர், கை சிவக்கத் திரியை நிமிடி அகலிலிட்டு விளக்கேற்றும் நங்கையர், ஆரல் மீனைப் பற்றினவாய்க் கூடு திரும்பும் நாரைகள் ஆகிய சொல்லோவியங்களைத் தீட்டுமிடங்களில் கொங்குவேளின் கை வண்ணத்தைக் காண்கிறோம்.

விடியற்காலை

இரவில் குவிந்திருந்த பூக்கள் விடியலில் விரிந்த தோற்றம் தூங்கிய பொய்கை காலையில் கண் விழித்தது போன்றிருந்தது. அமைதியாயிருந்த பொய்கைப் பரப்பில் பல்வேறு புள்ளினங்கள் ஒலியெழுப்பின. இருள் ''தொட்டி நீலத்திற் சுண்ணும்பு கலந்த கலப்பெனத் தன் கட்டுக் குலைந்து'' படிப்படியே வெளுத்தது.[11]

திங்கள் மண்டிலம் தன்னொளி மழுங்கி மேலைத் திசையில் மேவி மறைந்தது. விண் மீன்கள் ஒளியிழந்து தம் பொலிவிழந்தன. ஊடலைத் தீர்த்த கணவர் தோளில் மனைவியர் துயின்றிருந்தனர். காலை தோன்றியதும் கணவரொடு புணர்ந்திருந்த அவர் மனம் துட்கென்றது; வைகறை அவர்களுடைய இன்ப மயக்கத்தை அராவும் வாள் போலாயிற்று. பிரிந்திருந்த காதலர்க்கோ இரவு காமக் கனலை மூட்டிவிட்டு உயிரை அரிந்துண்பதுபோன்ற கொடுமையைச் செய்தது. இருள் தீராதா என எண்ணி

---

10. பெருங். 3 : 7 : 32 - 39
11. பூக்கண் மலரப் புலம்பிய பொய்கைப்
பாற்சேழ் அன்னமொடு பல்புள் ஒலிப்பப்
பரந்துகண் புதைஇய பாயிருள் நீங்கிப்
புலர்ந்தது மாதோ —பெருங். 1 : 33 : 210 - 13

யிருந்த அவர்கட்கு வைகறை தீப்பட்ட புண்ணினுள்ளே சந்தனக் குழம்பை அப்பிய தண்மையைத் தந்தது.[12]

புணர்ந்துறையும் மகளிர்க்கு வைகறை துயர் தருவதைக் குறுந்தொகைப் பாடல் ஒன்று விவரிக்கிறது. 'குக்கூ' என்று கோழி கூவியது. அதைக் கேட்டதும் காதலரைப் பிரிக்கும் வாள்போல நாள் வந்ததே எனத் தலைவியின் நெஞ்சம் அஞ்சியது.

குக்கூ என்றது கோழி அதன்எதிர்
துட்கென் றன்றென் தூய நெஞ்சம்
தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்று லெனவே.[13]

விடியலைக் கூவி அறிவித்த கோழிமீது அவளுக்கு அடங்காக் கோபம்; ''என் உயிர்த் தலைவனோடு கூடியிருந்த என்னை எழுப்பிய சேவலே! நீ பூனைக்கு இரையாகி அழிவாயாக''[14] எனச் சாபமிடுகிறாள்.

குறுந்தொகையின் இக் கருத்து மொக்கு பெருங்கதையில் விரிந்து நின்று மணம் பரப்புவதைக் காண்கிறோம்.

சோலை

சண்பக மரங்களடர்ந்த சோலை; அதற்குச் சந்தன மரங்களே வேலி. மரத்தில் தொடுத்த ஊசலில் மகளிர் ஆடினர். ஊசற் பாட்டின் தாளத்திற்கேற்ப மயில்கள் ஆடின. வெயில் ஊடுருவிச் செல்ல முடியாதவாறு மரங்கள் நெருங்கித் தழைத்திருந்தன. ஆண் வண்டுகள் தேனுண்டு திளைத்துப் பூந் துகளைச் சிதர்வித்தன. மதர்த்த பெண் வண்டுகள் அவற்றை மருள்வித்தன.[15]

---

12. பெருங். 3 : 7 : 97 - 110
13. குறுந். 157
14. குறுந். 107
15. பெருங். 1 : 33 : 22 - 28

நீலமணி போன்ற நிறமுடைய குயிற்பேடை தன் காதல் துணையாகிய சேவலைத் தூரத்தே கண்டு களித்தது; தானிருக்கும் கொம்பிற்கு வருமாறு கூவி அழைத்தது. பால் போன்ற நிறமுடைய அன்னச் சேவல், கமுகின் பாளை யிடையே மறைந்தது. அதனைக் காணாது பவளம் போன்ற கால்களையுடைய பெடை அன்னம் மயங்கிக் கலங்கியது.[16]

புன்னை மரச் சோலை. அங்கிருந்த பொய்கையில் தாமரைப் பூவின் அகவிதழில் அன்னப் பெடை ஒன்று பள்ளி கொண்டிருந்தது. நீராடிய மகளிரின் ஆரவாரத்தினால் அஞ்சிய அப் பேடு புன்னை மலர்ச் சோலையை அடைந்தது. புன்னை மரத்தின் வெள்ளிய பூக்களின் பொன்னிறத் தாது அதன் முதுகிலே படிந்தது; அதனால் தன்னிறம் மறையப் பொன்னிறமாய் ஆனது. அப் பெடைக்கு இரை கொணரச் சென்றிருந்த சேவல் இரையுடன் மீண்டு வந்து மலர்ப் படுக்கையில் பெடையைக் காணாது கலங்கியது. அவ் வருத்தத்தால், கொண்டு வந்த இரையைப் பொய்கையில் உமிழ்ந்து விட்டுப் பெரிதும் மயக்கமெய்தி அலைந்தது. பொய்கையிலிருந்த தாமரைப் பேரரும்பினைத் தன் பெடையெனக் கருதி அருகணைந்து தழுவியது. அது பெடையல்லாமை கண்டு நெஞ்சழிந்தது. பொய்கையில் நீராட வந்த மகளிர் கரையில் வைத்த யானை மருப்பாலாய செப்பைப் பெடை என்றெண்ணி அருகே சென்று ஆசையோடு பார்த்து ஏமாந்தது. காதல் நோக்கிற்கு எதிர்நோக்குக் கிட்டாததால் மீண்டும் ஏமாற்றம்! புன்னை மரச் சோலை

---

16. மாதர் இருங்குயில் மணிநிறப் பேடை
காதற் சேவலைக் கண்டுகண் களித்துத்
தளிப்பூங் கொம்பர் விளிப்பது நோக்கியும்
பால்நிறச் சேவல் பாளையிற் பொதிந்தெனக்
கோள்மடல் கமுகின் குறிவயிற் காணாது
பவளச் செங்கால் பன்மயிர் எருத்திற்
கவர்குரல் அன்னம் கலங்கல் கண்டும்
—பெருங். 1 : 33 : 29 - 35

யெங்கும் பெடையைத் தேடிச் சுழன்றது. பாவம்! நிறம் மாறியதால் புன்னை மரத்திலிருந்த பெடையை அடையாளம் கண்டு கொள்ள முடியாது மயங்கிற்று.[17]

மற்றோர் இனிய காட்சி. ஒரு குயிற் சேவலின் முதுகில் பூந்துகள் படிந்ததால் பொன்னுரைத்த கல்போலப் புதிய நிறமுடையதாயிற்று; அந் நிலையில் பெடையின் அருகே சென்று அமர்ந்தது. பெடையோ அதனை ஐயுற்று அணுகுந்தோறும் அணுகுந்தோறும் விலகி விலகிச் சென்றது. சேவல் சிறகை உதறிப் பூந்துகளை உதிர்த்துத் தன் நிறங் காட்டி, இனிய குரல் காட்டிப் பேடையின் ஐயத்தைத் தீர்த்துப் புணர்ந்தது. இக் காட்சியை,

குறுஞ்சினைப் புன்னை நறுந்தா தாடிக்
கருங்குயிற் சேவல் தன்நிறம் கரந்தெனக்
குன்றிச் செங்கண் இன்துணைப் பேடை
உணர்தல் செல்லாது அகல்தொறும் விரும்பிப்
புணர்தல் உணர்வொடு பொங்குசிறை உளரி
அளிக்குரல் அழைஇத் தெளித்துமனம் நெகிழ்கும் அக்
குயில்புணர் மகிழ்ச்சி[18]

என்ற அடிகள் ஓவியப்படுத்திக் காட்டுகின்றன. குயிற் கண் செந்நிறமாதலால் குன்றிச் செங்கண் (குன்றிமணி போன்ற செங்கண்) எனப்பட்டது. குன்றிமணியில் சிவப்பு நிறம் தவிர்த்த மீதிப் பரப்பு கறுப்பு; குயிலுக்கும் கண்ணைத் தவிர்த்து எஞ்சிய உடற்பரப்பு கறுப்பு. பூந்துகள் முழுதும் படிந்த சேவல் முழுமையும் பொன்னிறமுற்றதால் பேடை தன் காதலனைத் தெளிய முடியாமல் மயங்கியதில் வியப்பில்லையே! கிட்டே நெருங்க நெருங்கப் பேடை அகன்று ஒதுங்கியதற்குக் காரணம் புரியாத சேவல் இறக்கைகளை அசைத்தசைத்து மீண்டும் அருகே சென்றது; குரலெடுத்-

17. பெருங். 1 : 40 : 245 - 64
18. பெருங். 3 : 6 : 9 - 15

துக் கூவியது. அக் குரல், ''என்னிடம் இரக்கங்காட்ட மாட்டாயா'' என்று கெஞ்சும் குரலாக—அளிக்குரலாக வெளிப்பட்டது. இறக்கைகளை உதறியதால் பூந் துகள் சிதறவே தன் சேவலையும், அதன் காதலையும் கண்ட பேடை உள்ளம் நெகிழ்ந்தது; மகிழ்ச்சியோடு புணர இடம் தந்தது.

குளிர்ந்த சோலை ஓர் இனிய விருந்துக் கூடம்! தம்மிடம் வந்தோர் எவரேயாயினும் தகுதி கருதாது அவர் துயர் கண்டு நலம் செய்யும் சான்றோர் போன்றது; வந்தோர்க்கு வெம்மையை நீக்கிக் குளிர் நிழலைத் தந்ததுதவும் பண்பினை உடையது. மெய்ஞ் ஞானம் உடையோர் தம் தவ வலிமையால் நினைத்த எல்லாம் அடைதல்போல ஓரிடத்திலேயே ஐந்து திணைகட்கும் உரியவாகிய மரமும் கொடியும் மலரும் வளமுற்று அழகாகத் திகழ்ந்தன. தன்னை அடைந்தார்க்கு அப் பொழில் குளத்தில் மூழ்கினாற் போன்ற குளிர்ப்பினைத் தந்தது. சொந்த இல்லில் நுழைவோர்க்கு இருக்கையும், உணவும், பேணுதலும் ஏற்றவாறு கிடைத்தல்போலச் சோலையில் நுழைந்தோர்க்கும் அவை சிறப்புறக் கிடைத்தன. மலராகிய இருக்கையைத் தந்தது. தளிராகிய குடை பிடித்து நிழலைச் செய்தது. மலர்க் கொடியாகிய சாமரைகளை வந்தோர் மனம் மகிழ வீசியது. வண்டும் தும்பியும் குயிலுமாகிய தன் இசைப் பாணர்களைப் பாடச்செய்து விருந்தினர் நெஞ்சைக் கவர்ந்தது. முதிர்ந்த பழங்களாகிய சிறந்த உணவினை ஏந்தி ஊட்டியது. மேலும் அவர் விரும்புவன யாவற்றையும் நெஞ்சுவந்து வழங்கியது. நன் மரங்களன்றி அச்சோலையில் இழிவான மரங்கள் எதுவுமே இல்லை.

சிறுமையும் வறுமையும் தின்மையும் புன்மையும்
இறுபும் புலம்பும் இன்மையும் இரக்கமும்
அறியும் மாந்தரின் உறுவளம் கவினி,
ஐந்திணை மரனும் பைந்தளிர்க் கொடியும்
தந்துணைச் செல்வம் தலைத்தலை பெருகி,

அருமதி முனிவர் நிருமிதம் போல
அழல்கண் அகற்றி நிழல்மீக் கூரி,
நீர்புக் கன்ன நீர்மைத் தாகி,
ஊர்புக் கன்ன உள்ளுறப் புரீஇ,
மலர்த்தவிசு அடுத்து, தளிர்க்குடை ஓங்கி,
பூங்கொடிக் கவரி புடைபுடை வீசி,
தேங்கொடிப் பறவையும் திருந்துசிறை மிஞிறும்
விரும்புறு சுரும்பும் பெரும்பொறி வண்டும்
குழல்வாய்த் தும்பியும் குயிலும் கூடி
மழலையம் பாடலின் மனம்பிணி யுறீஇ,
முதிர்கனி அமிர்தம் எதிர்கொண்டு ஏந்தி,
மேவன பலபயின் றீவன போன்ற
பயமரம் அல்லது கயமரம் இல்லா [19]

சோலை விருந்தினைப் படைக்கும் கொங்குவேளின் பாடல் விருந்து அறிவுக்குப் பெரு விருந்தாய் அமைந்து இனிக்கிறது.

தென்றல்

தென்றல், பொங்கு மழை தவழும் பொதிய மலையின் உச்சியில் அமைந்த சந்தனச் சோலையில் புகுந்து உலாவியது. நீரூற்றுகள் பெருகுகின்ற வயலில் மலர்ந்த புதுப் பூக்களில் படிந்து அவற்றின் மணத்தை முகந்தது. மாமரத்தின் மலர்களை மோதி அலைத்து மலர்வித்தது. நீலமணி போலும் நிறங் கொண்ட கருங்குவளை மொட்டுகளை அலர்த்தியது. காந்தள் மலரை உழக்கியது. சந்தன மரத்தின் மலர்களை விரித்தது. நறிய மணமுடைய கூதாள மலரை அளைந்தது. குரா மரத்தின் குவிந்த அரும்புகளை அலைத்தது. முல்லை மலரின் உள்ளே அமிழ்ந்தது. பிடா மரத்தின் குளிர்ந்த மலர்களை அணுகியது. பொன்போன்ற கொன்றையின் பூந்தாதுகளைச் சேர்த்தது. இதனால்

19. பெருங். 2 : 13 : 11-28

பல்வேறு மணப்பொருள்களை வைத்துள்ள நறுமணச் சாந்தி யற்றும் தொழிலுடையவன் பையின் உள்ளிடம்போல மணந்து கமழ்ந்தது!

பொங்குமழை தவழும் பொதியின் மீமிசைச்
சந்தனச் சோலைதொறுந் தலைச்சென் ருடி
அசும்புஇவர் அடைகரைப் பசுந்தோடு உளரிச்
சுள்ளிவெண் போது சுரும்புண விரித்து
மணிவாய் நீலத்து அணிமுகை அலர்த்தி
ஒண்பூங் காந்தள் உழக்கிச் சந்தனத்து
அந்தண் நறுமலர் அவிழ மலர்த்தி
நறுங்கூ தாளத்து நாண்மலர் அளைஇக்
குறுந்தாட் குரவின் குவிமுகை தொலைச்சி
முல்லைப் போதின் உள்அமிழ்து உணூஅப்
பல்பிட வத்துப் பனிமலர் மறுகிப்
பொற்றூர்க் கொன்றை நற்றுது நயந்து
சாத்துவினைக் கம்மியன் கூட்டுவினை அமைத்துப்
பல்லுறுப் படக்கிய பையகம் கமழ, [20]

தவழ்கின்ற தென்றலை மகத நாட்டுக்குச் செல்லும் வழியில் உதயணன் விளித்துப் பேசுவதாகக் கொங்குவேள் அமைத்துள்ளார்.

எல்லுற மாலை இமயத்து உயர்வரை
அல்குதற்கு எழுந்த அம்தண் தென்றல்! [21]

என விளித்தான். "நீ செல்லும் வழிகளிலெல்லாம் விழி வைத்துத் தேடி என் வாசவதத்தையைக் கண்டு மீண்டும் என்பால் வந்து என் வருத்தத்தை மாற்ற மாட்டாயா?" என வேண்டினன்.

மகதத்தில் பொதிகைத் தென்றல் இல்லை. இத் தென்றல் இமயத்தைச் சென்றடைவதும் இல்லை. வடபுலக்

20. பெருங். 3 : 1 : 184 - 97
21. பெருங். 3 : 2 : 198 - 99

கதையைத் தமிழ் நாட்டுச் சூழலுக்கேற்பக் கொங்குவேள் அமைத்துள்ளார் என்பதற்குத் தென்றலைக் குறிப்பிடும் இவ்விடம் தக்க சான்றாகும்.

தென்றலின் நீண்ட, இனிய, குளிர்ந்த பயணத்தை முதன் முதலாகப் பாடலில் தொடங்கி வைத்தவர் இளங்கோவே! புகார் நகரத் தென்றல் கழுநீர், ஆம்பல், குவளை, தாமரை ஆகிய வயற் பூக்களில் படிந்து அவற்றின் மணத்தை உண்டது. பின்னர், சோலைகளில் மலர்ந்திருந்த மடல் விரிந்த தாழை, மாதவி, சண்பக மலர்களின் தாதினை வாரி உண்டது. குளிர்ச்சியையும் மணத்தையும் பெற்று நடந்தது.

கழுநீர் ஆம்பல் முழுநெறிக் குவளை
அரும்புபொதி அவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை
வயற்பூ வாசம் அளைஇ அயற்பூ
மேதகு தாழை விரியல்வெண் தோட்டுக்
கோதை மாதவி சண்பகப் பொதும்பர்த்
தாதுதேர்ந் துண்டு [22]

தென்றல் மெல்ல மெல்ல அசைந்தது.

இளங்கோ தோற்றுவித்த தென்றலை மேலும் குளிர்வித்து, மணத்தில் படியச் செய்து, உலவ விடுகிறார் கொங்குவேள்.

கார் காலம்

கார் காலத்தைத் தலைவனாகவும் முல்லை நிலத்தைத் தலைவியாகவும் உருவகித்துள்ள பெருங்கதைச் சொல்லோவியம் பெரிதும் சிறப்புடையது. முல்லைத் தலைவியைக் கார் காலத் தலைவன் பிரிந்திருந்தான். திரை கடலோடியும் திரவியம் தேடி ஆரவாரத்தோடு திரும்பிய தலைவன் போல, கார் கால மேகம் கடலில் படிந்து, நீரைப் பருகி,

22. சிலம்பு 2 : 14 - 19

வானத்தே உயர்ந்தெழுந்து ஞெரேலென முழங்கி வந்தது. திரும்பிய தலைவன் பந்தலமைத்து விழாக் கோலத்தோடு வீட்டினுள் நுழைந்ததுபோலக் கார் காலமும் பந்தலிட்டது. மேகமாகிய மேற்கட்டியைக் கட்டியது. இந்திர வில்லாகிய மாலையை அழகுறத் தொங்க விட்டது. மின்னலாகிய ஒளி விளக்குகளை மாட்டியது. ஆலங் கட்டியாகிய வெள்ளிய மணலை யாண்டும் பரப்பியது. இடியாகிய முரசை முழக்கியது. தலைவிக்குத் தண்ணளி செய்த தலைவன்போலக் கார் காலத் தலைவன் முல்லைத் தலைவிக்கு மழைத் துளியாகிய அளியைச் செய்தான். பொருளீட்டச் சென்று திரும்பிய கணவனைத் தழுவிய தலைவியின் இடை பூரிப்பால் பருத்ததுபோல முல்லைக் கொடிகள் பசுமையாய்த் தளிர்த்துத் தோன்றின. தலைவியின் புன்முறுவல்போல முல்லையில் வெள்ளை அரும்புகள் முகிழ்த்தன.[23] முல்லைக் கொடி தளிர்த்ததை,

> பொருள்வயிற் பிரிந்து பொலங்கல வெறுக்கையொடு
> இருள்வயின் வந்த இன்னுயிர்க் காதலன்
> மார்பகம் மணந்த நேரிழை மடந்தையர்
> மருங்குல் போலப் பெருங்கவின் எய்திய(து)[24]

என்று குறிப்பிட்டிருப்பது நயமான பகுதியாகும்.

ஆறு

பெருங்கதையில் நருமதை ஆறு இடம் பெறுகிறது. அது விந்திய மலையின் மார்பிடத்தைப் பிளந்து கல்லினுள் தோன்றிய ஒளி மணிகளையும், மண்ணிற் றோன்றிய பொன்னையும், மூங்கிலில் தோன்றிய முத்தையும், வெதிர் மூங்கிலில் விளைந்த நெல்லையும், யானை மருப்புகளில் தோன்றிய முத்தையும், மலையிற்றோன்றிய வயிரத்தையும் வரன்றி

23. பெருங். 1 : 49 : 76 - 101
24. பெருங். 1 : 49 : 92 - 95

வந்தது. மாங்கனி, பலாப் பழம், வாழைத் தாறு, தேனிறால் ஆகியவைகளை வாரி வந்தது. மலைச் சாரலில் குறவர் குவித்திருந்த மலை நெல், கருந்தினைக் கதிர், தினைக் குவியல், இஞ்சிக் கிழங்கு, கூவைக் கிழங்கு, நாகப் பூ, ஏலக் கொத்து, தேக்கு மரம், அகில் மரம், குங்குமப் பூ, மிளகுக் கனி, மஞ்சள், தகர மரம், கடுப் பழம், திப்பிலி, நெல்லிக் காய், கொம்பரக்கு ஆகிய இவற்றையெல்லாம் சுமந்து வந்தது. மலையில் விளைந்த பொருள்களையெல்லாம் ஊர்களில் உறைந்த மக்களுக்கு, அவரவர் இருப்பிடத்திலேயே கொண்டு தருகின்ற வணிக மக்களைப்போல, கொண்டு சேர்த்தது.[25]

குருக்கத்திக் கொடியையும் மல்லிகைக் கொடியையும் வருத்தியும், ஞாழல் மரத்தையும் புன்னை மரத்தையும் சாய்த்தும், குருந்த மரத்தையும் கொன்றை மரத்தையும் நலியும்படி வளைத்தும், தடா மரத்தையும் பிடா மரத்தையும் தரையில் படும்படி வீழ்த்தியும், முள்ளி மரத்தையும் முள் முருங்க மரத்தையும் அழியும்படிச் சாய்த்தும், மா மரத்தையும் மருத மரத்தையும் வேரற்றுப் போம்படிப் பெயர்த்தும், சே மரத்தையும் குரா மரத்தையும் கிளைகளைப் பிளந்து வாரியும், நறை மரத்தையும் நாக மரத்தையும் நடுவில் ஒடித்தும், வாழையையும் புன்னையையும் மூங்கிலையும் வேர் பறித்தும், ஆல மரத்தையும் அரச மரத்தையும் அடியோடு அசைத்தும், புன்னை மரத்தையும் நாவல் மரத்தையும் புரளும்படிச் சாய்த்தும், கோடலையும் கொய்யாவையும் குழைவித்தும், அனிச்ச மரத்தையும் அசோக மரத்தையும் அலைத்தும், பணிச்சை மரமும் பயின் மரமும் வேர் பறியப் பாய்ந்தும், வள்ளியும் மரலும் தன் வழியே சாயும்படி வளைத்தும் ஓடியது.[26]

---

25. பெருங். 1 : 51 : 8 - 38
26. பெருங். 1 : 51 : 39 - 54

நட்டாற்றில் அகப்பட்ட புள்ளி மான்களும் ஆமான் களும் வெருண்டு கரையை நோக்கி நீந்தின. மயிற் பேடைகள் ஆண் மயில்களோடு அலமந்து அகவின. முள்ளம் பன்றிகளும் கரடித் திரளும் வெருண்டு ஓடின. குரங்கும் முசுவும் மரந்தோறும் தாவி ஏறின. நீர்வாழ் உயிரினங்கள் ஆற்றின் வேகம் கண்டு அஞ்சின. நிலமி ருந்த விலங்குகள் வெள்ளப் பெருக்கு கண்டு துள்ளி விளை யாடின. பக்க நிலங்களில் பரவியும், வளம் மிக்க பொருள் களை வாரிக் கொள்ளையடித்தும் ஆற்று வெள்ளம் கால்களாக கப் பிரிந்து கடலிலே கலக்க விரைந்தோடியது.[27]

அதன் கரைகளில் நாரையும் சம்பங் கோழியும் நிறைந் திருந்தன. கொக்கும், குளிவையும், பெரு நாரையும், நீர்க் கோழியும் ஆகிய இன்னோரன்ன பறவைகள் வாளை, வரால் போன்ற பெரிய மீன்களைப் பகற் கால உணவாக உண்டன. அயிரை மீனையும் அது போன்ற சிறு மீன்களை யும் இரவுக்கு இரையாகும்படிப் பற்றிக் கொண்டுபோய்க் கூட்டில் வைத்தன. இப் பறவைகளின் குஞ்சுகள் சிறிய மீன்களைக் கொன்று தின்று, ஓடுமீன் ஓட உறுமீன் வருமள வும் அசையாத பார்வையோடு கரைகளில் காத்து நின்றன. பறவைகள் எழுப்பிய ஒலி இடையறுது நதிக் கரையில் கேட்ட வண்ணமிருந்தது.[28]

குறிஞ்சி

மலைச்சாரலில் அருவிகள் பாய்ந்தன. பருத்தி விதைத் திருந்த பைம் புனங்கள் இருந்தன. குறவர் பரண்மிசை யிருந்து தினைக் காவல் செய்தனர். இரவில் கொடிய காட்டு விலங்குகளை விரட்டச் சந்தனம், அகில் முதலிய கட்டைகளை எரித்துத் தீயுண்டாக்கினர். அந்த ஒளியில் மான்கள் தூங்கின.[29]

27. பெருங். 1 : 51 : 55 – 67
28. பெருங். 1 : 51 : 68 – 76
29. பெருங். 1 : 50 : 15 – 20

தகர மரங்கள் அழகுற்றுத் திகழ்ந்தன. நறைக் கொடி, நாக மரம், வெட்டி வேர், விலாமிச்சை வேர், பலா மரம், மா மரம், சுரபுன்னை மரம், வாழை, ஆசினிப் பலா மரம், செண்பக மரம், அசோக மரம், பிரம்பு, குறிஞ்சி மரம், வேங்கை மரம், ஆச்சா மரம், சூரல் பிரம்பு, வள்ளிக் கொடி, மரல், வெண் வசம்பு, காந்தள் மலர், கோட்ட மரம், பனிச்சை மரம், திலக மரம், வேய் மூங்கில், வெதிர் மூங்கில், வெட்சி, காட்டு மல்லி, தில்லை மரம், செங்கருங்காலி மரம், ஆர மரம், சந்தன மரம், அகில் மரம், தமால (பச்சிலை) மரம், இலவங்க மரம், ஏல மரம், இருப்பை மரம் ஆகியவை நிறைந்திருந்தன.[30]

தேன் கூடுகளை அழிப்பதற்காகக் குறவர்கள் எடுத்துச் சென்ற கொள்ளிகளும், தினைப் புனத்தைப் பன்றிகள் அழித்துவிடாமல் காக்க இரவில் அவற்றை விரட்ட ஆங்காங்கே உண்டாக்கிய நெருப்பும் கடை யாமத்தில் எழுந்த பல ஞாயிற்று மண்டிலங்கள்போலக் காட்சியளித்தன.[31]

மகளிர் கூட்டத்திடையே மன்னவர் செல்லுதல்போல, பிடி யானைகள் சூழ்ந்து வர ஆண் யானைகள் கூட்டம் கூட்டமாய் மகிழ்ந்து சென்றன. அவற்றின் கவுளிலிருந்து ஒழுகிய மதத்தை மொய்த்துண்ண வண்டுகள் படிந்தன. யானைகள் மராமரத்தின் பசிய தளிர்களைப் பற்றி, வீசி, வண்டுகளை விரட்டின. வண்டுகளோ அகன்று செல்லாமல் மீண்டும் மீண்டும் வந்து படிந்தன. யானைகள் ஓட்டுவதும் வண்டுகள் திரும்பத் திரும்பப் படிவதும் சிறியோர் செய்கைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

> பெருமையிற் பிறப்பினும் பெற்றி போகாச்
> சிறுமை யாளர் செய்கை போல
> மூசுதல் ஓவா மிஞிற்றினம் இரிய

30. பெருங். 1 : 50 : 21 - 33
31. பெருங். 1 : 50 : 35 - 57

வீசுதல் ஓவா விழுத்தகு தடக்கை
இருங்களிற்று இனநிரை [32]

என்பது இக் காட்சியை விளக்கும் அடிகள். இங்குச் 'சிறுமையாளர் செய்கை' என்பதை யானைக்கும் கூறலாம்; வண்டுக்கும் கூறலாம். யானை உயர்ந்த சாதியிற் பிறந் திருந்தும் தன்னிடமுள்ள மதத்தினை உண்ணவரும் எளிய வண்டுகளுக்கு ஈயாது விரட்டுவது, இரப்போர்க்கு இல்லை யென்று சொல்லும் சிறியோர் செய்கை போலாகிறது. வண்டுகள் தேனையுண்ணும் தன்மையுடையன. அத் தன்மை நீங்கி மதத்தை நாடிச் செல்வதும், ஓட்ட ஓட்ட மீண்டும் செல்வதும், உண்ணீர் உண்ணீர் என்று ஊட்டா மல், மாறுக ஓட ஓட விரட்டுவோர் வீட்டில் உண்ணச் செல்லும் சிறுமையாளர் செயல்போலாகிறது. ஒரே உவமையில் வண்டின் செயலையும் யானையின் செயலையும் பொருத்திக் காட்டும் திறம் அழகிது. மலையில் தோன்றிய அருவிகள் மாயோன் மார்பில் கிடந்த ஆரம் போல விளங் கின. பசிய பொன் துகளோடு பல்வேறு மணிகளையும் அவை வரன்றி வந்தன; [33]

காட்டு வாழையின் தேனொழுகக் கனிந்த கனிகள், பலாவின் அமிழ்தனைய சுளைகள், மாவின் இனிமைமிகு பழங்கள், தேனிறுல் ஆகிய சுவைமிகு பொருள்களைச் சுமந்தும், உகாய் மரத்தின் மணத்தினை அளாவியும், மாணிக்கம் முத்து முதலிய மணிகளை வரன்றியும் அவை பாய்ந்தன; [34]

குறவர்கள் வெட்டிப் போட்ட அழகிய குளிர்ந்த அகில் மரம், சந்தனத் தழை, கருவிளங் கொம்பு, இரவு மரம்,

---

32. பெருங். 2 : 12 : 144 - 48
33. பெருங். 2 : 14 : 3 - 8
34. பெருங். 3 : 2 : 26 - 35

தேற்று மரம், திமிசு மரம், வசம்பு மரம், கோட்ட மரம் ஆகியவற்றைப் புரட்டிச் சென்றன.[35]

அருவி முழக்கம் மத்தளமாக, மந்திகள் பாட, கடுவன் குரவைக் கூத்தாடியதை,

அருவி அரற்றிசை அணிமுழ வாகக்
கருவிரல் மந்தி பாடக் கடுவன்
குரவை அயரும் குன்றச் சாரல்[36]

என்னும் அடிகள் விவரிக்கின்றன.

சுனைகளில் பல நிற மலர்கள் பூத்திருந்தன. அதனை ஆசிரியர்,

அணிகலப் பேழை அகந்திறந் தன்ன
நறுமலர் அணிந்த குறுவாய்க் குண்டுசுனை[37]

எனக் கூறுகிறார். பல்வகை மலர்களோடு விளங்கிய சுனை திறந்து வைத்த அணிகலப் பேழைபோல் தோன்றியது. சுனை-அணிகலப் பேழை; பல்வேறு மலர்கள்-அதிலுள்ள பல்வகை அணிகலன்கள்.

நாகம் என்னும் நறுமணமுடைய மரங்களைக் கோடரியால் துணித்து, அவற்றில் தீ மூட்டி, அத் தீயில் சமைத்த மான் நிணம் கலந்த ஊனைத் தேன் கலந்த பாற்சோற்றோடு கடவுளுக்கு மடையாகக் கொடுத்து வாழ்த்திக் குறவ இளைஞர் வினைமேற் செல்வர். குற மகளிர் பலாமரம் நிற்கும் தம் முற்றத்திலிருந்து தட்டை என்னும் கருவியைப் புடைத்து, தினைப் புனத்தைக் கவர வரும் மயில், கிளி முதலியவற்றை ஓப்புவர்.[38]

குற மகளிர் பாறையிலிருந்த குழிகளை உரல்களாகக் கொண்டு, ஐவன நெல்லைப் பெய்து, யானைக் கொம்புகளை

---

35. பெருங். 1 : 41 : 30 - 83
36. பெருங். 2 : 16 : 81 - 83
37. பெருங். 2 : 14 : 10 - 11
38. பெருங். 2 : 12 : 111 - 122

உலக்கைகளாகக் கொண்டு, தம் ஐயருடைய இயல்புகளைப் புகழ்ந்து பாடி இடிப்பர்.[39]

யானைக் கொம்பு அரியதாயினும் மலைச்சாரல் மகளிர்க்கு அவை எளிமையுடையன. எனவே அதனை உலக்கையாகப் பயன்படுத்தினர். அந்தந்த நிலத்திற்கேற்ப உலக்கை அமைவதை இளங்கோ அருமையாகப் பாடியுள்ளார். சோழ நாடு நீர் நாடு. நெல்லும் கரும்பும் நிறைந்த வயல்களைக் கொண்டது. ஆதலின் அங்கிருந்தோர்க்குக் கரும்பு உலக்கையாயிற்று.

> தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
> பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார்மகளிர்.[40]

பாண்டி நாடு முத்துடைத்து. ஆதலின் அங்கிருந்த மகளிர்க்குப் பவழம் உலக்கையாயிற்று.

> பாடல்சால் முத்தம் பவழ உலக்கையால்
> மாட மதுரை மகளிர் குறுவரே.[41]

சேர நாடு மலை நாடு. அதனால் சந்தனம் உரலாயிற்று; யானைக் கொம்பு உலக்கையாயிற்று.

> சந்துரற் பெய்து தகைசால் அணிமுத்தம்
> வஞ்சி மகளிர் குறுவரே வான்கோட்டால்.[42]

மலையில் வாழ்ந்த மகளிர் சுனைப் பூக் கொய்தும், கோட்டுப் பூச் சூடியும், கொடிப் பூப் பறித்தும், மலர்களைக் கொண்டு மாலை தொடுத்தும், தளிர்களைக் கொண்டு கண்ணி தொடுத்தும், மலை வளத்தைப் புகழ்ந்து பாராட்டியும், குரவைக் கூத்தாடியும், மயிற் கூட்டத்தின்

---

39. பெருங். 2 : 14 : 46 - 52
40. சிலப். 29 : 26 : 1 - 2
41. சிலப். 29 : 27 : 1 - 2
42. சிலப். 29 : 28 : 1 - 2

அழகினையும் ஆடலையும் கண்டு களித்தும், கிளிகளின் மழலை மொழி கேட்டு மகிழ்ந்தும் பொழுது போக்கினர். [43]

முல்லை

கார் காலத்தில் முல்லைக் கொடிகள் பூத்தன. குரா மரமும், தளவும், குருந்த மரமும் பாம்பின் எயிறு போன்ற மலர்களைத் தோற்றுவித்தன. பாம்பின் படம்போலக் காந்தள் மலர்ந்தது. வண்டுகள் மலர்கள் மலரும் செவ்வி யறிந்து, அவற்றிற் படிந்து, தேனுண்டு மகிழ்ந்து இசை பாடின. யானைகளின் நீண்ட கைகளை ஓரிடத்தே தொகுத்து வைத்தாற்போன்று வளைந்த கதிரையுடைய தினைகள் விளைந்து சாய்ந்தன. நுனி நீண்ட சோளமும், கவர்த்த கதிரையுடைய வரகும், கார்ப் பருவத்தே தளிர்க்கும் எள்ளும், சிவந்த மலரையுடைய அவரையும், காய் மிகுந்த குலைகளையுடைய பயறும் உளுந்தும் கொள்ளும், கொழுந்து மிக்குத் தோன்றும் கடலையும் துவரையும் தோரையும் ஆகிய இவைகளும் இன்னோரன்ன பிறவும் முல்லை நிலத்தில் விளைந்தன. [44]

மூங்கிற் புதரின் அருகே மரையாவும், இளம் பெண் மானும் வெள்ளிய மலரையுடைய முசுண்டையின் பசிய குழைகளை மேய்ந்து நின்றன. அவற்றின் மடியிலிருந்து ஒழுகிய பால் தரையைச் சேறாக்கியது. கொன்றை மரங் களும் பிடா மரங்களும் ஒன்றோடொன்று பின்னிக் கிடந்தன. முல்லைக் கானத்தே முறுக்கிய கொம்புகளை யுடைய கலைமான் பிணை மானைத் தழுவிப் பகற் பொழுதில் துயின்றது. துயிலெழுந்ததும் அங்கு மேய்ந்த ஆட்டினத் தோடு சேர்ந்து விளையாடியது. [45]

---

43. பெருங். 2 : 12 : 129 - 38
44. பெருங். 1 : 49 : 96 - 110
45. பெருங். 1 : 49 : 111 - 119

முல்லையில் வாழ்ந்த மக்கள் கோவலர் எனப்பட்டனர். அவர்கள் பசுக்களை வளர்த்து அவை தந்த பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றால் பிழைத்தனர். அதனால்

பல்லாப் படுநிரைப் பயம்படு வாழ்க்கைக்
கொல்லைப் பெருங்குடிக் கோவலர் குழீஇய
முல்லைப் பெருந்திணை, [46]

என முல்லை நிலம் பசுக்களால் பெருமை பெறுவதைக் கொங்குவேள் சுட்டிக் காட்டுகிறார்.

மருதம்

வளம் மிக்க வயல்களில் நீர்ப் பூக்கள் பூத்துக் கிடந்தன. உழவரின் ஆர்ப்பிசை கேட்டு அஞ்சிய எருமைகள் வயலிடையே நுழைந்தன. அவற்றின் மடியிலிருந்து பால் பிலிற்றியது. பால் தம்மேல் படாதிருக்க அங்கிருந்த அன்னக் குஞ்சுகளும் நாரைக் குஞ்சுகளும் ஒதுங்கி அகன்றன. [47]

பாத்திகளில் கரும்புகள் உயர்ந்து வளர்ந்திருந்தன. அவற்றின் வளவிய மடல்களில் தொடுக்கப்பட்ட தேனடை கிழிந்து தேன் துளிகள் கீழேயிருந்த செந்தாமரை இதழ்களில் சிந்தின. அக் காட்சி தீயை வளர்க்க நெய் சொரிந்தது போன்றிருந்தது. [48] செந்தாமரை-எரிகின்ற நெருப்பு; அதன் மீது துளிக்கும் தேன்—தீயில் சொட்டப்படும் நெய்; இனிய கற்பனை!

---

46. பெருங். 1 : 49 : 123 - 25
47. பெருங். 1 : 48 : 141 - 45
48. அறையுறு கரும்பின் அணிமடற் றொடுத்த
நிறையுறு தீந்தேன் நெய்த்தொடை முதிர்வை
உழைக்கவின் றெழுந்த புழற்கால் தாமரைச்
செம்மலர் அங்கட் தீயெடுப் பவைபோல்
உண்ணெகிழ்ந் துறைக்கும் கண்ணகல் புறவில்
—பெருங். 1 : 48 : 146 - 50

பாளைக் கமுகு, பருத்த மூங்கில், பழுத்த வாழை, நீள்குலைத் தென்னை, தேன்சுவைப் பலா, நீளிலை மா, பசிய புன்னை, செய்ய செருந்தி, பொன்னிணர்க் கொன்றை முதலிய மரங்களைவேற்று நிலங்களிலிருந்து கொண்டுவந்து சோலைகளில் நட்டு வளர்த்தனர் உழவர். இம் மரங்கள் செறிந்திருந்தமையால் அவ் விடங்களில் பகற் பொழுதிலும் இருள் பரவிக் கிடந்தது. சோலைகளைச் சூழ்ந்து எங்கும் நெல் வயல்கள் நிறைந்திருந்தன.[49]

உழவர் ஒலியும், களத்தில் வேலை செய்வோர் ஒலியும், களையெடுக்கும் கடைசியர் ஒலியும், தண்ணுமை முழக்கமும், தடாரி முழக்கமும் மண முழவினையுடைய மறவர் ஆரவாரமும், மடைகளைத் திருத்தும் மள்ளர் ஆர்ப்பும், ஆற்றின் ஒலியோடு இயைந்து பெருமுழக்கமாய் ஊர்கள் தோறும் ஒலித்தன.[50]

வயல்களில் பூங்கொடிகள் பிணங்கிக் கிடந்தன. நீரில் உலாவிய ஒரு கன்னி வாளைமீனின்மேல் நண்டின் நகம் பட்டுவிட்டது. பிறனொருவன் கைபட்டால் அஞ்சி நடுங்கும் கன்னிபோல, நண்டினுடைய நகம் பட்டதால் வாளை நாணுற்று இரையுண்ணுமல் ஒடுங்கிக் கிடந்தது.[51]

குளத்து நீரில் மூழ்கிக் கிடந்த எருமைகள் வயலில் தொழில் செய்த உழவர் எழுப்பிய ஆரவாரத்தினுல் எழுந்தன. கரும்பின் மடல்களை முறுக்கியும், தாமரை மலர்களை உழக்கியும், ஆம்பல் இலைகளை அழித்தும், குவளை மலர்களைக் குழையச் செய்தும், தவளைகளும் தண்ணீரும் கலங்கும்படியாகவும் பாய்ந்து சென்று, தோட்டத்தே கமுகின் கொழுவிய நிழலில் படுத்து இளைப்பாறின; பின் தொழுவம் சேர்ந்தன.[52]

---

49. பெருங். 1 : 48 : 151 – 60
50. பெருங். 1 : 48 : 161 - 70
51. பெருங். 1 : 58 : 99 - 102
52. பெருங். 3 : 2 : 15 – 25

உழுது சேருக்கிய வயலில் உழத்தியர் நாற்று நட்டனர். வயலிலிருந்த ஆரல் மீனையும் இரு மீனையும் இரையாகக் கொள்ள நாரைச் சேவல் கூர்த்த நோக்கோடு நின்று கொண்டிருந்தது. பெடை அன்னம் ஒன்று புன்னைப் பொழிலிடையே பொய்கைத் தாமரை மலரை அலகால் கோதித் தின்றது. பின்னர் தென்னையின் பாளையில் சென்று தங்கித் தன் சேவலை அழைத்து நரலியது. கமுகம் பாளையினூடே தங்கிய வண்டுகள் வைகறைத் துயில் மயக்கத்துடன் முரன்றன. தும்பிகள் இனிய குழலிசை எழுப்பின. பறவைப் பாடலும் வண்டின் முரற்சியும் தனித்துறைவோர்க்குக் காமக் கிளர்ச்சியை உண்டாக்கி மனக் கவலையை மிகுவித்தன.[53]

கழனிகளில் விளைந்திருந்த நெற் கதிர்களைக் கவர்ந்து செல்லக் கிளிகள் வந்தன. கழனியருகே இருந்த கமுகுத் தோப்பில் நாரையும் குருகும் வந்து அமர்ந்தன. அதனால் குலைகளிலிருந்து உதிர்ந்த பழங்கள் கதிர்களைக் கவர வந்த கிளிகளை வெருட்டின.[54]

பாக்கு மரமாகிய பரண்மீதிருந்து, நாரையும் குருகுமாகிய குறமகள், கமுகம் பழமாகிய கவண் கல்லெறிந்து, கிளியினை விரட்டும் காட்சி மருதத்தில் குறிஞ்சியாக மணம் பெறுகிறது.

பாலை நிலம்

பாலை நிலத்தில் கொற்றவை கோவில் இருந்தது. பாலை நில மறவர்கள் அவ் வழிச் செல்வோரை ஆறலைத்துக் கொள்ளையிட்டனர். பகைவரிடமிருந்த பசுக்களைக் கைப்

---

53. பெருங். 3 : 4 : 41 - 62

54. செங்கால் நாரையொடு குருகுவந்து இறைகொளப்
பைங்காற் கமுகின் குலையுதிர் படுபழம்
கழனிக் காய்நெற் கவர்கிளி கடியும்
பழன வைப்பு —பெருங். 4 : 8 : 39 - 42

பற்றினர். துளைத்த கற்றூண்களைச் சுற்றி நட்டு அத் துளை களிலே மூங்கிலைச் செலுத்தி வளைத்திருந்த பட்டியில் பசுக்களை உட்புகுத்தி அடைத்தனர். ஆறலைத்தபோது தம்மாற் கொல்லப்பட்ட பிணங்களைக் குழிகளிலே இட்டு நிரப்பினர். தலைகளை மரப் பொந்துகளில் திணித்து மறைத்தனர்.[55]

பாழிடமாகிய களர்நிலம்; நீரில்லா வழிகள்; சமயில்லாத நிலம்; ஊர்களில்லாக் காடுகள்; நீர்ப் பரப்பற்ற சுனைகள்; பரற்கற்கள் மிக்க சிறு குன்றுகள்; சென்று முடிதலில்லாக் குறைவழிகள்-இவைகளின் தொகுப்பே பாலை நிலம்.[56]

ஓமை, உழிஞ்சல், உலவை, உகாய், கடு, தான்றி, தொடரி, நாகம், அரசு, ஆரம், ஆத்தி, இரவு, இண்டு, குரா, கோங்கம், கள்ளி, கடம்பு, முள்ளி, முள்ளெருக்கு, தணக்கு, பலாசு, ஞெமரை, ஈங்கை, இலவம், நெல்லி, வாகை போன்ற வன் மரங்களே அங்கு வளர்ந்தன. அவையும் நீரில்லாமையால் வற்றலாய் ஒடுங்கி நின்றன.[57]

பாலை நிலப் புருக்கள் தூதுணம் புருக்கள் எனப்படும். சிவந்த கால்களையும் வெள்ளிய சிறகுகளையுமுடைய சேவற்புரு பருக்கைக் கற்களை உண்டு வயிற்றை நிறைத்தது பேடைப் புறவினொடு கூடி விளையாடலை விரும்பி, கணுக்கள் பொறிந்த கள்ளி மரத்தின் கவர்த்த கிளையில் ஏறியிருந்து அவற்றைக் கூவி அழைத்த ஓசை மிகத் தொலைவிலிருந்த இடங்களிலும் கேட்டது.[58]

பெண் பன்றிகளின் முலைகள் தோலாய் வற்றின. அவை தளர்ந்து நடந்த ஆண் பன்றிகளோடு வற்றிய மரற் கொடி

55. பெருங். 1 : 52 : 24 - 30
56. பெருங். 1 : 52 : 30 - 36
57. பெருங். 1 : 52 : 37 - 45
58. பெருங். 1 : 52 : 46 - 50

யைத் தின்றுவிட்டு, நீர் வேட்கையால் மெலிந்து, பேய்த் தேரை நீரெனக் கருதி அதனை நோக்கி ஓடின. நெருப்புப் போன்ற சிவந்த முகத்தையுடைய பெண் குரங்கு ஒன்று இளமகவினைத் தழுவிக் கொண்டு, பசி தணியாமையால் பசிய தளிரில் சிந்தியிருந்த தேனை அகங்கையைக் கொண்டு நக்கியது; கண்டு வருந்திய ஆண் குரங்கு, காஞ்சி மரத்தின் கவர்த்த கொம்பில் தொடுக்கப்பட்டிருந்த தேனைக் கொணர்ந்து ஊட்டி மகிழ்ந்தது.[59]

மலைச் சாரலில் மூங்கில்கள் வெடித்துதிர்த்த முத்துகள் சிதறிக் கிடந்தன. அவற்றை மழைத் துளிகள் என்று கருதிய காட்டுச் சேவல்கள் தாவித் தாவிக் கொத்தியும் எடுக்க இயலாமையால் தளர்ந்து நின்றன.

வெங்கற் சாரல் வேய்விண் டுதிர்த்த
அங்கதிர் முத்தம் அணிமழைத் துளியெனக்
காட்டுக் கோழிச் சூட்டுத்தலைச் சேவல்
குத்த லானது தத்துற்றுத் தளர்ந்த[60]

சேவல் அரிய படப்பிடிப்பாய்த் திகழ்கிறது.

கன்றினைத் தழுவிய, உரல் போன்ற அடியையுடைய, கரிய பிடியானை ஈரமற்ற முருக்கையின் வெளிய மலராகிய கவளத்தைத் தின்றது. அதில் வெறுப்புற்று நீர் வேட்கை தணிய நெல்லிக் காயைத் தன் கவுளிலே அடக்கிக் கொண்டது. வழிப்போக்கர்கள் தோண்டியதும், தழையுதிர்ந்து மூடப்பட்டதுமாகிய பள்ளத்திலே சென்று நீரைத் தேடியது. நீர் இல்லாமையால் அங்குமிங்கும் அலைந்து உலைந்தது.[61]

இருப்பை மரத்தில் வெண்மையான மலர்கள் பூத்திருந்தன. அவற்றின் இனிய சுவையை விரும்பிய வெளவால்கள் கல்லென்று ஒலித்துப் பல்வேறிடங்களிலும் பறந்து திரிந்

59. பெருங். 1 : 52 : 51 - 59
60. பெருங். 1 : 52 : 60 - 63
61. பெருங். 1 : 52 : 64 - 69

தன. நடப்பனவும், பறப்பனவுமாகிய உயிரினங்கள் வெப்பத்தால் வருந்தி, பசியாலும் நீர் வேட்கையாலும் துன்பம் எய்தின.[62]

பாலை நில மக்கள் சிற்றூர்களில் வாழ்ந்தனர். செந்நாய் தனக்கு வேண்டாமையால் விட்டுப் போன காட்டு விலங்குகளின் ஊனை உணவாகக் கொண்டனர். ஊர்களுக்குச் செல்லும் வழிகள் பரற்கற்கள் குவிந்ததாய் வெப்பம் நிறைந்ததாய் இருந்தன.

பாலை தழீஇய பயனறு பெருவழி
நீடிருள் அல்லது நீந்துதல் அரிது.

இருளில் செல்லலாமேயன்றி இவ் வழியைப் பகலிற் கடத்தல் அரிது.[63]

நானில மயக்கம்

மகத நாட்டின் சிறப்பினைச் சொல்லுமிடத்தில் கொங்குவேள் நானில மயக்கத்தைக் குறிப்பிடுகிறார். அந் நாட்டு மலைகளில் தினைப்புனம் காத்த குறவர் பறவைகளை ஓட்டுவதற்காக எறிந்த அழகிய குளிர்ந்த மணிகள் முல்லை நிலக் கொல்லையில் வாழ்ந்த இடையர் முன்றிலில் கிடந்த குப்பையுள் வீழ்ந்தன. முல்லை நில உழவரின் கலப்பை புரட்டிவிட்ட அழகிய மணிகள் மருத நிலச் சிறுமியர் வண்டலயர்ந்த இடங்களில் விழுந்தன. மருத நிலத்தில் நாற்று நட்ட உழத்தியர் பாடிய ஆரவாரம் கேட்டு நெய்தல் நிலக் கழியில் இரை தேடி நின்ற பொன்வாய்ப்புள் அஞ்சியது. இவ்வாறு மகத நாட்டில் நானிலங்களும் தம்முள் கலந்து மயங்கின.[64]

---

62. பெருங். 1 : 52 : 70 - 74
63. பெருங். 1 : 52 : 75 - 81
64. பெருங். 4 : 2 : 60 - 70

தமிழ் நில வளம்

ஒவ்வொரு நிலத்திலும் அவ்வந் நிலத்திற்குரிய செடி, கொடி, விலங்குகள், மக்கள் வாழ்க்கை ஆகியவை மிகவும் பொருத்தமாக, மரபு நிலை கெடாமல் அமைக்கப்பட்டுள்ளன. கதை நடந்த வடநாட்டு இலக்கியங்களில் நானிலப் பாகுபாடு இல்லை. ஆயினும் பெருங்கதையைத் தமிழ் மணங் கமழ இயற்றியுள்ள கொங்குவேள் நிலப் பிரிவுகளையும், வளங்களையும் தமிழ் மரபிற்கேற்ப தமிழ் நாட்டை முன் நிறுத்தியே பாடியுள்ளார்.

நருமதை ஆற்றின் வருணனையில் காவிரி ஆற்றையும், குறிஞ்சி நில வருணனையில் சேர நாட்டு மலை வளத்தையுமே காண்கிறோம். மாலைப் பொழுதையும், மகளிர் பிரிவுத் துயரையும், கார்காலப் பெயலை ஏற்றுத் தளிர்க்கின்ற முல்லையையும், மருதநில வாளை மீனின் கன்னிமைத் தன்மையையும், பிற நிகழ்ச்சிகளையும் சங்க இலக்கியங் களைக் கருத்திற் கொண்டே அவர் பாடியுள்ளார்.

பெருங்கதையில் நெய்தல் நில வருணனை இல்லை. கதை நடந்த இடத்தில் நெய்தல் இல்லை; ஆகவே அவரும் நெய்தலைக் கூறவில்லை போலும்! வாசவதத்தையைக் கைப்பற்றிக் கொண்டு உதயணன் தன் நாட்டை நோக்கிச் சென்றபோது, யானை கடந்த பாதையாகக் குறிஞ்சியை யும், மருதத்தையும், முல்லையையும், பாலையையும் படைத் துக்கொண்டு அவற்றை அழகுற விவரிக்கிறார். அவ்வாறே நெய்தலைப் பாட ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருக் கலாம். வாசவதத்தையின் வயா விருப்பத்தைத் தீர்க்க, உதயணன் அவளை மேருமலையிலிருந்து குமரிமுனை வரையில் விண்ணூர்தியில் அழைத்துச் சென்று காட்டினான். ஊர்தி யைத் தென்கோடிக் குமரியில் இறக்கி, அங்கு நெய்தல் நிலக் காட்சிகளைக் கண்டு களித்துப் பின்னர் திரும்புகால் பயணத்தை மேற்கொண்டதாக ஏற்படுத்திக் கொண்டு

நெய்தலைப் பாடியிருக்கலாம். பாடாது விடுத்த காரணம் தெரியவில்லை. அவர் வாழ்ந்த கொங்கு நாட்டில் நெய்தல் நிலம் இல்லாததும் ஒரு காரணமாக இருக்கலாம். நெய்தல் இல்லையாயினும் கொங்குவேளின் பிற வருணனைகளில் சங்க இலக்கியப் பிழிவையும் தமிழ்ப் பண்பையும் பெரிதும் நுகர்கிறோம்.

6. உவமைகள்

அணி

இலக்கியங்கள் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேரால் உருவாக்கப்படுவன. அவர்கள் தாம் கூறப் புகுவன மக்கள் மனத்தில் நன்ருகப் பதிய வேண்டுமென்பதற்காகப் பல சாதனங்களைக் கையாள்கின்றனர். அவற்றுள் ஒன்று அணி. செய்யுளுக்கு அழகூட்டுவன அணிகள். பிற்காலக் கவிதைகளில் பல்வேறு வகையான அணிகள் காணப்படுகின்றன. ஆனல் சங்க இலக்கியங்களில் தன்மை நவிற்சி, உவமை, உருவகம் போன்ற பொருளணிகள் மட்டுமே உண்டு. சங்கச் செய்யுளின் போக்கையே கொண்டுள்ள பெருங்கதையிலும் பொருளணிகளே பயின்று வந்துள்ளன.

உவமை

சொல்லப் புகுவதனைத் தக்க ஒப்புமை கொண்டு உணர்த்துவது உவமை. பேச்சிலும் எழுத்திலும் உவமையைக் கையாளாதவர் எவருமிலர் எனலாம். புலி போலப் பாய்ந்தான், மான்போல ஓடினுள் என எளிய மக்களும் உவமை கூறக் காண்கிருேம். உவமைகள் புலவர்பால் வெளிப்படும்போது உயரிய கருத்துகளை வெளிப்படுத்துவனவாகின்றன. அணிகட்கெல்லாம் தாயாக விளங்குவது உவமை அணியே! சொல்லப் புகும் கருத்து உவமையால் வலிவு பெறுகிறது.

பெருங்கதை உவமை

பெருங்கதையில் நானூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் உவமைகள் ஆளப்பட்டுள்ளன. கிடைக்காது மறைந்த பகுதிகளும் கிடைத்திருக்குமானுல் இன்னும் பல உவமைகளை நாம் பெற்றிருக்கக் கூடும். பெருங்கதையாகிய தங்க வளையலில் உவமைகளாயாகிய மணிக் கற்களைப் பொருத்தமுறப் பதித்து ஆசிரியர் ஒளி கூட்டியுள்ளார்.

ஒரே அடியில் உவமைகளை எடுத்தாண்டு உள்ளத்தைக் கொள்ளை கொள்வதில் கொங்குவேள் சிறப்பிடம் பெறுகிருர். அத்தகைய உவமைகளிற் சில இங்கே காட்டப்படுகின்றன.

உணர்வுவமைகள்

எரியுறு மெழுகின் உள்ளம் சோர (1 : 46 : 249)
ஊதுலை போல உள்ளகம் கனற்ற (3 : 8 : 5)
மத்துறு கடலிற் றத்துறு நெஞ்சினர் (1 : 56 : 272)
செஞ்சுடர் வேலின் நெஞ்சிடம் போழ (3 : 6 : 16)
தீயுறு வெண்ணெயின் உருகு நெஞ்சம் (1 : 33 : 153)
தாய்முகத்து யாத்த கன்றிற் புலம்பியும் (1 : 35 : 53)
தீமுகத் திட்ட மெழுகிற் றேம்பியும் (1 : 35 : 52)
செங்கேழ்த் துருத்தியின் அங்காந்து உயிர்த்து (1:53:26)
நெய்பெய் அழலிற் கையிகந்து பெருகி (1 : 42 : 235)
புனல்கொல் கரையின் நினைவனள் விம்மி (1 : 33 : 197)
மகக்காண் தாயின் மிகப்பெரிது விதும்பி (4 : 7 : 40)
வெருவுறு மஞ்ஞையிற் றெருமந்து இகலி (1 : 46 : 214)
தாய்காண் கன்றிற் காவலன் விரும்பி (2 : 10 : 7)
பருகுவனன் போலப் பல்லூழ் முயங்கி (4 : 8 : 108)
பற்றிடம் பெருது பாம்பெனப் பதைப்ப (1 : 46 : 213)

அழகுவமைகள்

திருமதி என்னத் திலக வாண்முகம் (2 : 7 : 105)
கூடுமதி அன்ன சேடணி திருமுகம் (2 : 15 : 79)
தாமரை அன்னதன் தகைமுகம் (2 : 16 : 15)
திருவில் அன்ன சென்றேந்து புருவம் (2 : 16 : 25)
நீலத் தன்ன கோலத் தடங்கண் (1 : 47 : 244)
செருவேல் பழித்த சேயரி நெடுங்கண் (2 : 15 : 85)
சேற்றெழு தாமரை மலரிற் செங்கண் (2 : 18 : 118)
பவழக் கடிகை பழித்த செவ்வாய் (2 : 15 : 81)
அணைபுரை மென்மை அமைபடு பணைத்தோள் (2:15:72)
மணிமுகிழ்த் தன்ன மாதர் மென்முலை (1 : 33 : 116)
ஆடுகொம் பன்ன அம்மென் மருங்குல் (3 : 9 : 31)
துடிநடு அன்ன துளங்கிய நுசுப்பு (2 : 15 : 66)
அரவுப்பை அன்ன ஐதேந்து அல்குல் (2 : 19 : 147)
செந்தளிர் பொருவச் சிவந்த கை (4 : 12 : 221)
காந்தட் பூந்துடுப் பன்ன முன்கை (2 : 15 : 73-74)
கிள்ளை வாயின் அன்ன வள்ளுகிர் (4 : 7 : 42)
வாழையந் தாள்உறழ் குறங்கு (4 : 11 : 74)
ஆமைக், கூன்புறம் பழித்த கோலப் புறவடி(2:15:57-58)
பூவினுட் பிறந்த புனையிழை போல (1 : 40 : 229)
மாசில் தாமரை மலர்மகள் அனையோர் (4 : 12 : 6)
மணிப்பளிங் கன்ன மாசில் வனப்பு (2 : 15 : 53)
வேனில் வள்ளியின் மேனி வாடி (1 : 55 : 12)
தீயுறு தளிரின் மாநிறம் மழுங்க (1 : 56 : 115)
நாடக மகளிரின் நன்கனம் உலாவி (4 : 12 : 119)

பழமொழி வகை

இடியே றுண்ட நாகம் போல (2 : 10 : 112)
நாவாய் கவிழ்த்த நாய்கன் போல (2 : 9 : 46)
பழந்தீர் மரவயிற் பறவை போல (2 : 9 : 112)
நித்திலம் பொதிந்த இப்பி போல (2 : 11 : 48)

ஆழ்விடத் துதவும் அரும்புணை போல (3 : 1 : 42)
பள்ளம் படரும் பன்னீர் போல (3 : 1 : 89)
தீந்தேன் கலந்த தேம்பால் போல (4 : 7 : 192)
திங்களைச் சூழ்ந்த வெண்மீன் போல (1 : 56 : 278-79)
மதியம் பெற்ற வானகம் போல (1 : 57 : 109)
வான்மதி இழந்த மீனினம் போல (1 : 47 : 260)
படுமுகில் மீமிசைப் பனிமதி போல (5 : 8 : 79)
கருமுகில் கிழிக்கும் கடுவளி போல (3 : 17 : 51)
எல்லை இகந்த இருங்கடல் போல (3 : 19 : 208)
அரிமா வளைந்த நரிமாப் போல (1 : 56 : 25)
ஆட்டிடைப் பாயும் அரிமாப் போல (2 : 9 : 160)
ஆளி கண்ட ஆனை இனம்போல் (1 : 56 : 44)
வலைநாண் இமிழ்ப்புண் வயமாப் போல (1 : 56 : 54)
புல்வாய் இனத்தில் புலிபுக் காங்கு (1 : 43 : 75)
கூட்டிடைப் பட்ட கோட்புலி போல (5 : 3 : 10)
அள்ளற் பட்ட போதகம் போல (2 : 9 : 100-01)
நச்சுயிர்ப் பனை இய நாகம் போல (1 : 35 : 246)
தனிக்கன் றுள்ளிய புனிற்றுப் போல (2 : 18 : 10)
கானத் தீயிடைக் கணமயில் போல (2 : 18 : 86)
மறுசுழிப் பட்ட நறுமலர் போல (4 : 13 : 141)
சூறை வளியிடைச் சுழலிலை போல (4 : 12 : 200)
ஊக்க வேந்தன் ஆக்கம் போல (3 : 5 : 20)
திருமகட் பரவும் ஒருமகன் போல (2 : 16 : 68)
பெயர்ச்சியில் உலகம் பெற்றான் போல (1 : 56 : 172)
மாமலை தாங்கும் மதுகையள் போல (1 : 53 : 135)
கூற்றுவன் இமிழ்த்த பாசம் போல (1 : 47 :247-48)
ஒளிகண் கூடிய நளிமதி போல (3 : 3 : 82)
சுடுநா ராசஞ் செவிசெறித் தாங்கு (1 : 47 : 238)
இடுகளி யானை எதிர்கண் டாங்கு (3 : 27 : 145)
குளிர்நீர் நெடுங்கடல் கொண்ட அமிழ்தென (3 : 24 : 111)
எரிவாய்ப் பட்ட பன்னற் பஞ்சி யன்ன (3 : 24 : 114-15)

தன்மை

காற்றெறி வாழையிற் கலங்கி (1 : 43 : 138)
கன்றுகாண் கறவையிற் சென்று (2 : 10 : 41)
தாயில் கன்றின் ஆய்நலம் தொலைஇ (3 : 7 : 73)
தழலுறு புண்மேற் கருவி பாய்ந்தென (4 : 13 : 130)
அம்புறு புண்ணின் அந்திவந் திறுப்ப (1 : 54 : 46)
வேலெறிந் தன்ன வெம்மைத் தாகி (4 : 5 : 21)
அரும்பெறல் யாக்கையின் அகலும் உயிர்போல் (4 : 7 : 81)
நோயற எரியும் மருந்தோ ரன்ன (4 : 7 : 152)
அமிர்துகலந் தளித்த அருளினன் ஆகி (4 : 10 : 180)
வெருவுறு பிணையின் விம்மாந் தெழாஅ (3 : 24 : 196)
பைசொரிந் தன்ன பாலில் தோல்முலை (1 : 43 : 156)
தேர்க்கால் ஆழியிற் சுழன்றவை தொழில்கொள (4 : 12 : 205)
மாசில் வானத்து மதிவிரிந் தன்ன (2 : 12 : 42)
பகல்மதி போலப் பசந்த குமரன் (5 : 8 : 146)
பசும்பொற் புளகம் விசும்புபூத் ததுபோல் (1 : 57 : 26)
ஒல்லென் மாக்கடல் உவாஉற் றன்ன (3 : 16 : 25)
கடுவளி உற்ற கடலின் உராஅய் (3 : 17 : 251)
கடல்புரண் டெனப்பயந் தழுதனள் (4 : 13 : 47)
மலைத்தொகை யன்ன மாட மாநகர் (3 : 16 : 29)
யாறுகிடந் தன்ன வீறுசால் வீதி (5 : 9 : 41)
வயிரத் தன்ன வைந்நுனை மருப்பு (4 : 5 : 72)
ஊனென மலர்ந்த வேனில் இலவம் (2 : 9 : 139)
அரநுதி அன்ன பரல்முரம்பு அடுக்கம் (1 : 52 : 6)

கொங்குவேளின் உவமைகள் தனித்தன்மை வாய்ந்தவை. புதிய உவமைகள் பலவற்றை அவர் படைத்துத் தந்துள்ளார். வாழ்க்கையில் தாம் கண்ட நிகழ்ச்சிகளையும் அறிவால் உணர்ந்தவைகளையும் அரிய உவமைகளாக வெளிப்படுத்திச் சிறப்பிக்கிருர்.

மருட்சி

ஒன்றைக் கண்டு பயந்திருக்கும் போது அதுபோன்ற தோற்றங் கொண்ட வேறு எதைப் பார்த்தாலும் திகிலே உண்டாகும். நளகிரி என்ற யானை மதம் கொண்டு உச்சயினி நகரைக் கலக்கியது. மக்கள் பெருந்தொல்லைக்கு ஆளாயினர். உதயணன் அதனை அடக்கினன். நகர் மகிழ்ந்திருந்தது. யூகியின் தூண்டுதலால் பாகீரதி என் பாள் தெய்வ ஆவேசம் கொண்டவளாய் நடித்து, மக்கள் நீராட்டு விழாவினைக் கொண்டாட வேண்டுமென்றும் இல்லையேல் நளகிரிக்கு மீண்டும் மதம் பிடிக்கும் என்றும் கூறினள். முன்னரே நளகிரியின் தொல்லைக்கு ஆளாகி யிருந்த மக்கள் அச் சொற்களைக் கேட்டதும் பெரிதும் வெருவினர். இதனை விளக்க அரியதோர் உவமை கூறப் படுகிறது. நாய் ஒன்று பன்றியால் தாக்குண்டு புண்பட்டு உயிர் தப்பி ஓடியது; வீடு சேர்ந்ததும் சோறு சமைக்கும் பானையைக் கண்டது. கரிய சோற்றுப் பானை பன்றிபோல் தோன்றியதால் அதைக் கண்டு அஞ்சி நடுங்கியது.

பன்றியெறி யுற்ற புண்கூர் ஞமலி
குன்று அடிசிற் குழிசி காணினும்
வெரீஇ அன்ன,[1]

நகர மக்கள வெருவினர். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயே!

பட்டும் படாப் பேச்சு

ஒருவரிடம் பலர் வந்து ஒன்றை வேண்டும்போது அவர் கூறும் மறுமொழி, கேட்பவர் தங்கட்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கைக்கு இடம் தந்தும் அதே வேளை அவர் எவ்விதப் பிடியும் கொடுக்காமலும் பேசுவதற்குக் குரங்கு தன் குட்டி யைத் தாங்குவது உவமையாகக் கூறப்பட்டுள்ளது. குட்டி

---

[1] பெருங். 1 : 37 : 252 - 54

தன்னை நன்றாகப் பற்றிக் கொள்ளத் தாய்க் குரங்கு இடந் தருகிறதேயன்றித் தான் குட்டியைப் பற்றிப் பிடிப்பதில்லை. இவ் வுவமையை ஆசிரியர் கொங்குவேள் பிரச்சோதனன் மூலம் பொருத்திக் காட்டுகிறார்.

மரணிவர் குரங்கின் மகக்கோட் போல
நிலைமையொடு தெரிதரு நீதிய னாகி
ஆவது துணிதுணை ஆசையின் நிறீஇ,[2]

பிரச்சோதனன் பேசினான். வாசவதத்தையை மணம் பேச வந்த பிற நாட்டுத் தூதுவரிடம் அவன் பேசிய தன்மை, அத் தூதுவர் வாசவதத்தையைத் தம் மன்னனுக்குத் தரக்கூடும் என்ற எண்ணத்தைக் கொள்ளச் செய்தது. ஆனால் பிரச்சோதனனோ வெளிப்படையாக எதுவுமே கூற வில்லை. மகவைக் கொண்ட மந்தியின் தன்மையாக அவன் பேச்சு அமைந்தது.

தந்தை உள்ளம்

வாசவதத்தை குளிப்பதற்காகச் . சாலில் நீரைப் பெய்து சூரிய வெப்பத்தில் சுட வைத்தனர். மேலுள்ள நீர், வெப்பத்தால் இளஞ் சூடாய் இருந்தது. சாலின் ஆழத்தே இருந்த நீரோ தண்ணெனக் குளிர்ந்து இருந்தது. மேற்பரப்பில் வெதுவெதுப்பாயும் ஆழத்தில் குளிர்ச்சியாயுமுள்ள தன்மைக்கு அரியதோர் உவமை காட்டப்படுகிறது. தந்தை மகனிடம் கொள்ளும் வெகுளி வெளித் தோற்றத்தில் கடுமையாகத் தென்படும்; ஆனால் உள்ளத்தின் ஆழத்திலோ அன்பு நிறைந்திருக்கும்; வெளிப்படக் கடிந்து கொண்டாலும் உள் மனத்தில் மகன்பால் ஈரம் படிந்திருக்கும். அதுபோலச் சாலின் மேற்பரப்பில் நீர் வெதுவெதுப்பாயும் உள்ளே குளிர்ச்சியாயும் இருந்ததாம்!

---

2. பெருங். 1 : 36 : 53-55

**தன்ன மகவயிற் றவாஅத் தாதைக்கு
முன்ன ரெழுந்த முழுக்கதம் போலப்
புறவயிற் பொம்மென வெம்பி அகவயின்
தண்மை அடக்கிய நுண்ணிறைத் தெண்ணீர்,[3]**

சாலில் இருந்தது. தந்தையர் முகம் கடுமையைக் காட்டினும் உள்ளம் தண்மையை அடக்கியது. கடிதோச்சி மெல்ல எறிவதன்றோ தந்தை நெஞ்சம்!

குளிர்நீரைத் தண்ணீர் என்றும் சுடுநீரை வெந்நீர் என்றும் கூற வேண்டும். ஆனால் சுடுநீரை, வெந்தண்ணீர் என்று பேச்சு வழக்கில் கூறிவருவதை அறிவோம். கொங்குவேள் காட்டியுள்ள உவமை கொண்டு, 'வெந்தண்ணீர்' என்பதற்கும் ஒரு சிறந்த பொருள் கூறமுடியுமெனத் தோன்றுகிறது. மேற்பரப்பு வெதுவெதுப்பாயும் அடிப்புறம் குளிர்ந்துமுள்ள சாலின் நீரை, 'வெந்தண்ணீர்' என்பது பொருத்தம் தானே! மகன்பால் வெகுளி கொண்ட தந்தை உள்ளம் வெந்தண்ணீர்!

திருத்தப்படாத மகன்

வாசவதத்தை திருமணம் நடந்ததும் உதயணன், 'காலையும் பகலும் கையறு மாலையும் ஊர்துஞ்சு யாமமும் விடியலும்' என்ற கால வேறுபாடின்றி அவள் இன்பத்திலேயே ஆழ்ந்து கிடந்தான். தலை நகரை ஆருணி அரசன் கைப்பற்றி ஆண்டதையும் கருதவில்லை. தம்பியரையும் நினைக்கவில்லை. அரச கருமங்களையும் ஆற்றவில்லை. மனம் போனவாறு வாசவதத்தையிடமே வதிந்து வந்தான். இச்செயல் தந்தையாலே தண்டித்துத் திருத்தப்படாதவனும் தானே சிந்திக்கும் உணர்ச்சியில்லாதவனுமான பேதை மகன் தான் செய்ய வேண்டியதை ஆய்ந்து தெளிந்து செய்யாது மனம் போன போக்கில் செல்வது போலாயிற்று என்கிறார் கொங்குவேள்.

---

3. பெருங். 1 : 57 : 92 - 95

உதயணன்,

> தந்தையொ டொறுக்கப் படாஅன் சிந்தை
> அகனுணர் வில்லா மகனே போலத்
> தன்மனம் பிறந்த ஒழுக்கினன் ஆகி,[4]

வாசவதத்தையுடனேயே உறைந்து வந்தான்.

மகனை ஈன்று புரத்தல் தாயின் கடமை. அவனைச் சான்றோனாக்குதல் தந்தையின் கடமை. தக்க முறைகளை மேற்கொண்டு தந்தை அக் கடமையை ஆற்றுவிட்டால் மகன் 'தான்தோன்றியாகத்' திரியும் நிலைதான் ஏற்படும்.

பிச்சைக்காரன் பெற்ற பொன்

வாசவதத்தையை மணம் பேசப் பிறநாட்டுத் தூதுவர்கள் வந்த செய்தியைச் சாங்கியத்தாய் அவளிடம் கூறிய போது வாசவதத்தை தான் உதயணனை விரும்பியிருப்பதை மொழிந்தாள்; கேட்ட சாங்கியத்தாய் எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டாள். அவள் மகிழ்ச்சிக்குக் கொங்குவேள் கூறும் உவமை அவளடைந்த மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சியை ஊட்டுவதாய் உள்ளது. பிச்சை கேட்டுச் சென்றவனுக்குப் பிச்சையிட்டவர் பிச்சையோடு தன் கையிலிருந்த பொன் வளையலையும் சேர்த்து இட்டால் எத்தகைய மகிழ்ச்சியைப் பிச்சைக்காரன் அடைவானோ அத்தகைய மகிழ்ச்சியைச் சாங்கியத்தாய் அடைந்தாள் என்கிறார்.

> ஏற்ற முன்கைத் தொடிவீழ்ந் தற்றால்,[5]

சாங்கியத்தாய் பெருமகிழ்வு கொண்டனள். வாசவதத்தை உதயணனை விரும்ப வேண்டும், அவனையே மணக்க வேண்டும் எனச் சாங்கியத்தாய் தன்னுளே நினைத்திருந்

---

4. பெருங். 2 : 9 : 194 - 96
5. பெருங். 1 : 36 : 119

தாள். ''மணந்தால் உதயணனையே மணப்பேன்; இன்றேல் உயிரை மாய்த்துக் கொள்வேன்'' என்று வாசவதத்தை அவளாகவே சொன்னது அத் தாய்க்குப் பிச்சையை எதிர்பார்த்தவனுக்குப் பொன் வளையல் கிடைத்தது போன்று உவமை கூறமுடியா மகிழ்ச்சியை ஊட்டியது.

கனவும் நனவும்

எண்ணிய ஒன்று ஈடேறும்போது ஒருவன் அடையும் மகிழ்ச்சிக்கு வறுமையால் வாடிய ஒருவன் கனவில் தான் கண்ட பொன் குடத்தை நனவிலே பெற்றால் அடையும் மகிழ்ச்சி உவமையாக்கப்பட்டுள்ளது. யூகி உச்சயினி நகருக்குத் தீயூட்டினான். அவ் வேளை கடிய சூறைக் காற்றுத் தோன்றி நிலவுலகத்தையே புரட்டிவிடுவதுபோல எட்டுத் திசைகளிலும் சுழன்று வீசியது. இதனால் தீ விரைந்து பெருகுதலை யாரும் தடுக்க முடியாதாயிற்று. அடக்க முடியாக் குழப்பம் தோன்ற வேண்டும், அதைப் பயன்படுத்தித் தான் எண்ணியதை முடிக்க வேண்டுமென்பதுதான் யூகியின் எதிர்பார்ப்பு. அந்த எதிர்பார்ப்பைக் காற்று நிறைவேற்றியது.

எனவே அவன்,

> **கனவிற் கண்ட கண்ணுறு விழுப்பொருள்**
> **நனவிற் பெற்ற நல்குர வன்போல்**[6]

பெருமகிழ்ச்சி யுற்றான்.

பெற்றதை இழந்தவன்

வாசவதத்தையைக் கனவில் கண்ட உதயணன் தழுவச் செல்கையில் அவள் உருவம் மறைந்தது; துயிலும் கலைந்தது. உயிரனையாளைக் கனவில் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சி

---

6. பெருங். 1 : 43 : 104 – 05

இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. பெறுதற்கரிய மணியைப் பெற்ற வறியவன் ஒருவன் அதனை மிக ஆழமான மடுவில் நழுவ விட்டு வருந்தி நின்ற நிலையை அடைந்தான் உதயணன்.

பெருமணி பெற்ற நல்குர வாளன்
அருமணி குண்டு கயத்திட் டாங்கு[7]

எல்லையற்ற வருத்தம் கொண்டான்.

புலவர் தொழில்

உதயணனுக்குத் திருமணமான ஆரும் திங்கள் உடல் மயிர் களையும் நிகழ்ச்சி நடைபெற்றது. அம் மயிர்வினைக் கல்யாணத்திற்குப் பந்தல் அமைக்கப்பட்டது. பந்தல் வினைச் சிற்பியர் நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்து, கல், ஓடு, புல், உமி, மயிர், என்பு முதலியனவும் இவை போல்வனவுமாகிய பொருந்தாப் பொருள்களை மண்ணினின்றும் அரித்தெடுத்து அகற்றி, மேடும் பள்ளமுமின்றி விரவி, ஒப்பனைப் பொருள்களால் ஒப்பனை செய்து பந்தலிட்டனர். இச் செயல் நல்லிசைப் புலவர் செய்யுள் செய்யுங்கால் பொருளற்ற பதர்ச் சொல், நுண்பொருளில்லாத எண் பொருள் முதலியவற்றை ஆராய்ந்து நீக்கி, பொருள் நிறைந்த சொல்லால் அதனைப் புனைவது போன்றிருந்தது.

பதர்ச்சொல் பருப்பொருள் பன்னுபு நீக்கிப்
பொருட்சொல் நிரப்பும் புலவர் போலக்
கல்லும் ஓடும் புல்லும் கரியும்
உமியும் மயிரும் என்பும் உட்பட
அமைவில் தன்மைய அரித்துடன் களைந்து,[8]

பந்தலிட்டனர். பந்தலை மாலை முதலியவற்றால் அலங்கரித்து அழகை மிகுவிப்பதுபோல, புலவர் பெருமக்களும்

---

7. பெருங். 4 : 7 : 89 - 90
8. பெருங். 2 : 4 : 51 - 55

ஓசை நயத்தோடு நடக்கும் செய்யுள்களை அணி முதலியவற்றால் அழகு செய்வர்.

சுட்டுக் கோல்

கௌசாம்பி நகரில் அரண்மனைக்கு மட்கலம் வனையும் குயவன் ஒருவன் இருந்தான். உதயணன் சிறைப்பட்டு உச்சயினிக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அவன் நண்பர்கள் மாற்றுருவுடன் அவ் வூரை அடைந்தனர். அந்த மறவர் கூட்டத்துள் குயவனும் ஒருவன். துன்பம் நேர்ந்த காலத்தில் தன் இன்பத்தைத் துறந்து தீயினுள் புகும் சுட்டுக் கோல் போன்று நட்பின் பொருட்டுத் தன் நாட்டினைத் துறந்து வேந்தனைச் சிறைவீடு கொள்ளும் அவாவினால் உச்சயினி அடைந்தான்.

> இட்டிடர்ப் பொழுதின் இன்பம் நீக்கிக்
> கட்டழற் புகூஉம் சுட்டுறு கோல்போல்
> நட்டை யிட்டு நாட்டகம் துறந்துதம்
> பெருமகற் கொள்ளும் வேட்கையிற் போந்த
> குயமகன் [9]

என்று அவன் பாராட்டப்படுகின்றான். துன்பத்தில் கைவிடாமல் ஒருவருடன் தொடர்ந்து, பொருளுடன் கூட நெருப்பில் நுழைகின்ற உலையாணிக்கோல்போல இன்னலைப் பொருட்படுத்தாது உடனிருந்து உதவுகின்ற தன்மையுடையவரே உண்மை உறவினராவர்.

வித்தோம்பும் உழவன்

விளைவை எதிர் நோக்கும் உழவன் விளைச்சலுக்கான வித்தினை அறிந்து, தேடி, அரணிட்டுப் பாதுகாக்கின்றான். அதுபோல வீடுபேருகிய விளைவினை வேண்டுவோர் அதற்கு வித்தாகிய தவத்தினை அரணிட்டுக் காக்க வேண்டும்.

---

9. பெருங். 2 : 8 : 154 - 58

வளைவித் தாரும் வாயில் நாடி
விளைவித் தோம்புதும் வேண்டிய தாமென
ஒடுக்கி வைக்கும் உழவன் போல
அடுத்த ஊழிதோ றமைவர நில்லா
யாக்கை நல்லுயிர்க்கு அரணம் இதுவென
மோக்கம் உன்னிய முயற்சியே ளுகி,[10]

தவம் செய்து இருப்பதாக விரிசிகையின் தந்தை உதயணனிடம் கூறினர். விளைவுக்கு மூலம் வித்து. வீடுபேற்றுக்கு மூலம் தவம்.

கரை இகவா அலை

சூறைக் காற்றுப் பெரிதும் கலக்கினலும் கடலலை தன் எல்லையைக் கடவாது அடங்குகின்றது. அது போன்றே எல்லையற்ற துயரம் உள்ளத்தைக் கலக்கினலும் நண்பர் சொல்லைக் கடக்காத தன்மை வேண்டும்.

காலம் கலக்கக் கலக்கமொடு உராஅய்
ஞால முழுதும் நவைக்குற் றெழினும்
ஊர்திரை உடைய ஒலிகெழு முந்நீர்
ஆழி இறத்தல் செல்லாது ஆங்குத்
தோழரை இகவாத் தொடுகழற் குருசில்[11]

என உதயணன் பாராட்டப்பட்டுள்ளான். புரண்டு புரண்டு அலைந்தாலும் கரை மீருது அடங்கி உட்செல்லும் அலை, நண்பரை மீறக் கூடாது என்ற நல்ல பாடத்தை நமக்குக் கற்றுத் தருகிறது.

நோயே மருந்து

தன்னைப் பாராது சுவரில் இருந்த ஓவியத்தையே உதயணன் உற்று நோக்கிக் கொண்டிருந்தமையால்

10. பெருங். 4 : 15 : 33 - 38
11. பெருங். 2 : 19 : 28 - 32

பதுமாபதி ஊடல் கொண்டாள். அது கண்ட உதயணன், ''கள்ளால் உற்ற நோய் அக் கள்ளாலேயே தீர்தலன்றிப் பிறிதொன்றால் தீராது. அதுபோல என்னால் வந்த இந் நோய் என்னாலேயே தீர்தல் வேண்டும்'' எனக் கருதினான்.

> **நறவினை தேறல் உறுபிணி போலப்**
> **பிறிதின் தீராப் பெற்றி நோக்கி,**[12]

இனிய மொழி கூறி ஊடல் தீர்க்க முயன்றான். கள்ளால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சி அக் கள்ளைக் குடிப்பதாலேயே நீங்கும். அதுபோல ஊடலுக்குக் காரணமாயிருக்கும் காதலனே ஊடல் தீர்க்கும மருந்துமாகிறான்!

இல்லின் தேய்வை

தூசி படிந்துள்ள நீரில் தேற்றாங் கொட்டைத் தேய்வை இட்டால் தூசி அடியிற் படிந்து நீர் தெளிவடையும். உச்சயினி நங்கையர் கொண்ட ஊடல் அகல, ஆடவர் யாழெடுத்து இனிமையுற மீட்டினர். மகளிர் மனத்திற் படிந்திருந்த ஊடலாகிய மாசு யாழொலியாகிய தேற்றாங் கொட்டைத் தேய்வால் அகன்றது.

> **இல்லின்**
> **படுகாழ்ப் படுத்துத் தேய்வை உரீஇக்**
> **கலுழி நீக்கும் கம்மியர் போல**
> **மகர வீணையின் மனமாசு கழீஇ,**[13]

மகிழ்ந்து உறைந்தனர் நகர நம்பியர்.

மழையிற் சிக்கிய குரங்கு

உதயணன் படை மறவர், நள்ளிரவில், ஆருணி மன்னன் அரண்மனைக்குள் புகுந்து மன்னனும் பிறரும்

---

12. பெருங். 2 : 16 : 63 - 64
13. பெருங். 1 : 35 : 215 - 18

தூங்கியிருந்தபொழுது பேராரவாரம் செய்தனர். அரண்மனை எங்கும் ஒரே கலக்கம். மன்னன் திடுக்கிட்டு எழுந்து அங்குமிங்குமாக ஓடினான். நள்ளிரவில் திடீரெனப் பெய்த பெரு மழையால் விழிப்புற்ற ஆண் குரங்கு அங்குமிங்கும் தாவிக் கீச்சிடுவதுபோல இருந்தது மன்னவன் நிலை.

பெருமழை நடுவண் இருளிடை எழுந்ததோர்
கடுவன் போலக் காவலன் உரறி,[14]

ஓடினான். எதிர்பாராத நிலையில் திடீரென்று தாக்குதல் நடைபெற ஒன்றும் புரியாமல் உளறி ஓடுகின்ற தன்மைக்கு மழையிடைப்பட்ட குரங்கைக் காட்டியுள்ளமையில் நகைச் சுவை நயம் மிளிரக் காண்கிறோம்.

மரமேறிய குரங்கு

நீர்த் துறையில் நாவாய் கட்டும் மள்ளர்க்குக் கள் காய்ச்சிய பெண்ணின் கையிலிருந்த வெள்ளி வள்ளம் தவறிக் கீழே விழுந்தது. அருகிருந்த குரங்கு அதைக் கவ்விக் கொண்டு மரத்தில் விரைந்து ஏறியது, விண்ணிலிருந்து நழுவி வீழ்ந்த திங்களைத் தெய்வ மகள் ஒருத்தி எடுத்துக் கொண்டு விண்ணை நோக்கிச் செல்வது போன்றிருந்ததாம்.

வீழ்ந்த திங்களை விசும்புகொண் டேறும்
தெய்வ மகளிரின் ஐயுறத் தோன்றி,[15]

மரத்தில் குரங்கு துள்ளி ஏறியது.

நீதி புகட்டல்

காட்டிலிருந்து புதிதாகக் கைப்பற்றி வந்த யானையைப் பயிற்றுவிக்கும் பாகர் போன்று நல்ல கருத்துகளை இடைவிடாது எடுத்துக் கூறி அறிவு புகட்ட வேண்டும்.

---

14. பெருங். 3 : 24 : 162 – 63
15. பெருங். 1 : 40 : 74 - 75

புதிதிற் கொண்ட பூக்கவின் வேழம்
பணிசெயப் பிணிக்கும் பாகர் போல
நீதி யாள ராதி யாகிய
திறத்திற்[16]

காட்ட வேண்டுவது கற்றறிந்தார் கடன். புதிதாகக் கொண்ட யானை எளிதில் கட்டுப்படாதாயினும் பாகர் எல்லா முயற்சியும் எடுத்து அதனைப் பிணிப்பர். அதுபோல் நீதிகளைக் கேட்போர் எளிதில் கொள்ளாராயினும் பன்முறையும் எடுத்துச் சொல்லி அவற்றை ஏற்கச் செய்ய முயல வேண்டும்.

தன் மகவை வருத்தியேனும் ஆவின் பாலை வாயில் ஊட்டுமோர் அன்புடைய தாய் போன்று இன்னு செய்தும் நன்மை செய்யவே முற்பட வேண்டும்.

நலத்தகு சேதா நறுநெய்த் தீம்பால்
அலைத்துவாய்ப் பெய்யும் அன்புடைத் தாயின்
இன்னு செய்தும்,[17]

ஒருவனை நன்னிலைக்கண் நிறுத்த வேண்டுவது நல்லோர் கடன்.

கசப்பு மருந்தினைத் தேனில் சேர்த்துக் குழந்தைகளுக்குக் கொடுக்கும் மருத்துவர்போல, ஒருவன் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் கடினமானதாயினும் அவன் மனங் கொள்ளும்படி இனிமையாகக் கூறி அவனை நெறிப்படுத்த வேண்டும்.

தேன்சுவைக் கொளீஇ வேம்பின் ஊட்டும்
மகாஅர் மருந்தாளர்[18]

போல அரிய நீதிகளை இனிய முறையில் புகட்டுவது அறிவாளர் செயல்.

---

16. பெருங். 3 : 1 : 34 - 37
17. பெருங். 2 : 17 : 6 - 8
18. பெருங். 2 : 11 : 173 - 74

புணை பெறுதலும் அகல்தலும்

பாஞ்சால மன்னன் தன் நாட்டைக் கைப்பற்றியதையோ, தான் சிறைப்பட்டுச் சிறுமையடைந்ததையோ சிறிதும் சிந்தியானாய், ஆற்று வெள்ளத்திலே ஆழ்ந்துவரும் ஒருவன் அங்குப் பெற்றதொரு புணையையே பற்றிக் கொண்டு ஆறு சென்ற போக்கில் செல்வதுபோல உதயணனும் வாசவதத்தையைப் பெற்றதொரு சிறப்பையே சிந்தையில் இருத்தி, அவளோடு ஒழுகுதல் ஒன்றையே விரும்பிப் பிற எதையும் நினையாதவன் ஆயினான். இங்கு,

> அருஞ்சுழி நீத்தத்து ஆழும் ஒருவன்
> பெரும்புணை பெற்ற பெற்றி போல[19]

எனப் புணை பெறுதல் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

உதயணன் வாசவதத்தையோடு ஏறி வந்த யானையை நோய் பற்றியது. அது விரைவில் வீழ்ந்து இறக்க இருப்பதை அறிந்த உதயணன் வயந்தகனிடம், "நண்பனே! நொய்யதொரு தெப்பத்தைக் கொண்டு வெள்ளத்தைக் கடக்கப் புகுந்த ஒருவனுக்கு ஆழமான இடத்தில் அத் தெப்பம் கையினின்று தழுவிச் சென்றாற் போன்று யானை நம்மைக் கைவிட இருக்கிறது" என்று கூறினான். இங்கு,

> நொப்புணை வலியா நுரைநீர்ப் புக்கோற்கு
> அப்புணை அவல்வயின் அவன்கை தீர்ந்தாங்கு[20]

எனப் புணை அகல்வது உவமையாக்கப்பட்டுள்ளது.

காது கொடுத்துக் கேட்டல்

கோடபதி யாழ், காட்டில் மூங்கிலிற் சிக்கிக் கிடந்தது. காற்றில் மரம் அசைந்த போதெல்லாம் அதனின்று இனிய

---

19. பெருங். 2 : 17 : 122 23
20. பெருங். 1 : 53 : 3 - 4

ஒலி எழுந்த வண்ணம் இருந்தது. அந்த இசையால் மயங்கிய யானைகள் அவ் விடத்திலிருந்து அகலாவாய்க் காதுகளை மேல் நோக்கிச் சாய்த்து விண்ணுலகத் தேவர்கள் ஓதும் மந்திரத்தைச் செவி கொடுத்துக் கேட்பதுபோல யாழ் இசையைக் கேட்ட வண்ணமிருந்தன.

அந்தர மருங்கில் அமரர் கூறும்
மந்திரம் கேட்கும் செவிய போல[21]

யானைகள் நின்றன.

தலை குனிந்து நிற்றல்

உதயணன் வாசவதத்தையைக் கைப்பற்றிச் சென்ற செய்தியை வாயிற் காவலன் வராகன் என்பான் பிரச்சோதனனிடம் கூற வந்தான். வாயிற் காவலனின் தோற்றத்திலிருந்து நடக்கக் கூடாத ஒன்று நடந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்த மன்னன் நடந்தது யாது என விரைந்து கேட்டான். வராகனோ சொல்ல அஞ்சியவனாய்த் தலை குனிந்து நின்றான். கேட்டவன் மன்னன்; அவன் விடையளிக்க வேண்டியதோ அவனைப் பார்த்து. மாறாகக் குனிந்து நின்று நிலத்தைப் பார்த்தான். இது நிலமகள் அவனை ஏதோ வினவினாற் போலவும், அதற்கு விடைகூற அவளை நோக்கியிருந்தது போலவும் இருந்தது என்கிறார் ஆசிரியர்.

இருநில மடந்தை திருமொழி கேட்டுஅவட்கு
எதிர்மொழி கொடுப்போன் போல[22]

வராகன் குனிந்து நின்றான்.

காதலர் நெஞ்சம்

உதயணன், வாசவதத்தை இருவரும் கண்ட அளவில் காதல் கொண்டனர். ஒருவரை ஒருவர் நினைந்து உருகி

---

21. பெருங். 4 : 3 : 85-86
22. பெருங். 1 : 47 : 60-61

ணர். ஒரு கணமும் ஓய்வின்றி ஒரே எண்ணத்தில் சுழன்று கொண்டிருந்த உள்ளம் திகிரியின் சுழற்சியைப் போல ஆயிற்று.

இருவர் நெஞ்சமும் இடைவிடல் இன்றித்
திரிதரல் ஓயாது திகிரியிற் சுழல,[23]

இரா முழுவதும் காதல் நினைவுகளால் அலைப்புண்டு வருந்தினர். கடலிலே கிடந்து தத்தளித்துத் துன்புற்றோர்க்குக் கரை தோன்றியதுபோலக் காலை தோன்றியது.

முழங்குகடற் பட்டோர் உழந்துபின் கண்ட
கரையெனக் காலை[24]

மலர்ந்தது. இரவு பட்ட தொல்லைக்கு விடியல் ஒரு மருந்து.

மலர்ந்தும் மலராத கண்

பொய்கையில் கழுநீர், ஆம்பல், குவளை முதலியவற்றின் அரும்புகள் இதழ்களைத் திறந்தும் திறவாத நிலையிலே தேன் துளித்து மணம் கமழ்ந்தன. மலர்ந்தும் மலராத அப் பூக்கள், குலமகளிர் கணவனொடு புணர்ந்த துயிற் பொழுதில் இன்ப மெய்ப்பாடொழுகத் திறந்தும் திறவாதிருந்த கண்ணையொத்தன என்று கூறும் உவமை மிகவும் நயம் வாய்ந்ததாக இருக்கிறது.

புணர்ச்சி மகளிர் போகத்துக் கழுமித்
துயிற்கண் திறந்த தோற்றம் போல[25]

மலர்கள் இருந்தன என்று இன்பக் கிறக்கத்திலுள்ள மகளிர் கண்களுக்கு மலர்ந்தும் மலராத மலர் உவமையாக்கப்பட்டுள்ளது. புணர்ச்சி மகிழ்ச்சியால் கண்களில் கசிவு படர்ந்

---

23. பெருங். 1 : 33 : 199 - 200
24. பெருங். 1 : 33 : 208 - 09
25. பெருங். 2 : 15 : 22 - 23

திருப்பதுபோல் மலர்களும் இனிய மதுவைக் கொண்டுள்ளன.

பாவேந்தர் பாரதிதாசன் இதற்கு நேர் எதிர்மாறான சோம்பற் கண்களுக்கு அருமையானதோர் உவமையைக் கையாள்கிறார். காலை எட்டு மணி வரை துயின்று, தள்ளாடி எழுந்து வருகின்ற பெண்ணின் கண்ணை,

> பாதி திறந்த கோதையின் விழியோ
> பலகறை நடுவில் பதித்த கோடுபோல்
> தோன்றிற்று,[26]

என்கிறார்.

சான்றோர் வறுமை

தம் செல்வ வளம் வற்றி, நாள் தோறும் வறுமை என்னும் பெரு நெருப்புச் சுட்டாலும் மானத்தை இழத்தற்கு அஞ்சிச் சான்றோர் தம் நிலையிலிருந்தும் தளரமாட்டார். காமம் மீதூர்ந்த இடத்தும் அதனைப் பிறர்க்குக் கூறாத கன்னியரைப்போல இன்மை மிகுந்த இடத்தும் அத்துன்பத்தை மனத்திற்குள்ளேயே அடக்கிக் கொள்வரேயன்றிப் பிறரிடம் கூற எண்ணார்.

> கன்னி காமம் போல உள்ள
> இன்மை உரையா இடுக்க ணாளர்[27]

எனச் சான்றாண்மையாளர் பாராட்டப்படுகின்றனர்.

பெரியோர்க்குச் செய்த சிறு நன்மை

நீராட்டு விழாவின்போது ஊர் தீப்பற்றி எரியவே, வாசவதத்தையை யானை மீதேற்றிப் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்லுமாறு உதயணனைக் காவலர்

---

26. பாரதிதாசன் : இருண்ட வீடு : 4 : 9 - 10
27. பெருங். 4 : 2 : 24 - 25

வேண்டினர். சான்றோர்க்குச் செய்த நன்மை தினைத் துணையே ஆனாலும் அதனாற் பெறும் பயன் பனைத்துணையாய்ப் பெருகுவதுபோலக் காவலர் கூறிய சொல் வாசவதத்தையின் உள்ளத்தில் பெருமகிழ்ச்சியை விளைவித்தது.

> பெரியோர்க் குதவிய சிறுநன் றேய்ப்பக்
> கரவாது பெருகிக் கையிகந்து விளங்கும்
> உள்ளத் துவகை[28]

கொண்டவளாயினள் வாசவதத்தை.

பெரியோர் சொல்

உதயணன் வாசவதத்தையைக் கைப்பற்றிச் சென்றதறிந்த நகரப் பெரியோர்,

> கற்ற மந்திரி காட்டவும் காணாது
> பெட்டாங்கு ஒழுகும் பெருமகன் போல,[29]

கண்டவரெல்லாம் சுட்டிப் பழிக்கும் நிலைக்கு ஆளாகி விட்டனனே என்று தம் மன்னன் பிரச்சோதனனை எண்ணி வருந்தினர். பெரியோர் சொல் கேட்டு நடவாதவர் பிறர் பழிப்புக்கு ஆளாவர் என்பதனை இவ்வுவமை புலப்படுத்தி நிற்கிறது.

ஆன்றோர் நிலை

எல்லையற்ற தவ ஒழுக்கமுடைய சான்றோர் துளக்கற்று நிற்பர். மலை உயர்ந்து அசைவற்றுப் பெருமிதமாக நிற்பதை ஆன்றோரின் துளக்கற்ற தன்மைக்கு ஆசிரியர் ஒப்பிடுகிறார்.

---

28. பெருங். 1 : 44 : 138 - 40
29. பெருங். 1 : 46 : 307 - 08

அளப்பரும் படிவத்து ஆன்றோர் போலத்
துளக்க மில்லாத் திருத்தகு நிலைமைய[30] வாக

மலைகள் நின்றன. மலை குலைந்தாலும் குலையலாம். ஆயினும் சான்றோர் தம் நிலை குலைய மாட்டார் என்பதாலேயே சான்றோரின் அசைவற்ற நிலைமைக்கு மலையை ஒப்பிட்டு மலையின் நிலையைப் பொருளற்றதாக்கியுள்ளார்.

புன்சொற் கேட்ட பெரியோர்

புன்சொற்களைக் கேட்கப் பெரியோர் கூசுவர். அரண்மனை தீப்பற்றி எரிந்தபோது வாசவதத்தையைத் தேடி அலைந்த உயிர்த் தோழி காஞ்சனமாலையின் கூந்தலிலிருந்த பூக்களைத் தீயின் கொழுந்துகள் கதுவின. அதனால் அவை,

புன்சொற் கேட்ட
பெரியோர் போலக் கருகி[31]

வாடின.

பாரந் தாங்கும் பண்பு

அன்புமிக்க நெஞ்சுடைய நல்லோர் தம் கேளிரைத் தாங்குகின்ற செயல்போல இகணை மரங்கள் தம்மேற் படர்ந்திருந்த கொடிகளைத் தாங்கி நின்றன என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஈர நெஞ்சத்து ஆர்வ லாளர்
பாரந் தாங்கும் பழமை போல
இலைக்கொடிச் செல்வமொடு தலைப்பரந் தோங்கிய
கணைக்கால் இகணை.[32]

---

30. பெருங். 1 : 50 : 4 - 5
31. பெருங். 2 : 18 : 71 - 72
32. பெருங். 3 : 19 : 35 - 38

செல்வர்க்கு அழகு செழுங் கிளை தாங்குதல் என்பதற்கோர் எடுத்துக்காட்டாய் இகணை மரம் விளங்குகிறது.

சிறியோர் செல்வம்

செண்பகம் தேனொழுக விரிந்திருக்கும் நறிய பூ; ஆயினும் வண்டு உண்ணாது. வளமிருந்தும் வனப்பிருந்தும் வண்டுகள் மொய்க்காத சண்பகத் தேன், இரந்தோர்க்கு உதவாத சிறியோர் பெற்ற பெருஞ் செல்வம்போலப் பயனற்றதாகும்.

> உறியோர்க் குதவுதல் செல்லா தொய்யெனச்
> சிறியோர் உற்ற செல்வம் போலப்
> பொருசிறை வண்டினம் பொருந்தாது மறக்க
> நறுமலர்ச் செல்வமொடு நாட்கடி கமழும்
> செண்பகச் சோலை,[33]

சிறியோர் சேர்த்து வைத்த செல்வத்திற்குச் சான்றாக நிற்கிறது. அவர் சேர்த்து வைக்கும் செல்வம் பிறர்க்குப் பயன்படாது என்பதோடு அவரிடமிருப்பது பெருஞ் செல்வமேயானாலும் இரவலர் அவரை அணுகார் என்ற கருத்தும் இங்கே புலப்படுத்தப்பட்டுள்ளது. இக் கருத்து,

> அறுபதவண் டினங்குறுகி யறியாத சண்பகங்கள்
> நறவொழுக இதழ்விரியும் நறுமலர்பூத் துறுதோற்றம்
> குறைபெறுநர் அடைந்தறியாக் குறையிவறன் மாலையான்
> பெறலரிய பெருஞ்செல்வம் பெற்றிருத்தல் போலுமால்[34]

எனச் சீகாளத்திப் புராணத்திலும் எடுத்தாளப்பட்டுள்ளது.

சிறியோர் சிறுமை

எரியுண்டு சிதைந்த அரண்மனையில் வாசவதத்தையின் நகைகள் சிதறிக் கிடந்தன. ஒவ்வோரணிகலனக

---

33. பெருங். 2 : 14 : 32 - 36
34. சீகாளத். தென்கைலாய. 22

எடுத்துப் பார்த்து உதயணன் புலம்பினன். நெற்றிப் பட்டத்தைக் கண்டான். அவள் உயிரோடு இருந்தபோது அவளுடைய நெற்றியில் வானவில்போல வளைந்து கிடந்ததே; என்றுமே அவளை விட்டு நீங்காததுபோல உறவாடியதே; அவள் எரிந்தபோது உடன் சேர்ந்து அழிந்திருக்க வேண்டாமா? தான் மட்டும் தப்பி நிற்கிறதே. சீசீ! இது சிறியோர் செய்கை அல்லவா? செல்வக் காலத்தில் ஒருவரோடு மகிழ்ந்து உறைந்து அல்லற் காலத்தில் அவரை விட்டு நீங்கும் கயமைத் தன்மையுடைய இதனைப் பார்த்தலும் பாவமே என்று தூக்கி எறிந்தான்.

நுதற்புறங் கவவி மிகச்சுடர்ந் திலங்கும்
சிறப்புடைப் பட்டம், சிறியோர் போல
இறப்புக் காலத்துத் துறப்புத்தொழில் துணிந்த
வன்கண்மை பெரிதெனத் தன்கணும் நோக்கான்
பட்டப் பேரணி விட்டெறிந்து,[35]

இகழ்ந்தான்.

சிறியோர் நொய்ம்மை

மேலோர் நட்பிலிருந்து கீழோர் தாழ்ந்து விழுவது போல அருவி மேலிருந்து கீழ் வீழ்ந்தது. அருவி சுமந்து சென்ற நுரை கல்லா மாந்தர் உள்ளம் போன்றிருந்தது. கல்வியறிவில்லாத கீழோர் உள்ளத்தே அறிவுத் திண்மையில்லா விட்டாலும் தம்மைப் பெரியோர்போலக் காட்டிக் கொள்வர். பார்வைக்குப் பெரிதாகத் தோன்றும் நுரை சிறு அசைவு நேர்ந்தாலும் உடைந்து சிதறி அழியும் நொய்ம்மை யுடையது. கல்லாப் புல்லர்களும் அத்தகைய நொய்ம்மை யுடையவரே.

அரும்பொருள்
கல்லா மாந்தர் உள்ளம் போல

---

35. பெருங். 2 : 19 : 82 - 86

**நொய்ந்நுரை சுமந்து மெய்ந்நயந் தெரிந்த
மேலோர் நண்பிற் ருழ இழிதரும்.**[36]

அருவி நுரையில் பொருள் திண்மை இல்லை; கல்லா மாந்தர் உள்ளத்தில் அறிவுத் திண்மை இல்லை. நுரை பாறையால் தாக்குண்டு அழியும்; கல்லா மாந்தரும் தீமை யால் தாக்குண்டு விரைவில் அழிவர்.

கல்வியாளார் சொல்

உஞ்சை நகர மக்கள் நீராட்டு விழாவுக்குச் சென்ற னர். ஆற்றங் கரையில் தற்காலிகமாக அமைத்த கடை வீதிகளில் ஏராளமான பொருள்கள் குவிந்து கிடந்தன. அரசமகள் பருவம் அடைந்தகாலை அவளை மணம் பேசப் பலநாட்டுத் தூதுவர்களும் வந்து அரண்மனையிற் குழுமுதல் போல் அங்குப் பல்வேறு பொருள்களும் செறிந்து நிறைந் தன. நீராட வந்தோர் தத்தமக்கு வேண்டிய பொருள் களைத் தாமே கொணர்ந்தனராதலின், சான்றோர் அவை யில் கல்லா மாந்தரின் பொல்லாச் சொல்லை விரும்புவோர் யாரும் இல்லையாதல்போல, கடைவீதிப் பொருள்களும் கொள்வாரின்றி வீணே கிடந்தன.

**கன்னி மாண்டுழித் துன்னுபு நசைஇய
தூதுவர் போல மூசின குழீஇ
ஆணைத் தடைஇய நூல்நெறி அவையத்துக்
கல்வி யாளார் சொல்லிசை போல
வேட்போ ரின்றி வெறிய வாக
மாக்கள் உழிதரு மணநெடுந் தெரு.**[37]

பொருள்கள் நிறைந்து கிடத்தற்குக் கன்னி மணப் பருவம் எய்தியகாலை தூதுவர் வந்து குழுமியிருத்தலும், அப் பொருள்கள் கேட்பாரின்றிக் கிடத்தற்குக் கீழோர் சொல் சான்றோர் அவையில் விரும்பப்படாமையும் உவமையாம்.

---

36. பெருங். 1 : 50 : 11 - 14
37. பெருங். 1 : 38 : 64 - 69

வள்ளுவர் வழியில்

திருக்குறள் உவமைகள் கொங்குவேளைப் பெரிதும் கவர்ந்துள்ளன. கதையின் பல இடங்களில் அவர் குறள் உவமைகளை எடுத்தாண்டு சிறப்பித்துள்ளார்.

பண்டி துறை ஏற்றும் பகடு; இடுக்கண் நேரும் போது அதை ஏற்று உறுதியோடு முன்னேறினால் நேர்ந்த இடுக்கண் தானே அகன்று போகும். ஆழ் சகதியில், உளையில் இறங்கிய வண்டி, அதை இழுத்து வரும் மாடு மண்டியிட்டு முயன்று இழுக்கக் கரையேறுகிறது. அம் மாடனைய ஊக்கம் உடையவனைச் சேரும் துன்பம் துன்பப்பட வேண்டி இருக்குமே தவிர, அத் துன்பத்தால் அவன் துன்புறான். இதனை,

> மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
> இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து [38]

என்ற திருக்குறள் இனிது விளக்குகிறது.

வள்ளுவரின் இந்த உவமையைக் கொங்குவேள் தக்க இடத்தில் கையாள்கிறார். உதயணன் வாசவதத்தையோடு ஏறிச் சென்ற பத்திராபதி யானை வழியில் இறந்தது. அப்போது உதயணன் வயந்தகனிடம், "நண்பனே! இத் துயரத்தாலே மனம் இடிந்து போய்விடக் கூடாது. ஆற்றுத் துறை மணலில் அழுந்திய வண்டியைப் பெரிதும் முயன்று ஏற்றுகின்ற எருதினைப் போன்று இப்பொழுது எய்தியுள்ள துயரினை நாம் இருவரும் முயன்று அகற்ற வேண்டும்" எனக் கூறினான்.

> குண்டுதுறை இடுமணற் கோடுற அழுந்திய
> பண்டிதுறை ஏற்றும் பகட்டினை போல [39]

என்ற உவமை திருக்குறளிலிருந்து பெற்றதாகும்.

---

38. குறள் 624
39. பெருங். 1 : 53 : 53 - 54

நாகம் சீறிய எலிக் கூட்டம் : எலிகள் பலவாக இருந்தாலும் நாகம் தலையைத் தூக்கினால் போதும்; அவை இருந்த இடந் தெரியாமல் ஓடி மறையும். அதுபோலக் கோழைகள் பலர் ஒன்று சேர்ந்திருந்தாலும் வீரமுள்ள ஒருவனைக் கண்டால் அஞ்சி ஓடுவர். சிறந்த ஆண்மையைப் போற்றத் திருவள்ளுவர் எலிக் கூட்டத்தின் முன் நாகத்தை நிறுத்திக் காட்டுகின்றார்.

ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்[40]

என்பது அருமைத் திருக்குறள்.

பாலை நிலத்தில் உதயணனோடு போரிட்ட வேடுவர் இடபகன் படையினால் வளைப்புண்டனர். வீரர்கள் எய்த அம்புகளால் பலர் மாண்டனர். எஞ்சியிருந்தோர் ஆற்றாது ஓட்டமெடுத்தனர் என்பதைக் கூற வருகின்ற ஆசிரியர், திருக்குறளை நினைந்தவராய்,

பைவரி நாகத்து ஐவாய்ப் பிறந்த
ஒலிப்புயிர் பெற்ற எலிக்கணம் போல[41]

வேடுவர் ஓடினர் என்று குறிப்பிடுகிறார்.

பெயர்ந்திடிக்கும் ஆடு : கருதிய கருமங்களை உறுதியாகச் செய்து முடிக்க அறிவும் ஆற்றலும் வேண்டும். இடமறிந்து, ஏற்ற காலமறிந்து, எதிரியின் வலியறிந்து, தன் துணை சூழ்ந்து, செயலாற்ற அறிவு தேவை. செய்யப் புகுந்த செயலைச் செய்து முடிக்க ஆற்றல் தேவை. ஆற்றலுள்ள ஒருவன் அடங்கியிருந்தானானால் அஃது ஆற்றலை வளர்த்துக் கொள்ளுதற்கேயாம். ஆட்டுக் கிடா பின் நோக்கிச் சென்று பின் வேகமாகப் பாய்ந்து எதிரியைத் தாக்கும். அது பின்னோக்கிச் செல்வது வேகமாய்த் தாக்குதற்கேயாம்.

---

40. குறள் 763
41. பெருங். 1 : 56 : 273 – 74

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.[42]

அறிவுடையவன் அடங்கியிருத்தல் ஆட்டுக்கிடா பின்னால் அடிபெயர்த்துச் செல்வதற்கு ஒப்பாகும்.

தன் எதிரியை வெல்ல வேண்டும் என்று உதயணனைத் தூண்டுகின்ற அவனுடைய அமைச்சர்கள் வள்ளுவரின் கருத்தை எடுத்துக் கூறுவதைக் காணலாம்.

அவர்கள்,

பாடுபெயர்ந் திடிக்கும் மேடகம் போல
அகன்றுபெயர்ந் தழிக்கும் அரும்பெறற் சூழ்ச்சி[43]

யொடு செயற்பட வேண்டுமென வலியுறுத்துகின்றனர்.

உடுக்கை இழந்தவன் கை: வாசவதத்தை கருவுற்றாள். அவளுக்கு வானத்தில் பறந்து பல இடங்களையும் காண வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. அவள் வயா விருப்பத்தை நிறைவேற்ற விண்ணில் பறக்கும் எந்திரம ஒன்றைச் செய்ய உதயணன் விரும்பினான். ஒருவராலும் அதனைச் செய்ய இயலவில்லை. முன்னொருகால் தன் நீர் வேட்கை தீர்த்துதவியதோடு, வேண்டும்போது தன்னை நினைக்குமாறு கூறிப்போந்த குபேரனின் பணியாளான இயக்கனை நினைந்தான். நஞ்சுகன் என்ற அந்த இயக்கன் தோன்றி, ''நண்பனே! பிரச்சோதனன் நின்னைச் சிறைப் பிடித்தபோதும், யானையை இழந்து காட்டில் வாசவதத்தையோடு துன்புற்றபோதும், வாசவதத்தை எரியில் மாண்டதாக எண்ணிப் புலம்பியபோதும், பகை மன்னன் மீது போர் தொடுத்தபோதும், இன்னும் இதுபோன்ற அல்லற் காலத்தில்,

---

42. குறள் 486
43. பெருங். 3 : 1 : 30 - 31

உடையழி காலை உதவிய கைபோல்
நடலை தீர்த்தல் நண்பனது இயல்பு[44]

என்று கருதி என்னை நினைக்கவில்லை. இப்போது நாட்டைப் பெற்று மனைவியரோடும் தோழரோடும் இனிதே இருக்கும் வேளையில் என்னை நினைந்தது ஏனோ? என்று கேட்டான்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு[45]

என்ற குறட் கருத்து இயக்கன் வாய்மொழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மருந்து மரம் : வேர், பூ, இலை, காய், கனி எல்லாவற்றாலும் பிணி போக்கி நலம் செய்யும் மருந்து மரங்கள் உண்டு. அதுபோன்றே தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் பிறர் நலனுக்கெனவே ஈந்து வாழும் பெருந்தகையாளர்களிடம் உள்ள செல்வம் எல்லார்க்கும் நன்மை செய்யும்.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்[46]

என்பது வள்ளுவர் வாக்கு. மருந்துக்காக ஒருவர் தழையைக் கொய்ய, மற்றொருவர் காய் கனிகளைப் பறிக்க, இன்னொருவர் வேரை வெட்ட இதனால் மரம் அழிய நேரிடுகிறது. தம் நலம் கருதி மரத்தின் அழிவைக் கருதாது, அது தரும் நன்மையை மட்டுமே எண்ணி மக்கள் செயற்படும் நிலையைக் காண்கிறோம். பிரச்சோதனன் தன் மக்களுக்குப் பயிற்சி தருவதற்காக உதயணனை, அவன் மேம்பாடு கருதாது, தன் நாட்டிலேயே இருத்திக் கொண்டது,

---

44. பெருங். 5 : 3 : 39 - 40
45. குறள் 788
46. குறள் 217

தாம்உயல் வேட்கையின் மாநிலத் துறையுநர்
மர முதல் சாய மருந்துகொண்ட(து)[47]

போன்றதென மனத்துள் எண்ணினன். ஆதலின் மேலும் காலம் தாழ்த்தாது அவனை அவன் நாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் கருதினன்.

பிறை மதி : அறிவுடையவரின் நட்பு பிறை மதி வளர்ந்து வருதல்போல நாளும் நாளும் வளரும். அறிவிலார் நட்போ முழு மதி தேய்ந்து குறைதல்போலக் குறைந்து அழியும். இதனை,

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு[48]

என்று திருக்குறள் கூறும். வாசவதத்தையின் கருப்பம்

மங்குல் விசும்பின் வளர்பிறை போல[49]

நாளும் வளர்ந்தது என்று கூறுமிடத்தில் வள்ளுவரின் 'பிறைமதி நிறை நீர' என்ற உவமையைக் கொங்குவேள் எடுத்தாண்டிருப்பதைக் காணலாம்.

பெரிதுவக்கும் பெற்றோர் : தன் மகனைச் சான்றோன் என்று பிறர் சொல்லக் கேட்கும் தாய் அவனைப் பெற்ற பொழுதிலும் பெருமகிழ்வு கொள்வாள்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். [50]

இக் கருத்தைப் பெருங்கதையும் பேசுகிறது. பிரச்சோதனின் மக்கள் உதயணனிடம் போர்ப் பயிற்சி பெற்றுப் பிற நாட்டு மன்னர் மெச்ச அரங்கேறினர். அப்பொழுது பிரச்சோதனன்,

---

47. பெருங். 1 : 37 : 187 - 88
48. குறள் 782
49. பெருங். 5 : 1 : 167
50. குறள் 69

பெற்ற நாளினும் பெரும்பூட் புதல்வரை
உற்ற நாள்வயிற் கலிசிறந்து[51]

மகிழ்ந்தான்.

தூண்டில் இரை : தூண்டிலில் இருக்கும் புழுவை இரையென ஏமாந்து உண்ட மீன், தூண்டிலிற் சிக்கி உயிரை இழப்பதுபோல, சூதின் தொடக்கத்தில் கிடைப்பது வெற்றியே என்ருலும் அதில் ஈடுபடுவது ஒருவனைப் பாழ்படுத்திவிடும் என்பதை,

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று[52]

என வள்ளுவர் அறிவுறுத்துகிருர். பரத்தையின் இனிய பேச்சைக் கேட்டு, அப் பேச்சில் அடங்கியிருக்கும் வஞ்சகத்தை அறியாது அவளை அடைபவன் தூண்டிலிரையை விழுங்கிய மீன்போலாவான் என்கிருர் கொங்குவேள். பரத்தையர்,

தூண்டில் இரையிற் றுடக்குள் ளுறுத்துத்
தேன்தோய்த் தன்ன தீஞ்சொல்[53]

பேசி இளைஞர்களைத் தூண்டிலிற் சிக்கிய மீனுக்கி விடுகின்றனர்.

எயிற்று நீர் : பதுமாபதியோடு உதயணன் கன்னிமாடத்தில் புல்லியும் தளைத்தும் புணர்ந்தும் பொருந்தியும் இன்பம் துய்த்தான்.

அமரர் ஆக்கிய அமிழ்துளனக்கு இனையோள்
தன்முளை எயிற்றுநீர்[54]

என்று சுவைத்தான். இங்கு,

---

51. பெருங். 1 : 37 : 79 - 80
52. குறள் 931
53. பெருங். 1 : 35 : 108 - 09
54. பெருங். 3 : 14 : 162 - 163

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்[55]

என்ற அருமைத் திருக்குறள் எடுத்தாளப்பட்டுள்ளது.

மீன் நோக்கும் கொக்கு: மகத மன்னன் தருசகனிடம் பகை கொண்டிருந்த பிற நாட்டு மன்னர்கள் ஒன்று கூடி அவன்மீது போர் தொடுக்கக் கருதினர். அவர்கள் காலம் கனியும் வரை காத்திருந்து, வாய்ப்புக் கிட்டியதும்,

ஒடுங்கி யிருந்தே உன்னியது முடிக்கும்
கொடுங்காற் கொக்கு[56]

போலச் செயற்பட முனைந்தனர். இது,

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து[57]

என்ற திருக்குறளை உள்ளடக்கியுள்ளது.

நூல் நயம்: யூகி சிறிது காலம் உச்சயினியில் தங்கித் திரும்பிய பொழுது பிரச்சோதனன், "அமைச்சரேறே! ஓதுந்தோறும் நயம் பயக்கும் நூல்போலப் பழகுந்தொறும் இனிமை பயக்கும் உமது பண்புடைமையை நினைக்குந் தொறும் இன்பம் நிறைகிறது. உம்மைப் பிரியவே மன மில்லை" என்று கூறிப் பிரியா விடை தந்தான்.

நவில்தொறும் இனிய ஞானம் போலப்
பயில்தொறும் இனியநின் பண்புடைக் கிழமை[58]

என்னைப் பெரிதும் பிணித்தது என்றனன் பிரச்சோதனன். இங்கே,

---

55. குறள் 1121
56. பெருங். 3 : 17 : 61 - 62
57. குறள் 490
58. பெருங். 5 : 7 : 148 - 149

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு[59]

என்ற குறள் மணத்தை நுகர்கிறோம்.

விளக்கற்றம் பார்க்கும் இருள் : உதயணன் சிறைப் பட்டதும் ஆருணி அரசன் அவன் நாட்டின்மீது படையெடுத்துக் கைப்பற்றினான். விளக்கு எரியும் வரை பரவாது பதுங்கியிருந்து, அணைந்ததும் ஒளியிருந்த இடமெல்லாம் இருள் பரவி ஆட்சி செய்வதுபோல உதயணன் ஆண்டவரை அடங்கியிருந்து அவன் சிறைப்பட்டதும் நாட்டைக் கைப்பற்றினன்.

திரியும் நெய்யும் ஒருவயிற் செல்லிய
எரிவிளக் கற்றம் இருள்பரந் தாங்கு[60]

என்ற பெருங்கதை அடிகளுக்கு,

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு[61]

என்ற திருக்குறள் கருத்து வித்து ஆகும்.

பெருந்தகைக் கவரி : நருமதையோடு உதயணன் கொண்ட தொடர்பு அவனுக்குப் பழி உண்டாக்கியது. அழகிலும், இளமைத் தன்மையிலும், எல்லையற்ற கல்விப் பேற்றிலும் தனக்கு யாரும் நிகரின்றி உயர்ந்த பெருமை உடையவனாதலின் தன் பெருமைக்குப் பொருந்தாத பழிச் சொல்லைத் தன் மனம் நோகும்படி, பட்டி மாக்களும் விடரும் தூர்த்தரும் கூறித் தூற்றியபோது,

வான்மயிர் துடக்கிற் றானுயிர் வாழாப்
பெருந்தகைக் கவரி யன்ன பீடழிந்து[62]

வாடினான். இங்கு,

---

59. குறள் 783
60. பெருங். 3 : 1 : 6 - 7
61. குறள் 1186
62. பெருங். 1 : 35 : 233 - 34

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்[63]

என்ற குறள் மானம் பேசப்பட்டுள்ளது.

போர்க்களம்

ஒலி : போர் நிகழ்ச்சிகளைப் பொருத்தமான உவமைகளால் ஆசிரியர் விளக்கிக் காட்டியுள்ளார். போர்க்கள ஒலி கடல் ஒலிபோல எழுந்தது.[64]

யானைகள் : யானைகளின் கைகள் பனைமரத்தின் நடுத் துண்டுபோலப் பல்வேறிடங்களில் வெட்டுண்டு வீழ்ந்தன;[65] வாரால் கட்டப்பட்டுத் தோலாற் போர்த்தப்பட்ட உடுக்கையின் முகம் போன்று கால்கள் அற்று வீழ்ந்தன;[66] சுற்றுதல் அமைந்த கரிய வில்லின் துண்டுபோல வால்கள் துணிபட்டுக் கிடந்தன.[67] அடியோடு அறுபட்டுக் குருதி வெள்ளத்தில் மூழ்கிய யானைக் கொம்புகள் செவ்வானத்தில் அழுந்துகின்ற வெண்பிறை போன்றிருந்தன.[68]

---

63. குறள் 969

64. போர்க்கள வட்டம் கார்க்கடல் ஒலியெனக்
கடற்படைக் கம்பலை கலந்த காலை
—பெருங். 3 : 20 : 43 - 44

65. மடற்பனை இடைத்துணி கடுப்பப் பல்லூழ்
அடக்கரும் வேழத் தடக்கை வீழ
—பெருங். 3 : 20 : 45 - 46

66. துடித்தலை போல அடித்தலை அற
—பெருங். 3 : 20 : 48

67. சுற்றுர் கருவில் துணியெனத் தோன்றி
அற்ற மில்வால் அற்றன கிடப்ப
—பெருங். 3 : 20 : 49 - 50

68. நுதிமுக வெண்கோடு முதலற எறிதலிற்
செக்கர்க் குளிக்கும் வெண்பிறை போல
உட்குவரு குருதியுள் உடன்பல வீழ்
—பெருங். 3 : 20 : 52 - 54

யானை வீரர்கள் : மேக ஊர்தியில் விண்ணில் திரியும் வித்தியாதரர், பகைவரால் தாக்குண்டு, மார்பிலே படைக் கலம் ஏந்தி, மேகத்திலிருந்து வீழ்வதுபோல யானை மீதிருந்த வீரர்கள் எதிரிகளின் படைக் கலங்களை மார்பி லேற்றுக் களத்தில் வீழ்ந்தனர்.[69]

யானைவீரர் மார்பில் பகைவர் வேல் பதிந்தது. யானைக் கழுத்தில் கட்டியிருந்த புரசைக் கயிற்றைப் பற்றி மலையி லிருந்து கீழிறங்குவோர்போல மளமளவென்று இறங்கினர். மார்பில் பாய்ந்திருந்த வேலைப் பிடுங்கினர். வளைந்திருந்த நுனியை நிமிர்த்து, அவ் வேலை எறிந்த அதே பகைவர் மீது எறிந்தனர். அதனால் மாற்றார் உயிர் நீங்குதலைக் காணச் சிறிது நேரம் நின்று அவர் இறந்ததும் தாமும் வீழ்ந்து மாய்ந்தனர்.[70]

குதிரை வீரர்கள் : கடலிடையே தோணி உடைபட அதிற் கட்டப்பட்டுள்ள கயிற்றைப் பற்றிக் கொண்டு, இடையிடையே எழும் அலைகளுக்கு அண்ணுத்தல் செய் கின்றவர்களைப்போல, தம்முடைய குதிரைக் கால்களுக் கெட்டாத குருதி வெள்ளத்தில், வீரர்கள் கடிவாளத்தைப் பற்றிய கையினராய், புரண்டு எழுந்தனர்.[71]

வெட்டுண்ட தலைகள் : வெட்டுண்ட கருந் தலைகள் குருதி நீரைப் பொழிந்து கிடந்தன. அது நீல நிறமுடைய கருமுகில் குருதி நீரைக் கடலில் பெய்வது போன்றிருந்தது.

நீலக் கொண்மூ நீர்த்திரைப் பெய்வதோர்
காலம் ஏய்ப்பக் கருந்தலை வீழ[72]

என்பதில் தலை முகிலுக்கும் கொட்டுகின்ற குருதி மழைப் பொழிவுக்கும் உவமை.

---

69. பெருங். 3 : 20 : 55 - 61
70. ,, 3 : 20 : 62 - 67
71. ,, 3 : 20 : 68 - 74
72. ,, 3 : 20 : 78 - 79

குருதிக் குழம்பு: குதிரைகளும் யானைகளும் மறவர்களும் இறந்து வீழ்ந்ததால் குருதிக் குழம்பாகிய சிவந்த சேறு, எஞ்சியிருந்த படை மறவர் மிதித்தலால் இறுகிப் பொடிபட்டு அந்திமாலைப் பொழுதின் செவ் வானம்போல நாற் புறமும் பரவித் தோன்றலால் திசை தெரியாததாயிற்று.[73]

பேச்சில் உவமை

உதயணன் உச்சயினியிலிருந்து வாசவதத்தையுடன் தன் நாடு நோக்கிப் புறப்பட்டான். உச்சயினியில் மாற்று வேடத்திலிருந்த மறவர்களை நோக்கி யூகி, "நண்பர்களே! தவம் உள்ள இடத்திற்குத் தாமே வழி வினவிச் செல்லும் பொருளும் நுகர்ச்சியும் புகழும்போல நம் மன்னவன் இருக்குமிடம் நோக்கிச் செல்ல வேண்டியது நம் கடமை.[74] பண்டங்களை இறக்கிவிட்ட மரக்கலம்போல இந் நகரின் உள்ளிடம் வறிதாகிப் பொலிவிழக்கும்படி வெளியேறி உடனே புறப்படுங்கள்.[75] நாட்டிலும் மலையிலும் காட்டிலும் புகுந்து கனிகளை உண்டு பல்வழிகளில் தம் இருப்பிடம் சேரும் வெளவால்போல நீங்களும் நம் நாடு திரும்புங்கள்"[76] என்றான். அவன் முழுப் பேச்சையும்

---

73. பெருங். 3 : 20 : 80 - 86

74. பெருந்தவம் உள்வழி விரும்புபு செல்லும்
பொருளும் போகமும் புகழும் போல
மறுவில் மணிப்பூண் மன்னவன் உள்வழிக்
குறுகுதல் குணனென உறுநரை ஒருப்படுத்து
ஏகச் செய்தபின் —பெருங். 2 : 8 : **126 - 30**

75. கலிகெழு பண்டம் கழிகலம் போல
வலிகெழு சிறப்பின் மதிலுஞ் சேனை
உள்ளகம் வறுமை எய்திப் புல்லென
— 2 : 8 : 123 - 25

76. நாடும் மலையும் காடும் பொருந்திக்
கனிவளம் கவர்ந்து பதிவயிற் பெயரும்
பனியிறை வாவற் படர்ச்சி ஏய்ப்ப
— 2 : 8 : **118 - 20**

உவமைகளாலேயே ஆசிரியர் புனைந்து மொழிவது நயம் நிறைந்தது.

கவட்டை உவமை

ஆற்றின் அறல் போன்ற கூந்தல்; அந்த ஆற்று நீரில் தோன்றும் சுழியை ஒத்த குழியான கொப்பூழ். வில் போன்ற புருவம்; அவ் வில்லிலிருந்து புறப்படும் அம்பு போன்ற கண்கள். பிறை போன்ற நெற்றி; அப் பிறை வளர்ந்து நிறைந்த திங்களைப் போன்ற ஒளி முகம். பாம்பு போல் வளைகின்ற இடை; அப் பாம்பின் படம்போல அகன்று விரிந்த அழகிய அல்குல். கிளியைப் போன்ற கொஞ்சு மொழி; அக் கிளியின் அலகு போன்ற நகம். வாழைத் தண்டினை ஒத்த தொடை; அவ் வாழையின் குவிந்த பூவை ஒத்த பருத்த இளைய அழகிய முகை. மூங்கில் போலத் திரண்ட தோள்; அம் மூங்கிலிற்றோன்றும் முத்தைப் போன்ற ஒளியுடைய வெண் பற்கள். காந்தள் அரும்பு போன்ற கை விரல்; அக் காந்தட் பூங்குலை யொத்த வளையலணிந்த முன் கை. அன்னம் போன்ற மெல்லிய நடை; அவ் வன்னப் பறவையின் புணர்ச்சியை ஒத்த குறைவுபடாக் காதல். வாசவதத்தையின் அழகைக் கொங்குவேள் இவ்வாறு வருணிக்கிறார்.

யாற்றறல் அன்ன கூந்தல், யாற்றுச்
சுழியெனக் கிடந்த குழிநவில் கொப்பூழ்;
வில்லெனக் கிடந்த புருவம், வில்லின்
அம்பெனக் கிடந்த செங்கடை மழைக்கண்;
பிறையெனச் சுடருஞ் சிறுநுதல், பிறையின்
நிறையெனத் தோன்றும் கறைஇல் வாண்முகம்;
அரவென நுடங்கும் மருங்குல், அரவின்
பையெனக் கிடந்த ஐதேந்து அல்குல்;
கிளியென மிழற்றும் கிளவி, கிளியின்
ஒளிபெறு வாயின் அன்ன ஒள்ளுகிர்;
வாழையந் தாள்உறழ் குறங்கின், வாழைக்

கூம்புமுகிழ் அன்ன வீங்கிள வனமுலை;
வேயெனத் திரண்ட மென்றோள், வேயின்
விளங்குமுத் தன்ன துளங்கொளி முறுவல்;
காந்தள்முகிழ் அன்ன மெல்விரல், காந்தள்
பூந்துடுப்பு அன்ன புனைவளை முன்கை;
அன்னத் தன்ன மென்னடை; அன்னத்துப்
புணர்வின் அன்ன தண்டாக் காதல்;
அணிக்கவின் கொண்ட அதிநா கரிகத்து
வனப்புவீற் றிருந்த வாசவ தத்தை. [77]

ஒரு பொருளை எடுத்து அதன் இரண்டிரண்டு கூறுகளை உவமையாக்கிக் காட்டும் திறம் அழகிது; இலக்கிய உலகில் ஒப்பற்ற ஒன்றுமாம்.

ஆற்றின் அறலும் சுழியும்
வில்லின் வளைவும் அம்பும்
திங்களின் சுடரும் நிறையும்
அரவின் வளைவும் படமும்
கிளியின் மொழியும் மூக்கும்
வாளையின் தாறும் பூவும்
மூங்கிலின் திரட்சியும் முத்தும்
காந்தளின் முகிழும் கொத்தும்
அன்னத்தின் நடையும் புணர்வும்

இணைந்து அழகிய பெண்ணோவியமாகியுள்ளது.

இத்தகு கவட்டை உவமையை முதன் முதலில் பெருங் கதையில்தான் காணுகிறோம்.

நிரல் நிறை

மானே அன்னம் மயிலே மால்வரைத்
தேனே பவளம் தென்கடல் நித்திலம்
கயலே காந்தள் புயலே பொருவில்

---

77. பெருங். 4 : 11 : 64 - 83

பையே பொற்றுடி படைநவில் யானைக்
கையே குரும்பை கதிர்மதி வேயே
நோக்கினும் ஒதுக்கினும் மாக்கேழ் அணிந்த
சாயல் வகையினும் சால்புடை மொழியினும்
ஆசில் வாயினும் அணிபெற நிரைத்த
பல்லினும் கண்ணினும் மெல்விரல் வகையினும்
நறுமென் குழலினுஞ் செறிநுண் புருவத்து
ஒழுக்கினும் இழுக்கா அல்குல் தடத்தினும்
மெல்லிய இடையினும் நல்லணி குறங்கினும்
குற்றமில முலையினும முகத்தினும் தோளினும்
மற்றவை தொலையச் செற்றொளி திகழ[78]

மானனீகை விளங்கினாள்.

மான், அன்னம், மயில், மலைத் தேன், பவளம், முத்து, கயல் மீன், காந்தள் முகை, முகில், வில், பாம்பின் படம், உடுக்கை, யானைக் கை, குரும்பை, திங்கள், மூங்கில் என்ற இத்துணைப் பொருள்களையும் மானனீகை வென்றுளாம்! எவ்வாறு? மயிலைச் சாயலாலும், தேனை மொழியாலும், பவளத்தை வாயாலும், முத்தைப் பல்லாலும், வேலைக் கண்ணாலும், காந்தட் பூவை விரலாலும், முகிலைக் கூந்தலாலும், வில்லைப் புருவத்தாலும், பாம்புப் படத்தை அல்குலாலும், உடுக்கையை இடையாலும், யானைக் கையைத் தொடையாலும், குரும்பையை முலையாலும், திங்களை முகத்தாலும், மூங்கிலைத் தோளாலும் வென்றாள். அதாவது ஒவ்வோருறுப்பும் அதற்கு ஒப்புமை காட்டப்பட்டுள்ள பொருளினும் அழகில் விஞ்சியிருந்தது என்பது கருத்து. முதல் ஐந்து அடிகளில் உள்ள ஒவ்வொரு பொருளையும் ஆறுவது அடியிலிருந்து தொடங்கும் ஒவ்வொரு பொருளுடன் வரிசையாக,

மானை நோக்கினும்
அன்னத்தை ஒதுக்கினும்

78. பெருங். 4 : 12 : 147 - 160

மயிலைச் சாயல்வகையினும்
தேனை மொழியினும்

என முறை மாறுமல் கூட்டி முன்னதைப் பின்னது வென்றது என்ற பொருள் முடிவு கொள்ள வேண்டும். இவ்வாறு உவமைகளை ஒன்றன்பின் ஒன்ருக அடுக்கி, அவற்றை அடுத்து அதே முறை வைப்பில் பொருள்களை அடுக்கிக் கூறுதல் நிரல் நிறை அணி எனப்படும்.

பொன்னும் மணியும் முறையே மகளிரின் மேனிக்கும் கூந்தலுக்கும் உவமையாகவும்,

பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிரும் கதுப்பும்[79]

மலரும் மூங்கிலும்போல மகளிர் கண்ணும் தோளும் விளங்கின என்றும்,

போதும் பணையும் போலும் யாழநின்
மாதர் உண்கணும் வனப்பின் தோளும்[80]

நற்றிணையில் காணப்படுகின்றன. இங்கு இரண்டிரண்டு உவமைகள் மட்டுமே நிரல் நிறையாகக் காட்டப்பட்டுள்ளன. ஒரே தொடரில் நிரல் நிறை உவமை மிகுதியாகவும் நயம்படவும் பெருங்கதையில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

பெருங்கதையில் உள்ள நிரல் நிறை உவமையை ஒட்டி அமைந்துள்ள,

காரிகை மென்மொழியால் நோக்கால் கதிர்முலையால்
வார்புருவத் தாலிடையால் வாய்த்தளிரால்– நேர்தொலைந்து
கொல்லி வடிநெடுவேல் கோங்கரும்பு விற்கரும்பு
வல்லி கவிர்மென் மலர்[81]

என்ற வெண்பா இங்கு நோக்கத்தக்கது.

---

79. நற். 166 : 1 – 2
80. ,, 166 : 3 – 4
81. தண்டி. 67. மேற்கோள்

மொழியாலே தொலைந்தது கொல்லிப் பண்
நோக்காலே தொலைந்தது நெடுவேல்
முலையாலே தொலைந்தது கோங்கரும்பு
புருவத்தாலே தொலைந்தது மன்மதன் விற்கரும்பு
இடையாலே தொலைந்தது வல்லிக் கொடி
வாயாலே தொலைந்தது முருக்கமலர்

என உவமையையும் பொருளையும் நேரே நிறுத்திப் பொருள் காணலாம்.

தற்குறிப்பேற்றம்

மறையும் சூரியன்: இயல்பாக நடைபெறுகின்ற நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் கருத்துக் குறிப்பினை ஏற்றித் தொடர்புபடுத்திப் பாடுவது தற்குறிப்பேற்றம். உதயணன் வாசவதத்தையை யானை மீது ஏற்றிச் செல்லும் வழியில் சூரியன் மறைந்தான். மாலையில் சூரியன் மறைவது இயல்பான ஒன்று. ஆனால் கொங்குவேள், "உதயணன் வாசவதத்தையைக் கைப்பற்றிக் கொண்டு போகின்றான். வெளிச்சம் இருக்குமானால் பிறர் இதனைக் காணக் கூடும். அக் காட்சி அவனுக்கு ஒரோவழி சோர்வை உண்டாக்கக் கூடும். ஆகவே அவன் செல்வதை யாரும் கண்டு கொள்ளாதிருக்க நாம் உதவுவோம் என்று எண்ணி அவன்பால் அருளுடையதாய்த் தன் கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மேலைக் கடலில் மறைந்தது" என்று தன் கருத்தை ஏற்றிப் பாடுவதைக் காண்கிறோம்.

விரிகதிர் பரப்பி வியலகம் விளக்கும்
பரிதி ஞாயிறு பல்லவர் காணின்
அற்றந் தருமென அருள்பெற் றதுபோல்
கொற்ற வெங்கதிர் குளிர்கொளச் சுருக்கிக்
குணகடல் கிடக்கைக் குடகடற் குளிப்ப. [82]

82. பெருங். 1 : 48 : 41 – 45

குவியும் மலர்கள் : பகலவன் மறையும் அந்தி மாலை வேளையில் குவளை, செங்கழுநீர், தாமரை முதலிய மலர்கள் குவிந்திருந்த தோற்றம், "உதயணன் தன் ஊர் செல்ல இவ் வழியே வருகின்றான். அவன் இன்பமாக ஊர் சென்று சேர அவனைக் கண்டு வணங்குவோம்" என்று அவை கைகூப்பித் தொழுவது போன்றதாயிற்றும்.

> எழுநீர்க் குவளையொடு இன்னவை பிறவும்
> தாமரை தலையாத் தன்னகர் வரைப்பகம்
> ஏம மாகஇவன் எய்துவன் என்றுதம்
> தூய்மை உள்ளமொடு கோமகற் கூப்பும்
> குறுந்தொடி மகளிர் குவிவிரல் கடுப்ப
> நறுந்தண் நாற்றம் பொதிந்த நன்மலர்[83]

குவிந்து கூப்பித் தொழுதன.

ஆடும் கொடிகள் : உதயணன் சயந்தி நகரினுள் நுழைந்தபோது அவனை வரவேற்க மக்கள் நகரை நன்கு அலங்கரித்தனர். கழி நட்டுத் தோரணம் கட்டி அதன் மீது பற்பல கொடிகளையும் நாட்டினர். கொடிகள் காற்றில் அசைந்து பறந்ததை அவை ஞாயிற்றின் வெப்பம் உதயணனைச் சுடாது ஆற்றுவ போன்றிருந்தன என்று கூறுகிறார்.

> அருக்கன் வெவ்வழல் ஆற்றுவ போல
> விரித்த பூங்கொடி வேறுபல நுடங்க.[84]

மற்றோர் இடத்திலும் கொடி ஆடுவதை,

> எடுத்த பூங்கொடி இருங்கண் விசும்பகம்
> துடைப்ப போல நடுக்கமொடு நுடங்க,[85]

என்று குறிப்பிடுகிறார்.

---

83. பெருங். 1 : 48 : 49 - 54
84. ,, 2 : 1 : 8 - 9
85. ,, 3 : 16 : 20 - 21

இல்பொருள்

இல்லாத ஒன்றை இருப்பதாக உவமிப்பது இல்பொருள் உவமையாம். வடநூலார் இதை அபூத உவமை என்பர். பொருள்கள் தனித்தனியே இருக்கும்; அவற்றின் கூட்டான தன்மைகளைக் கொண்ட பொருள் இருக்காது; அவ்வாறுன உவமைகளையே இல்பொருள் உவமம் என்பர். உதயணன் யானை மீது அமர்ந்திருந்தான். வாசவதத்தை எதிரே தந்தையருகில் நின்றுள். இக் காட்சியானது திங்களும் சூரியனும் ஒன்றிற்கொன்று எதிராக விசும்பில் ஓரிடத்தில் கூடி நின்றுற்போல இருந்தது என ஆசிரியர் குறிப்பிடுகிறுர்.

> மதியமும் ஞாயிறும் கதிதிரிந்து ஓடிக்
> கடல்நிற விசும்பில் உடன்நின் றுங்கு[86]

அவர்கள் நின்றனர். திங்களும் ஞாயிறும் விசும்பில் ஓரிடத்தில் கூடிநிற்பது இல்பொருள் உவமையாம்.

கரிய யானையின்மீது உதயணன் அமர்ந்திருந்தான். அவன்மீது வெண்கொற்றக் குடை நிழற்றியது. அக் காட்சி கரிய முகிலின் உச்சியில் ஞாயிறு இருக்க அதன்மீது திங்கள் நின்றதுபோல இருந்ததாம்.

> கருமுகில் மருங்கில் இருளறுத் தோர்தரும்
> வெம்மைச் செல்வன் மேனிலை பெற்ற
> தண்மைத் திங்களிற் றகைக்குடை நிழற்ற
> உதையண குமரன் ஒளிபெறத்[87]

தோன்றினன். கரு முகில் களிற்றுக்கும், ஞாயிறு உதயணனுக்கும், திங்கள் வெண் கொற்றக் குடைக்கும் உவமையாகும். இஃதும் இல்பொருள் உவமையே.

---

86. பெருங். 1 : 32 : 22 - 23
87. ,, 1 : 58 : 20 - 23

பொதுமைய வட்டம்

ஒரே மையத்தை வைத்துப் பல வட்டங்கள் வரைவது போல ஒரே பொருளின் பல்வேறு நிலைகளுக்குப் பொருத்தமான உவமைகள் அமையுமிடம் பெருங்கதையில் நிறைய உண்டு. காட்டாக யானையை மையமாகக் கொண்டு அமைந்த சில உவமை வட்டங்களை இங்குக் காணலாம்.

கரிய யானையின் நெற்றியில் செம்மையும் வெண்மையும் விரவிய புகர்கள் கொல்லன் உலைக் களத்தே நெருப்புப் பொறிகள் சிதறினாற் போன்று யாண்டும் கிடந்து அழகு செய்கின்றன.[88] கரி படர்ந்த உலைக்களம் யானையின் நெற்றிக்கும் அதிற் சிதறிய நெருப்புப் பொறிகள் புகர்களுக்கும் உவமைகளாக அமைந்துள்ளன.

மத்தகத்தின் இரு மருங்கிலும் முத்து மாலைகள் கிடந்து அசைகின்றன. கரியதொரு மலையுச்சியிலிருந்து இரு மருங்கிலும் வெண்மையான நீர் வீழ்ச்சிகள் வீழ்வதுபோல அத்தோற்றம் இருக்கிறது.[89]

தோட்டியால் குத்தி அடக்கியும் அடங்காது குருதி தோய ஓடுகிற யானை, சாதிலிங்கம் கரைத்த நீர் பரவி வழிகின்ற கரிய மலைபோலத் தோற்றமளிக்கிறது.[90]

உதயணன் ஏறிச் சென்ற யானை காலவேகம் என்ற நோய் பற்றிக் கீழே வீழ்ந்தது. துதிக்கையை உயர்த்தி

---

88. மிதிதோற் கொல்லன் பொதியுலைச் செந்தீத்
ததர்வன போலச் சிதர்வன சிந்திப்
புகரணிந் தோங்கிய நெற்றி. —பெருங். 1 : 58 : 9 – 11

89. கண்ணுறு பிறங்கற் கருவரை நுனித்தலை
வெண்ணிற அருவி வீழ்ச்சி ஏய்ப்ப
மத்தக மருங்கின் மாலையொடு கிடந்த
நித்திலத் தாமம் — 1 : 48 : 60 – 63

90. ஏரிருங் குலிகப் புனல்பரந் திழிதரும்
காரிருங் குன்றிற் கவின்பெறத் தோன்ற
— 1 : 44 : 83 -84

மூச்சு விடும்போதெல்லாம் புழை வழியே குருதித் துளிகள் நிறையக் கொட்டின. பையிலிருந்து பவழம் சொரிவது போல அக் காட்சி இருந்தது.[91]

நீரினுள் குடைந்தாடிக் கரையேறிய மகளிரின் கருங் கூந்தலிலிருந்து நீர்த் துளிகள் சொட்டிய தோற்றம் மழையில் நனைந்த யானையின் துதிக்கையிலிருந்து நீர் சொட்டியது போன்றிருந்தது.[92]

தீப்பற்றியெரிந்த மாளிகையில் வாசவதத்தையைக் காணாத உதயணன், அழகிய பிடி யானை ஆழமான குழியிலே வீழ்ந்து மறைய அதை நினைந்து நினைந்து வருந்தி நின்ற களிற்றி யானையைப்போல நெட்டுயிர்த்தான்.[93]

மிக்க வலிமையுடைய களிற்றி யானையைப் பல புரிகளால் முறுக்கிய ஆற்றல் மிக்க ஒரு கயிற்றால் பிணித்து விடலாம். அதுபோலப் பலர் ஒன்று சேர்ந்தால் வலிமை மிக்க ஒருவனையும் அடக்கியாள முடியும்.[94]

கரிய நிறமுடைய யானையின்மேல் ஒளி பொருந்திய உதயணன் வீற்றிருந்த தோற்றம் குன்றின்மேல் இளஞாயிறு எழுவது போன்றதாயிற்று.[95]

---

91. பைசொரி பவழம் போலப் படிதாழ்
கைசொரி யுதிரம் கான்றுவந்து இழிதர
—பெருங். 1 : 53 : 27 - 28

92. மாரிப் பிடிக்கை நால்புறல் கடுப்ப
நீர்பொறை யாற்றுது நெகிழ்ந்துவீ ழிசைந்த
காரிருங் கூந்தல்
— 1 : 40 : 193 - 95

93. கோல இரும்பிடி குழிப்பட் டாழ
நீல வேழம் நினைந்துழன் றங்கு
— 2 : 19 : 212 - 13

94. புரிபல இயைந்த ஒருபெருங் கயிற்றினில்
பெருவலி வேழம் பிணித்திசி னங்கு
— 3 : 17 : 41 - 42

95. குழவி ஞாயிறு குன்றிவர் வதுபோல்
மழகளிற் றெருத்தின் மைந்துகொண் டிருந்த
மன்ன குமரன்
— 1 : 33 : 129 - 31

பிறர் கூறும் அலர் கேட்டு அஞ்சும் மகளிர்க்கு வேட்டுவன் அம்பு பூட்டி எய்யும் வில்லின் நாணொலி கேட்டு வெருவும் பெண் மான் உவமை.[96]

இனிய செய்தி கேட்டு மகிழ்ந்திருக்கும் நிலையில் இன்னாச் செய்தியைக் கேட்க நேரிடுவதற்கு, யாழின் இன்னொலி கேட்டு மகிழ்ந்திருக்கும் அசுணத்தின் காதில் பறையொலி பட்டு அது துன்புறுதல் உவமை.[97]

ஆழ் கடலில் மரக் கலத்தை இயக்கும் மாலுமி தான் செல்ல வேண்டிய வழியைத் தானே ஆய்ந்து துணிவது போல ஒருவன் தான் செய்ய வேண்டியதைத் தானே துணிந்து முடிவுக்கு வரவேண்டும்.[98]

வாசவதத்தையை உதயணன் கடத்திச் சென்றான் எனக் கேள்வியுற்ற பிரச்சோதனன், கண்களில் தீப்பொறி பறக்கச் சீறி, திண்ணிய தூணைப் புடைத்து,

மாற்றுச் சிங்கத்து மறக்குரல் கேட்ட
ஏற்றுச் சிங்கத்தின் இடித்தெழுந்து[99]

ஆரவாரித்தான்.

---

96. பூட்டுறு பகழி வாங்கிய வேட்டுவன்
வில்லிசை கேட்ட வெருஉப்பிணை போல
—பெருங். 1 : 36 : 331 - 32

97. இசைகொள் சீறியாழ் இன்னிசை கேட்ட
அசுண நன்மா அந்நிலைக் கண்ணே
பறையொலி கேட்டுத்தன் படிமறந் ததுபோல்
— 1 : 47 : 241 - 43

98. ஆழ்கடற் பௌவத் தருங்கலம் இயக்கும்
நீயான் போல நெஞ்சுணர் மதிப்பினன்.
— 1 : 49 : 9 - 10

99. பெருங். 1 : 47 : 111 - 12

தீயைக் கண்டு அஞ்சி நின்ற மகளிர் கருடனின் வெவ்விய ஒலி கேட்ட நாகம் போலாயினர்.[100]

கடலிடையே இரை தேடி அலையும் சுருமீன் கூட்டம் போல உதயணன் வீரர் உஞ்சை நகரில் எதிரிகளைத் தேடி அலைந்தனர்;[101] எதிரி ஒற்றரைக் கெண்டை மீனை மீன் கொத்தி காலால் பற்றி வருவதுபோல எளிதாகப் பற்றி வந்தனர்.[102]

ஒன்றைக் கேட்டு அதை மனத்திலேயே வெளிப்படாமல் அடக்கி வைப்பதற்கு உலையில் வெந்த இரும்பு உட்கொண்ட நீர் உவமையாக்கப்பட்டுள்ளது.[103]

உஞ்சை நகர் தீப்பற்றி எரிந்தபோது அங்கிருந்தோர் எழுப்பிய ஆரவாரம் முழுத் திங்கள் நாளில் பெருங்கடல் பொங்கி முழங்கினாற் போன்றிருந்தது.[104]

சூரியன் தோன்றியதும் இருள்,

நல்வினை முன்னர்ப்

பாவம் போல[105]

அகன்றது.

---

100. வேகப் புள்ளின் வெவ்விசை கேட்ட
நாக மகளிரின் நடுங்கு வோரும்
—பெருங். 1 : 44 : 44 - 45

101. கரைவேட் டுலாஅம் கருங்கடல் அழுவத்து
இரைவேட் டுலாஅம் இனச்சுறவு இனத்தின்
—பெருங். 1 : 45 : 88 - 89

102. நிறைநீர் அகவயிற் பிறழுங் கெண்டை
சிறுசிரல் எரியுஞ் செய்கை போல
—பெருங். 3 : 26 : 21 - 22

103. கனலிரும் புண்ட நீரின் விடாது
மனவயின் அடக்கி —பெருங். 3 : 25 : 71 - 72

104. உறுநீர்ப் பெருங்கடல் உவாவுற் றுங்கு
ஆகுலம் பெருகலின் —பெருங். 1 : 44 : 3 - 4

105. பெருங். 1 : 53 : 156 - 57

வெள்ளம் வருகின்ற வழியை அடைத்து விட்டால் ஏரி, குளம் நிறைதல் இல்லை. அதுபோல உதவி வந்து சேர்வதைத் தடுத்து விட்டால் ஒருவன் வலிமை தானே குன்றும்.[106]

பணியாளர் அரசன் கட்டளையை எதிர்நோக்கியிருந்து கட்டளை பெற்றதும் உடனே பணிசெயப் புறப்படுதல், இறகு முளைத்த புற்றீசல் மழை பெய்தவுடன் கூட்டமாய்ப் புறப்படுவதை ஒத்திருந்தது.[107]

தேன் பருகிய வண்டினைத் தன்னுள் வைத்து மூடிக் கொண்ட தாமரை மலர்போல, பதுமாபதி உதயணனைத் தன் சிவிகையில் ஏற்றி மறைத்துக் கொண்டாள்.[108]

அழுக்காகிய இருவினைகளையும் கழித்து ஒளி வீசுகின்ற மாதவர்போலத் தீயினூடே கிடந்த செம்பொன் அணிகள் மாசு நீங்கி ஒளியுடன் விளங்கின.[109]

தொடக்கத்தில் துன்பம் ஆயினும் முடிவில் இன்பம் பயக்கும் செயல் தவத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளது.[110]

---

106. மாரிப் பெரும்புனல் வருவாய் அடைப்பின்
ஏரிப் பெருங்குளம் நீர்நிறை இலவாம்
அற்றே போல —பெருங். 3 : 27 : 17 - 19

107. புற்றகத் தொடுங்கி முற்றிய காலை
ஈரம் பார்க்கும் ஈயற் கணம்போல்
—1 : 57 : 72 - 73

108. வண்டொடு கூம்பிய மரைமலர் போல
ஒண்தார் மார்பனை உட்பெற்று
—3 : 13 : 48 - 49

109. மாசுவினை கழித்த மாதவர் போலத்
தீயகத் திலங்கித் திறல்விடு கதிரொளி
சேடுறக் கிடந்த செம்பொன் செய்கலம்
—2 : 19 : 63 - 65

110. வருந்தி நோற்ற அருந்தவம் போலப்
பிற்பயம் உடைமை —2 : 10 : 80 - 81

உவமையிலா இன்பம்

கொங்குவேளிர் சிறப்பான உவமைகளைப் பொருத்த மான முறையில் எடுத்துக் கூறியுள்ளார். பெரும்பான்மை அவர் தாம் கண்ட வாழ்க்கை நிகழ்ச்சிகளையே உவமை யாக்கியுள்ளார். மன உணர்வுகளை அவருடைய உவமைகள் மிகத் தெளிவான முறையில் வெளிப்படுத்துகின்றன. முந்தையோர் மொழிந்தவற்றை எடுத்தாண்டுமிருக்கிறார்; தாமே பல புதிய உவமைப் பொருள்களைப் படைத்துக் காட்டியுமிருக்கிறார். அவருடைய உவமை தரும் இன்பம் உவமையிலா இன்பமாம்.

7. காட்சி அமைப்பு

காப்பியம் சிறக்கக் காட்சி அமைப்பு பொருத்தமுடையதாக இருக்க வேண்டும். சிதறிக் கிடக்கும் பொருள்களை அடுக்கி வைக்கும்போது ஒழுங்கு அமைகிறது. அது போன்றே காட்சிகளை ஒழுங்குற அமைக்கும்போது காப்பியம் அழகு பெறுகிறது. ஓர் அறையில் கடிகாரம் எங்கிருக்க வேண்டும், நாற்காலி எங்கு கிடக்க வேண்டும் என்றெல்லாம் இடந்தேர்ந்து வைப்பதுபோலக் காப்பியத்திலும் எவ்வெக் காட்சியை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதில் ஆசிரியர் பெரிதும் கவனம் செலுத்த வேண்டும். உறுப்புகள் ஒவ்வொன்றும் தக்க அளவில் அமைந்திருப்பதே சரியான உடல். ஒரு கை இல்லாமலோ, ஒரு காலை விட மற்றொரு கால் குறைந்தோ, கண் குருடாகவோ, உறுப்பு நலம் இல்லாதவரை ஊனமுற்றோர் என்று குறிப்பிடுகிறோம். காப்பிய உடலுக்குக் காட்சிகளே உறுப்புகள். காட்சிகள் எழிலுற, உரிய முறைப்படி அமையாத காப்பியங்கள் ஊனமுற்றவையாகவே கருதப்படும். திரைப்பட, நாடக இயக்குநர் ஒவ்வொருவரும் காட்சி அமைப்பில் தத்தமக்கெனத் தனி உத்திகளைக் கையாள்வதுண்டு. பெருங்கதையில் கொங்குவேள் கையாண்டுள்ள உத்திகள் மிகவும் சிறப்பானவை. இன்றைய நாடகங்களிலும் திரைப்படங்களிலும் அவருடைய உத்திகள் பல இடம் பெறுகின்றன.

சமச்சீர் உத்தி

வீட்டில் நுழை வாயிலில் இரண்டு மான் தலைகளை மாட்ட வேண்டுமானால் வாயிலின் வலப்புறம் ஒன்றும் இடப்

புறம் ஒன்றுமாக மாட்டுவதுதான் முறை. அவ்வாறு மாட்டும்போதும் வாயிலின் மையத்திலிருந்து ஒன்று ஒரு பக்கத்தில் எவ்வளவு தொலேவில் இருக்கிறதோ அதே தொலேவில் மற்றென்று மறு பக்கத்தில் இருக்க வேண்டும். இவ்வாறு ஓர் அச்சின் இரு புறங்களிலும் ஒரே மாதிரியாக அமைவது சமச்சீர் எனப்படும். காட்சி அமைப்பில் கொங்குவேள் சமச்சீர்ப் பண்பை மிக அருமையாகக் கையாள்கிருர்.

உதயணனும் வாசவதத்தையும் பிரச்சோதனன் அவையில் ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்டனர். ஒருவர் நினேவில் ஒருவர் நிலேத்தனர். மாலே வந்துற்றது. மாளிகையிலிருந்த உதயணனின் மனமெல்லாம் வாசவதத்தையே நிறைந்திருந்தாள். கண்டு கண்டமையாக்குக் காரணமான பெண்மை நலம்; நாணத்தால் உண்டான அடக்கம்; முத்துமாலே கிடந்தசையும் மார்பகம்; இலவ மலர் போன்ற சிவந்த வாய்; மெல்ல நகுதலால் சிறிதே தோன்றும் எயிறுகள்; செவ்வரி படர்ந்த நெடிய கண்கள் கொண்ட வாசவதத்தையின் தோற்றம் அவன் கண் முன்னரேயே நின்றது. “தன்னுடைய காந்தக் கண்களால் என்னே வாரிப் பருகுபவள்போல நோக்கினளே! உள்ளம் கவர்ந்த அக் கள்வியால் உண்ணப்பட்ட ஆண்மையை நான் மீட்டும் பெறுவேனே?” என்று மனஞ் சுழன்று மயங்கினுன்.

> காரிகை உண்டவென் பேரிசை ஆண்மை
> செறுநர் முன்னர்ச் சிறுமை இன்றிப்
> பெறுவென கொல்? [1]

என்பது அவன் மனம் எழுப்பிய கேள்வி.

அதே வேளே, கன்னி மாடத்தில் வாசவதத்தை உதயணனேயே எண்ணி உருகினுள். வஞ்சனேயாற்

1. பெருங். 1 : 33 : 125 - 27

சிறைப்படுத்தியதன்றித் தனியனென்றும் கருதாமல் மதம் பிடித்த நளகிரியை அடக்குதற்கு யாழொடு செல்க என்று உதயணனை ஏவிய தன் தந்தையின் அருளற்ற செய்கையை எண்ணி நொந்தவளாய்ப் பொறியற்ற பாவை போலச் செயலற்று நின்றாள். "காமன் என்னும் பெயரை மறைத்து வத்தவன் என்னும் பெயரைப் பூண்டு யானையைப் பிணித்ததோடன்றி என் உள்ளத்தையும் பிணித்து விட்டானே! கண் வழியே நுழைந்து, மனமாகிய கருவூலத்தில் நிறையென்னும் தாழை முறித்து உள்ளே நுழைந்து, உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டானே! அக்கள்வன் கவர்ந்து கொண்ட உள்ளத்தை மீண்டும் பெறுவேனா?" என்று கலங்கினாள்.

> நிறைத்தாழ் பறித்தென் நெஞ்சகம் புகுந்து
> கள்வன் கொண்ட உள்ளம் இன்னும்
> பெறுவன் கொல்? [2]

இது வாசவதத்தையின் எண்ணம்.

முதற் காட்சியில் மன மயக்கத்தோடுள்ள உதயணனை நம் முன் நிறுத்துகிறார். அடுத்த காட்சியில் அதே நிலையில் வாசவதத்தையைக் காட்டுகிறார். 'என் ஆண்மையைப் பெறுவென் கொல்?' என்ற வினாக் குறியோடு உதயணன் நிற்கிறான். 'என் உள்ளத்தைப் பெறுவன் கொல்' என்ற அதே வினாவுடன் வாசவதத்தையும் நிறுத்தப்படுகிறாள் ஏக்க உணர்வைச் சமச்சீரில் படைத்துக் காட்டுகின்ற அருமையான காட்சி இது. [3]

காதலர் ஒருவரையொருவர் நினைந்து ஏங்கியிருப்பதை வெளிப்படுத்த, காதலன் நிலைவைப் பார்த்துப் பாடுவது போலவும் அதே வேளையில் வேறோரிடத்திலுள்ள காதலியும் நிலைவைப் பார்த்து அதே பாடலைப் பாடுவது போலவும்

2. பெருங். 1 : 33 : 150 - 52
3. பெருங். 1 : 33 : 110 - 154

திரைப்படங்களில் காட்டப்படுவதைக் காண்கிறோம். இத்தகைய காட்சி அமைப்புக்கு அடிப்படையாய் இருப்பது உதயணன் வாசவதத்தை மாலைப் புலம்பலேயாம்.

காதற் காட்சி

காதற் காட்சியமைப்பில் கொங்குவேள் தன்னிகரற்று விளங்குகிறார். பதுமாபதி உதயணன் சந்திப்பு, அவர்களுடைய காதல் வளர்ச்சி ஆகியவற்றை அவர் காட்டும் முறை மிகவும் புதுமையானது.

உதயணன் பார்ப்பன வடிவில் மகத நாடடைந்து புறநகரில் ஒரு பூங்காவில் தோழர்களுடன் தங்கியிருந்தான். அப் பூங்காவிலிருந்த மன்மதன் கோயிலில் விழா தொடங்கியது. அஃது ஏழு நாள் நடைபெறும் ஓர் எழில் விழா. வழிபாடு செய்யப் பதுமாபதி வண்டியில் வந்தாள். வண்டியை மூடியிருந்த திரைச் சீலையைக் காற்று ஒதுக்கியது. வெண் முகிலினூடே தோன்றிய மின்னற் கொடி போல வண்டியினுள் பதுமாபதி காட்சியளித்தாள். சற்றுத் தொலைவில் ஒரு புன்னை மரத்தடியில், குருக்கத்திக் கொடியின் அழகிய சிவந்த தளிரைக் கையில் பற்றியவனாய், இழந்துவிட்ட வாசவதத்தையின் எழிலினையும், பெண்மை நலத்தினையும், காதற் பண்பினையும் எண்ணியிருந்த உதயணன் வண்டியினுள்ளிருந்த பதுமாபதியைக் கண்டான். வடிவாலும் நிறத்தாலும் வாசவதத்தைக்கும் பதுமாபதிக்கும் வேற்றுமை இல்லையாதலின் வாசவதத்தையே அவள் என வைத்த கண் வாங்காமல் பார்த்தான். தாமரை மலரொத்த அழகும் நல்லிலக்கணமும் அமைந்து, பகை வேந்தர்க்குப் பாம்பின் நஞ்சுபோன்றும், இளம் மடைந்தையர்க்கோ அருள் பொழியும் அமுத ஊற்றாயும் தோற்றமளித்த அவனுடைய கண்களைக் கண்ட பதுமாபதி தன் வயமிழந்து அவற்றால் கவரப்பட்டாள். இரு பெருங் கடல்கள் எல்லை கடந்து பொங்கி ஒன்று கூடினாற்

போல இருவருடைய காமப் பண்பாகிய பெருங்கடலி ரண்டும் பொங்கிக் கலந்து, கலங்கி, நிறையும் அறிவுமாகிய கரையையும் துறையையும் கடந்து பரவின. "நடை பெற்றுக் கொண்டிருக்கும் திருவிழா நாயகனாகிய காம வேளே என் நிறையை அளத்தற்காக இங்ஙனம் பேரழகுடன் மானிட வடிவில் இங்கு வந்தனனோ? அல்லது தேவ குமரன் ஒருவன் மண்ணிலுள்ள இன்பங்களை நுகர எண்ணி மனிதனாய் வந்தனனோ? இவன் யாவனே ஆயினும் ஆகுக! காவலுடைய என் நெஞ்சின் கட்டுப்பாட்டினை அழித்து விட்டான்" என்று பதுமாபதி எண்ணினாள். அவன் நெஞ்சில் அவளும், அவள் நெஞ்சில் அவனுமாக மாறி, இருவரும் ஒருவர் நெஞ்சில் ஒருவர் புகுந்தனர்.

பதுமாபதியின் கண்கள் காதல் துடிப்பால் ஒருநிலை நில்லாது, பிறழ்ந்து, இருமருங்கிலும் சென்று சென்று மீண்ட தன்மை, "உதயண குமரனுக்கு இவளுடைய பருத்த தோள்கள் உரியனவாயின! இச் செய்தியை எல்லோரும் அறிந்து கொள்ளுங்கள்" என்று அயலிலுள்ளவர்க்கு அறிவிக்கத் துடித்தன போன்றிருந்தது.

கோயிலை வலம் வந்து தானம் வழங்கியபின் பதுமாபதி அரண்மனையை அடைந்தாள். கண்டோர் மீண்டும் மீண்டும் காண்டற்குக் காரணமாய், கண்டு கண்டமையாத பேரழகு படைத்த இக் கன்னியை யான் கூடப் பெறுவேனோ என்று ஏக்கத்துடனே உதயணன் நண்பர்களை அடைந்தான்.

விளக்கத்திற்காக நீளக் கூறியிருப்பினும்,[4] இக் காட்சி நடைபெறும் நேரம் சில நொடிகளே. திரை அகல்கிறது. உதயணன் பதுமாபதியை வைத்த கண் வாங்காது பார்க்கிறான். அவனைக் கண்ட பதுமாபதியின் கண்கள் படபடக்கின்றன. இவ்வாறு கண்களை மோதவிட்டுக் காதற்

4, பெருங். 3 : 6 : 5 - 134

காட்சியைத் தொடங்கி வைக்கும் ஆசிரியர் அதை வளர்த்துச் செல்லும் முறை மிகவும் அருமையாக உள்ளது.

இரவு வந்துற்றது. பதுமாபதியின் நினைவு உதயணனைப் பெரிதும் அலைக்கழித்தது. செங்கழுநீர் மலரொன்றைப் பற்றி, கூப்பிய கையினளாய், வண்டியிலிருந்து இறங்கி, தன்னை நோக்கி அவள் வருவதுபோன்ற தோற்றம் அவன் கண் முன்னர் நின்றது. வருந்தியிருந்த அவனைத் துயிலுமாறு நண்பர்கள் வற்புறுத்தினர். கண்ணை மூடிய அளவிலே, செங்கழுநீர் மலரோடும் மலர்மாலை அணிந்த கோலத்தோடும் அம் மாலையைத் தனக்குக் கொடுப்பாள் போலப் பதுமாபதி கனவில் தோன்றினாள். துயில் கலைந்து விழிப்புற்றான். அவளை அடைய வழியில்லையா என ஏங்கித் தீயின்மேல் வைக்கப்பட்ட வெண்ணெய் போன்று நெஞ்சம் உருகினான்.

பதுமாபதியும் தாயைப் பிரிந்த கன்றுபோலத் தன் அழகும் பெண்மை நலமும் குன்றிக் கன்னிமாடத்தில் மணம் நிறைந்த படுக்கையில் துயிலின்றிக் கிடந்தாள். தான் கண்ட அந்தணன், பூம் பொழிலில் புன்னை மரத்தடியில் குருக்கத்தியின் வளவிய தளிரைக் கையில் பற்றித் தன்னையே வாரிப் பருகுபவனாய் நிற்பது போலவும், தன்பால் வந்து தனது மெல்லிய தோள்களைப் பற்றி அவனுடைய மார்பிலே அணைத்து இன்பம் நுகர்வது போலவும், அவள் கண் முன்னர்க் காட்சிகள் விரிந்தன. செவ்வரி படர்ந்த அவளுடைய நெடிய கண்களில் அவன் அகலாது நிலைபெற்றுத் தோன்றிய வடிவினன் ஆயினன். முப்புரி நூல் மார்புடைய அவ் வந்தணனின் தோள்களைத் தழுவ வழியே இல்லையா என்று மனச் சுழற்சி கொண்டவளாய், தீயின் பக்கத்தே வைக்கப்பட்ட மெழுகுப் பாவைபோல அவள் உருகி நின்றாள்.

இருவர் நெஞ்சத்தும் ஒத்த இயற்கையதாய்க் காம நோய் வெதுப்பியது. ஓரிடத்துப்போல ஈரிடத்தும் ஒத்த வருத்தமுடையவராயிருந்த உதயணனும் பதுமாபதியும்

தாம் மேற்செய்ய வேண்டிய செயல்களை அறியாராய்க் கலங்கியிருந்தனர். இரவு அவர்களைக் கொன்று தீர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டதுபோல ஒவ்வொரு யாமமும் ஏழு ஏழு யாமங்களாக நீண்டு தோன்றியது. ஒருவாறு காலை மலர்ந்தது. தீயாற் சுடப்பட்ட புண் மீது குளிர்ந்த சந்தனக் குழம்பை இட்டாற் போன்று அவ் விடியற்காலை காதலரிருவரின் காம வேதனையைத் தணித்தது.

உதயணன் வாசவதத்தை முதற் சந்திப்பையடுத்து, மாலைப் புலம்பலில் கையாண்டதுபோல, ஆசிரியர் இங்கும் சமச்சீர் உத்தியையே மேற்கொண்டுள்ளார்.[5]

உதயணன்,

> வெங்கனல் மீமிசை வைத்த வெண்ணெயின்
> நெஞ்சம் உருக[6]

இருந்தான். அதேபோன்று பதுமாபதியும்,

> தீயயல் வைத்த
> மெழுகுசெய் பாவையின் உருகு நெஞ்சினள்[7]

ஆக இருந்தாள்.

இரவில் ஒருவரை ஒருவர் நினைந்து வருந்திய வாசவதத்தைக்கும் உதயணனுக்கும்,

> முழங்குகடற் பட்டோர் உழந்துபின் கண்ட
> கரையெனக் காலை[8]

தோன்றியது. இங்கோ,

---

5. பெருங். 3 : 7 : 40 - 110
6. பெருங். 3 : 7 : 69 - 70
7. பெருங். 3 : 7 : 88 - 89
8. பெருங். 1 : 33 : 208 - 09

செந்தீக் கதீஇய வெந்தழற் புண்ணினுட்
சந்தனச் சாந்திட் டன்ன தண்மையொடு[9]

வைகல் தோன்றுகிறது.

மறுநாளும் முன் நாள்போலவே ஒருவரை ஒருவர் கண்டனர். தத்தம் பிரிவுத் துன்பத்தை ஒருவர்க்கொருவர் உணர்த்தி, இருவருடைய கரு விழிகளும் ஒன்றுபட்டுச் சுழன்றன. ஓரிடத்தில் காண்பதும் மீள்வதுமாக ஐந்து நாட்கள் கழிந்தன.

ஆறும் நாள் பதுமாபதி தன் காதலைத் தன் உசாஅத் துணைத் தோழிக்கு உணர்த்தி அறத்தொடு நிற்றலை விரும்பினாள். காமன் கோயில் மாடத்தே தோழியருடன் ஏறி நின்றாள். தோழியர் கூட்டத்தினின்றும் மெல்ல மெல்ல விலகி, அயிராபதி என்ற கூனற்றோழியை அடைந்தாள். அவளுடைய தோளைத் தன் கையால் வளைத்த வண்ணம் எதிரே குளக்கரையில் நின்றிருந்த உதயணனை நோக்கினாள். அதே வேளை உதயணனும் தன் தோழன் வயந்தகன் தோளை ஒரு கையில் அணைத்துக் கொண்டு மற்றொரு கையால் பூப்பந்தொன்றினை உருட்டி நின்றான்.

''தோழீ! இப் பார்ப்பன மகன் பந்தாடுதலில் மிகவும் வல்லவன் போலும். அவன் இப் பொழுது கையில் உருட்டிக் கொண்டிருக்கும் பந்தினை என் மனம் மிகவும் விரும்புகிறது. பிறர் யாரும் அறியாதபடி இதனை அவனுக்குக் குறிப்பால் கூறி, அப் பந்தினை நமக்குத் தருமாறு வேண்டுவாயாக'' என்று பதுமாபதி தோழியிடம் கூறினாள்.

அயிராபதி உதயணனை நோக்கி, அவன் கையிலுள்ள பூப் பந்தையும், பதுமாபதியையும் குறிப்பாற் சுட்டிக் காட்டி, அப் பந்தைப் பதுமாபதிக்கு அளித்தருள்க என்பதையும் குறிப்பினாற் காட்டினாள். இது கண்ட உதயணன்

---

9. பெருங். 3 : 7 : 108 - 09

பதுமாபதி தன்பால் அன்புடையளாயிருத்தலை அறிந்து, அதனைத் தோழர்கட்கு அறிவித்தான்.

பதுமாபதியின் நோக்கம் காமக் குறிப்புடையதன்று என்று தோழர்கள் உதயணனிடம் மறுத்துக் கூறினர். அவனோ, ''நண்பர்களே! யாம் மலர்களாலும் தளிராலும் மாலை புனைந்து அவள் காணுமாறு குளக்கரையில் வைத்து விட்டு அப்பாற் சென்று மறைந்திருப்போம். யான் வைக்கும் மாலையை அவள் எடுத்துக் கொள்வாளாயின் அப்போதாவது எங்கள் நெஞ்சம் இரண்டறக் கலந்திருப்பதை ஒத்துக் கொள்வீர்கள் அல்லவா?'' என்றான். நண்பர்களும் இசைந்தனர். உதயணன் வளம் பொருந்திய வாழையின் குருத்தினை அரிந்தெடுத்து, அதில் தாமரைக் குளம், காமவேள் கோட்டம், அங்கு நிகழும் திருவிழாக் காட்சி, பதுமாபதி ஏறி வந்த வண்டியின் திரைச்சீலை காற்றில் அகல்தல், அவளை உதயணன் புன்னை மரத்தின் அடியிலிருந்து காணுதல், இருவருடைய நெடிய கண்களும் தம்முட் கலந்தமையால் உண்டான காமத் தோற்றம், ஆகிய காட்சிகளைக் கண்டோர் நெஞ்சைக் கவரும் வகையில் நகத்தால் சித்தரித்தான். அதனோடு அரும்புகளாலும் தளிர்களாலும் மாலை தொடுத்து, பதுமாபதி நோக்கும் செவ்வியறிந்து, அவற்றை ஒரு ஞாழல் மரத்தின் கிளையில் தொங்கச் செய்து அம் மரத்தைத் தன் மார்போடு அணைத்துத் தழுவி, அங்கிருந்து அகன்றான்.

இதைக் கண்ட பதுமாபதி, தன் தோழியரைத் தன்னிடமிருந்து அகற்றினாள். பொய்கையில் விளையாட நெஞ்சம் விழைவதாகவும், அகில் தேய்வை, மலர் முதலியன கொண்டு வருமாறும் வண்ண மகளாய அயிராபதியிடம் கூறினாள். செவிலியர், தமக்கையர், தோழியர் ஆகியோர் அகன்று சென்ற வேளை பார்த்து, தோழி யாப்பியாயினியுடன் அன்னப் பறவைபோல மெல்ல மெல்ல நடந்து பொய்கையை அடைந்தாள். வாள் போலும் கண்கள் சிவக்கும்படிக் குளித்தும் குடைந்தும் நீரில்

திளைத்து விளையாடினாள். கரையேறி, ஈருடை களைந்து, வேற்றுடை உடுத்து, கூந்தற்கு அகிற்புகையூட்டி முடியிட்டாள். பொய்கையில் மலர்ந்திருந்த தாமரையைத் தாளோடு பறித்தாள். தன் பெயர் பொறித்த மோதிரத்தை அத் தாமரைத் தண்டில் செறித்து வைத்தாள். அதனோடு பூசுதற்குரிய சந்தனத்தையும், இரட்டையாகத் தொடுத்த மலர் மாலையினையும் சேர்த்து, அவற்றை உதயணன் வைத்த கண்ணிக்கு அருகில் வைத்தாள்; மாலையின் மீது தன் மார்பிலிருந்த சந்தனத்தைத் தடவித் தன் கூந்தலை இலச்சினையாகப் பதித்தாள். பின்னர் உதயணன் தொங்க விட்டிருந்த மாலையை எடுத்துத் தன் மார்போடு அணைத்துத் தழுவினாள். அவ் வேளை யாப்பியாயினி பொழிலுள்ள மலர்கள் பறித்து வருவதாகக் கூறிப் பிரிந்து சென்றாள். தனித்திருந்த பதுமாபதி வாழைக் குருத்தில் உதயணன் பொறித்த ஓவியத்தைக் கண்டு, அவ் வோவியத்திற்குத் தானே காரணமாதலை நினைந்து நினைந்து புன்னகை புரிந்து, அக் குருத்தினைத் தன் மார்பிலே அப்பிக் கொண்டும், மலர் மாலைகளை எடுத்துத் தலையிலே சூடிக் கொண்டும், பெரிதும் மகிழ்ந்து, உதயணனுடன் கூடினவள்போலப் புத்தொளிபெற்று, பண்டிருந்த பசப்பினையும் வென்று பொலிவு பெற்று விளங்கினாள்.

யாப்பியாயினி திரும்பி வந்து, பதுமாபதியை ஐயுற்றாள் போன்று நோக்கி, ''நங்காய்! உருவத்தால் உன்னை ஒத்தவளாய என் தோழி ஒருத்தி இப் பொழிலில் காணாது போய் விட்டாள். நீ யார்?'' என்றாள். பதுமாபதி மனம் விம்மி, முகம் கவிழ்ந்து, யாதொன்றும் கூறாமல் நாணி நின்றாள். ''ஓ! நீ பதுமாபதி தானோ? உன் மேனியில் கிடந்த பூக்கள் என்னை மயக்கி விட்டன'' என்று நகையாடியவளாய் யாப்பியாயினி பதுமாபதியுடன் அகன்று சென்றாள்.

பதுமாபதி உதயணனுடைய மாலையை எடுத்துச் சென்றிருப்பதையும், தான் வந்ததற்கு அடையாளமாக

மலர் மாலையையும் சந்தனத்தையும் வைத்துச் சென்றிருப் பதையும் கண்ட உதயணன் தோழர் அவற்றை எடுத்து அவனிடம் தந்தனர்.

உதயணன் பெரிதும் மகிழ்ந்தான். பதுமாபதி நீராடிய அதே பொய்கையில் தானும் நீராடுதலை விரும்பி ஆடினன். அவள் விட்டுச் சென்றிருந்த சந்தனத்தைத் தோளிலும் மார்பிலும் அழகுறப் பூசினன்; மலர் மாலையை மகிழ்ச்சி யுடன் அணிந்தான். அவளுடைய மோதிரத்தைத் தன் கையில் மறைத்துக் கொண்டான். அம் மோதிரத்துடன் இருந்த மலரை நன்கு மலர்த்தித் தன் கையிற் பற்றிக் கொண்டான். இவற்ருல் தன் காம மயக்கம் தீர அவளைப் பெற்ருன் போன்று மகிழ்ந்தான்.

உதயணன் என்ன செய்கிருன் என்பதைக் காண்ப தற்கு விரும்பிய பதுமாபதி கோவில் மண்டபத்தின் மேனிலை மாடத்தில் ஏறி நின்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். உதயணன் செயலைக் கண்ட அவள், ''நெஞ்சமே! அஞ்சற்க! யாம் இருவரும் உள்ளப் புணர்ச்சி எய்தியதோடு நில்லாது, ஒருவர் மாலையை ஒருவர் பெற்று மகிழ்ந்தோம். ஆதலால் இனிக் கவலை வேண்டாம்'' என்று தன்னுள்ளே தேற்றுரைகளைக் கூறிக்கொண்டு கன்னி மாடம் மீண்டாள்.

காதலைப் புலப்படுத்தக் கோயில் மாடியில் பதுமாபதி தோழியின் தோளில் கையை வைத்து நிற்பதும், அவ்வாறே குளக் கரையில் உதயணன் நண்பன் தோளை வளைத்து நிற்பதும்,[10] ஒருவர் வைத்த மாலையை ஒருவர் எடுத்து மகிழ்வதும் சிறந்த காதற் காட்சி அமைப்புகளாகத் திகழ் கின்றன.[11]

---

10. பெருங். 3 : 8 : 45 - 65
11. பெருங். 3 : 9 : முழுவதும்

கடிதம் எழுதுவதில் புதுமை

தன் மனைவியரின் தோழியர் பந்தாடியதை உதயணன் மறைந்திருந்து கண்டான். சிறப்பாக ஆடிய மானனீகையின் தோற்றத்தில் மயங்கினன். அவள்பாற் சென்ற மனத்தை மீட்பதற்கு ஆற்றல் இல்லாதவன் ஆயினன். மானனீகையை அடைய விரும்பி அவளை வாசவதத்தையின் வண்ண மகளாக இருக்கப் பணித்தான். கண்டோர் வியக்கும் வண்ணம் அடி முதல் முடியளவாக மானனீகை செய்வித்த கோலத்துடன் வாசவதத்தை உதயணனிடம் சென்றாள். "தேவீ! உனக்கு இந்தப் புனைவு பொருத்தமாயில்லை. மானனீகைக்கு இக் கலையில் போதிய வல்லமை இல்லை போலும்! நான் இப்போது செய்கிறேன் பார்" என்றவனாய் மானனீகை புனைந்தவற்றை அழித்தான். மானனீகை யவன மொழி கற்றவள் என்பதை அறிந்தவனாதலின், பூந்தாதினையும் சந்தனக் குழம்பையும் கூட்டி வாசவதத்தையின் நெற்றியில் கோலம் செய்வான்போல மானனீகைக்குக் காதற் கடிதம் எழுதலானன்.

> ஓடியா விழுச்சீர் உதயணன் ஓலை
> கொடியேர் மருங்குற் குயின்மொழிச் செவ்வாய்
> மான னீகை காணுக[12]

எனக் கடிதம் தொடங்கியது. "பாவாய்! நீ ஆடிய பந்தாட்டத்தில் மயங்கினேன். நின் திருமுகத்தில் உள்ள செவ்வரி படர்ந்த நெடிய கண்கள் என் நெஞ்சைப் பிளந்தன. அதனால் ஏற்பட்ட புண்ணைத் தீர்க்கும் மருந்து நீயே ஆவாய். என்னுடைய துயரம் ஆற்றுதற்கரியது. நீ பந்தாடியது கண்டு என் மனம் பறையடிக்கலாயிற்று. காமப் பெருங் கடலில் நான் அழுந்தாதபடி அரிய தெப்பமாக நீ தான் உதவவேண்டும். இந் நோயால் மெலிந்து என் உயிர் போய்விடின் பின்பு நீ செய்தற்குரிய உதவி யாதும்

12. பெருங். 4 : 13 : 63 - 65

இருக்கப் போவதில்லை. நாம் இப்போது பெற்றுள்ள இளமைப் பருவம் சென்று விட்டால் அதனை மீண்டும் வருவித்துக் கொள்ள முடியாது. இரப்போர்க்கு அவர் விரும்பியதை ஈவதே அறம். இன்னும் எவ்வளவோ எழுத எண்ணுகிறேன். இடமில்லாமையால் இந்த அளவில் நிறுத்துகிறேன். சொல்லாமலே அறிந்து கொள்ளும் நின்போன்ற கூரிய அறிவுடையோர்க்கு விரித்துச் சொல்ல வேண்டுவதில்லையன்றோ? நின்னை இரந்து கேட்கின்றேன். அருள்வாயாக'' என்று கடிதத்தை முடித்து, வாசவதத்தையிடம், ''மெல்லியலோய்! உன் அழகிற்கேற்ற கோலம் இதுவே'' என்று புகழ்ந்து, தழுவி, செல்ல விடுத்தான்.

கணவன் எழுதிய கோலத்தை வாசவதத்தை மானனீகையிடம் காட்டினாள். அவள்,

> பெருமகன் எழுதிய பேரலங் காரத்
> திருமுகம் அழகுடைத்து[13]

என்று கூறி நாணமும் அச்சமும் ஒருங்கே அடைந்தாள். 'அலங்காரத் திருமுகம் அழகுடைத்து' என்பது இரு பொருள்பட விளங்குகிறது. அலங்காரத்தினால் உங்கள் முகம் மேலும் அழகு பெற்றுள்ளது என்ற பொருளோடு, அலங்காரத்தின் மூலம் எழுதியுள்ள இந்தக் கடிதமும் அழகாகத்தான் இருக்கிறது என்ற பொருளையும் கொள்ளலாம். திருமுகம் என்பதற்குக் கடிதம் என்ற பொருளும் உண்டு.

மறுநாள் காலையில் வாசவதத்தையை மானனீகை வழக்கம்போல் புனைவு செய்தாள். அரசனுக்கு மறுமொழி கொடுக்கும் எண்ணம் உடையவளாய், வாசவதத்தையின் நெற்றியில், கூந்தலின் அருகே, பிறர் அறிதற்கு அரிதாக, யவன மொழியைக் கொண்டே எழுதினாள்.

---

13. பெருங். 4 : 13 : 98 - 99

"அரசர் பெரும!

அடியனேன் பொருளா
எழுதிய திருமுகம் பழுதுபடல் இன்றிக்
கண்டேன். [14]

எம் பெருமான் திருவருள் அடிச்சியின்பால் உண்டு என்பதனை அறிந்தேன். ஆயினும் அரசர் பெருமான் அதனை இப்பொழுது தவிர்த்தல் வேண்டும். கடிதத்தில் எழுதியுள்ளது கோப்பெருந்தேவி போன்ற அரச மகளிர்க்குப் பொருந்துவதேயன்றி என்னைப் போன்ற பணி மகளிர்க்கு ஒரு சிறிதும் பொருந்தாது. காவலில் இருக்கும் நான் பிறர் காணுறென்று தகாததைச் செய்தல் இயல்பன்று; செய்தாற் பழிப்புண்டாகும்; தருமமும் நீங்கும். மிகமிகத் தாழ்ந்த என்பால் பெருமான் கொண்டுள்ள திருவருளை அறவே மறந்து விடுதலே நல்லது" என்று எழுதி முடித்து வாசவதத்தையிடம், "பெருமாட்டி! அடிச்சிக்குத் தெரிந்த அலங்காரம் இவ்வளவே" என்றுள். வாசவதத்தை அரசனை அடைந்தாள். அவன் மானனீகை எழுதியதைக் கண்டு நெருப்புச்சுட்ட புண்ணின்மேல் வேல் நுழைந்தாற்போலப் பெரிதும் மனங் கலங்கினன். "தேவீ! இன்றும் புனைவு சரியில்லை. இங்கு வருக" என்று கூறி, "மானனீகாய்! இன்றைக்குள் உன்னை அடையேனாயின் என் உயிர் சென்றதாக எண்ணிக் கொள்.

இன்றை எல்லையுள் இயையா தாயின்
சென்றதென் உயிர் [15]

என்று வாசவதத்தையின் நெற்றியிலேயே எழுதி, 'இந்தப் புதிய அலங்காரத்தை உன் பணி மகளிடம் காட்டுவாயாக' என்று அனுப்பினன்.

மானனீகை மேலும் மறுக்க மனமின்றித் தன் மனத்தைத் திண்ணிதாக்கிக் கொண்டு மறுநாட் காலையில்,

14. பெருங். 4 : 13 : 110 - 12
15. பெருங். 4 : 13 : 135 - 36

"'இன்று இரவு கூத்தப்பள்ளியிலுள்ள குச்சரக் குடிகைத் திண்ணைக்கு வந்தருள்க'' என்று எழுதி அந்த இடத்தை யும் குறியிட்டுக் காட்டி ஒருவகைக் கோலத்தை எழுதி அனுப்பினாள். அவள் எழுதிய குறிப்பைக் கண்டு மகிழ்ந்த அரசன், ''மானனீகை இன்றைக்குச் செய்துள்ள கோலம் மிகவும் நன்றாக உள்ளது'' என்று சொல்லி இரவை எதிர்நோக்கியிருந்தான்.

கடிதம் எழுதுவதில் மிகவும் புதுமையான முறையை இங்குக் காண்கிறோம். இந்த உத்தி கொங்குவேளின் தனி முத்திரையைப் பெறுகிறது. சிலம்பில் மாதவி கோவல னுக்கு எழுதுகின்ற முடங்கல்தான் இலக்கியத்தில் காணப் படும் முதல் முடங்கல். தாழை மடலை ஏடாகக் கொண்டு, பித்திகை மலரின் காம்பினை எழுத்தாணியாகக் கொண்டு, செம்பஞ்சிக் குழம்பில் தோய்த்து மாதவி எழுதுகிறாள். இங்கோ நெற்றியே ஏடாகிறது. மாதவியின் கடிதம் மடித்து அனுப்பிய கடிதம். உதயணன்—மானனீகை கடிதமோ விரிந்தே இருக்கும் விந்தையான கடிதம். கடிதச் செய்தி யாருக்குத் தெரியக் கூடாதோ அவளுடைய நெற்றியையே ஓலையாகப் பயன்படுத்திக் காட்டும் திறம் வியத்தற்குரியது.

கடிதத்தைத் தொடங்க வேண்டிய முறை, செய்தி யைத் தெளிவுறச் சொல்லும் நிலை, இரந்து நிற்போர் எழுதுகின்ற உருக்க மொழிகள், உயர்ந்தோர்க்கு எழுத வேண்டிய பணிவு மொழிகள் ஆகியவற்றை உள்ளடக்கின வாய்க் கடிதம் எழுதுதலை ஒரு கலையாக்கிக் காட்டுகின்றன உதயணன் மானனீகை காதற் கடிதங்கள்.[16]

நகைச்சுவைக் காட்சி

மானனீகை தான் குறிப்பிட்ட குறியிடத்திற் சென்று இருந்தாள். உதயணன் பதுமாபதியிடம் தான் வாசவதத்

---

16. பெருங். 4 : 13 : 50 - 160

தையிடம் துயிலச் செல்வதாகவும், வாசவதத்தையிடம் தான் பதுமாபதியிடம் துயிலச் செல்வதாகவும் கூறினன். மன்னவன் கூற்றில் ஐயம் கொண்ட வாசவதத்தை ஓரிடத்திற் சென்று மறைந்திருந்தாள். உதயணன் பதுமாபதி அறையை நோக்கிச் செல்லாது வேற்றிடம் செல்வதைக் கண்டாள். காஞ்சனமாலையை அழைத்து, அரசன் செல்லுமிடத்தை அறிந்து வருமாறு அனுப்பினுள். காஞ்சனமாலேயும் அரசன் அறியா வண்ணம் அவனைப் பின் தொடர்ந்தாள்.

உதயணனும் மானனீகையும் ஒருவரையொருவர் கண்டு, அளவளாவி, இருவர் துயரமும் ஒருசேர அகலும்படி ஊடியும் கூடியும் நெடும்பொழுது இன்புற்றிருந்தனர். வாசவதத்தையின்,

> திருந்திய முகத்துப் பொருந்திய காதலொடு
> எழுதிய வாசகம் எல்லாம் உரைத்து[17]

மகிழ்ந்திருந்தனர். மன்னவன் மானனீகையிடம், "நாள் தோறும் தவருமல் இங்கே வரவேண்டும்" என்று சொல்லித் தன் சிறுவிரல் மோதிரத்தை அவளுக்களித்து அகன்றுன்.

காஞ்சனமாலை நடந்ததனைத்தையும் வாசவதத்தையிடம் கூறவே அவள் எல்லையற்ற வெகுளி கொண்டாள். ஆயினும் மனத்திலே அடக்கிக்கொண்டு காலையில் அரசனை அடைந்து வணங்கி, "அரசே! நேற்றிரவு நான் ஒரு கனுக் கண்டேன்" என்றுள். உதயணன் 'அது என்ன கனவு?' என்று கேட்க அவள், "நீங்கள் எனக்குத் தெரியாமல் ஒளிந்து சென்று ஒரு மடந்தையோடு கூடி ஆடரங்கு ஒன்றிலேறி நெடுநேரம் விளையாடிக் கொண்டிருந்தீர்கள். என் நெற்றியில் இருவரும் மாறி மாறி எழுதிவிடுத்த காதற் செய்திகளைச் சுவைப்படப் பேசிக் கொண்

---

17. பெருங். 4 : 13 : 177 - 78

டிருந்தீர்கள். இறுதியில் உங்கள் மோதிரத்தை அவளுக்கு அளித்துப் பிரிந்தீர்கள். இந்த அளவில் என் கண்கள் விழித்துக் கொண்டன'' என்றாள். அது கேட்ட உதயணன், ''என் மனத்தாலும் நினையாத ஒன்றை நீ கற்பனையாக நினைந்து கலங்கினை போலும்! அந் நினைவே இங்ஙனம் கனவாகத் தோன்றியுள்ளது. பேதாய்! நான் எப்பொழுதும் உன் உள்ளத்திலே குடியிருப்பவனாக இருந்தும் என்னைக் கள்வன் என்று கருதிவிட்டனையே! கற்புடைய மகளிர் தம் கணவன் திறத்து நினைப்பதுவும் காண்பதுவும் இப்படித்தான் இருக்குமோ?'' என்றான். வாசவதத்தையோ, ''பெருமானே! கனவிற் கண்டதைப் பிறர் ஒருவர் கேட்கக் கூறினால் அக் கனவின் தீமை நீங்கும் என்று கூறுவர். அல்லாமலும் நான் பெருமான்பால் கூறுவதன்றி வேறு யாரிடம் கூற முடியும்'' என்று சொல்லி மனத்தினுள்ளே நகைத்தவளாய் அவ்விடம் விட்டகன்றாள்.

உதயணனோ, ''தேவிக்கு உண்டான கவலையைப் போக்கிவிட்டோம். இனிப் பயமில்லை'' என்று மகிழ்ந்திருந்தான். பகல் நீங்கியது; இரவு வந்தது.

வாசவதத்தை மானனீகையைக் காவலில் வைத்தாள்; பிறர் அறியாதபடி சென்று, ஆடரங்கிலேறி, மானனீகை நிற்க வேண்டிய இடத்தில் தான் நின்றாள். உதயணன் நிகழ்ந்ததை அறியாமல், முதல் நாளைப்போலவே மெல்ல அவளருகே சென்றான். வாசவதத்தை கையால் அவனைத் தடுத்து ஒருபுறமாக ஒதுங்கி நின்றாள். அவனோ மானனீகை பிணங்கியிருக்கிறாள் என்று நினைந்து,

முரசுமுழங்கு தானை அரசொடு வேண்டினும்
தருகுவல் இன்னே; பருவரல் ஒழியினி
மானே! தேனே! மான னீகாய்! [18]

என்று கூறி அவள் காலைப் பற்றத் தொடங்கினான். காலைக் கொடாதவளாகி வாசவதத்தை அப்பாற் சென்றாள்.

---

18. பெருங். 4 : 13 : 227 - 29

அதனைப் பொறாத உதயணன் ஏதேனும் புதிய ஒன்றைச் சொல்லி ஊடலைத் தீர்ப்போம் என்று கருதி, ''அன்பே! நேற்றிரவில் நம்மிருவர்க்குமிடையே இங்கு நிகழ்ந்தது அனைத்தையும் ஒன்றுவிடாமல் கனவில் கண்டதாக இன்று காலையில் வாசவதத்தை வந்து என்னிடம் கூறினாள். நானோ என் நெஞ்சில் அவ் வெண்ணம் சிறிதும் இல்லை என்று கூறி அவள் வருத்தத்தை நீக்கினேன். அவளை நன்றாக ஏமாற்றி விட்டேன்! அதைக்கூட அறியாமல் நீ பிணங்கிக் கொண்டிருக்கிறாயே! மானனீகாய்! அடியேனுக்கு அருள் செய்ய வேண்டும்'' என்று அடுத்தடுத்துக் கூறினான். இதச் சொல் சொல்லியும், வணங்கிக் கூறியும் உதயணன் அருகில் நெருங்கிவர, வாசவதத்தை சிரித்துக் கொண்டே,

> மானும் தேனும் மான னீகையும்
> யானன்று; என்பெயர் வாசவ தத்தை[19]

என்றனள். உதயணன் திடுக்கிட்டு ஓடி வேறொரு மண்டபத்தினுள் புகுந்து கொண்டான்.

மானனீகையை உதயணன் சந்திப்பதும், மறுநாள் குறியிடத்தில் வாசவதத்தை நிற்பதும், நிற்பவள் வாசவதத்தை என்பதை அறியாது உதயணன் கெஞ்சிக் கெஞ்சி நெருங்குவதும், அவள் வாசவதத்தை என்பதை அறிந்ததும் அஞ்சி ஓடுவதும்[20] நடிப்பதற்கேற்ற விறுவிறுப்பும், நகைச் சுவையும் கொண்ட அருமையான காட்சிகளாம்.

அவலக் காட்சி

மாளிகை எரிந்தபோது வாசவதத்தை தீயிற் பட்டு இறந்தாள் என்று கருதிய காஞ்சனமாலை,

---

19. பெருங். 4 : 13 : 249 - 50
20. பெருங். 4 : 13 : 171 - 255

நாவலந் தண்பொழில் நண்ணார் ஓட்டிய
காவலன் மகளே! கணங்குழை மடவோய்!
மண்விளக் காகி வரத்தின வந்தோய்!
பெண்விளக் காகிய பெறலரும் பேதாய்!
பொன்னே! திருவே! அன்னே! அரிவாய்!
நங்காய்! நல்லாய்! கொங்கார் கோதாய்!
வீணைக் கிழத்தீ! வித்தக உருவீ!
தேனேர் கிளவீ! சிறுமுதுக் குறைவீ!
உதையண குமரன் உயிர்த்துணைத் தேவீ!
புதையழல் அகவயிற் புக்கனையோ[21]

என்று அழுது புலம்பியது உள்ளம் உருக்குவதாய் உள்ளது. உயிரனையாரைப் பிரியும்போது ஒப்பாரிப் பாடல் தப்பாது வெளிப்படும் என்பதை இந்தப் பத்து அடிகளும் புலப் படுத்துகின்றன.

வாசவதத்தை தீயில் கருகி மாண்டாள் என்பதை நம்பச் செய்ய, அவள் நகைகளைச் சாம்பலிடையே சிதற விட்டிருந்தனர். ஒவ்வொரு நகையாக எடுத்துப் பார்த்து உதயணன் புலம்பினான். 'பொன்னரிமாலை என்ற கூந்தல் அணிகலனை எடுத்தான். ''தத்தையின் கூந்தலில் மேவி யிருந்த பொன்னரிமாலாய்! செந்தாமரை இதழையொத்த தன் விரல்களால் வாரியும், வகுத்தும், கோதியும், தீண்டி யும் பேணப்பட்டதும், நறுமணப் புகை ஊட்டப்பட்டதும், ஒப்பனை செய்யப்பட்டதுமான அவள் கூந்தலைத் தீ உண் டதே! அவளோடு சேர்ந்திருந்த நீ இப்போது பிரிந்து தனியே நிற்கிறாயே. உனக்குப் பண்பே இல்லையா?'' என்று தூக்கி எறிந்தான். நெற்றிப் பட்டத்தை எடுத் தான். ''என் தத்தை இருந்தபோது அவளே புகலிடம் என்று நெற்றியில் தொற்றிக் கொண்டிருந்தாயே. செல்வக் காலையில் ஒருவனுடன் கூடியிருந்து அல்லற் காலத்தில் பிரியும் அற்பரைப்போல இப்போது பிரிந்துவிட்டாயே! கேவலமான உன்னைப் பார்க்கவும் கூடாது'' என்று விசிறி

21. பெருங். 2 : 18 : 76 - 85

எறிந்தான். பொன்னாலான நெற்றிப் பொட்டை எடுத்தான். "திலகமே! உனக்குப் பற்றிடமாய் இருந்த தத்தையின் நெற்றி, செக்கர் வானத்துள்ளே இளம் பிறை மூழ்கினாற்போல, நெருப்பிலே மூழ்கித் தீய்ந்து போனதால், வேறு புகலிடமின்றி நிலத்தில் விழுந்து கிடக்கின்றாயோ" என்று கலங்கினான். அன்பின்றி அவளை அகன்றனையே என்று காதணியோடு வெகுண்டான். தத்தையின் ஒவ்வோருறுப்பும் தனக்களித்த இன்பத்தைச் சொல்லிச் சொல்லிப் புலம்பினான்.

நகைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் புலம்புவதும், உறுப்புகள் ஒவ்வொன்றையும் நினைந்து ஏங்குவதும் முன் நிகழ்ச்சிகளை நினைந்து நினைந்து அழுவதுமாக அமைக்கப் பட்டுள்ள இக் காட்சி[22] கல் நெஞ்சத்தையும் கரையச் செய்யும்.

உதயணன் வேற்றுருக் கொண்டு மகத நாடு சென்ற போது வழியில் காட்டிடையே குட்டியைத் தழுவி நின்ற பெண்மானை ஆண்மான் காத்து நின்றதைக் கண்டதும் அவனுக்கு வாசவதத்தையின் நினைவு தோன்றியது. அவளுடைய காமத் தோற்றம் கண்முன் தோன்றி நெஞ்சினை ஈர்வது போன்று வருத்தியது. மானை நோக்கி, "காதல் துணையோடு காட்டிடையே விளையாடும் பெண் மானே! தீயினுட் பட்டு இறந்த என் வாசவதத்தை சென்ற இடத்தை அறிந்தால் சொல்" என்று கெஞ்சினான். உன் கணவனாகிய இரலை உன்னருகே நின்று உன்னைக் காப்பது போல நானும் என் மனைவியுடனிருந்து அவளைக் காத்து இன்பமாய் விளையாட வேண்டாமா?" என்ற ஏக்கம் அவன் பேச்சில் புலப்பட்டது. மலைப் பாறையில், மயிற் சேவல் பாதுகாத்து நிற்க, நீலமணிபோலும் தோகையினை உளர்ந்து நின்ற மயிற் பேடையைக் கண்டான். "இள நடை பயிலும் இனிய மயிற் பேடையே! நின்னை நின்

22. பெருங். 2 : 19 : 68 - 215

சேவல் காத்தல் போன்று யான் என் காதலியைக் காவாது ஒழிந்தேனே! என் ஆருயிர்க் காதலி இம்மை மாறி மறுமையிற் பிறந்துள்ள இடத்தை நின் கூர்த்த அறிவால் ஆராய்ந்து கூறினால் உனக்குப் புண்ணியமுண்டாகும்'' என்று வேண்டினான். பாலை நில ஆண் புறுவைக் கண்டான். ''புறவே! புறவே! என் காதலி பிறந்துள்ள இடத்தை அறிவேனாயின் ஆசை தீரச் சென்றடைவேன். அவளிருக்குமிடத்தை அறிந்து கூறு. இல்லையேல் நீ நின் பெடையுடன் இன்பம் நுகர்வது புண்ணியமாகாது'' என்று புலம்பினான். ''ஆரவாரித்துத் திரியும் ஆறுகால் வண்டே! என் காதலி தத்தை உள்ள இடத்தை நீ அறிந்து சொன்னால் என்னுடைய கவலை தீரும்; நீயும் அவளுடைய மாலையிலுள்ள மலர்களில் தேனையுண்டு கூந்தலிலுள்ள மலர்களில் பள்ளி கொள்ளலாம். அவளை எனக்குக் காட்ட மாட்டாயா?'' என்று இரங்கினான். ''தென்றலே! செல்லும் வழிகளிளெல்லாம் என் வாசவதத்தையைக் குறி வைத்துத் தேடிச் சென்று, அவளைக் கண்டு, அவள் மார்பில் பூசியுள்ள குங்குமக் குழம்பிலே நன்றாக முழுகி விளையாடி, அந்த நறு மணத்தோடே மீட்டும் என்பால் வந்து, என் மயக்கத்தை மாற்றமாட்டாயா?'' என்று மயங்கினான்.

மான், மயில், புறு, வண்டு, தென்றல் ஆகியவற்றை நோக்கி உதயணன் ஆற்றாமல் புலம்புவது[23] அவலத்தின் பிழிவாக அமைந்திருக்கிறது.

கனவுக் காட்சி

தான் வைத்த மாலையை எடுத்துக் கொண்டு அவளுடைய மோதிரத்தை விட்டுச் சென்றமையால் பதுமாபதி தன்னை முற்றிலுமாக விரும்புகிறாள் என்பதறிந்த உதயணன் அவளையே நினைந்து துயிலில்லாமல் இருந்தான்.

23. பெருங். 3 : 1 : 139 - 210

விடியற் காலையில் கண்கள் மூடின. நீல மணி போன்ற கரிய கூந்தல் பின்னிப் பிணைந்து முதுகிலே தாழ்ந்து கிடக்க வாசவதத்தை கனவில் தோன்றினாள். உதயணன் அக் கனவினை விரும்பி,

> மாசில் கற்பின் வாசவ தத்தாய்
> வன்க ணாளனேன் புன்கண் தீர
> வந்தனை யோவென[24]

வாய் திறந்து அரற்றினான். வாசவதத்தையோ, "என்னைத் துறந்து அயல் நாடு சென்றவர் அன்புடையார் போலப் பேசுவது வெற்றுரை" என்று சொல்லி அகன்றாள். அவன், "அன்பே! இழந்தோரை மீட்டுத் தரும் பெரியார் ஒருவர் இந் நகரத்தே வாழ்கிறார் என்று கேள்விப்பட்டு உன்னை மீட்கும் பொருட்டே மலைகளையும் காடுகளையும் கடந்து இங்கு வந்தேன். என்னைச் சினப்பது முறையல்ல" என்று அவள் அடிகளில் வீழ்ந்து வணங்கி அவற்றைப் பற்றிக் கொண்டு இரந்தான். அவள்,

> மதுநாறு தெரியல் மகதவன் தங்கை
> பதுமா பதிவயிற் பசைந்தவள் வைத்த
> கோதையும் சாந்தும் கொண்டணிந் தனை;[25]

இருந்தும் ஒன்றும் தெரியாததுபோலப் பேசுகிறீர்" என்று சினந்து மேலும் அகன்று சென்றாள். அவன் மீண்டும் அவளை அணுகி, "தேவீ! தருசகன் தங்கையாய்ப் பதுமாபதி என்னும் பெயருடையவள் ஒருத்தி இருக்கிறாள் என்பதையே இப்பொழுது நீ கூறித்தான் கேள்வியுறுகிறேன். என் உள்ளத்தை ஐயுற்று ஆராய்கிறாய் போலும்" என்று இவை போன்றனவாகிய நய மொழிகளை மீண்டும் மீண்டும் கூறி வேண்டி நிற்கும்போதே கனவு மறைய, காலை மலர்ந்தது.

---

24. பெருங். 3 : 9 : 158 - 60
25. பெருங். 3 : 9 : 170 - 72

உள் மனத்தில் ஆழ்ந்து கிடக்கும் செய்தியே கனவாக உருப்பெறும் என்பதற்கு உதயணனின் இக் கனவு[26] ஓர் எடுத்துக்காட்டு.

இழந்திருந்த கோடபதி யாழை உதயணன் மீட்டும் பெற்றான். வாசவதத்தை பெற்ற யாழ்ப் பயிற்சியைத் தானும் பெற விரும்புவதாகப் பதுமாபதி அவனிடம் கூறினாள். வாசவதத்தையின் பெயரைக் கேட்டதும் அவன் கலங்கினான். கண்களில் நீர் துளித்தது. அவள் நினைவுடனேயே துயின்றான். பாற்கடல் நடுவே ஒரு வெண் தாமரைப் பூ; அதில் வெள்ளேறு ஒன்று படுத்திருந்தது. அதன் வாய், கண், குளம்பு ஆகியவை பவழ நிறமுடையதாயிருந்தன. உடம்போ திங்களையும் பளிங்கையுமொத்த வெண்மை நிறமுடையதாய்த் திகழ்ந்தது. வயிரம் போன்ற அதன் கொம்பு கூர்மையாய் விளங்கியது. காளை படுத்திருந்த அப் பூவைத் தெய்வ மகள் ஒருத்தி தனக்குக் கொடுத்ததாக உதயணன் கனக் கண்டான். மறுநாள் ஒரு முனிவரை அடைந்து தன் கனவைத் தெரிவித்துப் பலனைச் சொல்லுமாறு வேண்டினான்.

அம் முனிவர், ''மன்னனே! வாசவதத்தை தீயில் மூழ்கி இறந்தாளென்று எண்ணியிருக்கின்றாய். அது பொய். அவள் விரைவில் உன்னை அடைவாள். அவளிடம் வித்தியாரர் உலகை ஆளும் மகனொருவன் தோன்றுவான்'' என்றார். ''வெண் தாமரைப் பூ வாசவதத்தையைக் குறிக்கும். பூவின்மேல் கிடந்த வெள்ளைக் காளை நின் மகனைக் குறிக்கும். பாற் கடல், வெள்ளைக் காளை, வெண் தாமரைப் பூ ஆகிய மூன்று வெண்மைகளையும் ஒருசேரக் கண்டதால் நின் மகன் புகழ் பெருக ஆட்சி நடத்துவான்'' என்று விளக்கமும் தந்தார்.

சங்க இலக்கியங்களில் மனத்தில் இருப்பது கனவில் தோன்றுகின்ற நிகழ்ச்சிகள் மட்டுமே இடம் பெறுகின்றன.

26. பெருங். 3 : 9 : 150 - 183

சிலப்பதிகாரத்தில் வருங் காலத்தை உரைப்பனவாகக் கனவுகள் காட்டப்பட்டுள்ளன.[27] கனவு காண்பதும், அதற்கான பலனைத் தக்காரிடம் கேட்டு அறிவதுமான நிலையைப் பெருங்கதையிற்றான் முதன் முதலாகக் காண்கிறோம்.[28] பிள்ளையில்லையே என்ற குறையுடன் துயின்ற உதயணன் கனவு காண்பதும், அதன் பலனை ஒரு முனிவரிடம் அறிவதும் நூலின் பிறிதோரிடத்திலும் காட்டப்படுகிறது.[29] கனவுக்குப் பலன் அறிதல் என்ற புதிய போக்கைக் கொங்குவேள் முதன் முதலாகத் தொடங்கி வைக்கிறார்.

கனவும் நனவும் கலந்த மயக்கம்

வாசவதத்தையை மீட்டுத்தர ஒரு முனிவர் வந்துள்ளாரென்றும், ஆதலின் அவன் சில நாள் பதுமாபதியைப் பிரிந்து உறைய வேண்டுமென்றும் நண்பர்கள் உதயணனிடம் கூறினர். அவனும் அவ்வாறே தனித்து இருந்தான். துயிலிடையே, ''வாசவதத்தாய்! உன்னைப் பிரிந்து ஆற்றேனாயினேன். என்னை மறந்தாயே'' என்று அரற்றினான். அவனுடைய காம உயிர்ப்பினால் அருகில் பூந் தட்டிலிருந்த மாலையும் கருகியது. அந் நிலையில் உதயணனைக் காண வாசவதத்தையை அங்கே கொண்டுவந்து சேர்த்தனர். கணவன் தன்னையன்றி வேறு மகளிரை நினையாதது கண்டு அவனுக்கு அஞ்சலி செய்து மெல்ல அருகிற் சென்றாள். பிரிந்த குழந்தையைக் கண்ட தாய்போலக் கோடபதி யாழை எடுத்தணைத்து மெல்ல மீட்டினாள். இன்னிசை கேட்டதும் உதயணன் துயில் மயக்கத்துடனேயே, ''வாசவதத்தாய்! வந்துவிட்டாயா'' என்று அவளுடைய கூந்தலையும் அழகிய முதுகையும் கையால்

27. சிலப். 9 : 45 - 54; 15 : 95 - 106
28. பெருங். 4 : 5 : 66 - 122
29. பெருங். 5 : 1 : 76 - 118

தடவினான். தன் தோளை அவள் மார்பிற் சாத்தி, ''நன்னுதல் மடவோய்! நாள் பலவாக என்னைக் காணாது எவ்வாறு ஆற்றியிருந்தனையோ?'' என்று கேட்டு, அவள் உடலைத் தீண்டி அறிந்தான். ஆயினும் தான் காணுவது கனவென்ற நினைவால் நனவை அறியாது கண்மூடிக் கிடந்தான். வாசவதத்தை மறுமொழி எதுவும் கொடாதவளாய்க் குனிந்து அவனையே பார்த்த வண்ணம் வாளா இருந்தாள். உறங்கியவன் புரண்டு நகர்ந்து, ''நங்காய்! மலைச் சாரற் பூஞ்சோலையில் நாம் உண்டாடி அரண்மனை திரும்பிய பின் ஒரு நாள் அப் பூஞ்சோலைத் தளிர்களும் பூக்களும் வேண்டுமென்று கேட்டாய். அவற்றைக் கொண்டு வரக் குதிரையேறிச் சென்ற நான் திரும்புவதற்குள் தீவாய்ப்பட்டு உயிரை விட்டாய்! இப்பொழுதோ அணிகலன் எதுவுமின்றி நான் அறிய இயலாதபடி மெலிவுற்றுத் தோன்றுகிறாய். நெருப்பில் வெந்து மடிந்தோருடைய உருவம் இப்படித்தான் இருக்குமோ?'' என்று அவள் மெய்யைத் தீண்டிய வண்ணமே துயிலத் தொடங்கினான். நண்பர்கள் வாசவதத்தையைப் பிரித்துச் சென்றனர். உதயணன் புரண்டு, ''நங்காய்! என் வினாவிற்கு ஏதும் மறுமொழி தரவில்லையே'' என்று கூறிக்கொண்டே தழுவச் சென்றவன், அவளைக் காணாமல் துயில் மயக்கம் தெளியப்பெற்றுப் பெரிதும் வருந்திப் புலம்பினான்.

வாசவதத்தை நேரில் வருகிறாள். உதயணனும் மேலெல்லாம் தடவி அவளை அணைத்து மகிழ்கிறான். ஆயினும் அது நனவு என்பதை உணராதவனாய்க் கனவாகவே கருதித் தூக்க மயக்கத்திலேயே இருக்கிறான். தன் முன்னே இருப்பவள் உயிருடனுள்ள வாசவதத்தைதான் என்பதை உணர்ந்தானில்லை. நனவைக் கனவாக மயங்க வைத்துப் படைக்கப்பட்டுள்ள இந்த இடம்[30] காட்சியமைப்பிலேயே தனிச் சிறப்புடையதாய்த் திகழ்கிறது.

30. பெருங். 4 : 7 : 1 - 93

தூண்டற் காட்சி

மகப்பேறின்றி இறந்த ஒருவனுடைய சொத்து பற்றிய வழக்கு விசாரணைக்கு வந்தது. அதைக் கேட்டிருந்த உதயணன், ''எனக்கும் மக்கள் இல்லையாயின் நான் பிறந்த குரு குலத்திலும் இத்தகைய இடையறவு நேரிட்டு விடுமே'' என்ற நினைவுடன் வாசவதத்தையிடம் சென்றான்.

அவ் வேளை வாசவதத்தை மாளிகையில் அமர்ந்திருந் தாள். எதிரே மாடத்தில் பவழக் கொடி போன்ற சிவந்த கால்களையும், அகிற் புகை நிறத்தையொத்த தூவிகளையும் உடைய புருக்கள், தம் வாயிற் பற்றிக் கொணர்ந்த உணவினைக் குஞ்சுகளின் வாயில் சொரிந்தன. தாய்மை அன்பைக் கண்ட அவள், தான் தாயாக இல்லையே என்பதை நினைத்தாள்.

இருவேறு காட்சிகள் படைக்கப்பட்டு[31] இருவர்க்கும் ஒரே நேரத்தில் மகப்பேறு பற்றிய நினைவு தோற்றுவிக்கப் படுகிறது.

வீதிக் காட்சி

வீதியில் மக்கள் பேசிச் செல்வதுபோலக் காட்சிகள் காப்பியங்களில் இடம் பெறச் செய்வது ஒரு முறை. கொங்குவேளும் அதைப் பின்பற்றுகிறார். நருமதை உதயணனுக்குப் பெண்டாக மறுக்கவே, அவளுடைய தாயின் கூற்றின்படி, வயந்தகன் அவளைத் தேரில் கட்டி வலிய இழுத்து வந்தான். வீதியில் அக் காட்சியைக் கண்ட வர்களில் சிலர், ''கல்வியும் அழகும் உயர்குடிப் பிறப்பும் ஒருங்கே அமைந்த உதையணகுமரனைப் பெற இக்கணிகை மகள் முற்பிறப்பில் தவம் செய்திருக்க வேண்டும். அவனே இவளை விரும்பியும் இவள் அவனை விரும்பாமல் பிறர்

---

31. பெருங். 5 : 1 : 56 - 72

பொருட்டு நொந்து அழுகிறுளே! இவள் பெண் தன்மையே இல்லாதவளோ? பெரியோரைப் பேணுத அறிவிலியாக இருக்கிறுளே'' என்று அவளைப் பழித்துரைத்தனர்.

மற்ரெருரு சாரார், ''உதயணன் வெற்றிச் சிறப்புடைய அரச மரபில் பிறந்தவன். தன் குடிக்குப் பழியுண்டாகும் படி முன்னரே தன்னேடொத்த மற்ரெருரு மன்னன் ஏவிய பண்பற்ற சிறு தொழிலைச் செய்துள்ளான். அத்தோடமை யாது தன்னை விரும்பாத ஒரு கணிகை மகளைத் தான் விரும்பி அரற்றுவதுமல்லாமல் கண்ணேட்டமின்றி இவ் விழி செயலையும் துணிந்து செய்கின்றனனே'' என்று அவ னுடைய அறிவைப் பழித்தனர்.

ஒன்றைப் பற்றிய இருவேறு கருத்துகளை அறிய இவ் வீதிக் காட்சி[32] பயன்படுகிறது.

பரபரப்புக் காட்சி

ஆற்றங் கரையில் நீராட்டு விழா நடைபெற்ற வேளை யில் யூகி உச்சயினி நகரில் தீயிடச் செய்தான். தீ எங்கும் பரவியது. நீராடற்குச் செல்லாமல் இல்லங்களிலேயே தங்கியிருந்த பணி மகளிர் பதறி எழுந்தனர். மார்பில் புரண்டசையும் முத்து மாலை புடைப்பதையே பொருத தம் முடைய வயிற்றில் மாறி மாறிப் புடைத்துக் கொண்டு ஓடினர்.

அணிமையில் மகவீன்ற மகளிர், தம் இளங் குழவி களைத் தழுவிக்கொண்டு, கண்களில் நீர் பெருக, காற்றுல் தாக்கப்பட்ட வாழை போன்று நிலை கலங்கி, உடல் நடுங்கி, அலறி யழுதனர்.

முதிர்ந்த சூலினையுடைய மகளிர் நகரில் எழுந்த பெருந் தீயைக் கண்டு அஞ்சித் தம் மையுண்ட கண்கள் கலக்க

32. பெருங் 1 : 35 : 156 – 170

மெய்திச் சுழல, எதிர் வந்தோரை வணங்கித் தம்மை பாதுகாக்கும்படி வேண்டினர்.

தாயர் சிலர் தவழ்கின்ற தம் இளங் குழவியை ஒரு கையால் அணைத்துக்கொண்டு, அவிழ்ந்து நெகிழ்ந்த ஆடையை மற்றொரு கையால் கட்டிக்கொண்டே ஓடினர். ஓடிய வேகத்தில் சரிந்து விழுந்த கூந்தலைச் சுட்டெரித்த தீயைத் தட்டி அகற்ற இன்னொரு கை இல்லையே என்று வருந்தினர். ''தீக் கடவுளே! எம்மைப் பாதுகாப்பாயாக'' என்று வேண்டிக்கொண்டே தம் வீடுகளின் அருகிலிருந்த குளங்களில் இறங்கி நின்றனர்.

தலை நரைத்து, வற்றிய உடம்போடு, நடுக்கம் எய்தி, காலைப் பெயர்த்து வைக்கவும் முடியாத தளர்ச்சியுடனிருந்த நரை மூதாட்டியர், தம்மை வீட்டை விட்டு வெளியிற் கொண்டு செல்ல வேறு யாரும் துணையில்லாததால் திண்ணைகளில் மோதி விழுந்து முன்றிலை அடைந்தனர்.

தீப்பற்றி எரியும் இடத்தில் ஏற்பட்ட பரபரப்பான சூழ்நிலையை இக் காட்சி[33] நன்கு விளக்குகிறது.

பின்னணிக் காட்சி

உதயணன் வாசவதத்தையை ஏற்றிச் சென்ற பத்திராபதி யானை காற்றிலும் கடிது சென்றது. எதிரேயிருந்த மலைகளும் மரங்களும் பெயர்ந்து மேலே மோத வருவனபோலத் தோன்றின. மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை நிலங்கள் வழியாக யானை விரைந்து சென்றது.[34]

திரைப்படத்தில் பின்னணிக் காட்சியமைக்க இந்த இடம் மிகவும் பொருத்தமானது. யானை ஓடிக் கொண்டேயிருக்க, நால்வகை நிலங்களின் இயற்கைத் தோற்றங்களையும் அங்கு நடைபெறும் செயல்களையும், பின்னணியாகக் காட்டிக்கொண்டே செல்லலாம்.

---

33. பெருங். 1 : 43 : 123 - 162

34. பெருங். 1 : 48, 49, 50, 52 காதைகள்

வான்வழிக் காட்சி

வானிலிருந்து கீழே நோக்கும் காட்சியும் பெருங்கதையில் இடம் பெற்றுள்ளது. வாசவதத்தையின் வயா விருப்பத்தை நிறைவேற்ற உதயணன் அவளை விமானத்திலேற்றிப் பறந்தான். விமானம் மேலே பறந்து முன்னேற முன்னேறக் கீழே பொன்மலை முதல் பொதிய மலை வரையிலான இடங்கள் படங்களாகத் தெரிந்தன. விமானத்திலிருந்தவர்க்கு,

அவந்திகை நாடும் அணிஉஞ் சேனையும்
மலைமருங் குறையும் மழகளிற் றீட்டமும்
கலைமான் ஏறும் கவுரியுங் களித்த
அருவித் தலையும் அணிமலை இடமும்
குளிர்பொழிற் சோலையுங் குயிற்றெருகைப் பரப்பும்
மயில்விளை யாட்டும் மான்கண மருட்சியும்
புயல்வளம் படுக்கும் பொருவில் வளமை
அவந்தி நாடும் இகந்துமீ தியங்கித்
தண்டா ரணியமும் தாபதப் பள்ளியும்
வண்டார் சோலையும் வளங்கெழு மலையும்
மயிலாடு சிமையப் பொதியிலும் அதன்மிசைக்
குளிர்கொள் சந்தனத் தொளிர்மலர்க் காவும்
காவின் நடுவண் வாவியும் கதிர்மணித்
தேவ குலனும் தென்பால் இலங்கையும்[35]

தெரிந்தன.

விமானம் செல்லச் செல்லக் கீழே மலைகள், ஆறுகள், நாடுகள், நகரங்கள், சோலைகள், உயிரினங்கள் ஆகியவை விமானத்திலிருந்தோர்க்கு மாறி மாறிக் காட்சிப் பொருளாக அமைந்தன. இதுவும் திரைப்படத்திற்கு ஏற்ற சிறந்த காட்சி. மேலே விமானம் பறப்பதையும் கீழே காட்சிகளையும் ஒன்றிணைத்துக் காட்டி மகிழ்விக்கலாம்.

---

35. பெருங். 5 : 4 : 136 - 149

கடந்த நிகழ்ச்சிகளைக் கண்முன் கொணர்தல்

திரைப்படங்களில் ஒன்றைச் சொல்லி வரும்போது கடந்த கால நிகழ்ச்சிகளைச் சொல்ல வேண்டியிருந்தால் இடையே அதை நினைவுக் காட்சியாகக் காட்டுவதுண்டு. இத்தகைய பின்நோக்குக் காட்சிகள் பெருங்கதையில் பல உள.

உச்சயினியில் சாங்கியத்தாய் உதயணனிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பொழுது கௌசாம்பியில் பண்டு அவனை அவன் காப்பாற்றிய நிகழ்ச்சியை நினைவுக்குக் கொண்டு வந்தாள்.[36]

உச்சயினியிலிருந்து திரும்பிய யூகி இடபகனிடம் உச்சயினியில் உதயணனைச் சிறைமீட்க எடுத்துக்கொண்ட முயற்சிகளை எடுத்துச் சொன்னான்.[37]

யூகி மாண்டதாகக் கேள்வியுற்ற உதயணன் சிறுவயதில் அவர்களிடையே நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சொல்லி அழுதான்.[38] அப்போது உதயணனைத் தேற்றிய உருமண்ணுவாவின் பேச்சில் உதயணனின் பிறப்பும் இளமைக்கால நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.[39]

கடந்த கால நிகழ்ச்சிகளை நினைவலைகளாகக் கொண்டு வரும் உத்தியைக் கொங்குவேள் கையாண்டதால் முதற் காண்டத்தில் கிடைக்காது போன பகுதியின் கதையை அறிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இனிமைத் தேன்

தேனீக்கள் அடையைக் கட்டி அதில் தேனைச் சேர்த்து வைப்பதுபோல, கொங்குவேள் காப்பியக் கூட்டில் காட்சியமைப்பாகிய அடையைச் செம்மையாக அமைத்து அதனுள் இனிமைத் தேனை நிறைத்து வைத்துள்ளார். தேனுண்ணும் ஈக்களாக நாம் மொய்ப்போமாக!

---

36 பெருங். 1 : 36 : 149 - 201
37. பெருங். 2 : 9 : 36 - 117
38. பெருங். 2 : 10 : 140 - 157
39. பெருங். 2 : 11 : 46 - 160

8. பெண்டிர்

(அ) அழகு

பெண்ணழகைப் பாடாத புலவர் இல்லை எனலாம். பெண்டிரை வெறுத்துப் பாடியவர்கூட, அவரழகை விரிவாகப் பேசி அத்தகைய அழகில் மயங்காதிருக்க வேண்டுமென்றே பாடிச் சென்றுள்ளனர். பெருங்கதையில் உதயணன் மனைவியர் நால்வர், பிரச்சோதனன் தேவியர், ஆருணி மன்னன் மனைவி, தோழியர், உழைப் பெண்டிர் எனக் கதை மகளிர் பலராக உள்ளனர். ஆதலின் பெண்ணழகை விரிவாகப் பேசுதற்கு வாய்ப்புள்ளது. கொங்கு வேளிர் ஒரு சிற்றரசர். அரண்மனைப் பெண்டிரின் அழகையும் இயல்பையும் நன்கு அறிந்தவர். விரிவான காட்சிப் பரப்பைக் கொண்டு தகுதியாளர் ஒருவர் இயற்றியுள்ளமையால் பெருங்கதைப் பெண்ணோவியம் அழகு மிக்கதாக உள்ளது. வளமான தமிழில் பெண்டிர் வனப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வோருறுப்பையும் ஆசிரியர் தகுந்த சொற்களால் புலப்படுத்துகின்றார். ஒரே உறுப்பைப் பல்வேறு வகையாகக் கூறுவது அவருடைய மொழி வளத்தைக் காட்டுகிறது. முடி முதல் அடி வரை அவர் வரைந்துள்ள முழு ஓவியத்தையும் இங்கே காண்போம்.

முகம்

தாமரை முகத்தி (1 : 34 : 76)
குளிர்மதி முகத்தி (2 : 18 : 5)
கதிர்மதி முகத்தி (1 : 34 : 84)

திருமதி முகத்தி (3 : 13 : 36)
மதிபுரை முகத்தி (2 : 17 : 104)
நிலாவுறு திருமுகம் (3 : 14 : 122)
ஒண்கதிர் மதிமுகம் (3 : 22 : 224)
கோளேர் மதிமுகம் (4 : 12 : 136)
மதிக்கவின் அழித்த மாசறு திருமுகம் (2 : 2 : 6)
கூடுமதி அன்ன சேடணி திருமுகம் (2 : 15 : 79)
திலதஞ் சுடரும் திருமதி வாண்முகம் (3 : 5 : 23)
தாமரை எள்ளிய காமரு திருமுகம் (2 : 4 : 126)

நுதல்

பிறை நுதல் (1 : 36 : 265)
திரு நுதல் (2 : 1 : 75)
நறு நுதல் (2 : 8 : 73)
சிறு நுதல் (2 : 16 : 23)
நன்னுதல் (3 : 15 : 38)
வாணுதல் (4 : 7 : 2)
ஒண்ணுதல் (4 : 10 : 154)
பூ நுதல் (1 : 48 : 80)
செம்பொற் சுண்ணஞ் சிதர்ந்த திருநுதல் (1 : 33 : 120)
பனிப்பிறை அழித்த படிமைத் தாகிய
அணித்தகு சிறுநுதல் (2 : 16 : 22-23)
அந்தியுள் முளைத்த வெண்பிறை போலச்
..................சிறுநுதல் (2 : 19 : 88-89)

புருவம்

எழுதி யன்ன ஏந்துநுண் புருவம் (1 : 40 : 321)
சிலை அணி அழித்த சென்றேந்து புருவம் (2 : 12 : 91)
உருவ வானத்து ஒளிபெறக் குலாஅய
திருவில் அன்ன சென்றேந்து புருவம் (2 : 16 : 24-25)
முரிந்தேந்து புருவம் பொருந்திய பூநுதல் (2 : 15 : 87)

கண்

உண்கண் :

மலரேர் உண்கண் (1 : 35 : 60)
வடிவேல் உண்கண் (1 : 36 : 99)

கருங்கேழ் உண்கண் (1 : 43 : 142)
வடிக்கேழ் உண்கண் (4 : 10 : 90)
குவளை உண்கண் (3 : 17 : 118)
நீல உண்கண் (5 : 7 : 129)

மழைக்கண் :

ஒள்ளரி மழைக்கண் (5 : 3 : 200)
மதரரி மழைக்கண் (3 : 5 : 24)
அரிமதர் மழைக்கண் (1 : 51 : 87)
பெருமதர் மழைக்கண் (1 : 33 : 136)
செங்கடை மழைக்கண் (1 : 40 : 367)
கருங்கடை மழைக்கண் (2 : 8 : 65)

நெடுங்கண் :

அரிமலர் நெடுங்கண் (3 : 7 : 84)
தத்தரி நெடுங்கண் (1 : 48 : 67)
சிந்தரி நெடுங்கண் (4 : 13 : 70)
கயலேர் நெடுங்கண் (1 : 40 : 359)
செருக்கயல் நெடுங்கண் (3 : 14 : 36)
பூப்புரை நெடுங்கண் (3 : 24 : 171)
இணைமலர் நெடுங்கண் (3 : 7 : 32)
அயிலிடு நெடுங்கண் (1 : 44 : 9)

தடங்கண் :

பெருந் தடங்கண் (3 : 14 : 133)
அரியார் தடங்கண் (4 : 8 : 13)
வாளரித் தடங்கண் (1 : 53 : 11)
வாளேர் தடங்கண் (4 : 12 : 135)
வடியேர் தடங்கண் (1 : 44 : 153)
வடிவேல் தடங்கண் (4 : 5 : 11)
நீடுமலர்த் தடங்கண் (1 : 48 : 126)
கொழுமலர்த் தடங்கண் (1 : 42 : 50)

படைமலர்த் தடங்கண் (1 : 46 : 210)
வடிமலர்த் தடங்கண் (4 : 7 : 100)

வேற்கண் :

செங்கடை வேற்கண் (3 : 21 : 18)
மாறடு வேற்கண் (2 : 14 : 38)
நீல வேற்கண் (4 : 11 : 46)
இலங்கொளி வாட்கண் (2 : 2 : 48)
மாவடி மடக்கண் (3 : 25 : 149)
படைமலி நயனம் (4 : 13 : 20)

கண்ணி :

கயலேர் கண்ணி (2 : 11 : 66)
கயல்புரை கண்ணி (1 : 47 : 258)
அரிமலர்க் கண்ணி (2 : 16 : 95)
சில்லரிக் கண்ணி (2 : 9 : 105)
ஓடரிக் கண்ணி (4 : 12 : 264)
வாளேர் கண்ணி (3 : 14 : 182)
படையேர் கண்ணி (1 : 42 : 125)
அயில்வேற் கண்ணி (4 : 7 : 73)
கணைபுணர் கண்ணி (3 : 14 : 200)
மைவளர் கண்ணி (3 : 7 : 67)
மைதவழ் கண்ணி (3 : 15 : 18)
மையார் கண்ணி (1 : 46 : 204)
மைதோய் கண்ணி (5 : 1 : 210)
போதேர் கண்ணி (5 : 1 : 166)
அந்தளிர்க் கண்ணி (4 12 : 243)
தடம்பெருங் கண்ணி (2 : 9 : 130)
போதுபிணைத் தன்ன மாதர் மழைக்கண் (3 : 16 : 17)
பூவிரிந் தன்ன போதமர் தடங்கண் (4 : 15 : 7)
நீலத் தன்ன கோல நெடுங்கண் (1 : 47 : 244)
பல்பனி பரந்த சில்லரி மழைக்கண் (1 : 55 : 117)
அணிக்கவின் கொண்ட ஐயரித் தடங்கண் (2 : 2 : 7)

அலரெனக் கிடந்த மதரரி மழைக்கண் (3 : 5 : 24)
அரிபரந் தகன்ற மாமழை உண்கண் (1 : 40 : 300-01)
ஓடரி சிதரிய வெள்ளரி மழைக்கண் (2 : 16 : 16)
ஐயரி பரந்த அரிமலர் நெடுங்கண் (1 : 40 : 218)
பரந்தரி சிந்திய மதரரி மழைக்கண் (5 : 7 : 125-26)
மதுக்களி கொண்ட மதரரி நெடுங்கண் (2 : 16 : 74)
வடுப்போழ்ந் தன்ன வாளரி நெடுங்கண் (1 : 46 : 223)
வடியின் அன்ன வாளரித் தடங்கண் (1 : 55 : 55)

அஞ்செந் தாமரை அகவிதழ் அன்ன
சில்லரித் தடங்கண் (1 : 53 : 149-151)

அள்ளற் றாமரை அகவிதழ் அன்ன
அரிபரந் தகன்ற அம்மலர் நெடுங்கண் (3 : 1 : 45-46)

சிதர்மலர்த் தாமரைச் செந்தோடு கடுப்ப
மதரரி நெடுங்கண் (1 : 33 : 122-23)

நீளரி யொழுகி நிகர்தமக் கில்லா
வாள்புரை தடங்கண் (5 : 8 : 84-85)

இன்பக் காமன் எய்கணை போலச்
செங்கடை போழ்ந்த சிதரரி மழைக்கண் (2 : 4:127-28)

பொருகயல் போலப் புடைசேர்ந் துலாஅய்ச்
செருவேல் பழித்த சேயரி நெடுங்கண் (2 : 15 : 84-85)

மாசில் தாமரை மலர்கண் டன்ன
ஆசில் சிறப்பின் அமர்அடு தறுகண் (4 : 5 : 23-24)

கலக்குறு சின்னீர்க் கருங்கயல் போல
நிலைக்கொளல் செல்லா நீர்சுமந் தனஇப்
பிறழ்ச்சியொ டுலாவும் பெருமதர் மழைக்கண்
(1 : 46 : 161-63)

கருங்கேழ் உண்கண் கயலெனப் பிறழ்ந்து
பெருங்கயத் தாமரைப் பெற்றிய வாக (3 : 14 : 119-20)

மலர்ந்துகடை போழ்ந்து மாமழை கழீஇக்
காமங் கனிந்த கருந்தடங் கண் (1 : 40 : 190-91)

தாமரைச் செவ்விதழ்த் தலைக்கேழ் விரித்த
காமர் நெடுங்கண் (2 : 14 : 62-63)

செதும்பற் றாமரைச் செவ்விதழ் போலப்
பதம்பார்த்து மலரும் பனிமலர்த் தடங்கண்
(1 : 40 : 323-24)

தலைப்பெருந் தாமரைச் செம்மலர் அன்ன
நலத்தொடு புணர்ந்த இலக்கண நெடுங்கண்
(3 : 6 : 52-53)

மூக்கு

நேர்கொடு சிவந்த வார்கொடி மூக்கு (2 : 15 : 83)
வீழ்ந்தொளி திகழும் விழுக்கொடி மூக்கு (4 : 15 : 8)

காது

நாள்வாய் வீழ்ந்த நறுநீர் வள்ளைத்
தாள்வாட் டன்ன தகையமை காது (2 : 15 : 88-89)

நீல நெடுமயிர் எறியுங் கருவிக்
காலென வடிந்த காது (4 : 16 : 25-26)

வாய்

தேமொழித் துவர்வாய் (1 : 53 : 56)
இன்னகைத் துவர்வாய் (2 : 2 : 48)
வையெயிற்றுத் துவர்வாய் (1 : 54 : 21)
பவழச் செவ்வாய் (4 : 10 : 148)
கொவ்வைச் செவ்வாய் (4 : 12 : 35)
கவரிதழ்ச் செவ்வாய் (1 : 56 : 67)
முறுவற் செவ்வாய் (2 : 9 : 95)
எரிமலர்ச் செவ்வாய் (1 : 37 : 119)
குயின்மொழிச் செவ்வாய் (4 : 13 : 64)
தேமொழிச் செவ்வாய் (2 : 18 : 92)
தேம்பொதி செவ்வாய் (1 : 46 : 174)
பவழக் கடிகை பழித்த செவ்வாய் (2 : 15 : 81)

கூந்தல்

மின்னிருங் கூந்தல் (1 : 10 : 349)
மணியிருங் கூந்தல் (3 : 9 : 153)
புனையிருங் கூந்தல் (3 : 5 : 26)
காரிருங் கூந்தல் (1 : 40 : 195)
தாழிருங் கூந்தல் (2 : 17 : 46)
புயலேர் கூந்தல் (4 : 12 : 265)
வடுவாழ் கூந்தல் (4 : 6 : 55)
வரிக்குழற் கூந்தல் (4 : 12 : 146)
தேன்தேர் கூந்தல் (4 : 13 : 43)
அம்சில் ஓதி (1 : 36 : 78)
நெறிதாழ் ஓதி (2 : 17 : 148)
ஒடுங்கீர் ஓதி (4 : 7 : 77)
பொம்மல் ஓதி (1 : 55 : 119)
மாவீழ் ஓதி (4 : 5 : 39)
புனைதார் ஓதி (3 : 14 : 148)
மணங்கமழ் ஓதி (3 : 15 : 58)
நன்மணி ஐம்பால் (1 : 36 : 304)
வண்டுளர் ஐம்பால் (2 : 20 : 95)
அலர்ததை ஐம்பால் (3 : 13 : 12)
மதுநாறு ஐம்பால் (3 : 22 : 196)
அணியறல் அன்ன ஐம்பாற் கூழையர் (1 : 41 : 52)
மழைக்கால் அன்ன மணியிருங் கூந்தல் (2 : 19 : 34)
நீலத் தன்ன நெறியிருங் கூந்தல் (3 : 21 : 79)
நலங்கிளர் நறுநுதல் நாறிருங் கூந்தல் (4 : 5 : 96)
குவளைக் கோதை கொண்ட கூந்தலர் (1 : 46 : 245)
தாதுகொண் டிருந்த தாழிருங் கூந்தலர் (1 : 43 : 141)

சிறுபுறங் கவைஇச் சீப்பின் வாரிக்
குறுநெறிக் கொண்ட கூழைக் கூந்தல் (1 : 46 : 220-21)

நீல மாமணி நிமிர்ந்தியன் றன்ன
கோலங் கொண்ட குறுநெறிக் கூழை (2 : 15 : 90-91)

துய்யறத் திரண்டு தூறலும் இலவாய்
நெய்தோய்த் தன்ன நிறத்த வாகிக்
கருமையிற் கவினிப் பருமையிற் றீர்ந்த
சில்லென் கூந்தல் (4 : 16 : 8-11)

கழுத்து

கடைந்துசெறித் தன்ன கழுத்து (4 : 16 : 30)
விரிந்துநிலா நிறைந்த மேதகு கமுகின்
எருத்திற் கேற்ற திருத்தகு கழுத்து (2 : 15: 77-78)

தோள்

கண்டிரள் வேய்த்தோள் (1 : 46 : 168)
வேயிருந் தடந்தோள் (4 : 12 : 74)
நெடுந்தோள் அரிவை (2 : 11 : 152)
பணைவேய் மென்தோள் (5 : 4 : 99)
அங்கலுழ் பணைத்தோள் (1 : 40 : 367)
வாங்கமைப் பணைத்தோள் (1 : 47 : 219)
வள்ளியம் பணைத்தோள் (2 : 14 : 55)
பூந்தொடிப் பணைத்தோள் (3 : 22 : 266)
காம்பேர் தோளி (4 : 13 : 224)
ஆடமைத் தோளி (3 : 22 : 236)
பிதிர்சுணங்கு ஆகமொடு பெருந்தோள் (1 : 37 : 163)
அணைபுரை மென்மை அமைபடு பணைத்தோள் (2 : 15:72)
பூளை மெல்லணைப் பொதியவிழ்ந் தன்ன
மென்தோள் (1 : 40 : 333-34)
ஓங்குவரை மருங்கின் ஒளிபெற நிவந்த
காம்பொசிந் தன்ன கவினை யாகிய
நலங்கிளர் தடந்தோள் (2 : 19 : 129-31)

கை

தாமரைத் தடக்கை (2 : 16 : 90)
தாமரை அங்கை (3 : 6 : 17)
வடிமலர்த் தடக்கை (2 : 3 : 4)

காந்தள் அழித்த கைம்முகிழ் (1 : 34 : 239)
செந்தளிர் பொருவச் சிவந்த கை (4 : 12 : 221)
காம்பமை சிலம்பிற் கடிநாட் காந்தட்
பூந்துடுப் பன்ன முன்கை (2 : 15 : 73–74)
முகைநலக் காந்தள் முகிழ்விரல் (3 : 7 : 50)
காந்தள் நறுமுகை கவற்று மெல்விரல் (4 : 7 : 209)
கிளிவாய் அன்ன ஒளிவாய் உகிர் (2 : 15 : 76)
கிள்ளை வாயின் அன்ன வள்ளுகிர் (4 : 7 : 42)

கொங்கை

பணைமுலை (4 : 11 : 39)
வெம்முலை (4 : 7 : 78)
பொம்மென் முலை (2 : 16 : 98)
அருப்பிள முலை (1 : 40 : 258)
நல்லிள வனமுலை (3 : 1 : 181)
சேடிள வனமுலை (3 : 1 : 202)
பொங்கிள வனமுலை (4 : 17 : 108)
முகிழ்ந்தேந் திளமுலை (2 : 16 : 85)
ஏந்திளங் கொங்கை (1 : 48 : 78)
பொன்ஞாண் துயல்வரும் பொங்கிள வனமுலை (3 : 6 : 18)
மணிமுகிழ்த் தன்ன மாதர் மென்முலை (1 : 33 : 116)
வம்புநெருக் குற்ற பொங்கிள முலையர் (1 : 46 : 244)
இன்பம் பொதிந்த ஏந்தணி வனமுலை (2 : 16 : 27)
இலங்குகதிர் இலைப்பூண் ஏந்துமுலை ஆகம் (4 : 5 : 95)
மருங்குலும் ஆகமும் வருந்தப் போந்த
கருங்கண் வெம்முலை (2 : 12 : 101–02)
அம்சில் ஆகத்து எஞ்சுதல் இன்றித்
திணைமுதல் இட்ட செங்கண் முகிழ்முலை (2 : 15 : 70-71)
குமிழ்த்தெழு வெம்பனி கோங்கரும் பேய்ப்ப
முகிழ்த்தல் முன்னிய முலைமுதல் (1 : 46 : 224-25)
ஊக்க வேந்தன் ஆக்கம் போல
வீக்கங் கொண்டு வெம்மைய ஆகி
இலைப்பூண் திளைக்கும் ஏந்திள முலையள் (3 : 5 : 20-22)

திருக்கிளர் வேங்கையும் பொன்னும் பிதிர்ந்து
மருப்பியல் செப்பும் குரும்பையும் இகலி
உருத்தெழு மென்முலை (1 : 33 : 181-83)

அம்மையும் அழகும் கொம்மையொடு கழுமிக்
கால்பரந் திருந்த கருங்கண் வெம்முலை (1 : 40 : 210-12)

தானமீக் கூரி மேல்நிவந் தோங்கி
அமிழ்துபெய் செப்பின் அன்ன வெம்முலை (1 : 45 : 5-6)

நுகர்தற் கமைந்த புகர்தீற் பொம்மற்
கோல வனமுலை (2 : 17 : 111-12)

இடை

நுடங்கிடை (1 : 40 : 151)
வாடிடை (4 : 6 : 27)
மின்னேர் நுண்ணிடை (4 : 12 : 8)
கொடிபுரை நுண்ணிடை (4 : 12 : 35)
நுண்சிறு மருங்குல் (3 : 1 : 163)
கொம்பேர் மருங்குல் (2 : 15 : 109)
கொடியேர் மருங்குல் (4 : 13 : 64)
கொடிபுரை மருங்குல் (2 : 17 : 112)
வள்ளி மருங்குல் (2 : 13 : 76)
வஞ்சி மருங்குல் (2 : 9 163)
வணங்குகொடி மருங்குல் (2 : 8 : 48)
ஒழுகுகொடி மருங்குல் (2 : 16 : 114)
ஒசிவது போலுநின் ஒசிநுசுப்பு (1 : 40 : 213)
இறுமென நுடங்குஞ் சிறுகொடி மருங்கு (1 : 40 : 297)
பிடியிடை ஒடுங்கும் கொடியிடை மருங்கு (1 : 48 : 138)
ஆடுகொம் பன்ன அம்மென் மருங்குல் (3 : 9 : 31)
துடிதோங் கூரிய இடுகிய நடுவு (3 : 5 : 18)
துடிநடு அன்ன துளங்கிய நுசுப்பு (2 : 15 : 66)

புடைவீங் கிளமுலைப் பூண்பொறை ஆற்றாது
இடைஏ மாக்கும் (1 : 42 : 126-27)

வயிறு

திதலை அவ்வயிறு (1 : 44 : 25)
வனப்புவீற் றிருந்த வாக்கமை அவ்வயிறு (2 : 15 : 69)
அசல மஞ்ஞையின் அணிநிறந் தழீஇப்
பசலை பாய்ந்த திதலைத் தித்தி
அசைந்த அவ்வயிறு (1 : 43 : 127-29)

கொப்பூழ்

கொடியடர்ந் தொழுகிய கோல மருங்கின்
புனற்சுழி அலைத்துப் பொருந்திய கொப்பூழ்
(2 : 15 : 67-63)

அல்குல்

திதலை அல்குல் (5 : 1 : 120)
பைவிரி அல்குல் (3 : 7 : 42)
பையர வல்குல் (1 : 46 : 259)
பரந்தேந்து அல்குல் (1 : 45 : 2)
பாசப் பாண்டில் பல்காழ் அல்குல் (3 : 1 : 164)
மேகலை விரீஇய தூசுவிரி அல்குல் (1 : 44 : 6)
தூசார்ந்து துளும்புங் காசுவிரி கலாபத்துப்
பைவிரி அல்குற் பாவை (1 : 48 : 107-08)
அரவுப்பை அன்ன ஐதேந்து அல்குல் (2 : 19 : 147)
கைவரை நில்லாக் கடுஞ்சின அரவின்
பையழித் தகன்ற பரந்தேந் தல்குல் (2 : 15 : 64-65)
அவ்வரி அரவின் பையெனப் பரந்த
செல்வ அல்குல் (4 : 16 : 36-37)

தொடை

கழனிக் கண்பின் காயெனத் திரண்ட
அழகணி சிறுதுடை (2 : 19 : 187-88)
செறிந்துவனப் பெதிர்ந்த தேன்பெய் காம்பின்
திறங்கவின் பெற்ற காலமை குறங்கு (2 : 15 : 62-63)

சிறுபிடித் தடக்கையிற் செறிவொடு புணர்ந்து
மென்மையி னியன்று செம்மைய வாகி
நண்புவீற் றிருந்த நலத்தகு குறங்கினள் (3 : 5 : 12-14)

கணைக்கால்

திரட்டி யன்ன செல்வக் கணைக்கால் (2 : 15 : 61)

அடி

பஞ்சி மெல்லடி (2 : 9 : 162)
ஆய்மலர்ச் சேவடி (1 : 53 : 131)
இளைப்புறு ஞமலி நலத்தகு நாவிற்
செம்மையும் மென்மையுஞ் சிறந்துவனப் பெய்தி
பூவடர் மிதிப்பினும் புகைந்தழல் உறாஉம்
சேவடி (2 : 19 : 176-77-84-85)
ஆமைக்
கூன்புறம் பழித்த கோலப் புறவடி (2 : 15 : 57–58)

மொழி

மடமொழி (2 : 12 : 39) மழலையங் கிளவி (4 : 7 : 24)
தேமொழி (3 : 14 : 74) மருந்தேர் கிளவி (4 : 4 : 3)
சின்மொழி (4 : 5 : 101) அந்தீங் கிளவி (2 : 19 : 5)
அஞ்சொல் மழலை (5 : 3 : 50)
கரும்படு தீஞ்சொல் (1 : 53 : 8)
அமிழ்துபடு தீஞ்சொல் (1 : 43 : 35)
முகிழ்நகைக் கிளவி (2 : 17 : 185)
கோற்றேன் கிளவி (4 : 13 : 73)
கரும்பேர் கிளவி (3 : 14 : 132)
மதுர மழலை மடவோர் (1 : 40 : 310)
நாவொடு நவிலா நகைபடு மழலையர் (1 : 36 : 266)
நாணொடு மிடைந்த நடுக்குறு மழலையள் (2 : 16 : 88)
மெல்லென் கிளவி சில்லென மிழற்றி (3 : 8 : 27)
செவ்வழித் தீந்தொடை சிதைந்த கிளவி (3 : 1 : 200)

உள்ளம் உருக்கும் ஒள்ளமர்க் கிளவி (5 : 5 : 32)
அமிழ்தின் அன்ன அம்சில் கிளவி (1 : 48 : 35)
அன்புடை அருள்மொழி அடைந்தோர் உவப்ப
நன்பல பயிற்றிய நாவினள் (3 : 14 : 46-47)

நோக்கு

மானேர் நோக்கின் மடமகள் (4 : 17 : 29)
மதர்வை நோக்கின் மாதர் (1 : 48 : 36)

புன்னகை

கதிர்த்த முறுவற் கன்னி (1 : 46 : 339)
செவ்வாய் வெண்ணகைத் திருந்திழை (4 : 13 : 191)
முருந்தொளி முறுக்கிய திருந்தொளி முறுவல் (2:15:8')
முகைக்கொடி முல்லை நகைத்திரு முகத்து (4 : 13 : 235)
துப்புறழ் செவ்வாய் துளங்குபு நிரைத்த
முத்துறழ் முறுவல் முகிழ்த்த முகத்தள் (3 : 21 : 38-39)

நிறம்

எல்லொளிப் பாவை (1 : 33 : 162)
மாந்தளிர் மேனி (4 : 13 : 219)
மணிக்கேழ் மாமை மனத்தின் றலைஇ (1 : 33 : 37)
வளங்கெழு மாவின் இளந்தளிர் அன்ன
நயத்தகு மேனி (3 : 6 : 83-84)

சாயல்

மின்நேர் சாயல் (3 : 18 : 6)
மின்னுறழ் சாயல் (2 : 19 : 40)
திருவளர் சாயல் (1 : 48 : 130)
திருவேர் சாயல் (1 : 53 : 56)
கொடியேர் சாயல் (2 : 10 : 113)
அணங்கேர் சாயல் (4 : 12 : 34)
அம்மென் சாயல் (1 : 41 : 84)
நுகர்வின் சாயல் (3 : 1 : 163)

இளநலம் உண்ட இணையில் தோகை
வளமயிற் சாயல் (4 : 5 : 25-26)

நடை

மடநடை மாதர் (3 : 2 : 6)
அன்ன மென்னடை அரிவை (3 : 9 : 6)
அன்னம் போல மென்மெல ஒதுங்கி (3 : 9 : 50)
அஞ்சிறை அன்னத்தின் அணிபெற இயலி (1 : 40 : 317)
மணிவரைச் சாரல் மஞ்ஞை போல
அணிபெற இயலி (3 : 13 : 50–51)

தோற்றம்

ஏசா நல்லெழில் (4 : 12 : 92)
கட்கின் பாவை (3 : 14 : 154)
இளநல மகளிர் (2 : 12 : 125)
கண் அணங் குறூஉம் காரிகை (5 : 3 : 57)
கண்டுகண் ஓராக் காமர் காரிகை (1 : 40 : 234)
பெண்மீக் கூரிய பெருநல வனப்பு (2 : 1 : 45)
மாசில் தாமரை மலர்மகள் அனையோர் (4 : 12 : 6)
ஏற்ற கோலத் திளமையொடு புணர்ந்தோர் (4 : 11 : 37)
நிலவரை நிகர்ப்போர் இல்லா மாதர் (4 : 17 : 68)
மணிப்பளிங் கன்ன மாசில் வனப்பு (2 : 15 : 53)
திருவுநிறை கொடுக்கும் உருவுகொள் காரிகை (1:42:12)
ஓவியர் உட்கும் உருவி (1 : 45 : 72)
கவவிற் கமைந்த காமக் கனலி (2 : 18 : 8)
உருவினும் உணர்வினும் ஒப்போர் இல்லென
வரிவளைத் தோளி (3 : 15 : 72-73)
வெண்முகிற் பிறழும் மின்னென நுடங்கித்
தண்ணொளி சுடருந் தையல் (3 : 6 : 7-8)
போதுவிரி தாமரைத் தாதகத் துறையும்
தீதுதீர் சிறப்பிற் திருமக ளாயினும்
உருவினும் உணர்வினும் ஒப்புமை ஆற்றுத்
தெரியிழை அல்குல் தேமொழிக் குறுமகள் (3 : 5 : 70-73)

பெண்ணழகைக் கற்பனை நயம் தோன்றக் கொங்குவேள் பாடியுள்ள இடங்கள் பல.

வாசவதத்தை அழகு

திருமகளை நிலவுலகத்தினர் அறிந்துள்ளனரேயன்றி நேரிற் கண்டதில்லை. இப்படித்தான் இருப்பாள் என்று அவள் வடிவைத் தேவர்கள் ஓவியமாகத் தீட்டி வைத்தால் அந்த ஓவியம் எப்படியிருக்குமோ அவ்வாறிருந்தாளாம் வாசவதத்தை.[1]

விரிசிகை அழகு

அழகே உருவாக அணிகலன் ஏதுமின்றி விரிசிகை நகர வீதியில் நடந்து வந்தாள். பவழம், பொன், முத்து முதலியவற்றாலான அணிகலன் பலவும் அணிந்திருந்த மகளிரெல்லாம் அவளை நோக்க அழகற்றவராய்த் தோற்றினர். உறுப்புகளையே அழகாகக் கொண்ட அவள் பிற அணிகளைச் சுமத்தல் வீணே என்று கண்டோர் பாராட்டினர். பேரழகுடையேம் என்று தருக்கி நாணத்தை விடுத்துத் தம்மைத் தாமே பாராட்டிக் கொண்ட மகளிர் விரிசிகையின் பேரழகைக் கண்டு வாயடங்கினர்.[2]

வீதியில் நடந்துவந்த விரிசிகையைக் கண்ட நகர மகளிர் அவளைத் திருமகளோ என ஐயுற்றனர். அணிந்திருந்த மலர்மாலை வாடியிருந்ததாலும் நுதல் வியர்த்திருந்ததாலும் நிலவுலக மகளே என்று தெளிந்தனர். ஒரு கையில் குவளை மலரைப் பிடித்து மற்றொரு கையை வீசி நடந்த

---

1. உண்டெனக் கேட்டோர் கண்டினித் தெளிகெனத்
   திருவின் செய்யோள் உருவம்மெய்த் தோன்றத்
   தீட்டிரும் பலகையிற் றிருத்தித் தேவர்
   காட்டி வைத்ததோர் கட்டளை போல
   —பெருங். 1 : 33 : 110 - 13
2. பெருங். 4 : 17 : 75 - 84

அவளை நீரை வெறுத்து வெளிவந்த நீரர மகளோ என நினைத்தனர். கண்களை இமைத்ததால் அவள் நிலமகளே என்றனர். உதயணனைச் சேர வந்த ஒரு தெய்வ மகளோ என்று அவளை எண்ணியோர் அவள் அடிகள் நிலத்தில் படிந்ததால் தெய்வ மகள் இல்லை என்று தெளிந்தனர். கண்ணிமைத்ததால், அடிகள் காசினியில் தோய்ந்த தால், வண்ண மலர்மாலை வாடியதால் அவள் தெய்வ மகள் இல்லை எனத் தெளிய முடிந்ததே தவிர, அழகில் அவள் தெய்வ மகளினும் சிறந்து நின்றாள்.[3]

மதனமஞ்சிகை அழகு

நேரில் கண்டவரும், சிறப்பினைக் கேட்டோரும், "தேவருலகில் ஒரோ வழி இருந்தால் அல்லது நிலவுலகில் இவளுக்கு நிகரானவர் யாருமில்லை" என்று இடையறாது போற்றுகின்ற எழிலினையுடையவள் மதனமஞ்சிகை. கூந்தலிற் சூடியுள்ள மலர் மாலையையும் சுமக்க இயலாத மென்மையள்; மானின் மதர்த்த நோக்கினள்; பணிவுடைய மொழியையும், பருத்த தோளையும், சிறிய நுதலையும், ஒளிரும் கண்களையும் உடையவள்.

துதைபூங் கோதை சுமத்த லாற்றா
மதர்மா னோக்கின் மாதாஞ் சாயற்
பதரில் பணிமொழிப் பணைத்தோட் சின்னுதல்
மதர்வை நோக்கின் மதனமஞ் சிகை[4]

என்ற அடிகள் அவளுடைய இனிய சாயலைப் புலப்படுத்துகின்றன.

---

3. பெருங். 4 : 17 : 22 - 74
4. பெருங். 5 : 8 : 66 - 69

பதுமாபதி அழகு

அழகு என்னும் தெய்வம் தனக்கு ஓர் உருவம் அமைத்துக் கொண்டால் அது பதுமாபதியின் உருவமாகத்தான் இருக்க முடியும். இதனை,

> வனப்பெனப் படூஉந் தெய்வந் தனக்கோர்
> உருவுகொண் டதுபோல்[5]

என்ற அடிகளால் அறியலாம்.

கொங்குவேளின் பாடல் அடிகள் பெண்டிரின் அழகுக்கு அழகு சேர்க்கின்றன.

---

5. பெருங். 3 : 6 : 93 - 94

(ஆ) அணிகலன்கள்

பண்டைத் தமிழர் அழகுக் கலைகளில் சிறந்து விளங்கினர். பெண்டிர் அணிந்து வந்த அணிகலன்கள் அவ்வழகுணர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாய் விளங்குகின்றன. பெருங்கதை வாயிலாக நாம் மகளிர் அணிந்த பல்வேறு அணிகலன்களை அறிய முடிகிறது.

> கம்மியர் புனைந்த காமர் பல்கலம்
> செம்மையின் அணியும்[1]

சேயிழையாரை நாம் அங்குக் காணலாம்.

பவழத்தாலும், முத்தாலும், பொன்னாலும் இயற்றிய வேலைப் பாடமைந்த அணிகலன்களைப் பெண்டிர் அணிந்திருந்தனர்.[2]

அணிகலப் பேழை

அணிகலன்களை வைக்க அழகிய கலைநலம் வாய்ந்த பேழைகள் இருந்தன. அப் பேழைகள் செம் பொன்னால் செய்யப்பட்டவை.[3] பேழைகளின்மேல் அவற்றின் உரிமையாளர்க்குரிய இலச்சினைகள் பொறிக்கப்பட்டிருந்தன.[4] இப் பேழைகளைத் தொழில் நலம் வாய்ந்த யவனர்கள் செய்து தந்தனர். ஏவற் பெண்டிர் அணிகலப் பேழைகளை

---

1. பெருங். 1 : 42 : 213 - 14
2. பவழமும் முத்தும் பசும்பொன் மாசையும்
   திகழொளி தோன்றச் சித்திரித் தியற்றிய
   அணிகலம் அணிவோர் —பெருங். 4 : 17 : 75 - 77
3. செம்பொன் அணிகலம் செய்த செப்பு
   —பெருங். 4 : 10 : 46
4. கம்மப் பல்கலம் விம்மப் பெய்த
   பொறியமை பேழை —பெருங். 1 : 44 : 35 – 36

ஏந்தி நிற்க அவற்றிலிருந்து வேண்டிய அணிகளை மகளிர் தேர்ந்தெடுத்து அணிந்தனர்.

வல்லோன் வகுத்த நல்வினைக் கூட்டத்து
யவனப் பேழையுள அடைந்தோர் ஏந்திய
தமனியப் பலகலம் தளிரியல மாதர்
ஆற்றுந் தகையன ஆற்றுளி வாங்கி[5]

அணிந்ததைப் பெருங்கதை கூறிடக் காண்கிறோம்.

பெண்டிர் அணிந்த அணிகலன்கள் விலைமதிக்க முடியாதனவாகவும், வேலைப்பாட்டில் முதன்மை பெற்றனவாகவும் இருந்தன.[6]

அணிகலப் பேழையில் அருமை மிக்க அணிகள் பல இருந்தாலும் அவை அனைத்தையும் மகளிர் ஒரே வேளையில் அணிந்து 'நகைதாங்கி'களாக என்றுமே இருந்ததில்லை. ஒவ்வொரு வேளையிலும் ஒரு சிலவற்றை மட்டுமே பொறுக்கி எடுத்து அணிந்து, சில அணிகளால் பேரழகுடன் விளங்கினர்.[7]

அடிமுதல் முடிவரை ஆயிழையார் பல்வேறு அணிகலன்களை அணிந்தனர்.[8]

கால் அணிகலன்

கிண்கிணி : அடிகளில் 'கிண்கிணி' அணிந்திருந்தனர். அது பொன்னால் செய்யப்பட்டது. அடியெடுத்து

5. பெருங். 3 : 22 : 212 - 15
6. விலைவரம் பறியா விழுத்தகு பேரணி
தலைவரம் பனைவை —பெருங். 4 : 7 : 242 - 43
7. சில்கலத் தியன்ற அணியினர் அல்லது
பல்கலம் சேரா மெல்லென் யாக்கையர்
—பெருங். 1 : 34 : 123 - 24
8. அடிமுதல் முடிவரை இழைபல திருத்தியும்
—பெருங். 4 : 12 : 236

வைக்கும்போது அசைந்தாடிக் 'கிண்கிணி' என ஒலியெழுப்பியமையால் 'கிண்கிணி' எனப்பட்டது.[9] கிண்கிணியில் தொங்கிய மணிகளின் வாய் பிளவுபட்டு, அப்பிளவு தவளை வாய் வடிவில் அமைந்திருந்தது. ஆதலின் அது 'தவளையங் கிண்கிணி'[10] எனப்பட்டது.

'தேரைவாய்க் கிண்கிணி ஆர்ப்ப' என்று கலித்தொகையும், 'தவளைவாய்ப் பொலஞ்செய் கிண்கிணி' என்று குறுந்தொகையும் இதனைப் பேசிடக் காண்கிறோம். பொன்னால் செய்யப்பட்டிருந்தமையால் 'பொற்பூங் கிண்கிணி' என்றும், வாய் பிளவுபட்டிருந்தமையால் 'பகுவாய்க் கிண்கிணி' என்றும், அப் பகுவாய் தவளை வாய் போல் தோன்றியமையால் 'தவளையங் கிண்கிணி' என்றும் இவ் வணிகலன் அழைக்கப்பட்டது.

பெருங்கதை ஆசிரியர் கொங்குவேள் அம் பொற் கிண்கிணி, அரங்கொல் கிண்கிணி, சூடுறு கிண்கிணி, செம்பொற் கிண்கிணி, ததும்புங் கிண்கிணி, தவளையங் கிண்கிணி, பகுவாய்க் கிண்கிணி, பசும்பொன் கிண்கிணி, பைம்பொற் கிண்கிணி, பொற்பூங் கிண்கிணி, பொன்னணி கிண்கிணி, பொன்னரிக் கிண்கிணி, மணியரிக் கிண்கிணி, மழலைக் கிண்கிணி எனக் கிண்கிணிக்குப் பல்வேறு அடைகளைத் தந்துள்ளார்.

சிலம்பு : செந்தாமரை போன்ற அடிகளில் அணிந்த மற்றோர் அணி சிலம்பு. சிலம்பு காரணமாக எழுந்த ஓர் ஒப்பற்ற காப்பியமாகச் 'சிலப்பதிகாரம்' தமிழில் விளங்குகின்றது. சிலம்பு நீள் வட்ட வடிவில் அமைந்த ஒரு காலணி. சிலம்பினுள் முத்துக்களும் மாணிக்கங்களும் பரல்களாகப் பயன்படுத்தப்பட்டன நறிய மலர்களோடு கூடிய பூங்கொடி எழுதிய புடைப்போவியக் கலை நுணுக்க

---

9. ஆடுபொற் கிண்கிணி அடிமிசை அரற்ற
—பெருங். 2 : 14 : 42

10. பெருங். 5 : 9 : 90

வேலைப்பாட்டோடு சிலம்பு அமைந்திருந்ததெனப் பெருங் கதை கூறுகிறது.[11]

பாடகம் : கிண்கிணி, சிலம்பு ஆகியவற்றுடன் பாடகம் என்ற மற்றொரு வகை அணியும் காலில் அணியப் பட்டது. அஃது அகலமாக, கனமாகச் செய்யப்பட்டிருந் தது.[12] காலில் அணிந்த அணிகள் யாவுமே நடக்கும் போது இன்னொலி எழுப்புவனவாய் இருந்தன.[13]

பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை என்பனவற்றை மகளிர் கால்களில் அணிந்திருந்தனர் என்பதை,

> பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை
> அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து[14]

என்று சிலப்பதிகார அடிகள் அறிவிக்கின்றன.

இடை அணிகலன்

மேகலை : இடையில் (நுசுப்பில்) அணிந்த அணிகளுள் சிறந்திருப்பது மேகலை. ''மணியும் பவழமும் அணிபெற நிரைஇய, செம்பொற் பாசிழை''[15] என இது குறிக்கப்படு கிறது. சிற்பத் தொழில் நிறைந்ததாய், பாம்புரி போலும் அழகினதாய், பல்வேறு மணிகளையும் விரவி, முற்புறத்தே

---

11. இலம்புடை நறுமலர் எழுதுகொடிக் கம்மத்துச்
சிலம்பு —பெருங். 3 : 14 : 136 - 37

12. பாடகம் சுமந்த சேடுபடு சேவடி
—பெருங். 5 : 3 : 60

13. மணியரி அடக்கிய மாண்வினைப் பகுவாய்
அணிமிழற் றரவத் தம்பொற் கிண்கிணி
சிலம்பொடு சீறடிப் புறம்புதைத் தரற்றவும்
—பெருங். 2 : 2 : 206 - 08

14. சிலப். 6 : 84 - 85

15. பெருங். 3 : 5 : 15 - 16

வனைத்துப் பொன்னால் செய்யப்பட்டது இவ்வணி. இது படுகால் எனவும் அழைக்கப்பட்டது. [16]

தாளித நொய்ந்நூற் சரணத்தர் மேகலை
ஏணிப படுகால் இறுகிறுகத் தாளிடீஇ [17]

என்ற பரிபாடல் அடிகட்கு உரை கண்ட பரிமேலழகர், "இரு கோவை முதல் முப்பத்திரு கோவை ஈருக ஒன்றற் கொன்று வடம் ஏறுதலான் மேகலையை ஏணிப் படுகால் என்றார்" என்று குறிப்பிடுகிறார்.

பாண்டில்: மேகலை வகையைச் சேர்ந்த மற்றோர் இடையணி பாண்டில். இது வட்டமாகப் பொன்னால் செய்யப்பட்டு, பவழ மணியோடு பிற மணிகளும் விரவித் திகழும்படிக் கோக்கப்பட்டிருக்கும் என்பதை,

பவழக் காசொடு பன்மணி விரைஇத்
திகழக் கோத்த செம்பொற் பாண்டில் [18]

என்ற பெருங்கதை அடிகள் விளக்குகின்றன.

மணிகள் நிரல்பட அழுத்தப்பட்ட பசிய பொன்னால் இயன்றது பாண்டில் என்பதை ஐங்குறுநூறும் விளக்குகின்றது [19] தலைவன் பிரிந்து சென்றமையால் தலைவி மெலிந்தாள். அதனால் அவள் இடையில் அணிந்திருந்த பாண்டில் இடையொடு பொருந்தாது பெரிதாகக் காட்டியது என்று கூறுமிடத்திலும் ஐங்குறுநூறு பாண்டிலைக் குறிப்பிடுகிறது. [20]

---

16. சித்திரக் கைவினை செறிந்த கோலத்துப்
பத்திரப் பாம்புரி அத்தகக் கலாஅய்
முற்பட வளைஇய பொற்படைப் படுகால்
—பெருங். 3 : 3 : 16 - 18

17. பரி. 10 : 10 - 11
18. பெருங் 2 : 19 : 142 - 143
19. பொலம்பசும் பாண்டில் காசுநிரை அல்குல்
—ஐங்கு. 310 : 1
20. பொன்செய் பாண்டில் பொலங்கலம் நந்த
—ஐங்கு. 316 : 1

விரிசிகை : விரிசிகை என்பது மேகலை வகையைச் சார்ந்த மற்றோர் அணி. விரிசிகை முப்பத்திரண்டு மணிக் கோவைகளைக் கொண்டது ஆதலின் அஃது 'எண்நால் காழ்நிரை' எனப்படுகிறது.[21]

> பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
> நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇ [22]

என்ற சிலப்பதிகார அடிகளுக்கு உரையாசிரியர், "பருமுத்துக் கோவை முப்பத்திரண்டாற் செய்த விரிசிகை என்னும் கலையை நீல நிறங்கிளரும் பூத் தொழிலையுடைய நீலச் சாதர் உடையின்மீது அணிந்தாள்" என்று குறிப்பிடுகின்றார்.

மேகலை வகை: காஞ்சி, மேகலை, கலாபம், பருமம், விரிசிகை என்பன மேகலை வகைகளாக இருந்திருக்கின்றன. அவற்றுள் காஞ்சி எட்டு முத்து வடங்களையும், மேகலை ஏழு வடங்களையும், கலாபம் பதினாறு வடங்களையும், பருமம் பதினெட்டு வடங்களையும், விரிசிகை முப்பத்திரண்டு வடங்களையும் கொண்டவை என்பதை,

> காஞ்சிஎண் கோவை; எழுகோவை மேகலை;
> கலாபம் நானான்கு; பருமம் பதினெட்டு;
> விரிசிகை எண்ணான்கு கோவை என்ப[23]

என்ற நிகண்டு வெளிப்படுத்துகின்றது.

அல்குற் காசு : மகளிர் பொன் காசுகளைக் கோத்து அல்குலில் அணிந்திருந்தனர். அஃது அல்குற் காசு எனப்படுகிறது.

---

21. கைவினைக் கொளுவிற் செய்துநலங் குயின்ற
 எண்ணாற் காழ்நிரை —பெருங். 2 : 19 : 144 - 45
22. சிலம்பு. 6 : 87 - 88
23. பிங்கல நிகண்டு 1191

பல்காசு நிரைஇய அல்குல், [24]
பரவை அல்குற் பல்காசு புரள, [25]
பையர வல்குற் பவழப் பல்காசு, [26]

என்ற பெருங்கதை அடிகள் இக் காசு பற்றிக் குறிப்பிடு கின்றன.

அரசிலை : அரசிலை வடிவாகப் பொற்றகட்டினுல் செய்யப்பட்ட அரையணி அரசிலைப் பொன் அடர் எனப் பட்டது. [27]

பொற் காசுகள், பவழக் காசுகள் ஆகியனவற்றை மகளிர் அல்குலின்மேல் அணிந்து அவற்றின்மேல் ஆடையை உடுத்தனர் என்பதை,

உடுத்தவை, கைவினைப் பொலிந்த காசமை பொலங்காழ்மேல்
மையில் செந்துகிர்க் கோவை, அவற்றின்மேல்
தைஇய பூந்துகில் ஐதுகழல் ஒருதிரை [28]

என்ற கலித்தொகை அடிகளால் அறிகிறோம். ''கைத் தொழிலால் பொலிவு பெற்ற மணிகள் இடையிடையே அமைக்கப்பட்டதும் பொன்மணிகளைக் கொண்டதுமான வடத்தையும், அதன்மேலே சிவந்த பவழ வடத்தையும் அல்குலில் அணிந்தனர். அவற்றின் மேலே மென்மையான துகிலை உடுத்தனர்'' என்பது இதன் பொருளாம்.

மார்பு அணிகலன்

ஒற்றை வடம் : கொங்கைகளின் இடையே கிடக்குமாறு கழுத்தில் ஒற்றை முத்து வடம் அணிந்தனர். அஃது ஒற்றை வடம் அல்லது ஏகவல்லி எனப்பட்டது. இஃது,

---

24. பெருங். 1 : 40 : 99
25. ,, 1 : 46 : 181
26. ,, 1 : 46 : 259
27. அணிக்கலை புனைந்த அரசிலைப் பொன்அடர்
—பெருங். 2 : 7 : 23
28. கலி. 85 : 3 - 5

இடைமுலைக் கிடந்த ஏகவல்லி [29]
வெம்மை பொதிந்த பொம்மென் இளமுலை
இடைப்படீஇப் பிறழும் ஏக வல்லி [30]

என்று குறிக்கப்படுகிறது. ஏகவல்லியுடன் மணி மாலைகளை யும்,[31] பொன்னாரங்களையும்,[32] முத்து வடங்களையும்[33] மகளிர் அணிந்திருந்தனர்.

முலைகளில் எழுதிய தொய்யில் நிறம் அழியும்படி முத்து வடத்தோடு பிற அணிகளும் புரண்டமையால் அவற்றின் கனத்தைச் சுமக்க முடியாமல் 'ஒரு பிடி' அளவாகிய பெண்டிரின் இடை ஒசிந்து வளைந்தது. இதை,

சுண்ண இலேகை வண்ணம் சிதைய
மண்ணிய நித்தில வடத்தொடு புரளும்
பல்கலஞ் சுமத்தல் ஆற்றுது பையென
ஒல்குபு நுடங்கும் ஒருபிடி நுசுப்பினர் [34]

என்று குறிப்பிடுகின்றார் கொங்குவேள்.

கழுத்து அணிகலன்

இலைத்தொழில் அமைந்த கழுத்தணி, இதயவாசனை என்ற மார்பணி, களிகை என்ற கழுத்தணி, முத்தாரம், பன்மணிகளும் இழைத்த அணிகலன்கள், தாலி, முத்து

---

29. பெருங். 1 : 46 : 211
30. ,, 2 : 7 : 21 - 22
31. திடர்சேர் ஆகத்துச் சுடர்மணி பிறழ
—பெருங். 1 : 46 : 252
32. மணியுமிழ்ந் திமைக்கும் வயங்குகொடிப் பைம்பூண்
முத்தொடு முரணித் தத்தும் ஆகம்
—பெருங். 1 : 41 : 53 - 54
33. வளர்ந்தேந் திளமுலை மருங்கிவர்ந்து கிடந்த
பொலங்கல மணிப்பூண் —பெருங். 1 : 40 179 - 80
34. பெருங். 2 : 2 : 213 - 16

வடம், பொன் நாண், சங்கிலி எனப் பல்வேறு அணிகலன்கள் கழுத்தில் கிடந்தன.

இலைப்பெரும் பூணும் இதயவா சனையும்
நலப்பெருங் களிகையும் நன்முத் தாரமும்
பன்மணிப் பூணும் சின்மணித் தாலியும்
முத்தணி வடமும் சித்திர உத்தியும்
நாணும் தொடரும் ஏனைய பிறவும்
மெய்பெறப் புனைந்து கைவல் கம்மியச்
செய்கையிற் குயிற்றிய சித்திரங் கொளீஇப்
பூணணி யுள்ளும் மாணணி யுடையவை
ஆகக் கேற்பப்[35]

பெண்கள் அணிந்து சிறந்தனர்.

புருடராகம், வைடூரியம், கோமேதகம் ஆகிய மும்மணிகளால் ஆய மும்மணிக்காசு என்ற அணியையும், பலவாகிய மணிகளாலாகிய தாலியையும், அழகிய பொற்சரட்டையும் மகளிர் கழுத்தில் அணிந்தனர்.[36]

கழற்சிக்காய் வடிவிற் செய்த ஓர் அணிகலனையும் அணிந்து வந்தனர். இஃது 'கழுத்திடு கழங்கு' எனப் பட்டது.[37]

இவைகளேயன்றித் தாமரை மலர் வடிவமாக இயற்றிப் புனைந்த மாலையினையும் வண்டொழுங்கு போன்று மணிகளை நிரல்படப் பதித்து இடையிடையே மடக்கிய இலையுருவம் பட இயற்றிய மாலையினையும் அணிந்திருந்தனர்.[38]

---

35. பெருங். 2 : 19 : 117 - 25
36. மும்மணிக் காசும் பன்மணித் தாலியும்
பொன்மணிக் கொடியும் பூணும் சுடர
—பெருங். 5 : 9 : 49 - 50
37. பெருங். 1 : 38 : 172
38. திருமகள் இருக்கை உருவுபடக் குயிலாக்
காமுறப் புனைந்த தாமம் உளப்படப்
பொறிவரி ஒழுக்கம் போலும் மற்றிம்
மறியிலைக் கம்மம் —பெருங். 2 : 19 : 133 - 36

சிறு நெற்றுலி என்பதும் ஒருவகைக் கழுத்தணி. சிறு அரும்புகளைத் தொழில் வன்மை யுண்டாகப் பாம்பின் பல்லொழுங்குபோல நிரல்பட அமைத்துத் தொடுப்பது சிறு நெற்றுலி எனப்படும்.

> சில்லென் அரும்பு வல்லிதின் அமைத்து
> நச்சரவு எயிற்றின் நல்லோன் புனைந்த
> நெற்சிறு தாலி [39]

என இது பேசப்படுகிறது.

கை அணிகலன்

வளை : கைகளில் மகளிர் பவழம், சங்கு, பொன் ஆகியவற்றுலான வளையல்களை அணிந்து வந்தனர். வளையல்களால் மகளிர் கைகள் நிறைந்திருந்தமையை ஒளிவளை முன்கை, வளைபொலி முன்கை, நிரைவளை முன்கை, சூழ்வளை முன்கை, ஏர்ப்பொலி வளைக்கை என்ற சொற்றொடர்கள் விளக்குகின்றன.

கடகம் : கடகம் என்பது ஒரு கையணி ஆகும். இது மகரமீன் கவ்விய கொடி வடிவம் உடையதாக இருந்தது என்பதை,

> கொடியொடு துளங்கி அடிபெற வகுத்த
> அருமணிக் கடகம் [40]

என்ற அடிகளால் அறியலாம்.

சூடகம் : சூடகம் என்பதும் ஒரு கையணி. பெண்கள் தம் கைகளில் வளையல், கடகம், சூடகம் முதலியன அணிந்தனர். [41]

---

39. பெருங். 4 : 16 : 27 - 29
40. ,, 2 : 19 : 137 - 38
41. சின்மயிர் முன்கைப் பொன்வளை முதலாக்
கண்ணுர் கடகமொடு கைபுனைந் தியற்றிய
சூடகம் —பெருங். 3 : 22 : 232 - 34

ஓவிய வேலைப்பாடமைந்த சூடகம், பரியகம், பொன்வளை, சங்கு வளை, பவழ வளை ஆகியவற்றை மகளிர் அணிந்திருந்த செய்தியைச் சிலப்பதிகாரமும் கூறிடக் காண்கிறோம்.

சித்திரச் சூடகம் செம்பொற் கைவளை
பரியகம் வால்வளை பவழப் பல்வளை
அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து [42]

மாதவி விளங்கினாள் என்பது சிலப்பதிகாரச் செய்தி.

மோதிரம் : கை விரல்களில் பல்வேறு வகையான மோதிரங்கள் அணியப்பட்டன. மோதிரம் அங்குலி என்றும் அழைக்கப்பட்டது. மோதிரங்களில் தம் பெயரைப் பொறித்துக் கொள்ளும் வழக்கம் இருந்தது. அவ்வாறு பெயர் பொறிக்கப்பட்ட மோதிரத்தை 'நாம மோதிரம்' [43] எனக் கொங்குவேள் குறிப்பிடுகின்றார்.

முடக்கு மோதிரம், ஒளி வீசுகின்ற இரத்தினங்கள் பதித்த மோதிரம் ஆகியவற்றை விரல்களில் அணிந்தனர் என்ற செய்தியைச் சிலப்பதிகாரத்தின் வழியாக அறிகிறோம்.[44]

மகளிர் முடக்கு மோதிரம் அணிந்திருந்ததை நெடுநல் வாடையும்

வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரல் கொளீஇய செங்கேழ் விளக்கத்து [45]

---

42. சிலப். 6 : 92 - 94
43. நாம மோதிரம் தாள்முதற் செறித்து
—பெருங். 3 : 9 : 70
44. வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
—சிலப். 6 : 95 - 96
45. நெடுநல். 143 - 44

என்று குறிப்பிடுகிறது. வாளை மீனின் திறந்த வாயை ஒத்திருக்கும்படி முடக்கத்தை உண்டாக்கிய மோதிரம் முடக்கு மோதிரம் எனப்பட்டதென இதிலிருந்து அறிய முடிகிறது.

காது அணிகலன்

குழை: பண்டை நாட்களில் இளம் பெண்கள் சோலைகளுக்குச் செல்லுங்கால் இளந் தளிர்களை (குழைகளை)ப் பறித்துக் காதில் சூட்டிக் கொள்வது வழக்கமாயிருந்தது. எனவே பின்னுளில் காதில் அணிந்த அணிகள் குழை என்ற பெயரைப் பெற்றன. நகையணிந்த காது 'குழையணி காது'[46] என்று பேசப்பட்டது.

மகளிர் காதுகளில் அணிந்த பொற் குழை பற்றிய நயமான செய்திகளை இலக்கியங்கள் கூறுகின்றன. காவிரிப்பூம் பட்டினம் செல்வவளம் மிக்கது. வீட்டு வாசலில் உலர்த்தப்பட்ட நெல்லைத் தின்பதற்கு வந்த கோழிகளை மகளிர் தம் காதுகளில் அணிந்திருந்த பொற் குழைகளைக் கழற்றி எறிந்து துரத்தினராம்.[47]

ஓலை: குழை, இலை, பூந் தோடு, ஓலைச் சுருள் ஆகிய இவைகளைக் காதில் அணிந்தமையால் காதணிகளும் அவ்வடிவத்திலேயே தோன்றலாயின. இளம் பனையோலையைச் சுருளாகச் செய்து காதுகளில் அணிந்து வந்தனர். அஃது 'இனமடற் பெண்ணை ஈர்ந்தோடு'[48] எனப்பட்டது.

முளைநுகும் போலை முதலீர்க்கு விரித்துத்
தளையவிழ் ஆம்பற் றுஅள் வாட்டி

---

46. பெருங். 2 : 18 : 5
47. நேரிழை மகளிர் உணங்குணக் கவருங்
கோழி எறிந்த கொடுங்காற் கனங்குழை
—பட்டி. 22 - 23
48. பெருங். 2 : 16 : 2

நீல நெடுமயிர் எறியும் கருவிக்
காலென வடிந்த காதணி பெறீஇ [49]

என்ற அடிகளால், இளம் பனையின் குருத்தோலையை ஈர்க்குடன் விரித்து, சுருள் செய்து, கத்தரிக்கோலின் கைப்பிடிபோன்று வடிந்து தொங்கும் காதுகளில் அணிந்து வந்தனர் என்பது தெரிகிறது.

பெருந் துளைகளோடு குழைகளைத் தாங்கித் தொங்கும் காது கத்தரிக்கோலின் கைப்பிடி வடிவத்தைக் கொண்டிருந்தது என்ற உவமையைப் பொருநராற்றுப்படையும் குறிப்பிடக் காணலாம்.[50] பிற்காலத்தில் பொன்னையே ஓலை வடிவமாகச் செய்து அதைச் சுருட்டிக் காதில் அணியலாயினர்.[51]

கடிப்பு : காதில் அணிந்த ஓர் அணி கடிப்பு எனப்பட்டது. இஃது இந்திர நீலத்தையும் இடையிடையே வைரமணிகளையும் அழுத்திச் செய்யப்பட்டது. இது குதம்பை என்றழைக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இந்திர நீலத்து இடையிடை திரண்ட
சந்திர பாணி தகைபெறு கடிப்பிணை
அங்காது அகவயின் அழகுற அணிந்து [52]

என்ற சிலப்பதிகார அடிகளுக்கு உரையாசிரியர் நீலக் குதம்பை, வயிரக் குதம்பை ஆகிய இரண்டையும் இரு காதிலும் அணிந்தாள் என்றார்.

---

49. பெருங். 4 : 16 : 23 - 26
50. மயிர்குறை கருவி மாண்கடை அன்ன
பூங்குழை ஊசல் பொறைசால் காதின்
—பொருந. 29 - 30
51. செம்பொன் ஓலை சேடுபடச் சுருக்கி
—பெருங். 3 : 22 : 225
52. சிலம்பு. 6 : 103 - 105

மகளிர் கடிப்பு அணிந்த செய்தியை,

> சூடுறு பொன்வினைச் சுவணர் புனைந்த
> தோடும் கடிப்பும் துளங்கு காதினர்[53]

—எனப் பெருங்கதை அறிவிக்கிறது.

வாசவதத்தைக்கு யாழ் கற்பிக்கத் தொடங்கும்போது அவளை ஒப்பனை செய்யப் புகுந்தோர் அவள் காதிலிருந்த ஓலையையும் குழையையும் நீக்கி விட்டு மணியால் செய்யப் பட்ட கடிப்பினை அணிவித்தனர் எனக் கொங்குவேள் குறிப்பிடுகிறார்.[54] இதிலிருந்து சாதாரண வேளைகளில் பொன்னோலை, குழை முதலியன அணிந்திருந்த பெண்கள் சிறப்புக் காலங்களில் கடிப்பினை அணிவர் என்று தெரிகிறது.

குண்டலம் : காதில் தொங்கும்படியாக அமைந்த தொங்கட்டான் குண்டலம் எனப்பட்டது. மகரமீன் வடிவமாகச் செய்த குண்டலங்களை மகளிர் காதுகளில் அணிந்திருந்தனர். அவை அசையும்போது ஒளிவீசிச் சிறந்தன.[55]

தலை அணிகலன்

நெற்றிச் சுட்டி : நெற்றியில் தொங்குமாறு அணியப் பெற்றது நெற்றிச் சுட்டி எனப்பட்டது.[56] இதுவும் மகர மீன் வடிவாகச் செய்யப்படுவதுண்டு. திலகம் என்னும் பொன்னணியும் நெற்றியில் தொங்குமாறு அணியப்பட்டிருந்தது. திலகம் என்பது பொன்னாற் செய்த நெற்றிப்

---

53. பெருங். 2 : 7 : 19 - 20
54. பொன்செய் ஓலையொடு பூங்குழை நீக்கி
மணிச்செய் கடிப்பிணை மட்டம் செய்து
—பெருங். 1 : 34 : 198 - 99
55. மகர குண்டலம் மறிந்துவில் வீச
—பெருங். 1 : 40 : 103
56. திருநுதற் சுட்டி திகழச் சூட்டி ,, 1 : 34 : 196

பொட்டாகவும் இருக்கலாம். இன்றும் கேரளத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் பெண்களுக்குச் சீர் தரும் போது அதில் பொன்னாலாய நெற்றிப்பொட்டு இருக்கிறதா என்பதைத் தவறாது கவனிப்பர். பொட்டு ஒன்றுக்கு மேற்பட்டுத் தரவேண்டும் என்பதால் மூன்றாகவோ, ஐந்தாகவோ தருவார்கள். அப் பொற் பொட்டு வட்ட வடிவிலும், சுடர் வடிவிலுமாக இருக்கும். பலாப் பிசினைத் தடவி அதனை நெற்றியில் தரித்துக் கொள்வர்.

நெற்றிப் பட்டம் : நெற்றியில் அணியும் பொற்றகட்டா லாய அணி நெற்றிப் பட்டம் எனப்பட்டது.[57] நெற்றியின் மேல் வளைவான பட்டத்தை அணிந்த தோற்றம் திங்களை வளைத்துக் கிடந்த வானவில் போன்றிருந்தது என்பதை,

மதிப்புறம் கவைஇய வானவில் போல
நுதற்புறம் கவவி மிகச்சுடர்ந் திலங்கும்
சிறப்புடைப் பட்டம்[58]

என்ற அடிகள் தெளிவுபடுத்துகின்றன. இவ்வணி பட்டப் பேரணி எனவும் வழங்கப்பட்டது.

கூந்தற் பட்டம் : நெற்றியில் சூடிக்கொண்ட பட்டம் போல, கூந்தலில் சூடிக்கொண்ட பட்டமும் இருந்தது. பெண்கள் வட்டமான கொண்டையிட்டு அதைச் சுற்றிலும் அகன்ற மல்லிகை மாலையை அணிந்தனர். அம் மாலை யைச் சுற்றிச் செம்பொனாலான பட்டத்தைச் சூடினர். வெள்ளை மலர்ச் சூட்டிடையே கருங் கூந்தல் திகழ்ந்தது களங்கத்தை உள்ளடக்கிய திங்கள் போலாயிற்று. மாலையைச் சூழ்ந்திருந்த பொற் பட்டமோ திங்களைச் சூழ்ந்த ஊர்கோள்(ஒளிவட்டம்)போலக் காட்சி தந்தது.

இக் கவினுறு காட்சியை,

மறுவகத் தடக்கிய மதியம் போலச்
சிறுமுகச் சிகழிகை புடைமுதல் புதைஇய

---

57. பட்ட நெற்றி — பெருங். 4 : 12 : 88
58. பெருங். 2 : 19 : 81 - 83

மல்லிகை நறுஞ்சூட்டு வெள்ளிதின் விளங்கஅதன்
ஊர்கோள் ஏய்ப்பச் சூழ்புடன் வளைஇய
செம்பொற் பட்டம் பின்தலைக் கொளீஇ [59]

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

பொன்னரி மாலை : கூந்தலைக் கொண்டையாக முடிக்காமல் தொங்கவிடும்போது அதன்மீது பொன்னாலான மாலை ஒன்றை அணிவர். அது பொன்னரிமாலை எனப் பட்டது.[60]

சூளாமணி : சூளாமணி என்பது மணிகள் இழைத்து வில்லையாகச் செய்யப் பெற்ற ஒரு தலையணி ஆகும். தலையின் பின்புறம் பிடரியில் பல்லி வடிவில் பொன்னால் செய்து அணியப்பட்டது புல்லகம் எனப்பட்டது. பிடரியின் வலப் புறம் அணியப்பட்டது வட பல்லி என்றும், இடப் புறம் அணியப்பட்டது தென் பல்லி என்றும் அழைக்கப்பட்டன. சூளாமணி, பட்டம், புல்லகம், பொன்னரி மாலை முதலியவற்றை மகளிர் கூந்தலில் அணிந்ததை,

சுருங்காச் சுடரொளிச் செம்பொற் பட்டம்
சூளா மணியொடு துளங்குகடை துயல்வரும்
புல்லகம் பொருந்திய மெல்லென் ஓதிப்
பொன்னணி மாலை பொலிந்த பூமுடீஇ [61]

எனப் பெருங்கதை குறிப்பிடுகின்றது.

இவ்வாறாகப் பெண்டிர் அணிந்து வந்த அணிகலன்கள் மூலம் அவர்கள் கடல், மலை, நிலத்திற்றோன்றிய பல்வேறு பொருள்களை அழகுக்கு அழகூட்டும் பொருள்களாகப் பயன்படுத்திய தன்மையை அறிந்து மகிழ்கிறோம்.

---

59. பெருங். 1 : 46 : 231 - 35
60. மின்னிருங் கூந்தல் மேதகப் புனைந்த
பொன்னரி மாலை —பெருங். 1 : 40 : 349 - 50
61. பெருங். 2 : 3 : 70 - 73

வட நாட்டுக் கதையை எழுதியிருந்தாலும் கொங்குவேள் அன்றைய தமிழகத்தையே நமக்குக் காட்டுகிறார். கதைக் கரு வடபுலத்தது. ஆனால் விளக்கப்படும் பண்பாடு தமிழ் நாட்டுக்குரியது. வத்தவ, அவந்தி, மகத நாட்டில் நடைபெற்ற கதைக்கு அவர் சேர, சோழ, பாண்டிய நாட்டுப் பின்னணியைத் தந்துள்ளார். அவர் கதையிற் கூறியுள்ள அணிகலன்கள் யாவும் தமிழகப் பெண்டிர் அணிந்ததே. சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் காணப்படும் அணிகலன்களே பெருங்கதையிலும் கூறப்பட்டுள்ளன. அணிகலன் அமைப்பிலும் அணியும் முறையிலும் சங்ககால நிலையே பெருங்கதைக் காலத்திலும் நீடித்திருக்கிறது என்பது தெரிகிறது.

(இ) ஆடைகள்

சங்க காலத்தில் தமிழகத்தில் நெசவுத் தொழில் மிகச் சிறந்த நிலையில் இருந்தது. பட்டாலும் பருத்தியாலுமான நயம் மிக்க ஆடைகளை மக்கள் அணிந்தனர். பெருங்கதையிலும் ஆடை வகையும், அணிந்த திறமும் பேசப்படுகின்றன.

நுண் துகில்

மிகவும் நுண்ணிய ஆடைகள் நெய்யப் பெற்றன.[1] மென்மையும் வெண்மையும் கொண்ட அவை பாற்கடலில் பனி நாளில் எழுந்த ஆவி போன்றிருந்தன.[2]

வெண் துகில்

வெண் துகில்[3], வெண் தானை[4] என்ற சொற்கள் ஆடைகளின் வெண்மையைப் புலப்படுத்தும். அவை நீரிற்றோன்றும் வெள்ளிய நுரையொத்திருந்தன என்பதை 'நுரைபுரை கலிங்கம்'[5], 'நுரைபுரை வெண்துகில்'[6] என்ற சொற்றொடர்கள் தெரிவிக்கின்றன. ஆடையின் வெண்மைக்கு நிலவொளி,[7] பாம்புச் சட்டை[8] முதலியனவும் காட்டாகக் கூறப்படுகின்றன.

---

1. ஆவி நுண்துகில் —பெருங். 1 : 36 : 64
2. பானீர் நெடுங்கடற் பனிநா ளெழுந்த
   மேனி ராவியின் மெல்லி தாகிய
   —பெருங். 2 : 7 : 154 - 55
3. பெருங். 1 : 40 : 99
4. ,, 1 : 36 : 98
5. ,, 2 : 5 : 86
6. ,, 1 : 40 : 286
7. நிலா வெண்துகிலினர் —பெருங். 2 : 5 : 85
8. பாப்புரி யன்ன மீக்கொள் தானை
   —பெருங். 1 : 42 : 244

நூல் துகில்

பருத்தி, பட்டு, நார் ஆகியன கொண்டு மிக நுண்மையாக ஆடைகள் நெய்யப்பட்டன என்பதை, 'நூலினும் உலண்டினும் நாரினும் இயன்றன'[9] என்ற பெருங்கதை அடி அறிவிக்கிறது. பருத்தி நூலால் நெய்யப்பட்ட வெண்மையும் நுண்மையும் அமைந்த ஆடை 'நுரையொடு பொங்கும் நுண்நூல் வெண்துகில்'[10] என்று பேசப் பட்டுள்ளது.

நார் நூல் துகில்

பருத்தி நூலின்றிச் செடிகளின் நார் கொண்டும் ஆடைகள் நெய்யப்பட்டன. அவை 'நார் நூல் துகில்'[11] எனப்பட்டன. நார் நூலிலும் மிக நுண்மையான ஆடைகள் அமைந்தன என்பதை, 'நறுநெய் தோய்ந்த நார் நூல் நுண்துகில்'[12] என்ற அடியால் அறிகிறோம்.

பட்டுடை

பட்டாலாகிய ஆடைகளும் இருந்தன. பட்டுடைத் தானை'[13], 'பட்டியல் கலிங்கம்'[14] என்பன பெருங்கதையில் பேசப்படுகின்றன. பல்வேறு வண்ணங்களிலும் பட்டுடைகள் இருந்திருக்கின்றன.[15]

---

9. பெருங். 1 : 42 : 210
10. ,, 1 : 40 : 295
11. ,, 1 : 40 : 148
12. ,, 1 : 43 : 125
13. ,, 1 : 34 : 207
14. ,, 1 : 37 : 156
15. ,, 4 : 12 : 262

பூந் துகில்

ஆடைகள் பூ வேலை விளங்க நெய்யப்பட்டன. 'பூந் துகில் தானை'[16], 'புது நூற் பூந்துகில்'[17], 'வெண் பூந் துகில்'[18] என்பன பூ வேலைப்பாட்டை அறிவிக்கின்றன.

கோடித் துகில்

புத்தாடைகள் 'கோடித் துகில்'[19] எனப்பட்டன. புத்தாடையைக் கொய்சகமிட்டு உடுத்தியதை,

> கோடிப் பூந்துகில் கொய்து விளிம்புரீஇச்
> சேடார் அல்குல் சேடுபட உடீஇ[20]

என்று பெருங்கதை குறிப்பிடும்.

வண்ணத் துகில்

ஆடைகள் பல வண்ணங்களில் அமைந்திருந்தன. ஐவகை வண்ணம் சிறப்புற்றிருந்தன. ஐந்து வண்ணமும் இயன்ற கொடி 'பஞ்ச வண்ணத்துப் படாகை'[21] எனப் பட்டது. வண்ணம் தோய்ப்பதில் கைதேர்ந்த தொழிலாளர்,

> அறுவைக் கோதிய ஐவகை வண்ணத்துத்
> துறைவிதி நுனித்த தூத்தொழி லாளர்[22]

என்று சிறப்பிக்கப்படுகின்றனர்.

வெள்ளைத் துணியில் நீலம், கரு ஊதா (மரகத நிறம்), பச்சை, சிவப்பு ஆகிய நிறங்களை ஏற்றினர். வெள்ளை ஒன்று, ஏற்றிய நிறம் நான்கு ஆக ஐந்து வண்ணங்கள் ஆயின. இவ்வாறு நிறமேற்றிய செய்தியை,

---

16. பெருங். 1 : 35 : 202
17. ,, 1 : 42 : 145
18. ,, 3 : 17 : 127
19. ,, 4 : 16 : 35
20. ,, 2 : 5 : 165 - 66
21. ,, 4 : 7 : 238
22. ,, 2 : 5 : 128 - 29

வெண்ணூற் பூந்துகில் வண்ணங் கொளீஇ
நீலக் கட்டியும் மரகதத் தகவையும்
பாசிலைக் கட்டியும் பீதகப் பிண்டமும்
கோல மாகக் கொண்டுகூட் டமைத்துப்
பிடித்துருக் கொளீஇக் கொடித்திரி ஓட்டிக்
கையமைத் தியற்றிய கலிங்கத் துணியினர்

என்ற அடிகள் தெரிவிக்கின்றன.[23]

வெள்ளைத் துணியில் மற்ற நான்கு வண்ணங்களையும் சேர்க்க ஒரே ஆடை ஐந்து வண்ணங்களுமுடையதாயிற்று என்றும் கொள்ளலாம். கதிரவன் ஒளியை விரும்பி நிற்கின்ற தாமரை நிறமொத்த புதிய ஆடையைப் பெண்டிர் அணிந்தனர் என்பதை,

கதிர்நிழற் கவாஅப் பதுமநிறங் கடுக்கும்
புதுநூற் பூந்துகில் அருமடி யுடீஇ[24]

எனக் கொங்குவேள் குறிப்பிடுகிறார்.

பாதிரிப் பூவை மலர்த்திப் பார்த்தாற்போன்ற பசிய நிறமுடைய அழகிய பட்டாடை; வங்க நாட்டிலிருந்து வந்த சாதரென்றும் உடை; கோங்கின் மலர் போன்ற பசிய நிறமுடைய கலிங்க நாட்டு ஆடை; ஏனைய பட்டு பருத்தி ஆடைகள்; நீலம் செம்மை வெண்மை நிறமுடையனவும் பூ வேலைப்பாட்டுடன் கூடியனவுமான பட்டு பருத்தி நார் ஆடை ஆகிய இவற்றுள் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து மகளிர் அணிந்தனர்.

பைங்கூற் பாதிரிப் போதுபிரித் தன்ன
அங்கோ சிகமும் வங்கச் சாதரும்
கொங்கார் கோங்கின் கொய்ம்மலர் அன்ன

23. பெருங். 3 : 1 ; 95 - 100
24. ,, 1 : 42 : 144 - 45

பைங்கேழ்க் கலிங்கமும் பட்டுத் தூசும்
நீலமும் அரத்தமும் வாலிழை வட்டமும்
கோலமொடு புணர்ந்த வேறுவே றியற்கை
நூலினும் உலண்டினும் நாரினும் இயன்றன
யாவை யாவை யவையவை மற்றவை
மேவன மேவன காமுற அணிந்து[25]

மகளிர் திகழ்ந்ததைப் பெருங்கதை அடிகள் அழகுறப் பேசுகின்றன.

கல்லுண் கலிங்கம்

துறவிகள் துவராடை (காசாயம்) உடுத்தினர். காவிக் கல்லில் தோய்த்து அந் நிறம் ஊட்டப்பட்டதால் அது கல்லுண் கலிங்கம் எனப்பட்டது.

கல்லுண் கலிங்கம் கட்டிய வரையினன்[26]
கல்லுண் கலிங்கம் நீக்கி[27]

என்ற அடிகள் துவராடை குறித்துப் பேசுகின்றன.

காடியூட்டல்

ஆடையில் விரைப்பும், மடமடப்பும், துவளாமையும் அமைய இன்று போலவே அன்றும் கஞ்சியைப் பயன்படுத்தினர். 'காடி கொண்ட கழுவுறு கலிங்கம்'[28] என அதனை இலக்கியம் குறிப்பிடுகிறது.

மணமூட்டல்

உடலுக்கு மணம் பூசி மகிழ்ந்தது போலவே உடைக்கும் மணமூட்டி அணிந்தனர். அத்தகைய கமழ் கலிங்கம்

---

25. பெருங். 1 : 42 : 204 - 212
26. ,, 4 : 7 : 158
27. ,, 4 : 16 : 33
28. நெடுநல். 134

அந் நாளில் 'நறுமடி'[29] எனப்பட்டது. நறுமணப் புகையைப் புகைத்து அதில் துகில்களைப் பிடித்து மணம் ஏற்றினர்.

காடி கலந்த கோடிக் கலிங்கத்திற்கு நறும்புகை யூட்டிய செய்தியை,

காடி கலந்த கோடிக் கலிங்கம்
கழும வூட்டுங் காழகில் நறும்புகை[30]

என்ற பெருங்கதை அடிகளாலும் அறிகிறோம்.

மடித்தல்

துவைத்த ஆடையை அழுத்தி நீவி (சலவை செய்து) மடித்து வைத்தனர். உடுக்கும்போது அவற்றை விரித்து உடுத்தனர் என்பதை,

கொட்டுமடி விரித்த பட்டுடைத் தானையன்,[31]
வெண்துகில் இணைமடி விரித்தனர் உடீஇ,[32]

என்ற அடிகள் விளக்குகின்றன. ஆடைகளை வைக்கப் பேழைகள் இருந்தன. அவை கலிங்க வட்டி[33] என்றும், ஆடை வட்டி[34] என்றும் அழைக்கப்பட்டன. குளியலுக்குப் பின் அணிய வேண்டி மாலை, சாந்து, ஆடை முதலியன வைத்திருந்த பெட்டி 'கையுறைச் செப்பு'[35] எனப்பட்டது.

மேலாடை போர்வை எனப்பட்டது. உள்ளதா இல்லையா என உணர முடியாத அளவுக்கு நுண்மையான மேலாடையை அணிந்தனர். இந்த மென்மைத் தன்மை

---

29. சிலப். 14 : 207
30. பெருங். 1 : 54 : 9 - 10
31. ,, 1 : 40 : 268
32. ,, 2 : 5 : 131
33. ,, 1 : 38 : 285
34. ,, 1 : 38 : 163
35. மாலையும் சாந்தும் மடியும் பெய்த
கையுறைச் செப்பு —பெருங். 1 : 35 : 27 - 28

உண்மை உணரா நுண்மைப் போர்வை[36]

என நயம்படக் கூறப்படுகிறது. மேலாடை 'வடகம்'[37] என்றும், 'மீக்கோள்'[38] என்றும், 'உத்தரீகம்'[39] (உத்தரியம்) என்றும் வழங்கப்பட்டன.

பெண்கள் மேலே போர்த்திய ஆடை முன்றானை எனப் பட்டது, இஃது உடுத்த ஆடையின் எஞ்சிய பகுதியாக மேலே கழுத்தைச் சாரத் தோளில் இட்டுக் கொள்வ தாகும்.

ஏகஉத் தரியம் இடைச்சுவல் வருத்த[40]

எனப் பெருங்கதை பேசுகிறது. உத்தரியம் இடை, பிடர் இரண்டையும் வருத்தியது என்பதால் இடையிலிருந்த ஆடை மார்பின் குறுக்கே எடுத்துச் செல்லப்பட்டுக் கழுத்தில் கிடந்தது என்பது புலனாகிறது.

ஆண்கள் இடையிலும் உடம்பிலும் தனித்தனி ஆடை அணிந்தனர். அவர்களுடைய மேலாடை கழுத்தின் இரு பக்கமும் கிடக்குமாறு தொங்க விடப்பட்டது. பாம்புரி போன்ற மென்மையான மேலாடை (அங்கவஸ்திரம்) மார் பின் இரு மருங்கிலும் கிடந்து காற்றாலே அசைந்து விசிறிய தோற்றம் சாமரை வீசுவதுபோல இருந்தது என்பர்.

பாப்புரி யன்ன மீக்கொள் தானை
இருபுடை மருங்கினும் வருவளிக் கொசிந்து
வீச்சுறு கவரித் தோற்றம் போல[41]

அசைந்தது.

---

36. பெருங். 2 : 3 : 153
37. ,, 1 : 56 : 99
38. ,, 2 : 15 : 126
39. ,, 4 : 16 : 40
40. ,, 2 : 4 : 121
41. ,, 1 : 42 : 244 - 46

கச்சு

மகளிர் தங்கள் மார்பகங்களில் அணிந்துகொண்ட ஆடை அமைப்பிற்குக் கச்சு என்று பெயர். 'கதிர் முலைக் கச்சு'[42], 'வருமுலைக் கச்சு'[43], 'முளைத்தெழு முலைக் கச்சு'[44] என்ற சொற்கள் கச்சு கொங்கையை மட்டும் அணி செய்யுமாறு அணியப்பட்ட ஆடை என்பதை விளக்குகின்றன. அது கொங்கைகளை மட்டும் இறுக்கமாக உள்ளடக்கியது என்பதை,

கச்சியாப் புறுத்த கால்வீங் கிளைமுலை [45]

என்ற அடியால் உணர முடிகிறது. கச்சு நிறமூட்டியதாகவும், பூ வேலையுடன் கூடியதாகவும் இருந்திருக்கிறது.[46]

வட்டுடை

வட்டுடை என்பது முழந்தாளளவாக உடுப்பதொரு ஆடை. பொதுவாகப் போர் வீரர் அணிகின்ற ஆடையாகும். பெண்கள் உடுத்த உள்ளாடையும் (பாவாடை) வட்டுடை எனக் கூறப்படுவதை,

வட்டுடைப் பொலிந்த வண்ணக் கலாபமொடு
பட்டுச்சுமந் தசைந்த பரவை அல்குல் [47]

என்பதால் உணரலாம்.

---

42. பெருங். 1 : 34 : 162
43. ,, 1 : 38 : 169
44. ,, 2 : 7 : 28
45. ,, 1 : 34 : 202
46. செம்பூங்கச்சு —பெருங். 3 : 17 : 127
47. பெருங். 2 : 4 : 122 - 23

தழையுடை

பட்டாலும் பருத்தியாலும் ஆன நயமிக்க ஆடைகளை அணிந்த மகளிர் தழை உடையையும் அணிந்தனர் எனச் சங்கப் பாக்கள் கூறுகின்றன. ஆடை வகைகளில் தழை ஆடை தனித் தன்மை பெற்றது. பசிய இளந் தளிர்களினிடையே பல்வண்ணப் பூக்களை மிடைந்து புனைந்த தழையுடையைத் தம் அழகுடையாகப் பெண்கள் அணிந்திருக்கக் கூடும்.

> குழையர் கோதையர் இழையர் ஏரிணர்த்
> தழையர் தாரினர் [48]

என்று குறிப்பிடுவதிலிருந்து பெருங்கதைக் காலத்திலும் தழையுடை இருந்து வந்தது எனலாம். நொச்சி இலைகளையும், அசோகின் தழைகளையும், வயலைக் கொடிகளையும் மகளிர் தழையுடைக்குப் பயன்படுத்தியதாக அகநானூறு தெரிவிக்கின்றது.[49] பொதுவாகப் பசுமை நிறம் கொண்ட தழைகளையும், செந் நிறம் கொண்டு பொலியும் இளந் தளிர்களையும், ஆம்பல் நெய்தல் போன்ற மலர்களுடன் இணைத்து அழகும் மணமும் கொண்டதாகத் தழையாடையைப் புனைந்திருக்கின்றனர். வாசவதத்தைக்கு,

> மராஅந் துணரும் மாவின் தழையும்
> குராஅம் பாவையும் கொங்கவிழ் முல்லையும்
> பிண்டித் தளிரும் பிறவும் இன்னவை
> கொண்டியான் வந்தேன் [50]

என்று உதயணன் குறிப்பிடுகின்றான். மலர்க் கண்ணி தொடுக்கவும், தழையாடை புனையவும் இவற்றை அவன் கொண்டு சென்றான் என்பது தெளிவு.

---

48. பெருங். 2 : 14 : 13 - 14
49. அகம். 275 : 16 - 17 ; 188 : 12 - 13 ; 176 : 13 - 14
50. பெருங். 2 : 19 : 155 - 58

ஆடை வகையிலும் அணியும் முறையிலும் சங்ககால நிலையே பெருங்கதைக் காலத்திலும் நிலவியது. மகளிர் பருத்தியாலும் பட்டாலும் தழையாலும் ஆன ஆடைகளை அணிந்தனர். ஆடைகள் நுண்மையாகவும் மென்மை யாகவும் பூவேலைகள் பொருந்தியவையாகவும் இருந்தன. வண்ணந் தோய்த்த ஆடைகளையும் அணிந்தனர். ஆடை களைக் கஞ்சியிட்டுச் சலவை செய்தனர்; மணமேற்றி உடுத்தனர்.

(ஈ) ஒப்பனை

ஒப்பனை மகளிர்

பெண்கள் தம்மை ஒப்பனை செய்து பேரெழிலுடன் விளங்கினர். பெண்கட்கு ஒப்பனை செய்ய ஒப்பனை மகளிர் இருந்தனர். அவர்கள் வண்ண மகளிர் எனப் பட்டனர்.[1] அவர்கள் தம் தலைவியரை அடி முதல் முடி வரை, கைதேர்ந்த ஓவியர்களும் தாம் இதுபோல வரைய முடியுமா என்று வியக்கும் வண்ணம் ஒப்பனை செய்தனர்.[2] அவ் வண்ண மகளிர் கோலம் செய்தலில் கை வன்மையுடையராயும், அத் துறையில் செவ்வனே கற்றவராயும் அழகொழுகும் தோற்றம் உடையராயும், மங்கலப் பெண்டிராயும் விளங்கினர்.[3] செல்வக் குடியிற் பிறந்த மகளிர் வெளியிடங்கட்குச் செல்லுங்கால் வண்ண மகளிரையும் உடன் அழைத்துச் சென்றனர்.[4]

ஒப்பனை அறை

இன்று திரைப்படங்களில், நாடகங்களில் நடிப் போர்க்கு ஒப்பனை செய்ய ஒப்பனை அறை (Make up room)

---

1. பெருங். 1 : 57 : 96; 1 : 38 : 137
2. அடிமுதல் தொட்டு முடியள வாகப்
புடவியின் அறியாப் புணர்ப்பொடு பொருந்தி
ஓவியர் உட்கும் உருவக் கோலம்
தேவியைப் புனைந்த பின்
—பெருங். 4 : 13 : 52 - 55
3. நன்மணக் கோலத்துக் கைந்நலம் நுனித்த
அங்கலும் பணைத்தோள் மங்கல மகடூஉ
—பெருங். 2 : 5 : 169 - 70
4. வண்ண மகளிர் கண்ணுறக் கவினிய
உழைக்கலம் ஏந்தி உழைப்படர்ந் தியல
—பெருங். 1 : 56 : 196 - 97

இருப்பதுபோல அன்று செல்வர் வீடுகளில் ஒப்பனை செய்து கொள்ளத் தனியிடம் தட்ப வெப்பக் கட்டுப்பாடு (Air conditioning) கொண்டதாக அமைக்கப்பட்டிருந்த தெனக் கருத இடமிருக்கிறது. அழகிய வேலைப்பாட்டுடன் அமைந்த அந்த இடத்தினுள் ஞாயிற்றின் வெயிலும், வெளிக்காற்றும் உள்ளே புகாதவாறு தடுப்புகள் இருந்தன. ஒப்பனை செய்ய வேண்டியவரை அந்த அறைக்குள் இட்டுச் சென்று இருக்கையில் இருத்திக் கோலம் செய்தனர்.[5] வேலை நுணுக்கமறிந்தோர் ஒப்பனை அறைகளை அமைத்தனர். அங்கு அழகை மிகுவிக்கும் கோலங்கள் புனையப்பட்டனவாதலின் ஒப்பனை அறை, 'மல்லல் வினையிடம்' எனப்பட்டது.[6]

நீராடல்

மகளிர் நீராடிக் கூந்தலை வாரி முடித்து, அணி பூண்டு ஒப்பனை செய்துகொண்ட தன்மையைப் பெருங்கதை விளக்கமுற விவரிக்கிறது. பெண்கள் மணம் கூட்டிய நெய்யையும், எண்ணெயையும் கூந்தலில் தேய்த்து முழுகினர்.[7] வெட்டி வேர், தகரம் என்ற மணப் பொருள்களுடன் சந்தனம், அகில், கருப்பூரம், கத்தூரி, குங்குமம் என்ற ஐவகை மணப்பொருள்களையும் தேய்த்துக் கொண்டனர்.[8] மணப்பொருள் கூட்டும் தொழிற்றிறமுடைய வாதிகரானே செப்பம் செய்து, உறுப்புகளில் பூசுதற் பொருட்டுச் சீர் செய்து நிறுத்துச் சரக்குகளை அமைத்து இயற்றப்பட்ட

---

5. வெய்யோன் கதிரொளி வீகவளி நுழையா
இரும்பணி பெற்ற அரும்பணைப் படுகால்
மேற்புறம் அமைந்த விளங்குமணி வேயுள்
யாப்புறு மண்டபத்து ஆசனத்து இரீஇ
—பெருங். 2 : 5 : 133 - 36
6. வல்லவர் வகுத்த மல்வினை நகர்—பெருங். 2 : 5 : 167
7. பண்ணிய நறுநெயும் எண்ணெயும் பெய்து
நறுநீ ராட்டி —பெருங். 4 : 14 159 - 60
8. பெருங். 4 : 16 : 6 - 7

தும், ஒருநாள் பூசியவிடத்தும் ஓரியாண்டு விடாது மணம் கமழ்வதுமான வாச வெண்ணெயை மெய்யின் கண் பூசினர்.[9] பின்னர் சாலிலிட்டுப் பத்துத் துவர் ஊறவைத்த மண நீரில் குளித்தனர்.[10] குளிக்கும்போது தலையிலுள்ள நெய்ப் பசையை நீக்க அரைப்புப் பயன்படுத்தினர். அரைப்புப் பொடி எண்ணெய்ப் பசையை நீக்கும் தன்மையது. ஊஞ்சை என்ற ஒருவகை மரத்தின் இலைகளை உலர வைத்து இடித்துப் பொடியாக்கியது அரைப்பு எனப் பட்டது. இதைத் தலையிலிட்டுத் தேய்க்கும்போது வெண்மையான நுரை தோன்றுமாதலின் இது 'நுரைத்தலுடைய அரைப்பு' எனப்படுகிறது.[11]

கூந்தல் வாச வெண்ணெய் இன்றி இருந்ததெனப் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.[12] எனவே குளித்தபின் கூந்தலுக்கு எண்ணெய் பூசினர் என்று கருதவேண்டியுள்ளது.

ஆடை அணிதல்

நீராடியதும், நீராடற் பொருட்டு அணிந்து கொண்ட ஈர ஆடையைக் களைந்து, கதிரவனின் ஒளியை விரும்பி நிற்கும் வெண்டாமரையின் நிறமொத்த பூத் தொழில் செய்யப்பட்ட புத்தாடை பூண்டனர்.[13] ஆடையைக்

---

9. மென்மையும் நேயமும் நன்மையும் நாற்றமும்
ஒருநாட் பூசினும் ஓரியாண்டு விடாஅத்
திருமாண் உறுப்பிற்குச் சீர்நிறை அமைத்துக்
கரும வித்தகர் கைபுனைந் தியற்றிய
வாச வெண்ணெய் —பெருங். 2 : 5 : 97 - 101

10. நிறைத்துவர் நறுநீர் சிறப்பொ டாடிய
—பெருங். 1 : 57 : 89

11. பெருங். 1 : 41 : 131

12. ,, 4 : 7 : 103 - 05

13. நீரணி கொண்ட ஈரணி நீக்கிக்
கதிர்நிழற் கவாஅப் பதுமநிறம் கடுக்கும்
புதுநூற் பூந்துகில் அருமடி உடீஇ
—பெருங். 1 : 42 : 143 - 45

கொய்சகமிட்டு, விளிம்பினை உருவி, அழகுபெற உடுத்தனர்.[14]

கூந்தல் ஒப்பனை

மழைபெய்து நின்றதும் மயில்கள் தோகையை விரித்து அலகால் கோதி உலர்த்துவதுபோல, நீராடியதால் நனைந்த தம் நெறிப்புடைய கூந்தலைக் கைவிரலால் கோதி வகிர்ந்தனர்.[15] பத்துவகைத் துவரும் ஊற வைத்த நறிய நீரைக் கூந்தலில் ஆங்காங்கே தெளித்து உருவிக் கருமை ஏற்றினர். பின்னர் அகிற் கட்டையிட்டு எழுப்பிய நறுமணப் புகையை ஊட்டி நெறிப்புண்டாக நெறித்துச் சிக்கறச் சீப்பால் வாரினர்;[16] அகிலைத் தேனில் தோய்த்துத் தீயிலிட்டு எழுப்பிய நறிய, குளிர்ந்த, கொடிபோலெழுந்த புகையை அளவறிந்து ஊட்டிக் கூந்தலுக்கு மணம் சேர்த்தனர்.[17] ஐம்பாலாக வகுத்து அழகுபெற முடித்தனர்; அல்லது பின்னிச் சடையிட்டனர். சடையின் அடிப்புறம் கொண்டை மாலையை வளையச் சுற்றி முடித்தனர். வெண்ணிறப் பூவால் சுற்றப்பட்டு நீண்டு தொங்கும் சடை வெண்மையான மருப்பினால் வளைக்கப்பட்டுத் தொங்கிய

---

14. கோடிப் பூந்துகில் கொய்து விளிம்புரீஇச்
சேடார் அல்குல் சேடுபட உடீஇ
—பெருங். 2 : 5 : 165 - 66

15. பொறிமயிற் றெருமுதி புயல்கழி காலைச்
செறிமயிர் உளர்த்துஞ் செய்கை போல்தம்
நெறிமயிர்க் கூந்தல் நீரற வாரி
—பெருங். 1 : 42 : 199 - 201

16. நறுநீர்த் துவர்க்கை வயின்வயின் உரீஇக்
கறைமாண் காழகிற் கொழும்புகை கொளீஇ
நெறித்து நெறிப்பட வாருநர் முடித்து
—பெருங். 3 : 22 : 208 - 10

17. கானக் காழகில் தேன்நெய் தோய்த்து
நறுந்தண் கொடிப்புகை அறிந்தளந் தூட்டி
வடித்து வளைப்பிரீஇ முடித்ததன் பின்னர்
—பெருங். 4 : 16 : 12 - 14

யானையின் துதிக்கை போன்றிருந்தது. அவ்வாறு வாரி முடிக்கப்பட்ட தலையில் பத்தி முதலிய தலைக் கோலங்களை ஒழுங்குபட, அணிய வேண்டிய இடங்களில் சரிவர அணிந்து அழகு சேர்த்தனர்.[18] கூந்தலில் நீர்ப் பூக்களாலாகிய மாலைகளையும், நிலப் பூவாகிய முல்லை மலர்ச் சூட்டினையும் பொருத்தமுற அணிந்தனர்.[19] கூந்தலில் கோங்க மலரையும் குரவ மலரையும் சூடுவதுமுண்டு.[20] சீர்பெற ஒப்பனை செய்யப்பட்ட முடியில் அணிந்த பூச் சரங்கள், கழுத்தின் பின்புறம் தொங்கிப் படிந்து அசைந்தன.[21]

விரித்தும் தொகுத்தும் வகுத்தும் வாரியும் கோதியும் தீண்டியும் நறுமணப் புகையை நிரம்ப ஊட்டியும் பேணப் பட்ட கருநிறக் கூந்தலை மராட்டிய தேயத்தாருடைய முறையில் ஒப்பனை செய்தலும் உண்டு.[22]

---

18. பெருங். 2 : 5 : 173 – 78

19. வனப்பொடு புணர வகுத்தணி முடிமிசை
நீர்ப்பூம் பிணையல் சீர்ப்பமை சிகழிகை
முல்லையங் கோதை சில்சூட் டணிந்து
—பெருங். 1 : 42 : 147 – 49

20. கோங்கின் தட்டமும் குரவின் பாவையும்
வாங்கிக் கொண்டு வாருபு முடித்து
—பெருங். 1 : 57 : 98 – 99

21. சீரலங் காரச் சித்திர முடிமிசைத்
தாரணி கோதை தாழ்ந்துபுறத் தசைய
—பெருங். 3 : 24 : 185 – 86

22. பண்கெழு விரலிற் பன்முறை தொகுத்து
நான மண்ணி நீனிறம் கொண்டவை
விரித்தும் தொகுத்தும் வகுத்தும் வாரியும்
உளர்ந்தும் ஊறியும் அளந்துகூட் டமைத்த
அம்புகை கழுமிய அணிமா ராட்டம்
—பெருங். 2 : 19 : 68 – 72

தொய்யில்

நெற்றியிலும் தோளிலும் சந்தனத்தாலே நுண்ணிய கோலமெழுதினர்.[23] மகளிர், "நறுவெண் சாந்தின் நன்னலம் குயிலக் கொடிபல எழுதிய கோலத் தோளின ராய்" விளங்கினர்.[24] சந்தனக் கட்டையைத் தேய்த்து அதனோடு பச்சைக் கருப்பூரம் பெய்யப்பட்ட நுண்மை யுடைய குழம்பினால் மார்பிலும் தோளிலும் அழகுறப் பூங் கொடி வடிவில் எழுதினர்.[25] சந்தனம் முதலியவற்றால் எழுதிய கோலத்தையுடைய மகளிர் 'தொய்யில் மகளிர்' எனப்பட்டனர்.[26] சந்தனம் போலவே, சாதிலிங்கம், நானப்பொடி முதலியன கலந்து குழைத்த குங்குமக் குழம் பிலும் தொய்யில் எழுதினர். ஊடல்கொண்ட பெண் சிந்திய கண்ணீர் தொய்யிலில் பட, அது கரைந்து கீழிறங் கிய தன்மை வானவில் நெகிழ்ந்து உருகினாற் போன்ற தோற்றத்தைத் தந்ததென்பர்.[27] கொங்கைகளுக்கிடையே முளைத்து, கொங்கைகளில் அணிந்துள்ள முத்து மாலைகளி னிடையே படர்ந்து, மேலேறி நெற்றிச் சுட்டியின் கீழ்ச் சுருள் சுருளாய்த் தழைத்துள்ளது எனக் காண்போர் குறிப் பால் உணரும் வண்ணம் மார்பு, கொங்கை, நுதல் ஆகிய இடங்களில் பூங்கொடி வடிவத்தில் தொய்யில் எழுதினர்.[28] இவ்வாறு, "பழுதற அழகொடு புனைநலம் புனையாக், குங்குமம் எழுதிக் கோலம் புனைந்ததைப்"[29] பல்வேறு இலக்கியங்களில் நாம் காண முடியும்.

---

23. தண்ணறுஞ் சாந்தம் நுண்ணிதின் எழுதி
—பெருங். 1 : 42 : 150

24. பெருங். 2 : 5 : 81 - 82

25. „ 4 : 16 : 18 - 21

26. தொக்கனர் படியும் தொய்யில் மகளிர்தம்
—பெருங். 1 : 40 : 152

27. பெருங். 1 : 40 : 220 - 24

28. „ 1 : 38 : 192 - 196

29. „ 4 : 13 : 103 - 104

அணிகள்

ஒளி பொருந்திய பல வகையான அணிகலன்களை உறுப்புகள் தோறும் அவற்றிற்குப் பொருத்தமாய் அணிந்தனர்.[30] முடி முதல் அடி ஈருக அணிகலன்களை அழகுபெற அணிந்து, மணமுடைய நறிய சாந்துகளை வகைபெறப் பூசி, திருமகள் அழகையும் விஞ்சும் வகையில் அழகு படுத்திக் கொண்டனர்.[31] இவ்வாருன ஒப்பனையுடன் கூடிய மகளிர் தொழிற்றிறமைந்த ஓவியப் புலவர் திருத்த முற எழுதிய ஓவியமொப்பக் காட்சி தந்தனர்.[32]

ஆடவர் ஒப்பனை

திருமணம் முதலிய மங்கல வேளைகளில் ஆண்களையும் ஒப்பனை செய்தனர். ஆண்கட்கு ஒப்பனை செய்வோர், 'கோல வித்தகர்'[33] எனப்பட்டனர். அவ்வொப்பனையாளர் ஆடவரின் விரல் நகங்களைப் பாதித் திங்கள்போல் வெட்டிக் குறைத்து அழகும் நிறமுமுடைய கல்லிஞல் நிறம் பெறும்படித் தேய்த்தனர். மணப் பொடியினை முகத்தில் தடவி, திங்கள் ஒளியினும் மிக ஒளி பெறும்படி நன்ருகத் தேய்த்துப் பின்னர் நேரிய துகிலிஞல் துடைத்தனர். இயல்பாகவே தாமரையின் அகவிதழ்போன்று சிவந்துள்ள முகத்தை மேலும் காண்போர் வியக்கும்படிச் செம்பஞ்சியிஞல் அழகிய நிறமூட்டினர். ஆண்களுக்கும் தொய்யில் எழுதினர். பெண்களுக்குத் தொய்யில் பூங்கொடி வடிவில் அமைந்தது. ஆண்களுக்கோ அது வில் முதலிய வடிவினதாய் எழுதப்பட்டது.[34]

---

30. விதிமாண் உறுப்பிற்கு வேண்டுவ வேண்டுவ
கதிர்மாண் பல்கலம் கைபுனைந்து இயற்றி
—பெருங். 1 : 42 : 152 - 53
31. பெருங். 2 : 5 : 179 - 83
32. ,, 2 : 7 : 40 - 43
33. ,, 2 : 5 : 160
34. ,, 2 : 4 : 186 - 197

(உ) பருவங்கள்

சங்க இலக்கியம்

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் எனப் பெண்டிர் ஏழு பருவத்தினராகப் பேசப்படுகின்றனர். சங்க இலக்கியங்களில் இச் சொற்கள் காணப்படினும், இன்ன பருவத்தினரை இச் சொல் குறிக்கிறது என்ற தெளிவான வரையறை இல்லை; பேதை என்ற சொல் அறியாப் பருவத்தினரை மட்டும் குறிக்காமல் பேதைமைத் தன்மை உடையாரைச் சுட்டும் வகையிலும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ''காதலன் வரக்கண்டு ஆழ்துயர் எல்லாம் மறந்தனள் பேதை''[1] என்ற கலித்தொகை அடிகள் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருந்த வயது வந்த பெண்ணைப் பேதை என்றே குறிப்பிடுகிறது.

பெதும்பைப் பருவம் பற்றிய குறிப்பொன்று அகநானூற்றில் தென்படுகிறது. தாய் ஒருத்தி தன் மகளை நோக்கி, ''அறிவினையுடைய இளைய மகளே! நினக்கு முலைகள் அரும்பின; விழுந்து முளைத்த கூரிய பற்கள் ஒளி கொண்டன; கூந்தல் முடித்தல் அமைந்தன; தண்ணிய தழையுடையைக் கொண்டனை; ஆதலால் சுழன்று திரியும் நின் ஆயத்தாரோடு எங்கணும் இனிப் போகக் கூடாது; வாயிலை விட்டும் அகலக் கூடாது; நீ பேதைப் பருவத்தினள் இல்லை. இப் பெதும்பைப் பருவத்தே நீ புறத்தே

---

1. கலித் 147 : 67 - 68

போவது கூடாது'' என்று அறிவுறுத்துகின்றாள்.[2] இதனால் பேதைப் பருவத்தை அடுத்தது பெதும்பைப் பருவம் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளதோடு பெதும்பைப் பருவ உடலமைப்பும் விவரிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, மணப்பருவம் எய்திய பெண்களை மங்கையர் என்றும் மகவைப் பெற்றெடுத்துத் தாய் நிலையில் இருப்பவரை மடந்தையர் என்றும் சங்க நூல்கள் பேசுகின்றன. ஆயினும் மங்கை என்ற சொல், ''திரண்ட முன்கையினையும், தூய அணிகலன்களையுமுடைய மடப்பம் பொருந்திய மங்கையர் தாம் மணலிற் புனைந்த வண்டற் பாவைக்குக் கோட்டுப் பூவைப் பறித்துச் சூடி, ஆன்பொருநை நதியில் பாய்ந்து விளையாடும் சிறப்புப் பொருந்திய கருவூர்''[3] என்று கூறப்படும் புறநானூற்றுப் பாடலில் மணற் பாவை செய்து விளையாடும் சிறுமியையும், ''கணவனோடு புணரும் காலத்தில் மங்கையர் தாம் உடுத்தியிருந்த பட்டாடைகளை நீக்கிவிட்டுப் புணர்ச்சிக் காலத்திற்கு ஏற்றதான நொய்ய பஞ்சாடையை உடுத்தினர்'' எனக் கூறும் பட்டினப்பாலை அடிகளில்[4] திருமணமாகிக் கணவனோடு இன்பம் துய்த்திருந்தவளையும் குறித்திடக் காண்கிறோம்.

---

2. முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்தழை யுடையை
அலமரல் ஆயமொ டியாங்கணும் படாஅல்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்புமீ பூண்டிசின் கடையும் போகலை
பேதை அல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென

—அகம். 7 : 1-7

3. புறநா. 11 : 1-6

4. துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டுநீக்கித் துகில்உடுத்தும்

—பட்டினப். 106-07

மணம் கமழும் மென்மையான படுக்கையில் புதல்வன் தூங்க, நீராடியதால் ஈரமான அணிகளுடன் நின்ற சீர்கெழு மடந்தையை நற்றிணை காட்டுகிறது.[5] மகவைப் பெற்றவள் மடந்தை என்ற இந் நிலைக்கு மாறாக மண மாகாத பெண்டிரும் மடந்தை என அழைக்கப்பட்டுள்ள தையும் காண்கிறோம்.

'வாள்நுதல் அரிவை மகன்முலை ஊட்ட' என்ற ஐங் குறுநூற்று அடி[6] அரிவை திருமணமாகி மகவைப் பெற்ற வள் என்பதை அறிவிக்கிறது. தலைவன் ஒருவன், "அமிழ் தம் பொதிந்த செவ்விய நாக்கு அஞ்சும்படியாக முளைத் தெழுந்து, ஒழுங்குபட்டு விளங்குகின்ற கூரிய பற்களையும், சிலவாகிய மொழிகளையும் உடைய அரிவையை நான் மடல் ஏறிப் பெறுவேனாக"[7] என்று கூறுமிடத்தில் கள வொழுக்கத்தில் ஈடுபட்டுள்ள தலைவியும் அரிவை எனக் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

தெரிவை என்ற சொல்லாட்சி சங்க நூல்களில் அரு கியே தென்படுகிறது. பொருள்வயிற் பிரிதலை நினைந்த ஒருவன், தான் பிரிய இருக்கும் செய்தியைக் கேட்டதும் கண் கலங்கி அழுத தலைவியின் நிலை கண்டு, "இத் தெரி வையின் அழுத கண்கள் வினைமேற் செல்வதற்கிருந்த என் தேரின் செலவைத் தடுத்து நிறுத்திவிட்டன"[8]

---

5. வெறியுற விரிந்த அறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச
ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை —நற். 40 : 5 - 9

6. ஐங்குறு. 404 - 1

7. அமிழ்துபொதி செந்நா அஞ்ச வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவையைப்
பெறுகதில் லம்ம யானே —குறுந். 14 : 1 - 3

8. நீர்விலங்கு அழிதல் ஆனு
தேர்விலங் கினவால் தெரிவை கண்ணே
—குறுந். 256 : 8 - 9

என்று கூறுவது தெரிவை திருமணமானவள் என்ற தெளி வைச் சுட்டுகிறது.

நரைவிரா வுற்ற நறுமென் கூந்தற்
செம்முது செவிலியர்[9]
நறுவிரை துறந்த நாரு நரைத்தலைச்
சிறுவர் தாயே பேரிற் பெண்டே[10]

என்ற அடிகள் பேரிளம் பெண்டிர் என்பார் நரை தோன்றி யும் தோன்றாததுமாயுள்ள பருவத்தினர் என்பதை விளக்கு கின்றன.

சங்க இலக்கியங்களில் பேதை என்ற சொல் அறியாத் தன்மையையும் பேரிளம் பெண்டிர் என்ற சொல் முதுமை நிலைக்கு அடியெடுத்து வைக்கும் நிலையில் இருப்பவரையும் குறிக்கின்றன; பேதைப் பருவத்தை அடுத்தது பெதும் பைப் பருவம் என்ற குறிப்புக் கிடைக்கிறது; மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை என்ற பருவங்களுள் இன்ன பருவத்தை அடுத்தது இது என முறைப்படுத்திக் காட்டப் படவில்லை; ஆயினும் அவர்களின் உருவத் தோற்றத்தை விளக்குவது கொண்டு பருவ நிலையை ஓரளவு உய்த் துணர முடிகிறது.

ஏழு பருவம்

மகளிரை ஏழு பருவத்தினராக வகைப்படுத்திக் கூறிய முதற் புலவர் கொங்குவேளிரே ஆவர். காட்டில் ஓரிடத் தில் ஆண் யானை ஒன்று பல பெண் யானைகளுக்கிடையில் நின்றது. அதன் கவுளின் புறத்தே வழிந்த மத நீரில் வண்டுகள் மொய்த்தன. பெண் யானைகள் பூங்கொத்து, தளிர் ஆகியவற்றைத் தம் கையில் ஏந்தி அவ் வண்டுகளை

9. அகநா. 254 : 1 - 2
10. புறநா. 270 : 5 - 6

ஓட்டி நின்றன, ஆண் யானையோ பெண் யானைகளின் அழகின்பத்தை நோக்கால் நுகர்ந்து, அப் பெண் யானை களுள் ஓர் இளைய யானையின்மீது தன் வளைந்த துதிக்கை யினைக் கிடத்தி நின்றது. ஆண் யானை அவ்வாறு நின்ற தோற்றம், பேதை முதல் பேரிளம் பெண் ஈறுக அமைந்த ஏழுவகைப் பருவ மகளிரோடே இன்பம் துய்த்து விளையாட் டயரும் ஓர் அரசனைப்போல இருந்தது என்று கூறுமிடத் தில் கொங்குவேள் மகளிரை ஏழு பருவத்தினராகக் குறிப் பிட்டுள்ளார்.[11]

உலா இலக்கியக் கால்கோள்

பிற்காலத்தில் உலா இலக்கியங்கள் தோன்றின. தெய்வமோ அல்லது அரசனோ வீதியில் உலா வரும்போது ஏழு பருவ மகளிரும் உலா வருவோரைக் கண்டு அவர் களுடைய வடிவழகிலும், மற்றச் சிறப்புகளிலும் ஈடுபட்டு அவர்கள்பால் காதல் கொண்டதாகப் பாடப்படுவது உலா இலக்கியமாகும். இந்த உலா இலக்கியத்திற்குக் கால் கோள் இட்டவர் கொங்குவேளேயாவர்.

சயந்தி நகரத்தில் உதயணன்-வாசவதத்தை திருமணம் சிறப்புற நடைபெற்றது. மணவிழா முடிந்ததும் உதயணன் வாசவதத்தையோடு திருக்கோயிற்குச் சென்று இறை வழிபாடியற்றி நகர்வலம் வந்தனன். 'புதுமணக் கோலத்துப் பொலிவொடு புணர்ந்த கதிர்முடி மன்னனைக் காண்பது விரும்பி' வீதியின் இரு மருங்கிலும் மகளிர் நிறைந்தனர். உயரமான இடத்திலிருந்து காண விரும் பிய மகளிர் சிலர், செய்குன்றுகளில் விரைந்து ஏறி நின்ற னர். ஒப்பனை செய்வதில் காலம் நீட்டித்தால் கொற்றவனைக் காண இயலாது போய்விடும் என்று எண்ணிய மகளிர்

---

11. எழுவகை மகளிரின் இன்பம் எய்தி
அகமகிழ்ந் தாடும் அண்ணல் போல
— பெருங். 5 : 3 : 77 - 78

சிலர் அரைகுறை ஒப்பனையோடு ஓடிவந்து அரசனைக் கண்டனர். உதயணனைக் கண்ட மகளிர் காமுற்று வருந்துவராதலின் செவிலித் தாயர் அவனைக் காணவொட்டாது தம் மக்களைத் தடுத்தனர். ஆனால் அம் மக்களோ, ''எம் அன்னையீர்! நாங்கள் உதயணனைப் பார்க்கப் போவதில்லை. ஒப்பனை செய்யப்பட்ட இச் சயந்தி நகரத்தின் அழகினை மட்டுமே காண்போம் என்று கூறி, விரைந்து சென்று, வாயில் மாடத்தே அமைந்திருந்த சாளரங்களின் கதவுகளை அகற்றி, ஆர்வத்துடன் உதயணன் உலா வந்ததை நோக்கினர். மலைச் சிகரங்களில் ஏறிய மயிற் கூட்டம்போல மாட மாளிகைதோறும் மகளிர் கூடி நின்றனர்.

கொங்குவேள் காட்டும் இந்த உதயணனின் உலாவே பின்னர்த் தோன்றிய உலா இலக்கியங்கட்கு வழிகாட்டி எனலாம். உதயணன் உலாவைப் பார்க்கப் போந்த பெண்களில் பேதை, தெரிவைப் பருவத்தினரை மட்டுமே கொங்குவேள் விவரிக்கின்றார். பிற பருவத்தினரை விவரிக்கவில்லை.

உலாவைக் கண்ட கன்னியர் நிறையழிந்தனர் என்று கூறுவது கற்புடை மகளிர்க்கு ஒழுக்கமாகாது என்று கருதிய கொங்குவேள், அவ் வுலாவைக் கண்டவரில் நிறையழிந்தவர் பரத்தை மகளிரே எனக் கூறிச் செல்கிறார். குல மகளிர் உலாவைப் பார்த்தனராயினும் உலாச் சென்றவனை அரசன் என்ற அளவில்தான் நோக்கினர். பரத்தையரோ அவனோடு கூடப்பெறும் வாய்ப்புக் கிட்டாதா என்ற ஏக்கத்தோடு பார்த்தனர். இதன்மூலம் குலமகளிர், பரத்தையர் ஆகிய இருவரின் மன நிலைகளும் நுண்மையாக வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன.

கற்புடை மகளிரல்லாத ஏனையோரே உதயணனைக் கண்டு காமுற்றனர் என்பதை,

ஞாலந் திரியா நன்னிறைத் திண்கோன்
உத்தம மகளிர் ஒழிய மற்றைக்
கன்னிய ரெல்லாம் காமன் றுரந்த
கணையுளங் கழியக் கவினழி வெய்தி
இறைவனை நில்லார் நிறைவரை நெகிழ [12]

எனக் கவிஞர் பெருமான் கொங்குவேளிர் அமைத்திருக்கும் திறன் அறிந்து இன்புறுதற்குரியது.

ஏழ்பருவ வரிசை

மகளிரின் ஏழு பருவப் பெயர்களையும் வரிசைப்படுத்தி முதலில் அறிவித்தவரும் கொங்குவேளேயாவர். உஞ்சை நகர நீராட்டு விழாவில் ஈடுபட்ட மகளிரின் பருவத்தையும் தோற்றத்தையும் இயல்பையும் அவர் விரிவாகக் கூறியுள்ளார்.

பேதை : பேதைப் பருவத்தினர் காமப் பண்பினைத் தோற்றுவித்தல் இல்லாத இன்பம் தரும் வெள்ளை நோக்கினர்; காதலையுண்டாக்காத மழலைச் சொற்கள் உடையவர்.[13] பிடரை மறைக்கும் கூந்தலையும் பொன் தோட்டினையும், மின்னலை ஒத்த சாயலினையும், அணிகலனால் ஒப்பனை செய்யப்பட்ட கழுத்தினையும் கொண்டவர்.[14] அவ் விளம் பெண்கள் வீதிகளில் மணல்வீடு கட்டி விளையாடித் திரிந்தனர்.

பெதும்பை : பேதைப் பருவம் முடிந்து பெதும்பைப் பருவம் எய்திய மகளிரை இல்லின் புறத்தே போகா

---

12. பெருங். 2 : 7 : 53 - 57
13. காமம் காலா ஏம நோக்கத்து
மாத ராற்ற மழலையங் கிளவிப்
பேதை மகளிர் —பெருங். 1 : 41 : 55 - 57
14. பெருங். 2 : 7 : 95 - 98

வண்ணம் அன்னையர் காவல் செய்தனர்.[15] பெதும்பையர் கடைக் கண் சிவப்பும், முலைகளின் முகிழ்ப்பும், வாரிக் கைசெய்யாத கூந்தலும், நுண்ணிடையும் கொண்டு அழகு குடியிருந்தாற் போன்ற தோற்றத்தினராயிருந் தனர்.[16] முத்து வடமணிந்த கழுத்தையும், நிலவொளி விரிந்த அழகிய திங்கள் மண்டிலம் போன்ற முகத்தினையு முடையராயிருந்தனர்; பொன்னிறக் கோங்கின் பருத்த அரும்பைப் போன்று மார்பின் முன்பக்கத்தே கொங்கைகள் தோன்றப்பெற்றிருந்தனர்; கன்னிமை அழகோடு அவர்கள் மின்னல் கொடி போன்று உலவி வந்தனர்.[17] அறிவதறி யாப் பருவம் நீங்கிச் செறிவோடு விளங்குவது பெதும்பைப் பருவம்.[18]

மங்கை : பெதும்பைப் பருவத்தின் முதிர்ச்சி மங்கைப் பருவம்.[19] மங்கைப் பருவத்தினர் விருப்பத்தை மிகுவிக்கும் பருத்த முலைகளைக் கொண்டிருந்தனர்; மூங்கில் தண்டுக ளின் அழகைத் தோற்கடிக்கச் செய்யும் மெல்லிய தோள் களைப் பெற்றிருந்தனர்; பூங்கொடி போன்று நுடங்கிய இடையையும், முகத்தில் அம்பு போன்று செவ்வரி படர்ந்த

---

15. வண்ட லாடிய மறுகினுட் காண்பவை
கண்டினிது வருஉங் காலம் அன்றெனக்
காவல் கொண்டனர் அன்னையர்
—பெருங். 4 : 15 : 124 - 26

16. கடைக்கண் சிவப்பும் கதிர்முலை யுருப்பும்
மடக்காக் கூழையும் மருங்குலும் பற்றிப்
புதையிருந் தன்ன கிளரொளி வனப்பினர்.
—பெருங். 1 : 34 131 - 33

17. பெருங். 1 : 41 : 64 - 68

18. அறிவ தறியாப் பருவம் நீங்கிச்
செறிவொடு புணர்ந்த செவ்வியள்
—பெருங். 4 : 15 : 11 - 12

19. தங்கைய ருள்ளும் மங்கை முற்றுப்
பெதும்பை ஆயம் —பெருங். 1 : 34 : 113 - 14

நெடிய கண்களையும் கொண்டிருந்தனர். அவர்கள் மேகலை அணிந்திருந்தனர்.[20]

மடந்தை : மடந்தைப் பருவத்தினர் கரு முகிலில் படிந்த பிறை நிலவுபோலக் கூந்தலிடைத் தோன்றும் நெற்றியையும், வில்லொத்த வளைந்த புருவங்களையும், அவற்றின் கீழே அங்குமிங்கும் உலவிப் பிறழ்ந்த ஒள்ளிய செவ்வரி படர்ந்த விழிகளையும், கச்சினைக் கிழித்து வெளி வரத் துடிப்பது போன்று வளர்ந்து பருத்த முலைகளையும், நுணுகிய இடையினையும் பெற்று விளங்கினர்.[21]

அரிவை : அரிவைப் பருவத்தினர் பெண்மை நலமும், இயற்கை அழகும், மிக்க நாகரிகமுடைய அழகிய மெல்லிய சாயலையுடையராய்த் திகழ்ந்தனர். தம் பிள்ளைகட்குக் கேட்டற்கினிய மொழிகளைக் கூறியவண்ணம், பால் மிகுந்த தம் முலைகளை அப் பிள்ளைகளின் வாயிலே சேர்த்தி, அவர் களைத் தழுவியவராய்ப் பாலூட்டித் தாலாட்டினர்.[22]

தெரிவை : தெரிவையர் செவ்வரி படர்ந்த மதர்த்த நெடுங் கண்ணினர். குழந்தை அடிக்கடி பாலுண்டதால் அவர்களது முலைகளினிடையே கிடந்த பொற்பூண் சரி செய்யப்படாது திருத்தமின்றிக் கிடந்தது. மழலை ஒலியை யும் தலை உச்சியில் குழியையுமுடைய தம் புதல்வர்களை மார்பிடத்தே அவர்கள் அணைத்திருந்தனர். அதனுல்

20. பெருங். 1 : 41 : 69 - 73

21. சின்மெல் லோதி சேர்ந்த சிறுநுதல்
குலாஅய்க் கிடந்த கொடுநுண் புருவத்து
உலாஅய்ப் பிறழும் ஒள்ளரித் தடங்கண்
வம்புமீக் கூரும் பொங்கிள முலையின்
நுடங்குகொடி மருங்கின் நுணுகிய நுசுப்பின்
மடந்தை மகளிர் —பெருங். 1 : 41 : 77 - 82

22. பெருங். 1 : 41 : 82 - 89

அவர்களுடைய அழகிய அகத்திலே பூசியிருந்த சந்தனம் அழிந்தது.[23]

பேரிளம் பெண் : பேரிளம் பெண்டிரோ தேமல் படர்ந்த மெத்தென்ற அல்குலை உடையவராயிருந்தனர். கொய்சக மிட்ட பூந் துகிலையும் அளவமைந்த கச்சினையும் அணிந் திருந்தனர். மெல்லிய கூந்தலின் இடையிடையே நரை விராவித் தென்பட்டது.[24]

நரை மூதாட்டி : பேரிளம் பருவத்தைக் கடந்து முதிர்ந்த நரை மூதாட்டியரின் தோற்றம் பற்றியும் கொங்குவேள் குறிப்பிட்டுள்ளார். அவர்களுடைய நிறம் மழுங்கிய நரைத்த கூந்தல் உதிர்ந்து குறைந்துபோயிருந் தது. உடம்பு வற்றி ஆங்காங்கே பட்டாடையில் தோன்று வதுபோலப் புள்ளிகள் விழுந்திருந்தன. அவர்களுடைய கொங்கைகள் பால் இல்லாது தோலாய்த் தொங்கின. நடுக்குற்றவராய்க் கால்களை எடுத்து வைக்க முடியாத தளர்ச்சி எய்தியிருந்தனர். கண் குருடானமையினால் பிறர் அழைத்துச் செல்லவேண்டிய நிலையில் கையில் கோலை யுடையவராயிருந்தனர்.[25]

---

23. அரிமதர் நெடுங்கண் அளவிகந் தகல
இரமூலைப் பொற்பூண் இடவயிற் றிருத்தாத்
தெரிவை மகளிர் தேமொழிக் கிளவிக்
குழித்தலைப் புதல்வர் எழிற்புறம் வரித்த
அஞ்சாந் தழிய ஆகத் தடக்கி
—பெருங். 2 : : 7 : 111 - 15

24. தித்தி ஒழுகிய மெத்தென் அல்குலர்
மட்டப் பூந்துகிற் கட்டலைக் கச்சையுர்
நுரையிடைப் படர்ந்த நறுமென் கூந்தலர்
—பெருங். 1 : 41 : 97 - 99

25. பறைந்திடை சோர்தரு பசலை வெண்நரைக்
குறைநத கூந்தலர் கோசிகம் போலப்
புள்ளி விதிர்த்த உள்ளுறு மேனியர்
பைசொரிந் தன்ன பாலில் தோல்முலை
நரைமூ தாட்டியர் நடுக்கம் எய்திக்
காலிடு தளர்ச்சியர் கண்பிற ராகக்
கோலொடு தளர்ந்து —பெருங். 1 : 43 : 153 - 59

கொங்குவேள் விவரித்த இச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தே தோன்றிய உலா இலக்கியங்கள் ஏழு பருவத்தினரையும் அவரியல்பு தோன்ற வருணிப்பது அறிந்து இன்புறத் தக்கதாகும்.

பருவ வரம்பு

ஏழு பருவத்தை வரிசைப்படுத்தி, கொங்குவேள் கூறிச் சென்ற பின்னர், பிற்காலத்தோர் அப் பருவங்கட்கு அவர் கூறிய நிலைகளைக் கொண்டு வயது வரம்பு குறிப்பாராயினர். 5 வயது முதல் 7 முடிய பேதை, 8 முதல் 12 முடிய பெதும்பை, 12 முதல் 13 முடிய மங்கை, 14 முதல் 19 முடிய மடந்தை, 20 முதல் 25 முடிய அரிவை, 26 முதல் 31 முடிய தெரிவை, 32 முதல் 40 முடிய பேரிளம் பெண் என்ற வரையறை தந்தனர்.[26] இவ் வயது வரம்பில் சிறுசிறு வேறுபாடுகளும் கூறப்படுவதுண்டு. ஆயினும் கூறப்பட்டுள்ள இயல்புகள் கொண்டு, "பொதுவாக, மகளிர் உலகியலை அறியும் நிலை எய்தாத இளம் பருவம் பேதைப் பருவம்; காம உணர்ச்சி ஒருவாறு அரும்பி அதனை உணர்ந்தும் உணராததுமான நிலையில் உள்ள பருவம் பெதும்பைப் பருவம்; அவ் வுணர்ச்சியை நன்கு எய்திய பருவம் மங்கைப் பருவம்; அவ் வுணர்ச்சியில் பயின்று வரும் பருவம் மடந்தைப் பருவம்; அவ் வுணர்ச்சியில் முதிர்ந்து இன்பத்தில் திளைக்கும் பருவம் அரிவைப் பருவம்; மகப் பேற்றை அடையும் பருவம் தெரிவைப் பருவம்; காம வுணர்ச்சி தளர்வுறத் தோன்றும் பருவம் பேரிளம் பருவம் என்று ஒருவாறு பாகுபாடு செய்து கொள்வது பொருத்தமுடைத் தென்னலாம்"[27] என டாக்டர் உ. வே. சா. அவர்கள் குறிப்பிட்டிருப்பது மிகப் பொருத்தமான விளக்கமாக அமைகிறது.

---

26. இலக்கண விளக்கம். பாட்டியல் 99 - 103
27. டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் : குற்றாலநாதர் உலா : முன்னுரை'ழ

முதல்வர் கொங்குவேளே

பேதை முதல் பேரிளம் பெண் ஈருக உள்ள ஏழு பருவங்களே வரிசைப் படுத்தி அப் பருவ மகளிரைப் பற்றிப் பாடுதற்கு முதல் வழி காட்டியாக விளங்கியவரும், உலா இலக்கியத்திற்கு வழி வகுத்துக் கொடுத்தவரும் கொங்கு வேளே என்பதை மேற் கூறியவற்ருல் நன்கு உணர்ந்து கொள்ளமுடியும். ஏழ் பருவ மகளிரின் தோற்றங்களாகக் கொங்குவேள் விவரித்துள்ள கருத்துகளே, பிற்கால உலா இலக்கியங்களில் விரிவு படுத்தப்பட்டுள்ளன.

(ஊ) விளையாட்டுகள்

மகளிர் பந்தடித்தனர்; பாவை புனைந்தனர்; குரவையாடினர்; அருவியில் திளைத்தனர்; சிற்றில் இழைத்தனர்; கழங்கு ஆடினர்; ஊசல் ஊக்கினர்; இன்னும் இவையொத்த பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டனர். மாளிகை முற்றம், மலர்க் கா, மலைச் சாரல், பந்தெறி களம், பொய்கைக் கரை, ஊஞ்சல் ஆடிடம் முதலியன அவர்கள் விளையாட்டிடங்கள் ஆயின.[1]

ஊஞ்சல்

பைந்தளிர் நிறைந்த இள மரக்காவினுள் அசோக மரத்தின் கிளைகளில் பொற் கயிறுகளால் தொங்கவிடப் பட்ட பழவப் பலகைகளில் அமர்ந்து அரச மகளிர் ஊஞ்சலாடினர். இச் செய்தியை,

> பைந்தளிர் பொதுளிய பனிமலர்க் காவில்
> செந்தளிர்ப் பிண்டிச் சினைதொறுந் தொடுத்த
> பின்னுறு பொன்ஞாண் பெருந்தொடர் கோத்த
> பண்ணுறு பல்வினைப் பவழத் திண்மணை
> ஊக்கமை ஊசல்[2]

எனப் பெருங்கதை அடிகள் புலப்படுத்துகின்றன.

தாழையின் விழுதாலும் அதன் கயிற்றாலும் சமைக்கப் பட்ட ஊஞ்சலிலிருந்து ஆடுதல் இயல்பு.[3] இதனை, 'ஞாழல்

---

1. பளிக்கறைப் பூமியும் பந்தெறி களத்தும்
   மணிக்கயிற் றூசல் மறலிய இடத்தும்
   கொய்ம்மலர்க் காவும் பொய்கைக் கரையும்
   —பெருங். 1 : 34 : 115 - 17
2. பெருங். 1 : 46 : 175 - 79
3. ,, 1 : 40 : 112 - 13 ; 2 : 14 : 25 - 27

ஓங்குசினைத் தொடுத்த கொடுங்கழித் தாழை வீழ்கயிற் றூசல் தூங்கி'[4] என்ற அகநானூற்றுப் பாடல் அடிகளாலும் அறியலாம்.

பந்தாட்டம்

பண்டை நாட்களில், "பந்து விளையாடுதல் பெண்களுக்கே உரிய விளையாட்டாக இருந்தது. பெண்களை வருணிக்கையில் பந்தார் விரலி என்றும், பந்தனை விரலி என்றும் புலவர்கள் கூறுவர். சில தலங்களில் அம்பிகைக்குப் பந்து விளையாடுபவள் என்ற பொருளுடைய திருநாமங்கள் அமைந்துள்ளன. கும்பகோணத்திற்கு மேற்கிலுள்ள கொட்டையூர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையின் திருநாமம் கந்துகக் கிரீடாம்பிகை என்பது. அது தமிழில் பந்தார் விரலி என வழங்கும்."[5]

பந்தாட்டப் பாட்டு

மகளிர் பாடிக்கொண்டே பந்தாடுவர். அப் பாட்டுக்குக் கந்துக வரி என்று பெயர். கந்துக வரி சிலப்பதிகாரத்தில் மிகவும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. பொன்னுலான மாலை ஒளி வீசவும், மின்போன்று விளங்குகின்ற மேகலை மணிகள் ஆரவாரிப்பவும் மகளிர் அரசனை வாழ்த்திப் பந்தடித்தனர்;

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்பஆர்ப்ப எங்கணும்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க என்றுபந் தடித்துமே[6]

---

4. அகநா. 20 : 5 - 6
5. நல்லுரைக் கோவை 2 : டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் பக். 159
6. சிலப். 29 : 20

பின் பக்கம், முன் பக்கம் ஆகிய எவ்விடத்தும் சென்றும் வந்தும் இருந்தும் எழுந்தும் உலாவியும் மின்னற் கொடிகள் நிலவுலகிற்கு இறங்கி வந்து ஆடினாற்போல ஆடினர்;

பின்னுமுன்னும் எங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின் னிளங்கொடி வியனிலத் திழிந்தென
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க என்றுபந் தடித்துமே.[7]

பந்துகள் நிலத்தில் இருக்கின்றனவா அல்லது வானத்திலே நிற்கின்றனவா அல்லது இப் பெண்களின் கையில் இருக்கின்றனவா என்று அறியா வண்ணம் அத்துணை விரைவாக அடித்தனர்.

துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலம்
தன்னினின்றும் அந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க என்றுபந் தடித்துமே.[8]

மேலுள்ள சிலப்பதிகாரப் பாடல்கள் பந்தடித்தற்கேற்ற ஓசை ஒழுங்குடன் பெண்கள் பந்தாடிய முறையை நன்கு விளக்குகின்றன. பந்தாடுங்கால் அரசனையோ, தெய்வத்தையோ வாழ்த்திப் பாடுவது வழக்கமாயிருந்தது.

பெருங்கதையில் பந்தடி

பெண்கள் பந்தாடுதலைப் பற்றி மிகவும் விரிவாகக் கூறியுள்ள ஒரே நூல் பெருங்கதையே. 'பந்தடி கண்டது' என ஒரு தனிக் காதையே பந்தாட்டத்தை விவரிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வாசவதத்தை, பதுமாபதி ஆகிய இருவருடைய தோழிகள் போட்டியிட்டு ஒருவரை ஒருவர்

7. சிலப். 29 : 21
8. சிலப். 29 : 22

விஞ்சுவாராய்ப் பந்தடித்த செய்தியைப் பெருங்கதை விவரிக்கிறது.

பந்து செய்யப்பட்ட முறை

பந்துகள் தொழில் நுணுக்கம் அறிந்தோரால் செய்யப் பட்டன. நெட்டி, பஞ்சு, உலண்டு என்ற ஒரு வகைப் புழுவிலிருந்து கிடைத்த பட்டு நூல் ஆகியவற்றை வேண்டிய அளவிற் சேர்த்து, அமைவாக உருட்டி, மேலே மயிற் பீலியும் மயிரும் பரப்பி, நூலாலும் கயிற்றாலும் நுண்மையாகச் சுற்றித் தைத்துப் பந்துகள் அமைக்கப் பட்டன. அவை பாம்புத் தோல் போலவும், மயில் தோகை யின் கண் போலவும், நீர் நுரை போலவும் தோற்ற மளித்தன.[9]

பந்தின் தன்மை

நெட்டியும் பஞ்சும் எழுப்பினால் மேலெழும்பும் தன்மை உடையவை. உலண்டிலிருந்து கிடைத்த பட்டும் மிகமிக மென்மையானது. இவற்றால் செய்யப்பட்ட பந்துகள் காற்றுப் பட்டாலும் எழுந்து ஆடுமளவுக்கு நொய்ம்மைய வாயிருந்தன. அவை கண் கவர் அழகினவாய் வெண்மை, செம்மை, கருமை நிறங்களில் மிளிர்ந்தன. இதைக் கொங்குவேள்,

---

9. கிடையும் பூளையும் இடைவரி உலண்டும்
அடையப் பிடித்தவை அமைதியிற் றிரட்டிப்
பீலியும் மயிரும் வாலிதின் வலந்து
நூலினும் கயிற்றினும் நுண்ணிதிற் சுற்றிக்
கோல மாகக் கொண்டனர் பிடித்துப்
பாம்பின் தோலும் பீலிக் கண்ணும்
பூம்புனல் நுரையும் புரையக் குத்திப்
பற்றிய நொய்ம்மையிற் பல்வினைப் பந்துகள்
—பெருங். 4 : 12 : 42 : 49.

பற்றிய நொய்ம்மையிற் பல்வினைப் பந்துகள்
வேறுவேறு இயற்கைய கூறுகூறு அமைத்த
வெண்மையுஞ் செம்மையுங் கருமையும் உடையன
தண்வளி எறியினுந் தாமெழுந்து ஆடுவ
கண்கவர் அழகொடு நெஞ்சக லாதன[10]

என்று குறிப்பிடுகிறார்.

பந்தடி முறை

மகளிர் ஐந்து, ஏழு, ஒன்பது என அவரவர் திறத்திற் கேற்பப் பந்துகளை எடுத்துக் கொள்வர். எறிந்த ஒரு பந்து மேலே எழும்பும்போது மற்றொரு பந்தால் புடைதது உயரச் செலுத்துவர். அது கீழே வருங்கால் மற்றொரு பந்தால் பின்னே பின்னே அடித்து, எடுத்துக்கொண்ட பந்துகள் தரையில் படாதவாறு வானிலேயே மாலைபோல் சுழன்று சுழன்று வர அடித்துக் கொண்டே இருப்பர். பக்கத்தி லிருப்பவர் பந்தடிப்பவர் எத்தனை கை அடிக்கிறார் என்று எண்ணிக் கொண்டிருப்பர்.

ஒன்றொன்று ஒற்றி உயரச் சென்றது
பின்பின் பந்தொடு வந்துதலை சிறப்பக்
கண் இமை யாமல் எண்ணுமின் என்று [11]

மகளிர் பந்தடித்தனர் என்கிறது பெருங்கதை. மிகுந்த எண்ணிக்கை அடித்தவர் வெற்றி பெற்றவராகக் கருதப் பட்டனர்.

"பந்தடித்தல் எளிது என்று நினைக்கக் கூடாது. மென்மையாகத் தட்ட வேண்டிய வேளையிலே சிறிது வன்மைபடத் தட்டிவிட்டால் வந்தது தீமை. அப்படியே சற்று வலிவாகத் தட்ட வேண்டிய நேரத்திலே பையத் தட்டினாலும், பையத் தட்ட வேண்டிய வேளையிலே தட்டச்

10. பெருங். 4 : 12 : 49 - 53
11. ,, 4 : 12 : 55 - 57

கணங்கினாலும், பந்தடுக்குக் கெட்டு, ஒன்றோடொன்று உராய்ந்து நிலைமை மாறி எல்லாம் வீணாய்ப் போய் விடும்.''[12]

இராசனை பந்தடித்தல்

பதுமாபதியின் தோழி இராசனை என்பவள் ஏழு பந்துகளை எடுத்துக்கொண்டு அவற்றை ஒன்றன் பின் ஒன்றாய் முன் கையால் சுழன்று சுழன்று அடித்தும், அடித்த பந்துகளைக் கைகளால் தடுத்து மீண்டும் தட்டியும் ஆயிரங் கை அடித்தாள்.[13]

காஞ்சனமாலை

வாசவதத்தையின் தோழி காஞ்சனமாலை அதே ஏழு பந்தை எடுத்து ஆடினாள். ஒன்றன் பின் ஒன்றாய்ப் பந்துகள் உயரச் செல்வதும் கீழே வருவதும், தடுத்து மேலேற்றப்படுவதுமாக இருந்தன. கூந்தலின்மேல் விழ வந்த பந்தைக் குவித்த விரலால் எழுப்பினாள். சிலவற்றை மேகலைக்கு எதிரே தட்டினாள். சில பந்துகளை மாலையாலே சார்த்தி எழுப்பினாள். இரு கைகளிலும் பந்துகள் பட்டுப் பட்டு மீண்டும் வானத்தே சென்ற வண்ணமிருந்தன. இவ்வாறாக, 'வேயிருந் தடந்தோள் வெள்வளை ஆர்ப்ப, ஆயிரத் தைந்நூறு கை' அடித்து அகன்றாள்.[14]

அயிராபதி

அடுத்து, பதுமாபதியின் தோழி அயிராபதி என்ற கூனி வந்தாள். காஞ்சனமாலையிடமிருந்து ஏழு பந்துகளையும்

---

12. முன்பனிக் காலம் முதலிய இலக்கியக் கட்டுரைகள் : டாக்டர் அ. சிதம்பரநாதன் : கட்டுரை 2 – மகளிர் பந்தாட்டம் : பக் : 16
13 பெருங். 4 : 12 : 54 – 64
14. „ 4 : 12 : 65 – 75

வாங்கி நான்கு திசையிலும் நான்கு மூலையிலும் காற்றினும் விரைவாகச் சுழன்று திரிந்து அடித்தாள். பந்துகளை மேலேற்றிவிட்டு, இடை நேரத்தில் கைகளைத் தட்டினாள். முன் பக்கத்தே குதித்தும், உள்ளங் கையால் தாக்கியும், புறங்கையால் செலுத்தியும் ஆடினாள்; சில பந்துகளைத் தோள்மேல் பாய்ச்சினாள்; சிலவற்றைக் கூன்மேலே புரட்டினாள்; சிலவற்றை நெற்றிப் பொட்டிலே ஏற்றாள்; பட்டுத் தெரித்தவற்றைப் புறங் கையாலே தட்டினாள். பாடிக் கொண்டே ஆடினாள். ஆட்டத்தினிடையே அவிழ்ந்த கூந்தலை முடித்துக் காட்டிக் காண்போரை மகிழச் செய்தாள். இவ்வாறாக அவள் ஈராயிரம் கை அடித்தாள். கண்டோர் புகழ்ந்தனர்.[15]

விச்சுவலேகை

வாசவதத்தையின் தோழியான விச்சுவலேகை என்றகுள்ளி, ''கூனியை ஏதோ பெரிதாகப் புகழ்கிறீர்களே! நான் இருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா'' என்று சேலையை இறுக்கிக் கட்டிக்கொண்டு பந்தடிக்கும் கோலைக் கையிலே பற்றியவளாய் அங்கே தோன்றினாள்.[16] கோலால் பந்துகளை ஒவ்வொன்றாக எழுப்பினாள். பின்னர், குதித்துப் பறப்பவள்போலப் பந்துகளைக் கையில் தட்டினாள். பல்வேறு வண்ணப் பந்துகள் வானத்தில் இந்திர வில்போல வளைந்து வளைந்து வந்தன. புருவங்கள் நெற்றியில் ஏறி நிற்க, விரலை முடக்கிப் புறங்கையால் புடைத்தும், விரலைப் பரப்பி அங்கையால் அடித்தும், ஒற்றை விரலில் தடுத்தும், குருவிகள் பறப்பனபோலப் பந்துகளை வானிடையே செலுத்தினாள்.

15. பெருங். 4 : 12 : 76 - 91

16. யான் இவண் நிற்பக் கூனியைப் புகழ்தல்
ஏலாது என்றவள் சேலந் திருத்தி
கருவிக் கோல்நனி கைப்பற் றினளாய்
(வந்தாள்) —பெருங். 4 : 12 : 96 - 98

முடக்குவிரல் எற்றியும் பரப்புவிரற் பாய்ச்சியும்
தனித்துவிரற் றரித்து மறித்தெதிர் அடித்தும்[17]

குறளி ஆடிய ஆட்டத்தை இன்றைய கைப் பந்தாட்டத்தில் (Volley Ball) சிறிதும் மாருமல் காண்கிருேம். கையை மடக்கிக் கொண்டு குத்துதல், விரல்களை விரித்து உள்ளங் கையில் தட்டுதல், விரல் நுனியால் தள்ளுதல், வேகமாக வருகின்ற பந்தை எதிர்த்து ஓங்கி அடித்தல் என்ற விளை யாட்டு முறை இங்கு நுணுக்கமாகக் கூறப்பட்டுள்ளதை அறிந்து வியக்கிருேம்.

குறளி இவ்வாருக ஈராயிரத்து ஐந்நூறு கை அடித்து முடித்தாள்.[18]

ஆரியை

அடுத்து, பதுமாபதியின் தோழி ஆரியை என்பாள் கொடிபோலும் இடை நுடங்க நடந்து, நறுமணம் கமழும் கூந்தலை வகுத்து முடித்து, கையணியைச் செறித்து, காலணியைச் சீர்திருத்திப் பந்தெறி களத்தினுள் நுழைந் தாள். அவள் நாட்டிய மகள்போல நடை நடந்து, இரு கைகளிலுமாகப் பந்துகளை மாறி மாறி அடித்து, வானிலும் நிலத்திலும் ஏற்றினுள். எழுந்து வீழ்கின்ற பந்தோடு பறந்து செல்பவள்போல ஆடினுள். நிற்கிருளா அல்லது பறக்கிருளா என்று கண்டோர் அறியாதவாறு மேலும் கீழு மாய் விரைந்து இயங்கினுள். அங்கும், இங்கும், எங்கும் அவள் தோளே தென்படும்படியாக, பற்பல கைகளை யுடைய உருவம் படைத்தவள்போல விரைந்து சுழன்று மூவாயிரம் கை அடித்து அகன்ருள். அவளை யடுத்து ஆட ஆளின்றிப் பந்துகள் நிலத்தில் கிடந்தன.[19]

---

17. பெருங். 4 : 12 : 104 - 05
18. ,, 4 : 12 : 92 - 113
19. ,, 4 : 12 : 114 - 134

மானனீகை

ஆரியையை வெல்ல நம் தோழியரில் எவருமில்லையா என வாசவதத்தை சிறிது மன வருத்தத்துடன் நின்ற வேளையில், அவளிடம் பணி புரிந்துகொண்டிருந்தவளும் பேரழகியுமான மானனீகை முன் வந்தாள். அவள் முன்பு ஆடியவர்களுடைய ஆட்டத்தை எள்ளி நகையாடினாள். பந்தாட்ட இலக்கணத்தை விரிவாக அங்கிருந்தோர் அறியுமாறு எடுத்துரைத்தாள். அழகிய, திரண்ட, ஒள்ளிய இருபத்தொரு பந்துகளைத் தேர்ந்தெடுத்தாள். அவற்றைப் பகிர்ந்து தன்னைச் சூழ வட்டமாக வைத்தாள்.

பந்துகளை நிலத்தில் அடித்தடித்து எழுப்பி, மீண்டு வருவனவற்றைப் புறங் கையால் தடுத்துத் தடுத்து அடித்து அவை வானில் எழுந்தோறும் எழுந்தோறும் பந்துடன் தானும் நிலத்தைவிட்டு எழுந்தாள். செய்யும் தொழிலுக்கு ஏற்ப அவளுடைய கையும் காலும் உடம்பும் இயைந்தன; கண்ணும் புருவமும் பொருந்தின. கூத்தாடும் மகளிர் அவளுடைய அவிநயத்தை வியந்தனர். பந்தாட்ட ஒலி தாளத்தோடு பொருந்தியிருந்தது. பாடல் வல்ல மகளிர் அவள் பாணியைப் பாராட்டினர். அவள் அடிகளைப் பெயர்த்து வைக்கும் அழகினைத் தண்ணுமைக் குழுவினர் கொண்டாடினர். அவள் பந்தாடிய திறம் கண்டு அனைவரும் பாராட்டினர். பந்துகள் சூறைக் காற்றில் அகப்பட்டுச் சுழலும் இலைகள்போல ஏறுவனவும் இறங்குவனவுமாக இருந்தன. அவளுக்குக் கைகள் இரண்டேயானாலும் அவை தேர்ச் சக்கரம்போலச் சுழன்று சுழன்று அடித்தன. ஓடினாள்; நடந்தாள்; ஒசிந்தாள்; பாடினாள்; ஆடினாள். அவள் அணிந்திருந்த அணிகலன்களின் ஒலியும் பந்து பறந்த ஒலியும் கேட்டனவேயன்றிச் சுழன்று சுழன்றோடும் அவளைக் கண்ணால் காண முடியவில்லை. மண்ணில் இருக்கிறாளா, விண்ணில் இருக்கிறாளா என அறிய முடியாது, இது என்ன மாயமோ என்று நின்றோர் வியந்தனர். அவள் ஆடுகையில்,

சுழன்றன தாமம்; குழன்றது கூந்தல்
அழன்றது மேனி; அவிழ்ந்தது மேகலை;
எழுந்தன குறுவியர்; இழிந்தது சாந்தம்;
ஓடின தடங்கண்; கூடின புருவம்;
அங்கையின் ஏற்றும், புறங்கையின் ஓட்டியும்
தங்குற வளைத்துத் தான்புரிந் தடித்தும்[20]

அவள் ஆடினாள். இடையிடையே ஆடையைத் திருத்திக் கொண்டாள்; முத்துப்போன்ற சிறிய வியர்வைத் துளிகளைத் துடைத்துக் கொண்டாள்; கையிற் பற்றிய பந்தினைச் சுற்றுகின்ற முறையை அவையோர்க்கு எடுத்துச் சொன்னாள்; மாலையையும் அடிமுதலாக முடியீருக அணிந்திருந்த அணிகலன்களையும் திருத்தினாள்.

கிடந்த பந்துகளை எண்ணிக் கொண்டும், மலர் மாலைகளைத் தொடுத்துக் கொண்டும், பந்தின் வரவினை நோக்கியும், தாளம் உண்டாகக் கைகளைத் தட்டியும், கம்பிதமான இசைகளைப் பாடியும், பந்துகளைச் சக்கரம்போலச் சுழல வீசியும், இடையிடையே தோழியரோடு பேசியும், பற்பல கதியில் பந்துகளைச் செலுத்தியும், 'எம் அரசி வெல்க, வாழ்க' என வாழ்த்தியும் மானனீகை எண்ணுயிரம் முறை அடித்தாள்.[21] இதை விவரிக்கும் பின்னுள்ள பெருங்கதை அடிகளைப் படிக்கும்போது மானனீகை இயங்கிய தோற்றம் மனக் கண்முன் எழாமல் இருக்க முடியாது.

இடையிடை இருகால் தெரிதர மடித்தும்
அரவணி அல்குல் துகில்நெறி திருத்தியும்
நித்திலக் குறுவியர் பத்தியில் துடைத்தும்
பற்றிய கந்துகம் சுற்றுமுறை உரைத்தும்
தொடையும் கண்ணியும் முறைமுறை இயற்றியும்
அடிமுதல் முடிவரை இழைபல திருத்தியும்
படிந்தவண்டு எழுப்பியும் கிடந்தபந்து எண்ணியும்

---

20. பெருங். 4 : 12 : 225 - 230
21. பெருங். 4 : 12 : 168 - 245

தேமலர்த் தொடையல் திறத்திறம் பிணைத்தும்
பந்துவரல் நோக்கியும் பாணிவர நொடித்தும்
சிம்புளித் தடித்தும் கம்பிதம் பாடியும்
ஆழியென உருட்டியும் தோழியொடு பேசியும்
சாரிபல ஓட்டியும் வாழியென வாழ்த்தியும்
அந்தளிர்க் கண்ணி அவந்திகை வெல்கெனப்
பைந்தொடி மாதர் பற்பல வகையால்
எண்ணு யிரங்கை ஏற்றினள்.[22]

சிந்தாமணியில் பந்தடி

கொங்குவேளின் இந்தப் பாடலடிகளில் ஈடுபட்ட திருத்தக்க தேவர் சிந்தாமணியில் விமலை பந்தடித்த செய்தியினை இதே போக்கில் எழுதியிருப்பதைக் காண லாம். ஐந்து பந்தெடுத்துக் கொண்டு அவள் விளையாடிய காட்சி அங்குத் தீட்டப்பட்டுள்ளது.

அவள் எழுப்பிய பந்துகள் ஒன்றன்பின் ஒன்றாய்ச் சென்று வந்தது மாலையைச் சூழ்ந்த வண்டுகள் போன்றி ருந்தன. முறை தவறிக் கீழே விழுந்து உருண்டோடிய பந்துடன் உடன்சென்று மீண்ட அவளுடைய அழகிய புருவமும் மீன்போலும் கண்களும் அவள் அழகுக்கு அழகு சேர்த்தன.

மாலைக்குள் சென்று மறைந்த பந்து அடுத்த கணம் அவள் கைக்கு வந்தது. கூந்தலின் பின்புறம் சென்று மறைந்த பந்து சுழன்று முகத்தெதிரே வந்தது. தலைக்கு மேலே சென்ற ஒன்று விரைந்து விரலிலே பட்டு மீண்டும் மேலே சென்றது.

இவ்விதமாக எட்டுத் திசையில் செலுத்தியும், இடை யில் மாலை தொடுத்தும், குங்குமம் அணிந்தும், படிப்படி யாக உயரும்படிப் பந்தினை அடித்தும், தன்னைச் சுற்றி

22. பெருங். 4 : 12 : 231 - 245

வட்டமாக வரும்படியாகப் பந்தினைத் தட்டியும், மயில்போல இயங்கியும் விமலை பந்தாடினாள். வண்டுகள் ஒலியெழுப்பிச் செல்வனபோலப் பந்துகள் வந்து சென்று வானிலே இயங்கின.

அங்கை யந்த லத்த கத்த ஐந்து பந்த மர்ந்தவை
மங்கை யாட மாலை சூழும் வண்டு போல வந்துடன்
பொங்கி மீதெ ழுந்து போய்ப்பி றழ்ந்து பாய்த லின்றியே
செங்க யற்கண் புருவந் தம்மு ளுருவஞ் செய்யத் திரியுமே.[23]

மாலை யுட்க ரந்த பந்து வந்து கைத்த லத்தவாம்
ஏல நாறி ருங்கு ழற்பு றத்த வாண்மு கத்தவாம்
நூலி னேர்நு சுப்பு நோவ வுச்சி மாலை யுள்ளவாம்
மேலெ ழுந்த மீநி லத்த விரல கைய வாகுமே.[24]

கொண்டு நீங்கல் கோதை வேய்தல் குங்கு மம்ம ணிந்துராய்
எண்டி சையும் ஏணி ஏற்றி லங்க நிற்றல் பத்தியின்
மண்டி லம்வ ரப்பு டைத்தன் மயிலிற் பொங்கி யின்னணம்
வண்டுந் தேனும் பாட மாதர் பந்து மைந்துற் றுடுமே.[25]

பந்தடிக்கும் தாளத்துடனேயே பாடல்கள் அமைந்திருப்பதைப் படித்துப் படித்து இன்புறலாம்.

23. சீவக. 1953
24. சீவக. 1954
25. சீவக. 1955

(எ) திருமணம்

பழந்தமிழர் மணவினையில் தீ வளர்த்தல், தீயினை வலம் வருதல் போன்ற வைதிகச் சடங்குகள் இடம் பெற வில்லை. சங்க கால இறுதியில் இத்தகு சடங்குகள் இடம் பெறத் தொடங்கின என்று தெரிகிறது. திருமணங்களில் அந்தணர் கலந்துகொண்டதும் மணமக்கள் தீயினை வலம் வந்ததும் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளன. பொய்கை யிடத்தே புதிதாக மலர்ந்த தாமரைப் பூவினை அன்னம் ஒன்று தன் அழகிய பேட்டுடன் சுற்றி வந்தது. அக் காட்சி திருமண நாளில் அந்தணர் வளர்த்த செந்தீயை மண மக்கள் வலம் வந்தது போன்றிருந்ததெனக் கலித் தொகை குறிப்பிடுகிறது.[1] சிலப்பதிகாரத்தில் கோவலனும், கண்ணகியும்,

> மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
> தீவலம் செய்வது[2]

காட்டப்படுகிறது. சடங்குகள் இன்னும் விரிவான முறை யில் பெருங்கதையில் கூறப்பட்டுள்ளன.

---

1. போதவிழ் பனிப்பொய்கைப் புதுவது தளைவிட்ட
தாதுசூழ் தாமரைத் தனிமலர்ப் புறஞ்சேர்பு
காதல்கொள் வதுவைநாள் கலிங்கத்துள் ஒடுங்கிய
மாதர்கொள் மானோக்கின் மடந்தைதன் துணையாக
ஓத்துடை அந்தணன் எரிவலஞ் செய்வான்போல்
ஆய்தூவி அன்னந்தன் அணிநடைப் பெடையொடு
மேதகத் திரிதரூஉம் மிகுபுனல் நல்லூர!

—கலி. 69 : 1 - 7

2. சிலப். 1 : 52 - 53

வாசவதத்தை திருமணம்

வாசவதத்தை உதயணன் திருமணத்தைக் கூறும் வகையில் திருமண நிகழ்ச்சிகளைக் கொங்குவேள் வரிசைப் படுத்திக் கூறுகிறார். அவரே,

வனப்புவீற் றிருந்த வாசவ தத்தை
வதுவைச் செல்வம் விதியிற் கூறுவென்[3]

என்கிறார்.

மணநாளை அறிவித்தல்

திருமணத்திற்கான நன்னாளைக் கணியர் கணித்துத் தந்தனர்.[4] அதனை வள்ளுவன் யானை மீதிருந்து முரசறைந்து,

வாசவ தத்தையொடு வதுவை கூடிக்
கோல நீள்மதிற் கொடிக்கோ சம்பி
மாலை மன்னவன் மணமகன் ஆகும்
காலை இதுவென[5]

நகரெங்கும் அறிவித்தான்.

நகரை அலங்கரித்தல்

நகர் அலங்கரிக்கப்பட்டது. வாயில் தோறும் தோரண கம்பங்கள் வானைத் தீண்டுமாறு நடப்பட்டு அவற்றில் பொன் மாலைகளும் முத்து மாலைகளும் ஒருங்கே வளைத்துக் கட்டப்பட்டன. இல்லங்கள் அழகுபடுத்தப்பட்டன.

---

3. பெருங். 2 : 2 : 8 - 9
4. அரும்பரி சாரத்துப் பெருங்கணி வகுத்த
நன்னாள் —பெருங். 2 : 2 : 24 - 25
5. பெருங். 2 : 2 : 49 - 52

மங்கலநீர் கொண்டு வருதல்

மணமக்களை நீராட்ட மங்கல நீர் கொண்டுவர வீடு தோறும் கன்னிப் பெண்கள் அழைக்கப்படுவர். பெற்ருேரை ஏறெடுத்து நோக்குதற்கும் நாணமுடைய கன்னிப் பெண்கள் பலரும் நீர் கொணரக் குழுமுவர். மங்கல நீர் ஒரு குறிப்பிட்ட குளம் அல்லது கிணற்றிலிருந்து எடுக்கப் படும். கன்னிப் பெண்கள் குடம் கொண்டு, உறவினர் சூழ, இசைக் கருவிகள் முழங்கக் குளம் நோக்கிச் செல் கையில் மகளிர் மங்கலப் பொருள்களை முடிமேல் தாங்கி முற்பட நடப்பர். நீரை நிறைத்து, குடத்தின் வாயினைத் தாமரைப் பூவினுல் மூடி, பூவுடன் கூடிய தாமரைக் கொடி யினுல் சுமையடை (சும்மாடு) அமைத்து அதன்மீது குடத்தை வைத்துச் சுமந்து வருவர். சான்ருேர் மண மகனையும் முதுபெண்டிர் மணமகளையும் நீராட்டுவர்.

உதயணன் வாசவதத்தை திருமணத்தில் இச் சடங்கு நடைபெற்றதைக் கொங்குவேள் விரிவாக வருணிக்கிருர். மங்கல நீர்க் குளம் சிறப்பு வாய்ந்தது; சுற்றிலும் யானை மருப்பினுலாய தூண்களை நட்டு அவற்றின் குறுக்கே இரும் புச் சட்டங்களைப் பொருத்திப் பாதுகாக்கப்பட்டது; நுழை வாயிலைக் காவல் வீரர் காத்து நின்றனர். அக் குளத்து நீரை மாசு படுத்துவோர் தண்டிக்கப்படுவர் என்பன போன்ற அச்சுறுத்தல் மொழிகளைத் தாங்கிய கழறுகால்கள் ஆங்காங்கே காணப்பட்டன. பறவைகள் எச்சம் முதலிய வற்றைக் கழித்து மாசு படுத்தக் கூடுமாதலால் அவை குளத்தின்மீது பறக்கவொட்டாமல் தடுக்கப்பட்டன.[6]

மங்கலநீர் கொண்டுவர ஐம்பெருங் குழு, எண் பேராயம், உறவினர், விருந்தினர் எனப் பலரும் நெருங் கிச் சென்றனர். ஆயிரத்தெட்டு யானைகளில் ஒவ்வொன் றின் மீதும் ஒரு கன்னிப் பெண் அமர்ந்து குடத்தைப் பிடித்-

---

6. பெருங். 2 : 5 : 38 - 45

துச் சென்றாள். முழவு, பல்லியம், முரசம், சங்கு முதலிய இசைக் கருவிகள் முழங்கின. வாள், வயிரத் தோட்டி, குடை, பொற் குடம், ஆல வட்டம், சங்கு, கண்ணாடி, விளக்கு, சாமரை, பொன் மீன், பொற் றவிசு, திருமகள் வடிவப் பாவை, முரசு, கொடி, ஆணைச் சக்கரம், ஓமாலிகை வகை ஆகிய மங்கலப் பொருள்களை மகளிர் முடிமேல் ஏந்தி முன்னே நடந்தனர்.[7]

நீர் சுமந்து வந்த யானைகள் பகை மன்னர் மறவருடைய குடர்களை மாலையாகச் சூட்டிக்கொள்ளும் மருப்பையுடையன; பகைவர் தம்மேலே கொடிய படைகளை எறிந்த போதும் பின்னிடாத வீரமுடையன; பாகரே ஏவினாலும் முதியோர், பெண்டிர், துறவோர், சிறுவர் ஆகிய நால்வகையோரையும் இன்னல் செய்ய உடன்படாதன.[8] இத்தகு பெருமிதம் கொண்ட யானைகளின் மீது கொண்டு வந்த மங்கல நீரினால் உதயணனும் வாசவதத்தையும் நீராட்டப்பட்டனர்.

முழுத்தம் (முகூர்த்தம்) அறிந்து கூறல்

இங்ஙனமாகத் திருமணம் பற்றிய ஆரவாரம் எங்கும் எழுந்தது. கணியன் நாள் கோள் முதலியவற்றை விழிப்புடன் ஆராய்ந்து உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் உயிர் ஒன்று என்னும் உரிமையைத் தருகின்ற திருமண வேள்வி வேட்டற்கேற்ற நல்ல முழுத்தத்தை அறிந்து அறிவித்தான்.

7. பெருங். 2 : 5 : 14 - 35

8. மாற்றுத்தொழில் மன்னர் மயங்கிய ஞாட்பினுள்
கூற்றுத்தொழில் இளையர் குடர்சூடு மருப்பின;
வெம்படை மிகப்பலர் மெய்ம்மிசை எறியினும்
தம்படைக் கொல்காப் பண்புடன் பயிற்றி,
மூத்தோர் பெண்டிர் நீத்தோர் மகாஅரென
நாற்பா லோரையும் நூற்பாற் செய்தொழிற்
பாகர் வேண்டினும் பையுள் செய்யா
வேக உள்ளத்து வேழம் —பெருங். 2 : 2 : 188 - 195

இடிஉறழ் முரசின் ஏயர்பெரு மகற்கும்
பிடிமகிழ் யானைப் பிரச்சோ தனன்மகள்
வடிமலர்த் தடக்கை வாசவ தத்தைக்கும்
ஓருயிர்க் கிழமை ஓரை அளக்கும்
பேரிய லாளர்'

பொழுதறிந்து சொன்னதாகக் கொங்குவேள் குறிப்பிடு கிறார். ஈருயிர்கள் ஒன்றுபட்டு ஓருயிராக விளங்குகின்ற தன்மையைத் தருவது திருமணம் என்பதை 'ஓருயிர்க் கிழமை' என்ற சொற்கள் புலப்படுத்துகின்றன.

வேள்வித் தீ

வேதத்தைப் பயின்றவனும் தூயவனுமாகிய பார்ப்பனன் திருமணப் பந்தரிடத்தே நல்லிலக்கணம் அமைந்த இடத்தை ஆராய்ந்தறிந்து அங்கு வெள்ளிய மணலைப் பரப்பி, முக்குழி அமைத்து, அவற்றில் சமிதைகளையிட்டு அவியாத வேள்வித் தீயை வளர்த்தான்.[10]

நிறைகுடம் வைத்தல்

பந்தரில் இருந்த நாற்பத்தைந்து கால்களில் ஒவ்வொன்றிலும் ஒரு தெய்வம் நிலைபெற்றதாகக் கருதி, அக்கால்கள் தோறும் கூல முளைகளையுடைய நிறை குடங்களை அழகுற அமைத்தனர்.[11]

அப் பந்தரகத்தே நெய்யொடு கலந்த சிற்றுண்டிகளையும் அறுசுவை அடிசிலையும் அந்தணர் பலரும் பரவ இருந்து உண்டனர். எஞ்சிய உணவுப் பொருள்கள் ஒரு பக்கத்தில் குவிந்து கிடந்தன.[12]

---

9. பெருங். 2 : 3 : 2 - 6
10. ,, 2 : 3 : 9 - 16
11. ,, 2 : 3 : 17 - 20
12. ,, 2 : 3 : 21 - 26

அம்மி, அருந்ததி வாழ்த்து

பந்தரின் கீழ்த்திசை மூலையில் அம்மி இடப்பட்டது. அங்கே மேடையின்மேல் அரசாணி இருந்தது. பார்ப்பன முதுமகன் அரசாணி முன்னர் வணங்கினான். ஆவிரை, மலர் முதலியவற்றை இடையிடையே வைத்துத் தொடுத்த மாலையினைத் தூக்கி அருந்ததியையும், வசிட்ட முனிவனை யும் பொருந்தும் மொழிகளாலே வாழ்த்தினான்.[13] அந்தணர் பலரும் மணமக்களைப் புறநிலை வாழ்த்தாக,

> வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
> பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
> பொலிமின்[14]

என வாழ்த்தினர்.

தெய்வங்கட்கு உணவுப் பலி

பால் உலையில் வெந்த வெண் சோறு, தேன் உலையில் வெந்த தேன் சோறு, புளி யன்னம், கருப்பஞ் சாற்றில் சமைத்த இன்னடிசில், நெய்ப் பொங்கல் முதலியவற்றைப் பொன், வெள்ளி, மணி, செம்பு ஆகியவைகளாலான அகல்களில் நிறைத்துத் தெய்வங்கட்கு உணவுப் பலி கொடுத்தனர்.[15]

தெய்வங்களை வழிபடுதல்

மணப் பொருள்களையும் வெற்றிலையையும் வலப் பக்கத்தே வைத்து, சந்தனத்துடன் மஞ்சளையும் தடவி, இரும்பாற் செய்த அகலிடத்தே நிறைக்கப்பட்ட நெருப்பு நிறைகளைச் சுற்றி நறும்புகை கொடுத்து, ''தேவீர்! நீவிர் மலையிடத்திருந்தாலும், மண்ணிடத்திருந்தாலும், விண்ணி டத்திருந்தாலும் இங்கு வந்து இந்தப் படையலைப் பெற்று

---

13. பெருங். 2 : 3 : 27 – 35
14. தொல். செய்யு. 106
15. பெருங். 2 : 3 : 38 - 45

மணமக்களுக்கு மங்கலத்தைக் கொடுக்க வேண்டும்" என விண்ணவரை வேண்டினர்.[16]

பெண்கள் வாழ்த்துதல்

முதுபெண்டிர் பந்தர்க் கால்களை வலம் வந்து உளுந்து, நெல், உப்பு, மலர், வெற்றிலைச் சுருள், சந்தனம் ஆகிய மங்கலப் பொருள்களைத் தமது அங்கையில் அடக்கி, விரல் களை மொட்டுப்போல் குவித்து, கையினுள்ளிருந்தவற்றைச் சிறிது சிறிதாகத் தூவி, 'எல்லோரும் இதுபோல ஏழு முறை செய்யுங்கள்' என்று வணங்கிக் காட்டினர். கன்னி மக ளிரும் அவ்வாறே செய்தனர்.[17]

மணமக்களை அருகருகமர்த்தல்

பின்னர், தோழியர் மணமகளை அழைத்துவந்து மண மகன்பால் இருக்கச் செய்தனர்.[18]

மணச் சடங்கு

மணவறைக்குப் பக்கத்தில் மணையின் மேலிருந்த பார்ப் பன முதுமகன் கீழ்த் திசையை நோக்கிச் சமிதைத் தொழிலை நிறைவுடன் செய்தான். மந்திர வழிப்படி அகப்பையிற்ரேய்த்த பசு நெய்யினை வேள்வித் தீயில் பெய்து, 'போகமும் கற்பும் ஒருங்கே கூடி நிலைநிற்பன வாக' என்று அச் சடங்கினது குறிப்புப் பொருளைக் கூறி ஞன். பிறகு உதயணன் கையாலே வாசவதத்தையின் அடியைப் பற்றுவித்து, அதைத் தூக்கி அம்மியின் மேல் வைக்கச் செய்தான். மணமக்களின் கைகளிலே மங்கலப் பொரியினைக் கொடுத்து வேள்வித் தீ பொலிவுறும்படி அதைப் பெய்விக்கச் செய்தான்.[19]

---

16. பெருங். 2 : 3 : 46 - 56
17. ,, 2 : 3 : 57 - 68
18. ,, 2 : 3 : 69 - 77
19. ,, 2 : 3 : 78 - 90

அந்தணன் வாழ்த்துதல்

பின்னர் அப் பார்ப்பன முதுமகன்,

நன்னிலை உலகினுள் நாவல் போலவும்
பொன்னணி நெடுமலை போலவும் பொழில்வயின்
மன்னுக இவரென[20]

மணமக்களை வாழ்த்தித் திருமணச் சடங்குகளை முறை பிறழாமல் செய்தனன்.

மைத்துன முறைமை கொண்டாடல்

அடுத்து, மணமகளின் உடன் பிறந்த ஆடவருடன் மணமகன் மைத்துன முறை கொண்டாடும் சடங்கு நடைபெறுவது வழக்கம். மணமகனும் மைத்துனரும் ஒருவர் தோளில் கிடக்கும் மாலையை எடுத்து மற்றவர் தோளில் அணிவித்து உறவு பூண்பர்.

(நீர்த்) தாரை வார்த்தல்

அதையடுத்து உறவினர் சூழ்ந்து நிற்க, மணமகளின் பெற்றோர் தீ முன் நின்று நீர் வார்த்து அவளை மணமகனிடம் ஒப்படைப்பர். மைத்துன முறைமை கொண்டாடலும் தாரை வார்த்தலும் உதயணன்-வாசவதத்தை திருமணத்தில் இடம் பெறவில்லை.

தீயை வலம் வருதல்

பின்னர் மணமகன் மணமகள் கையைப் பற்றித் தீயினை வலம் வருதல் முறை. உதயணன் வாசவதத்தையின் கையைப் பற்றித் தீயினை வலம் வந்தபோது அவள் தடுமாறி மெதுவாக நடந்தாள். அது, பிறந்தகத்து உறவினர் நிறைந்திருக்க, உடன் பிறந்தாராகிய பாலகுமரர்

---

20. பெருங். 2 : 3 : 91-93

மைத்துன முறைமை கொண்டாட, தாயும் தந்தையும் தீ முன் நின்று நீர் வார்த்துக் கொடுக்கத் தன் மணம் நடைபெறாது வலிதாகப் பற்றி வந்து நடைபெற வேண்டியதாயிற்றே என்ற எண்ணத்தால் மனம் சுளித்தாள்போல இருந்தது எனக் கொங்குவேள் குறிப்பிடுகிறார்.[21]

மணமகன் மணமகளுக்குக் கற்பித்தல்

தீயினை வலம் வந்ததும் உதயணன் வாசவதத்தையை நோக்கி, "நீ குற்றமற்ற நன் மக்களைப் பெறுவாயாக; வறுமைக் காலம் வந்துற்றாலும் வேறுபடாத அன்பு கொண்டு விளங்குவாயாக" எனக் கூறித் தன் விரலால் நெஞ்சு முதலாக நீவினான். பின்னர்த் தென் திசையில் பரப்பியிருந்த தருப்பையின்மீது அவளை நடக்கச் செய்து திரும்ப மணத் தவிசிற்கு அழைத்து வந்து அமர்ந்தான். அந்தணர் அவர்களை வாழ்த்தினர்.[22]

---

21. பிறந்தஇற் பெருங்கிளை நிறைந்தொருங்கு ஈண்டப்
பால குமரர் தோள்புகன் றெடுப்ப
நாடும் நகரமும் கூடுதற் கருளி
யாயும் எந்தையும் தீமுன் நின்று
வாயிற் கூடுதல் வராதிவண் வந்தென
வலிபுணர் வதுவைக்குச் சுளியுநள் போல
நடத்தல் தேற்றா மடத்தகை மாதர்
—பெருங். 2 : 3 : 101 - 07

22. வளைபொலி முன்கை வருந்தப் பற்றித்
தளையவிழ் தாரோன் வலமுறை வந்து
மறுவில் காதன் மக்களைப் பெறுகென
முறைமையிற் பிழையாது முகிழ்விரல் பற்றித்
தகாஅக் காலந் தலைவரு மெனி................
பகாஅக் காதலொடு பத்திமை னும்
செஞ்சுடர் போன்ற அங்குலி நுழையா
வெஞ்சுடர் வீரன் நெஞ்சுமுதல் நீவித்
தென்மருங்கு மடுத்த தீர்த்தப் புன்மிசை
மென்மருங் கெழிலியை மெல்லென நடாஅய்
வதுவைத் தானம் பொதுவந் தொன்றி
அந்த ணாளர் ஆசிடை கூற
—பெருங். 2 : 3 : 108 - 119

அருந்ததி காட்டல்

பின்னர் வடகிழக்குத் திசையில் அமைக்கப்பட்டிருந்த விடைத் தோல் இருக்கையில் மணமக்கள் முறைப்படி அமர்ந்தனர். உதயணன் வானத்தின் வட பகுதியில் ஒளிமிக்கு விளங்கிய சிறந்த மீனாகிய அருந்ததியினை வாசவதத்தைக்குக் காட்டி, அவளை நெற்றிக்கு மேலாகக் கை குவிக்கச் செய்து, "யான் நின்னைப் போன்று மாசறு கற்புடையேன் ஆகும்படி அருள்வாயாக" என்று மும்முறை வணங்கச் செய்தான்.[23]

சதுர்த்தி நோன்பிருத்தல்

பின்னர், மணமக்கள் அவாவினை அடக்கி நான்கு நாட்கள் நோற்பதாகிய சதுர்த்தி நோன்பிருந்தனர்.[24] புது மணமககள், 'மூன்று இரவில் முயக்கமின்றி ஆன்றோர்க்கமைந்த வகையாற் பள்ளி செய்து ஒழுகி நான்காம் பகல் எல்லை முடிந்த காலத்துக்' கூடினர்.[25]

கட்டிலேற்றுதல்

நான்காம் நாள் இரவில் பள்ளிக் கட்டிலைச் சுற்றிலும் மலர் மாலைகளைத் தொங்கவிட்டு, காமப் பண்பினைத் தூண்டுதற்குக் காரணமான ஒப்பனைத் தொழில்களைச்

---

23. வடபான் மருங்கிற் சுடர்மீக் கூரிய
கற்புண்ட விழுமீன் காணக் காட்டிப்
பொற்றொடி நுதன்மிசைப் புனைவிரல் கூப்பி
மன்னிய உலகினுள் நின்னியல் பாக
என்வயின் அருளென மும்முறை இறைஞ்சுவித்து
—பெருங். 2 : 3 : 125 - 29

24. எதிர்த்த விரதமொடு இயல்பிற் பிழையாது
சதுர்த்தி யிருந்து கதிர்த்த காப்பொடு
மெய்ம்முதல் தரியாது வேண்டுங் கிரிகையிற்
கைம்முதற் கேண்மை கழுமிக் கழிந்தபின்
—பெருங். 2 : 3 : 130 - 33

25. தொல். கற். சூ. 4 : நச். உரை

செய்தனர். வாசவதத்தையை அவளுடைய தோழி கையால் தழீஇ அழைத்து வந்து அக் கட்டிலின்மேல் இருத்தினள். பின்னர் உதயணனை அழைத்து வந்து அவளருகே அமர்த்தினர்.[26]

உதயணனுடைய கையைப் பற்றி வாசவதத்தையின் உச்சி முதல் அடிவரை தீண்டச் செய்தனர். பின்னர் பொன் தட்டில் பெய்த மங்கலச் சோற்றினை இருவர்க்கும் முறைப்படி ஊட்டினர்.[27] இவ்வாறாக மணமக்களைப் பள்ளிக் கட்டிலில் சேர்த்தனர்.

உடல் மயிர் களைதல்

திருமணம் முடிந்த ஆறும் திங்கள் பந்தலிட்டு மண வறை அமைத்து அதில் மணமக்களை இருக்கச் செய்து, மகளிர் அவர்கட்கு உணவூட்டியபின், அந்தணர் ஈண்டி வாழ்த்தி மறை ஓத, நன்னல நாவிதன் மணமகன் முகத்தில் மயிர் களைந்தான் என்ற செய்தி, ''ஆறும் திங்கள் உடல் மயிர் களைந்தது'', ''மண்ணுநீராட்டியது'' என்ற இரு காதைகளில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.[28] அச் சடங்கின் பொருள் பற்றிய விளக்கம் எதுவும் தென்படவில்லை. பிற நூல் எதிலும் இச் சடங்கு பேசப்படவும் இல்லை.

நகர்வலம் வருதல்

திருமணத்தின் பின்னர் மணமக்கள் ஆலயம் சென்று இறைவனை வணங்கி நகரை வலம் வருவது முறையாக இருந்தது.[29]

---

26. பெருங். 2 : 3 : 134 - 157
27. தகைமலர்த் தாரோன் தடக்கை பற்றியவள்
 முகைமலர்க் கோதை முடிமுதல் தீட்டிச்
 செபொற் றலம் மலிரப் பெய்த
 மங்கல வயினி மரபுளி யுறீஇ
 —பெருங். 2 : 3 : 158 - 61
28. பெருங். 2 : 4 & 5 காதைகள்
29. பெருங். 2 : 6 & 7 காதைகள்

களவு மணம்

பண்டை நாட்களில் தலைவன் தலைவியர் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டு விரும்பி, களவொழுக்கம் மேற்கொண்டு ஒழுகினர். தலைவன் வீட்டார் தலைவி வீட்டிற்கு வந்து பெண்கேட்டு மணம் நடைபெற்றது. களவு வெளிப்பட்டபோது பெண் வீட்டார் கிளர்ந்தெழுவதும் உண்டு; ஆயினும் இவ்வாறு நிகழ்வது இயற்கை என்பதை உணர்ந்து மனம் மாறித் திருமணத்திற்கு ஒருப்படுவர். இதனை,

எனவாங்கு,
அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்;
அவரும், தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்து
ஒருபகல் எல்லாம் உருத்தெழுந்து ஆறி
இருவர்கட் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை[30]

என்று கலித்தொகை குறிப்பிடும்.

காதலர் களவொழுக்கத்தில் ஈடுபட்ட போதிலும் பெற்றோர் இசைவைப் பெற்றுத் திருமணம் செய்துகொள்வதே வழக்கமாயிருந்தது. "உன் கையை நுமர் பற்றித் தரும் நாடறி நன் மணம் விரைவில் முடிந்துவிடும்; கவலற்க" என்று தலைவன் தலைவியிடம் கூறுவதைக் குறிஞ்சிப்பாட்டில் காண்கிறோம்.[31]

தலைவி வீட்டார் திருமணத்திற்கு இசையார் என்ற நிலை தோன்றின் தலைவி தலைவனுடன் உடன்போக்கிற்

30. கலி. 39 : 19 - 25

31. நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மணம் அயர்கஞ் சின்னாள்
கலங்கல் ஓம்புமின் இலங்கிழை யீரென
ஈர நன்மொழி தீரக் கூறி —குறிஞ்சி. 231 - 34

சென்று தலைவன் வீட்டிலோ அல்லது வேறு இடத்திலோ மணம் செய்து கொள்வதுமுண்டு.

பொருத்தம்

இத் திருமணம் சாதி, குலப் பொருத்தம் பார்த்தோ அல்லது நட்சத்திரப் பொருத்தம் பார்த்தோ நடைபெற்ற தன்று. முன்பின் அறியாதவராயினும் ஒத்த நிலையிலிருந்த இருவரே ஒருவரை ஒருவர் விரும்புவர்.

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருஎன
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே[32]

எனத் தொல்காப்பியர் அவர்கட்கிடையே யிருந்த ஒப்புமைகளைத் தொகுத்து உரைத்துள்ளார்.

சங்ககாலத் திருமண முறை

மணமகனுடைய பெற்றோர் தம் சுற்றஞ்சூழ மணமகள் வீடு சென்று பெண் கேட்பர். அவர்கள் இசைவு தந்ததும் விருந்துண்டு மணவினை நாளைக் குறித்துக்கொண்டு மீள்வர். பின் உறவினர்க்கும் நட்பினர்க்கும் மணநாளை அறிவிப்பர். திருமணம் பெண் வீட்டில் நடைபெறும்.

மணநாளன்று மணவீடு நன்கு அணி செய்யப்படும். வாயிலிற் பந்தலிட்டு, முற்றத்தில் மணல் பரப்பி, பந்தரில் மாலை நாற்றி, வீட்டினில் விளக்கேற்றி ஒளியூட்டப்படும். உழுத்தங் களியும் பெருஞ்சோறும் விருந்தினர்க்கு வழங்குவதற்கு ஆயத்தம் செய்து வைக்கப்படும்.

---

32. தொல். பொருள். மெய்ப். 25

விடியற் காலை பல்லியம் முழங்க இல்லுறை தெய்வத்தை எல்லாரும் வழிபடுவர். செம்மைசால் முதுபெண்டிர் பூவும் நெல்லும் கலந்த நீர் நிறைந்த குடங்களைத் தலைமீது தாங்கி வருவர். மணமகளை மணையிலிருத்தி மக்களைப் பெற்ற வாழ்வரசிகள் நால்வர், முதியோர் சுமந்து வந்த நீரை வாங்கி, ''நங்காய்! கற்பினின்றும் வழுவாது கணவனுக்கேற்ற மனைவியாக விளங்குவாயாக'' என வாழ்த்தி நீராட்டுவர்.

நீராட்டிய பின் மணமகளுக்கு ஆடை அணிகலன் அணிவிப்பர். வாகை இலையையும் அறுகம் புல்லையும் சேர்த்துக் கட்டிய வெண்ணூலைக் காப்பாக அவள் கையில் கட்டுவர்.

பின்னர், சுற்றத்தார் அவளை மணப் பந்தருக்கு அழைத்துவந்து, ''பெருமைமிகு வீட்டிற்குரிய தலைவியாகுவாய்'' என்று கூறித் தலைவனிடம் ஒப்படைப்பர். அன்றிரவே தலைவனும் தலைவியும் ஓரில்லில் தங்கி இன்புறச் செய்வர். இதுகொண்டு, மகட் பேசுதல்; நாள் குறித்தல்; மணவீட்டை அலங்கரித்தல்; பொழுது புலராக் காலையில் மணவினை தொடங்குதல்; முதுபெரும் பெண்டிர் மங்கல நீர் கொணர்தல்; வாழ்வரசியர் மணமகளை நீராட்டல்; மணமகளைச் சுற்றத்தார் மணமகனிடம் ஒப்படைத்தல்; இரவில் இருவரையும் ஓரில்லில் சேர்த்தல் ஆகிய நிகழ்ச்சிகளே திருமணத்தில் இடம்பெற்றன என அறிகிறோம்.[33]

சங்க காலத்துடன் ஒப்பீடு

சங்க இலக்கியங்களில் காணப்பட்ட மணச் சாயலோடு பல்வேறு புறத் தொடர்புகளின் தன்மையால் பிற்காலத் திருமணத்தில் புதுமுறைகள் புகுந்தன.

---

33. அகநா. 86 & 136

சங்க காலத்தில் களவு வாழ்க்கையின்றித் திருமணம் நடைபெற்றதில்லை. அதற்கேற்பவே உதயணன் வாசவு தத்தை இருவர் மணமும் களவு மணமாகவே அமைந்தது. பதுமாபதியும் உதயணனும் களவு வாழ்க்கையில் ஈடுபட்ட பின்னரே திருமணம் புரிந்தனர். மானனீகை உதயணன் திருமணமும் களவின் அடிப்படையிலானதே.

களவு வாழ்க்கையின்றிப் பெற்ருேர் பெண் கேட்டு மணம் முடிக்கும் நிலையும் பெருங்கதையில் பேசப்படுகிறது. உதயணன் மகன் நரவாணதத்தன் கணிகை மகள் மதன மஞ்சிகையின் அழகைக் கேள்வியுற்றுக் காதல் கொண்டான். அவன் காதலையறிந்த உதயணனும் வாசவதத்தையும் மதனமஞ்சிகையின் தாய் கலிங்கசேனையிடம் பெண் கேட்டு மகனுக்கு மணம் முடித்து வைத்தனர். மலர்ப் பொழிலில் உதயணன் மாலை தொடுத்துத் தந்தது முதற் கொண்டு விரிசிகை அவனையே நினைந்து காதல் கொண்டாள். அவளுடைய தந்தை தன் மகளின் காதல் நிலையைக் கூறி மணம் செய்து கொள்ளுமாறு வேண்ட, உதயணனும் அவளை மணந்தான். இவ்வாருகப் பெருங்கதையில் களவு மணமும், களவில்லா மணமும் கலந்து இடம் பெற்றிருப்பதைக் காண்கிருேம்.

பெண் கேட்டல் : சங்க இலக்கியங்களில் பெரும்பான்மை ஆண் வீட்டார் பெண் வீட்டிற்குச் செல்வதே காட்டப்படுகிறது. தலைமகன் தமராகிய,

தண்டுடைக் கையர் வெண்தலைச் சிதவலர்[34]

பெண் வீடு வந்து மணம் பேசுவதைக் குறுந்தொகை குறிக்கிறது. ஆண் வீட்டார் பெண்வீடு சென்று கேட்டல், பெண் வீட்டார் ஆண்வீடு சென்று கேட்டல் ஆகிய இரு நிலைகளும் பெருங்கதையில் தென்படுகின்றன. உதயணன் தன் மகனுக்கு மணம்பேசப் பெண் வீட்டிற்கு ஆள் அனுப்

34. குறுந். 146 : 3

பினுன். தருசகன் தன் தங்கையையும், விரிசிகையின் தந்தை தன் மகளையும் மணக்குமாறு உதயணனைக் கேட்பது பெண் வீட்டார் மணம் பேசுதற்குச் சான்றுகளாம்

சீர் கொடுத்தல் : பெண்ணைப் பெற்றவர்க்கு மணமகன் வீட்டார் பொருள் கொடுத்தல் சங்க கால முறை. தன் பெற்ருேர் மணத்திற்கு உடன்படுவரோ, படாரோ? அவர் மதிக்குமளவு தலைவன் பெரும் பொருள் வழங்கி மணம் பேச வருவானே, மாட்டானே? எனத் தலைவி ஒருத்தி வருந்தியிருந்தாள். அவளிடம் தோழி வந்து, தலைவியின் சுற்றம் மகிழுமாறு தன் நாட்டினை விலையாகத் தந்து தலைவன் மணம் பேசி முடித்துள்ள செய்தியைக் கூறி அவளை மகிழ்வித்தாள் என ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.[35]

நலம் மிகுந்த சிறந்த பொருள்களையெல்லாம் கலம் நிறையக் கொணர்ந்து விலையாகக் கொடுத்தாலும் தலைவி பெறுதற்கு அரியவள் எனத் தலைவன் நெஞ்சில் நினைவதாக அகநானூறு அறிவிக்கிறது.[36]

பெண்ணுக்கு விலையாகப் பெரும் பொருள் தருவது பெருங்கதையிலும் காணப்படுகிறது. மதனமஞ்சிகையைத் தன் மகன் நரவாணதத்தனுக்கு மனைவியாகக் கொள்வதற்கு, உதயணன் ஒரு கோடி சிறந்த பொன்னைச் சீர் வரிசையாக அனுப்பிவைத்தான்.[37]

நன்னுள் குறித்தல் : திருமணத்திற்கென நன்னுள் குறிக்கப்பட்டது. புள் நிமித்தம் இனிதாகக் கூட, திங்களை

---

35. எக்கர் ஞாழல் மலரின் மகளிர்
ஒண்டழை யயருந் துறைவன்
தண்டழை விலையென நல்கினன் நாடே —ஐங்குறு. 147

36. நலஞ்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்
பெறலருங் குரையள். —அகநா. 280 : 5 - 6

37. குறப்பெருந் தேவியாக் கோடி விழுநிதி
சிறப்பின்விட் டிருந்து —பெருங். 5 : 8 : 149 - 50

உரோகிணி கூடிய குற்றமற்ற நன்னாளில் திருமணம் நடந்ததை அகநானூற்றிலிருந்து அறிகிறோம்.[38] இருள் புலராக் காலை நேரம் திருமணத்திற்கு ஏற்ற நேரமாகக் கொள்ளப் பட்டது. நன்னாளைக் குறித்துத் தரக் கணியர்கள் இருந்ததனையும் அவர்களின் பெருமித நிலையையும் பெருங்கதை விரிவாகக் கூறுகிறது.

திருமணம் அறிவித்தல் : மணநாள் நிச்சயிக்கப்பட்டதும் அதனைச் சுற்றத்தார்க்கும் மற்றவர்க்கும் உடனே அறிவிப்பர்.[39]

இருபெருங் குரவரும் ஒருபெரு நாளால்
மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி
யானை எருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்[40]

எனச் சிலப்பதிகாரமும் இதனைக் குறிப்பிடும். வள்ளுவ முதுமகன், 'நன்னாள் இதுவெனப் பன்னா டறிய' யானைமீதிருந்து முரசறைந்து அறிவித்ததைப் பெருங்கதையில் காண்கிறோம்.

மணப் பந்தல் : மணப் பந்தல் அமைத்து அங்கு மணல் பரப்பி அழகு செய்தனர் என்பதை,

தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி,[41]
மழைபட் டன்ன மணல்மலி பந்தர்[42]

என்று சங்கப்பாடல் அடிகள் அறிவிக்கின்றன.

38. புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
சகட மண்டிய துகள்தீர் கூட்டம
—அகநா. 136 : 3-5

39. பொம்மல் ஓதி எம்மகள் மணன்என
வதுவை அயர்ந்தனர் நமரே —அகநா. 221 : 3-4

40. சிலப். 1 : 41-44

41. அகநா. 86 : 3

42. அகநா. 136 : 16

மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ் [43]

கோவலன் கண்ணகி திருமணம் நடைபெற்றதைச் சிலப்பதிகாரம் விவரிக்கிறது. மண வீடு மட்டுமன்றிப் பிற இடங்களும் அலங்கரிக்கப்பட்ட செய்தியைப் பெருங்கதையில் அறிகிறோம்.

நீராட்டு : திருமணத்திற்கு முந்தியதாக மணமகள் நீராட்டு நடைபெற்றது. மங்கல நீரை முது பெண்டிர் கொண்டு வந்ததாக அகநானூறு கூறுகிறது. பெருங்கதையில் மங்கல நீர் சுமந்து வந்தவர் கன்னிப் பெண்டிர் என்ற மாற்றத்தைக் காண்கிறோம்.

அருந்ததி காட்டல் : சங்கப் பாடல்களில் கற்பின் திண்மையையும் பெருமையையும் எடுத்துக் காட்ட வடமீனை உவமை காட்டிக் கூறும் வழக்கம் இருந்தது.[44] சிலம்பில் கண்ணகி,

தீதிலா வடமீனின் திறமிவள் திறம்[45]

என்று பேசப்படுகிறாள். திருமணத்தின்போது அருந்ததியைக் காட்டி மணமகளை வணங்கச் செய்வது சங்க காலத்தில் காணப்படவில்லை; அம்மி மிதித்து அருந்ததி காட்டுவதனைச் சொல்லும் முதல் இலக்கியம் பெருங்கதையாகவே தென்படுகிறது.

தாரை வார்க்கும் வழக்கமும் சங்க காலத்தில் இல்லை; பெருங்கதையே குறிப்பிடுகிறது.

வாழ்த்து : சங்க காலத்தில் மணமகளைப் புதல்வரைப் பெற்ற மகளிர், 'இனிய இல்லக் கிழத்தியாக விளங்குக' என்று நீரும் மலரும் சொரிந்து வாழ்த்தினர். சிலம்பிலும் மகளிர்,

---

43. சிலப். 1 : 48 - 49
44. வடமீன் புரையும் கற்பின் மடமொழி
அரிவை —புறநா. 122 : 8 - 9
45. சிலப். 1 : 27

காதலற் பிரியாமல் கவுக்கை ஞெகிழாமல்
தீதறுக [46]

என வாழ்த்துவதைக் காண்கிறோம். இதுவும் மணமகளை வாழ்த்திய வாழ்த்தாகவே தென்படுகிறது. பெருங்கதையில் மணமகள், மணமகன் இருவரையுமே வாழ்த்தும் நிலை மலர்கிறது.

பெற்றோர் அறிவுரை : மகளை மருகனிடம் ஒப்படைக்கும் போது பெற்றோர் கூற்றாகச் சங்க இலக்கியத்தில் ஏதும் காட்டப்படவில்லை. பெருங்கதையில் விரிசிகையின் பெற்றோர் அவளை உதயணனிடம் அனுப்புங்கால், ''இனி உனக்குத் தாயும் தந்தையும் சுற்றமும் கணவனே'' எனச் சொல்லி விடுத்தனர். [47]

விருந்து : திருமணத்தில் உளுந்துக் களியும் பெருஞ் சோறும் விருந்தாகப் படைக்கப்பட்டன. [48] ஊன் உணவு வழங்கப்பட்டதாகவும் தெரிகிறது. [49] அகநானூற்றில் திருமணம் பற்றி வருகின்ற இரண்டு பாடல்களிலும் விருந்து பற்றியே முதலில் பேசப்படுவது கொண்டு அதன் முக்கியத்துவத்தை நன்கு உணரலாம்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போரினை வென்ற மகிழ்ச்சிப் பெருக்கால் போர்க் களத்தில் நிரம்பச் சோறு சமைத்து வீரர்க்கும் பிறர்க்கும் வரையாது படைத்துக் கள வேள்வி செய்ததானது திருமண வீட்டில்

---

46. சிலப். 1 : 61 - 62
47. அடுத்த காதற் றுயர் தவ்வையர்
வடுத்தீர் தந்தை வத்தவர் கோஎன
—பெருங். 4 : 16 : 46 - 47
48. உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப —அகநா. 86 : 1 - 2
49. மைப்பறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி
அகநா. 136 : 1 - 2

வந்தோர்க்கெல்லாம் சோறுபடைத்த தன்மையைப் போன்றிருந்ததெனப் புறநானூற்றுப் பாடலொன்று புலப்படுத்தும்.[50] இவற்றால் திருமணம் காண வந்தவர்க்குச் சோறு படைக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. பெருங்கதையும் திருமண விருந்தைச் சிறப்பாகப் பேசுகிறது.

ஐஇய வாசஆன் நெய்யொடு கலந்த
ஐவகை உணவொடு குய்வளங் கொளீஇ
நறிய வாகிய அறுசுவை அடிசில் [51]

வந்தோர்க்கெல்லாம் படைக்கப்பட்டது. கடித்தல், பருகுதல், விழுங்குதல், நக்குதல், எடுத்துச் சுவைத்தல் என ஐவகை உணவுகளும் அறுசுவையோடு கூடியனவாய் இருந்த விருந்து பெரு விருந்தல்லவா?

தாலி கட்டுதல் : சில சொற்றொடர்களைக் கொண்டு பெண்கள் தாலி யணிந்திருந்தனர் என்று அறிய முடிகிறதே யல்லாமல் திருமணத்தில் தாலி கட்டியதாகச் சங்கச் செய்யுள்களிலோ, சிலப்பதிகாரத்திலோ கூற்றேதும் இல்லை. பெருங்கதையிலும் அந் நிலையே.

சிலம்புகழி நோன்பு : திருமணத்தின்போது மணமகளின் காலிலிருந்த சிலம்பினை நீக்குதல் ஒரு சடங்காகச் சங்க காலத்தில் இருந்ததாக அறிகிறோம்.[52] பிற்காலத் திருமணங்களில் அதுபற்றிய குறிப்பு எதுவும் தென்படவில்லை.

சங்க காலத் திருமண நிகழ்ச்சிகள் இயற்கையோடு இயைந்தவை. சிலப்பதிகாரத் திருமணத்தில் வேள்வித் தீயை வலம் வரும் புதிய செய்தி இடம் பெறுகிறது. பெருங்கதையில் அவற்றுடன் அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல் போன்ற சடங்குகளும் இடம்பெற்று விட்டதை அறிகிறோம்.

5'. புறநா. 372 : 9 - 12
51. பெருங். 2 : 3 : 22 - 24
52. ஐங்குறு. 399

கொங்கு நாட்டுத் திருமணத்துடன் ஒப்பீடு

கொங்குவேள் கொங்கு வேளாளர் மரபில் தோன்றிய வர் ஆதலின் அவர் விவரிக்கும் திருமணத்தில் அவர் பிறந்த இனத்தின் திருமண நிகழ்ச்சிகள் இடம் பெறுவது இயல்பே. கொங்கு வேளாளர் திருமணத்தில் அந்தணர் இல்லை; தீ வளர்த்தல், தீயை வலம் வருதல் இல்லை. மண மக்கள் இனத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் திரு மணத்தை முன்னின்று நடத்தி வைப்பார். மண நிகழ் வின் முடிவில் இன்றும் கொங்கு நாட்டில் வேளாளர் திரு மணங்களில் மங்கல வாழ்த்துப் பாடல் பாடப்படுகின்றது. அப் பாடலில் திருமண நிகழ்முறை வரிசையாகக் கூறப்படு கிறது. இவ் வாழ்த்தில் கூறப்படும் செய்திகள் கொங்கு வேள் கூறியுள்ள நிகழ்ச்சிகளோடு பெருமளவில் பொருந்தி வருவதைக் காணலாம். மங்கல வாழ்த்தின் முக்கியமான பகுதிகள் மட்டும் இங்கே தரப்படுகின்றன.[53]

பெண் கேட்டல் : மணமகன் வீட்டிலிருந்து மணமகள் வீட்டுக்கு,

> உரியவர் வந்திருந்து உன்மகளுக் கென்று சொல்லிப்
> பிரியமுடன் வெற்றிலை மடிதனில் கட்டி
> நாளது குறித்து நல்விருந் துண்டு

திரும்பி வருவர்.

நாள் அறிவித்தல் : உடனே,

> கற்றோர் புலவர் கணக்கரை அழைத்து
> தேன்பலை யோலை சிறக்கவே வாரி
> திசைதிசை யெங்கும் தென்னவரை அனுப்பிக்
> கலியாண நாளைக் கணித்து

அறிவிப்பர்.

---

53. மங்கல வாழ்த்து பாடல் வடிவில் உள்ளது. பாட பேதங் கள் உண்டு இங்கு, திரு எஸ். ஏ. அர் சின்னசாமி கவுண் டர் எழுதியுள்ள கொங்குவேளாளர் புராண வரலாறு என்ற நூலிலுள்ள பாடம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பக்கம், 303 – 313

மணமகனை நீராட்டல் : மணமகன் தன் வீட்டிலிருந்து மணமகள் வீடு புறப்படும் வேளையில்,

குணம் பொருந்திய குடிமகனை அழைத்து
போன மச்சம் முகமது துடைத்து
எழிலான கூந்தலுக்கு எண்ணெய்தனை இட்டு

நீராட்டுவர்.

மணமகன் மணமகள் வீட்டுக்குப் புறப்படுதல் :

மதகரி அலங்கரித்து மன்னவர்கள் ஏறிவர
தந்தை யானவர் தண்டிகை மேல்வர
தமையன் ஆனவர் ஆனையின் மேல்வர
நாடியே வந்தவர் நட்சத்திரம் போலவர
தேடியே வந்தவர் தேரரசர் போலவர
பேரணி முழங்க பெரியநகா ரடிக்க
எக்காளம் சின்னம் இடிமுரசு பெரியமேளம்
கைத்தாள பம்பை கனகதப்பட்டை முழங்க
துத்தாரி நாதசுரம் சோடிகொம்பு தானூத
சேகண்டி சங்கு திமிர்தாள பம்பையுமே
வலம்புரிச் சங்கு வகையாக ஊதிவர,

மணமகன் குதிரை மீதமர்ந்து மணமகள் வீடு நோக்கிப் புறப்படுவான்.

பெண் வீட்டார் வரவேற்றல் :

பெண்ணு வீட்டார்கள் பிரியமுடன் எதிர்வந்து
மன்னவர் தங்களை வாருங்கள் என்றழைத்து
வெகுசனத் துடனே விடுதியில்

விட்டு வருவர்.

மணமகளுக்குச் சீர் அனுப்புதல் : விடுதி வீட்டில் இருக்கும் மணமகன் வீட்டார் பெண்ணுக்குச் சீர் அனுப்புவர்.

பெட்டிகளும் பேழைகளும் பொன்னும் சீப்புகளும்
பட்டுபபணி நகையும் பாாக்கக் கண்ணாடியும்
சத்துச் சரப்பணி மோகன மாலைகளும

திட்டமுள்ள மங்கையர்க்குத் திருப்பூட்டப் போருமென்று
அட்டதிக்கும் தானதிர அடியுமென்றார் பேரிகையை
அன்ன நடையாரும் அருமைய பெரியவரும்
பொன்வளையற் கையால் பேழைமுடி தான்சுமந்து
இன்னும் சிலபெண்கள் இவர்களைச் சூழ்ந்துவர
சென்று உட்புகுந்தார் திருப்பெண்ணாள் மாளிகையில்
நாட்டிலுள்ள சீர்சிறப்பு நாஙகள் கொண்டு வந்தோமென்று
கொணடுவந்த அணிகலனைக் கோதையர்க்கு முன் வைக்க

அவ்வாறு வைக்கப்பட்ட அணிகலன்களை எடுத்துக் கன்னிப் பெண்கள் மணமகளுக்குப் பூட்டி அலங்கரிப்பர்.

மணவறை : *அதன்பின்னர் மணவறை அலங்கரிக்கப் படும்.*

பன்னீ ராயிரம் பலபேர் வாசலிலே
நாற்கரசும் நாட்டி நல்ல முகூர்த்தமிட்டுப்
பேய்க்கரும்பை நாட்டி பிறைமணனும் தான்போட்டு
சாறும் கரகமும் சந்திரரும் சூரியரும்
அம்மி வலமாக அரசாணி முன்னாக
ஆயிரப் பெருந்திரி அதுவும வலமாக
சுத்தமுடன் கலம்விளக்கிச் சோறரிசி பால்பழமும்
பக்தியுடன் இத்தனையும் பாரித்தார் மணவறையில்
மணவறை அலங்கரித்து மணவாளனை இருத்தி
அழகுள்ள பெண்ணை அலங்கிருதம் மிகச்செய்து,

அழைத்து வந்து மணமகன் அருகே அமர்த்துவர்.

திருப்பூட்டுதல் : *பின்னர்,*

அருமைப் பெரியவர் அன்புடன் பூசைசெய்து
மாப்பிள்ளை பெண்ணை மணவறையில் எதிர்நிறுத்தி
கெட்டிமேளம் சங்கநாதம் கிடுகிடென்று சப்திக்க
மாணிக்கம்போல் மாங்கலயம வைடூரியம்போல் திருப்பூட்டி
ஆரம்தனை மாற்றி

மணமக்களை இருக்கையில் அமரச் செய்வார்.

மைத்துன முறைமை கொண்டாடுதல் : அப்பால்,

மணவறையில்
மாப்பிள்ளைக்கு மைத்துனரை வாவென்று தானழைத்து
கலம்பெரிய அரிசிதனில கைகோர்வை தானுமிட்டு

மைத்துனரை இணைத்து வைப்பர்.

தாரை வார்த்தல் : அதன் பிறகு,

கைக்குக் கட்டின கங்கணமும் தானவிழ்த்து
தங்களுக்குத் தங்கள் தாரைக்கோர் பொன்கொடுத்து
உரியதோர் பாடடன் இருவருட கைதனிலே
தண்ணீர் ஊற்றித் தாரையும் வார்த்த பின்பு
பிரியமுள்ள மணவறையைப் பின்னும் சுற்றிவந்து

மங்கல கலியாணம் வகையாக முடித்து வைக்கப்படும்.

உறவினர் பரிசு கொடுத்தல் : அதன்பின்,

சாப்பாடு போசனம் சந்தோஷமாய்ப் போட
உண்டுபசி யாறி உறன்முறையோர் எல்லோரும்

தாம் கொண்டுவந்த பரிசுகளைக் கொடுத்துச் செல்வர்.

மணமக்களுக்குப் பெண்வீட்டார் கொடுக்கும் வரிசை :

மாமன் கொடுக்கும் வரிசைதனைக் கேளீர்
துப்பட்டுச் சால்வை சோமன் உருமாலை
பஞ்சவர்ணக் கண்டாங்கி பவளநிறப பட்டுச்சேலை
அததியடி துத்திப்பட்டு ஆனையடிக் கண்டாங்கி
இந்திர வர்ணபபட்டு ஏகாந்த நீலவர்ணம்
முறுக்கு வளையலகளும முகமுள்ள கொலுசுகளும்
பதக்கம சரப்பணி பகட்டான காசுமாலை

கட்டிலும் மெத்தையும் காளாங்கி தலையணையும்
வட்டில் செம்பும் வழங்கும் சாமான்களும்
காளை வண்டியும் கன்றுடன் பால்பசுவும
குதிரையுடன் பல்லாக்கு குறையாத பல்பண்டம்
நிறையக் கொடுத்தார்கள் நேயத்தோர் தானறிய.

இத் திருமண நிகழ்ச்சியோடு கொங்குவேள் கூறும் வாசவதத்தை திருமணம் பல்லாற்றுனும் ஒத்திருப்பதைத் உணரலாம்.

மணமகளுக்கு அவள் பிறந்த வீட்டார் கொடுக்கும் பொருள்களாகக் கூறப்படுவது போன்றே பிரச்சோதனன் தன் மகள் வாசவதத்தைக்கும் மருமகன் உதயணனுக்கும் பொருள்கள் அனுப்பியதைப் ''பிரச்சோதனன் தூது விட்டது'' என்ற காதையில் காண்கிறோம்.[51]

கொங்குவேள் கூறியுள்ள மைத்துன முறை கொண்டாடுதல் இத் திருமண வாழ்த்தில் இடம் பெற்றுள்ளது. ஆருந் திங்கள் உடல் மயிர் களைதல் என்ற காதையில் உதயணனுக்கு மயிர் களைந்து எண்ணெயிட்டு நீராடியதாகக் கூறப்படும் செய்தி, மண நாளுக்கு முன்நாள் நடந்ததாக் இவ் வாழ்த்தில் காணப்படுகிறது.

கொங்கு நாட்டில் தான் வாழ்ந்து வந்த காலத்தில் இருந்த திருமண நிகழ்ச்சிகளோடு அந்தணரைக் கொண்டு வேள்வித் தீ வளர்த்தி மணமக்கள் அதனை வலம் வரும் நிகழ்ச்சியையும் இணைத்துக் கொங்குவேள் பாடியுள்ளார் என்று கொள்ளலாம்.

---

51. பெருங். 4 : 10 : 41 - 83

(ஏ) கற்பு

கற்பு இருபாலார்க்கும் பொதுவாக வேண்டும் என்று பாரதியார் பாடினாலும் பண்டு தொட்டு இன்று வரை அது பெண்டிர்க்கு மட்டுமே கூறப்பட்டு வருகிறது. கற்புக்குத் தரப்படுகின்ற அடைமொழிகள் அதன் சிறப்பைப் புலப் படுத்துகின்றன. கற்பு,

குற்றமற்றது	: மாசில் கற்பு (சிலப். 13 : 102) மறுவில் கற்பு (முருகு. 6) மறுவறு கற்பு (பரி. 5 : 46)
அறம் பொருந்தியது	: அறஞ்சால் கற்பு (பதிற். 31:24) ஆறிய கற்பு (பதிற். 16 : 10)
அடக்கம் மிக்கது	: அடங்கிய கற்பு (புறநா : 249:10)
மாட்சிமை நிறைந்தது	: ஆன்ற கற்பு (அகநா. 198 : 12)
பெருமை வாய்ந்தது	: பெருங் கற்பு (சிலப். 7:2:4)
வெறுப்பு நீங்கியது	: உவர் நீங்கு கற்பு (அகநா.136:19)
கலங்காதது	: கலங்காக் கற்பு (அகநா. 9:24)
கடவுள் தன்மை கொண்டது	: கடவுள் சான்ற கற்பு (புறநா. 198:3) கடவுட் கற்பு (குறுந். 252:4) அணங்குறு கற்பு (அகநா. 73:5)
கடவுளையும் ஆட்சி கொள்ளும் வல்லமை உடையது	: கடவுளும் ஆளும் கற்பு (பதிற். 65:9)
நாணத்தொடு பொருந்தியது	: நாணொடு மிடைந்த கற்பு (அகநா. 9:24)

மறத்தை நீக்கியது : மறங்கடிந்த அருங் கற்பு (புறநா. 161:13)
நன்றி அமைந்தது : நன்றி சான்ற கற்பு (நற். 330:10)
ஆற்றியிருக்கும் ஆற்றல்கொண்டது : முல்லை சான்ற கற்பு (நற். 142:10)
அருமையானது : அருமைசால் கற்பு (பெருங். 2:11 : 129)
பெறுதற்கரியது : பேறருங் கற்பு (பெருங். 2:14:37)
கடமை உணர்ந்தது : கடனறி கற்பு (பெருங். 2:4:23
பழிப்பில்லாதது : பழிப்பில் கற்பு (பெருங். 2:11:87)
குறைவில்லாதது : குன்றுக் கற்பு (பெருங். 2:11:47)
பேணப்படுவது : பேணிய கற்பு (சிலப். 16:87)
பெண்கட்குக் கடமையாயது : கற்புக் கடம் (பெருங். 3:21:8)
கணவன் என்ற ஒன்றையே பற்றி நிற்பது : ஒன்றுபுரி கற்பு (பெருங். 1:36:340)

இவ்வளவு சிறப்புடையதாகப் பேசப்படுகின்ற கற்பு என்பது என்ன? அது கண்ணினால் வெளிப்படக் காண முடியாது மன உணர்வினால் மட்டுமே அறியக்கூடிய ஒன்று. களவொழுக்கம் மேற்கொண்டிருந்த காதலர் முறைப்படி மணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துதலைக் கற்பு என்பார் தொல்காப்பியர்.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே[1]

"கணவனிற் சிறந்த தெய்வம் இல்லையெனவும் அவனை இவ்வாறு வழிபடுதல் வேண்டுமெனவும் தலைமகளுக்குப்

1. தொல். பொருள். கற். 1

பெற்றோர் கற்பித்தலானும், அந்தணர் சான்றோர் அருந் தவத்தோர் விருந்தினர் முதலியோர்பால் இன்னவாறு நடந்து கொள்ளுதல் வேண்டும் எனத் தலைமகன் தலைமக ளுக்குக் கற்பித்தலானும், நின் மனைவியை இவ்வாறு பாதுகாப்பாயாக எனத் தலைவனுக்கும் நின் கணவனுக்கு இவ்வாறு பணி செய்து ஒழுகுவாயாக எனத் தலைவிக்கும் சான்றோர் கற்பித்தலானும், அவ் வதுவைச் சடங்காகிய கரணமும் கற்பெனப் படுவதாயிற்று'' என்பார் நச்சினார்க் கினியர்.[2]

''திண்மை, நிறை என்ற சொற்கள் கற்பைக் குறிப் பன. திண்மை-மனோவலிமை. நிறை—நிறைந்த குணங் கள். காதலனுடன் இன்ப துன்பங்களிலே ஒன்றுபட்டுக் கலந்து வாழும் திண்மை—மனோ வலிமை-மன உறுதி பெண் களுக்கு வேண்டும். தங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதோடு தங்கள் காதலரைப் பிறர் பழிக்காதவாறு நடந்து கொள்ள வேண்டும். இதுவே சிறந்த குணம்-நிறை ஆகும். தமிழ்ப் பெண்டிரின் இத்தகைய திண்மை யும் நிறையுமே கற்பு எனப்படுகிறது.''[3]

இவ்வாறு கற்பு என்பதற்குப் பலபடியான விளக்கங் கள் தரப்படுகின்றனவே யன்றி, குறிப்பிட்ட ஓர் எல்லைக் குட்படுத்தி இதுதான் கற்பு என்று வரையறுத்துக் கூற முடிவதில்லை. பொதுவாக இல்லறத்தில் தலைவி மேற் கொள்ள வேண்டிய நல்லன யாவும், கடமைகள் அனைத் தும் கற்பினுள் அடங்கும்.

கற்பு என்பது பல உள் தலைப்புகளைக் கொண்ட ஒரு கட்டுரைத் தலைப்பு.

---

2. தொல். பொருள். கற் 1 : உரை.
3. எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும் : சாமி. சிதம்பரனார் : பக். 72

அறவோர்க் களித்தலும், அந்தணர் ஓம்பலும்,
துறவோர்க் கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்,[4]

என அதன் உள் தலைப்புகள் கட்டுரையாளனின் அறிவு நுட்பத்திற்கேற்ப விரிந்து கொண்டே போகும்.

கற்புக் கடம் பூட்டுதல்

தொல்காப்பியர் கூற்றிற்கேற்ப, பெண்ணை இல்லறத்தில் இருத்துதலைக் 'கற்புக் கடம் பூட்டுதல்' என்கிறார் கொங்குவேள். அந்தணன் வடிவில் பதுமாபதியைக் காதலித்து வந்த உதயணன், அவளை மணக்க வழி வகையினை ஆய்ந்ததை,

பொற்றொடிப் பணைத்தோள் முற்றிழை மாதரை
இற்பெரும் கிழமையொடு கற்புக்கடம் பூட்ட
வரையும் வாயில் தெரியுஞ் சூழ்ச்சியுள் [5]

இருந்தனன் என்று குறிப்பிடுகிறார். வரைதல், அதாவது மணம் செய்து கொள்ளுதல் பெண்டிரைக் 'கற்புக் கடம் பூட்டவே' என்பது இங்குத் தெளிவாக்கப்படுகிறது.

கற்பு மேம்பட வாழ்த்துதல்

திருமணத்தின் போது உதயணன் வாசவதத்தையின் அடியைப் பற்றி,

போகமும் கற்பும் புணர்ந்துடன் நிற்கென
ஆகுபொருள் கூறி [6]

அம்மிமேல் சேர்த்தான். திருமணமான ஆறாந் திங்களில்

---

4. சிலப். 16 : 71 - 73
5. பெருங். 3 : 21 : 6 - 8
6. பெருங். 2 : 3 : 87 - 88

உடல் மயிர் களைந்த நிகழ்ச்சியின் பின் நீராட்டும்போது, மறுவில் தொல்குடி மங்கல மடந்தையர்,

> கொண்டோன் வேட்குங் குறிப்பினை யாகித்
> தண்டாப் புலமொடு மகளிரைத் தழீஇத்
> திருமணக் கிழமையின் ஒருமீக் கூறிக்
> கற்புமேம் படீஇயர் பொற்றொடி பொலிந்து [7]

என்று வாசவதத்தையை வாழ்த்தினர். இல்லறமேற்றுச் சிறப்புற ஒழுகுதலே கற்பு என்பது இந் நிகழ்ச்சிகள் மூலம் புலப்படுத்தப்படுகிறது.

உத்தம மகளிர்

இல்லற நெறியில் பிறழ்தல் இல்லாத, நிறையாகிய திண்ணிய கொள்கையையுடைய கற்புடைப் பெண்டிரைக் கொங்குவேள் உத்தம மகளிர் (முதன்மை மகளிர்) என்கிறார்.

> ஞாலந் திரியா நன்னிறைத் திண்கோள்
> உத்தம மகளிர். [8]

இத் திண்மையுடைய மகளிர் நிலம் பெயர்ந்தாலும், விசும்பு வீழ்ந்தாலும் கலங்காது கடமையாற்றும் மன உறுதி படைத்தவர்.

> நிலம்புடை பெயரினும் விசும்புவந் திழியினும்
> கலங்காக் கடவுள்நின் கற்பு. [9]

திருவள்ளுவர்,

> ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
> ஆழி எனப்படு வார் [10]

---

7. பெருங். 2 : 5 : 91 - 94
8. ,, 2 : 7 : 53 - 54
9. ,, 2 : 17 139 - 140
10. குறள் 989

எனச் சான்றோர்க்குக் கூறியுள்ள திண்மையைக் கொங்கு வேள் கற்புடை மகளிர்க்குக் கூறியுள்ளார்.

கற்புடை மகளிர் இயல்பு

அன்புடைக் கணவர் அழிதகச் செயினும் பொற்புடைப் பெண்டிர் பொறுமையே பூணுவர்; நெருஞ்சிப் பூ சூரியனையே நோக்கி நிற்பதுபோல மகளிர் மனமும் கணவனையே நாடி நிற்கும்; கடமை கருதிக் கணவன் பிரியும் போது மனைவி பிரிவுத் துயரைப் பொறுத்து ஒழுக வேண்டும்; சான்றோர் விரும்பாத எச் செயலையும் நிறையுடை மகளிர் செய்ய மாட்டார்-இவை கற்புடைப் பெண்டிரின் இயல்புகளாக முன்னரே இந் நூலில் கூறப் பட்டுள்ளன.[11]

தெய்வந் தொழார்

கற்புடை மகளிர் கையிலிருந்த அரும்பொருள் நழுவிப் போய்விட்ட பொழுதிலும் கணவனை நினைந்து கைதொழுத லன்றிக் கடவுளை நினையாத தெளிவை உடையவர்.

> கையது வீழினுங் கணவன் அல்லது
> தெய்வம் அறியாத் தேர்ந்துணர் காட்சிப்
> படிவக் கற்பு.[12]

அல்லற் காலையும் கற்புடைக் காரிகையர் கணவனை நினைவ தன்றிக் கடவுளை நினையார். கணவனே அவர்கட்குக் கடவுள்.

ஆண் பெயர் கூறார்

உச்சயினி மகளிர் காம பானம் அருந்தியுள்ள மயக்கப் பொழுதிலும் பறவை, விலங்குகளில் கூட ஆண்பாற்

---

11. இந்நூல் பக். 66 - 70
12. பெருங். 1 : 36 : 256 - 58

பெயரை வழக்கியும் கூருத ஒழுக்கமுடையவர்களாயும் இருந்தார்களாம்.

புள்ளும் மாவும் உள்ளுறுத் தியன்ற
ஆண்பெயர்க் கிளவி நாண்மகிழ் கடவ
வழுக்கிக் கூறினும் வடுவென நாணி
ஒழுக்க நுனித்த ஊராண் மகளிர்[13]

எனக் கூறுவதிலிருந்து மகளிர் கணவன் பெயரைக் கூறக் கூடாது என்ற கொள்கையை உடையவர் கொங்குவேள் என்பது புலனுகிறது.

வறுமையிலும் செம்மை

வறுமைக் காலம் வந்துற்றுலும், வேறுபடாத அன்பு கொண்டவர்களாக, கணவன்பால் மதிப்புப் பூண்டொழுகு பவர்களாக மகளிர் இருந்து வந்தனர். வெள்ளி விதைக்கப் பொன்னுய் விளைகின்ற பிறந்த வீட்டினும் உப்பின்றி வெந்த குப்பைக் கீரையை ஒரு பொழுதுவிட்டு ஒரு பொழுது உண்ணுகிற கணவன் வீடே நன்று என எண்ணு வது நங்கையர் உள்ளம். அதனுற்றுன்,

தகாஅக் காலம் தலைவரும் எனினும்
பகாஅக் காதலொடு பத்திமை [14]

பூண்டொழுக அவர்களால் முடிகிறது.

வறுமையிலும் கணவனிடம் வேறுபடாது அன்பு செலுத்த வேண்டும் என்ற இந்தப் போக்கு, பிற்காலத்தில் கணவன் எத்தகையவனுயினும் அவனிடம் அன்பு பாராட்டுவதே கற்புடைய மனைவியின் கடமையாயிருக்க வேண்டும் என்ற அளவுக்கு வளர்ந்து விட்டது.

---

13. பெருங். 1 : 36 : 278 - 81
14. ,, 2 : 3 112 - 1

மிடியினர் குணமிலர் விருத்தர் நோயினர்
வடிவிலர் உறுப்பிலர் வஞ்சர் மூடர்வெங்
கொடியவர் ஆயினும் கொழுநர் தம்மிடை
மடிவிலர் அன்புகற் புடைய மாதரே.[15]

கடிவரை நெஞ்சினர்

மகளிர் கற்பு நிலைபெறுதற்கு ஆட்சி காவலாக அமைய வேண்டுமென்பதை,

அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது[16]

என்று சிலம்பும்,

மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்றால்[17]

என்று மணிமேகலையும் எடுத்துரைக்கின்றன.

மகத மகளிர் நிறை மிக்கவர். அங்ஙனம் அவர்கள் விளங்கியதற்கு அந் நாட்டு ஆட்சி முறை காரணம். ஆட்சி முறை காவலாய் அமைந்ததோடு மட்டுமின்றி அங்கிருந்த மகளிரும் மிகுந்த வரையறையுடைய நெஞ்சினராயிருந்தனர்.

மன்னிய விழுச்சீர் மகதத்து மகளிர்
நன்னிறை யுடையர் நாடுங் காலை
மன்னவன் ஆணையும் அன்னது ஒன்றெனக்
கன்னி தானும் கடிவரை நெஞ்சினள்[18]

என்று சொல்வதன்மூலம் ஆட்சி காவலாய் அமைந்ததோடு, மகளிர் தம்மைத் தாமே காத்துக் கொள்ளும் 'கடி-

15. திருக்கூவப் புராணம்
16. சிலப். 28 : 207 - 08
17. மணிமே. 22 : 208 - 09
18. பெருங். 3 : 8 : 100 - 03

வரை நெஞ்சினராக' விளங்க வேண்டுமென்பதைக் கொங்குவேள் வலியுறுத்துகின்றார். நிறையுடைமை நிலைக்க மகளிர்க்குக் கடிவரை நெஞ்சம் கட்டாயம் தேவை.

கற்புடைய பெண் அமிர்து

மனிதன் விரும்பிப் பெறத்தக்க பொருள்கள் பல உண்டு. செல்வம், கல்வி முதலியவற்றிலும் நல்லொழுக்கம் மிக்க பெண்ணை வாழ்க்கைத் துணையாகப் பெறுவது சிறந்தது.

> எண்ணரும் பல்லுயிர் எய்தும் வெறுக்கையுள்
> பெண்டிருள் மிக்க பெரும்பொருள்[19]

இல்லை என்பது கொங்குவேள் துணிபு. ஆதலின் 'கற்புடைய பெண் அமிர்து'[20] ஆகிறாள். அமிழ்தம் உண்டவன் சாவாது நிலைத்திருப்பது போலக் கற்புடைய மனைவியைப் பெற்றவனும் அழியாப் புகழை அடைகிறான்.

> மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
> பெண்ணினுட் கற்புடையாட் பெற்றானும்—உண்ணுநீர்
> கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
> சாவா உடம்பெய்தி னார்.[21]

19. பெருங். 1 : 38 : 265 - 66
20. சிறுபஞ்ச. 4
21. திரி. 16

(ஐ) ஊடல்

ஊடல் என்பது தலைவன் தலைவியரிடையே தோன்றும் சிறு பிணக்கு. நிழலிலேயே இருந்து கொண்டிருப்பவரை விட, சிறு பொழுது வெயிலிலே நின்று நிழலுக்கு வந்தவர் நிழலின் தண்மையை நன்கு துய்க்க முடியும். கூடல் நிழலை நன்கு துய்க்க ஊடல் வெயில் இன்றியமையாதது.

அளவமைந்த ஊடல்

உப்பு அளவோடு இருந்தால் உணவு சுவையாக இருக்கும்; மிகுதிப்பட்டால் சுவை கெடும். அதுபோன்றே ஊடல் அளவோடு இருக்க வேண்டும்; மிகுதிப்பட்டால் கூடல் இன்பம் பாழ்பட்டுவிடும். உப்பில்லாத உணவு சுவை தராததுபோல ஊடலில்லாக் கூடலும் இன்பமாகாது என்ற திருக்குறள் இதனை விளக்குகிறது.

> உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
> மிக்கற்றால் நீள விடல்.[1]

சுவை கெடாத ஊடல்

ஊடலற்ற காதல் வாழ்க்கை பசுங்காயையும், ஊடல் கொள்ளுதல் கனியையும், ஊடல் நீண்ட பெரும் பிணக்கு முதிர்ந்த பழத்தையும் ஒக்கும். முதிர்ந்த பழம் அழுகலின் தொடக்கம்; சுவை திரிந்தது. இளங்காய் இனிப்புச் சுவை பெறாதது. பக்குவப்பட்ட பழமே பொருந்திய சுவை உடையது. காதல் வாழ்க்கையில் அளவோடமைந்த ஊடல் கனி போல் இன்பம் பயக்க வல்லது. கனி முதிர்ந்தால் அழுகி விடுவதுபோலப் பிணக்கு நீட்டித்தலும் காதல் நுகர்ச்சியின்

---

1. குறள் 1302

இனிமையைக் கெடுக்கும். பிணக்கற்ற காதல் வாழ்க்கை இளங்காயைப் போன்று சுவை முற்றப் பெருதது.

> துனியும் புலவியும் இல்லாயின் காமம்
> கனியும் கருக்காயும் அற்று[2]

என்ற குறளால் இக் கருத்தை அறிகிறோம்.

ஊடற் காரணம்

ஊடல் கொள்பவர் மகளிரே. ஊடல் கொள்ள ஏதேனும் ஒரு காரணம் வேண்டுமல்லவா? பெரும்பாலும் ஆடவர் பிற பெண்டிரை விரும்பினர் என்பதே ஊடலுக்குக் காரணமாக அமையும். தான் அருகிருக்க, எதிரே ஆடிய நாட்டியப் பெண்ணை உற்று நோக்கிவிட்டான் என்பதற்காகப் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் கோப்பெருந்தேவி ஊடல் கொண்டாள் என்பதைச் சிலம்பிலே காண்கிறோம். ''மார்பில் பூசப்பட்ட குளிர்ந்த நறிய சந்தனமும் அணிந்த மாலையும் குழையும்படியாகப் பரத்தையைச் சேர்ந்த நின்னுடைய மார்பைத் தீண்டுதல் எமக்கு அழகுடையதாகாது''

> ஈர்நறுஞ் சாந்தம் தாரொடு குழையப்
> பரத்தையர்த் தோய்ந்தநின் பருவரை அகலம்
> திருத்தகைத் தன்ருல் தீண்டுதல் எமக்கு[3]

எனப் பெண்டிர் ஊடல் கொண்டனர்.

காரணம் எதுவுமில்லையாயினும் ஒரு காரணத்தைப் படைத்துக் கொண்டு ஊடுதலும் உண்டு. ''அவரிடம் தவறு எதுவும் இல்லையாயினும் அவரோடு ஊடுதல், அவர் நம்மேல் மிகுதியாக அன்பு செலுத்துமாறு செய்ய வல்லது'' என்கிருள் ஒரு தலைவி.[4]

---

2. குறள் 1306
3. பெருங். 3 : 24 : 168 – 70
4. இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
   வல்ல தவரளிக்கு மாறு. —குறள். 1321

புலவி, ஊடல், உணர்வு

புலவி, ஊடல், உணர்வு என்ற மூன்றும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவை. புலவி என்பது மன வேறுபாடு; அதாவது சிறு பிணக்குத் தோன்றுதல். அதன் வளர்ச்சி ஊடல். 'புலவி அண்மைக் காலத்தது; ஊடல் அதனின் மிக்கது' என்கிறார் இளம்பூரணர்.[5] ஊடலை அளவறிந்து நீக்குதலை உணர்தல் என்கிறார் பரிமேலழகர்.[6]

தலைவனின் பணிவு

தலைவிபால் உண்டான ஊடலைத் தீர்த்தற் பொருட்டு தலைவன் நெருங்கி வந்து, பணிந்து, நயந்து பேசுதல் உண்டு.

காமக் கடப்பினுள் பணிந்து கிளவி
காணுங் காலைக் கிழவோற் குரித்தே[7]

எனத் தொல்காப்பியம் இதற்கு இலக்கணம் வகுக்கிறது. புறத்தில் கண்டோரஞ்சப் படமெடுத்தாடும் பாம்பு போன்ற சீற்றம் கொண்ட ஆடவர், அகத்தில் ஊடல் கொண்ட மனைவியிடம் பெட்டிப் பாம்பே!

தலைவியின் கனிவு

புலவியின் இறுதியில் தலைவனை அன்போடும், இடித்துக் கூறியும் தழுவிக் கொள்ளுதலே தலைவிக்கு முறையாகும்.

தாய்போல் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப[8]

என்பது தொல்காப்பிய விதி.

5. தொல். கற். 15. உரை
6. குறள். 1109. உரை
7. தொல். கற். 19
8. தொல். கற். 32

ஊடல் என்பது கூடலை உட்கொண்டுள்ள அமிழ்தம். ஆதலின் அதன் செவ்வி கெடாமல் மகளிர் பாதுகாப்பர்; அஃதாவது ஊடல் மிக்கவழி, கூடல் இன்பம் இல்லையாதல் அறிந்து, காமம் பதன் அழியாது உணர்ந்து கூடுவர். இதனைக் கொங்குவேள்,

> உணர்ப்புள் ளுறுத்த ஊடல் அமிர்தத்துப்
> புணர்பபுள் ளுறுத்த புரைபதம் பேணும்
> காமக் காரிகைக் காதன் மகளிர்[9]

என்று குறிப்பிடுகின்றார். மகளிர் தம் அழகாலும் காதலாலும் ஊடற் பதனழியாது பேணவேண்டும்.

பெருங்கதையில் மகளிர் ஊடல் கொள்வதும் ஆடவர் பணிந்து ஊடல் நீக்குவதும் அழகுறப் பேசப்பட்டுள்ளன.

வாசவதத்தை ஊடல்

காரணம்: உதயணன் விரிசிகையைத் தன் மடியிலிருத்திக் கூந்தலில் கண்ணி புனைந்து அனுப்பியதை வாசவத்தை கண்டாள். அக்காட்சி அவள் நெஞ்சைக் கனற்றியது.

ஊடல் கொண்டவள் தோற்றம்: வாசவதத்தையின் தாமரை போன்ற முகம் ஒளி மழுங்கியது; கண்கள் தீப்போற் சிவந்தன. பிற மகளிரை விரும்புகின்ற உதயணன் பால் சென்ற தன் வேட்கையைத் தானே நாணினாள். கண்களில் நீர் சிதறியது. நெற்றியில் வியர்வை துளித்தது. புருவம் நெரிந்து வளைந்தது. ஒப்பனைகளைக் கலைத்தாள். கையிற் கொண்டிருந்த பூங் கொத்துகளையும், மலர் மாலைகளையும் அறுத்துச் சிதறினாள். ''ஆடவர் மலருக்கு மலர் தாவும் வண்டனையவர் என்பதை இப்போது அறிந்தேன்; இனி அவரோடு கூடேன்'' என்று பெருமூச்செறிந்தாள். அவன்பாற் செல்லாது விலகி நின்றாள்.

---

9. பெருங். 2 : 11 : 21 - 23

'நின் கணவன் மார்பில் திருமகள் உறைகின்ருள்' என்று அவனுடைய செல்வ வளம் குறித்து நயமாகக் கூறு வதையும் பொறுக்க மாட்டாதவளாய வாசவதத்தை, கணவன் மடியில் வேருெருத்தியைக் கண்கூடாகக் கண்ட வளாதலின் பெருஞ்சினங் கொண்டாள். அருகே இருந்த சாங்கியத்தாயிடமும், காஞ்சன மாலையிடமும், 'என்னை இப்பொழுதே என் தந்தை வீட்டுக்கு அழைத்துச் செல் லுங்கள்' என்று கூறியவளாய் விடுவிடென ஒரு மலர்ப் பொழிலுள் நுழைந்தாள்.

ஆணின் பணிவும் பெண்ணின் சீற்றமும்: உதயணன் அவள் பின்னே சென்று அவளை மார்புறத் தழுவினுன். தன்னை விட்டுப் பிரிந்து செல்லும் திருமகளை நீங்காதிருக்கு மாறு ஒருவன் பணிந்து வேண்டுவதுபோல அவனும் அவள் உள்ளம் மகிழப் பணி மொழி பலவும் அடுத்தடுத்து மொழிந் தான். அவளுடைய தலைக் கோலத்தைத் திருத்தினுன்; காலில் அணிந்திருந்த கிண்கிணியைத் துகள் போகத் துடைத்தான்; கூந்தலில் அணிந்திருந்த கோதையைத் திருத்தினுன்; வளையல்களை உயர ஏற்றினுன்; கடைக் கண்ணில் தேங்கியிருந்த நீரைத் துடைத்தான்; காதணி களைக் கழற்றி மீண்டும் திருத்தமுற அணிவித்தான்; புதிய தளிர்களை அவள் கையில் வைத்தான்; பொலிவுடைய முதுகைத் தடவிப் பொருந்தினுன். ''பெண்ணே இவ் வூடல் மிகுமாயின் என் உயிர் நில்லாது'' என்ருன். அதற் கும் அவள் இணங்கினுளில்லை. அவளை ஆரத் தழுவினுன். அவளோ உடன்படாளாய்த் திமிறி விலகினுள்; சீற்றத் தோடு பேசினுள்: ''பெருமானே! காம மயக்கத்தோடு உம்முடைய கையாலேயே மாலை புனைந்து உம்முடைய புதிய காதலிக்குத் தந்து மகிழ்ந்தீர்கள். அதுவும் போதா தென்று அவளை ஆசையோடு மடிமீதிருத்திச் சூட்டியும் விட்டீர்கள்! அவள் உம் உள்ளத்தே முற்றிலுமாக வீற் றிருக்கிருள் என்பதறிந்தேன். உம்மால் விரும்பப்பட்ட அவ் வழகியை நானும் மதிக்கத்தானே வேண்டும். இந்தப்

பொய்ம்மை முயக்கம் இப்போது வேண்டாம். உம்முடைய புதிய காதலி இதை அறிந்தால் பெரிதும் விம்மி வருந்து வாள். என்னை விடுங்கள்'' என்று உதறினாள்.

ஊடல் தீரக் காரணம்: அவ் வேளை பலா மரத்திலிருந்து ஆண் குரங்கு ஒன்று கீழே குதித்து அங்கே வந்தது. வாச வத்தை அஞ்சி நடுங்கி, உதயணனை விரைந்து தழுவிக் கொண்டாள்; ஊடல் நீங்கியது.

ஊடலைத் தீர்க்க உதவிய குரங்கை உதயணன் உள மாரப் போற்றியிருப்பான் என்பதில் ஐயமில்லை. காதல் வாழ்க்கையில் ஊடலுக்குள்ள சிறப்பிடத்தை வெளிப் படுத்துகின்ற முறையில் கொங்குவேள் ஒரு காதையையே அதற்கென ஒதுக்கியுள்ளார்.[10]

ஊடல் தீர்த்தற் பக்குவம்; பதுமாபதியை மணந்தது குறித்து உதயணனோடு வாசவத்தை ஊடல் கொண்டாள். அவனோ, ''அவள் நின்னைப்போலவே தோன்றியமையால் நீ என்றே கருதி அவளோடு கூடினேன்'' என்றான். 'நின் னோடு அவள் ஒத்துத் தோன்றினாள்' என்ற கூற்றே அவள் வெகுளியை மிகுதிப்படுத்தியது. கண்கள் சிவப்ப, தலையை உயர்த்தி, உறுத்துப் பார்த்து, 'எனக்கு ஒப்பா?' என்று சீற்றத்தோடு வினவினாள். அவன் அவளைப் பருகுவான் போலப் பன்முறையும் தழுவி, ''அன்பே! அப் பதுமாபதி வெளித் தோற்றத்தில் மட்டும் உன்னை ஒத்துள்ளாளே அல் லாது பெண்மை நலத்தில் தினைத்துணையும் நின்னை ஒவ் வாள்'' என்று அவள் நெஞ்சம் மகிழும் வழியை ஆராய்ந்து கூறி ஊடல் தீர்த்தான்.[11]

அழகிலும் நலத்திலும் இன்னொருத்தியைவிடத் தன்னை உயர்வாகச் சொல்வதை விரும்புவது பெண் இயல்பு. வாசவத்தை மட்டும் இதற்கு விலக்காக இருக்க முடியுமா?

---

10. பெருங். 2 : 16 : முழுதும்
11. பெருங். 4 : 8 : 98 - 114

பெண்ணின் இந்த இயல்பை ஊடலைத் தீர்க்க ஒரு காரண மாக உதயணன் பயன்படுத்திக் கொண்டான்.

நின்னொடு ஒத்தமை நோக்கி மற்றவள்
தன்னொடு புணர்ந்தேன்[12]

என்று கூறிய உதயணனை நோக்கி,

என் நேர்?[13]

என்று கேட்கும் வாசவத்தை,

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று[14]

என்ற திருக்குறள் தலைவியை நினைவுபடுத்துகின்றாள்.

பதுமாபதி ஊடல்

காதலரிருவராய்க் கருத்தொருமித்து மாணகன் என்ற பெயருடனிருந்த உதயணனும் பதுமாபதியும் கன்னி மாடத்தில் களித்து இருந்தனர். அவள் அவனைத் தழுவி நின்றாள். அவனோ சுவர்களில் தீட்டியிருந்த ஓவியங்கள் உண்மைப் பொருள்களைப்போலத் தோற்றமளித்ததால் வியந்து அவற்றை நோக்கி நின்றான். போதாதா புலவிக்குக் காரணம்? தழுவியிருந்த கை நெகிழ்ந்தது; முகத்தை மற்றொரு புறம் திருப்பிக் கொண்டாள். 'வாய் நிறைய இரையை இட்டாலும், கோழி குப்பை கிளறுவதை விடாது' என்று அவன் கேட்கக் கூறினாள். 'தானே தேடிக் கொண்ட துன்பத்திற்குத் தன்னையே நோவதல்லால் பிறரை நோவதால் யாது பயன்?' என்று புலம்பினாள். கண்ணீர் மார்பை நனைத்தது.

---

12. பெருங். 4 : 8 : 102 - 03
13. ,, 4 : 8 : 107
14. குறள் 1314

ஊடல் தீர்க்க முனைந்த உதயணன், "இன்மொழி யாய்! யான் பிழையேதும் செய்திலேனே. அங்ஙன மிருப்பவும் நீ முகம் மாறி வருந்துவது ஏன்?" எனப் பணி மொழி பல பேசி இரந்தான். அவளுடைய சிவந்த அடி களிலே ஊட்டப்பட்ட அலத்தகக் குழம்பு, தன் தலைமயிரில் தோய்ந்து அழகுற்று விளங்குமாறு அவளடிகளில் விழுந்து வணங்கினன். "நங்காய்! திங்களில் வெப்பக் கதிர் தோன்ற முடியாதே! உன் மதி முகத்தில் மட்டும் அனற் கதிர் வீசுவதேன்? நான் பிழையே செய்ததாக இருந் தாலும் சிறியோர் பிழையைப் பெரியோர் பொறுப்பது தானே கடன்" என்றவனாய் அவள் முதுகைத் தடவினன். அதனல் அவள் உள்ளம் நெகிழ்தலை உணர்ந்து, அவளை அணைத்து நெருங்கி நின்றான். அவளோ, "பெருமானே! நான் அணிந்துள்ள அணிகலன்களையே சுமக்க முடியாமல் வருந்துகிறேன். உங்கள் கையையும் சேர்த்து என்னல் சுமக்க முடியாது. தயை செய்து என்னைத் தீண்டா தீர்கள்" என்று அகன்றாள்.

அந் நிலையில் அருகே சோலையில் கொம்பின் மீதிருந்த கூகையொன்று குழறியது; பதுமாபதி அஞ்சி நடுக்குற்று உதயணன் மார்பொடு பொருந்தி அவனைக் கட்டிக் கொண் டாள். அவனும் அவ் வேளைக் கேற்ற இனிய சொற் கூறித் தழுவியும், பொருந்தியும், அவளுடைய அழகைப் புகழ்ந் தும் ஊடலை நீக்கினன்.[15]

ஆந்தை அலறலுக்கு அஞ்சுகின்ற மெல்லியலார் ஆற்றல் மிக்க ஆடவர்களை அடிகளில் விழுந்து கெஞ்சச் செய்வது ஊடலின் சிறப்புப் போலும்!

பேதைமை ஊடல்

களிமகள் ஒருத்தி வெப்பம் தருகின்ற நறிய கள்ளைக் கையிலேந்தி அதனைப் பருக வந்த வண்டுகளை மற்றொரு

15. பெருங். 3 : 14 : 97 - 164

கையால் ஓட்டிக் கொண்டு பொன் வள்ளத்தை வாயருகே கொண்டு சென்றாள். கள்ளினூடே அவள் நிழல் தோன்றியது. பேதைமை காரணமாக அதனை நிழல் என்று அறியாதவளாய் மற்றொருத்தியின் முகமே என்று மயங்கினாள். "இந்த அழகியை யான் பண்டும் தலைவனோடு தேரில் கண்டு பிறர்க்குக் கூறாமல் நெஞ்சில் அடக்கிக் கொண்டதுண்டு. இந்தப் பரத்தையை இப்போது கையோடே பிடித்துக் கொண்டேன். இனி இவள் கூறும் பொய்யை மெய்யென்று நம்புவதற்கு நான் ஒன்றும் ஏமாளி இல்லை" என்று சினந்து அருகில் வந்த கணவனைக் குழறிய சொற்களைக் கூறிப் புலந்தாள்.[16]

வேடிக்கைக் காரணம்

நீர் விளையாட்டின்போது தலைவன் ஒருவன் நீரில் நெடுந் தொலைவு தெப்பத்தைப் பற்றிச் சென்றான். கரையில் நின்ற தலைவி அவனையே எதிர்பார்த்து நின்றிருந்தாள். அது கண்ட தலைவன் நீர் கிழிய நீந்தி வந்து அவளை அடைந்தான். அவளோ, 'ஏடா! நீ இத்துணைப் பொழுதும் நாணமின்றி நீர்மகளை வலிந்து தழுவி விளையாடி வருகிறாய். என்னிடம் உனக்கு அன்பில்லை. ஆனாலும் வெளியே இனிமையாகப் பேசி, உள்ளத்தே கசப்புடையவனாய் வந்திருக்கிறாய். இங்கு வராதே" என்று புலந்து கொண்டாள்.[17]

தெளிவித்தல்

தலைவனுடன் நீர் விளையாடச் சென்ற தலைவி நீரில் தன் எதிருருவத்தைக் கண்டு அந் நிழலை வேறு மகளாகக் கருதி, 'இவன் நீரர மகளிரோடே நீராடும் சூரன்' என்று குற்றம் சாட்டிப் பின்னோக்கிச் சென்றாள். தலைவன் அவள் முதுகுப்

16. பெருங். 1 : 40 : 156 - 81
17. „ 1 : 40 : 182 - 205

புறமாக நின்று, அணைத்து, பூனை போன்ற தோள்களைப் பற்றி, சினத்தை ஆற்றி, அழகிய முகத்தைத் திருத்தி, "அன்புடையோய்! ஒரு நீரர மடந்தையும் அவள் கணவனும் இவ் வாவியினுள் நீராடி நிற்பதைக் காணலாம் வா" என்று அழைத்துச் சென்று, தம் இரண்டு எதிருருவங்களும் நீரில் தோன்றுதலைக் காட்டி உண்மை உணர்த்தி, ஊடலைப் போக்கினான்.[18]

ஊடல் தீர்ந்த தோற்றம்

ஊடல் தீர்ந்த அளவில் மங்கையின் கண்களில் முன்னர்த் துளித்திருந்த நீர் மறைந்து, ஒளி தோன்றும். மார்பில் கிடக்கும் முத்து மாலையைத் திருத்திவிடுவாள் போலக் குனிந்து நிற்பாள். பெரிதும் நாணமுற்று, முகங் கவிழ்ந்து, பிடர்வளைய நிற்கும் அத் தோற்றம் பேரழகுடையதாய் இருக்கும்.[19]

ஊடல் தீர்ந்த குறிப்பு

யாழ் அரங்கேற்றம் முடிந்ததும் வாசவதத்தை தந்தையை வணங்கினாள். அவன் அவளை எடுத்து உச்சி மோந்து, 'பெற்ற தாயிடம் செல்க' என விடுத்தான். முன்பு கண்ட ஒரு தவற்றிற்காக வாசவதத்தையின் தாய் தன் கணவனிடம் ஊடல் கொண்டிருந்தாள். தூதாகச் சென்றவர்க்கும் அவள் பிடி கொடுக்கவில்லை; புலவியினால் திருமுகம் கருகியிருந்தது. இப்போது மகள் வருகையால் முகம் மலர்ந்தது; ஊடலும் நீங்கியது. கணவனைக் கடைக் கண்ணால் நோக்கி, 'யான் யாது செய்ய வேண்டும்?' என்று குறிப்பால் வினவிச் சொல்லாடாமல் நின்றாள். கண் பேசினாலே கனிவு தோன்றிவிட்டது என்பது பொருள்.

18. பெருங். 1 : 40 : 311 - 342
19. ,, 1 : 40 : 49 - 51

கண்ணசைவைக் கண்ட மன்னனின் மகிழ்ச்சிக்கு எல்லை கூற முடியுமா?[20]

ஊடல் கூடா வேளை

கணவன் யாதானும் ஒன்றால் மனக் கலக்கம் அடைந்திருக்கும் பொழுது மனைவி ஊடுதல் முறையன்று. கோடபதி யாழை வாசவதத்தைக்குக் கற்றுத் தந்ததுபோலவே தனக்கும் கற்றுத் தருமாறு பதுமாபதி உதயணனை வேண்டினாள். வாசவதத்தையை இழந்திருந்த உதயணன் அவள் பெயரைக் கேட்டதும் மனம் நெகிழ்ந்து, கண்களில் நீர் நிறைய, பதுமாபதிக்கு மறுமொழி எதுவும் கொடாதிருந்தான். பிற வேளையாயிருந்தால் கணவன் பேசாததே ஊடலுக்குப் போதிய காரணமாய் அமைந்துவிடும். கன்னிமாடத்தில் தன்னைப் பாராது ஓவியத்தைப் பார்த்ததைக் குற்றமாக்கி ஊடியவள்தானே அவள். ஆனால் இங்கோ கணவனுடைய,

> கலக்கம் அறிந்த கனங்குழை மாதர்
> புலத்தல் யாவதும் பொருத்தம் இன்றென,[21]

தான் ஏதோ ஒன்றை விரும்பி அவ் விடத்தை விட்டு அகல்வாள்போல அவனை வணங்கி அகன்றாள்.

நோயே மருந்து

அன்புணர்ச்சியோடு கூடிய ஊடல், பெண்டிர் நெஞ்சில் தோன்றுகின்ற ஒரு வெகுளி நோய். வெகுளிக்கு ஆளானவர் யாரோ அவர் நயந்து, பின்னின்று, வணங்கி, தழுவித் தருகின்ற முத்தத்தால் மட்டுமே அந் நோயைத் தீர்க்க முடியும். பிற மருந்துகள் பயன்படா. நோய்க்குக்

---

20. பெருங். 1 : 37 : 167 – 71
21. பெருங். 4 : 5 : 30 – 31

காரணமாய் அமைபவரே நோய் தீர்க்கும் மருந்து மாகிறார்.[22]

போகம் இனிது

பூம் படுக்கையில் காதலி ஊடியிருக்க, காதலன் பெரிதும் நயந்து கடவுளைக் கூப்புவதுபோலக் கை கூப்பிப் பணிந்து வேண்டி நிற்க, காம நோக்கம் பொருந்திய அவனுடைய வணக்கத்தாலும் செந்தாமரை மலர் போன்ற அவன் கை நகம் வருடுதலானும் தலைவியின் நெஞ்சம் குளிர, அழகிய அடிகளில் அவள் அணிந்துள்ள கிண்கிணி யின் வாய்ப் பிளவு அவன் தலையிலணிந்துள்ள மலர்களின் தாதினால் நிறையுமாறு அவன் விழுந்து வணங்கி வேண்ட, அதனால் ஊடல் தீர, அதன் பின்னர்க் காமச் சுவையாகிய அமிழ்தம் எய்தும்படிக் கூடுவதே பெறுதற்கரிய இன்ப மாகும்.[23]

> இரந்துபின் எய்தும் இன்சுவை அமிர்தம்
> புணரக் கூடிற் போகமும் இனிது.[24]

ஊடலற்ற கூடல் இனியதாகாது.

---

22. காம வெகுளி
நண்ணின் மற்றிது நயந்துவழி யோடி
மாசறக் கழீஇ மனத்திடை யாநோய்
ஆரா வாய்முத் தார்த்தி னல்லது
தீராது உயிர்க்கு —பெருங். 2 : 16 : 56 - 60

23. பெருங். 2 : 7 : 81 - 92

24. ,, 2 : 7 : 90 - 91

(ஒ) பரத்தையர்

எல்லாருக்கும் உரியவன் பரமன்; எல்லாப் பெண்களோடும் கூடுபவன் பரத்தன்; எல்லா ஆணுக்கும் தன்னைத் தருபவள் பரத்தை. ஒருவனை மணந்து அவனுக்கு மட்டுமே தன்னை உணர்வாலும் உடலாலும் உரிமையாக்கி வாழும் பெண்டிர் குலமகளிர். இந் நெறியில் திறம்பிய பரத்தையர், குடும்பம் என்ற கட்டுப்பாட்டினுள் அடங்காது, மனம்போன போக்கில் பலரை மருவி வாழ்ந்தனர். ஆடவர் தம் மனைவியரைப் பிரிந்து இன்பம் துய்க்கப் பரத்தையரை நாடுவதுண்டு. சங்க இலக்கியங்களில் தலைவன் பரத்தையர் சேரியில் சென்று தங்குவதும், அதன் காரணமாகத் தலைவி ஊடல் கொள்ளுவதும் பேசப்படுகின்றன. இவ் ஊடலைத் தோழி, பாணன் போன்றோர் நீக்கி ஒன்றுபடுத்தினர். சங்க இலக்கியங்களில் பரத்தையர் பணம் பறிப்போராகக் காட்டப்படவில்லை. பரத்தையர் வீடு சென்று பணமிழந்து நகைப்புக்கிடமான ஆடவரை அங்குக் காணவில்லை.

காலப் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களால் பணம் பறிப்பதே பரத்தையரின் குறிக்கோள் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அவர்கள் விலை மாதர் என்றும் வரைவின் மகளிர் என்றும் பழிக்கப்பட்டனர். பரத்தையர் நட்பைக் கண்டிக்கும் முதல் நூலாகத் திருக்குறள் அமைந்தது.

பரத்தையரின் செம்மாந்த வாழ்க்கை, அவர்களின் நிலை தாழ்ந்த தன்மை இரண்டையும் பெருங்கதையில் ஒருங்கே காண முடிகிறது.

அுதன்மி

பரத்தையர் குலத்தில் தோன்றிய ஒருத்தி ஒருவனிடம் மட்டுமே தன் உள்ளத்தை வைத்து அவனோடு வாழ

நினைப்பது அக் குல ஒழுக்கத்துக்கு மாறுனது. அத்தகைய வள் 'அதன்மி' எனப்பட்டாள்.[1]

பரிசம்

தம்மை விரும்பியோர் கொடுத்த செல்வம், நிலம் ஆகியவற்றைப் பெற்றதோடு ஒரு கழஞ்சுப் பொன் முதல் ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன்வரையிற் பரிசம் பெறுதற்குப் பரத்தையர் உரியராயிருந்தனர்.[2] பரிசம் என்பது பெண்ணின் நலனைத் துய்ப்பதற்கு ஆடவர் தரும் தொகையாகும்.[3] இன்றைய நிலையில் மணமகளுக்கு மணமகன் வீட்டார் அளிக்கும் பணம், அணிகலன் முதலியவற்றை இச் சொல் குறித்து நிற்கிறது. நருமதைக்குப் பரிசமாக நூற்றொரு கழஞ்சுப் பொற் காசுகளை உதயணன் அனுப்பினன் என்றும்,[4] மதனமஞ்சிகைக்குப் 'பாசிலை நன்கலம் பரியமாகக்'[5] காட்டப்பட்டது என்றும் கொங்குவேள் குறிப்பிட்டுள்ளார்.

பரத்தையர் பரிசம் பெறுதற்குரியவர் என்பதைப் பிற இலக்கியங்களும் பேசுகின்றன. "ஒன்று ஆதியாக ஆயிரத்து ஓரெட்டு ஈருக"ப் பரத்தையர் பரிசம் பெற்றதைச் சீவக சிந்தாமணி கூறுகிறது.[6] தன் கையிலிருந்த புச்சை

---

1. ஒருவன் பாங்கர் உளம்வைத் தொழுகும்
அதன்மி — பெருங். 1 : 35 : 68-69

2. வீழ்ந்தோர் நல்கும் வெறுக்கை யன்றிக்
காணி கொண்டும் கடனறிந் தெண்ணிய
ஒன்றுமுத லாக ஒரெட் டிறுத்த
ஆயிரங் காறும் ஆத்த பரிசு
—பெருங். 1 : 35 : 80-83

3. சிலப். 3 : 163. உரை.

4. பெருங். 1 : 35 : 75-76

5. ,, 5 : 8 : 123

6. சீவக. 107

மாலையை ஆயிரத்தெட்டுப் பசும் பொன் பரிசமாகத் தந்து மாதவியை அடையலாம் எனக் கூனி பேசியதாக இளங்கோ குறிப்பிடுகின்றார்.[7] மதுரைப் பரத்தையரை, ''எட்டுக்கடை நிறுத்த ஆயிரத்தெண் கழஞ்சு முட்டா வைகல் முறைமையின் வழாஅத் தாக்கணங் கனையார்''[8] என்றும் அவர் குறிப்பிடுகிறார். ''அழகு நலம் வாய்ந்த பரத்தையரை மருவி மகிழ அளிக்கும் பரிசம் குற்றம் தீர்ந்த பொன் ஆயிரம் எனச் சொல்வர்'' என்று பிரமோத்தர காண்டம் குறிப்பிடுகிறது.[9]

ஓர வஞ்சனை (சலம்) இன்மை

பொருள் தந்து தம்மை நாடி வந்தவர்கள் அரசர்களானாலும், ஆண்டிகளானாலும் பரத்தையர் பள்ளியறையில் அவர்களிடம் வேறுபாடு காட்டாது ஒன்றுபோல் நடந்தனர். சமுதாயத்தில் உயர்வாக இருந்தவர்களை ஒரு வகையாகவும் தாழ்வாக இருந்தவர்களை வேறு வகையாகவும் அவர்கள் நடத்தியதில்லை. பள்ளியறைப் பணியில் ஓரவஞ்சனை அவர்கள் உள்ளத்தில் இருந்ததில்லை.[10]

போகச் சேரி

பரத்தையர் சேரியைப் போகச் சேரி என்று கொங்குவேள் குறிப்பிடுகிறார். காமப் பெருங் கடலாகிய அச்

---

7. நூறுபத் தடுக்கி எட்டுக்கடை நிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை
—சிலப். 3 : 164 - 65

8. சிலப். 14 : 158 - 60

9. பிரமோத்தர. உருத்திராக்க. 26

10. அரசர்க் காயினும் அடியர்க் காயினும்
அன்றை வைகல் சென்றோர்ப் பேணிப்
பள்ளி மருங்கிற் படிறின் றொழுகும்
செல்வ மகளிர் சேரி —பெருங். 1 : 35 : 88 - 91

சேரியில், இனிய நினைவுகள் என்னும் அலைகளிடையே, ஒளி பொருந்திய நெற்றியையுடைய மகளிரும், இளமைந் தரும் ஒருவர்மேல் ஒருவர் காமுற்று மயங்கித் தம் மனம் விரும்பியாங்கு மூழ்கி விளையாடினர். தம்மை அணி செய்து கொண்டும் புனைந்து கொண்டும் சிறிதும் வெறுப் பின்றி அன்புடைய நெஞ்சத்தோடே அவர்கள் இன்பம் நுகர்ந்தனர்.[11]

காமத் தீ

குறிஞ்சி நிலக் குறவன் தீக் கடைகோலைக் கடைந்து உண்டாக்கிய தீ, காற்று வீச வீசப் பரவிப் பின் காட்டையே சூழ்ந்து கொள்ளும். அதுபோன்றே பரத்தை யர் தம் கண் வீச்சால் நம்பியர் உள்ளத்தே ஆசைத் தீயைத் தோற்றுவித்துப் பின்னர் இனிய மொழி என்ற காற்றால் வீசி வீசி வளர்த்து, அத் தீ அவர்களை முற்றிலு மாகப் பற்றிக் கொள்ளச் செய்தனர்.[12]

பரத்தையர் பயின்ற கலைகள்

பரத்தையர் குலத்தில் தோன்றிய இளமையும் அழகும் கொண்ட மகளிர் யாழ் முதலாகக் கூறப்படும் அறுபத்து நான்கு கலைகளையும் கற்றுத் தேர்ந்திருந்தனர்[13] அவர்கள் அறுபத்து நான்கு கலைகளையும் கற்றிருந்தனர் என்பதை இளங்கோ "எண்ணெண் கலையோர்"[14], "எண்ணெண்

---

11. பெருங். 3 : 3 : 51 - 56
12. கற்கெழு கானவன் கைக்கோல் உமிழ்ந்த
    எற்படு சிறுதீ எழுச்சியிற் காமம்
    மிகுமனத் துவகையின் ஒல்லை விருப்பம்
    முறையின் முறுக மூட்டி —பெருங் 5 : 8 : 134 - 37
13. யாழ்முத லாக அறுபத் தொருநான்கு
    ஏரிள மகளிர் —பெருங். 1 : 35 : 84 - 85
14. சிலப். 14 : 167

கிரட்டி இருங்கலை பயின்ற பண்ணியல் மடந்தையர்[15] என்று குறிப்பிடக் காணலாம்.

அரசர்க்கு ஆடும் கூத்து, எல்லோர்க்கும் பொதுவாக ஆடும் கூத்து என்னும் இருவகைக் கூத்துகள்; இசை, தாளம், யாழ், பல்வேறு மொழிப் பாடல்கள், தண்ணுமை, புல்லாங்குழல் ஆகியவற்றில் பயிற்சி; பந்து விளையாட்டு; சமையற் கலை; நல்ல நிறமமைந்த மணப் பொடிகளைச் செய்தல்; மணமிக்க நீரில் குளித்தல்; பள்ளியறைகளிலும் பருவ காலங்கட்கு ஏற்றவாறும் ஒழுகும் ஒழுக்கம்; உடம்பால் செய்யும் பல்வேறு செய்கைகள்; பிறர் கருத்தை உணர்ந்து கொள்ளுதல்; பிறர் மனத்தைக் கவருமாறு இனிய சொற்களைத் தொடுத்துக் கூறும் சொல் வன்மை; தன் உள்ளத்தைப் பிறர் அறியாமல் மறைத்தொழுகும் திறம்; எழுதுகோலைக் கொண்டு தொய்யில் முதலிய கோலம் புனைதல்; மாலை தொடுத்தல், காலங்கட்கு ஏற்ப ஆடவர் நெஞ்சைக் கவருமாறு ஒப்பனை செய்துகொள்ளல்; மணிக் கோவைகளைக் கோத்தல்; சோதிடம், ஓவியப் பயிற்சி போன்ற கலைகளை மாதவி பயின்றிருந்தாள் என மணிமேகலை ஆசிரியர் கூறுகின்றார்.[16]

தலைக்கோல் பட்டம்

ஆடலிற் சிறந்தவர்கள் அரசனுடைய அவையில் தம் ஆட்டத்தை அரங்கேற்றித் 'தலைக்கோல்' பட்டம் பெற்றனர். அவர்கள் இள மகளிர்க்கு ஆடலாசிரியைகளாக விளங்கினர்.[17] தலைக்கோல் பட்டம் பெற்ற மகளிர் நல்வினத்தார்களை மிகவும் மதித்துச் சிற்றின மாந்-

---

15. சிலப். 22 : 138 – 39
16. மணிமே. 2 : 18 – 32
17. அரங்கியல் மகளிர்க் காடல் வகுக்கும்
தலைக்கோற் பெண்டிர் —பெருங். 1 : 35 : 71 – 7

தரை விட்டு விலகி வாழ்ந்தனர். உயர்ந்தோருடனேயே அவர்கள் கேண்மை பூண்டனர்.[18] அவர்கள் செல்வ மகளிராகவும் விளங்கினர். இரட்டைச் சாமரை, பொற் குடை, மாணிக்கத்தால் இயன்ற அடைப்பை, யானை மருப்பால் செய்யப்பட்ட சிவிகை முதலிய உயர்ந்த பொருள்களைத் தம்மிடம் வைத்திருந்ததோடு, பசிய வளையலணிந்த தோழியர் கூட்டத்தையும் பெற்றிருந்தனர்.[19] காமக் கலையில் துறைபோயவர்களாய இத் தோழியர்[20] அவர்கட்குத் தூதுவர்போலச் செயற்பட்டனர்.

அரசர் விரும்பும் கணிகையர்

அரசர் விரும்பும் கணிகையரும் இருந்தனர். அரசர் பல்வேறு வகையான அணிகலன்கள் நிறைந்த பேழைகளையும், அழகிய வேலைப்பாடமைந்த வண்டிகளையும், நிதிக் குவைகளையும் அவர்களுக்கு வழங்கினர்.[21] நீர் விளையாட்டுக்குச் செல்லும்போதும், திருவிழாக் காலங்களில் தேரின் பின்னே செல்லும்போதும் நகரிலிருந்த சிறந்த நாடகக் கணிகையர் அரசன்பின் செல்லவேண்டும் என்பது விதி. ஆனால் அரசர் விரும்பும் கணிகையர் நகர் எல்லைவரை சென்றதும் திரும்பிடலாம். நகரைக் கடந்து அவர்கள் அரசன்பின் செல்ல வேண்டியதில்லை. மேலும் நாள்தோறும் அரண்மனையில் கூத்தாடுகின்ற செயலிலிருந்

18. சீரினம் மதித்துச் சிற்றினம் ஒரீஇப்
பேரினத் தவரொடு பெருங்கிளை பிரியாத்
தலைக்கோல் மகளிர் தன்மை
— பெருங். 5 : 8 : 131-33

19. சாமரை இரட்டையும் தமனியக் குடையும்
மாமணி அடைப்பையும் மருப்பியல் ஊர்தியும்
பைந்தொடி ஆயமும் பட்டமும் உடையோர்
—பெருங். 1 : 36 : 21-23

20. கலையுற வகுத்த காமக் கேள்வித்
துறைநெறி போகிய தோழித் தூதினர்
— பெருங். 1 : 35 : 86-87

21. பெருங். 1 : 36 : 28-33

தும் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.[22] தம்மை விரும்பவில்லை என்று தெரிந்தால் அரசர் பரத்தையரை வலிந்து தேரிற் கட்டி இழுத்துச் செல்லலாம்.[23]

உயர்வும் தாழ்வும்

ஒருவனுடன் இணைந்து வாழவில்லை என்பதைத் தவிர, பிற வகைகளில் உயர்வாகவும் பெருந்தன்மையுடனும் கலையுணர்வையே முதன்மை நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து வந்த பரத்தையர், பொருளை முதன்மை நோக்காகக் கொண்டு அதைப் பெறுவதையே வாழ்வின் குறிக்கோளாக்கி, அதற்கெனத் தம் அழகையும் இளமையையும் விற்போராயினர் என்ற நிலையையும் பெருங்கதையில் அறிய முடிகிறது. பரத்தையர்களை அழகை விலைகூறி விற்பவர்கள்,[24] படிற்றுரை பேசுபவர்கள்[25] என்று பழித்துக் கூறும் நிலையும் வந்து சேர்ந்தது.

பற்று வாழ்க்கையர்

"இவர் முன்னரே நம்முடன் பழகியவர் என்று பழமை பாராட்டி ஒருவரிடம் பற்றுக் கொள்ளுதல் கூடாது. அவர்க்கே நாம் உரியவர் என்ற எண்ணத்துடன் ஒருவன்பால் நெஞ்சு பொருந்தி நிற்கும் உறுதியுடையவர்களாக இருக்கக்கூடாது. முன்னைத் தவப்பயன் நீங்கியதும் திருமகள் பற்றின்றி நீங்குவதுபோல, கைப்பொருள்

---

22. பொய்தல் மகளிரொடு புனலாட் டயரினும்
தெய்வ விழவொடு தேர்ப்பின் இயலினும்
நகர்கடந் திறத்தல் நருமதை பெறுளென
... ...
கோயிற் கூத்தும் கொடுங்குழை ஒழிகென
—பெருங். 1 : 36 : 34 - 39

23. பெருங். 1 : 35 : 151 - 52

24. காரிகை பகரும் கருங்கடை மழைக்கண்
வார்கொடி மகளிர் —பெருங். 2 : 8 : 65 - 66

25. படிற்றுரை மகளிர் —பெருங். 5 : 8 : 140

இல்லாத இடத்துச் சிறிதும் பற்றின்றி நீங்கிவிட வேண்டும்' இவை முதிய பரத்தையர் தம் வழிமுறையினர்க்குச் சொன்ன அறிவுரைகள்.[26]

நீர்ச்சுழி அனையார்

நீர்ச்சுழி, பார்வைக்குத் தீமையின்றிப் பம்பரம் சுழல்வதுபோல அழகாகத் தோற்றினும் அதில் சிக்கியோரை ஆழ்த்திக் கொன்றுவிடும். பரத்தையர் உள்ளமும் நீர்ச்சுழியொப்ப ஆழம் காண முடியாத ஒன்றாகும்.[27] அவர்களுடைய உள்ளம் தெளிவில்லாதது. அவ் வுள்ளத்தில் ஓடும் நினைவுகள் எங்கே சென்று முடியும் என்று யாராலும் கூறமுடியாது. காட்டில் ஒரு குறிப்பிட்ட எல்லைவரை சென்று, மேற்கொண்டு எங்கு எவ்வாறு செல்வது என்றறியாது மயங்க வைக்கின்ற குறை வழிகளுக்கு வரைவின் மகளிருடைய உள்ளத்தைக் கொங்குவேள் உவமை காட்டுகிறார்.[28]

வஞ்சக ஒழுக்கினர்

பரத்தையர் இனிமை பொதிந்த மழலைச் சொற்களைப் பேசி ஆடவரைப் பிணித்தனர். நாணமின்றி நாற்சந்திகளில் குழுமி நின்றனர். அழகிய ஆடையைக் கொய்சகமிட்டு அணிந்து தங்கள்பால் கவனத்தை ஈர்த்தனர். வஞ்சனை ஒழுக்கமுடைய அவர்கள் பலரைத் தோய்ந்தனர்.[29]

---

26. பெருங். 1 : 35 : 136 - 141
27. கலையுணர் மகளிர் உள்ளம் போல
நிலையின் றுழிதரும் நெடுஞ்சுழி நீத்தத்து
—பெருங். 1 : 40 : 184 - 85
28. மகளிர் மனத்தின்
நிரம்பா நெறியின வாகி —பெருங். 1 : 50 : 10 - 11
29. மதுரம் பொதிந்த மழலையங் கிளவிச்
சதுரச் சந்திச் சமழ்ப்பிற் கலாபத்துத்
தொட்டிமை கலந்த தூசுவிரி அல்குல்
பட்டிமை ஒழுக்கிற் பலர்தோய் சாயல்
—பெருங். 1 : 50 : 6 - 9

அவர்கள் நட்பு நிறை திங்கள் போலிருந்து நாள் தோறும் குறையும் நீர்மையுடையது உள்ளத்தே வஞ்சக எண்ணத்தைக் கொண்டு அவற்றை அறியாதிருக்கும் வகையில் தேனினும் இனிய சொல்லைப் பேசித் தம்மை நாடி வருவோரை அவர்கள் பிணிப்பர். அவர்களுடைய சொற்களை நம்பி அவர்களைச் சார்வோரது கைப்பொருள் நீங்கியதும், அவர்களைக் காண்போர் நகைக்க வெளி யேற்றுவர்.[30]

மேகலையில் பரத்தையர்

கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் இதே கருத்தைக் கூறிடக் காணலாம். பரத்தையர் ஆடவர் காணும்படியாக நாடக அரங்கில் ஏறி, தங்கள் ஆடல், பாடல், அழகு ஆகியவற்றைக் காட்டி நடிப்பர். கரும்பு வில்லிலே மலர்க்கணைகளை ஏவி விடும் மன்மதன் கணைகளைப் போலத் தங்கள் கண் அம்புகளைச் செலுத்துவர். சேல் போன்ற தம் நீண்ட கண்களாகிய சுருக்கு வலையில் ஆடவரைப் பிணிப்பர். தம்மைக் கண்டவர் உள்ளங்களைக் கவர்ந்து அவர்களைத் தங்கள் மனைகட்கு அழைத்துச் செல்வர். இசைபோன்ற இனிய மொழிகளைப் பேசி, செல்வங்களைப் பறித்து, அவர்களிடமிருந்து செல்வம் நீங்கியதும் விட்டு நீங்குவர்.[31]

---

30. முறைமையிற் றேயும் நிறைமதி நீர்மை
நண்புகொள் ஒழுக்கின் நஞ்சுபொதி தீஞ்சொல்
வளை இய மடந்தையைத் தெளிவனன் ஒழுகி
வெறுக்கை இன்மையிற் றுறக்கப் பட்ட
இளையவன் போலவும் —பெருங். 1 : 46 : 309 - 13

31. நாடவர் காண நல்லரங் கேறி
ஆடலும் பாடலும் அழகுங் காட்டிச்
சுருப்புநாண் கருப்புவில் அருப்புக்கணை தூவச்
செருக்கயல் நெடுங்கண் சுருக்குவலைப படுத்துக்
கண்டோர் நெஞ்சம கொண்டகம் புக்குப்
பண்தேர் மொழியின் பயன்பல வாங்கி
வண்டின் துறக்கும் தொண்டி மகளிர்;
—மணி. 18 : 103 - 09

விறலிடு தூதுவில் பரத்தையர்

பரத்தையர் வஞ்சகமே உருவானவர்களாக, நம்பி னோரை நடுத்தெருவில் நிறுத்துபவர்களாக மாறிய நிலையை இடைக் கால, பிற் கால இலக்கியங்கள் காட்டுகின்றன. அவர்களுடைய பிடியில் சிக்கக்கூடாது என மக்களை எச்சரிப்பதற்காகவே சில இலக்கியங்களும் தோன்றியுள்ளன. கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது, சேதுபதி விறலிவிடு தூது என்பன அவ் வகையைச் சார்ந்தவை.

மசக்கையுள்ள பெண்கள் வாயில் மண்ணை இட்டுக் கொள்வது வழக்கம். கருவுற்ற பரத்தை ஒருத்தி மசக்கைக் காலத்தில் வாயில் மண் இட்டாள். அச் செயலைக் கவிஞர், வயிற்றில் வளர்கின்ற பிள்ளை எதிர்காலத்தில் பிறர் வாயில் அள்ளிப் போட இருப்பதை இப்போதே அவள் தன் வாயில் இட்டுப் பார்க்கிருள் என்று கூறுகிருர். பரத்தையை நம்பினோர் நடுத் தெருவில் நிற்க நேரிடும் என்பது இவ்வாறு நயமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.[32]

பரத்தைக்குக் குழந்தை பிறக்கிறது. ஆண் பிள்ளையானல் அடக்க முடியாத சோகம் அங்கு நிறைந்திருக்கும். பிறந்ததோ பெண். சொல்ல வேண்டுமா மகிழ்ச்சிக்கு! குழந்தையைக் கண்ணின் இமைபோலக் காத்து வளர்க்கின்றனர்; நீராட்டி, ஈரத்தைத் துணியால் துடைக்கின்றனர். அச் செயல், "நாமோ ஈரமில்லாத சாதி; நெஞ்சிலேயே ஈரம் இல்லாதபோது உடம்பில் ஈரம் இருக்கலாமா" என்று சொல்லித் துடைப்பதுபோல இருந்ததாம்.[33]

குழந்தைக்கு அணிகலன்கள் அணிவிக்குமிடத்திலும் வேசையரின் வஞ்சக எண்ணம் நன்கு புலப்படுத்தப் படுகிறது.

---

32. ஊடு தரித்தபிள்ளைக் குள்ளாவார் வாயில்அள்ளிப்
போடுவதைத் தன்வாயில் போட்டறிந்தாள்
—கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது 162
33. ஈரமில்லாச் சாதிநமக் கீரமேன் என்றுடம்பில்
ஈரமில்லா மல்துவட்டி ஏந்தினள்
—சேதுபதி விறலிவிடு தூது 261

செய்க்குவளைக் கண்மயிலே! செம்பொனுள்ள பேர்களையுன்
கைக்குள்வளை என்றுவளை கைக்கிட்டாள்—சிக்காப்புள்
ஒட்டுக்குள் ளாவதுபோல் உள்ளபணக் காரர்களுன்
பொட்டுக்குள் ளாகவென்று பொட்டிட்டாள்''[34]

''கண்ணே! இவ் வுலகில் பொன் உள்ள பேர்களையெல்லாம் உன் கைக்குள் வளைத்துப் போடு'' என்று குழந்தையின் கைக்கு வளை இட்டாளாம்! ''சிக்காத பறவையெல்லாம் ஒட்டுக்குள் (வலையில்)சிக்குவதுபோலச் சிக்காத ஆள்களெல்லாம் உன் பொட்டுக்குள் சிக்க வேண்டும்'' எனப் பொட்டிட்டாளாம்!

அதுமட்டுமா, மகள் வளர்ந்ததும் தாய் அவளுக்கு அறிவுரை கூறுகிறாள்:

சூதும் கபடமும் சொற்புரட்டும் வஞ்சகமும்
கோதாய் நமக்குக் குடியிருப்பே—மாதே!
இனிமை, தயவு இரக்கம் எல்லாம் நமக்குக்
கனவிலும் இல்லையடி கண்ணே—தினம்நமக்குப்
பொய்யே குலவித்தை, போடுவதே கண்வெட்டு
மெய்யேது நாமேது மெல்லியலே![35]

மேலும் சொல்லுகின்றாள்: ஆடவரோடு நெஞ்சு கலந்து நாம் உறவாடக் கூடாது. நம் நட்பெல்லாம் புளியம் பழமும் அதன் ஓடும்போல இருக்க வேண்டும்.[36] ஆசையோடு பழகிவிட்டால் பிறகு அவர்களைப் பிரிய முடியாது போய் விடும். உன் வேலையெல்லாம்,

மெய்யழகன் ஆனாலும் மேவிப் பணம்கொடுத்துக்
கையிளைத்து விட்டால் கழற்றிவிடு''[37]வதாக இருக்க வேண்டும்.

---

34. கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது 172 - 73
35. சேதுபதி விறலிவிடு தூது 341 - 43
36. சேதுபதி விறலிவிடு தூது—360
37. சிதம்பரேசுரர் விறலிவிடு தூது—189

கையிருந்த பணத்தையெல்லாம் இழந்தவனுக்குப் பரத்தை வீட்டில் கிடைக்கும் மரியாதை,

> ஏது கொடுத்தாய்நீ! இத்தனை காலந்திரிந்தாய்
> போதுமினிப் போஎன்றால் போகாயோ"[38]

என்பதுதான்! பரத்தையரை நம்பிச் சென்றவன் கப்பல் நிறையப் பண வரவுடையவனாயினும் கடைசியில் கப்பரை ஏந்த வேண்டியவனாகிவிடுவான்.

> கையிலுள்ள தெல்லாம்போய்க் கப்பரைஒன் றேந்தியதோ
> தெய்வமே என்று திரிகின்றான்[39]

என்று கண்டோர் எள்ளி நகையாடும் நிலை ஏற்படும்.

பிறர் நகைக்க வீதிகளில் திரிந்து, தங்குவதற்கும் இடமில்லாமல், இறுதியில் சத்திரத்துத் திண்ணையில் படுக்க நேரிடும்போது அவன் உள்ளம்,

> சண்டாளிக் கிட்ட தனத்தையெல்லாம் இப்படியோர்
> மண்டபத்தைக் கட்டித்தான் வைத்தோமா?"[40]

என்று எண்ணுகிறது. இவ்வாறாகப் பரத்தையின் கேவலமான போக்கைப் பிற்கால நூல்கள் வெளிப்படுத்துகின்றன.

எட்டித் தோப்பு

கலையின் வடிவாக ஒரு காலத்தில் வாழ்ந்து வந்த பரத்தையர் காலப்போக்கில் தம் அழகை விலைபேசி விற்றுண்ணும் கீழ் நிலைக்குத் தாழ்ந்தனர். கலைக் கண்களாகக் காட்சி தந்தவர்கள் விலைப் புண்களாக மாறினர். வேலியற்ற மாந் தோப்பாய் விளங்கியவர் சான்றோர் வெறுக்கும் எட்டித் தோப்பாய் ஆயினர்.

---

38. கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது 788
39. ,, 253
40. சேதுபதி விறலிவிடு தூது 1031

9. உறையுள்

மாளிகை

பண்டைத் தமிழர் கட்டடக் கலையில் சிறந்து விளங்கினர். நகரங்களையும் வீடுகளையும் கலை நலம் சிறக்க அமைத்தனர். மாளிகை சுண்ணும்புச் சாந்துகொண்டு பூசப்பட்டது. ஆதலின் அது 'வெண்சுதை நல்லில்' எனப்பட்டது.[1] மாளிகைகளைச் சுற்றிச் செந் நிறம் கொண்ட மதில்களை எழுப்பியிருந்தனர்.[2] மாளிகைகள் விண்ணளாவியனவாய் இருந்தன.[3] மாடங்கள் திங்களைத் தழுவுவன போன்று உயர்ந்திருந்தன.[4] "சந்திரன் தவழும் இன்பத் தவள சாகரம் போல்" இருந்த மாடங்களின் சுவர்களிலும், அங்கிருந்த பொருள்களிலும் பல்வேறு மணிகள் பதிக்கப்பட்டு ஒளி வீசின. இதனைக் கொங்குவேள், "மணிகிடந்திமைக்கும் மாடம்"[5] என்பார்.

எழுநிலை மாடம்: எழுநிலை மாடங்கள் இருந்தன. அவற்றின் உச்சிகளில் மேகங்கள் தங்கி இளைப்பாறின.[6] மைதிகழ்

---

1. பெருங். 1 : 32 : 89
2. செம்பொற் புரிசை வெண்சுதை மாடம்
   —பெருங். 1 : 39 : 57
3. விசும்புற நிமிர்ந்த பசும்பொன் மாடம்
   —பெருங். 1 : 38 : 17
4. நெடுவெண் திங்கள் அகடுறத் தழுவும்
   கடிவெண் மாடம் —பெருங். 1 : 47 : 202 - 03
5. பெருங். 1 : 46 : 264; மணிப்படு மாடம் (1 : 36 : 353)
6. (i) மழையயா உயிர்க்கும் வான்றோய் சென்னி
   இழையணி எழுநிலை மாடம்
   —பெருங். 3 : 14 : 51 - 52.
   (ii) மழைதொட நிவந்த சேணுயர் மாடம்
   (4 : 7 : 232 - 33)
   (iii) மலைபுரை மாடம் (5 : 8 : 70)

கோயில், வான்றோய் கோயில், கோடுயர் மாடம், மழை நிரைத்தன்ன மாடம் என்ற சொற்கள் கட்டடங்களின் உயரங்களை நன்கு புலப்படுத்துவனவாய் உள்ளன.[7] மாடத் தூண்களில் சித்திரம் எழுதிய திரைகளைப் போர்த்து அழகு செய்தனர்.[8] இதனை, 'ஓவிய எழினி சூழஉடன் போக்கி' என இளங்கோவடிகளும் குறிப்பிடக் காணலாம்.[9] வாயிலின் மேலே இருந்த மாடம் வாயில் மாடம் எனப்பட்டது. அது பல்வேறு வடிவங்களில் காணப்பட்டது. புலி முகம்போல் செய்யப்பட்ட மாடம் புலி முக மாடம் எனப்பட்டது.[10] இதனைப் புலியுருவத்தை முகப்பிற் செய்து வைத்திருந்த மாடம் எனவும் கொள்ளலாம். "கொடிப்புலி முகத்து வாயில் கோட்டையுள் கொண்டு வந்தான்"[11] என உதயண குமார காவியம் உரைத்திடக் காண்கிறோம். மாடங்களை யொட்டி மறைந்திருப்பதற் கேற்றவாறு அமைக்கப்பட்ட கரப்பறைகள், 'மறைப் பேரறைகள்' எனப்பட்டன.[12]

நிலா முற்றம்: மாளிகைத் தளங்களில் எல்லைச் சுவர்களின்றும் நீண்டு, மேற்கூரையின்றி அமைந்த முற்றங்கள் நிலா முற்றங்கள் அல்லது நிலா மாடங்கள் எனப்பட்டன.[13] இதை 'நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றம்' எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடும்.[14] நிலா முற்றம் பல்வேறு ஓவியச் செய்கைகள் பொருந்தியதாயிருந்தது.[15] இம் முற்றங்களின்

---

7. பெருங். 3 : 23 : 5; 4 : 3 : 109;
3 : 15 : 62; 3 : 16 : 24
8. ஓவிய எழினித் தூணொடு சேர்த்து—பெருங். 4 : 14 : 3
9. சிலம்பு. 6 : 169
10. புலிமுக மாடம் மலிர ஏறி —பெருங். 2 : 9 : 67
11. உதயணகுமார. உஞ்சை. 100,
12. பெருங். 3 : 14 : 92
13. ,, 1 : 54 : 24; 1 : 40 : 17; 2 : 11 : 52;
1 : 47 : 46; 1 : 54 : 11
14. சிலப். 4 : 31
15. ஓவியச் செய்கையின் நிலாவிரி முற்றம்.
—பெருங். 4 : 12 : 13-18

விளிம்பில் பொன்னால் இயன்ற பிரம்புகளை நிரல்பட அமைத்து, அவற்றிடையே மணியொளி கிளரும் பலகைகளைத் தடுப்பாக அமைத்தனர்.[16]

நகர்காண் ஏணி: வீடுகளின் பக்கத்தே காவலாக எடுக்கப்பட்ட மதிற்சுவரை ஒட்டி ஏணிகள் நிரல்படச் சார்த்தப்பட்டிருக்கும். வீட்டு மகளிர் வீதிகளில் நடக்கும் காட்சிகளை இவ் வேணிகளில் ஏறி நின்று காண்பர். இவை 'நகர்காண் ஏணி' எனப்பட்டன.[17]

அரண்மனை

அரசனுடைய அரண்மனை வட்ட வடிவில் இருந்தது. அதைச் சூழ்ந்து கோண அமைப்பில் மதில் இருந்தது. அரண்மனை கோபுரத்தைக் கொண்டிருந்தது. அரண்மனையினுள் அரசனும் அவனுடைய உரிமைச் சுற்றமும் விளையாட்டயர்கின்ற காவற் சோலையாகிய இலவந்திகை இருந்தது; இளமரச் சோலைகளும், மயில் விளையாடும் மலர்ச் சோலைகளும் இருந்தன. அரண்மனையைச் சுற்றிப் படைக்கலக் கொட்டிலும் தானியக் கிடங்குகளும் இருந்தன.[18]

பூங்கா : அரண்மனைகளில் பூங்காக்கள் இருந்தன. அங்கே மறைக்கப்பட்ட கேணிகளும், நீரேற்றும் பொறிகள் கொண்ட கிணறுகளும் இருந்தன. வெண்சுதை கொண்டு அமைக்கப்பட்ட செய்குன்றுகளின் உச்சிகளிலிருந்து அருவிகள் விழுமாறு செய்யப்பட்டிருந்தன.[19] செயற்கை

---

16. பெருங். 4 : 15 : 104 - 06

17. நிறைமனை வரைப்பிற் சிறையெனச் செய்த
சுவர்சார் வாகத் துன்னுபு நிரைத்த
நகர்காண் ஏணி —பெருங். 2 : 7 : 45 - 47

18. பெருங். 3 : 14 : 14 - 27

19. ,, 1 : 33 : 3 - 5

யாகச் செய்யப்பட்டவை ஆதலின் அவை 'செய் குன்றுகள்' எனப்பட்டன. மலைச் சாரலில் காணப்பட்ட பொருள்கள் யாவும் அங்குச் செய்து வைக்கப்பட்டிருந்தன. கல் வழிகளும், பாறைக் கற்களும், சுனைகளும், மர வகைகளும், புலி கரடி மான் முதலிய விலங்கினங்களும், மயில் மகன்றில் முதலிய பறவையினங்களும், மலைப் பாம்புகளும் உயிருள்ளனபோல் அழகுறச் செய்யப்பட்டிருந்தன. வாழைத் தோட்டங்களும், மூங்கிற் காடும், மலர்ப்பூம் பொழில்களும் செய்குன்றுகளின்மேல் சுதையால் செய்யப் பட்டு உண்மைத் தோற்றமளித்தன. இச் செய்குன்று மஞ்சு தவழும் உச்சியினைக் கொண்டதாக, உயரமாக அமைக்கப்பட்டது.[20] கையால் செய்யப்பட்டதாதலின் செய்குன்று 'கைசெய்மலை' எனவும் அழைக்கப்பட்டது.

உச்சியிலிருந்து விழுகின்ற அருவிநீர் தேங்குதற்கேற்ற சுனைகள் அமைக்கப்பட்டன. மக்கள் அச் சுனைகளில் புகுந்து விளையாடினர்.[21]

செய்குன்றின் உச்சியை அடையப் படிகள் இருந்தன.[22] செய்குன்றின் உச்சியில், வருவோரைப் பற்றி விழுங்க வரும் தோற்றத்தில் பெரிய பூதமொன்று நிறுத்தப் பட்டிருந்தது. அதை யவனர் இயற்றினர். பூதத்தின் உருவைப் புதிதாகக் கண்டோர் அஃது இன்னதென்று

---

20. பெருங். 1 : 46 : 270 - 85

21. சுதைவெண் குன்றச் சிமைபரந் திழிதரும்
அந்தர அருவி வந்துவழி நிறையும்
பொற்சுனை தோறும் புக்குவிளை யாடியும்
—பெருங். 4 : 11 : 93 - 95

22. கோடுவாய் சிலம்பிற் கொழுஞ்சிகைக் குன்றின்
பாடமை படுகால் பைய ஏறி
—பெருங். 2 : 10 : 70 - 7

அறியாராய் நிலைகுலைந்து ஓடினர்.[23] இக் குன்றுகளின் உச்சியில் மயில்கள் தங்கி அகவும்.[24]

வழிபோல் தோன்றிப் பின்பு முடிவு தெரியாது மயங்க வைக்கும் வழிகள் முட்டு வழிகள் எனப்படும். அரண்மனையைச் சூழ்ந்த சோலைகளிலும் காடுகளிலும் இத்தகைய முட்டு வழிகள் இருந்தன. மேலே பூமிபோலத் தோன்றி உள்ளே குழியாயிருந்த கள்ளப் பூமிகளும் இருந்தன.[25]

உரிமைப் பள்ளி : அரசர்களுடைய மனைவியரும், குடும்பப் பெண்களும், அவர்கட்குப் பணிவிடை செய்யும் மகளிரும் வாழ்ந்த பகுதி உரிமை மாணகர்[26] அல்லது உரிமைப் பள்ளி[27] எனப்பட்டது. அரசனைத் தவிரப் பிற ஆடவர் அங்கே நுழையக் கூடாது. 'உரிமை' என்ற சொல்லை மனைவி என்ற பொருளில் கொங்குவேள் பல இடங்களில் ஆண்டுள்ளார்.[28] மனைவியரும், அவர்களுடைய பெண் மக்களும், அவர்கட்குப் பணிவிடை செய்யும்

---

23. வருவோர்ப் பற்றி வாங்குபு விழுங்கும்
இனைய நுட்பத் தியவனர் இயற்றிய
பெருவலிப் பூதத் துருவுகண் டுணரார்
இன்னுயிர் உண்ணும் கூற்றம் இதுவென
பொன்னிழை சுடரப் பொம்மென உராஅய்
—பெருங். 5 : 9 : 58 - 62

24. ஆய்மயில் அகவும் அணிச்சுதைக் குன்று
—பெருங். 5 : 9 : 46

25. பெருங். 1 : 33 : 16 - 17

26. „ 1 : 35 : 4

27. „ 1 : 56 : 182; 3 : 14 : 18; 4 : 5 : 133
4 : 11 : 36; 4 : 12 : 4

28. „ 1 : 38 : 89; 1 : 38 : 267;
1 : 44 : 73; 2 : 9 : 67; 3 : 20 : 123;
3 : 24 : 34; 5 : 3 : 56

மகளிரும் உரிமைச் சுற்றம்[29] எனப்பட்டனர். அரசன் ஒருவன் தன் உயிரினும் மேலாகக் காக்க வேண்டியது இவ்வுரிமைச் சுற்றத்தையேயாம்.[30] உரிமைச் சுற்றம் வாழும் இடம் 'அந்தப்புரம்' என்றும் கூறப்படும்.[31]

கன்னி மாடம் : அரண்மனையின் ஒரு புறத்தே கன்னிப் பெண்கள் தங்கியிருக்கத் தனி மாடங்கள் இருந்தன. அவை 'கன்னி மாடம்' எனப்பட்டன. அகில் முதலிய புகைகளாலும், சந்தனத்தாலும், மலர்களாலும் கன்னி மாடம் எப்போதும் மணத்தால் நிறைந்திருந்தது.[32] கன்னி மாடம் பெரிதும் பாதுகாப்புடையதாய் இருந்தது ஆதலின் அது 'கடிமனை' எனவும் அழைக்கப்பட்டது.[33] அம் மாடத் தருகே கன்னியர்கள் விளையாடச் செய்குன்றமைந்த பொழில்கள் இருந்தன. மரங்கள் நெருக்கமாக வளர்ந்து, பயிலாதோர் பகலேயாயினும் இடங்களைச் சரிவர அறிய முடியாது தடுமாறுமளவுக்குக் கொழுவிய நிழலைக் கொண்டதாய் அவை இருந்தன. தவழ்வது தவிர்த்து எழுந்து நிற்கும் சிறுவர்களும் அச் சோலைக்குள்

---

29. உரிமைச்சுற்றம்—பெருங். 1 : 34 : 139
    2 : 6 : 162; 2 : 13 : 6
    உரிமைச் சனம்—பெருங். 3 : 27 ; 190
    உரிமை மகளிர் — ,, 1 : 41 : 21; 2 : 6 ; 148
    உரிமைத் தேவியர்— ,, 1 : 47 : 151; 2 : 16 : 69
30. உயிரெனப் படுவது உரிமை —பெருங். 1 : 38 ; 267
31. பெருங். 4 : 13 : 31
32. புகையினும் சாந்தினும் தகையிதழ் மலரினும்
    வாசம் கலந்த மாசில் திருமனை
    —பெருங். 3 : 7 : 74 - 75
33. (i) காப்புற வகுத்த கன்னியம் கடிமனை
    —பெருங். 1 : 46 : 266
    (ii) கடிவெண் மாடத்துக் கன்னியம் கடிமனை
    —பெருங். 1 : 47 : 203

நுழைவதிலிருந்து தடுக்கப்பட்டனர்.[34] கன்னிப் பெண்களைத் தவிர அச் சோலையினுள் யாரும் புகக் கூடாதென்றும், புகுவோர் தண்டிக்கப்படுவர் என்றும் அச் சுறுத்திய உரைகள் பொருந்திய தூண்கள் சோலையின் நுழைவருகே நடப்பட்டிருந்தன. அவை 'கழறுகால்' எனப்பட்டன.[35] கன்னி மாடங்கள் மயில்கள் ஆடி நின்ற இடைகழிகளையும் மலர்க் கொடிகள் அணிந்து நின்ற பந்தல்களையும் கொண்டிருந்தன.[36] மாடங்களின் சுவர்கள் பூங் கொடிகளும் மான் குட்டிகளும் ஆகிய ஓவியங்களால் அழகு படுத்தப்பட்டிருந்தன. அவ் வோவியங்கள் உண்மைப் பொருள்கள்போலத் தோற்றிய சிறப்பினை உடையனவாய் இருந்தன.[37]

திருமணி அம்பலம்: இஃது அரசன் அன்புடையோரை வரவேற்று அளவளாவும் இடம்.[38] நல்ல தொழிற்றிறம் கொண்டு அமைக்கப்பட்டதாதலின் இது நல்வினை அம்பலம் எனப்பட்டது.[39] நல்ல வினைகளைச் செய்தற்குரிய அம்பலம் என்றும் இதனைக் கொள்ளலாம்.

பொற்கோட்டம்பலம்: இது பொன்னாலாகிய மேற் கூரையையுடைய மன்றம். கற்றறிந்த சான்றோர் சூழ அரசன் இவ் விடத்தில் இருந்து பயன்கொண்டான்.[40]

---

34. பகலே யாயினும் பயிலா தோர்கள்
கவலை கொள்ளும் கடிநிழற் கவினி
மாடெழு மைந்தரும் ஊடுசென் றுடா
அணியிற் கெழீஇ —பெருங். 3 : 13 : 75 - 78
35. பெருங். 1 : 46 : 268
36. மயிலா டிடைகழி மாடத் தொருசிறைப்
பயில்பூங் கொழும்பர்ப் பந்தர்
—பெருங். 1 : 36 : 132 - 33
37. பெருங். 3 : 14 : 97 - 102
38. பெருங். 1 : 34 : 41
39. ,, 1 : 34 : 58
40. பொற்கோட் டம்பலம் பொலிய ஏறி
கற்றறி வாளர் சுற்றிய நடுவண்
—பெருங். 1 : 37 : 185 - 86

அத்தாணி மண்டபம்: அரண்மனையுள் அரசிருக்கை இருந்த இடம் அத்தாணி மண்டபமாகும்.[41] அரச கருமங்களை அவ் விடத்திலிருந்து அரசர் ஆற்றினர். பெரிய அவையாகக் கூடியிருந்து செயலாற்றும் மண்டபம் பேரத்தாணி[42] என்றும், சிறிய குழுவாய்க் கூடும் ஓலக்க மண்டபம் நேரத்தாணி[43] என்றும் பெயர் பெற்றன.

மந்திர மாடம்: மந்தணச் செய்திகளைப் (Confidential matters) பேசுவதற்காக அமைந்த இடம் மந்திர மாடம் எனப்பட்டது. திறலுடைய மிலேச்சர்கள் அதனைக் காவல் புரிந்து, அரசன் மந்தணச் செய்திகளைப் பேசிடும் வேளையில், எவரையும் உள்ளே விடாமல் தடுத்தனர்.[44]

பொறியமை மாடம்: அரண்மனைகளில் சுருங்கை வழியுடன் (சுரங்கப் பாதை) கூடிய மாடங்கள் இருந்தன. சுருங்கை வழியை மறைத்தற்குரிய கதவுகளை இயக்கப் பொறிகள் இருந்தன. அத்தகைய மாடங்கள் 'பொறியமை மாடங்கள்' எனப்பட்டன.[45] சுருங்கை வழியை மூடியிருக்கும் கதவுகளை இயக்கும் பொறிகள் சித்திரத் தொழில் உடையவையாக இருந்தன.[46] சுவரில் பதிக்கப்பட்டு

---

41. ஆய்புகழ் வேந்தன் அரசத் தாணிக்
கோயில் —பெருங். 1 : 43 : 169 - 70

42. பெருங். 3 : 12 : 31; 4 : 8 : 30; 5 : 1 : 5

43. பேரத் தாணி பிரிந்த பின்றை
நேரத் தாணி நிறைமையிற் காட்டலின்
—பெருங். 3 : 12 : 31 - 32

44. வெந்திற மிலேச்சர் விலக்குவனர் காக்கும்
மந்திர மாடம் —பெருங். 2 : 9 : 34 - 35

45. பொய்ந்நிலம் அமைத்த பொறியமை மாடம்
—பெருங். 2 : 17 : 68

46. சித்திரப் பெரும்பொறி உய்த்தனர் அகற்றி
—பெருங். 2 : 17 : 74

மான் தலை போன்றோ, புலித் தலை போன்றோ இருக்கும். சுவரில் உள்ள சிற்பம் எனத் தோற்றும் வகையில் அன்றிப் பொறி எனப் பிறருக்குத் தென்படா வகையில் அவை அமைந்திருக்கும். பழகியவர் தவிர பிறர் அந்த அறையில் பொறி இருப்பதை உணர முடியாது.

பொதியறை: பகைவர்களை அடைத்து வைக்க, தப்பு தற்கரிய 'அரும்பிலம்'[47] எனப் பெயரிய நில அறைகள் இருந்தன. அவை போதிய காற்றும் வெளிச்சமுமின்றி உள்ளே இருப்போரைப் பெரிதும் வாட்டக்கூடிய அறைகளாம். இத்தகைய அறையை மணிமேகலை 'பொதியறை'[48] என்று குறிப்பிடும்.

இசை மன்றம்(கீதசாலை): இசைக் கலைஞர்கள் இன்னிசை பாடிய இடம் இசை மன்றம் எனப்பட்டது. அம் மன்றங்கள் குற்றமற்றனவாய், நல்லிலக்கணமுடையனவாய், பொன்னால் அமைக்கப்பட்டிருந்தன. வெள்ளிய யானை மருப்பிலான நெடிய தூண்களைக் கொண்டிருந்தன. காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க தெய்வத் தன்மை அங்குக் குடிகொண்டிருந்தது.[49] இசை மண்டபத்தின் ஒரு பக்கத்தில் பல்வேறு வண்ணங்கள் தோய்ந்த திரைச் சீலைகளைக் குத்துக்கோலில் நுழைத்துப் படவீடுகள் (ஷாமியானா) அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் அரச குடும்பத்தினர் அமர்ந்து இசையை நுகர்ந்தனர்.[50]

ஆடம்பலம் (நடனசாலை): நடன மகளிர் நடனமாட அமைந்த இடங்கள் 'ஆடம்பலம்' எனப் பெயர் பெற்றன.[51]

---

47. அரும்பிலத் தியாத்த அச்ச மாந்தர்
—பெருங். 2 : 17 : 92

48. பொதியறைப் பட்டோர் போன்றுமெய் வருந்தி
—மணி. 19 : 8

49. பெருங். 1 : 34 : 220 - 24
50. ,, 1 : 37 : 101 - 03
51. ,, 3 : 14 : 21

கூத்தப் பள்ளி : நாடகமாடுதற்குரிய இடம் கூத்தப் பள்ளி. இது பொழிலிடையே இருந்தது. கூர்ச்சர தேசத்துச் சிற்பங்கள் அதில் இருந்தன.[52] கூர்ச்சர தேசம் சிற்பத்திற்குப் பெயர் பெற்றதென்பர். கூர்ச்சர தேசத்துப் பணியமைந்த கோயிலை மணிமேகலையும் 'குச்சரக்குடிகை'[53] என்று குறிப்பிடுகின்றது.

பள்ளியறை : பள்ளியறைகள் மிகவும் சிறப்புற அமைக்கப்பட்டன. அரிய, பெரிய அவ் வறைகள் குற்றமில்லாத திண்ணிய நிலைகளையுடைய வாயில்களைக் கொண்டிருந்தன. வாயில்களில் ஒளிமிக்க முத்துமாலைகளும் மலர் மாலைகளும் அசைந்தாடின.[54] முறையாக அகிற்புகை ஊட்டப் பட்ட அவ் வறையினுள் மென்மையான அணைகளுடன் கூடிய பல்வேறு மணிகளாலான கட்டில் கிடந்தது.[55] முப்பத்திரண்டு நல்லிலக்கணங்களும் அமையுமாறு இல்லம் அமைக்கும் வல்லுநர்கள், நுண்ணிய நூல் பிடித்து, ஒப்பிலா வகையில் இயற்றிய பொற் கூடத்தில், மணிகளால் இயன்ற தூண்களையுடையனவாய்ப் பள்ளியறைகள் விளங்கின.[56]

உலாவு மண்டபம் : அரண்மனையினுள்ளேயே உலாவுவதற்கான மண்டபங்களும் இருந்தன. அறைகளும் அவைகளைச் சுற்றிலும் நிலாமுற்றங்களும் இருக்குமாறு அம் மண்டபங்கள் அமைக்கப்பட்டன.[57]

செண்டு வெளி : யானைச் செண்டு, குதிரைச் செண்டு என்பன முறையே யானை மீதிருந்தும் குதிரை மீதிருந்தும்

---

52. கூத்தப் பள்ளிக் குச்சரக் குடிகை
—பெருங். 4 : 13 : 147
53. குச்சரக் குடிகை தன்னகம் புக்காங்கு —மணி. 18 : 145
54. பெருங். 1 : 47 : 206 - 11
55. ,, 3 : 13 : 86 - 88
56. ,, 1 : 33 : 100 - 05
57. நிலாவெண் மாடமொடு உள்ளறை சூழ்ந்த
உலாவு மண்டபத்து —பெருங். 1 : 47 : 46 - 47

விளையாடும் விளையாட்டுகளாம். இவ் விளையாட்டுகள் நடைபெறுதற்காக அரண்மனையில் இருந்த பரந்த இடம் செண்டுவெளி அல்லது வாரி எனப்பட்டது.[58]

விருந்துக் கோயில் : விருந்தினர்களாக வந்த மன்னர்கள் தங்கி இன்புறச் செயற்கரிய பூங்காக்கள் தனியே இருந்தன. வித்தகமுடைய சிற்பிகள் அப் பூங்காவை ஓவியம்போலப் பன்னிறம் தோன்றும்படி அமைத்தனர்.[59] பூங்கா, ஓவியத் தொழிலமைந்த ஒரு திரைச் சீலையை ஒத்தது என்பதை, ''சித்திரச் செய்கைப் படாஅம் போர்த்ததுவே, ஒப்பத் தோன்றிய உவவனம்'' எனச் சீத்தலைச் சாத்தனாரும் கூறிடக் காண்கிறோம்.[60] அப் பூங்காவினிடையே விருந்தினர்கள் தங்கியிருக்கக் கலை நலம் மிக்க மாளிகை இருந்தது. அதனை, 'விருந்துக் கோயில்'[61] என்றனர்.

வழிபாட்டிடங்கள் : அரண்மனையினுள்ளே வழிபாட்டுக்கான 'தெய்வத்தானங்கள்'[62] இருந்தன.

அரண்மனை மாடங்கள் அரக்கால் இயற்றப்படுவதுமுண்டு. மாடங்களில் பொன்னிறப் பலகையின்மேல் புலி, மான் தோல்களாலாகிய இருக்கைகள் கிடந்தன.[63]

---

58. முரசுகடிப் பிகுத்த மூரி முற்றத்
தரசிறை கொண்ட அகன்கண் வாரி
—பெருங். 1 : 37 : 5 - 6

59. வித்தக வினைஞர் சித்திர மாக
உறம்படச் செய்த ஒண்பூங் காவின்
—பெருங். 4 : 7 : 149 - 50

60. மணி. 3 : 168 - 69
61. பெருங். 4 : 7 : 174
62. வகைமாண் தெய்வம் வழிபடு தானமும்
—பெருங். 3 : 14 : 22

63. பொறிவரித் தவிசிற் பொன்னிறப் பலகை
உறநிறைத் தியற்றி உருக்கரக் குறீஇய
மாடமும் —பெருங். 2 : 17 : 82 - 84

அரண்மனையைச் சூழ்ந்து மதில் இருந்தது. அது காண் போர் அஞ்சும் தோற்றத்தைக் கொண்டிருந்தது.[64] மதிலின் வாயிலைத் திருந்திய நிலையினையுடைய பெரிய கதவுகள் அணி செய்தன.[65] அக் கதவுகளில் அரசனுக்குரிய இலச் சினைகள் பொறிக்கப்பட்டிருந்தன. வாயிலைக் கவனமுடன் காவல் செய்யக் காவலர் இருந்தனர்.[66]

நகரமைப்பு

நகரத்தை ஒரு தாமரை மலராகவும் அதிலுள்ள பல் வகையான இருப்பிடங்களை அம் மலரின் பல்வகை இதழ் களாகவும் கொங்குவேள் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

அரண்மனை தாமரை மலரின் பொகுட்டுபோல, நகரின் மையமாக விளங்கியது.[67] அமைச்சர் இருப்பிடங்கள் பொகுட்டைச் சூழ்ந்த அல்லிகள்போல அரண்மனையை அடுத்திருந்தன.[68] அவற்றையடுத்து அறிஞர்களின் இருப் பிடங்கள் அகவிதழ்களாகக் காட்சி தந்தன.[69] அவற்றைச் சூழ்ந்திருந்த வணிகர் தெரு புல்லிதழ்களோடு பொருந்திய

---

64. காப்பின் றுயினும் கண்டோர் உட்கும்
யாப்புடைப் புரிசை அணிபெற வளைஇ
—பெருங். 3 : 3 : 104-05

65. திருந்துநிலைப் புதவிற் பெருங்கத வணிந்த
வாயில் —பெருங். 4 : 10 : 2-3

66. பொறியமை புதவிற்
கடைமுதல் வாயிற் கடுங்காப் பிளையர்
—பெருங். 3 : 6 : 145-46

67. கோயில் கொட்டை யாகத் தாமரைப்
பூவொடு பொலியும் பொலிவிற் றாகி
—பெருங். 3 : 3 : 108-09

68. அருமதி அமைச்சர் திருமதிற் சேரி
மாசில் பைந்தாது சுமந்த மத்தகத்து
ஆசில் பன்மலர் அல்லி யாக —பெருங். 3 : 3 : 95-97

69. அந்தணர் சேரி அகவிதழ் ஆக
—பெருங். 3 : 3 : 87

நல்லிதழ்கள் போன்றிருந்தன.[70] புறவிதழ் மருங்கிற் புல்லிதழ்கள்போல வேளாளர் தெருக்கள் விளங்கின.[71] இவற்றை அடுத்திருந்த பரத்தையர் சேரிகள் பூவின் புறவிதழ்கள்போலத் தோற்றமளித்தன.[72] நகரைச் சூழ்ந்திருந்த விரிந்த படைச் சேரியினிடையே இருந்த நகரம் பொய்கையில் மிதந்த தாமரைபோல் இருந்தது.[73]

சங்க இலக்கியங்களிலும் நகர் தாமரை மலருக்கும், நகர வீதிகள் தாமரை இதழ்களுக்கும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

பெரும் பாணாற்றுப்படை,

பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
சுடுமண் ஓங்கிய நெடுநகர்[74]

என்று குறிப்பிடுகிறது. பரிபாடல் திரட்டில்

தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர், பூவின்
இதழகத் தனைய தெருவம், இதழகத்து
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்[75]

என்ற அடிகளைக் காணலாம். நகரைத் தாமரையாகவும், அரண்மனையைப் பொகுட்டாகவும், வீதிகளை இதழ்களாக

---

70. பல்வினை வாணிகர் நல்வினைச் சேரி
புல்லிதழ் பொருந்திய நல்லிதழ் ஆக
—பெருங். 3 : 3 : 77 - 78
71. பெருங்கடி யாளர் அருங்கடிச் சேரி
புறவிதழ் மருங்கிற் புல்லிதழ் ஆக
—பெருங். 3 : 3 : 65 - 66
72. போகச் சேரி புறவிதழ் ஆக —பெருங். 3 : 3 : 56
73. பெரும்படைச் சேரி திருந்தணி யெய்திக்
கைபுனை வனப்பினோர் பொய்கை யாக
—பெருங். 3 : 3 : 49 - 50
74. பெரும்பாண். 403 - 05
75. பரி. திர. 7 : 1 - 4

வும் ஒப்பிட்ட தன்மையினை இப் பாடல்களில் காணமுடிகிறது. கொங்குவேள் இதனை விரிவு செய்து, இதழ்களைப் புல்லிதழ், புறவிதழ், அகவிதழ், நல்லிதழ்களாக்கி அவற்றோடு பல்வேறு தெருக்களை ஒப்பிட்டுக் காட்டினார். கொங்குவேளின் இக் கருத்தினை முற்றிலுமாக ஏற்று அவருக்குப் பின்னர் வந்த திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணியில் குறிப்பிடக் காண்கிறோம்.[76]

வீதிகள் : நகரங்களில் இருந்த வீதிகள் ஆறுகள் போல் அகன்றும் நீண்டுமிருந்தன. நகரினூடே ஒன்றினையொன்று அவை ஊடறுத்துச் சென்றன.[77] வீதியின் இரு புறங்களிலும் குன்றுகளை நிரைத்தாற்போன்று, ஒன்றைப் போல் ஒன்று ஓங்கியவாய், ஒரே மாதிரியான வீடுகள் நிறைந்திருந்தன.[78] வீதிகளுக்கு நெடிய அகன்ற ஆறுகளையும், வீடுகளுக்குக் குன்றின் நிரைகளையும் உவமைகளாகக் கூறுவதை மதுரைக் காஞ்சியிலும் காணலாம்.[79] வீதிகளில் விளக்குகள் நெருக்கமாய் ஒளியுமிழ்ந்தன.[80]

---

76. பொய்கை போர்க்களம் புறவிதழ் புலவு வாட்படை
புல்லிதழ்
ஐய கொல்களி றகவிதழ் அரசர் அல்லிதன் மக்களா
மையில் கொட்டையம் மன்னனு மலர்ந்த தாமரை
வரிசையாற்
பைய உண்டபின் கொட்டைமேற் பவித்திரத் தும்பி
பறந்ததே.
—சீவக. 2311

77. நெடுநீர்ப் பேரியாறு நிறைந்துவிலங் கறுத்துப்
பல்வழிக் கூடிய படிய ஆகி —பெருங். 3 : 3 : 39-40

78. (i) மலைத்தொகை யன்ன மாட மாநகர் (3 ; 16 : 29)
(ii) மலைத்தொகை யன்ன மாட வீதியுள் (3 : 27 : 216)

79. (i) மாடநிரைகளுக்குக் குன்றின் உவமை (மதுரைக். 474)
(ii) யாறுகிடந் தன்ன அகல்நெடுந் தெரு (மதுரைக். 359)

80. மணியுமிழ் விளக்கின் மறுகுபல போகி
—பெருங். 3 : 13 : 64

நெடிய தெருக்கள் 'நெடுந்தெரு'[81] என்றும் குறுந் தெருக்கள் கோணம்[82] எனவும் அழைக்கப்பட்டன.

மதில் : நகரைச் சுற்றிலும் உயர்ந்த மதில் வானுற ஓங்கியதாய்[83], பல்வேறு பொறிகளைக் கொண்டதாய் இருந் தது.[84] மதி தவழ் புரிசை[85] என்ற சொற்கள் மதிலின் உயரத்தைத் தெரிவிக்கின்றன. மதிலைச் சூழ்ந்து அகன்ற நீர்நிறைந்த அகழி இருந்தது.[86] மதிலையடுத்து அகன்ற காவற்காடு இருந்தது. காவற்காடு மிளை என அழைக்கப்பட்டது.[87]

மதில் வாயில் அகன்றதாகவும் உயரமானதாகவும் இருந்தது. இரண்டு யானைகளின்மேலே குடையையுயர்த் தியபடியும், அவற்றின் முதுகின்மேலிருந்து சாமரை வீசிய படியும் அவ் வியானைகள் இரண்டும் ஒரே வேளையில் புகுதற் கேற்ற உயரமும் அகலமும் கொண்ட பெரு வாயில்களாக அவை இருந்தன. கதவுகளில் பல்வேறு ஓவியங்கள் செதுக் கப்பட்டு அழகு செய்யப்பட்டிருந்தன. அவற்றை மூடவும் திறக்கவும் பொறிகள் இருந்தன.[88] கதவுகளின் அகத்தே

---

81. சேணெடுந் தெருவும் —பெருங். 5 : 9 : 37
82. பெருங். 5 : 9 : 40
83. விண்ணுற நிவந்த பண்ணமை படைமதில்
—பெருங். 3 : 4 : 3
84. படையமை நெடுமதில் —பெருங். 2 : 2 : 57
85. பெருங். 3 : 24 : 161
86. ஒழுகுபுனல் அகழினை உடையெனக் கிடந்த
முழுமதில் நெடுங்கடை முதற்பெரு நகரம்
—பெருங். 2 : 9 : 186 - 87
87. அருமிளை உடுத்த அமைவிற் குன்றுது
—பெருங். 1 : 58 : 103
88. புடைக்களி றிருங்குடன் புகூஉம் அகலத்து
அடைப்பமை பெரும்பொறி யாப்புமுதற் கொளீஇப்
பத்திர மணிந்த சித்திரக் கதவின்
வாயில் தோறும் —பெருங். 2 : 2 : 64 - 67

யும் புறத்தேயும் குறுக்கே தாழ்ப்பாள்போலத் தடை மரங்கள் அணைக்கப்பட்டன. அகத்தே அணைத்த தடைமரம் சீப்பு என்றும் புறத்தே அணைத்த தடைமரம் எழு என்றும் பெயர் பெற்றன.[89] மதில் வாயிலில் பிறர் உள்ளே புகாத படி உருண்டியங்கும் படல்கள் சாத்தப்பட்டு அவற்றின் குறுக்கே எழுமரம் இடப்பட்டது. கரிய கண்ணமைந்த பம்பையினை இடையீடின்றி முழக்கி, தீப்பறக்கும் சினத்தையும் காற்றுப்போன்ற விரைவையும், மறக்கழல் கட்டிய காலையும் உடைய இளமறவர் அதனைக் காவல் செய்தனர்.[90] திருவிழாக்கள் போன்ற சிறப்பான நாட்களில் மட்டும் செல்லுவதற்குத் தனி வாயில் இருந்தது. அது 'நாட்பெரு வாயில்' என்ற பெயரைப் பெற்றிருந்தது.[91]

அகழியாகிய ஆடையையும், ஞாயிலாகிய கொங்கைகளையும், புதவாகிய பணதியையும், வாயில் மாடமாகிய முகத்தையும், கொடிகளாகிய கூந்தலையும் உடைய ஒரு முதுமகளாக மதிலைக் கொங்குவேள் நயமுற வருணித்துள்ளார்.[92]

நகரில் அருந்தவர் பள்ளியும், தேவாலயங்களும் இருந்தன.[93] அறவோர் மன்றம் முதலிய சான்றோர் இருக்கைகளும் அருகன் கோயில் முதலிய புண்ணியப் பெயரையுடைய இடங்களும் விளங்கின.[94] நாட்டிய அரங்குகள்,

---

89 சீப்புள் ளுறுத்துத் திண்ணெழுப் போக்கிக்
காப்புள் ளுறுத்த கடிமதில் வாயில்
—பெருங். 1 : 43 : 163 - 64

90. பெருங். 1 : 49 : 2 - 6

91. நாட்பெரு வாயி ஞறுநீ ராத்திரை
—பெருங். 1 : 38 ; 139

92. பெருங். 3 : 3 : 16 - 38

93. ,, 1 : 43 : 175 & 77

94. ஐயர் தானமும் அன்னவை பிறவும்
புண்ணியப் பெயரிடம் —பெருங். 2 ; 7 : 144 - 45

கடைத் தெருக்கள், இசை மன்றங்கள், சொற்பொழிவுக் கூடங்கள், கல்விக் கழகங்கள், சூதாடும் மன்றங்கள் இருந்தன. கடிப்பன, பருகுவன, விழுங்குவன, நக்குவன, சுவைப்பன என ஐவேறு வகையான உணவுகளுக்கெனத் தனித்தனி உணவுச் சாலைகள் இருந்தன.[95] சிற்றுண்டிச் சாலைகளில் நெய்யினால் செய்யப்பட்ட அமுதனைய அறு சுவை உண்டி கிடைத்தது.[96]

நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து பிறர் மறையை மனத்தின்கண் அடக்கமாட்டாதவரும் கள்ளுண்போருமாகிய மகளிர் உறைந்த துட்டச் சேரி (கயமை மகளிர் சேரி) இருந்தது. தம் அழகை விற்றுண்ணும் குளிர்ந்த கண்களையுடைய பூங்கொடி போன்ற பரத்தையர் உறைந்த வளப்பம் மிகுந்த இல்லங்களும் இருந்தன[97] உண்போர் மதியை மயக்கும் கள்ளுக் கடைகளும் இருந்தன.[98]

பல்வகைக் கொட்டில்கள் : படைமறவர் சேரிகள், யானைக் கொட்டில்கள், குதிரைக் கொட்டில்கள் ஒரு புறம் விளங்கின.[99] ஆடை நெய்வோர் ஒருபுறம் வாழ்ந்தனர்.[100] வேறுவேறு மொழிகளைப் பேசுகின்ற பல தேயத்து வணிகர்

---

95. ஆடம் பலமும் ஆவண மறுகும்
கீத சாலையும் கேள்விப் பந்தரும்
ஓது சாலையும் சூதாடு கழகமும்
ஐவே றமைந்த அடிசிற் பள்ளியும்
—பெருங். 2 : 7 : 130 - 33

96. அமுதின் அன்ன அறுசுவை அடிசில்
நெய்ச்சூட் டமைந்த சிற்றூண் பந்தர்
—பெருங். 2 : 2 : 80 - 81

97. பெருங். 2 : 8 : 63 - 66

98. மதிமயக் குறூஉம் மறுகணி கடையினும்
—பெருங். 2 : 8 : 68

99. யானைத் தானம் (2 : 8 : 58); தானைச் சேரி (2 : 8 : 59)
குதிரைப் பந்தி (2 : 8 : 67)

100. கோடிகர் வரைப்பினும் —பெருங். 2 : 8 : 67

ஒருபுறம் தங்கியிருந்தனர். அவர்கள் இருந்த இடம் தேசிகச் சேரி அல்லது தேசிகப் பாடி எனப்பட்டது.[101] நடிகர் வாழ்ந்த தெருக்கள் ஒருசார் இருந்தன.[102]

சித்திரச் சாலைகள், செம்பு முதலியவற்றைக் கொட்டித் தொழில் செய்யும் கொட்டுவினைக் கொட்டில்கள், தண்ணீர்ப் பந்தர்கள், அழகு புனையும் ஒப்பனைக் கூடங்கள், அறத்தின் செவ்வியை அறிவுறுத்தும் அறத்தியல் கொட்டில்கள், பொது மன்றங்கள், வீரர்கள் கோழிகளைப் போரிட வைத்த விளையாட்டுப் போர்க் களங்கள், யானைகளைப் பயிற்றுவித்த வட்ட வடிவக் களங்கள், குதிரைகளை விரைந்து செலுத்திய வீதிகள், கூத்தாட்டரங்குகள், படைக்கலம் பயின்ற இடங்கள், அறச்சோறு அமைத்த அட்டில்கள், தேவாலயங்கள், துறவியர் இருப்பிடங்கள், பார்ப்பனர் சிவந்த தீயினை வளர்த்த வேள்விச் சாலைகள் முதலியன அவையவை இருத்தற்குரிய இடந்தோறும் இடந்தோறும் அமைந்து காட்சிக்கினியனவாய் விளங்கின.[103]

அங்காடிகள்: கடைத் தெருக்கள் செல்வச் செழிப்பு வாய்ந்தனவாய் இருந்தன. நிரல்பட்ட திரண்ட தூண்களையும், மணிபதித்த பொன்னால் இயன்ற பலகைகளையும் சித்திரமுடைய சுவர்களையும், வித்தகத் தொழிலாலே இயன்ற கூரைகளையும் உடைய கடைகள் நிறைந்திருந்தன.[104] கடை வீதி நீண்டதாகவும், கடைகள் படிகளைக் கொண்டவையாகவும் விளங்கின.[105] கடைத் தெரு எப்

---

101. பாடை யறியாத் தேசிகச் சேரியும்
—பெருங். 2 : 8 : 60; 3 : 4 : 25

102. கூத்துறை சேரி —பெருங். 2 : 8 : 69

103. பெருங். 3 : 4 : 15 - 29

104. ,, 3 : 5 : 37 - 39

105. படியணி நெடுங்கடைப் பகலங் காடியுள்
—பெருங். 1 : 54 : 77

போதும் ஒலி நிறைந்ததாய் இருந்தது. ஆதலின் அது கலிகொள்ஆவணம்[106], பெருங்கலி ஆவணம்[107] எனப் பேசப் பட்டது. மாலை நேரங்களில் அணிகலன்கள் முதலியன விற் கப்படும் கடைகளின் கதவுகள் மூடப்பட்டு மலர்க் கடைகள் திறக்கப்பட்டன.[108] பகலில் நடைபெற்ற கடைகள் பகலங் காடி அல்லது நாளங்காடி எனவும் இரவில் நடைபெற்ற கடைகள் அல்லங்காடி எனவும் அழைக்கப்பட்டன. கடைத் தெருக்களில் வாங்கியோர் சிந்திய குங்குமச் சாந்து, மலர்கள், சுண்ணம் முதலியுவற்றை ஏவல் மகளிர் பெருக்கி யெடுத்து, சந்தனம் கலந்த தண்ணீரைத் தெருக்களில் புழுதி அடங்கத் தெளித்தனர். பின்னர் வீதிகளிலும் கடை களின் முற்றங்களிலும் பன்னிறப் பூக்களைப் பரப்பினர்.[109]

படைச் சேரி (தானைச் சேரி)

இது புறநகர்ப் பகுதியாக விளங்கியது. இங்கிருந்த கொட்டில்கள் பனை, தெங்கு முதலியவற்றின் மடல்களால் வேயப்பட்டிருந்தன; படல் இட்ட வாயில்களைக் கொண் டிருந்தன; இடையறுது, தொடர்பு பட்ட, நெருங்கிய குடியிருப்புகளாக விளங்கின. சேனை வீரர்கள் தங்கியிருந்த இடம் பாடிக்கொட்டில் என்றும், படைக் கருவிகள் செய்த கொல்லர் தங்கியிருந்த இடம் முட்டிகைச் சேரி என்றும், கம்மியர் வேலை செய்த இடம் கம்மவாலயம் என்றும், படைத் தலைவன் குடியிருந்த இடம் தானைச் சேரி என்றும் அழைக்கப்பட்டன.[110] படைச் சேரிகளில் யவன வீரர் களும், தமிழ் நாட்டு வீரர்களும், மிலேச்ச நாட்டு வீரர்

---

106. பெருங். 1 : 32 : 95
107. ,, 1 : 35 : 174
108. விளக்கொளி பரந்த வெறிகமழ் கூலத்துக்
கலக்கத வடைத்து மலர்க்கடை திறப்ப
—பெருங். 1 : 33 : 82 - 8
109. பெருங். 2 : 2 : 102 - 05
110. ,, 1 : 43 : 197 - 203

களும் தனித்தனியே குடியிருந்தனர். அவரவர் நாட்டுப் பெயர்களால் அவ்விடங்கள் முறையே யவனச் சேரி, தமிழச் சேரி, மிலேச்சச் சேரி எனப் பெயர் பெற்றன.[111]

பாடி வீடு

போர்மீதோ அன்றி மலைவளம் காணல் போன்ற விழா நிகழ்ச்சிகட்கோ அரசன் தன் படையுடனும் உரிமைச் சுற்றத்துடனும் சென்ற வேளைகளில் அவர்கள் தங்க அமைக்கப் பட்ட இருப்பிடங்கள் பாடிகள் என்றும், அங்கு அமைக்கப் பட்ட வீடுகள் பாடி வீடுகள் என்றும் அழைக்கப்பட்டன. நகரைப் போலவே அங்கும் பெரு வீதிகளை வகுத்து அமைத்தனர். தரையில் முளையடித்து அவற்றில் கயிற்ருல் திரைச் சீலைகளை இழுத்துக் கட்டி வீடுகளை அமைத்தனர். மலைச் சாரலில் மன்னனுக்காக அமைக்கப்பட்ட வெள்ளிய நுரை போன்ற அழகிய அரண்மனை நடுவில் இருக்க, அதைச் சூழ்ந்து படைவீரர் உறையக் கட்டிய படை வீடுகள் வானத்தில் மீன்கள் நிறைந்திருந்த தோற்றத்தைத் தந்ததென்பார் கொங்குவேள்.[112] தறிகளில் வெண்மையான துணிகளை இழுத்துக் கட்டி நிரல் நிரலாக அமைக்கப்பட்ட பாடி வீடுகள் பாற்கடல் அலை எறிந்தது போன்றிருந்ததெனப் பிறிதோரிடத்திலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[113]

---

111. *ஐம்ப தினிரட்டி யவனச் சேரியும்*
எண்பதி னிரட்டி எறிபடைப் பாடியும்
அளப்பருஞ் சிறப்பின் ஆயிர மாகிய
தலைப்பெருஞ் சேனைத் தமிழர் சேரியும்
கொலைப்பெருங் கடுந்திறற் கொல்லர் சேரியும்
மிலேச்சச் சேரியும் தலைத்தலை சிறந்து
—பெருங். 3 : 4 : 8 - 13

112. பெருங். 1 : 57 : 21 - 27

113. *பால்வெண் கடலின் பனித்திரை என்ன*
நூல்வெண் மாடம் கோலொடு கொளீஇ
—பெருங். 1 : 57 : 112 - 13

பாடியில் வீடுகள் பல்வேறு அமைப்புகளுடன் இயற்றப் பட்டன. வெள்ளிய ஆடையாலாகிய சிறு குடிசை தூசுக் குடிஞை என்றும், துலாம் என்னும் உறுப்புடையதாக இயற் றப்பட்ட வீடு துலா மண்டபம் என்றும், பல குத்துக்கோல் களுடன் சுற்றிலும் திரையை மதிலாக வளைத்துச் செய்யப் பட்ட வீடு பல்காழ் திரை (மதில் திரை) என்றும், பெருங் கொடி நடப்பட்ட கொட்டில் படாகைக் கொட்டில் என்றும், கூடம் என்னும் உறுப்பைக் கொண்ட வீடு கூடம் என்றும் பெயர் பெற்றன. இத்தகு வீடுகள் ஒருசேர அமைந்து பாடி வீடு பேரழகுடன் விளங்கியது.[114] பகலில் உறங்கு வதற்குத் துணி அணையால் பொலிவுபெற்ற கட்டிலையுடைய இடங்கள் பகலணைப் பள்ளி எனப்பட்டன.[115]

114. பெருங். 2 : 12 : 42 - 52

115. துகிலிணைப் பொலிந்த பகலணைப் பள்ளி
—பெருங். 2 : 16 : 84

10. ஊர்திகள்

தரையிலும், நீரிலும், விண்ணிலும் பயணம் செல்ல மக்கள் பல்வேறு வகையான ஊர்திகளைப் பயன்படுத்துகின்றனர். பண்டை நாளில் தரைச் செலவிற்குப் பயன்பட்டவை தேர், வண்டி, சிவிகை என்பனவாம். அரசர்களும், போர் வீரர்களும், பெருஞ் செல்வர்களும் தேரைப் பயன்படுத்தினர். வண்டி பொதுமக்கள் ஊர்தியாய் விளங்கியது. சிவிகைகள் ஆள்களால் தூக்கிச் செல்லப் பட்டன. அவற்றைப் பெண்களே பெரும்பான்மை பயன் படுத்தினர்.

வையம்

வண்டி வையம் என்றழைக்கப்பட்டது. பொதுவாக இன்று அனைவராலும் மகிழ்வுந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆயினும் செல்வர்களுடைய ஊர்திகள் விலையுயர்ந்தவையாயும், வேலைப்பாடு மிக்கவையாயும், விசிறி வானொலிப் பெட்டி குளிர்சாதன அமைப்புப் போன்ற நல மிகு அமைப்புகளைக் கொண்டவையாயும் இருந்திடக் காண்கிறோம். இது போன்றே பண்டை நாளில் செல்வர்களுடைய வண்டிகளில் காணப்பட்ட வேலைப்பாடுகளைப் பெருங்கதை எடுத்துரைக்கிறது.

பொன் வையம்: நாடகக் கணிகை நருமதைக்குப் பிரச் சோதன மன்னன் ஒரு வண்டியைத் தந்தான். அதன் உறுப்புகள் மணிகளாலும், பொன்னாலும், யானை மருப்

யினுலும் செய்யப்பட்டிருந்தன. மரத்தால் செய்த உறுப்பு அதில் ஏதும் இல்லையாம்.[1] பவழங்களையும் பிற மணிகளையும் பதித்து, பசும் பொன்னல் சித்திரச் செயல் செய்த அழகோடும் வண்டிகள் அமைக்கப்பட்டன.[2]

வதுவை வையம்: மணப் பெண் ஏறிச் செல்லும் வண்டி வதுவை வையம் எனப்பட்டது. அக் காலத்தில் மகளுக்குக் கொடுத்த சீதனப் பொருள்களுள் அழகிய வண்டியும் ஒன்ருக இருந்தது. வாசவதத்தையின் தாய்க்குச் சீதனமாக வந்த வண்டி யவன நாட்டுத் தச்சரால் தாமரை வடிவில், பொன்னுற் செய்யப்பட்டுப் பவழங்களும், மணிகளும், ஒளி தவழும் முத்துகளும், பல்வேறு வேலைப்பாடு கொண்ட பளிங்குகளும் உரிய இடங்களில் பதிக்கப்பட்டுத் தனக்கிணையின்றி அழகியதாயிருந்தது.

கலைநல வையம்: வாசவதத்தைக்காக வண்டி செய்யப்பட்டதைக் குறிப்பிடுவது கொண்டு அந்நாளைய வண்டிகள் எவ்வளவு கலை நலம் வாய்ந்தவையாக இருந்தன என்பதை உணர முடிகிறது.[3] பொதிய மலையிற்றேன்றிய சந்தன மரம், அம் மலையிலேயே வளர்ந்த திமிச மரம், விந்திய மலைக் காட்டில் கிடைத்த யானைக் கொம்பு, மேரு மலையில் தோன்றிய பொன், மேற்றிசைக் கடலில் எடுத்த பவழம், தென்கடல் முத்து, வித்தியாதரர் மலையிற் கிடைத்த வெள்ளி, ஈழ நாட்டிலிருந்து கொணர்ந்த செம்பு, இமய மலையிற் பிறந்த வயிர மணிகள், கடாரத்தில் கிடைத்த இரும்பு ஆகியவை கொண்டு அவ் வண்டி செய்யப்பட்டதாம்! யவன நாட்டுக் கொல்லரும், மகத நாட்டு மணித்

---

1. மணியினும் பொன்னினும் மருப்பினும் அல்லது
மரத்தின் இயலாத் திருத்தகு வையம்
—பெருங். 1 : 36 : 29 - 30

2. பவழமும் மணியும் பாங்குபட விரீஇத்
திகழ்கதிர்ப் பசும்பொற் சித்திரச் செய்கை
வனப்பமை வையம் —பெருங். 3 : 7 : 45 - 47

3. பெருங். 1 : 58 : 30 - 75

தொழிலாளரும், வத்தவ நாட்டு வண்ணத் தொழிலாளரும் இணைந்து தங்கள் தங்கள் திறம் வெளிப்படும்படியாக அவ் வண்டியினைச் செய்தனர். எங்கெங்கு எவ்வெப் பொருள் கள் சிறந்திருந்தனவோ அங்கங்கிருந்த அவ்வப் பொருள் களைக் கொண்டு, எவ்வெத் தேயத்தினர் எவ்வெத் தொழி லில் தேர்ச்சி பெற்றிருந்தனரோ அவ் வந்நாட்டுத் தொழி லாளர்களைக் கொண்டு கலைநலம் சிறக்கப் பொருள்கள் செய்யப்பட்ட தன்மை வியத்தற்குரியதாயுள்ளது.

வைய விதானம் : வண்டிக் கூட்டில் மேல் விதானம் நீல வண்ணத்தில் வான் வெளிபோல அமைக்கப்பட்டது. வான் வெளியில் உள்ள கோள்கள், உடுக்கள் ஒப்ப மணி களும் முத்துகளும் அவ் விதானத்தில் பதிக்கப்பெற்றன. வண்டியிலிருந்த பொறிகள் விதானத்திலிருந்த முத்து களையும் மணிகளையும் நகர்த்தி வான் வெளியில் கோள் களும் மீன்களும் இயங்குவன போன்ற தோற்றத்தை உண் டாக்கின. வண்டியிற் செல்வோர் இருக்கையிற் சாய்ந்து விதானத்தை நோக்கும்போது கோள்களின் இயக்கத் துடன் விண்ணையே காண்பது போன்ற அமைப்புக் கொண்டதாய் அவ் வண்டி விளங்கியது.

கல்கத்தாவில் கோளகம் (Planetarium) ஒன்று உள்ளது. இஃது ஒரு திரைப்பட அரங்கைப் போன்றது. திரைப்பட அரங்கில் படத்தைத் திரையில் காண்கிறோம். கோளகத்தில் காட்சியினை அரங்கின் கூரையில் காட்டு கிறார்கள். கூரை கோள வடிவில் இருக்கிறது. நாற்காலிகள் சாய்ந்து உட்கார்ந்து கூரையைப் பார்ப்பதற்கேற்ற வகை யில் அமைக்கப்பட்டுள்ளன. அரங்கை இருளடையச் செய்து, கூரையில் வான் வெளியில் மீன்கள் இயங்கும் முறையை மின் விளக்கு அமைப்பைக் கொண்டு காட்டு கின்றனர். இரவில் வான் வெளியைக் காண்பதுபோலவே காட்சி அமைகிறது. இதே அமைப்பு வாசவதத்தையின் வண்டியில் இருந்ததாகத் தெரிகிறது. கோளகம் இந்தியா வில் கல்கத்தாவில் மட்டுமே உள்ளது; அதுவும் ஓரிடத்தில்

நிலையாக இருக்கக் கூடியது. வாசவதத்தையின் வண்டியோ இயங்கும் கோளகமாக (Mobile Planetarium) இருந்திருக்கிறது என்பதை எண்ணும்போது வியப்பு மேலிடுகிறது.

நுகர் பொருள்கள்: வண்டியினுள் அகிலைப் புகைத்து நறுமணமூட்டினர். பட்டினால் பிணித்த கட்டிலின்மேல் மெத்தைகளை அடுக்குகளாக அடுக்கி அமர வசதி செய் திருந்தனர். வண்டிக் கூட்டின் உட்புறச் சுவர்களில் நுகர் பொருள்களை அடுக்கி வைக்கப் படித்தட்டுகள் (Shelves) அமைக்கப்பட்டன. வண்டியின் முகப்பில் முத்து மாலைகள் தொங்க விடப்பட்டன. பொன்னாலியன்ற இலை மாலை களைப் பக்கங்கள் எங்கும் சித்திரம் வரைந்தாற்போல் கொக்கிகளில் தொங்க விட்டனர். ஆங்காங்கே கண்ணாடி களைப் பதித்தும் அழகு செய்தனர்.[4]

வண்டிக் கூட்டின் உட்புற ஓரங்களில் ஒப்பனை செய் யப்பட்ட இயந்திரப் பாவைகள் நிறுத்தப்பட்டிருந்தன. அவை வண்டியினுள் இருப்பார்க்குத் தாமே மாலை சூட்டியும், வெள்ளடை ஈந்தும், பனிநீர் தெளித்தும், சாமரை இரட்டியும், சந்தனம் பூசியும், திலகம் இட்டும் பணிவிடை செய்யத்தக்க பொறியமைப்புடன் கூடியவை யாக இருந்தன. மேலும் பக்கச் சுவர்களில் இயற்கைக் காட்சிகள் எழிலுற வரையப்பட்டிருந்தன. சோலைகளும் அவற்றினூடே யானைகளும் பிற விலங்குகளும் ஒரு புறம் வரையப்பட்டிருந்தன; இன்னொரு புறம் நாடகமாடும் கூத்தரும் விறலியரும் காட்சி தந்தனர்; மலர்களும் பூங் கொடிகளும் ஆங்காங்கே பளிச்சிட்டன. இவ்வாறு உலகமே அதனுள் அடங்கியது போன்று அவ் வண்டி எழிலுற அமைக்கப்பட்டிருந்தது.

---

4. பெருங். 3 : 5 : 48 – 59

கஞ்சிகை: வண்டிக் கூட்டின் முன்னும் பின்னும் தொங்கவிடப்பட்டிருந்த திரைச் சீலைகள் கஞ்சிகை எனப் பட்டன. அவற்றை வேண்டியபோது சுருக்கிக் கொள்ள முடியுமாதலால் சுருக்குக் கஞ்சிகை[5] என்றும் அழைக்கப் பட்டன. அத் திரைச் சீலைகள் வெண்முகிலை விரித்து வைத்தாற்போன்ற தோற்றத்தைத் தந்தன.[6] கஞ்சிகை வண்டியினுள் செல்வோரை மறைத்திருக்கும்.[7] பல்வேறு வண்ணங்களைக் கொண்டதாகவும் கஞ்சிகை இருப்ப துண்டு.

எருது : வண்டியை இழுத்த எருதுகளின் முகங்களில் முத்து மாலைகள் அணிவிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டன; கழுத்தைப் பொன் மாலைகள் அழகு செய்தன. வெண்மை யான எருதுகள் நுகத்தைத் தாங்கி விரைந்து இழுத்த தோற்றம் வெண்ணிறப் பறவைகள் பறப்பதை ஒத்திருந் தது.[8] நெய்யின் நிறம் கொண்ட பசிய மஞ்சளால் எருது களின் கூரிய கொம்புகள் அழகெய்தும்படி வண்ணம் தீட் டப்பட்டு நெற்றி மாலைகளும் சூட்டப்பட்டிருந்தன.[9]

நீராட்டு விழாவிற்காக மகளிர் ஏறிய வண்டிகள் சென்ற விதம் பெருங்கதையில் அழகுறப் பேசப்படுகிறது.[10] ஒன் றன்பின் ஒன்றாக எண்ணிறந்த வண்டிகள் சென்றன.

---

5. பெருங். 3 : 13 : 54
6. மஞ்சுவிரித் தன்ன வைய வாயிற்
கஞ்சிகை —பெருங். 3 : 6 : 5-6
7. வையம் தனக்குமறை யாகிய
கஞ்சிகை —பெருங். 3 : 7 : 47-48
8. முத்த மாலை முகமிசை அணிந்து
பொற்றார் புனைந்த புள்ளியற் பாண்டில்
—பெருங். 1 : 36 : 31-32
9. நெய்ந்நிறங் கொண்ட பைந்நிற மஞ்சளின்
வைம்மருப் பணிபெற வண்ணங் கொளீஇக்
கைவினைக் கண்ணி கவின்பெறச் சூட்டி
—பெருங். 3 : 5 : 60-62
10. பெருங். 1 : 38 : 30-41

மூக்கணைக் கயிற்றுக்கு அடங்காமல் எருதுகள் பெருநடை யிட்டன; தாம் இயங்குதற்கு இடம் கிட்டாமையால் முழக்க மிட்டுத் தம் குளம்புகளால் நிலத்தைப் பறித்தன; அருகே சங்கொலி கேட்கவே, வெருண்டு அமைதி இல்லாதன வாய்த் துள்ளின. உள்ளிருந்த மகளிர் எருதுகளின் வெருட்சி கண்டு நடுங்கித் தம்மைப் பாதுகாக்கும்படிப் பாகரை வேண்டினர். பாகர்களும் மகளிர் நடுக்கம் கண்டு இரங்கி, வாயால் உரப்பி எருதுகளை அமைதிப்படுத்தினர். இன்றும் வண்டி மாடுகள் கட்டுக்கடங்காமல் இழுத்து நிற்கு மாறுல் ஓட்டுவோர் கயிற்றை இழுத்துப் பிடித்து, 'ஓஓ' என ஓசையிட்டு மாடுகளை அடக்கி அமைதிப்படுத்துவ தைக் காணலாம். அக் காட்சியை அப்படியே படம் பிடித்ததுபோலப் பெருங்கதை அடிகள் அமைந்து நிற் கின்றன.

சில வழக்கங்கள் : பெண்டிர் சென்ற வண்டிகளைப் பெண்களே ஓட்டிச் சென்ற வழக்கமும் இருந்திருக்கிறது.[11] வண்டியில் ஏறும் வேளையில் எருதுகள் இடக்குச் செய்தால் அதனைத் தீ நிமித்தமாகக் கருதி வண்டியில் பயணம் செய்யார். வாசவதத்தை நீராட்டு விழாவுக்குச் செல்ல வண்டியேற வந்தபொழுது வண்டியிற் பூட்டுவதற்காகக் கொண்டுவரப்பட்ட எருது தன் வலக் காலால் நிலத்தை எற்றி, கழுத்து மாலையை அறுத்துக்கொண்டு காற்குளம்பு வழுக்கலுற நின்றது. அது கண்ட பாகன், "இவ் வண்டி பயணத்திற்கு ஏற்றதன்று; இதனைக் கொட்டிலிற் செலுத் துக" என்று கூறி அதில் ஏருது விலக்கி அகற்றினுன்.[12]

11. (i) கோல்கொள் கன்னியர் மேல்கொண் டேறி
விசிபிணி யுறுத்த வெண்கோட்டு ஊர்தி
—பெருங். 1 : 38 : 156 - 57

(ii) பாகனை ஒழித்துக் கூன்மகள் கோல்கொள
—பெருங். 3 : 5 : 97

12. பெருங். 1 : 38 : 243 - 47

ஆணி வையம் : அந் நாளில் பொறிகளால் இயங்கிய வண்டிகளும் செய்யப்பட்டன என்று தெரிகிறது. யூகி தான் செல்ல ஓர் இயந்திர வண்டியைப் பயன்படுத்தினான். அவ் வண்டி யவன வீரன் ஒருவனால் செய்யப்பட்டது; ஞாயிற்றின் தேர் விண் வெளியில் இயங்குவது போன்று வேகத்துடன் செல்லக் கூடியது. அது யானை மருப்பாலான பலகைகளைக் கொண்டிருந்தது; இரும்பாலான இறகுகளைக் கொண்டிருந்தது; குதிரை முதலியன பூட்டப்படாமல் இயந்திரத்தாலேயே இயங்கும் தன்மையைக் கொண்டிருந்தது.[13] அதனை ஓட்டுதற்கும் நிறுத்துதற்கும் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். வண்டியின் விசையாணியைத் தக்கவாறு முறுக்கி வேண்டிய திசையில் அதனைச் செலுத்தலாம்.[14] ஆணியைக் கொண்டு இயங்கிய வண்டியாதலின் அஃது ஆணி வையம்[15] என்று பெயர் பெற்றது. வண்டியை வேண்டும்போது பூட்டிக் கொள்ளவும் வேண்டாதபோது உறுப்புறுப்பாகப் பிரித்துக் கொள்ளவும் முடியும். அவ்வாறு செய்வதற்குப் பயிற்சி பெற்றவர்கள் இருந்தார்கள்.[16] யூகி புட்பக நகரத்தை அடைந்ததும் தான் ஏறிச் சென்ற ஆணி வையத்தைப் பிரித்து, பாதுகாப்பாகப் பிறர் அறியா வகையில் மறைத்து வைத்தான் என்று கொங்குவேள் குறிப்பிடுகின்றார்.[17]

---

13. (i) பூணி இன்றியும் பொறியின் இயங்கும்
மாண்வினை வையம்
—பெருங். 2 : 8 : 177 - 78

(ii) பூணி இன்றிப் பொறிவிசைக் கொளீஇ
உள்ளிய எல்லை ஓட்டி —பெருங். 2 : 9 : 15 - 16

14. வித்தக ஆணி வேண்டுவயின் முறுக்கி
—பெருங். 2 : 8 : 193

15. பெருங். 2 : 9 : 14

16. படைத்துப் பெயர்த்தற்குப் பாடமை வித்தகர்
—பெருங். 2 : 8 : 180

17. புறத்தோர் அறியா மறைப்பமை மாயமொடு
ஆணி வையம் அரும்பொறி கலக்கி
மாண வைத்து —பெருங். 2 : 9 : 27 - 29

சிவிகை

குறுக்கே மரமிடப்பட்டு அம் மரத்தின் இடையே அமர்தற்கேற்ற விதான அமைப்புடன் கூடியது சிவிகை. சிவிகை ஆட்களால் சுமக்கப்படுவது. 'சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான்'[18] என்பார் திருவள்ளுவர். சிவிகை சுமப்பவர்கள் 'சிலத மாக்கள்'[19] எனப்பட்டனர். அவர்கள் மிகவும் வலிமை வாய்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் சிவிகையைச் சுமந்து சென்றபோது உடல் களைப்பை மறக்க, வாயால் ஓசையெழுப்பிச் சென்றனர்.[20] சிவிகை யானை மருப்பினால் செய்யப்படுவதுமுண்டு.[21] சிவிகையில் அமர்வதற்காக இருக்கும் பலகை வட்டணைப் பலகை எனப்படும். உட்காருவதற்கான வட்டமான அணையை தாங்கியிருந்த பலகையாதலின் அது வட்டணைப் பலகை எனப்பட்டது. அப் பலகை ஓவியத்துறை கைபோயவர்களால் எழுதப்பட்ட ஓவியங்களைக் கொண்டு அழகு மிக்கதாக இருந்தது. பளிங்கும் மணியும் சிவிகையின் பக்கங்களில் பதிக்கப்பட்டன.[22]

சிவிகைகளையே அவற்றின் நான்கு பக்கங்களையும் பலகைகளால் வளைத்து, உருளை முதலிய உறுப்புகளை இணைத்து, எருதுகள் பூட்டிய வண்டிகளாக மாற்றிக் கொள்வதுமுண்டு.[23] மாடம்போல் அமைக்கப்பட்ட சிவிகை

---

18 குறள் 37

19. சிலத மாக்களொடு சிவிகை வருகென
—பெருங். 3 : 13 : 11

20. வலிகெழு மொய்ம்பிற் சிலத மாக்கள்
அதிர்ப்பின் உசும்ப —பெருங். 3 : 13 : 58 - 59

21. மருப்பிய லூர்தி —பெருங். 1 : 38 : 11

22. வல்லவன் எழுதிய பல்பூம் பத்திக்
கட்டெழில் சேர்ந்த வட்டணைப் பலகைப்
பளிக்குமணிச் சிவிகை —பெருங். 1 : 42 : 62 - 64

23. பெருங். 1 : 38 : 141 - 60

மாடச் சிவிகை அல்லது கச்சணிமாடம்[24] என்று அழைக்கப்பட்டது. சிவிகையில் அமர்ந்திருப்போரை மறைக்கப் பக்கங்களில் உருவு திரைகள் (கஞ்சிகைகள்) தொங்க விடப்பட்டன. அத் திரைச் சீலைகள் ஐவகை வண்ணங்களையும் கூட்டித் தீற்றிக் கைத்தொழில் நலம் சிறந்ததாக விளங்கின.[25] உருக்கிய சாதிலிங்கத்தால் வழிக்கப்பட்டுச் சிவந்த நிறத்துடனும் இக் கஞ்சிகைகள் விளங்குவதுண்டு.[26]

தேர்

தரையில் பயணம் செய்யப் பயன்பட்ட மற்றோர் ஊர்தி தேர்.[27] தேர்ச் சக்கரங்களின் குடங்களும், ஆரக்கால்களும் வயிரமேறிய மரங்களால் செய்யப்பட்டன. சக்கரங்களின்மேல் அகன்ற தட்டினைப் பொருத்தி, அதன்மீது பல்வேறு மணிகள் பதித்த சுற்றுப் பலகைகளை இணைத்துத் தேர்களைச் செய்தனர். உருளைகள் நிலத்தில் அழுந்திப் பதியாமல் செல்லத்தக்கனவாய் அமைக்கப்பட்டன. நுகத்தில் பூட்டப்பட்ட குதிரைகள் தேர்களை இழுத்தன.[28] தேர்கள் நிறுத்தி வைக்கப்பட்ட இடங்கள் தேர்நிலைக் கொட்டில்கள் எனப்பட்டன.[29]

நீரூர்தி

நீரில் செல்ல பண்டை நாளில் பல்வேறு வகையான படகுகள் இருந்தன. ஆறுகளில் புதுப் புனல் பொங்கி

---

24. பெருங். 1 : 38 : 43
25. ஐவகை வண்ணமும் ஆகரித் தூட்டிக்
    கைவினை நுனித்த கச்சணி கஞ்சிகை
    —பெருங். 1 : 38 : 149 - 50
26. அரக்குருக் கூட்டிய அரத்தக் கஞ்சிகை
    —பெருங். 1 : 38 : 252
27. பெருங். 1 : 39 : 9
28. ,, 1 : 48 : 15 - 21
29. ,, 2 : 7 : 143

வரும்போது ஆண்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாக நீர் விளையாடச் செல்வர். பெரிய நீர் நிலைகளில் நீர் விளையாட்டு நடைபெறுவதுண்டு. பசுமையான இலைகள் மிதந்த நீர் நிலைகளில் துடுப்பைக் கொண்டு செலுத்தப் பட்டபோது படகுகள் வேகமாகச் சென்ற தோற்றம் இலைகளின் நடுவே வாரைக் கிடத்தியது போன்றிருந்தது என்று கொங்குவேள் நயமுற நவில்கிருர். கண் சென்ற வேகத்திற்குப் படகும் சென்றதால், படகின் பாதை நீர் நிலையின் குறுக்கே நீளமாகக் கிடத்தப்பட்ட தோல் வார்போலக் காணப்பட்டது.[30] படகு அம்பி எனவும் அழைக்கப் பட்டது. அந் நாளில் பல்வகையான வேலைப்பாடுகள் கொண்ட அம்பிகள் இருந்தன. நீராட்டு விழாவுக்குச் சென்றோர் யானை, சிங்கம், பெண் மான், புலி, பல்வகையான பறவைகள் ஆகியவற்றின் முகங்களை முகப்பில் இணைத்து அவ் வுயிரினங்களின் தோற்றமமைந்த அம்பிகளைச் செய்தனர்.[31] முகப்பிலிருந்த உருவத்தை வைத்து அம்பிகள் பெயர் பெற்றன. குதிரை முக முகப்புடையதைப் பரிமுக அம்பி என்றும், யானை முகத்தை யுடையதைக் கரி முக அம்பி என்றும் இளங்கோவடிகள் குறிப்பிடுகிருர்.[32] அரிமுக அம்பி, பிணைமுக அம்பி, புலிமுக அம்பி எனப் பல் வகையான அம்பிகள் அன்று தமிழ் நாட்டு ஆறுகளில் எழிலுற மிதந்தன என்பதைப் பெருங்கதை வாயிலாக நாம் அறிகிரும்.

---

30. வள்ளிலைப் பரப்பின் வள்பெறிந் தன்ன
துள்ளியல் வட்டிகை துடிப்பிற் கடைஇ
—பெருங். 1 : 40 : 45 - 46

31. யானையும் சுரியுளை அரிமான் ஏறும்
மானிற் பெடையும் வாள்வரி உழுவையும்
புள்ளும் மாக்களும் உள்ளுறுத் தியன்ற
நொய்ம்மர நெடும்புணை கைம்முதற் றழீஇ
—பெருங். 2 : 11 : 30 - 33

32. சிலப். 13 : 176

நீரணி மாடம்: நீரணி மாடம் என்பது ஒரு வகையான உல்லாசப் படகு. குடும்பத்தோடு நாள் கணக்கில் நீர் நிலைகளில் தங்கி மகிழ்வதற்காகக் காஷ்மீர் போன்ற இடங்களில் காணப்படுகின்ற படகு வகையைச் சேர்ந்தது எனலாம். இப்படகின் நடுவே வேலைப்பாடுடன் கூடிய சிறு மண்டபம் ஒன்று இருந்ததெனை அறிகிறோம். "நீரணி காண்போர் நிறைமாடம் ஊர்குவோர்"[33] என்ற பரிபாடல் அடி நீரணி மாடம் பற்றிக் குறிப்பிடுகிறது. கோவலனும் கண்ணகியும் மதுரை செல்லும்போது வையை ஆற்றை நீரணி மாடத்தில் ஏறிக் கடந்தனர் என இளங்கோ கூறுகிறார்.[34] நீரணி மாடம் செய்யப்பட்ட முறையைக் கொங்கு வேள் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். பனை, சிறு மூங்கில், கமுகு ஆகியவற்றின் கழிகளால் கால்கள் அமைத்து இடையிடையே நெட்டி, மயிற் பீலி முதலியவற்றால் வரிச்சுகளைக் கட்டினர். இடை வெளியை நெருக்கமாக நெய்யப்பட்ட வெள்ளைத் துணியால் மறைத்தனர். மான் கண் வடிவில் அமைந்த சாளரங்களும், முத்து மாலைகள் தொங்கவிடப் பட்ட சாளரங்களும், இரும்புக் கம்பிகளைக் கொண்ட சாளரங்களும் பொருத்தமான இடங்களில் அமைந்தன. திரைச் சீலைகளில் பொன்னிற ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. மாட உறுப்புகளைச் செய்ய வெள்ளிய வாழைத் தண்டுகளைப் பயன்படுத்தினர். மாடத்தின் தளம் எண்கோண வடிவினதாய் இருந்தது. நீரணி மாடம் எழுச்சியும் எழிலும் அமைந்த ஏழு தளங்களைக் கொண்டிருந்தது.[35]

நாவாய்: நீரில் பயணம்செய்யப் பயன்பட்ட ஊர்திகள் 'நாவாய்' என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்டன.

---

33. பரி. 10 : 27
34. காரணி பூம்பொழிற் காவிரிப் பேர்யாற்று
    நீரணி மாடத்து நெடுந்துறை போகி
    மாதரும் கணவனும் மாதவத் தாட்டியும்
    தீதுநீர் நியமத் தென்கரை எய்தி —சிலப். 10 : 214 - 17
35. பெருங். 1 : 40 : 5 - 17

இந் நாவாய்களை வலிமை மிக்க மள்ளர்கள் செய்து வந்தனர். அத்தகைய நாவாய் அமைக்கும் மள்ளர்க்கு அவர் தொழில் செய்யுமிடங்களில் கள் காய்ச்சித் தந்தனர். அதற்கெனப் பெண்கள் அமர்த்தப்பட்டிருந்தனர்.[36]

விண்ணூர்தி

விண்ணில் இயங்குவதற்கான ஊர்திகள் கொங்குவேள் காலத்தில் தமிழ் நாட்டில் இருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் விண்ணில் இயங்கிய ஓர் ஊர்தி பற்றி அவர் குறித்துச் செல்கிறார்: தரையில் பொறியால் ஊர்ந்த வண்டியை யவன வீரர் செய்து தந்ததாகக் குறிப்பிடும் ஆசிரியர் வான ஊர்தியை விண்ணுலக இயக்கன் ஒருவன் மண்ணில் வந்து செய்து தந்ததாகக் குறிப்பிடுவதால் இவ் வூர்தி புலவரின் கற்பனையே என்று எண்ணத் தோன்றுகிறது. கற்பனையே யானாலும் விண்ணில் இயங்க ஓர் ஊர்தியைக் காண முடியும் என்ற எண்ணம் புலவர் மனத்தில் நிழலிட்டதை நாம் குறைத்து மதித்திட முடியாது. வாசவதத்தை கருவுற்றிருந்த வேளை அவள் நினைத்ததையெல்லாம் நிறைவேற்றித் தர உதயணன் விழைந்தான். சிந்தனை வயப்பட்டவளாகவே தோன்றிய அவளை, அவள் விருப்பம் யாது என வற்புறுத்திக் கேட்ட பொழுது, அவள் வானத்தே பறந்து திரியத் தன் மனம் விரும்புவதாகக் கூறினாள். வானத்தே செலுத்துதற்குரிய ஊர்தி எதுவும் அக் காலை இல்லாதிருந்தமையால், அவளே தன் விருப்பம் நகைப்புக்கிடமானது என்றும் குறிப்பிடுகின்றாள்.[37]

---

36. நாவாய் பண்ணும் மாவிறல் மள்ளர்க்குக்
கள்ளடு மகடூஉ —பெருங். 1 : 40 : 69 - 70

37. இசையா அரும்பொருள் இற்றென உரைத்தல்
வசைதீர் வையத்து நகையது ஆதலின்
சொல்லியது இலன்என மெல்லிழை மிழற்ற
—பெருங். 5 : 1 : 233 - 35

விண்ணில் ஊர்ந்து செல்லத்தக்க ஓர் ஊர்தியை எங்ஙனமேனும் செய்து முடிக்க வேண்டுமென உதயணன் விழைந்தான். நாட்டில் உள்ள தச்சரையெல்லாம் அழைத்துத் தன் விழைவை வெளிப்படுத்தினன். அவர்களோ நிலத்திலும் நீரிலும் இயங்கக்கூடிய இயந்திர ஊர்திகளையே தங்களால் செய்யமுடியும் என்றும் விசும்பிற் செல்லும் இயந்திரத்தைச் செய்ய அறிந்ததில்லை என்றும் கூறினர்.[38]

விண்ணுலகிலிருந்து ஓர் இயக்கன், தச்சன் வடிவுடன் வந்து உதயணன் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில் விண்ணூர்தி ஒன்றைச் செய்து தந்தான். அவ் விமானத்தினை எவ்வாறு இயக்குவது என்று விளக்குமாறு உதயணன் தச்சனைக் கேட்டான். அவனே, ''அரசே! விமானத்தை விரைந்து செலுத்துவதற்கும், நிறுத்துவதற்கும் உள்ள பொறிகள் உன் உள்ளமேயாகும்'' என்று குறிப்பிட்டுக் கூறி, 'நீ நினைத்தவாறு இஃது இயங்கும்' என்பதை வெளிப்படுத்தினன். இக் கூற்றிலிருந்து, அந் நாளில் அத்தகைய பொறியேதும் நடைமுறையில் இருந்ததில்லை என்பதும், கதையில் கூறப்படும் ஊர்தி புலவரின் கற்பனையில் தோன்றிய ஊர்தியே என்பதும் தெளிவாகிறது. அவர் கண்ட கற்பனை ஊர்தி முகிலைக் கிழித்துக் கொண்டு விரும்பிய திசைகளிளெல்லாம், மேலே மேலே ஏறிப் பறந்தது.[39] தரையில் கிடக்கும் மூங்கில் இலை சுழல் காற்றில் சிக்கும்போது வில்லிலிருந்து புறப்படும் அம்பெனத் திடீரென மேலேறும்; சுழல் காற்று நின்றதும் மேலேறிய அந்த இலை சிறிது சிறிதாக ஆடி அசைந்து கீழிறங்கி நிலத்தை அடையும். அதுபோன்றே விமானமும் மேலேறியபோது

---

38. பெருங். 5 : 4 : 21 - 25

39. முகில்உளம் கிழிய அகலப் போகி
வடக்கும் மேற்கும் வானுற நிமிர்ந்து
—பெருங். 5 : 4 : 87 - 88

விரைந்து சென்றது; இறங்கியபோது நிதானமாகத் தாழ்ந்து தாழ்ந்து நிலத்தை அடைந்தது.[40]

கொங்குவேள் கண்ட அந்தக் கற்பனை ஊர்தி இமயம் முதல் குமரி வரை பறந்து சென்று மீண்டும் திரும்பி இமயச் சாரலை இனிதே அடைந்தது!

40. எறிவளி எடுப்ப எழுந்துநிலம் கொள்ளும்
வெதிரிலை வீழ்ச்சியின் வேண்டிடத் தசைஇ
—பெருங். 5 : 4 : 114 – 15

11. கலைநலப் பொருள்கள்

பெருங்கதை அரச குடும்பத்தினர் நிறைந்து வருகின்ற கதை ஆதலின், அரண்மனைகளில் இருந்தனவும் ஆங்கிருந்தோர் பயன்படுத்தியனவுமான கலைநலப் பொருள்களை நாம் அறிய வாய்ப்பேற்படுகிறது.

கட்டில்

அரண்மனைகளில் தாமரைப் பூ வடிவில் தங்கத்தால் செய்யப்பட்ட கட்டில்கள் இருந்தன. அவற்றின் கால்கள் பவழத்தில் அமைந்தன. கட்டிற் பரப்பில் மணிக் கால்கள் நிறுவி அவற்றின்மீது விதானம் அமைத்தனர். விதானத்தி லிருந்து மாலைகள் தொங்கவிடப்பட்டன. அத்தகைய கட்டில்களை யவனர் செய்தனர்.[1] கட்டிற் கால்கள் வெள்ளிய யானைத் தந்தங்களினாலும் செய்யப்பட்டன. அவை 'வெண் கால் அமளி'[2] எனப்பட்டன.

பள்ளிக் கட்டில்: பள்ளியறைகளில் வேலைப்பாடமைந்த கட்டில்கள் இருந்தன. அறையின் முக்கிய இடங்களிலெல்லாம் அகல் விளக்கேந்திய யவனப் பாவைகள் நின்றன.

---

1. அணிக்காற் பவழத்து யவனர் இயற்றிய
மணிக்கால் விதானத்து மாலை தொடர்ந்த
தமனியத் தியன்ற தாமரைப் பள்ளி
—பெருங். 1 : 33 : 192-94

2. பெருங். 1 : 33 : 63; 1 : 35 : 99; 4 - 8 : 26

நெய் சொரியப்பட்ட அகலுள் கிடந்த திரிகள் ஒளியுமிழ்ந்தன. அறையினுள் பளிங்கு, மணியால் இயன்ற கைச் சுரிகையினையும் பவழத்தாலான கால்களையும் கொண்ட கட்டில் இருந்தது.[3] கட்டிற் கால்கள் புலி மூரி நிமிர்ந்த காலத்தில் அதன் கால்கள் இருந்த தோற்றத்திலிருந்தன.[4] இதைப் புலிக்காலமளி எனக் கலித்தொகையும் குறிப்பிடும்.[5] பவழ மாலைகளும், மணி மாலைகளும், முத்துக் கோவைகளும் கட்டிலின் முகப்புகள் தோறும் தொங்கின. அம் மாலைகளின் மையத்தில் கண்ணாடிகள் பதிக்கப்பட்டு ஒளி வீசின. ஐவேறு நிறங்களால் பல்வேறு வகையான பூக்கள், கொடி கவ்விய மீன், களிறு, பிடி, அன்ன வீணை, அரிமா ஏறு, சோலை, பாவை, பறவை போன்ற ஓவியங்களை எழுதிய திரை கட்டிலின் விதானமாய் அமைந்திருந்தது.[6] அகிற் புகை முறையாக ஊட்டப்பட்டு, பள்ளியறை மணம் நிறைந்ததாய் விளங்கியது.[7]

படுக்கை

கட்டிலின்மேல் மயிரால் செய்யப்பட்ட பூ வேலை அமைந்த போர்வையையும், மயிர்க் கம்பளத்தையும் விரித்தனர். அவற்றின் மீது வெளிநாட்டிலிருந்தும் உள் நாட்டிலிருந்தும் கிடைத்த படுக்கைகளுள் ஆராய்ந்தெடுத்த அழகிய படுக்கைகள் பரப்பப்பட்டன.[8] எலிமயிர்க்

---

3. வேண்டிடந் தோறும் தூண்டுதிரிக் கொளீஇக்
கைவயிற் கொண்ட நெய்யகற் சொரியும்
யவனப் பாவை அணிவிளக் கழல
—பெருங். 1 : 47 : 173 - 75
4. வாள்வரி வயமான் மூரி நிமிர்வின்
நிலைக்கால் —பெருங். 3 : 14 : 53 - 54
5. கலி. 147 : 178
6. பெருங். 3 : 14 : 65 - 80
7. காழகில் நறும்புகை ஊழ்சென் றுண்ட
மணிக்கால் கட்டிலுள் —பெருங். 3 : 13 : 86 - 87
8. பெருங். 1 : 47 : 179 - 82

க்ம்பளம் இருந்தமையை. ''மயிரெலியின் போர்வை யொடெம் மன்னன் விடுத்தானே'' எனவும், ''எலி மயிர்ப் போர்வை வைத்து'' எனவும், ''எலிமயிர்த் தொழிற் பொங்கு பூம்புகைப் போர்வை மேயினார்'' எனவும், ''செந்நெருப்புணுஞ் செவ்வெலிம்மயிர் அந் நெருப்பள வாயபொற் கம்பலம்'' எனவும் வரும் சீவக சிந்தாமணிப் பாடல்களால் அறியலாம்.[9] மயிராலும் தோலா லும் நூலாலும் இயற்றப்பட்டதும் மிக்க மலர் பரப்பப்பட்டது மான படுக்கையைக் கொங்குவேள் வேறோரிடத்திலும் குறிப்பிடக் காண்கிறோம்.[10]

ஐந்து மூன்றடுத்த அமளி: படுக்கைகள் ஓவியத் தொழிலால் பொலிவு பெற்றிருந்தன; வெண்ணெய் போன்று ஊற்றினிமை உடையனவாயிருந்தன; பருவத் திற்கு ஏற்றார்போன்று அமைக்கப்பட்டன.[11] கட்டில்மீது பதினைந்து அடைகளாகப் படுக்கை விரிக்கப்பட்டது. சிறு பூளை, செம்பஞ்சு, வெண்பஞ்சு, சேணம், அன்னத் தூவி என்ற ஐவகை மென்மைப் பொருள்களைத் திணித்துச் செய்த அணைகளில் ஒவ்வொன்றிலும் மும்மூன்றாக மொத்தம் பதினைந்து அடுக்குகளைப் படுக்கை கொண் டிருந்தது.[12] இச் செய்தி கலித்தொகையில் 'ஐந்து மூன்றடுத்த அமளி'[13] எனவும், சீவக சிந்தாமணியில்

---

9. சீவக. 1874, 2471, 2680, 2686
10. மயிரினும் தோலினும் நூலினும் இயன்ற
பயில்பூஞ் சேக்கை —பெருங். 4 : 6 : 76 - 77
11. பொழுதிற் கொத்த தொழில வாகி
எழுதுவினைப் பொலிந்த இழுதுறழ் மென்மைய
முறைமையின் அடுத்த குறைவில் கோலமொடு
நிரப்பம் எய்திய நேர்பூம் பொங்கணை
பெருங். 3 : 14 : 58 - 61
12. விதியிற் புனைந்த வித்தகக் கைவினைப்
பதினைந் தமைந்த படையமை சேக்கையுள்
—பெருங். 4 : 5 : 50 - 51
13. கலி. 10 : 10

"ஐந்து மூன்றடுத்த செல்வத் தமளி'[14] எனவும், நைடதத்தில் 'மூவைந்தடுக்கிய அமளி'[15] எனவும் கூறப் பட்டிருப்பதைக் காணலாம்.

அன்னத்தூவி அணை: அன்னப் பறவைகளின் மெல்லிய மயிரைத் தொகுத்துச் செறித்துப் படுக்கைக்குத் தேவையான அணைகள் தயாரிக்கப்பட்டன.[16] அன்னப் பறவைகள் பொழிலிற் புகுந்து தம்முள் காதலுற்றுப் புணரும்போது அவ் வின்ப உணர்ச்சியால் புளகிக்கும் வேளை உதிர்கின்ற மென்மையான தூவிகளைத் தொகுத்து அணை இயற்றும் தன்மையை, "துணைபுணர் அன்னத் தூவியிற் செறித்த இணையணை"[17] என இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். இதற்கு, "தன் சேவலோடு புணர்ந்த அன்னப் பேடை அப் புணர்ச்சியான் உருகி உதிர்த்த வயிற்றின் மயிர் எஃகிப் பெய்த பல்வகை அணைமீதே" என்று அடியார்க்கு நல்லார் உரை எழுதியிருப்பதும் இங்கு நோக்கத் தக்கதாம்.

இருக்கை

அரிமா இருக்கை: அரசனோ அன்றி இறைவனோ அமர்ந்த கட்டில் சிங்க உருவங்கள் சுமக்குமாறு அழகுறச் செய்யப்பட்டன. மூலைக்கொரு சிங்கமாக முகங்கள் வெளிப்புறம் தோன்றுமாறு நான்கு சிங்க உருவங்கள் நிற்க, அவற்றின் பிடர்மீது பலகை அமைத்து அவை அமைக்கப்பெற்றன. பின்புறச் சிங்கங்கள் இரண்டும் தாழ்ந்து குகைக்குள் நுழைவன போன்ற தோற்றத் தையும், முன்புறச் சிங்கங்கள் இரண்டும் மூரி நிமிர்ந்து

14. சீவக. 838

15. நைடதம், மணம்புரி. 26

16. வாவிப் புள்ளின் தூவி விம்மிய
—பெருங். 1 : 56 : 135

17. சிலப். 4 : 66 – 67

எழுகின்ற தோற்றத்தையும் கொண்டிருந்தன. கூரிய பற்கள் வெளியே தோற்றமளிக்குமாறு அவற்றின் வாய்கள் வயிர மணிகளால் இழைக்கப்பட்டிருந்தன. சுடர் வீசும் மணிகள் கண்களாகப் பதிக்கப்பட்டன. நாக்கு சிவந்த பவழத்தாலும், காதுகள் மரகதத்தாலும் செய்யப்பட்டன. வாய் அகன்றும், தத்தம் வாயில் தாமே புகுந்துவிடுமளவிலான சிறிய இடைகளைக் கொண்டும் அச் சிங்கங்கள் அழகுற விளங்கின. கால்கள் மணிக் கோவைகளால் இயற்றப்பட்டன. எதிரே நிற்போர் உருவம் தன்னுள் தெரியும்படியாகப் பளபளப்புடன் விளங்கிய பொற்பலகை சிங்கங்களின் பிடர்மீது பொருத்தப்பட்டு இருக்கையாயிற்று.[18]

அவ் விருக்கையின் மீது நூற்புத் தொழில் நுணுக்கமுள்ளளோரால் நூற்கப்பட்டு, வெள்ளரக்கூட்டிய வெள்ளிய நூலால் பின்னப்பட்டு, பால் பரவினாற்போல, பஞ்சாலியன்ற மென்மையான அணை இடப்பட்டிருந்தது.[19] இவ் விருக்கையைக் கொங்குவேள் 'அரிமா சுமந்த ஆசனம்'[20] என்றும், 'சீயம் சுமந்த செம்பொன் ஆசனம்'[21] என்றும் குறிப்பிடுகிறார்.

கோலக் கட்டில் : மணவிழா நிகழுங்காலை மணமக்கள் வீற்றிருக்க நுணுக்கமான வேலைப்பாடுகளைக் கொண்ட இருக்கைகள் தொழில் வல்லோரால் இயற்றப்பட்டன. மணிகளாலான கால்களையுடைய அக் கட்டிலில், பல

18. பெருங். 2 : 6 : 99 - 116
19. அரிமா சுமந்த
மரகதத் தியன்ற மணிக்காற் கட்டில்
நூல்வினை நுனித்த நுண்தொழி லாளர்
வாலரக் கட்டிய வானூல் நிணவைப்
பால்பரந் தன்ன பஞ்சி மெல்லணைச்
சேக்கை —பெருங். 1 : 34 : 141 - 46
20. பெருங். 5 : 7 : 76
21. பெருங். 1 : 47 : 50

வண்ணங்களில் பூ வேலைப்பாட்டுடன் கூடிய பட்டு அணைகள் இடப்பட்டன. இதனைக் 'கோலக் கட்டில்' என்கிறார் கொங்குவேள்.[22]

சார்வணை : இருக்கைகளில் உட்கார்ந்த வண்ணம் சாய்ந்து கொள்வதற்காகப் பின்புறம் இணைக்கப்பட்ட அணை சார்வணை எனப்பட்டது.[23] வீட்டுத் திண்ணைகளில் சாய்ந்து கொள்வதற்கான சார்வணைகள் இருப்பதை இன்றும் காணலாம். இதைச் 'சார்வு' என்று திருத்தக்க தேவர் குறிப்பிடுகிறார்.[24]

வெண்மணை: உட்காருவதற்காகத் தரைமீது கிடத்தப் பட்ட பலகை 'மணை' எனப் பெயர் பெற்றது. வெண்மை யான மணைகளின்மீது அமர்ந்து நூல்களை ஓதும் பழக்கம் அந் நாளில் இருந்தது.[25]

பீடம் : அமர்வதற்கான இருக்கைகள் பீடம் என்றும் அழைக்கப்பட்டன.[26] பீடம் என்ற சொல் சங்க இலக்கியங் களில் காணப்படவில்லை. சமண சமய அடிப்படையில் வடமொழிச் சொற்கள் பல தமிழில் நுழைந்தன.

---

22. வல்லோர் வகுத்த வண்ணக் கைவினைப்
பல்பூம் பட்டிற் பருஉத்திரள் திருமணிக்
காலொடு பொலிந்த கோலக் கட்டில்
—பெருங். 3 : 22 : 279 - 81

23. சந்தனப் பீடிகைச் சார்வணை
—பெருங். 1 : 37 : 15

24. சார்வுந் திண்ணையும் குயிற்றி
—சீவக. 108

24. விரிநூ லந்தணர் வெண்மணை
—பெருங். 1 : 34 : 23

26. (i) சேடுபடப் புனைந்த சித்திரக் கம்மத்துப்
பீடம் காட்டலின் ஈடுபட இருந்து
—பெருங். 2 : 10 : 9 - 10

(ii) பீடத்து இரீஇய பாடறிந்து ஏற்றி
—பெருங். 3 : 22 : 207

முனிவர்கள் கட்டில் போன்ற இருக்கைகளில் அமராது தரையில் பலகை மீது அமர்ந்தனர்; அவை பீடம் எனப் பட்டன. பௌத்தரும் சமணரும் சமயக் குரவர்களின் திருவுருவங்களைத் தாங்கி நின்ற அடிப் பலகையைப் 'பீடிகை' என்று அழைத்தனர். திருவுருவங்களைத் தாங்கும் பலகைகட்கு மட்டுமின்றி அடிப் பலகையாகப் பயன்பட்ட பிறவற்றையும் 'பீடிகை' என்றே கொங்குவேள் அழைத்திடக் காண்கிறோம்.[27] வண்டியில் ஏறப் படிக் கட்டாகப் பயன்பட்ட பலகையைப் 'பாத பீடிகை' என்கிறார்.[28]

தவிசு: அமர்வதற்குரிய தடுக்கு முதலியவைகளும், நாற்காலிகள் போல் இடம்விட்டு இடம் நகர்த்தக் கூடியனவுமான இருக்கைகள் 'தவிசு' எனப்பட்டன. மலர் பரப்பப்பட்டவை மலர்த் தவிசு,[29] எனவும், மான் தோல், புலித் தோல் முதலியன விரிக்கப்பட்டவை 'மயிர்த் தவிசு'[30] எனவும் அழைக்கப்பட்டன. புலித் தோல் போர்த்த தவிசு 'பொறிவரித் தவிசு'[31] எனப்பட்டது. இயற்கையாகவே அமர்தற்கு ஏற்றவாறமைந்த பாறை, மரத்தின் அகன்ற வேர் போன்ற இருக்கைகளைக் கொங்குவேள் 'இயற்றாத் தவிசு'[32] என்கிறார். பிறரால் இயற்றப்படாது இயற்கை யாகவே அமைந்திருந்ததை 'இயற்றாத் தவிசு' எனக் குறிப்பிடல் நயமாக உள்ளது.

மகளிர் பயன்படுத்திய பொருள்கள்

இல்லறப் பொருள்: இடபகன் உதயணனையும் வாசவதத்தையும் வேடர்களிடமிருந்து மீட்டான். மலைச்

27. பெருங். 2 : 2 : 91; 1 : 37 : 15
28. ,, 1 : 38 : 241
29. ,, 1 : 42 : 103
30. ,, 2 : 4 : 99
31. ,, 2 : 17 : 82
32. ,, 2 : 13 : 41

சாரலில் அவர்கள் தங்கியிருக்கப் பாடி வீடு அமைக்கப் பட்டது. அங்கு வாசவதத்தைக்காக வைக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு இல்லங்களில் மகளிர் பயன் படுத்திய பொருள்களையறிய முடிகிறது. விளையாட்டுப் பாவைகள், பளிங்காலும் மணிகளாலும் இயன்ற நாய், சந்தனமரப் பலகை; சந்தனமரப் பேழை, சாந்தரைக்கும் அம்மி, அகிலையிட்டுப் புகைக்கும் அகல், மயிர் வினைச் சீப்பு, மாலையிட்டு வைக்கும் செப்பு, குங்குமம் மஞ்சள் முதலியன வைக்கும் கொட்டம், மணிக்கலன்களையுடைய பேழை, மணிகள் பதித்த கண்ணாடி, ஒளி விளக்கு, ஒப்பனை செய்து கொள்ளப் பயன்படும் தவிசு (Dressing Table), கட்டில், அடைப்பை வைக்கும் பீடம், அணிகலன் வைக்கும் செப்பு, பட்டாலியன்ற கட்டில், ஆலவட்டம், மணிபதித்த கைப்பிடியுடைய விசிறி, மலர் மாலையாலி யன்ற பந்து ஆகிய பொருள்கள் அங்கிருந்தன.[34] அவை யாவும் கலைநலம் வாய்ந்தவையாக விளங்கின.

கொட்டம் : கொட்டம் என்பது மஞ்சள், குங்குமம் வைக்கும் பெட்டி. இது பனங் குருத்தினுற் செய்யப்பட்டது. அரச மகளிர்க்கான கொட்டம் பொன்னுலாயது. அதன் மேற்புறத்தில் இலைகளுடன் கூடிய பூங்கொடி உருவம் பதிக்கப்பட்டு அழகுடன் விளங்கியது.[34]

அடைப்பை: வெற்றிலை பாக்குக் கொண்ட பெட்டி அடைப்பை எனப்பட்டது. இது கயல் மீன் வடிவில் செய்யப்பட்டது; புடைத்த செவிகளையும், தகடுகளாலாய வாயையும், மணிகளால் இயன்ற கண்களையும் கொண் டிருந்தது; சங்கிலி பொருத்தப்பட்டுச் சித்திரத் தொழி

---

33. பெருங். 1 : 57 : 32 – 46
34. பழிப்பில் கம்மியன் பசும்பொனிற் புனைந்த
கொடிப்பல விரீஇய கொழுந்துபடு கோலத்துக்
கொட்டம் —பெருங். 1 : 46 : 215 - 17

லோடு அழகியதாய் விளங்கியது; மூடவும் திறக்கவுமான பொறியமைப்புடன் கூடியிருந்தது.[35]

வேலைக்கேற்ற பாக்கு: பள்ளியறைகளில் வேலைக்குத் தக்கவாறு பாக்குகளை வேறுபடுத்திப் பயன்படுத்தினர்.

பைங்கருங் காலிச் செங்களி யளைஇ
நன்பகற் கமைந்த அந்துவர்க் காயும்
இருங்கண் மாலைக்குப் பெரும்பழுக் காயும்
வைகறைக் கமையக் கைபுனைந் தியற்றிய
இன்தேன் அளைஇய இளம்பசுங் காயும்[36]

பயன்பட்டன. நண்பகலில் கருங்காலியின் சிவந்த குழம்பில் ஊறிய துவர்ப் பாக்கையும், மாலையில் முதிர்ந்த பாக்கை யும், காலையில் தேனொடு கலந்த பிஞ்சுப் பாக்கையும் அடையொடு சேர்த்து மென்றனர். பாக்கு மூவகையாகச் செய்யப்பட்டதை,

அங்கருங் காலி சீவி ஊறவைத் தமைக்கப் பட்ட
செங்களி விராய காயுஞ், செம்பழுக் காயும், தீந்தேன்
எங்கணுங் குளிர்த்த பின்னீர் இளம்பசுங் காயு மூன்றும்
தங்களி செய்யக் கூட்டித் தையலார் கைசெய் தாரே[37]

என்று திருத்தக்க தேவரும் குறிப்பிடக் காணலாம்.

புகையகல்: அகிலையிட்டுப் புகைக்கப் புகையகல்கள் இருந்தன. அவை சிங்கம், காளை, குதிரை, புலி, அன்னம், மகன்றில் ஆகிய விலங்கு, பறவைகளின் வடி வங்களில் தொழில் வல்லோரால் செய்யப்பட்டன.

---

35. செறிதொடர் கொளீஇய சித்திரக் கம்மத்துப்
பொறியமை புடைசெலீஇப் போழ்வாய் மணிக்கண்
அருங்கயல் அடைப்பை

—பெருங். 1 : 46 : 227 - 29

36 பெருங் 3 : 14 : 81 - 85

37. சீவக. 2473

சீயமும் ஏறும் பாய்பரிப் புரவியும்
யானையும் புலியும் அன்னமும் அகன்றிலும்
ஏனையும் பிறவும் ஏஎர் உடையன
புனைவுகொண் டேற்றி வினைவலர் இயற்றிய
கனல்சேர் புகையகல்.[38]

விலங்கு, பறவைகளின் வடிவங்களை வடித்து அவற்றை அகலோடு பொருத்தி அழகுபெறச் செய்தனர்.

கவரி: கவரி மங்கலப் பொருள்களுள் ஒன்று. மான் மயிர்க் கற்றையை ஒரு கைப்பிடியினுள் செருகிச் செய்யப்படும். அது கரும்புப் பூவின் தோற்றத்தைக் கொண்டு வெண்மை நிறத்ததாய் இருக்கும்;[39] மான் மயிர்க் கவரி, வால் வெண் கவரி, தூ மயிர்க் கவரி எனச் சுட்டப்படுவதுண்டு.[40] கைப் பிடிகள் மணி பதிக்கப்பெற்று ஒளி வீசித் திகழ்ந்தன.[41]

சீப்பு: சீப்பு யானைத் தந்தத்தால் செய்யப்பட்டது. பெரிதாயும் வெண்மையாயும் இருந்த அச் சீப்பில் ஓவியம் பொறிக்கப்பட்டிருந்தது என்றும் அறிகிறோம்.[42]

விசிறி: விசிறி ஒள்ளிய மணிகள் இழைக்கப்பட்ட தட்டத்தினையும் பவழக் கைப்பிடியினையும் கொண்டிருந்தது. தட்டத்தைச் சுற்றிலும் பொன் குஞ்சங்கள் கோக்கப்பட்டுத் தொங்கின. சந்தனம் புலர்வதற்கு விசிறி கொண்டு

---

38. பெருங். 1 : 42 : 85 - 89

39 வேழ வெண்பூ விரிவன பலவுடன்
வேந்துவீசு கவரியிற் பூம்புதல் அணிய
—நற். 241 : 5 - 6

40. சிலப். 25 : 38; 14 : 171; 5 : 155

41. விளக்குறு மணிக்கை முகட்டுமுதல் வளைத்த
பொங்குமயிர்க் கவரி —பெருங். 1 : 46 : 247 - 48

42. மறுவில் வெண்கோட்டு மங்கலம் பொறித்த
பெருவெள் சீப்பு —பெருங். 1 : 34 : 189 - 90

விசிறப்படுவதுண்டு ஆதலின் விசிறி சாந்தாற்றி எனவும் கூறப்பட்டது.[43]

செருப்பு: பொதுவாக மக்கள் அணிந்த மிதியடிகள் வார் அமைத்து இயற்றப்பட்டன.[44] ஆனால் அரச குடும்பத்தினர் அணிந்த மிதியடிக் கட்டை மிகுநலம் வாய்ந்தது. பகை மன்னரை வென்றபோது கொண்ட களிற்றி யானையின் மருப்பைச் சீவி அடிக் கட்டை செய்யப்பட்டது. அதை உட் செதுக்கி உண்டாக்கிய குழியில் உருக்கிய பொன்னை ஊற்றிப் பூங்கொடி உருவம் இழைக்கப்பட்டது. விரல் பற்றுதற்காகப் பவழத்திலான குமிழ் பொருத்தப் பட்டது.[45]

நறுமணப் பொடி: விண்ணில் தூவி விட்டால் அவை மண்ணில் விழாதவாறு வண்டுகள் உண்ணுதற்குரிய நறுமணப் பொடியை நங்கையர் பூசினர்.

அந்தர மருங்கின் வண்டுகை விடாஅச்
சுந்தரப் பொடியும் சுட்டிச் சுண்ணமும்[46]

மகளிர் பயன்படுத்திய மணப் பொருள்களாயிருந்தன.

'சுந்தரப் பொடியை வண்டு கை விடா' என்பதைச் சீவக சிந்தாமணி ஒரு நிகழ்ச்சி வாயிலாக விளக்குகிறது. குணமாலை, சுரமஞ்சரி என்ற இரு பெண்களுடைய

---

43. ஒள்மணித் தட்டப்
பவழப் பிடிகை பக்கங் கோத்த
திகழ்பொன் னலகிற் செஞ்சாந் தாற்றி
—பெருங். 2 : 18 : 112 - 14

44. வார்அமைத் தியற்றிய காலமை செருப்பினர்
—பெருங். 3 : 1 : 103

45. உருத்த மன்னர் ஊர்ச்சி வேழத்து
மருப்புக்கை யமைத்து வாய்முதல் தோறும்
உருக்குறு தமனியத் தொழுகுகொடி ஓட்டி
பவழக் கொட்டைப் பல்வினை நுனித்த
திகழ்மணி செருப்பு —பெருங். 2 : 4 : 107 - 111

46. பெருங். 1 : 42 : 72 - 73

47. சீவக. 894

சுண்ணங்களில் எவருடையது உயர்ந்தது என்ற போட்டி எழுந்தது. அவர்களின் தோழியர் சீவகனிடம் சென்று, ''சுண்ணம் நல்லன சூழ்ந்தறிந்து எங்களுக்கு அண்ணல் தருக'' என்று வேண்டினர். கோடைக் காலத்தில் இடிக்கப்பட்டதால் குணமாலையின் பொடி, குளிர்காலத்தில் இடிக்கப்பட்ட சுரமஞ்சரியின் பொடியைவிட உயர்ந்ததென்றான். காஞ்சனமாலையின் தோழி அதை ஒப்பவில்லை; உரிய முறையில் நிரூபிக்க வேண்டுமென்றாள். சீவகன் இரண்டு பொடிகளையும் இரு கையில் வாங்கி, அவற்றை விண்ணிலே தூவினான். சுரமஞ்சரியின் சுண்ணத் துகள்கள் கீழே தரையில் விழுந்தன. குணமாலையின் பொடியை வண்டுகள் விரும்பியுண்டன. துகள் பறந்த நிலையிலேயே குணமாலையின் பொடி வண்டுகட்கு இரையாயின.[47] பொடியின் சிறப்பை அறிவிக்கக் கருவண்டு கரியாயிற்று.

வாச வெண்ணெய் : உறுப்புகளில் மண வெண்ணெயைப் பூசினர். மணப் பொருள் செய்யும் வாதிகர் மணப் பொருள்களை நிறுத்துச் சீருறக் கலந்து அதனைச் செய்தனர். அவ் வெண்ணெய் மென்மையும் நயமும் மணமும் கொண்டு ஒரு நாள் பூசினும் ஓராண்டு விடாது கமழக் கூடிய சிறப்பைப் பெற்றிருந்தது.

> மென்மையும் நேயமும் நன்மையும் நாற்றமும்
> ஒருநாட் பூசினும் ஓரியாண்டு விடாஅத்
> திருமாண் உறுப்பிற்குச் சீர்நிறை அமைத்துக்
> கரும வித்தகர் கைபுனைந் தியற்றிய
> வாச வெண்ணெய்[48]

என அதன் தன்மையையும், செய்முறையையும் கொங்குவேள் குறிப்பிடுகிறார். சீவக சிந்தாமணியும்,

---

47. சீவக, 894
48. பெருங். 2 : 5 : 97 - 101

ஒருபகல் பூசின் ஓராண் டொழிவின்றி விடாது நாறும்
பெரியவர் கேண்மை போலும் பெறற்கரும் வாசவெண்ணெய்[49]

என்று கூறிடக் காண்கிறோம்.

இக் கலைநலப் பொருள்கள் அரச குடும்பத்தினரின் செல்வ வளத்தையும் அவர்கள் வாழ்ந்த எக்களிப்பு வாழ்க்கையையும் புலப்படுத்தி நிற்கின்றன.

---

49. சீவக. 2737

12. அரசியல்

(ஆ) அரசன்

நாட்டின் தலைவன் அரசன். தந்தைக்குப் பின் மகன் என அரச பரம்பரையினர் ஆட்சி செய்து வந்தனர்.[1] மூத்த மகன் ஆட்சிப் பொறுப்பை ஏற்க, பிறர் அவனுக்குத் துணைவராய் அமைந்தனர். மிக இளமைப் பருவத்திலேயே அரசுரிமை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுவதுமுண்டு.[2]

ஞாலத்திற்கு உயிர்

நாட்டிற்கு அரசன் உயிர் எனக் கருதப்பட்டான்.[3]

இக் கருத்தை,

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்[4]

என்று புறநானூறும்,

---

1. மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழவிறற் றாயம்
—புறநா. 75 : 1 - 2

2. முலைப்பாற் காலத்து முடிமுறை எய்திக்
குடைவீற் றிருந்த குழவி போல
—பெருங். 1 : 33 : 52 - 53

3. மன்னுயிர் ஞாலக் கின்னுயிர் ஒக்கும்
இறை —பெருங். 2 : 11 : 17 - 18

4. புறநா. 186 : 1 - 2

ஏதம் தகற்றி உலகினுக் குயிராய்
இருந்தனன் இறைகுலோத் துங்கன்[5]

என்று திருவிளையாடற் புராணமும் செப்பிடக் காணலாம். உயிர்கட்கு நேரும் அச்சத்தைப் போக்கிப் பாதுகாக்க வேண்டிய அரசர்களே கவலை கொண்டு தளர்ந்தால் உயிர்கள் நிலை தளர்ந்து அழியும்.[6] ஆதலின் எத்தகைய இடர் நேரிட்டாலும் அரசன் துளங்காது கடமையாற்றுதல் வேண்டும்.[7] யானையானது தனக்குத் தீங்கிழைத்தார்க்குத் தானும் தீங்கிழைக்கச் செவ்வி நேர்ந்திருத்தல் போன்று, தம் பகைவர்களின் செயல்களுக்கு மாற்றுச்செயல் செய்தற் கேற்ற செவ்வி தேர்ந்திருத்தல் அரசனின் கடமையாகும்.[8]

கல்வி

அரச குமரர்கள் இளமையிலேயே யானை யேற்றம், குதிரை யேற்றம், தேர்ச் செலவு, படைக்கலப் பயிற்சி முதலியன கற்றதோடு நீதி நூல்களையும் நன்கு பயின்று வந்தனர்.[9] கற்ற கல்வியைப் பல்லோரறிய அரங்கேற்றம் செய்தனர்.

பெரியாரைத் துணைக்கோடல்

அரசன் கற்றறிந்த சான்றோரின் உரையைத் தனக்குத் துணையாகக் கொண்டான்.[10] அச் சான்றோர் அரசன்

---

5. திருவிளை. பழியஞ்சின. 44 : 4
6. அலகைப் பல்லுயிர்க் கச்சம் நீக்குநர்
கவலை கொண்டுதங் காவலிற் றளரின்
உலக மெல்லாம் நிலைதளர்ந் தழியும்
—பெருங். 3 : 21 : 57 - 59
7. பெருங். 2 : 10 : 160 - 65
8. ,, 1 : 43 : 10 - 11
9. குஞ்சர வேற்றுங் கொடித்தேர் வீதியும்
பொங்குமயிர்ப் புரவியும் போர்ப்படைப் புணர்ப்பும்
நீதியும் பிறவும் —பெருங். 1 : 36 : 358 - 60
10. பெருங். 3 : 12 : 28 - 29

துன்பமுறுங்கால் அவனது துன்பம் தீர்த்தற்பொருட்டு அறிவாற்றல் நிரம்பிய மெய்ந் நூல்களிலிருந்து பழையனவும் புதியனவும் ஆகிய நீதிகளை எடுத்துக் கூறினர்.[11]

அரசுச் சின்னங்கள்

முடி, குடை, செங்கோல், முரசு, கவரி, சிங்க இருக்கை, ஆணைச் சக்கரம், கொடி, சங்கு முதலியன முக்கிய அரசுச் சின்னங்களாம்.[12]

முடி : பொன்னாலும் மணிகளாலும் ஆன முடியினை அரசன் தலையில் அணிந்தனன்.[13]

குடை : அரசன் அமரும் கட்டிலில் அவன் தலை மேலிருக்குமாறு குடை பொருத்தப்பட்டிருந்தது. அரசன் உலாச் செல்லும்போது யானைமீது குடையின்கீழ் அமர்ந்து செல்வான். குடை பொன்னாற் செய்த கம்பிகளையும் பவழத்தாலான காம்பினையும் கொண்டு வெள்ளிப் போர்வை போர்த்தப்பட்டிருந்தது. மாலை சூட்டி அழகு செய்யப் பட்டிருந்த குடையின் தோற்றம் விசும்பின்கண் தோன்றிய மதியைப் போன்றதாயிற்று.[14] அரசனுடைய குடைக் காம்பு கடவுளர் அன்றிப் பிறர்முன் வணங்காதது.[15]

---

11. ஆற்றல் சான்ற நூற்றுறை மருங்கிற்
பழையவும் புதியவும் உழைவயிற் பிரியார்
காரணம் உரைப்பவும் —பெருங். 2 : 19 : 2-4

12. பெருங். 1 : 57 : 56 – 60

13. மணிமுடிச் சென்னி மகத மன்னவன்
—பெருங். 3 : 5 : 8

14. பசும்பொன் அலகிற் பவழத் திரள்கால்
விசும்பிவர் மதியுறழ் வெண்பொன் போர்வைத்
தாம நெடுங்குடை தகைபெறக் கவிப்ப
—பெருங். 2 : 6 : 12 - 14

15. கடவுட் கல்லது கால்துளக் கில்லது
—பெருங். 1 : 38 : 125

செங்கோல் : நல்லாட்சிக்கு அடையாளமாயிருந்தது அரசனின் கையிலிருந்த செங்கோல்.

செம்மற் செங்கோல்	(1 : 36 : 151)
தண்தொழிற் செங்கோல்	(1 : 39 :26)
ஆசில் செங்கோல்	(2 : 3 : 164)
அறம்புரி செங்கோல்	(2 : 7 : 117)
வீயாச் செங்கோல்	(2 : 11 : 122)
இருளறு செங்கோல்	(2 : 17 : 115)

எனச் செங்கோலுக்குத் தரப்பட்டுள்ள அடைகள் அதன் பெருமையை நன்கு விளக்குகின்றன. மக்கள் செங்கோலை விரும்பினர்; மாறாக வெங்கோலை வெறுத்தனர்.[16]

முரசு : காளையினது தோலைப் போர்த்து, பொன்னிற வாரால் இறுகக் கட்டுதலுற்று இடி போன்று முழங்கக் கூடியது முரசு.[17] கூரிய கோட்டினையுடைய இரண்டு ஆனேறுகளைத் தம்முட் போர் செய விடுத்து வெற்றி பெற்ற ஏற்றினுடைய தோலை மயிர் சீவாது போர்த்து முரசம் செய்யப்பட்டதெனப் புறநானூறு கூறுகிறது.[18]

முரசறைந்து செய்தி அறிவிக்கப்பட்டது; முரசம் கறங்க வீரர் களத்திற் புகுந்து போர் புரிந்தனர்; வெற்றிக்

---

16. வெங்கோல் வெறுப்பும் செங்கோற் செல்வமும்
செருக்கிச் செல்லும் செலவினன்
—பெருங். 1 : 56 : 157 - 58

17. பசும்பொற் பலவார் விசிந்து பிணியுறீஇக்
கோதை முத்தொடு தாமம் தைஇ
ஏற்றுரி போர்த்த இடியுறழ் தழங்குரற்
கோற்றெழில் வேந்தன் கொற்ற முரசம்
—பெருங். 2 : 2 : 26 - 29

18. மண்கொள வரித்த வைந்நுதி மருப்பின்
அண்ணல் நல்லேறு இரண்டுடன் மடுத்து
வென்றதன் பச்சை சீவாது போர்த்த
திண்பிணி முரசம் —புறநா. 288 : 1 - 4

களிப்புத் தோன்ற முரசுகள் ஒலித்தன; பகைவரின் முரசைக் கொள்வது வீரத்தின் அறிகுறியாக விளங்கியது. இவ்வாறுக முரசு ஒரு முக்கிய அரசுச் சின்னமாயிற்று.

அரண்மனையில் முரசு வைப்பதற்கெனச் சிறப்பான இருக்கை இருந்தது. அது முரசுக் கட்டில் எனப்பட்டது. வெற்றி முரசு வெண் துகில் இடப்பட்டிருக்குமென்றும் விழா நாட்களில் நெற் கதிரைச் சூட்டி அது பூசிக்கப்படும் என்றும் கொங்குவேள் கூறுகிறார்.[19] முரசை நீராட்டும் வழக்கம் அக் காலத்தில் இருந்தது. மயிற் பீலி தொடுக்கப் பட்டதும், மாலையும் பொற்றளிரையுடைய உழிஞையும் சூட்டப் பெற்றதும், குருதிப் பலி கொள்வதுமான வீர முரசம் நீராடி வரச் சென்றதைப் புறநானூறு புலப்படுத்து கிறது.[20] முரசு அறைந்தவர் வள்ளுவர் எனப்பட்டனர்.

அரசுப் பணியாளர்

கரும மாக்கள்: அரசனுடைய சொந்தப் பணிகளைச் செய்வதற்கும் அரச காரியங்களைக் கவனிப்பதற்கும் பணி யாளர் பலர் இருந்தனர். சமையல் செய்வோர், பணி மகளிர் (உடம்பு தடவி நீராட்டும் தொழிலாளர்), அமைச்சர், கடையர் (வாயிற் காவலர்), காப்பர் (பிற காவற்றொழிலாளர்) ஆகிய இவர்கள் 'இறைவினை திரியாப்

---

19. செம்பொன் நெல்லின் செங்கதிர் சூட்டி
வெண்துகில் இட்ட விசய முரசம்
பண்டியல் அமைந்த படுகடன் எல்லாம்
தண்டொழிற் செங்கோல் தலைத்தலை சிறக்கென
—பெருங். 1 : 39 : 23 - 26

20. ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை —புறநா. 50 : 3 - 6

பழவினையாளர்' எனப்பட்டனர்.[21] அரசுக் காரியங்களைக் கவனித்தவர்கள் 'கருமமாக்கள்' என்றழைக்கப்பட்டனர்.[22]

அரண்மனை மாந்தர் : அரண்மனையில் அரசனுடைய புகழை நின்றேத்தும் சூதரும் ஆடி மகிழ்விக்கும் விறலியரும் இருந்தனர். ''எண்வகைச் சுவைகளும், மனத்தின் கண் பட்ட குறிப்புகளும், புறத்துப் போந்து புலப்பட ஆடுதல் விறலாதலின், அவ்வாறு ஆடுபவள் விறலி எனப் பட்டாள்.''[23] மேலும் அரண்மனைப் பணிமகளிர், அரண் மனைப் பணியாளராகிய பெருமூதாளர், வாயில் காக்கும் மறவர், கணக்குப் பணிகளைச் செய்யும் கணக்க மாந்தர், ஐம்பெருங்குழு எண்பேராயம் போன்ற திணைமாந்தர், காவிதிப் பட்டம் பெற்றோர், ஆவணங்களைக் காக்கும் ஆவணக் களரியோர், படை மறவர் ஆகியோரும் இருந் தனர்.[24]

அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதுவர், சாரணர் ஆகியோரைக் கொண்ட குழு ஐம்பெருங்குழு. கரணத்தியல்வர், கருமாதிகாரர், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகர மாந்தர், படைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர் ஆகிய எண் வகையினர் அடங்கியது எண் பேராயம் என்பர்.

காவிதி என்பது அரசனால் கொடுக்கப்பட்ட ஒரு சிறப்புப் பட்டம். அப் பட்டத்தைப் பெற்றிருந்தோர் காவிதி மாக்கள் எனப்பட்டனர். ஏனாதி என்பதும் ஒரு

---

21. மடையரும் மகளிரும் மல்லரும் அமைச்சரும்
கடையரும் கணக்கரும் காப்பரும் உளப்பட
இறைவினை திரியாப் பழவினை யாளர்
—பெருங். 1 : 32 : 81 - 83

22. பெருங். 4 : 4 : 19

23. அபிதான சிந்தாமணி

24. பெருங். 5 : 6 : 86 - 93

சிறப்புப் பட்டமாகும். இப் பட்டம் பெற்றவர்களே அரசனுடைய சிங்க இருக்கையை அமைத்துத் தருவர்.[25]

உழைச் சிற்றாளர் : அரசனைச் சூழ்ந்திருந்து அவனுடைய ஏவல் கேட்ட இளைஞர் உழைச் சுற்றாளர் அல்லது உழைச் சிற்றாளர் எனப்பட்டனர்.[26] அரசனுடைய படுக்கை அறையைக் கையில் கோலைக் கொண்டிருந்த 'கைக்கோல் இளையர்' காவல் செய்தனர். அவ் வறையில் பணிவிடை செய்த பெண்டிர் 'அகக்கோளாளர் (அகம்படி மகளிர்)' எனப்பட்டனர்.[27] தூங்கும் அரசனைத் 'துயிலெடை மாக்கள்' இனிய இசைபாடி எழுப்பினர்.[28]

காஞ்சுகி முதியர் : அரசனுடைய குல ஒழுக்கங்களை அறிந்து அவற்றை அவனுக்கும் அவன் மக்கட்கும் கற்பித்த பெரியவர்கள் அரண்மனையில் இருந்தனர். அவர்கள் சட்டையணிந்த முதியவர்களாயிருந்தமையின் 'காஞ்சுகி முதியர்' எனப்பட்டனர்.[29]

கணக்கு வினையாளர்

கருவூலக் கணக்கர் : கருவூலத்திலிருந்த பொருளைக் கணக்கிட்டு வைக்கக் கருவூலக் கணக்கர் இருந்தனர்.

---

25. மணிப்பூண் கண்ணியர் மரபறி மாந்தர்
முட்டில் கோலமொடு கட்டில் படுப்ப
—பெருங். 4 : 1 : 37 - 38

26. பெருங். 1 : 33 : 14

27. கைக்கோ லிளையருங் காஞ்சுகி முதியரும்
அகக்கோ ளாளரொ டருமறை யாக
—பெருங். 1 : 47 : 167 - 68

28. பயில்பூம் பள்ளித் துயிலெடை மாக்கள்
இசைக்கொள் ஓசையின் இன்துயி லேற்று
—பெருங். 4 : 5 : 81 - 82

29. நண்பிற் பிரியாது பண்பொடு புணர்ந்த
காஞ்சுகி மாந்தர் —பெருங். 4 : 15 : 145 - 46

அவர்கள் புறங்காலளவும் தாழும்படிப் போர்வை போர்த்திருந்தனர்; நிலத்திலே தோயும்படி நெடிய நுண்ணிய ஆடையை அணிந்திருந்தனர்; முன்றானையை மடக்காத மானப் பண்புடையராய் இருந்தனர்; அணந்து நடவாமல் அசைந்த நடையை உடையராய் நெற்றியில் கண்ணி சூடியிருந்தனர். அரசன் தான் செய்ய விரும்புவனவற்றை ஓலையில் எழுதிக் கையெழுத்திட்டு அவர்களிடம் கொடுக்க, அவர்கள் அதில் கண்டவாறு செயற்பட்டு வந்தனர்.[30]

கோப்பெருங் கணக்கர் : இன்னின்ன நாட்களில் இன்னின்ன செய்ய வேண்டும் என அரசன் சொன்னதை நினைவுக்காக ஓலையில் எழுதிக் கொண்டு அதன்படி நடந்தவர் கோப்பெருங் கணக்கர் எனப்பட்டனர். அவர்கள் குறித்து வைத்த ஓலை 'கடைப்பிடி நுகும்பு' எனப்பட்டது.[31]

நாழிகைக் கணக்கர் : நாழிகையை அளந்து அறிவிக்கும் நாழிகைக் கணக்கர் அரண்மனையில் இருந்தனர். அரசர் உடல் நலிவுற்றபோது மருந்துண்ண மருத்துவர் சொன்ன பொழுதினைத் தவறாது அறிந்து கூறவேண்டுவதும் நாழிகைக் கணக்கர் பணியாயிற்று.[32]

கணியர் : கணித நூலை முற்றக் கற்று நல்ல முழுத்தங்களை அறிந்து சொல்லக் கணியர் இருந்தனர்.[33]

---

30. பெருங். 1 : 32 : 60 – 91

31. திருநாட் டானம் பெருநாட் காலை
ஏற்போர்க் கீக இன்றே போன்மெனக்
கோப்பெருங் கணக்கரைக் குழுவிடை விளங்கக்
கடைப்பிடி நுகும்பினுள் இடைப்பட எழுதுகென்று
—பெருங். 5 : 7 : 120 - 23

32. வருத்தம் அறிந்து மருத்துவர் வகுத்த
அரும்பெறல் அடிசில் அவிழ்பதம் கொள்ளும்
பெரும்பகல் நாழிகை பிழையா தளக்குநர்
செவ்வி யறிந்து கவ்விதின் மொழிய
—பெருங். 1 : 57 : 77 - 80

33. பெருங். 2 : 3 : 5 – 8

வள்ளுவர்

முரசத்தை முழக்குபவர் வள்ளுவர். அரசருடைய வெற்றியை முழக்குதல் அவருடைய முதன்மையான பணியாகக் கருதப்பட்டது.[34] திருநாள், அரசன் போர்க்கெழும் நாள், மண நாள் ஆகிய சிறப்பு வாய்ந்த நாட்களல்லாது பிற நாட்களில் வள்ளுவர்கள் முரசறையமாட்டார்கள்.[35] அவர்கள் சந்தனம் பூசி, மாலை சூடி, வெண் துகிலணிந்து, யானைமீது அமர்ந்து, "மன்னவன் வெற்றியால் பொலிக; செல்வம் எய்துக! நிலம் பெருகுக! நிலைபெற்று வாழ்க!" என்று வாழ்த்தி முரசறைந்து செய்தியை அறிவிப்பது வழக்கம்.[36]

யானைப் பாகர்

யானைகளை இயக்கப் பாகர் இருந்தனர். அவர்கள் யானைகளை அடக்க அரைத் திங்கள் வடிவமுடைய இரும்புத் தோட்டி, கவைத்த முள்ளையுடைய தாற்றுக்

---

34. அரசு கொற்றத் தருங்கடம் பூண்ட
முரசெறி வள்ளுவ முதியன்
—பெருங். 1 : 47 : 155 - 56

35. திருநாள் படைநாள் கடிநாள் என்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்
—பெருங். 2 : 2 : 32 - 34

36. நறுவெண் சாந்தொடு மாலை யணிந்து
மறுவில் வெண்துகில் மருங்கணி பெறீஇ
அணைமிசை அமர்தந்து அஞ்சுவரு வேழத்துப்
பணையெருத் தேற்றிப் பல்லவர் சூழத்
தேர்திரி மறுகுதோ றூர்முழு தறியப்
பொலிக வேல்வலம் புணர்க பூமகள்
மலிக மண்மகள் மன்னுக மன்னவன்
மல்லன் மூதூர்ப் பல்லவர் கேண்மின்
—பெருங். 2 : 2 : 35 - 42

கோல், மயிற் பீலி சுற்றப்பட்ட மூங்கிலாலாகிய வெளிய குத்துக்கோல் ஆகியவற்றை வைத்திருந்தனர்.[37]

யானைப் பாகர்,

குவிமுட் கருவியும் கோணமும் கூர்நுனைக்
கவைமுட் கருவியும்[38]

கொண்டிருந்ததை மணிமேகலையும் குறிப்பிடக் காணலாம்.

காவலாளர்

பதுவாய்க் காவலர்: வாயிலிடந்தோறும் வேலொடு நின்று காவல் புரிந்தவர் பதுவாய்க் காவலர் எனப்பட்டனர்.[39] இவர்கள் கடை காப்பாளர், வாயிற் காவலர் என்றும் அழைக்கப்பட்டனர்.[40] இவர்கள் கையில் கோலை ஏந்தியிருப்பராதலின் கோல் தொழிலாளர் என்றும் பெயர் பெற்றனர்.[41] காவலர்கள் கோலுடன் வாளும் வில்லும் வைத்திருப்பதுமுண்டு.[42]

---

37. அரைமதி இரும்பொடு கவைமுட் கரீஇ
பீலி சுற்றிய வேணு 'வெண்காழ்
யானை இளையர் —பெருங். 1 : 32 : 96 - 98

38. மணிமே. 18 : 163 - 64

39. கதுவாய் எஃகமொடு கடைமுதல் தோறும்
பதுவாய்க் காப்புறு படைத்தொழில் இளையரை
—பெருங். 3 : 24 : 149 - 50

40. (i) பெருங்கடை காவலர் (3 : 13 : 66);
வாயிற் காவலன் (4 : 10 : 3)
(ii) கடைகாப் பாளன் கைதொழு துரைப்ப (4 : 14 : 106)
(iii) திருந்துநிலைப் புதவிற் பெருங்கத வணிந்த
வாயிற் காவலன் (4 : 10 : 2 - 3)

41. (i) பெருங். 1 : 47 : 10
(ii) கருங்கட் சூரற் செங்கோல் பிடித்த
கோல்தொழி லாளர் (3 : 5 : 99 - 100)

42. வேலும் வாளும் கோலும் கொண்ட
காவ லிளையர் —பெருங். 2 : 5 : 36 - 37

கொற்ற வாயிலன்: அரசன் உள்ள அறையின் வாயிலைக் காத்து நின்றவன் கொற்ற வாயிலன் எனப்பட்டான். அரசன் முக்கியமான மந்தணச் செய்திகளைப் பேசிக் கொண்டிருக்கும் வேளையிலும் உள்ளே நுழைந்து செய்தி அறிவிக்கக் கூடிய தகுதி இவனுக்கு உண்டு.[43]

யாமங் காவலர்: கோட்டையின் உட்புறத்தே இரவு முழுதும் காவல் செய்தவர் யாமங் காவலர் எனப்பட்டனர். இவர்கள் ஆகோட் பறையினை முழக்கிக் கொண்டு, 'கொள் கொள்' என்ற ஒரு வகை ஓசையை எழுப்பிய வண்ணம் உலாவிக் கொண்டே இருப்பார்கள்.[44]

நகர்க் காவலர்: கூரிய வாள்களை உறையிலே தரித்து நகரைக் காவல் செய்த வீரர்கள், நகருக்கு நூறு வில் தொலைவுக்குள் யாரும் நெருங்காவண்ணம் பாதுகாத்தனர். வேல் பிடித்தவரும், கோல் பிடித்தவருமாக வீரரும், மிலேச்சரும், சிலதருமாகப் பல்வகையினர் நகரக் காவலராய் இருந்தனர்.[45]

மதிற் காவலர்: மதிலைக் காவல் செய்து வந்தோர் எயின் மூதாளர் எனப்பட்டனர்.[46]

கிடை காப்பாளர்: படைக்கலம் பயிலும் பள்ளி கிடை எனப்படும். அதைக் காவல் செய்தோர் கிடைகாப்பினையர்

---

43. ஆர மார்பன் அருமறைப் பள்ளியுள்
உற்றது கூறும் கொற்ற வாயிலன்
—பெருங். 1 : 47 : 21 - 22

44. கொள்ளென் குரலொடு கோட்பறை கொளீஇ
உள்ளெயிற் புரிசை உள்வழி உலாவும்
யாமங் காவலர் —பெருங். 4 : 5 : 62 - 64

45. தீட்டமை கூர்வாள் கூட்டொடு பொலிந்த
வேற்றிற லாளரும் மிலேச்சரும் சிலதரும்
கோற்றகை மாக்களும் நூற்றுவில் லகலம்
குறுகச் செல்லாச் செறிவுடைக் காற்பிற்
பெருங்கடி மூதூர் —பெருங். 1 : 42 : 22 - 26

46. பெருங். 1 : 36 : 37

எனப்பட்டனர். அவர்கள் பொற்பூண் கட்டப்பட்டதும், வண்ணம் தீட்டப்பட்டதுமான பொதியமலைப் பிரம்பைக் கையில் கொண்டிருந்தனர்.[47]

மெய்காப்பாளர்: அரசனுடைய உடம்பைப் பாது காத்து நின்ற வீரர் மெய்காப்பாளர் எனப்பட்டனர்.[48]

நீர்த் துறைக் காவலர்: நீர்த் துறைகளை மாசு படுத்தற் கின்றிக் காவல் செய்யக் காவலர் இருந்தனர்.[49]

பிற பணியாளர்

திரையல் ஏந்துவோர்: மணமுடைய வெற்றிலைச் சுருளைப் பவளத்தாலியன்ற செப்பில் வைத்து அரசனருகே நிற்கத் திரையல் ஏந்துவோர் இருந்தனர்.[50]

செப்பு ஏந்துவோர்: அரசர் குளித்ததும் மலர் மாலை, சந்தனம், ஆடை முதலியன வைக்கப்பட்டிருந்த ஆடை வட்டியை எடுத்துத்தரத் தனியே ஆட்கள் இருந்தனர்.[51]

பாகர்: வண்டியோட்டப் பாகர் இருந்தனர்.[52]

மல்லர்: சிவிகை தூக்கியோர் மல்லர் எனப்பட்டனர்.[53]

---

47. பொன்தலை யாத்த பொதியிற் பிரம்பின்
வண்ணச் செங்கோல் வலவயிற் பிடித்த
எண்ணூற் றுவர் இளங்கிடை காப்பர்
—பெருங். 1 . 37 : 9 - 11

48. பெருங் 1 : 38 : 102; 4 : 3 : 119

49. வண்டுஞ் சேரா அஞ்சுவரு சீற்றத்துக்
குண்டுதுறைக் காவலர் —பெருங். 1 : 40 : 382 - 83

50. பெருங். 1 : 34 : 46 - 47

51. ,, 1 : 35 : 27 - 28

52. ,, 1 : 38 : 246

53. மல்லர் பூண்ட மாடச் சிவிகை —பெருங். 1 : 38 : 255

அரசனின் அன்றாடப் பணி

பிரச்சோதன மன்னனின் செயல்களைக் கொங்குவேள் கூறுவது கொண்டு அந் நாள் அரசுப் பழக்க வழக்கங்கள் சிலவற்றை அறிய முடிகிறது. பிரச்சோதனன் இரவு படுக்கைக்குச் சென்றபோது, 'கலையினும் களியினும் காமுறக் கவைஇய' மகளிர் தம் கலைகளால் அவனை மகிழ் வித்தனர். காலையில் துயிலெழுந்ததும் முந்தைய இரவில் தன் பள்ளிக் கட்டிலை இரவில் முறை முறையாக நின்று விழிப்புடன் பாதுகாத்த மறவர்களுடைய பெயர்கள் பொறிக்கப்பட்ட ஓலையைப் படிக்கக் கேட்டான். மருத்து வர்களால் இயற்றப்பட்டதும் அணிவார்க்கு மதிநுட்பமும் ஒளியும் தரவல்ல மருந்து மையைப் பூசினான். பின்னர், பசுவை முன்னிறுத்தச் செய்து அதைக் கண்டான். துறவியர் வந்து வணங்கி, மந்திரித்த மண நீரைத் தெளிக்க, அஃதை ஏற்றுக் கொண்டு அரசு கட்டிலில் அமர்ந்தான். நல்லறமும் அருட் பண்பும் நிரம்பியிருந்த அவ் விடத்தில் சான்றோர் பலர் இருந்தனர். அவர்கள் அறிவு நலம் சான்ற புத்தகங்களை அணையின்மேல் வைத்துப் படித்து அவற்றிற்கு விளக்கம் கூறினர். அரசன் அவற்றைப் பருகுவான்போல விரும்பிக் கேட்டான். பின்னர் அரசியல் அறம், படைவலி பெருக்கும் வகை, வினைசெயல் வகை, இன்ப நுகர்ச்சி ஆகிய பொருள்களைக் கொண்ட இனிய சொற்பொழிவுகளைக் கேட்டு அவற்றைத் தன் உள்ளத்தே இனிதாக அமைத்துக்கொண்டு அவ் விடத்தினின்றும் அகன்றான். பின்னர், தான் அற்றை நாள் செய்ய வேண்டிய செயல்களை ஆராய்ந்து முடிவு செய்தான்.[54]

உலா எழல்

சிறப்பான நாட்களிலும், ஆலயத்திற்கு வழிபடச் செல்கையிலும் அரசன் யானை மீதமர்ந்து உலாச் செல்

54. பெருங். 1 : 34 : 3 - 32

வான். வெண் கொற்றக் குடை நிழற்ற, பணிப் பெண்டிர் இரு புறமும் கவரி வீசி நிற்ப, சங்கும் முரசும் பிற இசைக் கருவிகளும் முழங்க, மக்களின் வாழ்த்தொலியினூடே உலா நடைபெறும். வீதியின் இரு மருங்கிலும் மாளிகைகளில் மகளிர் கூடி நின்று மலர் தூவி மன்னனை வாழ்த்திப் புகழ்வர்.[55]

காணிக்கை

குடிமக்கள் தத்தமிடமிருந்த சிறப்பான பொருள்களை அன்புக் காணிக்கையாகத் தந்து அரசனைக் கண்டு மகிழ்ந்தனர். மலைவாழ் மக்கள் யானை மருப்பு, மலைத் தேன், பல்வகைக் கனிகள், வீணைத் தண்டு, மூங்கிலில் விளைந்த முத்து, அகில், புலித் தோல், மறுப்பியல் ஊகம், மந்திப் பிணை முதலியன தந்து உதயணனைக் கண்டதாகக் கொங்குவேள் குறிப்பிடுகிறார்.[56]

கொடை கொடுத்தல்

விழா நாட்களிலும் மற்றும் சிறப்பான நாட்களிலும் அரசர் அந்தணர்க்கும் இரவலர்க்கும் கொடை கொடுத்தனர். வீர முரசத்தைச் சிறப்புச் செய்ததோடு ஆலயங்களுக்கு அறக் கொடைகளும் வழங்கினர். சூதர், விறலியர், அரண்மனைப் பணியாளர், வாயில் காக்கும் மறவர், கணக்க மாந்தர், திணை மாந்தர், காவிதிக் கணக்கர், ஆவண மாக்கள், அறப்பெருங் குழு ஆகியோர்க்கு இன்னின்னார்க்கு இன்னின்னவை வழங்கவேண்டும் என்று

---

55. வெங்கண் யானைமிசை வெண்குடை கவிப்பப்
பொங்குமயிர்க் கவரி புடைபுடை வீசக்
கங்கை நீத்தம் கடன்மடுத் தாங்குச்
சங்கமுந் துரமு முரசினோ டியம்ப
மன்பெரு மூதூர் மாசனம் மகிழ்ந்து
வாழ்த்தும் ஓசை —பெருங். 4 : 1 : 15 - 20

56. 1 : 58 : 83 - 88

பொருள் நூலார் வகுத்துள்ளவாறு அணிகலன்களையும் ஆடைகளையும் வழங்கினர்.[57] கலைஞர்களையும் அவர் வரிசையறிந்து ஆடை அணிகலன்களை நல்கிச் சிறப்பித்தனர்.[58]

ஆட்சி அமையவேண்டிய முறை

பிற அரசர்கள் உயர்ந்த திறைப் பொருளைக் கொணர்ந்து அளக்கத் தக்க வெற்றி வீரனாக அரசன் விளங்கவேண்டும்; நாட்டின் வளத்தைப் பெருக்குகின்ற பல்வகைக் குடிகள் தழைத்தோங்கிச் செழிக்குமாறு ஆட்சி செலுத்த வேண்டும்;[59] 'எம் அரசன் இனியன்' என்று எல்லோரும் போற்றும் வண்ணம் குடிமக்களின் நலனையே கனவிலும் நனவிலும் கருதியிருக்க வேண்டும்.[60]

நல்லாட்சி

உதயணன் தன் நாட்டைத் திரும்பப் பெற்றபோது அவன் ஆற்றிய செயல்களாகக் கொங்குவேள் கூறுவனவற்றை நல்லாட்சியின் இலக்கணமாகக் கொள்ளலாம்.

---

57. பெருங். 5 : 6 : 86 - 94
58. ,, 1 : 37 : 150 - 58
59. கொற்ற வேந்தர் நற்றிறை அளப்ப
நல்வளம் தருஉம் பல்குடி தழைப்பச்
செல்வ வேந்தன் செங்கோல் ஓச்சி
—பெருங். 4 : 14 : 183 - 85
60. கனவினும் நனவினும் இன்பம் அல்லது
நுனைவேற் றடக்கைநம் புனைமுடி வேந்தன்
காணலன் கண்டீர் மாணலம் இயைந்த
நல்வினை யுடையன் பெரிதெனப் பல்லோர்
இகழ்தல் செல்லார் புகழ்வனர்
—பெருங். 5 : 7 : 141 - 45

வேற்றுட்சிக்கு உட்பட்டிருந்தபோது விதிக்கப்பட்ட பொருந்தா வரிகள் நீக்கப்பட்டன.[61]

குடிமக்களின் நிலை உயர்த்தப்பட்டு அவருளங் குளிரச் செயல்களாற்றப்பட்டன. சிதைந்துபோன ஆலயம், தவப் பள்ளி, தோட்டம், வாவி, கடைத்தெரு போன்ற பொது இடங்கள் புதுப்பிக்கப்பட்டன.[62]

இன்மையாளரும், முதியோரும், தொழுநோயாளரும், கணவனைப் பிரிந்தோரும், உறுப்புக் குறையுடையோரும் இன்னும் பிறரும் தம் குறை தீர வேண்டுவன பெறலாம் என்று எங்கும் முரசறையப்பட்டது என்பதனை,

இன்மை உரையா இடுக்க ணுளிரும்,
ஊக்கமும் வலியும் வேட்கையும் விழைவும்
மூப்படர்ந் துழக்க முடங்கி னீரும்,
யாப்பணி நன்னலந் தொலைய அசாஅய்த்
தீப்பிணி யுற்றுத் தீரா தீரும்,
இடுமணன் முற்றத்து இன்னியங் கறங்கக்
குடுமிக் கூந்தலுள் நறுநெய் நீவி
நல்லவை நாப்பட் பல்சிறப் பயர்ந்து
கொண்டோன் துறந்து கண்கவிழ்ந் தொழுக
வாழ்தல் ஆற்றுச் சால்பணி மகளிரும்,
நிறைப்பெருங் கோலத்து நெறிமையின் வழாஅ
உறுப்புக்குறை பட்டீர் உட்படப் பிறரும்,
வந்தனிர் குறுகி நுங்குறை யுரைத்துத்
துன்பம் நீங்க இன்பம் பயப்ப
வேண்டின கொள்ளப் பெறுதிர் நீரென
மாண்ட வீதியொடு மன்ற மெல்லாம்
ஆர்குரல் முரசம் ஓவாது அதிர[63]

என்ற அடிகளால் கொங்குவேள் தெளிவு படுத்துகிறார்.

---

61. வெங்கோல் வேந்தன் வேற்றுநாடு இதுவெனத்
தன்கோல் ஓட்டித் தவற்றின் நாட்டிய
புன்சொற் படுநுகம் புதியவை நீக்கி
—பெருங். 4 : 2 : 3 - 5

62. பெருங். 4 : 2 : 8 - 17
63. „ 4 : 2 : 25 - 41

வயதின் முதிர்ச்சியால் ஊக்கம், வலிமை, வேட்கை, விழைவு முதலியன முடங்கிக் கிடக்கும் முதியோர்; உடற் கட்டு அழிந்து, அழகு கெட்டு மெலிந்து வருந்தியிருக்கும் தொழுநோயர் (தீப்பிணியாளர்); இல்லின் முற்றத்தே மணல் பரப்பி, இன்னிசை முழங்க, நல்ல நாளில், எண்ணெய் தேய்த்து நீராடி, பல்வகைச் சிறப்புகளோடு தன்னை வாழ்க்கைத் துணையாகக் கொண்டவன் பராமுகமாக அதனால் வாழ வழியறியாது வாடும் மகளிர்; நிறைவான தோற்றத்துடன் விளங்கி நெறியோடு இயங்க முடியாத உறுப்புக் குறைப்பட்டோர்; இன்னும் இதுபோன்ற குறையாளர்களின் துயரைக் களைய வேண்டியது அரசின் பொறுப்பே என்பதைக் கொங்குவேள் வெகு தெளிவாக இங்கே எடுத்துரைக்கிறார். பிச்சைக்காரர் ஒழிப்புத் திட்டம், தொழுநோயாளர் நல்வாழ்வுத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம், கைம்பெண் துயர் துடைப்புத் திட்டம் போன்று இன்று நடைமுறைப்படுத்தும் திட்டங்களைக் கொங்குவேள் அன்றே கனவியிருக்கிறார்.

அரசுக்கு முறைப்படி சேர வேண்டிய வரிகள் ஒழுங்குற வசூலிக்கப்பட்டன.[64] நியாயமான வரிகளை ஏய்ப்புக்கு இடமின்றிப் பெற வேண்டியதும் அரசின் முக்கிய கடமை என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது.

படையாளர், உழவர், வணிகர், அந்தணர், கலைஞர் மற்றும் யாவராயினும் தத்தம் நிலையில் பிறழாது நெறிப்பட ஒழுகிவரச் செய்யப்பட்டனர்.[65]

---

64. கணக்கரும் திணைகளும் அமைக்குமுறை பிழையாது
வாயிற் செல்வம் கோயிலுட் கொணர
—பெருங். 4 : 2 : 45 - 46

65. பெருங். 4 : 2 : 47 - 54

ஆறும் குளமும் நீர் நிறைந்தன. காடும் புறவும் கவின் பெற்று வளஞ் சிறந்தன. மாரி பொய்யாது பெய்தது. எங்கும் மகிழ்ச்சி பொங்கியது.[66]

களவும் குறும்பும் கனவிலும் காண முடியாததாயிற்று. விளைவு பெருகியது. மக்கள் முட்டுப்பாடு ஏதுமின்றி நிறைவுடனும் பாதுகாப்புடனும் வாழ்ந்தனர்.[67]

தீயன நீக்கித் திருமகளும் விழையும்படியாக உதயணன் நல்லாட்சி நடத்தினன்.[68]

சிற்றரசர்

பேரரசனின் கீழ்ப் பல சிற்றரசர் இருந்தனர். அவர்கள் பேரரசனுக்குத் திறை செலுத்தி வந்தனர். பேரரசன் காலத்தில் இருந்த இடம் தெரியாது அடங்கியிருந்து அவன் இறந்ததும் ஆங்காங்கே வெளிப்பட்டு அதிகாரம் செலுத்திய சிற்றரசர்களுக்குச் சூரியன் உள்ள பொழுது புலப்படாமலிருந்து அவன் மறைந்ததும் வெளிப்படும் உடுக்களை உவமையாகக் காட்டுகிறார் கொங்குவேள்.[69]

---

66. பெருங். 4 : 2 : 57 - 60

67. „ 4 : 2 : 71 - 78

68. தீயன நீக்கித் திருவிழை தகைத்தாப்
பாயினன் மாதோ பயந்தநன் றுடு

—பெருங். 4 : 2 : 96 - 97

69. நிறைகடல் மண்டிலம் நேமி உருட்டிய
இறைகெழு பெருவிறல் எஞ்சிய பின்றைக்
கடங்கண் ணரிந்த கைய ராகி
இடந்தொறும் பல்கிய மன்னர் போல
வரம்பில் பல்மீன் வயின்வயின் விலங்கிப்
பரந்துமீ தரும்பிய பசலை வானம்

—பெருங். 1 : 33 : 45 - 50

தவம் மேற்கொள்ளல்

ஆட்சிப் பொறுப்பில் வெறுப்பேற்பட்டபோது அரசர்கள் நாட்டைத் துறந்து காடு சென்று தவ வாழ்வு மேற்கொண்டனர். அரசுரிமையைத் துறந்தும் அன்புத் தொடரை அறுக்க இயலாதவராயிருந்தோர் மனைவி மக்களோடு தவ வொழுக்கம் மேற்கொள்வதுண்டு.[70] மனைவி மக்களைப் பிரிந்து தவம் இயற்றுதலும் உண்டு.[71]

70. ஏதம் இன்றி இறைக்கடன் கழித்துக்
காதற் பெருந்தொடர் களைதல் ஆற்றுன்
மாதர்த் தேவியொடு மாதவம் புரிந்த
மன்னவ முனிவன் —பெருங். 2 : 15 : 48 - 51

71. பெருங். 4 : 17 : 1 - 10

(ஆ) அமைச்சர்

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறு அங்கங்களையும் உடையவன் அரசருள் ஏறு போன்றவன் ஆவான் என்று திருக்குறள் குறிப்பிடுகிறது.[1]

அமைச்சுக் கண்ணாகவும், நட்புச் செவியாகவும், பொருள் முகமாகவும், படை மனமாகவும், மதில் கையாகவும், நாடு காலாகவும் அரசியல் உறுப்புகள் எண்ணப்படுவன என்கிறது சுக்கிர நீதி.[2]

அரச கருமம் எதுவாயினும் அரசனுக்கு ஆலோசனை கூறுபவர் அமைச்சரே. அரசாட்சியை ஒரு வண்டியாகக் கருதினால் அதை ஓட்டுநர் (Driver) அரசர், இயக்குநர் (Conductor) அமைச்சர் என்பது பொருத்தமாம்.

அமைச்சர் அறிவிற் சிறந்தவராயும், கடமையுணர்ச்சி மிக்கவராயும், ஒழுக்க சீலராயும், சிறந்த சொல்லாளராயும், அரசருக்கு உற்ற தோழராயும், அவர் நலம் நாடுவோராயும் விளங்கினர் என்பதை,

நன்னெறி அறியுநர்	(3 : 22 : 41)
செந்நெறியாளர்	(3 : 18 : 82)
நீதியாளர்	(2 : 17 : 184)
வடு நீங்கியோர்	(2 : 17 : 55)
மயக்கமில் கேள்வியர்	(3 : 2 : 4)
மந்திர மாந்தர்	(2 : 11 : 9)
பல் பொருளாளர்	(3 : 22 : 7)
தெரிமாணாளர்	(5 : 7 : 75)
கடனறி தோழர்	(3 : 2 : 5)

1. குறள் 381
2. சுக்கிர நீதி. முதல் அத். சுலோ. 62

ஆராய் தோழர் (5 : 2 : 1)
மன்பெருஞ் சீர்த்தியர் (3 : 18 : 29)
கழிபெருங் கேள்விக் கண்போல் மக்கள் (5 : 1 : 4)
நுண்மதி அமைச்சர் (1 : 55 : 25)
பல்புகழ் அமைச்சர் (3 : 21 : 22)
அரும்பொருள் நாவின் அமைச்சர் (3 : 21 : 24)

என்ற சொற்றொடர்களால் கொங்குவேள் குறிப்பிடுகின்றார்.

அரசர்க்குக் கண்

அரசன் தன்னை எதிர்க்கும் பகைவர் இன்றித் தன் ஆட்சியிற் பெருகிய போதும் அல்லது அவன் கெடுநிலை எய்திய போதும் தமக்குரிய கடமையிற் சிறிதும் வழுவாது அவனுக்கு உறுதி செய்வாராய், கற்றுப் பொருள் உணர்ந்தாராய், அரசனுக்குக் கண் போன்றாராய் அமைச்சர்கள் இருந்தனர்.[3]

ஆழ்விடத்துதவும் அரும்புணை

அமைச்சர்கள் அரசரைத் தம் உயிரெனக் கருதி, நிலை கொள்ளாத வெள்ளத்தே ஆழ்ந்தவனுக்குத் துணையாகக் கிடைத்த தெப்பம்போல, அல்லற் காலத்தே அவ்வரைக் காத்துத் தாங்கி, தம் பணியில் சிறிதும் தடுமாற்றமின்றி நெஞ்சுரமுடையராய் விளங்கி வந்தனர்.[4]

மருந்தோரன்னர்

மருந்து நோயைத் தீர்த்தல்போல அமைச்சருடைய சொற்கள் அரசரின் இடர்களை நீக்கின ஆதலின் உதயணனுடைய அமைச்சன் யூகி,

---

3. பெருங். 3 ; 3 : 88 - 97
4. ஆழ்விடத் துதவும் அரும்புணை போலத்
தாழ்விடைத் தாங்கிச் சூழ்விடைத் துலங்கா
உள்ள ஆற்றல் —பெருங். 3 : 1 : 42 - 44

நோயற எறியும் மருந்தோ ரன்ன
வாய்மொழிச் சூழ்ச்சித் தோழன்[5]

என்று பேசப்படுகிறான்.

நல்லவும் தீயவும் நாடி நாயகற்கு
எல்லையின் மருத்துவர் இயல்பின் எண்ணுவார்[6]

தசரதனுக்கு அமைச்சராய் அமைந்தனர் என்று கம்பரும் குறிப்பிடுவார்.

அமைச்சர் கடமை

தளர்ச்சி அகற்றுதல்: மன்னவன் தளர்ச்சி எய்திய போது முயன்று எவ்வாருயினும் அத் தளர்ச்சியை அகற்ற வேண்டியது அமைச்சர் கடமையாம்.[7]

மங்கையரோடு கூடி மகிழ்தல், பகைவரை வென்று அவர் தந்த திறைப் பொருளைக் கொணர்ந்து குவித்தல், சோலைகளையும் மலைச்சாரலையும் கண்டு களித்தல், மகளிருடன் புணையேறி நீர் விளையாட்டயர்தல் இன்னோரன்ன செயல்களுள் அரசனைக் கவரக் கூடியது எது என்பதை அறிந்து அதுகொண்டு அவன் தளர்ச்சியைப் போக்க அமைச்சர் முற்படுவர்.[8]

நீதி புகட்டுதல்: புதுவதாகக் காட்டினின்றும் கைப் பற்றிக் கொணர்ந்த யானையைத் திருத்தித் தாம் ஏவிய தொழிலைச் செய்யப் பயிற்றுவிக்கும் பாகர் போன்று

5. பெருங். 4 : 7 : 152 - 53
6. கம்பராமா. அயோத்தியோ. மந்திரப். 12 : 1 - 2
7. காவலன் அதிர்ந்த காலை மண்மிசைத்
தாவில் பல்லுயிர் தளர்ச்சி எய்தலின்
எத்திறத் தாயினும் அத்திறம் அகற்றுதல்
மந்திர மாந்தர் தந்திரம் —பெருங். 2 : 11 : 6 - 9
8. பெருங். 2 : 11 : 20 - 25

அமைச்சரும் சான்றோர் கூறிய நீதி மொழிகளைப் பன்முறையும் எடுத்துரைத்து அரசரைத் தெளிவிப்பர்.[9]

தாம் எடுத்துக் கூறுவதை மன்னன் ஏற்காது அதனால் தமக்குத் துன்பமே விளைவதாயினும் நீதியை எடுத்துரைத்தலின்று அமைச்சர் தவறக் கூடாது.[10] இக் கருத்தை ஏற்று, நீதிநெறி விளக்கம், ''யானை மதங் கொண்டபோதும் தனக்கு ஊறு நேரும் என்பதைச் சிறிதும் சிந்தியானாய் அதனை அடக்கி நல் வழியில் நடத்திச் செல்லும் பாகனைப் போன்று அரசன் வெகுண்டபோதும் அமைச்சர் அவனை உரிய வழியில் நடத்திச் செல்ல வேண்டும்'' என அமைச்சுக்கு இலக்கணம் வகுக்கிறது.[11]

அமைச்சர்கள்,

தம்முயிர்க் குறுதி எண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் நீரார்[12]

என்பது கம்பர் கூற்று.

நன்னிலைப் படுத்துதல்: தன் மகவினை அலைத்தேனும் ஆவின் பாலை அதன் வாயிலே பெய்யுமோர் அன்புடைய தாய்போல அமைச்சர்கள் அரசரை வற்புறுத்தியேனும் நன்னிலைக்கண் நிறுத்துவதில் தவற மாட்டார்கள்.[13]

---

9. பெருங். 3 : 1 : 34 - 37
10. ,, 4 : 6 : 32 - 38
11. செவிசுடச் சென்றுங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் பேரா — கவுள்மதத்த
கைம்மா வயத்தகே யாகுமற் றெத்திறத்தும்
அம்மாண் பினவே அமைச்சு.
—நீதிநெறி விளக்கம் 44
12. கம்பராமா. அயோத்தியா. மந்திரப். 11 : 1 - 2
13. நலத்தகு சேதா நறுநெய்த் தீம்பால்
அலைத்துவாய்ப் பெய்யும் அன்புடைத் தாயின்
இன்னா செய்தும் மன்னனை நிறூஉம்
—பெருங். 2 : 17 : 6 - 8

"அறம் செய்வது நன்மை தரும் என்றறிந்து அதைச் செய்யாதவரைச் சான்றோர் அச்சுறுத்தி அதனைச் செய்யு மாறு செய்தல், பாலுண்ண மறுத்துப் பிடிவாதம் செய்யும் குழந்தையை அதன் தாய் துன்புறுத்தியேனும் பாலை ஊட்டுதல் போலாகும்" என்ற பழமொழிப் பாடல்[14] கொங்குவேளின் உவமையை மட்டுமின்றி அவர் கருத்தை யும் ஏற்று நிற்கிறது.

பழமையிற் றிரியார்

பிறர் தமக்கு இந் நிலவுலகத்தோடு மேனிலை உலகத் தையும் பொருந்தக் கொடுத்தாலும் அமைச்சர் தம் மன்னர் ஏவியதை அல்லது அவரை வஞ்சித்து மாறுகச் செய்யார்.[15] அதனால் புறநானூறு இவர்களை, "பால் இனிமையொழிந்து புளிப்பினும், ஞாயிறு ஒளி மழுங்கி இருளினும், நான்கு வேதங்களின் ஒழுக்க நிலை மாறுபடி னும் தாம் அரசன்பால் கொண்ட அன்பிலிருந்து வேறு படாதவர்" எனப் பாராட்டுகிறது.[16]

---

14. உலப்பில் உலகத்து உறுதியை நோக்கிக்
குலைத்தடக்கி நல்லறம் கொள்ளார்க் கொளுத்தல்
மலைத்தழு துண்ணக் குழவியைத் தாயர்
அலைத்துப்பால் பெய்து விடல் —பழமொழி 212

15. இருநிலம் விண்ணோ டியைந்தனர் கொடுப்பினும்
பெருநில மன்னர் ஏயதை அல்லது
பழமையிற் றிரியார் பயன்தெரி மாக்கள்
—பெருங் 4 : 8 : 73-75

16. பாஅல்புளிப்பினும் பகலிருளினும்
நாஅல்வேத நெறிதிரியினும்
திரியாச் சுற்றம் புறநா. 2 : 17-19

(இ) ஒற்றர்

பகைவர், குடிமக்கள், அரசியல் தொழில் புரிவோர் முதலானோர் செயல்களையும் எண்ணங்களையும் திறமையாக அறிந்து, தாம் உணர்ந்தவற்றை அரசனிடம் மந்தணமாக உரைப்போர் ஒற்றராவர். அவர், 'உற்றதை உணரும் ஒற்றாள்'[1] எனப்படுவர்.

ஒற்றர் வகை

அரண்மனையின் உள்ளே தங்கிச் செய்திகளை அறியும் ஒற்றர் 'அகத்தொற்றாளர்'[2] என்றும்; எதிரி படை கொண்டு வருதலையும், படையின் அளவு, வலிமை முதலிய வற்றையும் அறிந்து சொல்பவர் 'படையொற்றாளர்'[3] என்றும்; நாட்டு மக்கள் அரசர் பற்றியும் ஆட்சி பற்றியும் கூறுவனவற்றை அறிந்துரைப்போர் 'படுசொல் ஒற்றர்'[4] என்றும் கூறப்பட்டனர்.

---

1. பெருங். 1 : 56 : 169
2. அகத்தொற் றாளரின் அகப்பட அறிந்தவன்
—பெருங். 4 : 8 : 51
3. (i) படையொற் றாளர் கடுகுபு குறுகிக்
காவலற் கிசைத்துக் கண்டுகை கூப்பி
—பெருங் 3 : 19 : 44 - 45

(ii) ஏழ்ச்சியும் எறிபடை அளவும்எம் பெருமான்
சூழ்ச்சியும் சூழ்பொருட் துணிவும் எல்லாம்
படிவ ஒற்றிற் பட்டாங்கு உணர்ந்து
—பெருங். 3 : 25 : 6 - 8
4. கம்பலை மூதூர் வம்பலர் எடுத்த
படுசொல் ஒற்றர் —பெருங். 1 : 36 : 3 - 4

பகை ஒற்றர்

பகை மன்னரின் ஒற்றர் அகப்படுவராயின் குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்படுவர்.

பற்று மன்னன்
ஒற்றர் இவரென உரைத்தறி வுறீஇக்
குற்றங் காட்டிக் கொலைக்கடம் பூட்டுதும்[5]

என்பது மன்னன் கட்டளையாகும். விறகிட்டுத் தீ மூட்டி அவரை அதிலிட்டுச் சாகடிப்பர்.[6]

ஒற்றரைத் தெளிதல்

மாற்றரோடு மருவியோ, வேறு வகையில் மனநிலை திரிந்தோ ஓர் ஒற்றன் தன்னிலை மாறவும் கூடும் ஆதலால் அவன் சொல்லை முற்றிலுமாக நம்பாது அவனறியாமல் மற்றோர் ஒற்றனைக் கொண்டு முன்னவன் சொன்னது சரியா என ஆய்தல் வேண்டும். இவ்வாறு மூன்று ஒற்றர்களுடைய சொற்களின் ஒத்த தன்மையை ஆராய்ந்து அதன் பின்னரே அரசன் தெளிய வேண்டும் என்பதைத் திறக்குறள் வலியுறுத்துகிறது.[7] இதனைக் கொங்குவேளும்,

ஒற்று மாக்களை ஒற்றரின் ஆயா
முற்றனக்கு உரைத்த மூவர் வாயவுள்
ஒத்தது நோக்கி மெய்த்தகத் தேறி[8]

—என்று கூறிடக் காண்கிறோம்.

---

5. பெருங். 3 : 25 : 101 - 03
6. செந்தீ ஈமம் செறியக் கூட்டி
   ....
   இடுமின் —பெருங். 3 : 26 : 28 & 31
7. குறள். 588, 589
8. பெருங். 3 : 25 : 48 – 50

இக் கருத்தை விநாயகபுராணம்,

ஒருவர் ஒருவர் தமையறியாது
ஒருமை வினைக்கண் மூவர்தமை
மருவ விடுக்க; மூவர்களும்
வந்து மொழிவது ஒத்துவிடின்
கருமம் அதனை மிகத் தெளிக;
கரும மறைப்ப வேண்டுதியேல்
பொருவி லவர்தம் பால்சிறப்புப்
புறந்தோன் றுமல் செய்திடுக.

என்று மிகத் தெளிவாக விளக்குகிறது.

(ஈ) தூதுவர்

ஓர் அரசன் சார்பாக மற்றோர் அரசனிடம் சென்று தம் அரசன் கூறியதை உறுதி பயப்ப இனிதுரைத்து வருவோர் தூதராவர். ஒற்றர் பிறரறியாமல் மறைந்து பணியாற்றுபவர். தூதரோ வெளிப்படையாகத் தெரிந்து பணிபுரிபவர். பகை நாடுகளில் ஒற்றர் பிடிபட்டால் கடுமையாகத் தண்டிக்கப்படுவர். தூதரை அரசர் தண்டியார். பகை மன்னரேயாயினும் தூதரை வரவேற்று அவர் கூறுவது கேட்பர்.

அரசனின் வாய்

அரசனை ஓர் உடல் என்று கொண்டால் அவ்வுடலுக்கு, அமைச்சர் கண், மக்கள் கால், தோழர் தோள், ஒற்றர் செவி, தூதர் வாய் என்பர்.

> மந்திரக் கிழவர் கண்ணா மக்கள்தன் தாள்க ளாகச்
> சுந்தர வயிரத் திண்தோள் தோழராச் செவிகள் ஒற்றா
> அந்தர உணர்வு நூலா அரசெனும் உருவு கொண்ட
> எந்திரம் இதற்கு வாயாத் தூதுவர் இயற்றப் பட்டார்.[1]

குறள் காட்டும் தூதுவர்

அன்பும், தகுதியான குடிப்பிறப்பும், சிறந்த பண்பும் உடையராகத் தூதர் இருக்க வேண்டும். அன்பு, அறிவு, சொல்வன்மை ஆகிய இவை தூதர்க்கு இன்றியமையாத மூன்று பண்புகளாம். கல்வியிலும் அவர் சிறந்திருக்க வேண்டும். அறிவோடு அழகிய தோற்றமும் பொருந்தியிருக்க வேண்டும். பலவற்றைத் தொகுத்துச் சொல்லி, பயனில சொல்லாது, கேட்போர் நிலையறிந்து பேசி, தம்

---

1. சூளாமணி, தூதுவிடு சருக்கம் 135

அரசனுக்கு நன்மையே தேடுபவராய் இருக்க வேண்டும். கலைகள் பலவும் கற்று, எவ்விடத்திலும் அஞ்சாமல், கேட்பவர் உள்ளத்தில் பதியுமாறு சொல்ல வேண்டும். கடமையறிந்து, காலத்தை நோக்கி, சென்றுள்ள இடத்தின் இயல்புணர்ந்து, சொல்லுதற்குரியதை முன்னதாகவே நுண்ணிதின் ஆராய்ந்து துணிவுறச் சொல்லுதல் வேண்டும். தூய்மையுடைமை, துணையுடைமை, துணிவுடைமை என்ற இம் மூன்றும் வாய்த்திருக்க வேண்டும். தம் அரசர்க்குத் தாழ்வுதரும் சொல்லை வாய்மறந்தும் சொல்லாத மனவுறுதி வேண்டும். தாம் சாக நேரிடினும் ஆக வேண்டிய நன்மையை ஆற்ற வேண்டும். இவ்வாறு தூதர் இலக்கணத்தைத் திருக்குறள் தருகிறது.[2]

வள்ளுவர் வழியில் கொங்குவேள்

எதிரியை வென்று, நாட்டைப் பெற்று, உதயணன் ஆட்சிக் கட்டில் ஏறியதும் அவனிடம் நட்புக் கொள்ள விரும்பிப் பிரச்சோதனன் தூது விடுத்தான். பதுமை என்பவள் தூதியாக வந்தாள். திருக்குறள் கூறும் தூதுவர் இலக்கணத்தை முற்றிலுமாகப் பதுமையிடம் படைத்துக் கூறுகிறார் கொங்குவேள். அவள் நீதி நூல்களை ஓதி முதிர்ந்த செந்நாவினை உடையவள்; அந் நூல்கள் வகுத்த நெறி நின்று, பொறி புலன்கள் நன்கு அடங்கப்பெற்று, விருப்பும் வெறுப்பும் முற்றும் நீங்கப் பெற்ற சிறப்பினை உடையவள்; பிறர் நெஞ்சத்தே உள்ள எண்ணங்களையும் அவர் கூருது விட்ட செய்திகளையும் குறிப்பினால் முறைப்பட ஆராய்ந்து அறியும் தன்மையள்; நூற் பொருளைத் தானே தெளிவுண்டாக ஆராய்ந்து உணருகின்ற நுட்ப அறிவினள்; வேற்று மன்னர் தன் உடலுறுப்புகள் பலவற்றையும் அரிந்தாலும், தலையைத் திருகிக் கொன்றாலும், உடலின்மேல் ஊசிகள் பலவற்றைச் செலுத்திக் குத்தினாலும், சினந்து

2. குறள் 681 - 90

கொடுஞ் சொற்களைக் கூறி அச்சுறுத்தினாலும் மறைச் செய்தியை வெளிப்படுத்தாத மன உறுதியள்; தான் பெரிதும் மகிழும்படி மாற்றரசர் பல்வேறு சிறப்புகளைச் செய்தாலும் அவற்றால் மனம் பிறழ்ந்து தன் கொள்கைக்கு மாறுயதொன்றைக் கூறாதவள்; தன் அரசனிடம் தான் அறிந்து வைத்துள்ள குறையைப் பிறரிடம் புலப்படுத்தாதவள்; அரசன், 'நீ இன்ன செயலைச் செய்க' என்று வெளிப்படக் கூறி ஏவிய செயல் மட்டுமின்றி, அவ்வரசன் மனத்தில் கருதிய செயல்களையும் குறிப்பாலுணர்ந்து அவன் ஏவாமலே தானே செய்து முடிக்கும் அரிய முயற்சியள்; பகையரசர் தீமை செய்தாலும் பிறர்பால் பழி கூறாது புகழ்ந்தே பேசும் நற்பண்பினள்; புல்லோர் மொழி கேளாது, நல்லோர் கூறும் நூற்பொருளைச் செவி வாயாக நெஞ்சிற் கொண்டு எவரிடத்தும் பணிவுடைமை காட்டும் இனிய சொல்லினள்; பொருள் பொதிந்த மொழிகளையே பேசும் இயல்பினள். இவ்வாறாகப் பதுமையின் இயல்புகள் பேசப் படுகின்றன.[3]

தூதர் வகை

தன் அரசன் கொடுத்த ஓலையைக் கொண்டுபோய்க் கொடுத்து நிற்பவன் கடைத் தூதன்; அவன் சொன்னது இது என்று அவ்வாறே சொல்பவன் இடைத் தூதன்; சமயமறிந்து அவன் சொல்லாதவற்றையும் பொருத்தமுறத் தானே கற்பித்து உரைப்பவன் தலைத் தூதன்.

> தான்அறிந்து கூறும் தலை;மற் றிடையது
> கோன்அறைந்தது ஈதென்று கூறுமால்-தானறியாது
> ஓலையே காட்டும் கடை,என் றொருமூன்று
> மேலையோர் தூதுரைத்த வாறு[4]

3. பெருங். 4 : 10 : 13 – 35
4. பாரதவெண்பா, சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக வெளியீடு, பின்னிணைப்பு – 2 : 41 (பக்.349)

எனப் பெருந்தேவனுர் தூதரை மூவகையாகப் பிரித்துக் காட்டுவார். தூதர்க்குரிய முறைமையை நன்கறிந்து, அன்புடைமை முதலிய குணங்களெல்லாம் உடையளாய், இடங் காலங்களின் இயல்புகளை இனிதுணர்ந்து, வேற்று மன்னனிடம் ஏற்றவாறு இன்புறப் பேசி, தன் அரசுக்கு ஆக்கமுறப் பணியாற்றுகின்ற பண்பினளாய்ப் பதுமை தலைத் தூதனுக்குரிய இலக்கணம் முற்றிலும் அமையப் பெற்றுத் திகழ்ந்தாள்.

பாவிடு குழல்

அரசர்களிடையே மட்டுமின்றிப் பொதுவாக இருவரிடையே செய்திகளை எடுத்துச் சென்று, சொல்லிச் செயலாற்றுபவரும் தூதர் என்றே சொல்லப் பட்டனர். சாதகன் என்பவன் கௌசாம்பியில் வாழ்ந்துவந்த குயவன். உதயணன்பால் பேரன்பு பூண்டவன். உதயணனைச் சிறை மீட்க யூகி உச்சயினி சென்றபோது குயவனும் உடன் சென்ருன். உதயணன் விடுதலைக்குப்பின் யூகியிடமிருந்து உதயணன் நலங் கருதித் தொண்டாற்றி வந்தான். பகையரசனை வென்று, நாட்டைக் கைப்பற்றி, உதயணன் ஆட்சியேற்றபின் அவனிடமிருந்து பிரித்து வைத்த வாசவதத்தையை யூகி சேர்த்துவைக்க விரும்பினுன். அக்கருத்தை ஓர் ஓலையில் எழுதி அதனை உருமண்ணுவாவிடம் சேர்க்குமாறு சாதகனை அனுப்பினுன். சாதகன் உருமண்ணுவாவிடம் சென்று பேசியது தூது செல்கின்ற முறைப்படி அமைந்தது.[5] யூகி, உருமண்ணுவா இடையே சாதகன் சென்றுவந்த தன்மை,

> **தீதில் கேள்விச் சாதகன் என்போன்**
> **உருமண் ணுவாவும் யூகியும் தறியாக்**

5. தூதுசெல் ஒழுக்கிற் சாதகன் உரைப்ப
—பெருங். 4 : 4 : 84

கரும மேற்கோள் தெரிநூ லாகப்
பாவிடு குழலின் ஆயிடைத் திரிதர[6]

இருந்தது என்பார். இதிலிருந்து யூகி, உருமண்ணுவா இரு வரிடையேயும் சாதகன் பன்முறை தூது சென்று வந்த னன் என்பது தெரிகிறது. யூகியும் உருமண்ணுவாவும் இரு மருங்குமுள்ள பாவாகவும், அவர்களிடம் சாதகன் கேட்ட மொழி ஊடை நூலாகவும், சாதகன் தூது சென்றது ஊடை நூலை உட்கொண்டு அங்குமிங்கும் ஓடிய குழலாகவும் உவமிக்கப்பட்டுள்ளது நினைந்து நினைந்து இன்புறத் தக்க தாம். மேலும், குழல் இருமருங்குமுள்ள பாவின் நூலை ஊடையால் பிணிப்பதுபோலத் தூதுவனும் தான் தூது சென்று வரும் இருவரையும் தன் பணியால் ஒன்றுபடுத்து கின்ற ஆற்றல் உள்ளவனுக விளங்க வேண்டும் என்பதும் குறிப்பாற் புலப்படுத்தப்படுகிறது.

பெண் தூதர்

ஊடல் கொண்டுள்ள தலைவியின் ஊடலைப் போக்கத் தலைவனின் தூதாகத் தோழி, பாணன் முதலியோர் செல்வ துண்டு. அக இலக்கியங்களில் பெண்கள் தூது செல்வது பெருமளவில் உண்டு. அரசியலில் பெண் தூதராக ஔவை யார் காட்டப்படுகிறார். அதியமான் நெடுமானஞ்சியிடம் தொண்டை நாட்டையாண்ட தொண்டைமான் பகை கொண்டான். தன்னிடம் படை வலி மிக்கிருப்பதாக எண் ணிச் செருக்குற்றான். போரின் கொடுமையையும் அதனால் மக்களடையும் கொடுமையையும் எடுத்துச் சொல்லித் தெளி விக்குமாறு அதியமான் ஔவையாரைத் தொண்டைமானி டம் தூதாக அனுப்பினான். தொண்டைமான் ஔவை யாரைத் தன் படைக்கலக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்று பெருமையோடு காட்டினான். ஔவையார் அதிய னின் படைக்கலங்களைப் பழிப்பதுபோலப் புகழ்ந்தும்,

---

6. பெருங். 4 : 4 : 36 - 39

தொண்டைமான் படைக்கலங்களைப் புகழ்வதுபோலப் பழித்தும் கூறினர் என்ற செய்தியைப் புறநானூற்றில் அறிகிறோம்.[7] ஔவையார் பெரும் புலவர் என்ற முறையில் தூது சென்றாரே தவிர அரசுப் பணியாள் என்ற முறையில் இல்லை. பெருங்கதையில்தான் முதன் முதலாக அரசுப் பணியாளராக ஒரு பெண் தூதரைக் காணுகிறோம்.

7. புறம். 95

13. மக்களும் தொழிலும்

நாட்டில் பல்வேறு தொழில்களைச் செய்த மக்கள் வாழ்ந்திருந்தனர். பெருங்கதைக் காலம் சாதிப் பிரிவுகள் தோன்றிவிட்ட காலம் என்றாலும் நூலில் சாதி வேறுபாடுகள் பற்றிப் பேசப்படவில்லை. எவ்வெப் பிரிவினர் எவ்வெத் தொழில் செய்து வந்தனர் என்பதையும் அத் தொழில் பற்றிய விளக்கங்களையும் மட்டுமே நாம் அறிய முடிகிறது.

வேளாளர்

உழவுத் தொழிலை மேற்கொண்டிருந்த வேளாளர்களைக் கொங்குவேள் பெருமைப்படுத்திப் பேசுகிறார்.[1]

சான்றாண்மை என்ற நுகத்தடியில் பொறுமை என்னும் கயிற்றால் பிணைக்கப்பட்டு அறம் என்னும் வண்டியைத் தீவினையாகிய பெரிய ஆற்றுத் துறையைக் கடந்து இன்பமெனும் மறுகரைக்கு முயன்று இழுத்துச் செல்லும் எருது

1. சால்பெனக் கிடந்த கோலப் பெருநுகம்
பொறைக்கழி கோத்துப் பூண்டன ராகி
மறத்துறைப் பேரியாற்று மறுகரை போகி
அறத்துறைப் பண்டி அசைவிலர் வாங்கி
உயர்பெருங் கொற்றவன் உவப்பினும் காயினும்
தவிர்க்கவும் போக்கவும் படாத தன்மையர்
நன்புலந் தழீஇய மன்பெருஞ் செய்கைக்
காரணக் கிளவிப் பூரண நோக்கிற்
பெருங்குடி யாளர் —பெருங். 3 : 3 : 57 - 65

களாக வேளாளர்களை அவர் உருவகிக்கிறார். அவர்களுடைய உழைப்பால் பசிக் கொடுமையாகிய தீவினை அகன்று எங்கும் இன்பம் நிறைந்தது. அவர்கள் நிலத்தோடு பிணைக்கப்பட்ட பெருந்தொழிலாளராய் விளங்கினர். அரசன் தம்மை விரும்பினாலும் அல்லது வெறுத்தாலும் தம் நிலையினை மாற்றவோ அல்லது அகற்றவோ இயலாத தன்மையராய், நிறைந்த கண்ணோட்டத்துடன், உலகுக்குப் பெரிய காவலாக வேளாளர் விளங்கினர்.

வணிகர்

ஒரு நாட்டின் செழிப்புக்கு உழவும் வணிகமுமே தலை சிறந்தனவாம். உழவு வளமுடன் நடைபெற்றிருந்தது போலவே வணிகமும் பண்டை நாட்களில் மேம்பட்டிருந்தது.

வணிகர் சங்க நிதி பெற்ற தன்மையுடையோர் போன்ற செல்வச் செழிப்பினராய் இருந்தனர். இவ்வுலகத்தே இல்லாத குதிரைக் கொம்பாயினும், இருந்தும் கைக்கொள்ளுதற்கரிய பாம்பின் மணி சிங்கப் பால் ஆனாலும், தேவர்கள் கடலைக் கடைந்தெடுத்த தேவாமிர்தமானாலும் வேண்டுமென்று கேட்டால் இல்லையென்னாது அவை. கிடைக்குமிடத்தே சென்று கைக்கொண்டு கொணர்ந்து தருகின்ற ஆற்றலுடையோராய் விளங்கினர்.[2]

---

2. மதியுறழ் சங்கின் வாய்வயிற் போந்த
நிதியம் பெற்ற நீர்மையர் போல
அதிரா இயற்கை அங்கண் ஞாலத்துக்
குதிரை மருப்பும் கொளற்கரி தாகிய
அழலுமிழ் நாக நிழலுமிழ் மணியும்
சிங்கப் பாலும் தெண்டிரைப் பௌவத்து
மூவா அமரர் முயன்றுடன் கொண்ட
வீயா அமுதமும் வேண்டிற் போய்த்தரும்
அரும்பெறற் பண்டம் ஒருங்ககத் தடக்கி
விட்டனர் இருவா முட்டில் செல்வத்துப்
பல்விலை வாணிகர் —பெருங். 3 : 3 : 67 – 77

அவர்கள் பெறுதற்கரிய பண்டங்களையெல்லாம் ஓரிடத்தே திரட்டி வைத்தனர்; பல்வேறு பண்டங்களை விற்றனர்; முட்டுப்பாடில்லாத செல்வராய்த் திகழ்ந்தனர்.

ஒருபாற் கோடாத உள்ளத்தினர்: வணிகர் ஒருபாற் கோடாமல் நடுநிற்கும் நல்லொழுக்கமுடையராய் இருந்தனர் என்பதை,

> வாரமில் ஒழுக்கின் வாணிகர்[3]

என்று கொங்குவேள் குறிப்பிடுகிறார். வாரமில் ஒழுக்கம் என்பது, நடுநிலையுள்ள நெஞ்சத்துடனே வாய்மையையே மொழிந்து, தம் சொத்தைப் போலவே பிறர் சொத்தையும் கருதி, தாம் கொள்ளும்போது பிறரை ஏமாற்றி மிகுதியாகக் கொள்ளாமலும், பிறர்க்குத் தரும்போது அவர்கட்குத் தரவேண்டிய அளவைக் குறைத்துக் கொடாமலும், வெளிப்படையாகத் தமது இலாபத்தைச் சொல்லிப் பண்டங்களை விற்று வருவதே எனப் பட்டினப் பாலை குறிப்பிடும்.[4]

வணிக வகை: கடலிலே சென்று பிற நாடுகளில் திரட்டிய விலையுயர்ந்த பொருள்களைக் கொண்டுவந்து விற்றல் வணிகத்தில் ஒரு வகை. நகரத்திலேயே தம் கடையிலிருந்து தம்முடைய வணிகத் தொழிலால் பொருளைப் பெருக்கி வாழ்தல் மற்றொரு வகை; அரிய பண்டங்களை அவை நிறையக் கிடைக்கும் காலத்தில்

---

3. பெருங். 5 : 1 : 6
4. நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
—பட்டினப். 206 - 11

வாங்கித் தம் பண்டக சாலையில் காத்து வைத்து, பின்னர் அவற்றை விற்றற்குரிய காலத்தே விற்றல் பிறிதோர் வகை.[5]

இயங்கு வணிகர்: வணிகர்கள் மலையில் தோன்றிய மணி முதலியவற்றை ஊர்களிலே உறைந்த மக்கட்கு அவரவர் இருப்பிடத்தே கொணர்ந்து கொடுத்தனர்.[6] உண் பொருள்கள், மருந்துக்குரிய பொருள்கள், மகளிர்க் குரிய பொருள்கள் ஆகியவற்றைத் தனித்தனியே பைகளி லிட்டு ஆட்கள் மீது சுமையாக ஏற்றி வெளியிடங்கட்கு எடுத்துச் சென்றும் விற்றீனர்.[7]

உண்ணுதற்குரிய பொருள்கள், பூசுவதற்குரிய பொருள்கள், பூண்டு கொள்வதற்குரிய பொருள்கள், உடுத் தற்குரிய பொருள்கள், நீராடற்குரிய பொருள்கள், மணி பொன் முதலிய மலைபடு பொருள்கள் ஆகியவற்றை வணி கர்கள் உள் நாட்டிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் கொணர்ந்து விற்றனர் என்பதை,

> உண்ணுவ பூசுவ பூண்ப உடுப்பவை
> மண்ணுவ மணிபொன் மலைய கடல
> பண்ணிய மாசறு பயந்தரு காருகப்
> புண்ணிய வணிகர்[8]

எனப்·பரிபாடல் திரட்டும் அறிவிக்கிறது.

மணி வணிகர்: வரம்பிட்டு அறிய முடியாத விலை யுயர்ந்த மணிகளை விற்ற மணி வணிகர்களும் இருந்தனர்.[9]

---

5. எறிதிரை முந்நீர் ஊடுசென் றவ்வழி
உறுவிலைப் பண்டத்தின் ஒருவன் வாழும்;
கடையகத் திருந்துதன் னுடையது பெருக்கிப்
பிரிவிலன் வாழும் ஒருவன்; ஒருவன்
அரிய பண்டம் எளிதின் அடக்கியவை
உரிய காலத் துற்றது பகரும் —பெருங். 5 : 1 : 16 - 21
6. பெருங். 1 : 51 : 32 - 34
7. ,, 3 : 17 : 130 - 175
8. பரிபாடல் திரட்டு 1 : 22 - 25
9. பெருங். 3 : 17 : 122 - 25

அந்தணர்

அந்தணர் நான்கு வேதங்களையும் ஐயந்திரிபறக் கற்று அவற்றில் கரை கண்டவராய்த் திகழ்ந்தனர். அவர்கள் நன்மையையே நவின்ற நாவினராயும், ஐம்பொறிகளையும் காத்து அடக்கிய ஒழுக்கத்தினராயும், தவவேடம் தாங்கி வேள்வி செய்வோராயும், மறைகள் தமக்குக் கூறிய ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் அறுவகைத் தொழிலினின்றும் பிறழாதவராயும், அறம் பிறழா நெஞ்சினராயும் விளங்கினர்.[10]

இப் பண்புகளை,

> அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்,[11]
> அறுதொழில் அந்தணர்,[12]

என்று புறநானூறும்,

> அறநெறி பிழையா அன்புடை நெஞ்சிற்
> பெரியோர்[13]

என்று மதுரைக் காஞ்சியும் குறிப்பிடும்.

அவர்கள் நான்கு மறைகளோடு ஆறுவகை அங்கங்களையும், விதிமுறைகள் அமைந்த வித்தையிடங்கள் (வித்தியாஸ்தானம்) பதினெட்டினையும் பயின்று, அவற்றில் முதிர்ந்து, ஏனைய நூற் கேள்வியிலும் சிறந்து விளங்கினர்.[14] சிறந்த பார்ப்பன மக்கள் துறவோர் விரும்

---

10. பெருங். 3 : 3 : 79 - 87
11. புறநா. 93 : 7
12. ,, 397 : 20
13. மதுரைக். 472 – 73
14. சதுவகை வேதமும் அறுவகை அங்கமும்
விதியமை நெறியிற் பதினெட் டாகிய
தான விச்சையும் தான்றுறை போகி
ஏனைக் கேள்வியும் இணைதனக் கில்லவன்
—பெருங். 4 : 3 : 62 – 65

பிய தூய வித்தைகளாகிய வேத விழுப்பொருள்களை யன்றிப் பிறவற்றை விரும்பிப் பயிலமாட்டார்கள்.[15]

வாழ்த்துதல்: திருமணங்களில் வேள்வித் தீயை இயற்றிச் சடங்குகளை நிகழ்த்திய அந்தணர்கள் நீலமணியைப் பதித்து வைத்தாற்போன்ற தம் கரிய நிறக் குடுமியில் மல்லிகை மாலையைச் செருகியிருந்தனர்; காதுகளில் மணிக் குழைகளை அணிந்திருந்தனர்; மேனியெங்கும் சந்தனம் பூசியிருந்தனர்; பால்போலும் வெண்ணிற ஆடையை அணிந்திருந்தனர்; வெண்மையான மலர், நெல், புல் முதலியவற்றை மணமக்கள் தலையில் தெளித்து அவர்களை வாழ்த்தினர்.[16]

தக்கணை பெறுதல்: விழா நாட்களிலும் பிற சிறப்பு நாட்களிலும் அந்தணர்க்குத் தக்கணை வழங்குவது வழக்கமாயிருந்தது.[17] குளம்புகளிலும் கொம்புகளிலும் பொன்னை அழுத்தி அணிசெய்து, கழுத்தில் புத்தாடைகளைச் சுற்றிய பசுக்களை அரசர்கள் அந்தணர்க்குத் தானமாகத் தந்தனர்.[18]

வேள்வி செய்யும் அந்தணர்க்குப் பொற்கலங்களையும்,[19] பொருள் வேண்டி இரந்து நின்ற அந்தணர்க்கு அவரு

15. நீத்தவர் வேண்டிய துப்புர வல்லால்
பார்ப்பன மக்கள் பரிந்துபிற பயிற்றுர்
—பெருங். 3 : 14 : 179 – 80

16. பெருங். 2 : 4 : 140 – 60

17. தண்புன லாட்டின் தக்கணை யேற்கும்
அந்த ணாளர் அடைக விரைந்துஎன
—பெருங். 1 : 39 : 51 – 52

18. குளம்புங் கோடும் விளங்குபொன் னழுத்திச்
சேடணி சேதா இளையன இன்னே
கோடி முற்றிக் கொண்டனிர் வருகெனத்
தெரிமலர்க் கோதைத் தேவியை உள்ளி
அருமறை யாளர்க் கெழுமுறை வீசி
—பெருங். 4 : 7 : 127 – 31

19. கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்க்கு
அருங்கலம் நீரொடு சிதறி
—புறநா. 361 : 4 - 5

டைய கை நிறையப் பொன்னையும் அரசர் நீருடன் அட்டித் தந்தனர்[20] என்பதைப் புறநானூறு புலப்படுத்துகிறது.

விழா நாட்களில் அறச்சோற்று அட்டில்களில் அந்தணர்க்கு உணவு படைக்கப்பட்டது. தெய்வங்கட்குப் படைக்கப்பட்ட நிவேதன உணவை அந்தணர் உண்பதும் வழக்கமாயிருந்தது. அந்தணர் அவ் வுணவை உண்ட காட்சியைக் கொங்குவேள் நகைச்சுவை தோன்றப் படைத்துக் காட்டுகிருர்.

உச்சயினியில் நடைபெற்ற நீராட்டு விழாவின்போது கோப்பெருந்தேவி அறச் சோற்றட்டிலில் அந்தணர்க்குச் சோறிடுமாறு கூறியிருந்தாள், சங்கு போலும் வெண்ணிற முடைய பொங்கற் சோறு பரிமாறப்பட்டது. சமையற் காரன் அந்தணர்க்கு வார்க்க வேண்டிய தயிரை வார்க்காது விட்டு விட்டான்; அதனுல் அவர்கட்கு வெகுளி தோன்றியது. சோற்றை உண்ணுமல் சிதறிவிட்டு, ''இந்த மடையனை (சமையற்காரனை) நமக்கு உணவு வழங்குமாறு கட்டளையிட்ட அரசி முன் இழுத்துச் செல்வோம் வாருங்கள்'' என்று சமையற்காரனைப் பிடித்து இழுத்துத் துன்புறுத்தி நின்றனர்.[21]

முன்னரே விலாப் புடைக்க உண்டு விட்டமையால் மேலும் உண்ண முடியாதவனுய் இருந்த ஓர் அந்தணன்

---

20. ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து

—புறநா. 367 : 4 - 5.

21. தளையுலை வெந்த வளைவா லரிசி
வண்ணப் புழுக்கல் உண்ணுது சிதறி
ஊட்டெமக் கீத்த கோப்பெருந் தேவி
முன்ன ராக முன்னுமின் கொண்டெனத்
தலைப்பெரு மடையனைத் தலைக்கடை வாங்கும்
எந்தயிர் வாரான் எமக்கெனச் சீறி
அந்த ணுளர் அலைப்பது காண்மின்

—பெருங். 1 : 40 : 133 - 39

கடவுளுக்குப் பலியாக விட்டுச் சென்ற உணவினைக் கண்டான். காக்கைகளை விரட்டி, தன் கண்ணாலேயே அச் சோற்றை உண்டு விடுபவன்போல விரும்பிப் பார்த்து நின்றான். 'அம்மம்மா! எனக்கு இந்த உஞ்சை நகரையே வழங்கினாலும் வேண்டேன்! ஆனால் உருக்கிய நெய்யை நிறையப் பெய்து சமைத்த பொங்கலுடன் பாற்சோறும் கிடைக்குமாயின் வயிறார உண்பேனே'' என்று தன் கண்களில் இன்பக் கண்ணீர் ஒழுக, அச் சோற்றினை எடுத்துக் கொண்டு, உண்டற்கு இடந்தராத தன் வயிற்றினை ஒரு கையால் தடவிக் கொண்டே நடந்தவனை எதிரில் வந்த ஓர் அந்தணன் கண்டு சிரித்தான். அவன் தன் மேலாடையை இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டே, ''ஏடா! இம் மடைச் சோற்றினை உண்ணுதற்குரிய புண்ணியம் உடையவன் யானே! அவ்வாறிருக்க எனக்கு மறைத்து நீ அதனைக் கொண்டு சென்றுவிட முடியுமா? அச் சோற்றை என்னிடம் தந்தால் நான் என் உயிரை வைத்திருப்பேன். இல்லையேல் இன்றே செத்தொழிவேன்'' என்று கூறித் தன் செவிகளிலே அறைந்து கொண்டு கண்டோர் ஆரவாரிக்கக் கலகம் செய்தான்.[22]

நீராட்டு விழாவிற் கலந்துகொண்ட மக்கள் கண்ட காட்சிகளாகக் கொங்குவேள் இவற்றை நமக்குக் காட்டுகிறார்.

மருத்துவர்

ஊழ்வினையின் சூழ்ச்சியால் ஒரோ வழித் தவறினும் தவறலாமேயன்றி, தம் சோர்வினாலே தவறேதும் செய்யாதவராய் மருத்துவர் விளங்கினர். அவர்கள் எமனையும் மாற்றிவிடுவதற்கேற்ற மருத்துவ நூல் அறிவினைப் பெற்றி

22. பெருங். 1 ; 40 : 277 - 94

ருந்தனர்; உடலைக் காப்பாற்றும் தொழிலையே தம் தலையாய கடமையாகக் கொண்டிருந்தனர்.[23]

குழந்தை மருத்துவர் : குழந்தைகட்கெனத் தனி மருத்துவர் இருந்தனர். கசப்பு மருந்தாயின் அவர்கள் தேன் சுவையைக் கூட்டிக் குழந்தைகட்கு ஊட்டினர்.[24]

அரண்மனையில் குழந்தை பிறந்ததும் அதைப் பாதுகாக்க மகவு வளர்ப்பு நெறியறிந்த மகளிரும் அறிவு நூல் பயின்ற மருத்துவரும் அமர்த்தப்பட்டனர் எனக் கொங்குவேள் குறிப்பிட்டுள்ளார்.[25] மருந்தினை வகுத்துத் தர மருத்துவரும் (Doctor), அதை உரிய முறையில் கொடுத்துவரச் செவிலியரும் (Nurse) இன்றுபோல் அன்றுமிருந்தனர் என்பதை இதன்மூலம் அறிகிறோம்.

சேணிகர்

பூவினில் தாமரை சிறந்ததுபோல அணிவதில் சிறந்தது ஆடையாயிற்று. அதனை நெய்துதர நெசவாளிகள் இருந்தனர். அவர்கள் ஆடைகளை ஐவகை வண்ணங்களில் இயற்றித் தந்தனர்.[26]

---

23. ஊழின் அல்லது தப்புதல் அறியார்
காலனும் கடியும் நூலொண் காட்சியர்
யாக்கை மருங்கிற் காப்புக் கடம் பூண்டு
அருந்துறை போகிய பெருந்தகை யாளர்
—பெருங். 1 : 34 : 9 - 12

24. தேன்சுவைக் கொளீஇ வேம்பின் ஊட்டும்
மகாஅர்மருந் தாளர் —பெருங். 2 : 11 : 173 - 74

25. யாப்புடை மகன்வயிற் காப்புடன் புரிகென
விதியறி மகளிரொடு மதிபல நவின்ற
மருந்து வகுப்பாளரைப் புரந்துறப் பணித்து
—பெருங். 5 : 6 : 142 - 44

26. பூவினுட் பொலிந்த தாமரை போலத்
தாவில் அணியிற் றுன்மீக் கூரிய
அறுவைக் கோதிய ஐவகை வண்ணத்துத்
துறைவிதி நுனித்த தூத்தொழி லாளர்
—பெருங். 2 : 5 : 126 - 29

குயவர்

உதயணனுடைய முன்னோர் காலந் தொடங்கி அரண்மனைக்குக் கலம் செய்து கொடுக்கும் உரிமை பூண்ட குடியிற்றோன்றிய குயவன் ஒருவன் பெருங்கதையிற் காட்டப்படுகின்றான். மட்பாண்டங்கள் வனைதல் 'பெருங் கலக் கைவினை' எனப் பேசப்படுகிறது.[27]

பொற் கொல்லர்

தாம் திருடிய பொன்னுக்கு ஈடாக இரும்பையும் வெள்ளியையும் சேர்த்து அரசனுக்கு மணிமுடி செய்து தந்த குற்றத்திற்காகக் கொலைத் தண்டனைக்காளான இரு பொற் கொல்லர்களைப் பெருங்கதையில் காண்கிறோம்.[28]

தச்சர்

நீரில் செல்லக் கூடிய தோணி புணை முதலியனவும், நிலத்தில் இயங்கக் கூடிய தேர் முதலியனவும், சுமந்து செல்லக் கூடிய சிவிகை போன்றனவும் செய்து தந்தனர்[29]

சிற்பியர்

சிற்ப நூல் வல்லுநர் கோயில்களையும் அரண்மனைகளையும் இலக்கணம் அமைய அழகுற வகுத்தனர். அவர் நற்குடிப் பிறப்பினராயும், யாவர் மாட்டும் நட்புடையராயும், பொறாமையில்லாதவராயும், நல்லொழுக்க முடையாராயும், சிற்பத் தொழிலை நன்கு பயின்றவராயும், உடல் மனம் மொழி ஆகிய மூன்றாலும் தூய்மையுடையாராயும் இருந்தனர்.[30]

---

27. பெருங். 2 : 8 : 150 - 58
28. இரும்பும் வெள்ளியும் இசைத்துருக் குறீஇ
அருங்கல மாக்கி யாப்புப்பிணி யுழக்கும்
கொலைச்சிறை இருவர் —பெருங். 2 : 17 : 69 - 71
29. பெருங். 5 : 4 : 21 - 24
30. பெருங். 2 : 4 : 44 - 50

ஓவியர்

ஓவியர் வரைந்த ஓவியம் நம் கண்ணுள்ளே எப்போதும் நின்று கொண்டிருப்பதால் அவர்கள் கண்ணுளாளர் எனப்படுகின்றனர். ஓவியம் எழுதி வைத்திருந்த தட்டிகள்,

கண்ணுளாளர் கைபுனை கிடுகு[31]

எனப்படுகின்றன. சுவர்களிலும் திரைகளிலும் அழகிய ஓவியங்கள் வரையப்பட்டன. அவை ஓவியமென உணர முடியாமல் உண்மையான பொருள்களைப்போல் அமையுமாறு எழுதப்பட்டன.[32] ஓவியமெழுதிய இடங்கள் சித்திர அம்பலம், சித்திரக் கூடம் ஓவியச் செய்கையின் நிலாவிரி முற்றம், ஓவக் கைவினைக் கண்ணுர் மாடம், சித்திரம் பயின்ற செம்பொன் விதானம், சித்திர முதுசுவர் வித்தக வேயுள் ஆவணம், வித்தக வினைஞர் பத்தியிற் குயிற்றிய சித்திரசாலை[33] என்று பேசப்படுகின்றன.

ஒன்பது விருத்தி : ஓவியர் தாம் வரையும் படத்திற்கேற்ப அமர்ந்து, நின்று, கிடந்து, சாய்ந்து, நிமிர்ந்து என இவ்வாறு ஒன்பது வகையான நிலைகளிலிருந்து எழுத வேண்டியிருந்தது.[34]

கதையோவியம் : புராணக் கதைகளைப் படங்களாகத் தீட்டும் பழக்கம் சங்க காலத்திலேயே இருந்திருக்கிறது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்

---

31. பெருங். 5 : 9 : 30

32. மெய்பேறு விசேடம் வியந்தனன்
—பெருங். 3 : 14 : 107

33. பெருங். 1 : 33 : 104; 1 : 34 : 136;
4 : 12 : 13 - 14; 3 : 8 : 35 - 36
1 : 37 : 14; 3 : 5 : 38 - 39
3 : 4 : 13 - 15

34. ஒன்பது விருத்தி நண்பத நுனித்த
ஓவ வினையாளர் —பெருங். 2 : 7 : 40 - 41

செழியனின் கோப்பெருந் தேவியினது கட்டிலின் மேற் கூரையில் பலவகை ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. திங்களின் பக்கத்தில் உரோகிணி நிற்பது போன்ற ஓர் ஓவியம் அவற்றுள் ஒன்று. கணவன் பிரிவால் வாடிய கோப்பெருந்தேவி அவ் வோவியத்தை நோக்கி, ''உரோகிணியைப் போல நானும் என் கணவனோடு இணைந்திருக்க முடியாது போய்விடுமோ'' என்று ஏங்கிப் பெருமூச்செறிந்தாள். இது நெடுநல்வாடை அறிவிக்கும் செய்தியாகும்.[35]

விரிசிகையின் தந்தையாகிய முனிவருடைய தவப் பள்ளியில் திருமாலின் பத்து அவதாரக் காட்சிகளும் படமாக எழுதப்பட்டிருந்தன என்பதை,

நெடியவன் மூவகைப் படிவம் பயின்ற
எழுதுநிலை மாடம்[36]

எனப் பெருங்கதை அடிகள் அறிவிக்கின்றன. நெடியவன் திருமாலாவான்; நீர் வாழ்வனவற்றின் வகை, விலங்கின வகை, மனித வகை என்பன மூவகைப் படிவமாம். திருமாலின் பத்து அவதாரங்களும் இம் மூவகையினுள் அடங்கியிருக்கக் காணலாம்.

மீன், ஆமை - நீர்வாழ்வன வகை;
பன்றி, மானிட மடங்கல் (நரசிங்கம்)
கல்கி (குதிரை)-விலங்கு வகை;
வாமனன், பரசுராமன், இராமன்,
பலதேவன், கண்ணன் - மனித வகை.

---

35. புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பின் ஆடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
—நெடுநல். 159 - 63

36. பெருங். 2 : 15 : 10 - 11

யத்துப் பிறப்புகளையும் மூவகைப் படிவத்துள் அடக்கி உரைப்பது நயம் நிறைந்ததாயுள்ளது.

கைந்நுண்ணுளர்

கண்ணுலே கண்டதோர் உருவினைக் கையாலே இயற்றுவதாகிய கலைத் தொழிலை மிக நுணுக்கமாகச் செய்த கம்மியர் இருந்தனர். அவர்கள் ஏடு, நெட்டி, துணி முதலியவற்ருல் தோற்றத்தில் இயற்கை மரத்தினின்றும் சிறிதும் வேற்றுமை தோன்ருத செயற்கை மரங்களை இயற்றினர். இலை, கொழுந்து, கிளைகட்கேற்ற வளைவு, மலரரும்பு, வண்டு மொய்க்கும் மலர் என மரத்திற்குரிய அனைத்தையும் அமைத்து அவற்றிற்கு உரிய நிறமூட்டி உண்மையான மரங்கள் நிற்பனபோல விழாக் காலங்களில் ஆங்காங்கே நிறுத்தி வைத்தனர்.[37]

பன்ளுட்டுத் தொழிலாளர்

பன்ளுட்டுத் தொழிலாளரும் ஓரிடத்தில் ஒன்ருக இணைந்து தத்தம் திறமை வெளிப்படத் தொழிலாற்றிய தன்மையை,

> யவனத் தச்சரும் அவந்திக் கொல்லரும்
> மகதத்துப் பிறந்த மணிவினைக் காரரும்

37. கண்ணிற் கண்ட நுண்வினைக் கம்மம்
கையிற் புனையுங் கழிநுண் ணுளர்
ஏட்டினுங் கிடையினு முட்டமை கிழியினும்
நாற்றமும் தோற்றமும் வேற்றுமை யின்றி
ஏற்ப விரீஇய இலையுங் கொழுந்தும்
கொழுந்திற் கேற்ற வழுந்துபடு குலாவும்
குலாவிற் கமைந்த கோலச் சந்தியும்
முகிழும் போதும் மகிழ்சுமல் அலரும்
அன்னவை பிறவும் பன்மரம் பண்ணித்
தீட்டினர் அன்றியும் நாட்டினர் நிரீஇ
—பெருங். 2 : 2 : 139 - 48

பாடலிப் பிறந்த பசும்பொன் வினைஞரும்
கோசலத் தியன்ற ஓவியத தொழிலரும்
வத்த நாட்டு வண்ணக் கம்மரும்
தத்தங் கோண்மேற்றங் கைத்தொழில் தோன்ற[38]

என்ற அடிகள் அறிவிக்கின்றன.

பாணர், கூத்தர்

அரசன் திருமுன்றிலில் கூத்தாடும் குழு, சேரிப் பாடகர் குழு, அரண்மனைக் கூத்தர் குழு எனப் பல்வகைப் பாடற் குழுக்களும், கூத்துக் குழுக்களும் இருந்தன. இசைக்குச் சுவைகூட்டும் பொருட்டு யாழ், குழல், சிறுபறை, தாளம், முழவு, தண்ணுமை என முழக்குவனவும், எழுப்புவனமும், விசைத்துத் தட்டுவனவுமாகிய இசைக் கருவிகள் இருந்தன. பாடல் மகளிர், ஆடல் மகளிர், இசையாசிரியர், இசைக் கருவிகளை முழக்குவோர் என அனைவரும் இணைந்து கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளித்தனர்.[39]

சமையற்காரர்

அறச் சோற்றட்டில்களில் சமையற்காரர் இருந்தனர். அமுதனைய அறுசுவை உணவை, நெய்யளைந்து செய்த சிற்றுண்டியோடு எப்பொழுது வேண்டுமாயினும் அப்பொழுதே செய்துதரத் தக்க திறமை வாய்ந்தவர்களாய் அவர்கள் இருந்தனர்.[40]

---

38. பெருங். 1 : 58 : 40 - 45
39. பெருங். 1 : 37 : 89 - 101
40. அமுதின் அன்ன அறுசுவை அடிசில்
நெய்ச்சூட் டமைந்த சிற்றூண் பந்தரோடு
எப்பொழு தாயினும் அப்பொழு தீயும்
தாம நவின்ற நாமக் கைவினை
மடைத்தொழில் வழாஅ வாழ்க்கையர் பயின்ற
அறச்சோற் றட்டில் —பெருங். 2 : 2 : 80 - 85

மயிர் வினைஞர்

மயிர் வினை செய்வோர் மின்னலின் ஒளியையும் மழுங்கச் செய்யும் ஒளியுடைய கத்தியை வைத்திருந்தனர். எஃகும் இரும்பும் சம நீர்மையாகக் கலந்து இலக்கணம் பிழையாதபடி கத்திகள் செய்யப்பட்டன. கத்தியைப் பட்டும் பருத்தியும் கலந்ததொரு துணியினுல் துடைத்துத் துருவையும் கிழிப்பினையும் போக்கி, எண்ணுள் திங்கள் வடிவிலிருந்த சாணைக் கல்லில் விழிப்புடன் தீட்டி, வெள்ளிய துகிலின்மேல் முறையாகப் புரட்டி அதன் பின்னரே பயன்படுத்தத் தொடங்கினர்.[41]

தொழிலைப் பிழையின்றி, முகத்தின் இயல்புக்கு ஏற்ப, பொருந்தும்படியாகச் செய்தனர்.[42] தொழிலைச் செய்யும் போது உடம்பை முறுக்காதவராய், விரைதல் இலராய், கொட்டாவி கொள்ளாராய், மறந்தும் அயலாரை நோக்காராய், குறிப்பினின்றும் பிறழாதவராய்ச் செயற்பட்டனர்.[43]

கத்தரிக்கோல் : அவர்கள் கத்தரிக்கோலைக் கொண்டு முடிவெட்டினர். கத்தரி, 'நீல நெடுமயிர் எறியுங் கருவி' எனப்பட்டது.[44]

கூந்தலைக் 'கொய்தற்குக் கத்தரி பற்பல வகைகளில் இருந்தன.[45] நல்லிலக்கணமுடைய கத்தரிகையால்' மயிர் கொய்தால் வாழ்வில் நன்மையுண்டாகுமென்ற கருத்து

---

41. பெருங். 2 : 4 : 161 - 170
42. ,, 2 : 4 : 172 - 73
43. முரிக் கொள்ளான் முனிதல் செல்லான்
ஆவிக் கொள்ளான் அயர்ந்தும் பிறர்நோக்கான்
சீர்கெழு நெடுந்தகை செவ்வியிற் றிரியான்
கண்ணினும் மனத்தினுங் கையினு மமைத்த
மண்ணுவினை மயிர்த்தொழில் நன்னல நாவிதன்
—பெருங். 2 : 4 : 174 - 78
44. பெருங். 4 : 16 : 25
45. ,, 4 : 14 : 31 - 39

இருந்தது. மொத்த நீளத்தில் நாலில் ஒரு பங்கு காதாக இருக்குமாறு அமைக்கப்பட்ட கத்தரி நல்லிலக்கணமுடைய தாய்க் கருதப்பட்டது.[46]

கணியர்

வானிலையை ஆராய்ந்து, விண் மீன்களின் சேர்க்கையை அறிந்து, நல்ல முழுத்தத்தைக் கணித்துக் கூறியவர் கணியர் எனப்பட்டனர். மங்கல வேளையை அறிந்து சொன்னதால் அவர்கள் மங்கலக் கணியர் என்று அழைக்கப்பட்டனர்.[47] அரசர்களும் இவர்கள் கணித்த நேரத்தை ஏற்று மங்கலச் செயல்களைச் செய்தனர்.[48] படையெடுத்தல் தொடர்பாக நேரத்தைக் கணித்துச் சொன்னவர் சேனைப் பெருங்கணி எனப் பெயர் பெற்றனர்.[49]

கணியின் சிறப்பு: கணியர் கணித நூலை முற்றக் கற்றவர்; நாளும் கோளுமாகிய பொருள்களை ஆராய்ந்து, அவற்றிற்குரிய நூல்களையும் கற்றுத் தெளிந்து, அவற்றின் இயக்கத்தாலே நிகழும் நன்மை தீமைகளை உணர்ந்து அறிவித்தனர். குடையுடன் செல்லுதல், அரசனோடு நேராசனத்திருத்தல், செருப்போடு அறையுட் புகுதல், சேனையை வைத்துக் கொள்ளுதல் ஆகிய சிறப்புகள் அவர்க்கு அளிக்கப்பட்டன.[50]

சாதகம் கணித்தல்: மகவு பிறந்த நாளையும், தாய் அதை ஈன்ற முழுத்தத்தையும், அப்போது கோள்கள்

---

46. பெருங். 4 : 14 : 42 - 54
47. செம்பொற் படத்துப் பேறுவலித் திருந்த
மங்கலக் கணிகள் மாதிரம் நோக்கிப்
புரைமீன் கூடிய பொழுதியல் கூற
—பெருங். 1 : 39 : 5-7
48. பெருங். 3 : 22 : 24 - 25
49. சேனைப் பெருங்கணி செப்பிய நன்னாள்
—பெருங். 3 : 22 ; 185
50. பெருங். 2 : 2 : 10 – 24

இருந்த இடத்தையும் நுண்ணிதின் நோக்கித் தீய கோள் களின் தீமையையும் ஆராய்ந்து பிற்காலத்தில் நடக்க இருப்பவற்றை அறியும்படியாகச் சாதகம் எழுதுவதும் கணி யர் பணியாயிருந்தது.[51]

கணிச் சங்கம்: கணியர் பலர் சேர்ந்த குழு கணிச் சங் கம் ஆயிற்று. இச் சங்கத்தினர் நூல்களை இடையறாது ஆராய்ந்தனர்; தம் ஆராய்ச்சியின் பயனாய் அந் நூல் களுள்ளும் அடங்காத அரிய பொருள்களையும் உணருகின்ற நுண்மாண் நுழைபுலம் உடையோராய்த் திகழ்ந்தனர்.[52]

நிமித்தம்

செயல்களைச் செய்ய நல் நிமித்தம் பார்ப்பது அந் நாளில் வழக்கமாயிருந்தது.

புள் நிமித்தம்: பறவை ஒலித்தலைக் கொண்டு வருவ தறிந்து உரைக்கப்பட்டது. உதயணன் பாலை நில வழி யில் ஒரு பொழிலிடையே தங்கியிருந்த பொழுது மரங் கொத்திப் பறவையொன்று ஒரு வற்றல் மரத்தின் உச்சியி லிருந்து பலகாலும் ஒலித்தது.[53] பண்டொரு நாள் சாலங் காயன் மாய யானையுடன் போர்செய்ய வந்தபோது ஒலித்த மரங்கொத்தியின் குரல் போலவே அந்த ஒலியும் இருந்தா தலின் அன்று பகைப் படை வருவது நிச்சயம் என உதய

---

51. பெருங். 5 : 6 : 73 - 84

52. தொன்னூல் கருதுநெறி நுனித்ததன்
ஆழமைக் கடங்கா அமைவரு காட்சி
அரும்பொருள் உணரும் பெருங்கணிச் சங்கம்
—பெருங். 2 : 4 : 34 - 36.

53. வல்வாய் வயவன் வறண்மரத் துச்சிப்
பல்காற் குரைத்தது பகற்படை தருமென
பாட்டிற் கூறக் கேட்டனன் ஆகி
—பெருங். 1 : 55 : 21 - 2

ணன் உணர்ந்தான்.[54] பாலை நிலத்தில் யானையின் காலடி கொண்டு ஆட்களைத் தேடியலைந்த வேட்டுவர்களுக்கு,

> வாய்ச்சிறு புதுப்புள் வீச்சுறு விழுக்குரல்
> கேட்டுப்பொருள் தெரியுமோர் வேட்டுவ முதுமகன்[55]

நடக்க இருப்பதை அறிந்து உரைத்தான். அவனே உதயணனுக்குத் துணையாக வந்த படையாளர்கள் வேடுவர்களைச் சூழ்ந்தபோது, கிழக்குத் திக்கில் ஒரு மரக்கிளையில் முதிர்ந்த குரலையுடைய பறவையொன்று ஒலிக்க, அது கேட்டு, ''வேட்டுவீர்! விரைந்து ஓடிப் போங்கள். இன்றேல் உம் உயிர்போம் என்பதை இக் குரல் உணர்த்துகிறது''[56] என்றான்.

தெய்வமேறி ஆடுதல்: தெய்வமேறி ஆடிக் குறி சொல்லும் பழக்கமும் பெருங்கதையில் குறிப்பிடப்படுகிறது. பாகீரதி என்பாள் தெய்வ மேறியவளாய் நடித்து உச்சயினி மக்கள் நீர் விளையாட்டினைக் கொண்டாட வேண்டுமென்றும் இல்லையேல் தீங்கு நேருமென்றும் அறிவித்தாள்.[57]

---

54. அன்றவட் பாடிய வணிவரி வயவன்
இன்றிவ ணின்னே யிகற்படை தருதல்
பொய்த்த லின்றி மெய்த்த தாமென
—பெருங். 1 : 55 : 34 - 36

55. பெருங். 1 : 55 : 89 - 90

56. கதிரகத் திருந்த முதிர்குரற் பறவை
போமின் வல்லே போதி ராயினும்
உயிர்த்தவ லுரைக்கு மென்பதை யுணர்ந்து
முந்துபுள் ளுரைத்த முதுமகன் கூற
—பெருங். 1 : 56 : 231 - 34

57. பெருங். 1 : 37 ; 228 - 251

கட்டுப் பார்த்தல்: கட்டாவது சிறுமுறத்திற் பரப்பிய நெல்லிற் பார்க்கும் ஒரு வகைக் குறி. அக் குறியைப் பார்த்துச் சொன்னவள் கட்டுவிச்சி எனப்பட்டாள்.[58]

சகுனம்

ஆடவர்க்கு இடக்கண் ஆடலும் இடத்தோள் துடித்தலும் தீய நிமித்தமாம்.[59] வாசவதத்தையைப் பிரிந்து பூந்தழை கொண்டுவரச் சென்ற உதயணனுக்கு இடக் கண்ணும் தோளும் துடித்தன. நிமித்தமும் சகுனமும் தீயனவாய் இருந்தன. அதன் விளைவு யாதாமோ என விரைந்து வந்தவன்[60] அரண்மனை தீப்பட்டு எரிந்ததைக் கண்டான்.

நாட்டுப்புற மக்கள்

குன்றுகளில் வாழ்ந்த வேட்டுவர், குறும்பர் ஆகியோரும் சிற்றூர்களில் வாழ்ந்தவரும் நாட்டுப்புற மக்கள் எனப் பட்டனர். அவர்கள் உண்ணும் கூழிற்கும் உடுக்கும் உடைக்குமே நல்கூர்ந்தாராய் அவற்றைப் பெறுதலையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.[61]

---

58. கட்டறி மகடூஉக் கடிமுறத் திட்ட
வட்ட நெல்லும் மாண்பில பெரிதென
—பெருங். 1 : 37 : 236 - 37

59. இடுக்கண் தருதற் கேது வாகி
இடக்கண் ஆடலும் தொடித்தோள் துளங்கலும்
—பெருங். 2 : 18 : 32 - 33

60. ஒழுக்கும் புட்குரல் உட்படக் கூறிய
நிமித்தமுஞ் சகுனமும் நயக்குணம் இன்மையும்
நினைந்தனன் வருஉம் —பெருங். 2 : 18 : 38 - 40

61. கூழினும் உடையினும் குறிப்பின ராகிய
நாட்டுப்புற மாக்களும் வேட்டுவத் தலைவரும்
குறும்பருங் குழீஇய குன்றுடைப் பெருநாடு
—பெருங். 1 : 43 : 53 - 55

சவரர் புளிஞர்: பாலை நிலச் சிற்றூர்களில் வாழ்ந்த வேட்டுவர் சவரர், புளிஞர் எனப்பட்டனர்.[62] அவர்கள் நஞ்சு போன்ற கொடிய செயல்களைச் செய்வோராயிருந்தனர். மன்னர்க்கும் அஞ்ச வேண்டாத காட்டரண்களின் உள்ளிடத்தே வாழ்ந்து வந்தனர்.[63] அவர்கள் தம்முள் ஒரு தலைவனைக் கொண்டு அவனது சொல்லுக்கு அடங்கி நடந்தனர்.

இயல்பு: அவர்கள் பாலை நில வழியே சென்ற வணிகர்களிடமிருந்து கவர்ந்த பண்டங்களை விற்று உண்டனர். வழிப்போவாருடைய உணவையும் உடைகளையும் பறித்து, அந்த உடைகளிலேயே உணவைப் பொதிந்து வைத்து உறியாகக் கட்டித் தொங்க விட்டனர். ஓமை மரத் துண்டுகளை அதர்வைக் கொடிகளால் கட்டி இழுத்து வந்து அவற்றில் தீ மூட்டி அதில் உணவுப் பொருளைச் சமைத்து உண்டனர். நாகரிக மகளிர்க்குச் செய்யப்பட்டதும் தாம் ஆறலைத்துக் கொண்டதுமான விலையுயர்ந்த மேகலையை அதன் அருமையறியாது தாம் உடுத்தியிருந்த தழையுடையின் மீது அணிந்தனர். கால்களிலே பாற்கற்கள் உறுத்தித் துன்புறுத்தினும் வருந்தாதவராய்க் காற்றினும் கடிது இயங்கினர். அறம் முதலிய உறுதிப் பொருள்களை அவர்கள் எஞ்ஞான்றும் அறிந்ததில்லை. உணவின் பொருட்டுக் காட்டினூடே விலங்கையும், பறவையையும், ஆறு செல்வோரையும் எதிர்பார்த்த வண்ணமே எப்போதுமிருந்தனர். தாம் கைப்பற்றிய வழிப்போக்

62. வெஞ்சொல் வேட்டத்து அஞ்சுவரு சீற்றத்துச்
சலம்புரி நெஞ்சிற் சவரர் புளிஞர்
—பெருங். 2 : 9 : 136 - 37

63. நஞ்சம் பொதிந்து நமக்கும் பிறர்க்கும்
அஞ்சல் செல்லா அரணகம் வலித்துக்
காட்டகத் துறையும் கடுவினை வாழ்க்கை
வேட்டுவர் —பெருங். 1 : 53 : 105 - 08

க்ரைப் பாடச் செய்து அப் பாட்டைக் கேட்ட பின்னர், அவர்களைப் பலியாடுகளாகக் கருதித் தம் வழிபடு தெய்வமாகிய கொற்றவையின் முன் சீழ்க்கை அடித்த வண்ணமே தலைகளை வெட்டி வீழ்த்தினர். வழிப்போவார் மீது அம்பு எய்து அதனால் அவர் எழுப்பிய அழுகையையும் துடித்து ஆடியதையும் கண்டு பெரிதும் மகிழ்ந்தனர். உயிரிரக்கம் என்பதே சிறிதும் இலராய் நல்லது தீயது என்று பாராது தாம் விரும்பியவாறே எதையும் செய்தனர்.[64] இத்தகைய ஆறலைக் கள்வர் நிறைந்த பாலைநில வழியின் கொடுமையை,

அற்றம்பார்த்து அல்கும் கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருள்இலர் ஆயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து உயிர்வவ்வலின்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை[65]

என்று கலித்தொகை கூறிடக் காணலாம்.

தாக்கும் முறை: வழிப்போக்கர்களை எதிர்பார்த்திருக்கும் வேட்டுவ இளைஞர்கள் வெளிப்படத் தோன்றாமல், விளாமரத் துண்டுகளையும் கள்ளி மரங்களையும் வாடிய சருகுகளையும் வழியில் தடையாகப் பரப்பி, அண்மையிலுள்ள குகைகளில் ஒளிந்திருப்பர்.[66] வழிப்போக்கரைக் கண்டதும் ஆரவாரத்தோடே ஒருங்கு கூடி முகில் எழுந்தாற் போலக் கிளர்ச்சியுற்று, சீழ்க்கையடித்து, மான் கொம்பை ஊதி அச்சமுண்டாகத் தாக்கி வழிப்பறி செய்வர்.[67]

---

64. பெருங். 1 : 55 : 44 - 66

65. கலித். 4 : 3 - 6

66. பெருங். 1 : 55 : 83 - 86

67. „ 1 : 55 : 113 - 16

யவனர்

பண்டை நாட்களில் தமிழர் மேலை நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். மேலை நாட்டவர்களைப் பொதுவாகவும், கிரேக்க உரோமானியர்களைக் குறிப்பாகவும் சங்க இலக்கியங்கள் யவனர்கள் என்று குறிப்பிடுகின்றன.

வணிகம் : யவனர் தமிழ் நாட்டுடன் பெருமளவில் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். யவன மரக்கலங்கள் தமிழகத் துறைமுகங்களில் பொன்னைக் கொணர்ந்து இறக்கி, மிளகை ஏற்றிச் சென்றன.[68] நீராடிய மகளிர் கரையில் கழற்றி வைத்துச் சென்ற மகரக் குழையை இரையென எடுத்துச் சென்று அந்தணர் வளர்த்த வேள்விச் சாலையில் வேள்விக் கம்பத்தின் மீது அமர்ந்த சிச்சிலிப் பறவையின் தோற்றம் மரக்கலக் கூம்பில் யவனர் ஏற்றி வைத்த விளக்கைப் போன்றிருந்ததெனப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. இதிலிருந்து யவன மரக்கலங்களின் உயர்ந்த பாய்மரக் கூம்பின்மேல் விளக்குப் பொருத்தப்பட்டிருந்ததென அறிகிறோம். அந்த விளக்கு அன்னப் பறவை வடிவில் அமைக்கப்பட்டிருந்தது.[69] கடற்கரை நகரங்களில் வணிகத்தின் பொருட்டு வந்த யவனர்கள் வாழ்ந்து வந்த பெரிய மாளிகைகளை,

---

68. யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
—அகநா. 149 : 9 - 10

69. புனலாடு மகளிர் இட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிரல் இரைசெத் தெறிந்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த
வேள்வித் தூணத்து அசைஇ யவனர்
ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பைப்பயத் தோன்றும்
—பெரும்பாண். 312 - 18

பயனற வறியா யவனர் இருக்கை[70]

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

தொழில் நலம் : கலைநலம் சிறந்த பொருள்களைச் செய்வதில் யவனர் வல்லுநராயிருந்தனர். ஒரு மகள் தன் கையில் தகளியை ஏந்தி நிற்பதுபோல இயற்றப்பட்ட சிற்பம் பாவை விளக்கு எனப்பட்டது. யவனர் இயற்றிய பாவை விளக்குகளை அரண்மனைகளில் ஆங்காங்கே நிறுத்தி அவற்றில் எண்ணெய் பெய்து திரியிட்டு ஒளியேற்றி வந்தனர்.[71]

ஏவற் பணி : யவன வீரர் தமிழ் மன்னரிடம் ஏவற் பணி புரிவோராயும் இருந்தனர். அரசனுடைய பள்ளியறையைக் காவல் செய்த யவன வீரர், இடுப்பில் குதிரைச் சவுக்கைத் தொங்க விட்டு, புடைப்பான உடையுடன், சட்டையணிந்தோராய், அஞ்சத் தக்க தோற்றத்துடன், கட்டுடல் கொண்டோராய் இருந்தனர்.[72] கோட்டை வாயிலைக் காக்கும் பணியையும் அவர்கள் செய்து வந்தனர்.[73] தேறலைக் கலங்களில் யவனர் எடுத்துத் தர, அதை மகளிர் பொன் வள்ளத்தே ஊற்றிக் கொடுக்க, அரசர் குடித்து மகிழ்ந்திருந்த செய்தியைப் புறநானூற்றிலிருந்து அறிகிறோம்.[74]

தமிழ் மன்னர் யவனரோடு போரிட்டு வென்றுள்ளனர் என்றும் தெரிகிறது. நெடுஞ்சேரலாதன் என்ற சேர

---

70. சிலப். 5 : 10

71. யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந்து ஐஅகல் நிறையநெய் சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குருஉத்தலை நிமிர்எரி
—நெடுநல். 101 - 03

72. மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர் —முல்லை. 59 - 61

73. கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர் —சிலப். 14 : 66 - 67

74. யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
—புறநா. 56 : 18 - 20

மன்னன் யவனரைச் சிறைப்படுத்திக் கைகளை முதுகுப் புறமாகக் கட்டி அவர்கள் தலையில் நெய்யூற்றிப் பங்கப்படுத்தியதைப் பதிற்றுப்பத்து கூறுகிறது.[75] இவ்வாறாக யவனர் வணிகர்களாயும், அரண்மனை ஏவலாளராயும் இருந்த தன்மையினைச் சங்க இலக்கியங்களில் அறிகிறோம்.

பெருங்கதையில் யவனர் : யவன மொழியில் கடிதம் மூலம் தம் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளுமளவுக்கு அவந்தி மன்னன் உதயணனும், கோசல மன்னன் மகள் மானனீகையும் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதைப் பெருங்கதை வாயிலாக அறிகிறோம். பெருங்கதையில் யவனர்கள் பெரும்பான்மை தச்சுத் தொழில் வல்லுநர்களாகவே காட்டப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நாட்டின் சிறந்த தொழிலாளரைக் குறிப்பிடும் நேரத்தில், 'யவனத் தச்சரைக்'[76] கொங்குவேள் குறிப்பிடுவதைக் காணலாம். சிறந்த வேலைப்பாடுகளைக் கொண்ட வண்டிகளை அவர்கள் செய்தனர்.[77] பிரச்சோதனன் தன் மகளுக்குக் கொடுத்தனுப்பிய சிறந்த பொருள்களில் யவனர் இயற்றிய வண்டியும் உண்டு.[78] வண்டிகளைச் செய்ததுபோலவே கலை நலம் வாய்ந்த வீணை[79], யவனப் பாவை[80], அணிகலப் பேழை[81],

---

75. நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ
—பதிற்றுப் பதி. 2 : 8 - 9

76. பெருங். 1 : 58 : 40

77. அரும்பொறி நுனித்த யவனக் கைவினைப்
பெரும்பொறி வையம் —பெருங். 3 : 5 : 48 - 49

78. கைபுனை நந் தோரும் கண்டு காணார்
ஐயைந்து இரட்டி யவன வையமும்
—பெருங். 4 : 10 : 40 - 41

79. யாணர்க் கூட்டத்து யவனக் கைவினை
மாணப் புணர்ந்ததோர் மகர வீணை
—பெருங். 3 : 15 : 22 - 23

80. யவனப் பாவை அணிவிளக் கழல
—பெருங். 1 : 47 : 51

81. யவனப் பேழையுள் அடைந்தோர் ஏந்திய
தமனியப் பல்கலம் —பெருங். 3 : 22 : 213 - 14

பள்ளிக் கட்டில்[82] முதலியனவும் செய்தனர். பொறியியல் நுணுக்கம் கொண்ட பொருள்களையும் யவனர் செய்து தந்தனர். எருது, குதிரை முதலியன இழுக்க வேண்டாது எந்திரத்தாலேயே இயங்கக்கூடிய வண்டியை யவனன் ஒருவன் உதயணனுக்குச் செய்து தந்தான்.[83] அருகே வருவோரைக் கையால் பற்றி வாய்க்குள் இட்டு விழுங்க முயற்சிக்கும் தோற்றமுடைய பூத உருவையும் அவர்கள் செய்ததாகத் தெரிகிறது.[84]

இவ்வாறுகப் பெருங்கதையில் யவனர் தச்சு, பொறியியல்துறை வல்லுநர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். அரசனுடைய படையில் சேர்ந்து போர் வீரராகப் பணியாற்றிய நிலையும் குறிப்பிடப்படுகிறது. அவ் வீரர்கள் படைக் கொட்டிலில் தங்கியிருந்த பகுதி, 'யவனச் சேரி' எனப்பட்டது.[85]

---

82. அணிக்காற் பவழத்து யவனர் இயற்றிய
மணிக்காழ் விதானத்து மாலை தொடர்ந்த
தமனியத்து இயன்ற தாமரைப் பள்ளி
—பெருங். 1 : 33 : 192 - 94

83. யவனப் பாடி ஆடவர் தலைமகன்
தமனியப் பைம்பூண் தம்மிறைக் கியன்ற
கண்மணி யன்ன திண்ணட் பாளன்
கையிற் புனைந்த கழிநுண் சிறப்பொடு
வையகத் தியங்கும் வெய்யவன் ஊரும்
தேரின் அன்ன செலவிற் றாகி
யாவரு மறியா அரும்பொறி ஆணியின்
இருப்புப் பத்திரம் இசையக் கவ்வி
மருப்புப் பலகை மருங்கணி பெற்றுப்
பூணி இன்றியும் பொறியின் இயங்கும்
மாண்வினை வையம் —பெருங். 2 : 8 : 168 - 78

84. வருவோர்ப் பற்றி வாங்குபு விழுங்கும்
இனைய நுட்பத்து யவனர் இயற்றிய
பெருவலிப் பூதத்து உருவு —பெருங். 5 : 9 : 58 - 60

85. பெருங். 3 : 4 : 8

14. செய்திக் கதிர்

ஒரு காப்பியத்தைப் படிக்குங்கால் அக் காப்பியம் எழுந்த காலத்திலிருந்த முக்கியச் செய்திகள், நடைமுறையிலிருந்த பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அறிய வாய்ப்பேற்படுகிறது. பெருங்கதையில் அவ்வாருக அறியப் படும் சில செய்திகள் இங்கே தரப்படுகின்றன.

கல்வி

உதயணன்,

பொருள்புரி நூலும்
அலகை சான்ற உலக புராணமும்
பலவகை மரபிற் பாசண் டியர்கள்
சலசல மிழற்றுஞ் சமய விகற்பமும்
இசையொடு சிவணிய யாழின் நூலும்
நாடகப் பொருளும்[1]

இளமையிலேயே கற்றிருந்ததையறிந்து பிரச்சோதனன் வியந்தான் என்று கூறப்படுவது கொண்டு அந் நாளில் பொருளாதார, வரலாற்று, சமய விகற்ப, யாழ், நாடக நூல்கள் இருந்துவந்தன என்பது தெரியவருகிறது.

அருங் கலைகள்

ஊற்றிடம் அறிதல்: தரையின் அடியில் நீரிருக்கும் இடத்தை அறிந்து சொல்லக் கற்றிருந்தனர்.[2] ஞான வல்லி

---

1. பெருங். 1 : 32 : 1-6
2. அகத்துநீர் உடையது அதனது மாட்சி
மிகுத்தநூல் வகையின் மேவரக் காட்ட
—பெருங். 3 : 12 : 53-54

யம் என்னும் நூல் அப் பயிற்சியை அளித்தது.[3] அந் நூலைக் கற்றுத் தேர்ந்திருந்த உதயணன் மகத மன்னன் அரண்மனையை ஆய்ந்து நல்ல நீர் இருந்த இடத்தைக் காட்டினன். இவ்வளவு ஆழத்தில் நீர் கிடைக்கும் என்பதையும், தோண்டும்போது வெளிப்படும் மண்ணின் தன்மையையும் அவனால் சொல்ல முடிந்தது. உதயணன் தருசகனிடம், "மன்னனே! இவ் விடத்தில் ஏழு கோலளவு தோண்டுகையில் நீருற்று எழும். அங்குத் தோன்றும் நீர் நாவிற்கு இனியதாய், குளிர்ந்ததாய், உடற் பிணியைப் போக்கும் ஒப்பற்ற தன்மை உடையதாய் இருக்கும். அத்தகைய நன்னீர் இவ் வரண்மனையில் இவ் விடத்தைத் தவிர வேறு எங்கும் தென்படவில்லை" என ஆராய்ந்து கூறினன்.[4] மேலும் கூவலைத் தோண்டும்போது,[5] "இரண்டு முழ ஆழத்தில் மண்ணிலிருந்து பொன்னிறத் தேரை ஒன்று வெளிப்படும். அப்

3. கூவலும் பொய்கையும் கோயில் வட்டத்து
எவ்வழி வேண்டினும் அவ்வழிக் காட்டும்
ஞான வல்லியத்து அரும்பொருள்

—பெருங். 3 : 12 : 15 - 17

4. நீர்நலன் உணர்ந்து சீர்நலக் குருசில்
எழுகோல் எல்லையுள் எழும்இது நீர்மற்று
அன்றியும் அதனது நன்றி நாடின்
நாவிற்கும் இனிதாய் தீதுஅற எறியும்
தண்மையும் நுண்மையும் தமக்கிணை யாவன
தெண்ணீர் எவ்வழித் தேரினும் இல்லை

—பெருங். 3 : 12 : 57 - 62

5. அகழும் பொழுதின் நிகழ்வ கேண்மதி
இருமுழத்து எல்லையுள் வரிமுகம் பொறித்த
பொன்னிறத் தேரை போதரும் பின்னர்
மும்முழத் தெல்லையுள் தெள்நிறம் குயின்றது,
தோற்றம் இனிதாய் நாற்றம் இன்னாப்
பருமணல் உண்டது; பண்ணுநர் வீழ
உட்காழ் ஈன்ற ஒருகோல் அரையின்
எட்பூ நிறத்தொடு கட்கா முறுத்தும்
விளங்கறல வெள்ளியின் வீசுறும என்றுஅதன்
அகம்புக் கனன்போல் அகன்ற ஞானத்தின்
உள்நெறிக் க த்தின் நண்ணிய தாகிய
மண்ணின் சுவையும் இன்னதென் றெழியாது
உரைப்ப

—பெருங். 3 : 12 : 64 - 76

யால் மூன்று முழம் தோண்டியதும் காட்சிக்கினிய ஆனால் தீ நாற்றமுடைய மணல் தோன்றும். அதன்கீழ் ஒன்றரைக் கோல் அளவில் நன்னீர் வெளிப்படும்'' என்று நிலத்தி னுள்ளே புகுந்து பார்த்தவன்போல மண்ணின் சுவையுட் படத் தன் அருங்கலை அறிவாலே கூறினன்.

புதைபொருள் அறிதல்: நிலத்தினுள் பொருள்களை வைத்திருந்த இடங்களை அறிந்து சொல்லும் கலையையும் அறிந்திருந்தனர். மகத மன்னன் தன் செல்வத்தையெல் லாம் நிலத்தினுள் புதைத்து வைத்து, இருந்த இடத்தைச் சொல்லாமலேயே இறந்து விட்டான். அவன் மகன் தருச கன் பொருளைப் புதைத்த இடத்தைக் கண்டுபிடிக்க இயலா மல் கலங்கினன். உதயணன் அப் பொருள் இருந்த இடத்தை, தானே வைத்தவன்போலத் தவறின்றிக் காட் டினன்.[6]

வேற்றுருக் கொள்ளல்: வேண்டிய பொருள்களை உரிய அளவில் கலந்து செய்த மருந்தை உண்டபோது உடல் நிறம் முற்றிலுமாக மாறி வேற்றுருவாகக் காட்சியளிக்கும் கலையையும் தெரிந்திருந்தனர். வாசவதத்தையுடனும் சாங்கியத்தாயுடனும் பிறர் தம்மை அறிந்து கொள்ளாது மறைந்து வாழ விரும்பிய யூகி, தானும் அவர்களுமாக, மருந்தை உண்டு நிறம் மாறியிருந்தனர் எனப் பெருங் கதை கூறுகிறது.[7] மாற்று மருந்தின் மூலம் மீண்டும் பழைய நிறத்தை அடையவும் கற்றிருந்தனர்.

---

6. உள்வழித் தெரிந்து
தான்வைத் தனன்போல் காட்டலின்
—பெருங் 3 : 12 : 44 - 45

7. வேண்டிய அளவிற் காண்தகக் கூட்டிக்
கரந்து நிறம் எய்தும் அருமபெறல் யோகம்
யாவரும் அறியாத் தன்மைத் தாக
மூவரும் உண்டு வேறுநிறம் எய்தி
—பெருங். 2 : 20 : 40 - 43

விரல்வரிக் கலை: கைவிரல் பதிவைக் கொண்டு அவ் விரலுக்குரியவர் உருவத்தை அறிந்து கூறுகின்ற கலையும் அக் காலத்தில் இருந்திருக்கிறது. நரவாணதத்தன் வீதியில் யானைமேற் சென்றபோது அவன் மீது மதனமஞ்சிகையின் பந்து வந்து விழுந்தது. அவள் தோற்றத்தைக் கண்ட நரவாணன் அவளைப் பெரிதும் விரும்பினான். ஆனால் அவள் யார் என்பது தெரியாது மயங்கினான். பந்தைக் கையிலேயே எடுத்துச் சென்றான். தோழன் கோமுகனிடம் அப் பெண் யாராயிருக்கலாம் என்று கேட்டான். கோமுகன் பந்தினை வாங்கிக் கூர்ந்து நோக்கினான். நறிய சந்தனம் பூசிய கையினால் இறுகப் பிடிக்கப்பட்டதால் பந்தின் மீது படிந்திருந்த விரல் பதிவைத் தெளிவாக ஆராய்ந்தான். விரல்களின் நிரல்பட்ட கீறல்கள் அழுந்திக் கிடந்தமையை நன்கு நோக்கி, அக் கீறல்களைக் கொண்டே அப் பந்தினைப் பிடித்த நங்கையின் உருவம் முழுவதையும் ஊகித்து அவள் மதனமஞ்சிகையே என்பதை அறிந்து உரைத்தான். இதைப் பெருங்கதை மிக அழகாக விவரிக்கிறது. கோமுகன் பந்தை வாங்கியதும் அதன்மீது,

> ஒற்றிய ஒற்றைத் தெற்றெனத் தெரிந்து
> நறுவெண் சாந்தம் பூசிய கையால்
> செறிவுறப் பிடித்தலின செறிவிரல் நிரைவடுக்
> கிடந்தமை நோக்கி உடங்குணர்வு எய்தி
> விரலும விரலிற் கேற்ற அங்கையும்
> அங்கைக் கேற்ற பைந்தொடி முன்கையும்
> முன்கைக் கேற்ற நன்கமை தோளும்
> தோளிற் கேற்ற வாளொளி முகமும்
> மாப்படு வடுவுறழ் மலர்நெடுங் கண்ணும்
> துப்பன வாயும் முத்தொளி முறுவலும்
> ஒழுகுகொடி மூக்கும் எழுதுநுண் புருவமும்
> சேடமை செவியும் சில்லிருங் கூந்தலும்
> ஒல்குமயிர் ஒழுககும அல்குற் பரப்பும்
> மருங்கின் நீளமும் நிறங்கிளர் சேவடித்

தன்மையும் எல்லாம் முன்முறை நூலின்
அளந்தனன் போல வளம்பட எழுதிப்
பாவை யிலக்கணம் பற்றி மற்றதன்
நிறமும் நீளமும் பிறவுந் தெரியாச்
செறிதாள் அண்ணலைச் செவ்விதின் வணங்கி
இதன்வடிவு ஒப்போள் இந்நகர் வரைப்பின்
மதன மஞ்சிகை யாகும்[8]

என்று உரைத்தான். விரல் பதிவைக் கொண்டு விரலை யும், அவ் விரலுக்குரிய கை, அக் கைக்குரிய தோள், தோளுக்குரிய உடல் எனப் படிப்படியே முழு உருவத்தை யும் நிறமும் அளவும் மாறாது வரைந்தனன் என்ற செய்தி வியப்புக்குரியதாயுள்ளது.

மந்திர தந்திரம்: நிலத்தினுள் புகுதல், விசும்பிலே இயங்குதல், கடல்நீர் முழுவதையும் உட்கொண்டு பின்னர் உமிழ்ந்து காட்டுதல், மலையைக் கையில் ஏந்துதல் ஆகிய மந்திர தந்திரங்களைச் செய்து காட்டுவோரும் இருந் தனர்.[9] காதுகண்ட முனிவர் இறந்த வாசவதத்தையை மீட்டுத் தர முடியும் என்று கூறிய போது உருமண்ணுவா முதலியோர் மேற்சொன்ன வித்தைகளைச் செய்வோரைக் கண்டும் கேட்டும் இருக்கின்றோமேயன்றி இறந்தவரை எழுப்பித் தருவோரை நாங்கள் இதுவரை கேட்டதும் இல்லை என்றனர்.

பொறியியல்

பொறிகளைக் கொண்டியங்கிய பொருள்கள் பல அக் காலத்தில் இருந்தன. பொறியால் இயங்கிய வண்டி பற்றி

8. பெருங். 5 : 8 : 96 - 116

9. இருநிலம் புகுதலும் மருவிசும்பு இவர்தலும்
வருதிரை நெடுங்கடல் வாய்க்கொண்டு உமிழ்தலும்
மந்தரம் ஏந்தலும் என்றிவை பிறவும்
பண்டியல் விச்சை பயிற்றிய மாக்களைக்
கண்டும் அறிதும் கண்கூடாகச்
செத்தோர்ப் புணர்க்கும் விச்சையொடு புணர்ந்தோர்க்
கேட்டும் அறியலம் பெருங். 3 : 4 : 86 - 92

முன்னரே அறிந்துள்ளோம்.[10] கொடிக் கம்பங்களில் கொடிகளை ஏற்றவும் இறக்கவும் பொறிகள் இருந்தன. பனையினது அகமடற் குருத்தினை விரித்து வட்ட வடிவினவாகச் செய்யப்பட்ட நீர்ப் பொறிகள் ஒன்றற்கொன்று மாறுபட்டு இயங்கி நீரைச் சிதறின. அருகன் கோயில் முக்குடைகளும் பொறிகளாலே சுழன்றன.[11] அரண்மனைகளில் சுரங்க வழிகள் இருந்தன. அவற்றை மூடியிருந்த கதவுகளை அகற்றவும் மூடவும் பொறிகள் இருந்தன.[12] சிறைக்கூடங்களில் தாமே உருண்டு வாயிலை அடைக்கின்ற உருள் படிகள் இருந்தன.[13] உச்சயினியில் நடைபெற்ற விழாவில் பொறிகளைக் கொண்டியியங்கிய பல்வேறு வகையான பொருள்கள் காட்டப்படுகின்றன. இயந்திரங்களால் இயங்கிய பாவைகள் இருந்தன. யானை, குதிரை முதலிய உருவங்கள் அமைந்த ஊசல்களில் மக்கள் அமர்ந்து விளையாடினர். இவ் ஊசல்களைப் பொறிகள் இயக்கின.[14]

விழாக்கள்

நீராட்டு விழாவும் காமன் விழாவும் நடைபெற்ற செய்தியைப் பெருங்கதை அறிவிக்கிறது.[15] நீராட்டு விழா நடைபெற இருந்த செய்தியைச் சேனைத் தலைவர் அறிவித்தனர். அப்போது அவர் வலது தோளில் வாகை மாலையை அணிந்திருந்தனர்[16] தவறு செய்து நாடு கடத்தப்

10. இந்நூல் பக். 390
11. பெருங். 2 : 2 : 123 - 33
12. சித்திரப் பெரும்பொறி உய்த்தனர் அகற்றி
—பெருங். 2 : 17 : 74
13. உருள்படி போல —பெருங். 3 : 27 : 55
14. பெருங். 5 : 9 : 19 - 26
15. ,, 1 : 38 - 42 காதைகள் ; 3 : 5 - 6 காதைகள்
16. வெண்முகை அடுத்துப் பைந்தோடு படுத்து
மாதர் அங்கையின் மங்கலத் தியற்றிய
வாகைக் கண்ணி வலத்திற் சூட்டித்
தானைச் சேரித் தலைப்பெருந் திருவன்
நாள்நீ ராட்டணி நாளையென் றறைதலும்
—பெருங். 1 : 37 : 259 - 63

பட்டவர்கள் விழா நாட்களில் நகருக்குள் வந்து விழாவில் கலந்து கொள்ளலாம்.[17] அரசனுடைய மெய்காவலர் அன்றிப் பிறர் எவரும் விழா நாட்களில் வில், வாள் போன்ற படைக்கலம் எதுவும் தாங்கக்கூடாது.[18] விழா நடைபெற்ற இடங்களில் தண்ணீர்ப் பந்தரும், அறச் சோற்றட்டில்களும், உணவுச் சாலைகளும் அமைக்கப்பட்டன.[19] ஊர்வலங்களில் நடை பந்தலைத் தூக்கிச் சென்றனர். அப் பந்தர் நான்கு மூலைகளிலும் கால்களைப் பிணித்துத் தூக்கிச் செல்லத் தக்கவாறு அமைக்கப்பட்டதாதலின், "குத்துமுளை செறித்த வித்தக விதானம்"[20] எனப்படுகிறது.

பெண்டிர்

மணப் பெண்கள் கைவிரல்களால் கண்புதைத்திருத்தல் வழக்கமாயிருந்தது.[21] பிறர் காணின் தவறாக எண்ணுவர் என்ற அச்சத்தால் பெண்டிர் தமக்குத் தொடர்பில்லாதவரோடு பேசுவது கிடையாது.[22] கோவில், மண அறை போன்ற சிறப்பிடங்களில் நுழையும்போது வலக்காலை முன் வைத்துச் செல்லுதல் நடைமுறையில் இருந்தது.[23] தலையில் நீர்க்குடம் முதலியன சுமந்தபோது சும்மடை வைத்துக்

---

17. பெருங். 1 : 38 : 94 - 99
18. மெய்காப் பிளையர் அல்லது கைகூர்ந்து
இடைகொள வரினும் இருபத் தொருநாள்
படைகொளப் பெறுஅ —பெருங். 1 : 38 : 102 - 04
19. பெருங். 1 : 40 : 121 - 32
20. ,, 2 : 5 : 24
21. தத்தரி நெடுங்கண் தகைவிரல் புதைஇப்
புதுமண மகளிரிற் கதுமெனத் தோன்றும்
—பெருங். 1 : 40 : 308 - 09
22. பெருங். 1 : 40 : 355 - 59
23. ,, 2 : 6 : 140

கொண்டனர்.[24] மகளிரைக் காத்த காவலர் முதுமையுடையோராய் இருந்தனர்.[25]

சிறந்த கணவனைப் பெற மகளிர் இறைவழிபாடியற்றித் தானம் செய்வதுண்டு.[26] கணவன் மாட்டுப் பிழை செய்தோளை அரசர் தண்டித்தனர்.[27] கணவன் இறந்தால் உடன் ஈமம் ஏறுதல் உண்டு; ஈமம் ஏருது கைம்மை நோன்பிருந்தோரும் உண்டு.[28] ஆடவர் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்டிரை மணந்தனர். மனைவியர் ஒற்றுமையுடன் இருப்பதைக் காட்ட அவர்களை ஒரே கலத்தில் உண்ணுமாறு செய்வது உண்டு. வாசவதத்தைக்குப் பின் பதுமாபதியை மணந்த உதயணன் அவர்கள் இருவரையும் ஒரே கலத்தில் உண்ணச் செய்ததையும்[29] பின்னர் மானனீகையை மணந்தகாலை மூவரையும் ஒரே கலத்தில் உண்ணச் செய்ததையும் பெருங்கதை கூறுகிறது.[30] கருவுற்ற பெண்ணைச் சக்களத்தியினின்றும் பிரித்து வைப்பது வழக்கமாயிருந்தது.[31]

---

24. பெருங். 2 : 5 : 49
25. அச்சுறு நோக்கின் அறுபது கழிந்த
    காஞ்சுகி மாக்கள் சேர்ந்துபுடை காப்ப
    —பெருங். 3 : 5 : 109 - 110
26. மோகத் தானம் முற்றிழை கழிந்தபின்
    —பெருங். 3 : 13 : 33
27. பெருங். 1 : 36 : 154 - 61
28. ஈமம் ஏரு இயல்புடை அமைதியர்
    —பெருங். 4 : 1 : 27
29. வாசவ தத்தையொடு பதுமா பதியை
    ஆசில் அயினி மேவரத் தரீஇ
    ஒருகலத்து அயில்கென அருள்தலை நிறீஇயபின்
    —பெருங். 4 : 8 : 87 - 89
30. மூவரும் ஒருகலத்து அயில —பெருங். 4 : 14 : 163
31. பெருங். 5 : 6 : 8

பூப்பு நிகழ்ந்த நாளின் எல்லை கழிந்த பின்னர், திரு முழுக்காடி, துறவிகளுக்கு உணவு முதலியன வழங்கி அத் துறவோரால் வாழ்த்துப் பெறுதலை மகளிர் விரும்பினர்.[32]

பிள்ளைப் பேறு: குழந்தை பிறந்த காலத்தில் தானம் வழங்கி மகிழ்ந்தனர். அரசனுக்கு மகன் பிறந்த காலத்தில் குற்றத்தின்பொருட்டுச் சிறையிலடைக்கப்பட்டிருந்தோர் விடுதலை செய்யப்பட்டனர். நாடு கடத்தப்பட்டோரும் மன்னிக்கப்பட்டுத் திரும்பி வருமாறு அறிவிக்கப்பட்டனர். வறுமையால் வாடியோர் அரண்மனை சென்று வேண்டிய பொருளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. குழந்தையைப் 'பொலிக' என்று வாழ்த்தும் மொழியே பகையரசர் செலுத்திய திறைப்பொருளாகக் கொண்டு அவர்கள் கேளிராகக் கருதப்பட்டனர்.[33]

பிறந்த நேரத்தைக் கொண்டு சாதகம் கணிக்கப் பட்டது.[34] பிறப்பு நிகழ்ச்சியைப் பன்னிரண்டு நாட்கள் சிறப்பாகக் கொண்டாடினர்.[35] குழந்தைக்குக் காரணம் பற்றிப் பெயரிடுவது உண்டு. உதய வேளையில் பிறந்த தால் உதயணன் அப் பெயர் பெற்றான். உதயணன் மகன் குபேரன் அருளால் பிறந்தவன் ஆதலில் அவனுக்கு நரவாணதத்தன் (நரவாணன்—குபேரன்; தத்தன் – கொடுக்கப்பட்டவன்) என்று பெயரிடப்பட்டது.

அரசர்

அரசனைக் காணும்போது எழுகோல் எல்லை இடை வெளிவிட்டு நிற்க வேண்டும். அவ் வெல்லையைக் கடந்து

---

32. பூத்த நாள்வரை இறந்தபின்
பெருவிறல் நோன்பிகட்குப் பெலிக்கொடை யாற்றி
ஆசிடைக் கிளவி அவரின் எய்தி
—பெருங். 5 : 1 : 61 - 63

33. பெருங். 5 : 6 : 48 - 63
34. ,, 5 : 6 : 73 - 85
35. ,, 5 : 6 104

செல்லக் கூடாது.[36] அரசனுக்கு அனுப்பப்படும் உணவு பொற்கலத்தில் காப்புப் பொறி ஒற்றி அனுப்பப்படும்.[37] பிற அரசர்களுக்குச் செய்தி அனுப்பும்போது அதை ஓலையில் குறித்துச் சுருளாக்கி அரக்கு முத்திரையிட்டு அனுப்பினர்.[38] இரண்டு நாடுகள் பகை நீங்கி நட்புக் கொள்ளுங்கால் பொன்னும் நெல்லும் வழங்கிப் பூரிப்பது வழக்கம்.[39]

சொத்துரிமை

ஒருவன் இறந்தால் அவனுடைய சொத்து ஆண் மக்களுக்குச் சேர வேண்டும். ஆண் மக்கள் இல்லாது பெண் மக்கள் மட்டுமிருந்தால் அவர்களுடைய வளர்ப்பு, கல்வி, அணிதல், திருமணம் போன்றவற்றிற்காகச் செய்த செலவு போக எஞ்சிய சொத்து தாயத்தாரைச் சேர வேண்டும். குழந்தைகளே இல்லாதிருந்தால் சொத்து தாயத்தாரைச் சேர்ந்ததாகும்.

இம் முறையைப் பெருங்கதையில் வரும் ஒரு வழக்கு மூலம் அறிகிறோம். வணிகன் ஒருவனுக்கு மூவர் ஆண் மக்கள். அவர்களில் ஒருவன் வணிகத்தின் பொருட்டுக்

---

36. இருந்த மன்னவற்கு எழுகோல் எல்லையுள்
பொருந்தல் செல்லாது —பெருங். 1 : 47 : 53 – 54

37. பொற்கலத் தியன்ற நற்சுவை அடிசில்
காப்புப்பொறி ஒற்றி யாப்புற ஏற்றி
—பெருங். 1 : 56 : 198 – 99

38. (i) கணக்குத்துறை முற்றிய கடுஞ்சொல் ஓலை
அரக்குப்பொறி ஒற்றி ஆணையிற் போக்கி
—பெருங். 1 : 37 : 208 - 09

(ii) குறிப்பெழுத்து ஓலை பொறிப்புனைந்து ஒற்றிய
அம்மடி —பெருங் 1 : 54 : 96 - 97

39. தண்டஉஞ் சேனையும் தகைக்கோ சம்பியும்
பண்டுகண் ணழிந்த பகையினை நீக்கிப்
பொன்னும் நெல்லும் புரிவின் வழங்குக
—பெருங். 1 : 37 : 194 – 96

கடலில் சென்றபோது மரக்கலம் கவிழ்ந்து இறந்ததாகக் கூறப்பட்டது. தம்பியர் அவனுக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன் முதலியன செய்தனர். தாயோ தன் மகன் முடிவு கேட்டு வருந்திளேயன்றி அவனுடைய சொத்தை என்ன செய்வது என்று கூறினளில்லை. அரசனிடம் விளக்கம் கோரி இவ் வழக்கு வந்தது. இறந்தவனின் மனைவி யாது கூறுகிருள் என அரசன் வணிகரைக் கேட்டான். அவனுடைய கலம் முழுகியதைக் கண்ணுல் கண்டு சொன்னோர் யாருமில்லை என்பதால் அவள் தன் கணவன் இறந்ததாகக் கருதவில்லை; மேலும் அவள் கருவுற்றுள்ளாள் என்று கூறினர். உதயணன் உருமாண்ணுவாவை இவ் வழக்கை ஆய்ந்து தெளிவுரை தருமாறு கூறினுன். உருமண்ணுவா, ''கடலுள் மூழ்கிய வணிகனுடைய பொருள் அனைத்தையும் முதலில் நம் முன்னர்க் கொணர்ந்து அவற்றைக் கணித்துப் பொதியாக்கி அவன் தம்பியர் இருவரும் தத்தம் இலச்சினையைப் பொறிப்பாராக. அச் சொத்து இருவருள் மூத்தவனிடம் ஓராண்டு இருப்பதாகுக. அக் கால எல்லைக்குள் கடலில் சென்றவன் இறக்காதிருந்து திரும்பி விட்டால் சொத்து அவனைச் சேரவேண்டும். கருவுற்றுள்ள அவன் மனைவி ஆண் குழந்தையை ஈன்றெடுத்தால் சொத்து அக் குழந்தைக்கே உரியதாகும். அதில் தாயத்தார்க்கு எவ்வித உரிமையுமில்லை. பெண் மகளாயின் அதனை வளர்த்து, ஆளாக்கி, கல்வியளித்து, அணிகள் பூட்டி, திருமணம் செய்த பின்னர் மீதியுள்ள சொத்தை இறந்தவனின் தம்பியர் பிரித்துக் கொள்ள வேண்டும்.'' என்று சொன்னுன்.[40] இவ் வழக்கிலிருந்து அக் காலச் சொத்துரிமையை அறிய முடிகிறது.

அடிகள் என்றழைத்தல்

உதயணனை வாசவதத்தை 'அடிகளே!' என்று விளித்துக் காட்டிற்குச் சென்று மலர் கொணர்ந்து கண்ணி

40. பெருங். 5 : 1 : 6 - 54

தொடுத்துத் தருமாறு வேண்டினுள் என்ற இடத்தில் கணவனை மனைவி அடிகள் என்றழைப்பதைக் காண்கிறோம்.[41] பதுமாபதி கணவனை அடிகள் என விளிப்பதும் நூலில் கூறப்பட்டுள்ளது.[42] பதுமாபதி வாசவதத்தையிடம் பேசும்போது அவளை அடிகள் என்று விளிப்பதிலிருந்து தங்கை தமக்கையை அடிகள் என்று அழைத்த நிலையைக் காண்கிறோம்.[43] பதுமாவதியின் தோழி அயிராபதி அவளை அடிகள் என்று விளித்துப் பேசுவதையும் காண்கிறோம்.[44] பதுமாபதியை மணம் பேசவந்த கேகயத்தரசன் அவள் அண்ணன் தருசகனை 'அடிகள்' என்று விளிக்கும் செய்தியும் பெருங்கதையில் கூறப்படுகிறது.[45]

இவற்றிலிருந்து தம்மின் மூத்தோரையும் பெருமைக்குரியவர்களையும் பால் வேறுபாடு கருதாது அடிகள் என்று அழைத்த வழக்கம் அக் காலத்தில் இருந்தது என அறிகிறோம்.

—*—

41. வேட்டம் போகி அடிகள் காட்டகத்து
அரும்பினும் மலரினும் பெருஞ்செந் தளிரினும்
கண்ணி கட்டித் தம்மின் —பெருங். 2 : 17 : 48 - 50
42. பெருங். 4 : 14 : 87
43. வாசகம் உணரேன் வாசிமின் அடிகள் என்று
ஆசில் தவ்வை தன்கையிற் கொடுப்ப
—பெருங். 4 : 14 : 137 - 38
44. பெருங். 3 : 8 : 70
45. ,, 3 : 19 : 128

"THE HINDU"
EDITORIAL DEPT.
31 AUG 1976
No. 48707